ஃபியோதர் தஸ்தயேவ்ஸ்கி

சிறுகதைகளும
குறுநாவல்களும்





ஃபியோதர் தஸ்தயேவ்ஸ்கி

சிறுகதைகளும் குறுநாவல்களும்

ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

ஓவியர்: அ. பெஸ்ஸோனவ்

Фёдор Достоевский
ПОВЕСТИ И РАССКАЗЫ
На тамильском языке

Fyodor Dostoyevsky
NOVELLAS AND SHORT STORIES
In Tamil

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

ISBN 5-05-000329-6

Д $\frac{4702010100-565}{031(05)-85}$ 298—85

பொருளடக்கம்

வெண்ணிற இரவுகள்

உணர்ச்சி வயப்பட்ட காதற்கதை

(கனவுலகவாசியின் நினைவுகளிலிருந்து)

மொழிபெயர்ப்பாளர்: **ரா. கிருஷ்ணையா**

...நின்காதல் நிழல்தன்னில் நின்று மகிழ்வோம்,
மின்னி மறையும் கண்ணிமைப் பொழுதெனினும்
போதுமது என்றெண்ணிப் பிறந்தானே?..

இவான் துர்கேனேவ்

முதல் இரவு

அது இனிமையான ஓர் இரவு; அருமை வாசகரே, இளம் வயதில் மட்டுமே நாம் அறியக் கூடிய ஓர் இரவு. வானத்தில் அப்படி விண்மீன்கள் நிறைந்திருந்தன, அவ்வளவு நிர்மலமாக ஒளிர்ந்தது வானம்—அதைப் பார்க்கையில் இப்படிப்பட்ட ஒரு வானத்தின்கீழ் பலவகையான முசுடுகளும் மூர்க்கர்களும் எப்படி வாழ முடிகிறது என்கிற கேள்வி நிச்சயம் உங்கள் மனதில் எழவே செய்யும். இந்தக் கேள்வியுங்கூட இளம் வயதுக்குரியதுதான்; அருமை வாசகரே, மிகமிக இளம் வயதுக்குரியது. ஆனால் இது போன்ற கேள்விகள் அடிக்கடி உங்கள் மனதில் எழுந்து உறுத்தும்படி ஆண்டவன் அருள் புரிவாராக!.. பலவகையான முசுடுகளையும் மூர்க்கர்களையும் பற்றிப் பேசப் புகும் நான் அன்று பகல் முழுதும் என் நடத்தை போற்றத்தக்கவாறு சிறப்பாக இருந்ததை நினைவு கூராமல் இருப்பதற்கில்லை. காலையிலிருந்தே விபரீதமான ஒருவகை ஏக்கத்தால் பீடிக்கப்பட்டிருந்தேன். எல்லோரும் என்னைக் கைவிட்டுச் செல்வதாக, எல்லோரும் என்னைத் துறந்து விட்டுப் போவதாகத் திடுமென எனக்குத் தோன்றியது. யார் இந்த எல்லோரும் என்கிற கேள்வி நியாயமாகவே எழுகிறது. ஏனெனில் எட்டு ஆண்டுகளாக நான் பீட்டர்ஸ்பர்கில் வசித்து வருகிறேன், அப்படியும் இங்கு எனக்கு நண்பர்கள் யாரும் இல்லை, ஒருவரோடுகூட என்னால் நண்பனாக முடியவில்லை. ஆனால் நான் ஏன் எவரையும் தனிப்பட்ட முறையில் தெரிந்து கொள்ள வேண்டும்? பீட்டர்ஸ்பர்க் முழுதுமே நான் நன்கு அறிந்ததுதானே. எனவேதான் இந்நகரமே

மூட்டை கட்டிக் கொண்டு திடுமென கிராமக் குடில்களுக்குப் புறப்பட்டதும் எல்லோரும் என்னைக் கைவிட்டுச் செல்வதாகத் தோன்றியது எனக்கு. தன்னந்தனியே விடப்பட்ட நான் கதிகலங்கிப் போனேன்; ஏனென்று தெரியாமலே ஆழ்ந்த சோகத்தில் மூழ்கியவனாகத் தொடர்ந்து மூன்று நாட்களாகத் தெருக்களில் அலைந்து திரிந்தேன். நேவ்ஸ்கி சாலையில் நடந்தேன், பூங்காவுக்குப் போனேன், ஆற்றங் கரைச் சாலையில் கால் போன போக்கில் சென்றேன். ஆயினும் ஓராண்டாக அதே இடத்தில் அதே நேரத்தில் தவறாமல் நான் சந்தித்துப் பழகிப்போன அம்முகங்களை அவ்விடங்களில் என்னால் காண முடியவில்லை. உண்மைதான், என்னை அவர்களுக்குத் தெரியாதுதான், ஆனால் நான் அவர்களை அறிவேன். நன்கு அறிவேன், அவர்களுடைய முக பாவனைகளை ஆராய்ந்து அறிந்து வைத்திருக்கிறேன். அம்முகங்களில் மகிழ்ச்சி ததும்புகையில் நானும் களிப்புறுவேன், அவை இருண்டுவிடும்போது நானும் சோகமடைவேன். ஃபன்தான்கா ஆற்றங் கரையில் நாள்தோறும் அதே நேரத்தில் நான் சந்தித்து வந்த ஒரு கிழவர் என் நண்பராகி விட்டார் என்றே சொல்ல வேண்டும். சிந்தனையில் ஆழ்ந்த கம்பீரமான முகம், தனக்குத் தானே ஏதோ முணுமுணுத்தபடி இடக் கையை ஆட்டிச் சைகை காட்டுவார். முடிச்சுக் கணுக்களும் பொன்னிறப் பிடியும் கொண்ட நீளமான ஊன்றுகோல் அவர் வலக் கையில் இருக்கும். அவரும் என்னைக் கவனித்துத்தான் வைத்திருந்தார், என்னிடம் மெய்யான அக்கறை காட்டி வந்தார். என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும்: ஃபன்தான்காவில் அதே இடத்தில் அதே நேரத்தில் என்றாவது என்னைச் சந்திக்க முடியாமற் போகும் போது கட்டாயம் அவர் வாட்டமுற்றிருப்பார். அதனால் தான் சில சமயங்களில், முக்கியமாக நாங்கள் இருவரும் மகிழ்ச்சிகரமான மனநிலையில் இருக்கையில், ஒருவருக்கொருவர் வணக்கம் தெரிவிக்க விரும்பும் அளவுக்குச் சென்று விடுவோம். முழுதாக இரண்டு நாட்கள் சந்திக்க முடியாமற் போய் மூன்றாவது நாளன்று நாங்கள் சந்தித்தபோது இருவரும் தொப்பியை உயர்த்தி வணக்கம் கூறிக் கொள்ள முற்பட்டோம். நல்ல வேளையாகக் கடைசித் தருணத்தில் கட்டுப்படுத்திக் கொண்டோம், உயர்த்திய கரங்களைக்கீழே இறக்கினோம். வாய்ச் சொல்லாக வெளிப்படாமல் எங்கள்

உள்ளத்தினுள் ஒளிர்ந்த உள்ளன்புடன் ஒருவரையொருவர் கடந்து சென்ருேம். வீடுகளுங்கூட என் நண்பர்கள்தான். தெருவிலே நான் போகும்போது அவை யாவும் என்னை நோக்கி முன்னால் ஒரு அடியெடுத்து வைப்பது போலிருக்கும். சன்னல்கள் யாவற்ருலும் என்னை உற்றுநோக்கியவாறு அவை வாய் திறந்து என்னுடன் பேசுவது போலவே தோன்றும்: ''என்ன சேதி? சுகம் தானே? நானும் நல்லபடியாகத் தான் இருக்கிறேன்; மே மாதத்தில் எனக்கு இன்ஞெரு மாடி கட்டப் போகிருர்கள்!'' என்ருே, ''வணக்கம்! என்னைப் பழுது பார்க்கப் போகிருர்கள், நாளைக்கு வேலை தொடங்குவார்கள்'' என்ருே, ''நான் தீப்பிடித்து எரிந்து போகப் பார்த்தேன், பயந்து நடுங்கிப் போனேன்!'' என்ருே சொல்வது போலிருக்கும். சில வீடுகள் எனக்கு மிகவும் பிடித்தமானவை, மிக நெருங்கிய அருமை நண்பர்களாகிவிட்டவை. இவற்றில் ஒன்று இந்தக் கோடையில் கட்டிடக் கலைஞர் ஒருவரிடம் சிகிச்சை பெறப் போகிறதாம். தினமும் நான் இங்கு வந்து இந்த வீட்டுக்கு எந்தத் தீங்கும் நேராதபடி கவனித்துக் கொள்வேன், கடவுள் இதைக் காப்பாற்றுவாராக! கவர்ச்சி மிக்க ஒரு சிறிய வீடு, இளஞ்சிவப்பு மேனியுடையது — அதற்கு நேர்ந்த கதியை எந்நாளும் என்னால் மறக்கவே முடியாது. கண்ணுக்கு இனிய அந்தச் சிறிய வீட்டின் அருகே நான் போகும் பொழுதெல்லாம் அருமையிலும் அருமையாக அது என்னைப் பார்த்து இன்முகங்காட்டிப் புன்னகை புரிந்துவிட்டு, சோபையற்று நிற்கும் தனது அக்கம்பக்கத்து வீடுகளின் பக்கம் கர்வமாகப் பார்வையைத் திருப்பும் அந்தக் காட்சி என் இதயத்தைப் புளகாங்கிதமடையச் செய்யும். பிறகு நான் சென்ற வாரம் அந்தத் தெரு வழியே சென்றபோது என் நண்பனைப் பார்ப்பதற்காகத் தலையைத் திருப்பினேன்; பரிதாபகரமான அதன் புலம்பல் என் காதில் விழுந்தது: ''ஐயோ! மஞ்சள் நிறம் பூசி என்னைக் கெடுத்துவிட்டார்களே!'' முரடர்கள்! படுபாவிகள்! எதையும் விட்டுவைக்கவில்லை: தூண்களும் சரி, சுவர் பிதுக்கங்களும் சரி யாவற்றிலும் சாயம் பூசி விட்டார்கள். கானரிக் குருவி மாதிரி என் நண்பன் மஞ்சள்மயமாகி விட்டான். அதைப் பார்த்ததும் நான் பதறிப்போனேன். பாவம் என் நண்பன் சீனப் பேரரசின் வர்ணம் பூசப்பட்டு உருக்குலைந்து விட்ட அக்

காட்சியைக் காணச் சகியாதவனுக இது நாள் வரை நான் அந்தப் பக்கம் போகாமலே இருந்து வருகிறேன்.

ஆக, அருமை வாசகரே, பீட்டர்ஸ்பர்க் நகரமே என் நண்பனுக இருப்பதை நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

ஏற்கெனவே நான் சொன்னது போல எனது கலக்க முற்ற நிலே தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நீடித்த பிறகு தான் என்னுல் இதற்குரிய காரணத்தை ஊகித்தறிய முடிந்தது. வெளியே தெருக்களில்தான் மனத்துக்கு அமைதியில்லே அந்த ஆள் அங்கில்லே, இந்(த ஆளேயும் காண முடியவில்லே, இவரையுங்கூடக் காணவில்லேயே, என்ன ஆயிற்று?) என்று, வீட்டுக்கு, என் அறைக்கு வந்தால் இங்கும் நான் நிம்மதி யின்றி அவதியுற்றேன். என் அறையில் என்ன குற்றம் என்று இரண்டு இரவுகளாக ஓயாமல் மண்டையை உடைத்துக் கொண்டேன். இங்கும் எனக்கு இருப்பு கொள்ளாமல் போன தற்குக் காரணம் என்ன? விடை காண முயன்ற நான் சுற்றிலு மிருந்த அழுக்கேறிய பச்சை நிறச் சுவர்களேயும் உச்சித் தளத்தையும் மத்ரியோனு அங்கு தழைத்து மண்டும்படி விட்டு வைத்திருந்த ஒட்டடையையும் உற்று நோக்கினேன்; என் அறையிலிருந்த எல்லாச் சாமான்களேயும் ஆராய்ந் தேன்; எனது இன்னலின் மூலகாரணம் இங்குதான் இருக் குமோ என்று ஒவ்வொரு நாற்காலியையும் கூர்ந்து கவனித் தேன் (ஏனெனில் முதல் நாள் இருந்த இடத்திலிருந்து எந்த நாற்காலியாவது மாற்றப்பட்டு விட்டதாகத் தெரிந்தால் போதும், நான் அமைதியிழந்து விடுகிறவன்); பிறகு சன்னல் பக்கம் திரும்பிப் பார்த்தேன்—அப்படியும் என் மனம் ஆறுதலடையவில்லே! மத்ரியோனுவைக் கூப்பிட்டு ஒட்டடை குறித்தும் பொதுவாக ஒழுங்கில்லாத வேலே குறித்தும் பெரிய மனிதத் தோரணேயில் கொஞ்சம் கண்டிக் கலாமென்று கூட எனக்கு ஒரு யோசனே தோன்றிற்று. ஆனுல் அவள் வியப்புற்றவளாய் என்னே ஏறயிறங்கப்பார்த்து விட்டு வாய் திறந்து ஒரு வார்த்தை சொல்லாமலே அறை யிலிருந்து போய்விட்டாள். ஆகவே ஒட்டடை பத்திரமாக அப்படியேதான் இருந்து வருகிறது. முடிவில் இன்று காலே யில்தான் விஷயம் எனக்கு விளங்கிற்று. ஆம், எல்லோரும் என்னேத் துறந்துவிட்டு வெட்கங்கெட்டவர்களாக அல்லவா கிராமக் குடில்களுக்கு ஓடினர்! தரங் குறைந்த இச்சொற் களுக்காக என்னே நீங்கள் மன்னிக்க வேண்டும், ஆனுல் மரி

யாதையுள்ள வார்த்தைகளைத் தேடிக் கையாளும் நிலையில் நான் இல்லை... ஏனெனில் பீட்டர்ஸ்பர்கில் வசித்த எல்லோருமே தமது கிராமக் குடில்களுக்குப் போய்க் கொண்டிருந்தனர், அல்லது ஏற்கெனவே போய்விட்டனர். வாடகை வண்டியில் கிளம்பிய மதிப்புக்குரிய ஒவ்வொரு கனவானிடத்தும் உடனே நான் தமது அன்றைய வேலையை முடித்துக் கொண்டு தம் குடும்பத்தாரிடம் போய்ச் சேர்வதற்காகக் கிராமக் குடிலுக்கு விரையும் கண்டிப்பான குடும்பஸ்தரைக் கண்ணுற்றேன். தெருவிலே ஒவ்வொருவரிடத்தும் தனி வகையான அந்த முகபாவம், ''ஐயா, நாங்கள் இங்கு தங்கியிருப்போரல்ல, இன்னும் இரண்டு மணி நேரத்தில் இந்நகரை விட்டு வெளியே போகிறவர்கள்'' என்று எதிரே வருவோருக்கு அறிவித்துச் சென்ற அந்த முகபாவம் இருக்கக் கண்டேன். சன்னல் கதவு திறக்கப்படுவதைக் கண்டதும்—சீனி போல வெளுப்பான மெல்லிய விரல்கள் முதலில் சன்னல் கண்ணாடியில் தாளம் தட்டியபின் அழகான ஓர் இளம் பெண் வெளியே தலை நீட்டி, மலர்ச் செடிகள் விற்றுச் செல்பவனைக் கூப்பிடுவாள்—அதே கணத்தில் நான் நினைத்துக் கொள்வேன், நகரில் புழுக்கமான குடித்தனப் பகுதியில் தங்கி வசந்தத்தையும் மலர்களையும் அனுபவிப்பதற்காக மக்கள் மலர்ச் செடிகள் வாங்கவில்லை, விரைவில் எல்லோரும் தம் கிராமக் குடில்களுக்குப் போகப் போகிறார்கள், தம்முடன் எடுத்துச் செல்வதற்காக இச்செடிகளை வாங்குகிறார்கள் என்று. தவிரவும் ஒருவருடைய புறத்தோற்றத்தைக் கொண்டே நான் அவருடைய கோடைப் பருவக்குடில் எங்கிருந்தது என்பதைப் பிழையின்றி ஊகித்து விடுவேன், எனக்குரிய இந்தப் புதிய ஆய்வுத் துறையில் ஏற்கனவே நான் அந்த அளவுக்கு முன்னேறியிருந்தேன். காமென்னி, அப்தேக்கர்ஸ்கி தீவுகளிலோ, பீட்டர்ஹாப் சாலையிலோ கோடையைக் கழிப்போரை, அவர்களது தேர்ந்த நயப் பாங்குகளையும், புதுப் பாணியிலான அவர்களது கோடைப் பருவ ஆடைகளையும், மற்றும் நகருக்கு அவர்கள் வந்து சேரும் கோச்சுகளையும் கொண்டு அடையாளம் தெரிந்து கொண்டுவிடலாம். பார்கலவோவிலோ அதற்கு அப்பாலோ தங்குவோர் தமது சாமர்த்தியத்தாலும் ஆடம்பரமில்லாத அமரிக்கையாலும் உடனே தம்மை அறிவித்துக் கொண்டு விடுவார்கள். எதற்கும் சிணுங்காத குதூகலத்

தோற்றம் கிரெஸ்தோவ்ஸ்கி தீவில் கோடையைக் கழிப் போருக்குரிய சின்னமாகும். பார வண்டிகளின் பக்கத்தில் கையில் லகான்களைப் பிடித்துக் கொண்டு அவசரமின்றி மெதுவாக நடந்து ஊர்வலம் போல நீண்ட வரிசையில் அந்த வண்டிக்காரர்கள் செல்வார்கள். இந்தப் பார வண்டி களில் மேசைகளும் நாற்காலிகளும் துருக்கிப் பஞ்சணைப் படுக்கைகளும் பிற வகை இருக்கைகளும் மற்றும் ஏனைய பலவிதமான வீட்டுச் சாமான்களும் உயரமாகக் குவிக்கப் பட்டிருக்கும். இவை யாவற்றுக்கும் மேலே எலும்பும் தோலுமாகச் சமையற்காரி ஒருத்தி தன் எசமானருடைய உடைமைகளுக்குக் காவல் புரிந்து யாவற்றுக்கும் தலைமை வகிப்பது போல உச்சியிலே வீற்றிருப்பாள். வீட்டுச் சாமான்களைச் சுமந்து கொண்டு தோணிகள் நேவாவிலோ ஃபன்தான்காவிலோ சோர்னயா ஆற்றை அல்லது தீவுகளை நோக்கி மிதந்து செல்லும். நான் இந்தப் பார வண்டி களின் வரிசையைச் சந்திக்க நேர்ந்தாலும் சரி, அல்லது இந்தத் தோணிகளைப் பார்த்துக் கொண்டு நின்றாலும் சரி, என் கண்களில் இந்த வண்டிகளும் தோணிகளும் பத்து மடங்காகவும் நூறு மடங்காகவும் பெருகிவிடும். யாவுமே புறப்பட்டுச் செல்வதாக, யாவுமே நீள் வரிசைகளில் கிராமக் குடில்களை நோக்கி நடைபோடுவதாக எனக்குத் தோன்றியது. பீட்டர்ஸ்பர்க் நகரமே பாலையாகிவிடும்படி யான அபாயம் எழுவதாக நினைத்தேன். இதையெல்லாம் பார்த்ததும் வெட்கமும் துன்பமும் துயரமும் என் நெஞ்சை யடைக்கும். நான் நகரை விட்டு வெளியே போகக் காரணம் ஏதும் இல்லை, கிராமக் குடில் எதுவும் இல்லை எனக்கு. எந்தப் பார வண்டியுடனும், வாடகை வண்டியில் கிளம் பிய மதிப்புக்குரிய எந்தக் கனவானுடனும் நானும் போகத் தயாராகத்தான் இருந்தேன். ஆனால் என்னை வருமாறு அழைப்பார் யாரும் இல்லை. யாவரும் என்னை அடியோடு மறந்துவிட்டது போல, அப்படி நான் அவர்கள் அறியாத அந்நியனாக இருந்தது போல நடந்து கொண்டனர்!

நெடுநேரம், நெடுந்தூரம் நடந்து கொண்டிருந்த நான் எங்கே போகிறேன் என்ற நினைவையே இழந்துவிட்டேன் —இது எனக்கு வழக்கமாக ஏற்படும் நிலைமைதான். நகர எல்லைக்கு அல்லவா வந்துவிட்டோம் என்பதைத் திடுமென உணர்ந்தேன். உடனே உவகை கொண்டவனாக அடைப்

யைத் தாண்டிக் கொண்டு களைப்போ சோர்வோ சிறிது மின்றி பயிர் நிலங்களுக்கிடையிலும் புல்வெளிகளுக்கிடையி லும் சென்றேன். என் மனதை வருத்திய சுமை நீங்கிவிட்ட தென்ற உற்சாக உணர்வால் உந்தப்பட்டு நடந்தேன். என்னைக் கடந்து வண்டிகளில் சென்றவர்கள் நேசபாவத் துடன் என்னைப் பார்த்தனர், எனக்கு முகமன் கூறுவது போல இன்முகம் காட்டினர். எக்காரணத்தாலோ எல் லோரும் அப்படி மகிழ்ச்சி நிறைந்தவர்களாகத் தோன்றி னர். ஒவ்வொருவருடைய வாயிலும் ஒரு சுருட்டு புகைந்து கொண்டிருந்தது. என்றும் இல்லாதபடி நானும் மனம் மகிழ்ந்து கொண்டேன். இருந்தாற் போலிருந்து இத்தாலி யில் இருப்பது போன்ற ஓர் உணர்ச்சி எனக்குக் களிப்பூட் டியது. சுவர்களுக்கிடைப்பட்ட தெருக்களில் மூச்சுத் திண றும்படி அடைபட்டுவதைந்த நகரவாசியான எனக்கு இயற் கை அப்படி இன்ப மயக்க மூட்டுவதாக இருந்தது.

பீட்டர்ஸ்பர்கைச் சுற்றிலுமுள்ள இயற்கையானது தனக்கு விண்ணுலகம் வழங்கியிருக்கும் முழு வலிவையும் முழுச் சக்தியையும் வசந்தம் பிறந்ததும் திடுதிப்பென வெளிப் படுத்தி வண்ண மலர்கள் சூடி எழிற் கோலம் பூண் டெழும் அக்காட்சியில் விவரிக்க இயலாதபடி உள்ளமுருகச் செய்யும் ஏதோ ஒன்று இருக்கிறது... எக்காரணமோ தெரிய வில்லை, அக்காட்சி எனக்குக் காச நோயால் நலிவுற்று நலமிழந்த நங்கையை நினைவூட்டுவதாயுள்ளது. இந்நங் கையை நாம் சில நேரங்களில் பரிதாபத்துடன் பார்க்கி றோம், வேறு சில நேரங்களில் ஏக்கம் நிறைந்த பாசத் துடன் பார்க்கிறோம், சில நேரங்களில் அவளைக் கவனியாம லும் இருந்து விடுகிறோம். ஆனால் திடுமெனக் கணப்பொழு துக்கு அவள் அதிவிநோதமாக வியத்தகு எழிலுடையவளாக மாறுகின்றாள். மெய் சிலிர்த்து மதி மயங்கிவிடும் நீங்கள் உங்களையே கேட்டுக் கொள்கிறீர்கள்: சோகச் சிந்தனை படிந்து துயரம் தோய்ந்த அந்தக் கண்களை எந்தச் சக்தி இப்படிச் சுடரொளி பெற்றுப் பளிச்சிடச் செய்தது? வெளி றிட்டு மங்கிய அந்தக் கன்னங்களில் சிவப்பேறச் செய்தது எது? அந்த அழகிய வதனத்தில் உணர்ச்சித் துடிப்பைச் சுடர் வீச வைத்தது என்ன? அவள் நெஞ்சம் ஏன் அப்படிப் புடைத்தெழுகிறது? பரிதாபத்துக்குரியவளாக இருந்த இப் பேதையின் முகத்தில் இப்படித் திடுமென வலிவும் உயிர்த்

துடிப்பும் அழகும் குதித்தாடச் செய்தது எது? அம்முகத்தை ஒளி வீசும் குறுநகையால் பளிச்சிடும்படி வைத்தது எது? வண்ண ஜாலம் காட்டும் சிரிப்பால் அதைப் பிரகாசிக்கச் செய்தது எது? சுற்றிலும் பார்க்கிறீர்கள், விந்தையே என்றெண்ணி வியப்படைகிறீர்கள், அப்போழுதுதான் புரிந்து கொள்ளத் தொடங்குகிறீர்கள்... ஆனால் அதற்குள் அக்கணம் போய்விடுகிறது. மறுநாள் திரும்பவும் அதே சோகச் சிந்தனை படர்ந்த, சோர்வுற்ற தோற்றத்தைக் காண்கிறீர்கள்; அதே வாடிய முகத்தை, அடக்கமும் ஒடுக்கமும் வாய்ந்த, அச்சம் கொண்ட அதே போக்கினைப் பார்க்கிறீர்கள். அது மட்டுமல்ல, தனக்கு ஏற்பட்ட அந்தக் கண நேர ஆர்வத் துடிப்பை நினைத்து அம்முகத்தில் ஒரு நடுக்கமும் உறுத்தலும் கூட இருக்கக் காண்கிறீர்கள்... நிலையற்ற இந்த அழகு மலர் சடுதியில் இப்படி வதங்கி விட்டதே, தவிர்க்க முடியாதபடி இப்படி உலர்ந்துவிட்டதே என்று, கணப் பொழுதுக்கு மின்னிப் பளிச்சிட்ட ஒளி இப்படி ஓர் ஏமாற்றாக, பயனற்ற வெற்று மினுக்காக மாறிவிட்டதே என்று வருந்துகிறீர்கள். அதை நன்றாகப் பார்த்து அதன்மீது பாசம் கொள்வதற்குக்கூட நேரமில்லாமற் போயிற்றே என்று துயரமடைகிறீர்கள்...

ஆயினும் எனக்கு அன்றைய இரவு அன்றைய பகலைக் காட்டிலும் சிறப்பாகவே இருந்தது! நடந்ததைக் கூறுகிறேன், கேளுங்கள்:

நகருக்கு நான் திரும்பியபோது நெடுநேரமாகிவிட்டது, என் அறையை நெருங்கும் முன்பே மணி பத்தடித்துவிட்டது. நான் செல்ல வேண்டிய பாதை அந்த இரவு நேரத்தில் யாரையும் காண்பது அரிதான ஒரு கால்வாய்க் கரை வழியே சென்றது. ஆம், நான் தங்கியிருந்த இடம் நகரின் தொலைதூரப் பகுதியில் இருந்தது. பாடியவாறு நடந்தேன்; உள்ளத்தில் எழும் இன்பத்தைக் கூறி மகிழ நண்பர்களோ தெரிந்தவர்களோ யாரும் இல்லாத ஒருவர் செய்வது போலவே நானும் என் மனம் மகிழ்ச்சியால் பூரிப்படையும் பொழுது வாய்க்குள் ராகம் பாடிச் செல்வது வழக்கம். நான் சிறிதும் எதிர்பாராத வகையில் திடீரென அப்பொழுது ஓர் அதிசயம் நிகழ்ந்தது.

என்னிடமிருந்து சிறிது தூரத்தில் கிராதியின் ஓரத்தில் ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். கிராதிமீது சாய்ந்து

கொண்டு அவள் வைத்த கண் வாங்காது கால்வாயின் கரிய நீரை உற்றுப் பார்ப்பது போல் நின்ருள். கவர்ச்சி வாய்ந்த மஞ்சள் தலைக் கவிகையும் நேர்த்தியான சிறிய கறுப்பு மேலங்கியும் அணிந்திருந்தாள். ''இளம் பெண், நிச்சயம் கருநிற முடியளாகத்தான் இருப்பாள்'' என்று நினைத்தேன். என் காலடி ஓசையை அவள் கவனித்ததாகத் தெரியவில்லை; மூச்சை அடக்கிக் கொண்டு நெஞ்சு படபடக்க நான் அவளைக் கடந்து நடந்தபோது ஆடாமல் அசையாமல் அப்படியே நின்று கொண்டிருந்தாள். ''சரிதான், ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருக்கிருள்'' என்று எண்ணினேன். ஆனல் திடுமெனக் கல்லாய்ச் சமைந்துபோய் நின்றுவிட்டேன். வாய்க்குள் அவள் விம்மியழும் சப்தம் கேட்பதாக நினைத்தேன். ஆம், நான் நினைத்தது தவறல்ல; அந்த இளம் பெண் அழுது கொண்டிருந்தாள். தேம்பித் தேம்பி அழுதாள். அட கடவுளே! என் இதயத்துள் சுரீரென்றது. பெண்களிடம் கூச்சப்படுகிறவன்தான் என்ற போதிலும் அவசர நிலைமையாயிற்றே!.. உடனே திரும்பி ஓரடி எடுத்து வைத்து அவளை அணுகினேன். ''அம்மையே!'' என்று அழைக்க வாயெடுத்தேன், ஆனல் மேற்குலத்து வாழ்க்கை பற்றிய புதுப் பாணியிலான ருஷ்யப் புதினங்கள் யாவற்றிலும் ஆயிரமாயிரம் தரம் இப்படி அழைக்கப்பட்டிருப்பது நினைவுக்கு வரவே வாயடைத்துப் போய் நின்றுவிட்டேன். தக்கபடி எப்படித் தொடங்கலாமென்று நான் ஆலோசித்துக் கொண்டிருக்கையில் அந்தப் பெண் சுய நினைவு பெற்றுத் திரும்பிப் பார்த்துவிட்டு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு பார்வையைக் கவிழ்த்தவாறு அங்கிருந்து நழுவி என்னைத் தாண்டிக் கால்வாய்க் கரையில் நடந்தாள். உடனே நானும் அவளைப் பின்தொடர்ந்தேன். ஆனல் நான் வருவது தெரிந்ததும் அவள் தெருவின் எதிர்ப் பக்கத்துக்குச் சென்று அங்கே நடைபாதையில் நடக்கலானுள். எதிர்ப் பக்கத்துக்குச் செல்ல எனக்குத் துணிவு வரவில்லை. பிடிபட்டுவிட்ட குருவியின் நெஞ்சு போல் என் நெஞ்சு படபடத்தது. அதன்பின் சந்தர்ப்பவசமாக நடைபெற்ற ஒரு சம்பவம் எனக்குத் துணை புரிந்தது.

நீள் கோட்டு அணிந்து வயதில் மதிப்புக்குரியவராக இருப்பினும் நடத்தையில் அப்படி இல்லாத கனவான் ஒருவர் திடீரென எதிர்ப் பக்கத்து நடைபாதையில் அந்தப் பெண்

ணின் அருகே தோன்றக் கண்டேன். தட்டுத் தடுமாறி ஆடியவாறு நடந்த அவர் கீழே விழுந்துவிடாமல் இருப்பதற்காக இடையிடையே சுவரைப் பிடித்துக் கொண்டார். அந்தப் பெண் விரைந்து சென்ருள்; இரவில் வீட்டுக்குத் திரும்பும் இளம் பெண்கள் வழித்துணையாகக் கூட வருவதாகக் கூறுவோரது உதவியை விரும்பாதபோது எப்படி நடப்பார்களோ அம்மாதிரி அவள் அம்பு போல் வேகமாக விர்ரெனப் போய்க் கொண்டிருந்தாள். தட்டுத் தடுமாறிய அக் கனவானுல் அவளைப் பிடித்திருக்க முடியாது, ஆனுல் என்னை ஆட்டுவித்த விதியானது அவரை அடாத முறைகளில் இரங்குமாறு தூண்டிற்று. அவர் வாய் பேசாமல் திடுதிப்பென முன்னே பாய்ந்து அந்தப் பெண்ணைத் துரத்திக் கொண்டு ஓடினுர். அவள் காற்றின் வேகத்தில்தான் போய்க் கொண்டிருந்தாள் என்ருலும், தட்டுத் தடுமாறியபடி ஓடிய அக்கனவான் அவளை நெருங்கிச் சென்று எட்டிப் பிடித்துவிடவே அவள் மிரண்டுபோய்க் கூச்சலிட்டாள்... நான் செய்த பாக்கியம் எனது வலக் கரத்தில் குண்டுக் கணுக்களையுடைய அற்புதமான கைத்தடி இருந்தது. நொடிப் பொழுதில் தெருவின் எதிர்ப் பக்கத்தை அடைந்தேன். விடாக்கண்டனுகிய அந்தக் கனவானும் இனி என்ன நடைபெறுமென்று நொடிப் பொழுதில் புரிந்து கொண்டார். எதிர்த்து நிற்கமுடியாத கைத்தடியின் வாதத்துக்குப் பணிந்து வாய் பேசாமல் நின்ற அவர் நாங்கள் நெடுந்தூரம் சென்ற பிற்பாடு மிகவும் கடுமையாகவே என்மீது வசைமாரி பொழிந்தார். பயனில்லை, அவருடைய வசைமொழிகள் வக்கற்றுப் போய்க் காற்றிலே கலந்தன.

''இப்படிக் கொடுங்கள் கையை, இனி அந்த ஆள் நம் பக்கம் வர மாட்டார்'' என்று அந்த இளம் பெண்ணிடம் கூறினேன்.

மௌனமாக அவள் என்னிடம் கையைக் கொடுத்தாள். பீதியாலும் கிளர்ச்சியாலும் இன்னமும் அது நடுங்கிக் கொண்டிருந்தது. நான் அறியாத கனவானே! வாழ்க நீ என்றல்லவா அப்பொழுது உம்மை வாயார வாழ்த்தினேன்! என் பார்வை கணநேரம் அவள் மீது பதிந்துவிட்டுத் திரும்பிற்று: இனிமையின் உருவாய், கருநிற முடியளாக இருந்தாள்—நான் நினைத்தபடியே இருந்தாள்! அவள் கண்ணிமைகளின் கருமுடிகளில் கண்ணீர் பளிச்சிட்டது—சற்றுமுன்

அவள் பீதியுற்றதன் விளைவா, அல்லது அதற்குமுன் விம்மி யழுத போது தோன்றியதா நான் அறியேன். ஆனால் இப்பொழுது அவள் உதடுகளில் மகிழ்ச்சிப் புன்னகை தவழ்ந்தது. கடைக் கண்ணால் அவளும் என்னை நோட்டமிட்டாள், இலேசாக முகம் சிவந்தது, உடனே பார்வையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

''இப்போழுது தெரிகிறதா, என்னை நீங்கள் உதறித் தள்ளிவிட்டுப் போயிருக்கக் கூடாதென்று? நான் பக்கத்தில் இருந்திருந்தால் இப்படி நேர்ந்திருக்காது அல்லவா?''

''ஆனால் அப்பொழுது எனக்குத் தெரியாது உங்களை. நான் நினைத்துக் கொண்டேன், நீங்களும்...''

''அப்படியானால் இப்பொழுது தெரிந்து கொண்டாயா என்னை?''

''கொஞ்சம் தெரிந்து கொண்டேன். முதலில் இதைச் சொல்லுங்கள், உங்களுக்கு ஏன் இந்த நடுக்கம்?''

''எடுத்த எடுப்பிலே நீங்கள் சரியானபடி ஊகித்து விட்டீர்களே! நான் எப்படிப்பட்டவன் என்று அதற்குள் அறிந்து கொண்டுவிட்டீர்களே!'' என்று சொல்லி, சமர்த்துப் பெண்ணாக இருக்கிறாளே, சாமர்த்தியமும் அழகும் இப்படி ஒன்று சேர்வது அரிதாயிற்றே என்று மகிழ்ந்து கொண்டேன். ''பெண்களிடம் கூச்சப்படுகிறவன் நான். சற்று முன்பு அந்தக் கனவான் உங்களை மிரளச் செய்தபோது நீங்கள் எப்படி கதி கலங்கிப் போனீர்களோ அப்படி இப்பொழுது நான் கலங்கிப் போயிருக்கிறேன்... கிலி பிடித்த மாதிரி இருக்கிறது எனக்கு. இதெல்லாம் ஒரு கனவு போல இருக்கிறது. ஏன், கனவிலுங்கூட என்றும் நான் ஒரு பெண்ணுடன் பேசுவேனென்று நினைத்ததில்லையே.''

''அப்படியா? மெய்தானா?''

''ஆமாம், என் கை ஏன் நடுங்குகிறது என்றால், இதன் முன் எந்நாளும் அது உங்களுடைய கையைப் போன்ற நேர்த்தியான, மென்மையான கையால் பிடிக்கப்பட்டதில்லை. பெண்களுடன் எப்படிப் பழகுவதென்பதையே மறந்துவிட்டேன்; இல்லை, என்றுமே அவர்களுடன் பழகி அறியாதவன் நான். தன்னந்தனியனாக இருந்து வருகிறேன். அவர்களுடன் எப்படிப் பேசுவதென்றுகூட எனக்குத் தெரியாது. இப்பொழுது கூட பேசத் தெரியாமல் எதையாவது உங்களி

டம் சொன்னாலும் சொல்லியிருப்பேன். அப்படி ஏதாவது இருந்தால் நீங்கள் மறைக்காமல் கூற வேண்டும், நான் ஒன்றும் தவருக நினைத்துக் கொள்ள மாட்டேன்...''

''இல்லை இல்லை, அதெல்லாம் ஒன்றும் இல்லை. மறைக்காமல் கூறும்படி நீங்கள் கேட்பதால் இதைச் சொல்கிறேன்: கூச்சப்படுகிறவர்களைப் பெண்களுக்கு ரொம்பப் பிடிக்கும். இன்னும் சொல்வதெனில், எனக்கும் கூட இவர்களை ரொம்பப் பிடிக்கும்; என் வீட்டுக்குப் போய்ச் சேரும் வரை என்னிடமிருந்து உங்களை நான் போகச் சொல்லப் போவதில்லை.''

''அப்படியா!'' என்றேன்; ஆனந்தம் தாங்காமல் எனக்கு மூச்சுத் திணறிற்று. ''அப்படியானல் என்னுடைய கூச்சத்தை நீங்கள் நொடிப் பொழுதில் பறந்தோடச் செய்து விடுவீர்கள், பிறகு நான் எனக்குள்ள இந்த ஒரேயொரு சாதனத்தையும் இழந்தவனுகி விடுவேன்!..''

''சாதனமா? என்ன சாதனம்?.. நன்முயில்லை உங்களது பேச்சு.''

''என்னை மன்னித்துவிடுங்கள், வாய் தவறிச் சொல்லி விட்டேன்! இன்னொரு தரம் இம்மாதிரி நடைபெருது. ஆனல் நீங்களே சிந்தித்துப் பாருங்கள் இது போன்ற ஒரு சந்தர்ப்பத்தில் எப்படி நான் விரும்பாதிருக்க முடியும், பிறத்தியாருக்கு நான்...''

''பிடித்தமானவனுக இருக்க வேண்டுமென்று?''

''ஆம், எப்படி நான் விரும்பாதிருக்க முடியும்? நீங்கள் என்மீது அன்பு காட்ட வேண்டும். உங்களுக்குப் புண்ணியமுண்டு, நீங்கள் அன்பு காட்ட வேண்டும். என் நிலைமையைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்! எனக்கு இருபத்தாறு வயதாகிறது, இன்னும் நான் யாருடனும் பேசிப் பழகி அறியாதவன்! ஆகவே திருத்தமாகவும் திறம்படவும் தடங்கலின்றியும் என்னல் எப்படிப் பேச முடியும்! ஒளிவு மறைவின்றி மனம்விட்டு யாவற்றையும் சொன்னல் உங்களுக்கும் நல்லதுதானே... என்னுள் என் இதயம் கூச்சலிடுகிறது, என்னல் பேசாமல் மௌனமாயிருக்க முடியவில்லை. சரி, அது இருக்கட்டும்... நம்ப முடியுமா உங்களால்? ஒரேயொரு பெண்ணையாவது எனக்குத் தெரியுமா? தெரியாது, யாருமே இல்லை! அறிமுகமானவள் என்று சொல்லிக் கொள்வதற்குகூட யாருமில்லை! கனவு மட்டும் நாள் தவரு

மல் கண்டு வருகிறேன்—காலம் வரும், என்றோ எங்கோ நான் சந்திக்கவே போகிறேன் என்று! இம்மாதிரி எத்தனை தரம் நான் காதல் கொண்டிருப்பேன் தெரியுமா!..''

''அதெப்படி? யார்மீது?..''

''ஓ, யார்மீதும் அல்ல, அப்படியொரு கருத்தின்மீது, என் கனவுகளில் நான் சந்திக்கிறவள்மீது. கனவுகளில் பெரும் காதல் காவியங்களைப் புனைபவன் நான். ஆம், உங்களுக்குத் தெரியாது என்னை! இரண்டொரு பெண்களைச் சந்தித்திருக்கிறேன், மெய்தான். ஆனால் எப்படிப்பட்ட பெண்கள் அவர்கள்? சர்வசாதாரணமானவர்கள், அடுப்பங்கரைப் பெண்கள்... உங்களுக்குச் சிரிப்பு வரும், ஆனாலும் இதைச் சொல்கிறேன். தெருவிலே யாராவது பிரபுக்குலச் சீமாட்டியுடன் தற்செயலாகப் பேசுவது போல—அவள் தனியே இருக்கிற போதுதான்—உரையாடிப் பார்க்கலாம் என்று அடிக்கடி நான் நினைத்திருக்கிறேன். எனக்குக் கூச்சமாகத்தான் இருக்கும், மரியாதையாகவும் உணர்ச்சிகரமாகவும் பேசுவேன். தனிமை தாளாமல் நான் மடிவதாகச் சொல்வேன். எந்தப் பெண்ணுடனும் பரிச்சயம் பெற வழியில்லாதவன், என்னை உதறித் தள்ள வேண்டாமென்று மன்றாடுவேன். வருந்தத்தக்க நிலையிலுள்ள என் போன்ற ஒரு மனிதனின் பரிதாபமான வேண்டுகோளைக் காது கொடுத்துக் கேட்பது பெண் என்ற முறையில் அவளது கடமையுமாகும் என்பதை உணர்த்துவேன். அப்படி ஒன்றும் நான் அதிகமாகக் கேட்கவில்லை, உடனே என்னைப் போகச் சொல்லாமல் சோதரிக்குரிய அனுதாபத்துடன் இரண்டு வார்த்தை பேசும்படித்தானே கேட்கிறேன்; என்னை நம்பத்தக்கவனாகக் கொண்டு நான் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்க வேண்டுமென்கிறேன், அவ்வளவுதானே. அவள் விருப்பம் அப்படியானால் என்னைப் பார்த்துச் சிரிக்கட்டும், ஆனால் எனக்குக் கொஞ்சம் நம்பிக்கை அளிக்க வேண்டும், திரும்பவும் சந்திக்கப் போவதில்லை என்றாலுங்கூட வாய் திறந்து இரண்டு வார்த்தை பேச வேண்டுமென்கிறேன், அதிகம் வேண்டாம் இரண்டே இரண்டு வார்த்தை!.. ஆனால் நீங்கள் சிரிப்பது தெரிகிறது எனக்கு... அதற்காகத்தானே இவற்றையெல்லாம் உங்களிடம் சொல்கிறேன்...''

''நீங்கள் வருத்தப்படக் கூடாது, நான் ஏன் சிரிக்கிறேன் என்றால், நீங்களே உங்களுக்கு எதிரியாக இருக்

கிறீர்கள்; நீங்கள் முயற்சி செய்து பார்த்திருந்தால் வெற்றி கிட்டியிருக்கலாம். தெருவிலே நடப்பதாகவே இருக்கட்டுமே, முடியுமானுல் அதுவும் நல்லதுதானே... நல்ல சுபாவமுள்ள எந்தப் பெண்ணும் அப்படி மன்ருடிக் கேட்கும் போது இரண்டு வார்த்தை கூடப் பேசாமல் உங்களைப் போகச் சொல்லிவிட மாட்டாள். அசடாக அல்லது அந்த நேரத்தில் எதைப் பற்றியோ கோபங் கொண்டவளாக இருந்தால் ஒழிய அப்படிச் செய்ய எவளுக்கும் மனம் வராது... அடே, யோசிக்காமலே பேசுகிறேன் நான்! ஆம், உங்களைப் பைத்தியக்காரன் என்றுதான் நினைத்துக் கொண்டுவிடுவாள்! எல்லோரும் என்னைப் போன்றே இருப்பார்களென்று எண்ணிக் கொண்டுவிட்டேன். உலகில் வாழ்வோர் எப்படிப் பட்டவர்கள் என்பது பற்றி எனக்குத் தெரிந்தது அவ்வளவு தான்!''

''ஓ, நன்றி உங்களுக்கு! இப்பொழுது எனக்கு எவ்வளவு பெரிய காரியம் செய்திருக்கிறீர்களென்று உங்களுக்குத் தெரியாது!'' என்று நான் வாய்விட்டுக் கூறினேன்.

''அது சரிதான்! ஆனுல் இதைச் சொல்லுங்கள், நான் இந்த மாதிரி இருப்பேன் என்று உங்களுக்கு எப்படித் தெரிந்தது... அதாவது நீங்கள் பழகுவதற்கும் நட்புக் கொள்வதற்கும் ஏற்றவளாக இருப்பேன் என்று நீங்கள் சொன்னீர்களே அடுப்பங்கரைப் பெண்ணென்று, அம்மாதிரி இருக்க மாட்டேன் என்று எப்படித் தெரிந்தது? நீங்கள் ஏன் என்னை அணுகலாமென்று நினைத்தீர்கள்?''

''ஏன் நினைத்தேனு?.. நீங்கள் தனியே இருந்தீர்கள், அந்தக் கனவான் எதற்கும் துணிந்தவராக இருந்தார், இரவு நேரம்; ஆகவே நீங்களே ஒத்துக் கொள்ளலாம்; அம்மாதிரியான நிலைமையில் அது என் கடமை...''

''நான் அதைக் கேட்கவில்லை, அதற்கு முன்பு, தெருவின் அந்தப் பக்கத்திலே இருந்தபோது என்னிடம் வர விரும்பினீர்கள் அல்லவா?''

''தெருவின் அந்தப் பக்கத்திலா? உண்மையில் எப்படிச் சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை... இன்று நான் மகிழ்ச்சியால் பூரிப்புற்றிருந்தேன், தெரியுமா உங்களுக்கு? நான் பாடிக் கொண்டே நடந்து வந்தேன். நகருக்கு வெளியே போய்விட்டு வந்தேன், என்றுமில்லாதபடி அப்படி இன்பக் களிப்புற்றிருந்தேன். ஆனுல் நீங்கள்... அது என்

கற்பனையாகவே இருந்திருக்கலாம்... அதை நினைவுபடுத்துவதற்காக மன்னிக்க வேண்டும்: நீங்கள் அழுவதாக நினைத்தேன், என்ருல்... அதை என்ருல் சகிக்க முடியவில்லை... என் இதயம் வெடித்துவிடும் போலிருந்தது... அட தெய்வமே! உங்களுக்காக வருந்துவதற்குக் கூடவா அனுமதி இல்லை எனக்கு! உங்கள்பால் நான் சோதர அனுதாபம் கொள்வதுகூட தகாத செயலா, என்ன? என்னை மன்னிக்க வேண்டும், அனுதாபம் கொண்டதாகக் கூறினேன்... சரி, அதிகம் நீட்டாமலே சொல்கிறேன்: உங்களிடம் வர வேண்டுமென்று என்னையும் மீறி திடீரென்று எனக்கு ஒரு விருப்பம் ஏற்பட்டது குற்றம் அல்லவே!''

''போதும், அதைப் பற்றி இனி பேச வேண்டாம் என்று அவள் என் கையை அழுத்திப் பிடித்துக் கொண்டாள். ''தவறு என்னுடையதுதான், நான்தான் இந்தப் பேச்சைத் தொடங்கினேன். ஆனால் உங்களைப் பற்றி நான் நினைத்தது தவருகிவிடவில்லை என்று மனம் மகிழ்கிறேன்... சரி, இதோ வந்துவிட்டோம்; இந்தச் சந்தில்தான் நான் திரும்ப வேண்டும், இரண்டு தப்படி நடந்தால் போதும். போய்வருகிறேன், வணக்கம்! உங்களுக்கு நன்றி...''

''அவ்வளவுதான, சாத்தியம்தான இது? இனி நாம் சந்திக்கப் போவதில்லையா? இதோடு யாவும் முடிந்துவிட வேண்டியதுதான?''

''நீங்களே பாருங்கள், ஆரம்பத்தில் சொன்னீர்கள் நீங்கள் விரும்பியது எல்லாம் இரண்டே இரண்டு வார்த்தைதான் என்று, ஆனால் இப்பொழுது...'' என்று அந்தப் பெண் சிரித்துக் கொண்டாள். ''நான் திடமாக ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. ஒருவேளை திரும்பவும் நாம் சந்திக்க நேரலாம்...''

''நாளைக்கு இங்கு வந்து காத்திருப்பேன்'' என்றேன் நான். ''ஓ, நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். விடாக்கண்டனாக உங்களைத் தொல்லை செய்கிறேன்...''

''ஆம், நீங்கள் பொறுமையில்லாதவராக இருக்கிறீர்கள், விடாக்கண்டன் மாதிரிதான் இருப்பீர்கள் போலிருக்கிறது...''

''இதைக் கேளுங்கள், இதைக் கேளுங்கள்!'' என்று அவளை இடை மறித்தேன். ''திரும்பவும் நான் ஏதாவது தவறுதலாகப் பேசினல் என்னை மன்னிக்க வேண்டும்.

ஆனால் என் நிலை இது தான்: என்றால் நாளைக்கு இங்கு வராமல் இருக்க முடியாது. நான் கனவுகாண்கிறவன், மெய் யான வாழ்க்கை அதிகம் இல்லாதவன். இப்பொழுது கிடைத் துள்ள இவை போன்ற தருணங்கள் எனக்கு வாய்ப்பது அரிதாகையால் என் கனவுகளில் இவற்றை நான் திரும்பத் திரும்ப வாழ்ந்து மகிழ்ந்து கொண்டுதான் இருப்பேன். இரவு முழுதும் நான் உங்களைப் பற்றிக் கனவு காண்பேன், வாரம் முழுதும், ஓராண்டு பூராவும் உங்களைப் பற்றிக் கனவு காண்பேன். நாளைக்கு நிச்சயம் நான் இங்கு வரு வேன், இதே இடத்துக்கு இதே மணி நேரத்துக்கு வருவேன், முந்திய நாள் நடந்ததை எல்லாம் நினைத்து ஆனந்தமடை வேன். இதற்குள்ளாகவே எனக்கு இந்த இடம் நினைக்க நினைக்க இன்பம் தரும் இடமாகிவிட்டது. பீட்டர்ஸ்பர் கில் எனக்கு இது போன்ற இரண்டு மூன்று இடங்கள் இருக் கின்றன. ஒரு முறை என் நினைவுகள் என்னை அழச் செய்து விட்டன, நீங்கள் அழுதீர்களே அது போல... யாருக்குத் தெரியும் சற்று முன்பு, பத்து நிமிடங்களுக்கு முன்பு உங் களுடைய நினைவுகள்தான் அப்படி உங்களை அழச் செய் தனவோ, என்னவோ. என்னை மன்னித்துவிடுங்கள், மறுபடி யும் நான் என்னையே மறந்து விட்டேன். இந்த இடம் முன் பொரு நாள் நீங்கள் மட்டிலா மகிழ்ச்சியுற்று இன்ப மடைந்த இடமாக இருந்தாலும் இருக்கலாம்...''

''சரி, நாளைக்குப் பத்து மணிக்கு நான் இங்கு வரலா மென்று இருக்கிறேன்'' என்றாள். ''நீங்கள் வரக் கூடா தென்று என்றால் தடை விதிக்க முடியாது. நான் இங்கு வர வேண்டியிருக்கிறது. உங்களைச் சந்திப்பதற்காக என்று நினைக்க வேண்டாம். என் சொந்த வேலையை முன்னிட்டு இங்கு நான் வர வேண்டியிருக்கிறதென்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். ஆனால் ஒன்று... சரி, ஒளிக்காமலே சொல்கிறேன் கேளுங்கள்: நீங்களும் இங்கு வருவதானால் எனக்கு ஆட்சேபமில்லை. முதலாவதாக, இன்று இரவு நடந்த மாதிரி அசம்பாவிதமாக ஏதாவது நடக்கலாமல் லவா? ஆனால் இதுவல்ல நான் கூற விரும்புவது. சுருங்கச் சொன்னால் உங்களைப் பார்க்க வேண்டுமென்று நினைக்கி றேன், அவ்வளவுதான்... உங்களுடன் இரண்டு வார்த்தைகள் பேச வேண்டும். ஆனால் என்னைப் பற்றி நீங்கள் தவறாக நினைக்கக் கூடாது. எளிதில் நான் சந்திக்க முன்வருகிறேன்

என்று எண்ணக் கூடாது... இப்பொழுது நான் முன்வருவதுகூட எதற்காக என்றால்... ஆனால் அது இரகசியம், இப்பொழுது சொல்ல மாட்டேன்! ஒரு நிபந்தனை மட்டும் போடுகிறேன்.''

''நிபந்தனையா? என்ன அது, சொல்லுங்கள்! இப்பொழுதே சொல்லுங்கள்! எந்த நிபந்தனையானாலும் ஒத்துக் கொள்கிறேன், எதற்கும் நான் தயார்'' என்று குதூகலத்தோடு கூறினேன். ''நான் எனக்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன், பணிவாகவும் மரியாதையாகவும் நடந்து கொள்வேன்... என்னை உங்களுக்குத் தெரியும்...''

''உங்களை எனக்குத் தெரியும் என்பதால்தான் நாளைக்கு இங்கே வரும்படி அழைக்கிறேன்'' என்று சிரித்தவாறு பதிலளித்தாள் அவள். ''உங்களை நன்றாகத் தெரியும் எனக்கு. ஆனால் ஒரு நிபந்தனையின் பேரில்தான் வர வேண்டும், நினைவிருக்கட்டும் (தயவு செய்து நீங்கள், நான் சொல்லுகிறபடி நடந்து கொள்ள வேண்டும்—நீங்களே பாருங்கள், எதையும் நான் மறைக்காமல் சொல்கிறேன்), நீங்கள் என் மீது காதல் கொள்வதில்லை என்ற நிபந்தனையின் பேரில்தான் வர வேண்டும்... அப்படி எதுவும் நடைபெறக் கூடாது, தீர்மானமாகச் சொல்கிறேன். உங்களுடன் நட்புக் கொள்வதற்குத் தயாராயிருக்கிறேன். இதோ என் நேசக் கரம்... ஆனால் என்மீது நீங்கள் காதல் கொள்ளக்கூடாதென்று வேண்டுகிறேன்!''

''சத்தியம் செய்து தருகிறேன்!'' என்று கூறியவாறு, அவள் கையைப் பற்றிக் கொண்டேன்.

''வேண்டாம், சத்தியம் செய்ய வேண்டாம். எனக்குத் தான் தெரியுமே, வெடிமருந்து மாதிரி நீங்கள் ஆர்த்தெழுந்து விடக் கூடிய ஆளென்று. இப்படிச் சொல்வதற்காகக் கோபித்துக் கொள்ளாதீர்கள். என்னைப் பற்றித் தெரிந்திருந்தால் ஒருபோதும் நீங்கள் கோபித்துக் கொள்ள மாட்டீர்கள்... எனக்கும் பேசுவதற்கு யாருமில்லை, ஆலோசனை கூற எவருமில்லை. மெய்தான், ஆலோசகர்களைத் தேடிப் பிடிப்பதற்குத் தெரு தக்க இடமல்ல, ஆனால் நீங்கள் இதற்கு ஒரு விதிவிலக்கு. இருபது ஆண்டுகளாக நாம் இருவரும் நண்பர்களாக இருப்பது போல அவ்வளவு நன்றாக உங்களைத் தெரிந்துகொண்டுவிட்டதாக நினைக்கிறேன். உங்கள் வாக்குறுதியை மீறமாட்டீர்களே?''

''நீங்களேதான் பாருங்களேன்... ஆனால் இடையிலுள்ள பொழுதில் எப்படி நான் உயிர் பிழைத்திருக்கப் போகிறேனோ தெரியவில்லை.''

''நிம்மதியாய்த் தூங்குங்கள், அதுதான் வழி. போய் வருகிறேன், என் நம்பிக்கைக்கு உரியவராக உங்களை ஏற்றுக் கொண்டுவிட்டேன் என்பது நினைவிருக்கட்டும். உள்ளத்தில் எழும் உணர்ச்சி ஒவ்வொன்றுக்குமா, சோதர அனுதாபத்துக்குங்கூடவா நியாயம் கூறிக் கொண்டிருக்க வேண்டுமென்று நீங்கள் எவ்வளவு நன்றாகச் சொன்னீர்கள்! உங்களை நம்பலாம், உங்களிடம் சொல்லலாம் என்று உடனே என் மனத்துள் ஓர் எண்ணம் தோன்றும்படி நீங்கள் அதை அவ்வளவு நன்றாகக் கூறினீர்கள், தெரியுமா?''

''நிச்சயமாகச் சொல்லலாம், என்ன அது? சொல்லுங்கள், புண்ணியம் உண்டு!''

''நாளை வரை காத்திருங்கள். அது வரை தெரியாத இரகசியமாய் இருக்கட்டும். உங்களுக்கும் நல்லதுதான், அது வரை காவியம் போல் உங்களது கற்பனையைக் கிளறுவதாய் இருக்கும். யாவற்றையும் நாளைக்கு உங்களிடம் சொன்னாலும் சொல்லுவேன், சொல்லாமல் இருந்தாலும் இருப்பேன். முதலில் உங்களுடன் மேலும் பேசுவேன், ஒருவரையொருவர் நாம் இன்னும் நன்றாகத் தெரிந்துகொள்வோம்...''

''சரி, அப்படியே செய்யலாம்! நாளைக்கு என்னைப் பற்றி உங்களிடம் யாவற்றையும் சொல்கிறேன்! ஆனால் என்ன இது? நம்பமுடியாத அதிசயமாக இருக்கிறதே... தெய்வமே, நான் எங்கே இருக்கிறேன்?.. இதைச் சொல்லுங்கள், உங்களுக்கு மனக்குறை எதுவும் இல்லையே? ஏன் கேட்கிறேன் என்றால், வேறு யாரையும் போல நீங்கள் கோபப்படவே இல்லை, ஆரம்பத்திலேயே என்னைத் தூரவிலகிப் போகச் சொல்லவில்லை. இரண்டே நிமிடங்களில் நீங்கள் என்னை என்றென்றைக்குமாக இன்பமடையச் செய்துவிட்டீர்கள். ஆம், இன்பத்தில் திளைக்கச் செய்துவிட்டீர்கள்! ஒருகால் என்னுடன் எனக்கு இணக்கம் உண்டாக்கி வைத்துவிட்டீர்களா, என் சந்தேகங்களை எல்லாம் விரட்டியடித்துவிட்டீர்களா, அறியேன் நான். அல்லது எல்லாம் என் கற்பனைதானா?.. சரி, யாவற்றையும் நாளைக்கு உங்களிடம்

சொல்கிறேன். யாவற்றையும் நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்; ஆம், யாவற்றையும்...''

''சரி, ஆகட்டும். நீங்கள்தான் முதலில் பேச வேண்டும்.''

''அதற்கென்ன, பேசுகிறேன்.''

''வணக்கம்!''

''வணக்கம்!''

இருவரும் விடை பெற்றுக் கொண்டோம். இரவு முழுவதும் நான் நடந்தேன், அறைக்குத் திரும்ப மனம் இல்லை. அப்படி இன்பக் களிப்புற்றேன்... நாளை மீண்டும் சந்திப்போம்!

இரண்டாம் இரவு

''பார்த்தீர்களா, எதுவும் நேர்ந்துவிடவில்லை, உயிருடன் தான் இருக்கிறீர்கள்!'' என்று சிரித்தவாறு அவள் என் இரு கைகளையும் பிடித்துக் குலுக்கினாள்.

''இரண்டு மணி நேரமாக இங்கே இருக்கிறேன்! எனக்கு இந்த நாள் எப்படி இருந்ததென்று உங்களுக்குத் தெரியாது!''

''ஏன் தெரியாது? நன்றாகத் தெரியும்... இது இருக்கட்டும், நாம் வந்த காரியத்தைக் கவனிக்கலாம். இங்கு ஏன் வந்திருக்கிறேன் தெரியுமா? நேற்றிரவில் நடந்த மாதிரி வீண் பேச்சுப் பேச இங்கு நான் வரவில்லை. இனி நாம் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும். நேற்று இரவு நெடுநேரம் இது பற்றிச் சிந்தித்தேன்.''

''எந்த விதத்தில் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளனும்? நான் தயார்தான், ஆனால் என் வாழ்வில் எனக்கு இதைக் காட்டிலும் புத்திசாலித்தனமான ஒன்று நிகழ்ந்ததே இல்லை!''

''மெய்தானா? முதலில் நான் கேட்டுக் கொள்வது என்னவெனில் என் கைகளை நீங்கள் இப்படி நெரிக்கக் கூடாது. இரண்டாவதாக, உங்களைப் பற்றி இன்று நான் நெடுநேரம் சிந்தித்துப் பார்த்தேன்.''

''அப்படியா? என்ன முடிவுக்கு வந்தீர்கள்?''

''என்ன முடிவுக்கா? தொடக்கத்திலிருந்தே நாம் ஆரம்பிக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தேன். ஏனென்றால் உங்களைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது என்பதை இன்று காலை நான் உணரலானேன். நேற்று இரவு நான் சிறுபிள்ளை

போல, அசட்டுச் சிறுமியைப் போல நடந்து கொண்டதை உணர்ந்தேன். இரக்கம் மிகுந்த என் உள்ளத்தால் இக்குறை நேர்ந்ததென்பது 'தெரிய வந்தது. அதாவது தமது செயல்களை ஆராயப் புகும் ஒருவர் எப்பொழுதுமே செய்வது போல முடிவில் நான் என்னையே புகழ்ந்து கொண்டேன். ஆகவே என் குறையை நிவர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு, ஒரு சிறு விவரமும் விடாமல் உங்களைப் பற்றி யாவற்றையும் தெரிந்து கொள்வதென்று முடிவு செய்தேன். ஆனால் இவற்றை எனக்குத் தெரிவிக்கக் கூடியவர்கள் யாரும் இல்லையாதலால், நீங்கள்தான் யாவற்றையும் எனக்குச் சொல்ல வேண்டும், உங்களது இரகசியங்களை எல்லாம் கூற வேண்டும். சரி, நீங்கள் எப்படிப்பட்ட ஆள்? சீக்கிரமாய்ச் சொல்லுங்கள், உங்கள் கதை பூராவையும் சொல்லுங்கள்.''

''என் கதையா?'' என்று மிரண்ட குரலில் கேட்டேன். ''யார் சொன்னது, எனக்கு ஒரு கதை உண்டென்று? எந்தக் கதையும் இல்லை எனக்கு...''

''கதை ஏதும் இல்லாமல், எப்படி நீங்கள் வாழ்ந்தீர்களாம்?'' என்று சிரித்தவாறு என்னை அவள் இடைமறித்தாள்.

''கதை இல்லாமலேதான் நான் வாழ்ந்து வந்திருக்கிறேன்! தன்னந் தனியனாக வாழ்ந்து வந்துள்ளவன், அவ்வளவு தான். அதாவது நான் முற்றிலும் தனியாகவே—ஆம், தனியனாய்—இருந்துள்ளவன். தனியனாய் இருப்பதென்றால் என்ன தெரியுமா உங்களுக்கு?''

''அதெப்படி தனியனாய் இருப்பது? யாரையும் நீங்கள் பார்ப்பதே இல்லை என்றா சொல்கிறீர்கள்?''

''இல்லை, இல்லை! பார்க்கிறேன், இருந்தாலும் நான் தனியன்தான்.''

''யாரோடும் பேசுவது இல்லையா?''

''சரியானபடி சொல்வதெனில், யாரோடும் பேசுவதில்லை.''

''அப்படியானால் நீங்கள் எம்மாதிரியான ஆள் என்பதைக் கொஞ்சம் விளங்கும்படிச் சொல்லுங்கள்! இருங்கள், நானே சொல்கிறேன், எனக்கு ஒன்று தோன்றுகிறது; எனக்குப் பாட்டி இருக்கிற மாதிரி ஒருவேளை உங்களுக்கும் ஒரு பாட்டி இருக்குமோ? என்னுடைய பாட்டிக்குக் கண்

தெரியாது, பாட்டி என்னை வெளியே எங்கும் போக விடாது, நான் வெளியே சென்று எவ்வளவோ காலமாகிறது. எனக்கு யாருடனும் பேசுகிற பழக்கமே அனேகமாய் அற்றுப்போய்விட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தரம் நான் செய்யக்கூடாத ஒரு காரியம் செய்துவிட்டேன். இனி என்ன சொன்னாலும் வீட்டிலே அடைந்து கிடக்க மாட்டேன் என்பதைக் கண்டதும் பாட்டி என்னை அருகே கூப்பிட்டு என்னுடைய உடையைத் தன்னுடையதுடன் சேர்த்து வைத்து ஊக்கு போட்டுக் குத்திவிட்டது—அது முதலாக நாங்கள் இருவரும் இப்படித்தான் தினமும் ஊக்கு போட்டு இணைக்கப்பட்டு உட்கார்ந்திருக்கிறோம். கண் தெரியாவிட்டாலும் என் பாட்டி காலுறை பின்னிக்கொண்டு உட்கார்ந்திருக்கும், நான் பக்கத்தில் அமர்ந்துகொண்டு ஏதாவது தைப்பேன், அல்லது பாட்டிக்குப் புத்தகம் படித்துக் காட்டுவேன்—ஊக்கு போட்டுக் குத்தி உட்கார வைக்கப்படும் இத்தகைய விபரீதம் இரண்டு ஆண்டுகளாக நடைபெறுகிறது...''

''அட கடவுளே! இப்படியுமா ஒரு கஷ்டம் வரும்! எனக்கு அப்படி ஒரு பாட்டி யாருமில்லை.''

''இல்லை என்றால் பிறகு நீங்கள் வீட்டிலே அடைபட்டுக் கிடக்கக் காரணம் என்ன?''

''நான் எப்படிப்பட்டவன் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களா?''

''ஆமாம், ஆமாம்!''

''துல்லியமாகவா?''

''மிகமிகத் துல்லியமாக!''

''சரி சொல்கிறேன் கேள்ளுங்கள், நான் ஒரு தனி ரகம்.''

''தனி ரகமா? அது என்ன, தனி ரகம்?'' என்று வியந்து கூவியவாறு அவள் வாய்விட்டுச் சிரித்தாள், ஓராண்டு முழுதும் சிரிக்க வாய்ப்பில்லாதவளாய் இருந்தவளோ என்று நினைக்கும்படி அப்படி ஆனந்தமாகச் சிரித்தாள். ''நீங்கள் ரொம்ப வேடிக்கையான ஆள்! அதோ ஒரு பெஞ்சு இருக்கிறது. அதில் உட்கார்ந்து கொள்வோம். இங்குயாரும் வருவதில்லை, நாம் பேசுவது யார் காதுக்கும் எட்டாது. இனி உங்கள் கதையைச் சொல்ல ஆரம்பியுங்கள். ஏனெனில் நீங்கள் என்ன சொன்னாலும் நிச்சயம் உங்களிடம் ஒரு

கதை இருக்கிறது, அதைச் சொல்லாமல் மறைக்கப் பார்க்கிறீர்கள். முதலில், 'தனி ரகம்' என்றால் என்ன?''

''தனி ரகமா? தனி ரகம் என்றால் கிறுக்கு ஆள், வேடிக்கையான ஆள் என்று அர்த்தம்.'' இதைச் சொல்லி விட்டு, சிறு பிள்ளையைப் போன்ற அவளுடைய சிரிப்பி லே நானும் சேர்ந்து கொண்டு சிரித்தேன். ''அது ஒரு தனி வகைக் குணச் சித்திரத்தைக் குறிப்பதாகும். சரி இதைக் கேளுங்கள், கனவுகாண்கிறவனைத் தெரியுமா உங்களுக்கு?''

''கனவுகாண்கிறவன்தானே? யாருக்குத்தான் தெரியா தாம்? நான்கூடக் கனவுகாண்கிறவள்தான்! பாட்டிக்குப் பக் கத்தில் உட்கார்ந்திருக்கையில் சில நேரம் என் மண்டை யில் என்னவெல்லாம் உதிக்கும்! விதம்விதமாய்க் கனவு கள் காண ஆரம்பித்துவிடுவேன், அவை என்னை எங்கெல் லாமோ தூக்கிச் சென்றுவிடும்—அப்புறம் நான் சீனத்து அரசிளங்குமரனை மணம் புரிந்து கொள்வதாக ஒரு கற் பனை பிறக்கும்! சில நேரம் கனவு காண்பதும் நல்லதுதான், தெரியுமா! இல்லை, சொல்ல முடியாது; வேறு ஒன்றைப் பற்றி சிந்திக்க வேண்டிய போது கனவு கண்டு கொண் டிருந்தால் எப்படி?'' என்று இப்பொழுது சற்றுக் கருத் தார்ந்த முறையில் கூறினாள்.

''சபாஷ்! சீனத்து அரசிளங்குமரனை மணம் புரிந்து கொள்வதாகக் கற்பனை செய்தவளாதலால் எளிதில் நீங் கள் என்னைப் புரிந்து கொண்டு விடுவீர்கள். நான் சொல் கிறேன் கேளுங்கள்... ஆனால் அதன்முன் உங்கள் அனு மதியுடன் இதைக் கேட்கவிரும்புகிறேன்: உங்கள் பெயர் என்ன? இன்னமும் நான் உங்கள் பெயரைத் தெரியாதவ னாக இருக்கிறேனே!''

''நல்ல வேளை! இப்பொழுதாவது ஞாபகம் வந்ததே!''

''அட தெய்வமே, எனக்கு அந்த நினைப்பே வரவில்லை. குறைவிலா இன்பத்தில் அப்படித் திளைத்திருந்து விட் டேன்.''

''என் பெயர் நாஸ்தென்கா.''

''நாஸ்தென்கா—அவ்வளவுதானா?''

''அவ்வளவுதான்! போதாதா? பேராசைக்காரராய் இருக்கிறீர்களே!''

''ஏன் போதாது? அதிகம், அதிகம்! ஏதேஷ்டம்! நாஸ் தென்கா, நீங்கள் தங்கமான பெண்! ஏனென்றால் எடுத்

ததுமே நான் உங்களை நாஸ்தென்கா என்று அழைக்க அனுமதித்து விட்டீர்களே!''

''நானும் அப்படித்தான் நினைக்கிறேன். சரி, சொல்லுங்கள்.''

''நாஸ்தென்கா, இந்த வேடிக்கையான கதையைக் கேள்!''

அவளுக்குப் பக்கத்தில் அமர்ந்து பக்தி சிரத்தை வாய்ந்த உருக்கமான பாவனையோடு, மனப்பாடம் செய்த வாசகத்தை ஒப்பிப்பது போல, சொல்லத் தொடங்கினேன்:

''நாஸ்தென்கா, உங்களுக்குத் தெரியுமோ என்னமோ, ஆனால் பீட்டர்ஸ்பர்கில் விசித்திரமான சில முடுக்குகள் இருக்கின்றன. நகரின் ஏனைய எல்லாப் பகுதிகளிலும் பிரகாசிக்கும் கதிரவன் அவ்விடங்களில் எட்டிப் பார்ப்பதாகவே தெரியாது. வேறொரு கதிரவன், ஒரு புது வகைக் கதிரவன், தொலைவிலுள்ள அந்த முடுக்குகளுக்கென உருவாக்கப்பட்ட ஒன்று, அங்கு ஒளி விடுகிறான். அவன் அங்கு யாவற்றின் மீதும் வேறு விதமான, தனி வகைப்பட்ட ஒளிக்கதிர்களை வீசுகிறான். அந்தத் தொலை முடுக்குகளில் வாழ்க்கையானது நம்மைச் சுற்றிலும் அலைமோதும் இந்த வாழ்க்கையை எவ்வகையிலும் ஒத்ததாயில்லை, முற்றிலும் வேறான ஒரு தனி உலகுக்குரியதாகத் தோன்றுகிறது. காவியக் கதைக்குரிய ஓர் அதிசய உலகில் காணத்தக்கதே அன்றி, நமது புவிக் கோளத்தில் நாம் வாழும் மெத்தக் கடினமான இக்காலத்தில் காணக்கூடிய வாழ்க்கையே அல்ல அது. அந்த வாழ்க்கை விசித்திரமான ஒரு கலப்படம்; கட்டுக்கடங்காத முழுநிறைக் கற்பனையும், உணர்ச்சித் துடிப்புள்ள இலட்சிய நோக்கும், இவற்றுடன் கூடவே (அந்தோ, நாஸ்தென்கா!) சோபையின்றிச் சலிப்பூட்டும் சர்வசாதாரணமானவையும், ஏன் நம்ப முடியாத அளவுக்கு அற்பமானவை என்றுகூட சொல்லத்தக்கவையும் ஒன்று சேர்ந்த ஒரு கலப்படம்.''

''அடே அப்பா! பிரமாதமான பீடிகையாக அல்லவா இருக்கிறது! மேற்கொண்டு என்னவெல்லாம் கேட்கப் போகிறேனோ?''

''நாஸ்தென்கா (உங்களது பெயரை எத்தனை தரம் சொன்னாலும் எனக்கு வாய் அலுக்காது), இன்னும் கூறுகிறேன் கேளுங்கள். இந்தத் தொலை முடுக்குகளில் வாழ்

வோர் விநோதப் பிறவிகள்—அவர்கள் கனவுகாண்கிறவர்கள்! கனவுகாண்கிறவன் — இவனுடைய கருரான இலக்கணத்தை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இவன் மெய்யான மனிதப் பிறவியல்ல, ஒரு வித அஃறிணைப் பிறவி. பகலின் வெளிச்சத்திலிருந்து பதுங்குகிறவனைப் போல இவன், எளிதில் அணுக முடியாத ஒரு முடுக்காகப் பார்த்து ஒண்டிக் கொண்டு விடுகிறான். இப்படி ஒரு கூட்டைத் தேடிப் பிடித்து அதனுள் புகுந்து கொண்டதும் அவன் இந்தக் கூட்டிலிருந்து பிரிக்க முடியாதபடி அதனுடன் ஒட்டிக் கொண்டு விடுகிறான்—நத்தை போல. அல்லது இன்னும் சொன்னால், இந்த விவகாரத்தில் அவன், ஒருங்கே வீடாகவும் உயிர்ப் பிராணியாகவும் இருக்கும் ஆமை எனப்படும் அந்த வேடிக்கையான பிராணியை ஒத்தவனாகிவிடுகிறான். தன்னைச் சுற்றிலுமுள்ள அந்த நான்கு சுவர்களிடம்— தவறாமல் இச்சுவர்கள் பச்சை வர்ணம் பூசப்பட்டு, அழுக்குப் பிடித்து, சகிக்க முடியாத அளவுக்குப் புகையடைந்து துயரமூட்டுபவையாகவே இருக்கும்—ஏன் அவனுக்கு இந்த மோகம்? அவனுடைய சொற்ப நண்பர்களில் ஒருவன் அவனைப் பார்க்க வரும்போது (முடிவில் அவன் நண்பனே எஞ்சியிராத நிலையை எய்திவிடுவான்) இந்த அதிவிநோத மனிதன் அந்நண்பனை எதிர்கொண்டு அழைக்கையில் ஏன் இப்படிக் குழப்பமுற்றுக் கதிகலங்கி விடுகிறான்? ஏன் இப்படித் திகைப்புற்றுத் தடுமாறுகிறான்? தனது நான்கு சுவர்களுக்கு நடுவே ஏதோ பெருங் குற்றம் புரிந்தவனைப் போல, கள்ள நோட்டுகள் அச்சிட்டுக் கொண்டிருந்தவனைப் போல, கவிதைகளை எழுதிய கவிஞன் இறந்துவிடவே கவிஞனின் நண்பனாகிய தான் இக்கவிதைகளை வெளியிடுவது தன் புனிதக் கடமையெனக் கருதுவதாகக் கூறும் அநாமதேயக் கடிதத்துடன் பத்திரிகைக்கு அனுப்புவதற்காகக் கவிதைகள் புனைந்து கொண்டிருந்தவனைப் போல ஏன் இப்படி அவனுடைய முகம் எட்டுக் கோணலாகிவிடுகிறது? நாஸ்தென்கா, நீங்களே சொல்லுங்கள், ஏன் இவர்கள் இருவரிடையிலும் நடைபெறும் உரையாடல் இப்படிப் பகட்டாகவும் போலியாகவும் இருக்கிறது? வந்த நண்பன் பிற சந்தர்ப்பங்களில் ஆனந்தமாகச் சிரித்தும் தமாஷாகப் பேசியும் பெண்பாலரையும் களிப்புக்குரிய பிற விவகாரங்களையும் பற்றி அரட்டையடித்தும் மகிழ்பவனாக இருப்பினும் ஏன் இப்பொழுது

சிரிப்போ தமாஷோ இல்லாமல் திகைத்துப் போய் உட்கார்ந் திருக்கிருன்? புதிதாகப் பரிச்சயம் பெற்று முதல் முறை யாக இங்கு வந்திருக்கிருன் என்பது தெளிவாகத் தெரியும். இந்த நண்பன் (இரண்டாவது முறை என்பதாகப் பேச இடம் இருக்காது, ஏனெனில் இந்நண்பன் மறுமுறை இங்கு வரவே மாட்டான்) தன்னை உபசரிப்பவனது கலவரத்தைக் கண்டதும் சுவாரசியமாகப் பேசும் திறனை (அது அவனுக்கு இருக்குமாயின்) அறவே இழந்து வாயடைத்துப் போய் ஏன் இப்படித் திருதிருவேன்று விழிக்கிருன்? அவனை உபசரிப் பவன் உரையாடல் இடையிடையே தடைபட்டு நிற்காத படி விறுவிறுப்பு உண்டாக்குவதற்காகவும், சமுதாயப் பாவ னைகளில் தானும் தேர்ச்சியுடையவன்தான் என்று காட்டிக் கொள்வதற்காகவும், பெண்பாலரைப் பற்றி ஏதேனும் குறிப்பிட்டு அதன் மூலம் வேறு எதுவும் இல்லையேனும் தவறு தலாகத் தன்னைக் கண்டு செல்ல வந்துவிட்ட இந்தப் பரி தாப மனிதனது நேசத்துக்குத் தன்னை உரியவனுக்கிக் கொள் வதற்காகவும் தீரமிக்கவையே ஆயினும் பயன் ஏதும் இல் லாத முயற்சிகளைச் செய்து பார்த்துவிட்டுக் குழம்பிப் போய்ப் பொருத்தமாகப் பேசவோ செயல்படவோ முடி யாதவனுக ஏன் இப்படித் திக்குமுக்காடுகிருன்? வந்தவன் ஏன் இப்படி இருந்தாற்போல் இருந்து ஒரு முக்கிய வேலை நினைவுக்கு வந்தவனுக அவசரமாகத் தொப்பியைப் பற்றிக் கொண்டு திடுமெனக் கிளம்புகிருன்? உபசரிப்பவன் வருத்தம் தெரிவிக்கவும் நிலைமையைச் சரிசெய்யவும் பட படத்துப் பல வழிகளிலும் முயன்று பார்க்கையில், வந்தவன் அவனுடைய பரபரப்பான பிடியிலிருந்து கையை இழுத்து உதறிக் கொண்டு வெளியேறுகிருனே ஏன்? அறையை விட்டு வெளியே வந்ததும் ஏன் அப்படி விழுந்து விழுந்து சிரிக் கிருன்? இனி ஒருபோதும் இந்த அதிவினேதக் கிறுக்கனை— உண்மையில் இக்கிறுக்கன் அருமையான அற்புதமான மனி தன்—பார்க்க வர மாட்டேன் என்று அதே இடத்தில் அறு தியிட்டுத் தன்னுள் கூறிக் கொள்கிருனே, ஏன் அது? அதே போதில் அவனையும் மீறி அவனுடைய கற்பனை ஒரு சிறு விளையாட்டில் ஈடுபட்டு ஓர் ஒப்புமை—வலிந்து பெறப் பட்டதே ஆயினும்—செய்து பார்க்கிறதே ஏன்? அதாவது தன்னை உபசரித்த நண்பனின் முகத்தை, அறையில் இருவரும் பேசிக் கொண்டிருந்த அந்த நேரம் பூராவும் அம்முகத்

தில் தெரிந்த உணர்ச்சிபாவத்தை, சிறுவர்கள் சிலரால் தகாத முறையில் பிடித்து இழுத்துச் சென்று பல விதமாக வும் வதைத்துத் துன்புறுத்தப்பட்டு வெறுப்பேற்றப்பட்ட பரிதாபமான ஒரு பூனைக்குட்டி முடிவில் அவர்களிடமிருந்து தப்பியோடி நாற்காலிக்கு அடியில் பதுங்கி, அங்கமெல் லாம் சிலிர்த்துப் போய் ஓயாது தும்மிக் கொண்டும் அவ லம் தோய்ந்த சின்னஞ் சிறு முகத்தை இரு பாதங்களால் துடைத்துக் கொண்டும் ஒரு மணி நேரம் பதுங்கியிருக்க நேர்ந்த பிற்பாடு நெடுநேரம் அனைத்து உலகையும், அன் பான வேலைக்காரி, எசமானர் சாப்பிட்ட மேசையிலிருந்து அதற்குப் போடுவதற்காகப் பத்திரமாய் எடுத்து வைத் திருக்கும் அந்தத் துண்டுகளையும் கூட குரோதப் பார் வை கொண்டு நோக்கும்படி ஆகிவிடும் அந்தப் பூனைக்குட்டி யின் உணர்ச்சி பாவத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கிறுனே ஏன்?''

''இதோ பார்'' என்று, வியந்து போய் இவ்வளவு நேரம் விரிந்த கண்களுடனும் திறந்த வாயுடனும் என் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த நாஸ்தென்கா என்னை இடை மறித்தாள். ''இதெல்லாம் ஏன் நடைபெற வேண்டு மென்று எனக்குத் தெரியவில்லை, நீங்கள் ஏன் இம்மாதிரி வேடிக்கையான கேள்விகளைக் கேட்கிறீர்கள் என்பதும் விளங்கவில்லை. ஆனால் ஆரம்பத்திலிருந்து கடைசி வரை நீங்கள் சொன்ன அந்த அனுபவங்கள் யாவும் உங்களுக்கு நேர்ந்தவைதான் என்பது மட்டும் எனக்கு நிச்சயமாகத் தெரிகிறது.''

''நிச்சயமாக நேர்ந்தவைதான்'' என்று நான் கண்டிப் பான முறையில் பதிலளித்தேன்.

''சரி, அப்படியானால் மேற்கொண்டு சொல்லுங்கள். இதெல்லாம் எப்படி முடியப் போகிறது என்று தெரிந்து கொள்ள ஆவலாக இருக்கிறேன்'' என்றாள்.

''நாஸ்தென்கா, அந்தத் தொலை முடுக்கில் நமது கதா நாயகன், அதாவது நான்—ஏனெனில் இந்தக் கதையின் நாயகன் நானேதான், அடியேன்தான் — என்ன செய்து கொண்டிருந்தான் என்றுதானே தெரிந்து கொள்ள விரும்பு கிறீர்கள். என் நண்பனின் எதிர்பாராத வருகை ஏன் என்னை நிலைகுலையச் செய்து அன்று முழுதும் கதிகலங்கிப் போய்த் திண்டாட வைத்தது என்று அறிய விரும்புகிறீர்

கள் அல்லவா? திடுமெனக் கதவு திறந்ததும் ஏன் நான் அப்படித் துணுக்குற்றுப் பதைபதைத்துப் போனேன், என்னைப் பார்க்க வந்தவனை ஏன் நல்லபடி வரவேற்க இயலாதவனுனேன், விருந்தினனை உபசரிக்கும் பொறுப்பு தாள மாட்டாதவனுக ஏன் அப்படி அவமானகரமாகக் குலைந்து போனேன் என்று அறிய விரும்புகிறீர்கள் அல்லவா?''

''ஆமாம், ஆமாம்!'' என்ருள் நாஸ்தென்கா. ''அதைத் தான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஆனுல் இதைக் கேளுங்கள், நீங்கள் பிரமாதமான முறையில் பேசுகிறீர் கள், அவ்வளவு பிரமாதமாக இல்லாமல் கொஞ்சம் சாதாரணமாகப் பேச முடியாதா உங்களால்? ஏன் சொல்கிறேன் என்ருல் புத்தகத்திலிருந்து நீங்கள் படித்துக் காட்டுவது மாதிரி இருக்கிறது.''

''நாஸ்தென்கா!'' என்று நான், எனக்கு வந்த சிரிப்பை எப்படியோ அடக்கிக் கொண்டு, கடுமையான, கண்டிப்பான குரலில் பதிலளித்தேன். ''அருமை நாஸ்தென்கா, நான் பேசுவது பிரமாதமாகவே இருக்கும், எனக்குத் தெரியும். நீங்கள் மன்னிக்க வேண்டும்—என்னுல் வேறு விதமாகப் பேச முடியாது. நாஸ்தென்கா, இந்தத் தருணத்தில் நான் சாலமன் மன்னனுடைய ஆவியைப் போல இருக்கிறேன்—ஏழு முத்திரைகளிட்டுக் கெட்டியாக மூடப்பட்டு ஆயிரம் ஆண்டுகளாக ஜாடிக்குள் அடைபட்டிருந்தபின் ஏழு முத்திரைகளும் உடைக்கப்பட்டு வெளியே வந்ததே சாலமன் மன்னனின் ஆவி, அதைப் போன்றவனுக இருக்கிறேன். எனதருமை நாஸ்தென்கா, நெடுங்காலம் பிரிந்திருந்துவிட்டு மீண்டும் இப்பொழுது நாம் சந்திக்கிறபடியால்—ஆம், நாஸ்தென்கா, நெடுங்காலமாக உன்னை எனக்குத் தெரியும், நெடுநாட்களாக நான் தேடிக் கொண்டிருந்தேன்; இதெல்லாம் ஓர் அறிகுறி, நான் தேடியது உன்னைத்தான், நமது இந்தச் சந்திப்பு விதி வசத்தால் நேர்ந்தது என்பதற்கான அறிகுறி—என் மண்டைக்குள் ஆயிரம் மடைகள் திறந்து கொண்டுவிட்டன, ஆற்று வெள்ளமெனப் பெருக்கெடுக்கும் சொற்களை நான் பொழிந்தே ஆக வேண்டும், இல்லையேல் எனக்கு மூச்சுத் திணறிப் போகும். ஆகவே, நாஸ்தென்கா, என்னை இடை மறிக்காமல் பணிவுடனும் கவனமாகவும் என் பேச்சைக் கேட்குமாறு வேண்டுகிறேன், இல்லையேல் நான் மேற் கொண்டு பேச மாட்டேன்.''

''இல்லை, இல்லை! வேண்டாம்! நீங்கள் பேசுங்கள்! வாய் திறக்காமல் கவனமாகக் கேட்கிறேன்.''

''மேலும் சொல்கிறேன். என்னருமை நாஸ்தென்கா, தினமும் எனக்கு மிகவும் பிடித்த ஒரு மணி நேரம் இருக்கிறது. வேலைகள், கடமைகள், அலுவல்கள் எல்லாம் அநேகமாக முடிந்து அவரவர் வீட்டுக்கு விரைந்து செல்லும் நேரம் அது. சாப்பிடலாம், சற்று நேரம் கண்ணயரலாம், அல்லது சாலையில் வேகமாகச் செல்லும் போது அவரவரும் திட்டமிட்டபடி மாலையையும் இரவையும் எஞ்சிய ஓய்வு நேரத்தையும் பல்வேறு உல்லாசப் பொழுதுபோக்குகளிலும் செலவிடலாமென்று விரைகின்றனர். அந்த நேரத்தில் நமது கதாநாயகனும் — நாஸ்தென்கா, படர்க்கையில் இந்தக் கதையைச் சொல்ல நீங்கள் அனுமதிக்க வேண்டும், தன்மைச் சுட்டில் இதையெல்லாம் நான் சொல்லத் தொடங்கினால் எனக்கு வெட்கம் தாள முடியாது—ஆகவே அந்த நேரத்தில் நமது கதாநாயகனும், தனது அன்றாட வேலைகளை முடித்துக் கொண்டு எல்லோரையும் போலவே நடைபோடுகிறான். ஆனால் வெளிறிய, சற்றுச் சோகை பிடித்த அவனது முகம் ஒரு விநோதமான உவகையால் மலர்ந்திருக்கிறது. கொஞ்சம் கருத்தூன்றியவனாகவே, அஸ்தமனச் சூரியன் பீட்டர்ஸ் பர்கின் குளிர்ந்த வானில் மெதுவாகச் சரிந்து மறைவதை உற்று நோக்குகிறான். இல்லை, நான் சொல்வது உண்மையல்ல, அவன் நோக்கவில்லை, தன்னினைவு இழந்து தியானம் புரிகிறவனைப் போல் பார்த்துச் செல்கிறான்; களைத்துவிட்டவனைப் போல், அல்லது வேறு ஏதோ மிகவும் சுவையான ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிவிட்ட காரணத்தால் தன்னைச் சுற்றிலுமுள்ளவற்றில் மேம்போக்காகக் கணப் பொழுது கவனத்துக்கு மேல் செலுத்த முடியாதவனைப் போல் பார்த்துச் செல்கிறான். தொல்லை தரும் தனது அன்றைய அலுவல்கள் முடிந்துவிட்டன, விடியும் வரை இனி கவலையில்லை என்று மகிழ்கிறான். வகுப்பறையை விட்டு வெளியே சென்று தனக்குப் பிடித்த மாதிரி விளையாடவும் சேட்டை செய்யவும் அனுமதிக்கப்பட்டுவிட்ட பள்ளிக்கூடச் சிறுவனைப் போல் குதூகலமடைகிறான். நாஸ்தென்கா, அவனைக் கொஞ்சம் பாருங்கள், இந்தக் குதூகல உணர்ச்சி அவனுடைய தளர்ச்சியுற்ற நரம்புகளுக்கும் பிணியுற்ற கற்பனைக்கும் எப்படி ஆரோக்கியமும் தெம்பும் அளித்திருக்

கிறது பாருங்கள். இப்பொழுது அவன் எதைப் பற்றியோ ஆலோசனை செய்கிறுன். இரவுச் சாப்பாட்டைப் பற்றி ஆலோசிக்கிறுன் என்ரு நினைக்கிறீர்கள்? அல்லது மாலைப் பொழுது போக்குகளைப் பற்றி இருக்குமோ?அப்படி உற்றுப் பார்க்கிறுனே, என்ன அது? தடபுடலான அக்கனவான் ஒட்டக் குதிரைகள் பூட்டிய பளபளக்கும் கோச்சுவண்டியில் செல்லும் சீமாட்டிக்கு ஆடம்பரமாகத் தலை குனிந்து வணக்கம் தெரிவிப்பதையா? இல்லை, நாஸ்தென்கா, இந்த நேரத்தில், இது போன்ற அற்பக் காட்சிகளை எல்லாம் பொருட்படுத்துகிறவனு அவன்? தனக்கே உரிய அந்த நூதன வாழ்க்கையின் செல்வங்களில் அல்லவா புரண்டு கொண்டிருக்கிறுன். திடுமெனக் கைவரப் பெற்ற செல்வங்கள் இவை. அஸ்தமனச் சூரியனது கடைசிக் கதிர்கள் அவன் எதிரே வீணில் அப்படி ஆனந்தமாகப் பளிச்சிட்டுச் செல்லவில்லை. அவன் இதயத்தை அவை குதூகலிக்க வைத்துத் திரளான கற்பனைகளை அதில் துள்ளியெழச் செய்துவிட்டுச் சென்றுள்ளன. முன்னர் இந்தச் சாலையில் அற்பமான சிறு விவரங்கள் கூட அவனைக் கவர்ந்திருக்கும், ஆனுல் அதே சாலையை இப்பொழுது சற்றும் கவனியாது நடக்கிறுன். ஏனெனில் 'கற்பனு தேவி' அவனுக்காகத் தனது தறியில் (அருமை நாஸ்தென்கா, நீங்கள் ஜுக்கோவ்ஸ்கியைப் படித்திருந்தால் தெரியும்) தங்கப்பாவு இழைகளை எப்படியெப்படியோ கோத்தமைத்துக் கனவுகளை, காவியச் சிறப்புடைத்த விந்தை வாழ்வு பற்றிய கனவுகளை மென்துகிலாய் நெய்யத்தொடங்கி விட்டாளே. யாருக்குத் தெரியும், அற்புதமான கருங்கல் நடைபாதையில் வீடுநோக்கிச் சென்று கொண்டிருந்தவனை அவள் தனது மந்திரக் கோலை ஆட்டி ஏழாவது பளிங்குச் சொர்க்கத்துக்கு மாயமாகக் கொண்டு போய்விட்டாளோ என்னமோ? நீங்கள் அவனை நிற்கச் செய்து, எங்கே இருக்கிறீர்கள் அல்லது எந்தத் தெருக்கள் வழியே நடந்து வந்தீர்கள் என்று திடீரென்று கேட்டால், பெரும்பாலும் அவனுக்கு எதுவுமே நினைவில் இருக்காது; எங்கெல்லாம் சென்றேம், எங்கே இருக்கிறேம் என்று சொல்லத் தெரியாமல் சங்கடத்துக்கு உள்ளாகி முகம் சிவந்துபோய், மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஏதாவது கதைக்க முற்படுவான். ஆதலால்தான் வயது முதிர்ந்த அந்தச் சீமாட்டி பணிவன்புடன் பேசி அவனை நடைபாதையின் நடுவே

நிற்கச் செய்து, எங்கோ போவதற்கு அவனிடம் வழி கேட்டதும் அப்படித் துணுக்குற்றுப் போய் வாய்விட்டுக் கூச்சலிடும் நிலையை அடைந்து பீதியுடன் சுற்றிலும் பார்க்கிருன். இதெல்லாம் என்ன தொல்லை என்று முகம் சுளித்தவாறு நடக்கிருன். மெல்லச் சிரித்தபடி அவனைக் கடந்து சென்று பிறகு திரும்பிப் பார்க்கும் பாதசாரிகளும், அச்சமுற்று அவன் பாதையிலிருந்து விலகிச் சென்று பிறகு அவனுடைய சிந்தனையில் ஆழ்ந்த இளிப்பையும் சைகை செய்யும் கைகளையும் கண்டுவிட்டு மணி நாதமிட்டுச் சிரிக்கும் அந்தச் சிறுமியும் அவன் பார்வையில் படுவதாகவே தெரியவில்லை. ஆனுல் அதே 'கற்பனு தேவி' சிறகடித்துப் பறக்கும் தனது குதூகல விளையாட்டில், வயது முதிர்ந்த அந்தச் சீமாட்டியையும் வியந்து அவனைப் பார்த்தபடி செல்லும் பாதசாரிகளையும் சிரிக்கும் அந்தச் சிறுமியையும் மற்றும் ஃபன்தான்காவில் (அதாவது நமது கதாநாயகன் அப்பொழுது அக்கால்வாயின் கரையிலே செல்வதாக வைத்துக் கொண்டால்) அடைசலாய் நிற்கும் படகுகளில் இரவு உணவு அருந்தத் தொடங்கிவிட்ட அந்தப் படகோட்டிகளையும் தன்னுடன்கூடத் தூக்கி வந்து, சிலந்தி வலையில் ஈக்களும் சேர்த்து வைத்துப் பின்னப்பட்டிருப்பது போல தன்னுடைய தங்கத் துணியில் எல்லோரையும் எல்லாவற்றையும் சேர்த்திணைத்து நெய்து குறும்புகள் புரிகின்ருள். நமது அதிவிஞேத மனிதன் இந்தப் புதிய செல்வங்கள் பலவும் கிடைக்கப் பெற்றவனுகத் தனது இன்னரும் உறைவிடத்துக்கு வந்து சேர்கிருன். அங்கே அமர்ந்து இரவுச் சாப்பாடு சாப்பிட்டு முடிக்கிருன், எந்நேரமும் சிந்தனை தோய்ந்த துயரத் தோற்றம் கொண்ட அவனுடைய வேலைக்காரி மத்ரியோனு மேசையைச் சுத்தம் செய்துவிட்டு அவனிடம் புகைக் குழாயைக் கொண்டு வந்து கொடுத்த பிறகு தான் தன் கனவுகளிலிருந்து விழித்துக் கொள்கிருன். மெல்ல அசைகிருன், சாப்பிடும் நினைவே இல்லாமல் ஏற்கெனவே சாப்பிட்டு முடித்துவிட்டோமா என்று வியப்புறுகிருன். அறையில் இருள் படர்கிறது, வெறுமையும் துயரமும் அவன் இதயத்தில் குடி கொள்கின்றன. கற்பனையில் உருவான ஒரு உலகம் அவனைச் சுற்றிலும் நொறுங்கி விழுகிறது, சப்தமின்றி, அதிர்வின்றி நொறுங்கித் தவிடு பொடியாகிறது. எல்லாம் கனவு போலப் பறந்தோடிவிடு

கிறது, என்ன கனவு கண்டோமென்பதுகூட அவனுக்கு நினைவு இல்லை. ஆனால் இப்பொழுது இனமறியாத ஓர் உணர்வு, அவன் இதயத்தைத் துடிக்க வைத்துச் சற்று வலிக்கச் செய்யும் ஒரு புதிய ஆசை விறுவிறுப்பூட்டிக் கிறங்கச் செய்து அவனுக்கே தெரியாமல் அவன் கற்பனை யைத் தூண்டிவிடுகிறது, பெருங் கும்பலாய்ப் பல புதிய மாய உருவங்களை உசுப்பி விடுகிறது... அந்தச் சிறு அறை யில் நிசப்தம் கோலோச்சுகிறது;அவனுடைய கற்பனை தனி மையிலும் அசதியிலும் மூழ்கித்திளைக்கிறது; பையப் பைய மூண்டெழுகிறது, அருகே அடுப்பங்கரையில் அங்குமிங்கும் நடந்து எந்தக் கவலையுமின்றி தனக்குக் காப்பி தயாரித்துக் கொண்டிருக்கும் வயது முதிர்ந்த மத்ரியோனாவின் காப்பிக் கெட்டிலில் கொதிக்கும் தண்ணீரைப் போல அது கொப்புளித்தெழத் தொடங்கிறது. பிறகு அவனுடைய கற் பனையானது கூடர் விட்டு எரிய முற்படுகிறது. குருட்டாம் போக்கில் கைக்கு அகப்பட்டதாக எடுத்து வைத்திருந்த புத்தகம் இரண்டொரு பக்கங்களுக்கு மேல் படிக்கப்படா மலே நமது கனவுலகவாசியின் கையிலிருந்து நழுவி விழு கிறது. அவனுடைய கற்பனை தட்டியெழுப்பப்பட்டு மீட்டி விடப்படுகிறது.உடனே அவனுடைய மனக்கண் முன்னே ஒரு புதிய உலகு, இன்ப மயக்கமூட்டும் புதிய உலகு, சுடரொளி வீசிப் பளிச்சிட்டு மாயாவிநோதங்கள் புரிகிறது. புதிய கனவு—புதிய இன்பக் களிப்பு! மிக நயமாய்ச் செயல்பட்டு கிறுங்கச் செய்து புளகாங்கிதமடைய வைக்கும் புதியதொரு துளி நச்சு மருந்து. நம்முடைய மெய்யான வாழ்க்கை ஒரு பொருட்டாகுமா இனி அவனுக்கு! நாஸ்தென்கா, மருந் துண்ட அவன் கண்ணோட்டத்தில் நீங்களும் நானும் தூங்கு மூஞ்சிகளாக மிக மெதுவான மந்த வாழ்க்கை வாழ் கிறோம். அவன் கண்ணோட்டத்தில் நாம் எல்லோரும் நமது நிலைகுறித்து சிறிதும் திருப்தியற்றவர்களாக அல்லற்படுகின் றோம், வாழ்க்கையே நமக்கு வெறுத்துப் போய்விட்டது. ஆம், நாம் ஒருவருக்கு ஒருவர் பாசமின்றி கடுப்பும் காழ்ப் பும் கொண்டவர்களாகத் தோன்றும்படிப் பழகிக்கொள் கிறோம் பாருங்கள். 'பாவ ஆத்மாக்கள்!'—எனது கனவுலக வாசி அப்படித்தான் நினைக்கிறான். அவன் அப்படி நினைப் பதில் வியப்பில்லை! அவனுக்கு அந்த மாயப்படைப்புகள் அப்படி உள்ளங்கவரும் வகையில் நேர்த்தியாகவும் தயாள

சிந்தையோடும் புனைந்தளிக்கும் உணர்ச்சித் துடிப்பு மிக்க மாயாஜால சித்திரத்தைப் பாருங்கள்; இதில் அவன்தான், நேரடியாக நமது கனவுலகவாசியே மிக முக்கியப் பாத்திர மாக எந்நேரமும் முன்வரிசையில் நின்று பங்கெடுத்துக் கொள்கிறான் என்பதைக் கூறத் தேவையில்லை. விதம்வித மான விந்தையான நிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெறு வதைப் பாருங்கள், களிபேருவகை ஊட்டி அவனைப் பரவச மடையச் செய்யும் கனவுகள் முடிவில்லா வரிசைகளில் வருவதைப் பாருங்கள்! எதைக் குறித்து இப்படிக் கனவு காண்கிறான் என்று கேட்பீர்கள்—அதை ஏன் கேட்கிறீர் கள்! யாவற்றையும் குறித்துதான். கவிஞனாக இருப்பது குறித்து, முதலில் பெயர் தெரியாதவனாக இருந்துவிட்டுப் பிற்பாடு பெரும் புகழ் பெறுவது குறித்து, ஹாப்மனின்* நண்பனாவது குறித்து, பர்த்தலோமியோ இரவு குறித்து, டையானா வெர்னோன் குறித்து, ஜார் இவான் கஸானை வெற்றி கொள்கிறானே அதில் தான் ஆற்றும் வீரப் பங்கு குறித்து, கிளாரா மொப்ரே குறித்து, எஃபி டீன்ஸ்** குறித்து, உயர் குருமார் சபையின் முன்னால் ஹுஸ்*** நிற்பது குறித்து, சைத்தான் ராபேர்ட் ஒபேரா நாடகத்தில் மாண்டோர் உயிர் பெற்றெழுவது குறித்து (அந்த இசை உங்களுக்கு நினைவிருக்கிறதா? இடுகாட்டின் நாற்றம் அடிக்குமே அதில்?), மின்னாவும் பிரெண்டாவும்**** குறித்து, பெரெசினா ஆற் றருகே நடந்த போர் குறித்து, கோமகள் வ.தெ.—வுக்குக்

---

* ஹாப்மன் (1776—1822)—ஜெர்மானியக் கற்பனா வாத இலக்கிய மரபின் முக்கிய பிரதிநிதிகளில் ஒருவராகத் திகழ்ந்த எழுத்தாளர்.—ப-ர்.

** வால்டர் ஸ்காட்டின் நாவல்களில் வரும் பாத்திரங் கள்.—ப-ர்.

*** யான் ஹுஸ் (1369—1415) — புகழ் பெற்ற செக் தேசபக்தர். கத்தோலிக்க மதச் சபையைச் சாராத சுயேச் சையான தேசிய சமயத்தைத் தோற்றுவிப்பதற்காகப் பாடு பட்டார்; ஜெர்மன் நிலப் பிரபுக்களுக்கு எதிரான தேச விடுதலை இயக்கத்தைத் துவக்கினார். 1415ல் உயர் குருமார் சபையால் மரண தண்டனை விதிக்கப்பட்டு உயிருடன் எரிக்கப்பட்டார்.—ப-ர்.

**** மின்னா—ஜுக்கோவ்ஸ்கி எழுதிய ருஷ்யக் கவிதை. பிரெண்டா—கஸ்லோவ் எழுதிய கதைப் பாட்டு.—ப-ர்.

கவிதைகள் படித்துக் காட்டுவது குறித்து, டான்டன்* குறித்து, கிளியோப்பாட்ராவும் அவள் காதலர்களும் குறித்து, கலோம்னுக் குடில் குறித்து,** தனக்கென ஓர் உறைவிடமாக அமைந்த சிறு வீட்டில் குளிர் கால இரவு ஒன்றில் தன் பக்கத்திலிருக்கும் எழில் மடந்தை ஒருத்தி கண்கள் விரிந்தும் வாய் திறந்தும் இருக்க—எனதருமை நாஸ்தென்கா, இப்பொழுது நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்களே அது போல—அவனுடைய பேச்சை வியந்து கேட்பது குறித்து கனவுகள் காண்கிறுன்... இல்லே, நாஸ்தென்கா, அவன் மதிமயங்கிய மந்த நிலேயில் இருக்கிறுன், நீங்களும் நானும் அத்தனே ஆவலாகச் சுவைக்க விரும்பும் வாழ்க்கையைப் பற்றி அவன் கவலேப்படுகிறவன் அல்ல. இந்த வாழ்க்கை சோபையற்றது, அவலமானது என்று நினேக்கிறுன். தனக்கும் ஒரு நாள் சோக நாதம் எழுப்பி மணி ஒலிக்கும், அப்பொழுது இந்த அவல வாழ்க்கை ஒரு மணி நேரம் வாழும் வாய்ப்பைப் பெறுவதற்காக ஆண்டாண்டுக் காலமாகத் தான் அனுபவித்த அந்தக் கனவுலக வாழ்க்கை அனேத்தையும் தரத் தயாராக இருப்போம், பதிலுக்கு மன மகிழ்ச்சியோ இன்பமோ கிட்ட வேண்டுமென்று கேட்காமலே அனேத்தையும் தரத் தயாராக இருப்போம் என்பது இப்பொழுது அவனுக்குத் தெரியாது. ஆனுல் அந்த பயங்கரமான தருணம் வரும்வரை அவனுக்கு விருப்பம் ஏதும் இல்லே, எல்லா ஆசைகளுக்கும் அப்பாற்பட்டவன் அவன். ஏனெனில் யாவும் கிடைக்கப் பெற்றுள்ளான். அவன் வேண்டிய மட்டும் கரைத்துவிட்டுச் சலிப்படைவன், தானே தனக்கு வேண்டியதைப் படைத்தளிக்கும் கலேஞனுக இருக்கிறுன். தன் மனத்துள் எழும் புதுப்புது மோகங்களுக்கு ஏற்ப மணிக்கு மணி தனக்கு அவன் புதுப்புது உலகங்களே அல்லவா படைத்துக் கொள்கிறுன்! இந்த மாயக் கற்பனே உலகம் உண்மையில் மாயையென நினேக்க முடி

---

* டான்டன் (1759—1794)—18ஆம் நூற்றுண்டின் இறுதியில் நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சியின் தலேவர்களில் ஒருவர்.—ப-ர்.

** மாபெரும் ருஷ்யக் கவிஞர் பூஷ்கின் (1799—1837) எழுதிய எகிப்திய இரவுகள், கலோம்னுக் குடில் ஆகியவை குறிக்கப்படுகின்றன.—ப-ர்.

யாதபடி அவ்வளவு சுலபமாகவும் இயற்கையாகவும் அதைப் படைத்துக் கொள்ள முடிகிறதே! ஆம், சில நேரங்களில் மெய்யாகவே நான் நம்பிவிடுகிறேன், இந்த உலகம் வெறும் கானல் தோற்றமல்ல, எனது மதிமயக்கத்தின் விளைவல்ல, என் கற்பனையின் ஜால வித்தையல்ல, இதுவே உண்மையில், எதார்த்தத்தில் நிலவும் உலகம் என்பதாக நம்பிவிடுகிறேன். இல்லையேல், நாஸ்தென்கா, நீங்களே சொல்லுங்கள், இம்மாதிரியான நேரங்களில் என் உடல் முழுவதும் புல்லரிப்பானேன்? இது என்ன, மந்திரமா? எந்த மாய சக்தி நாடிகளை அப்படி விறுவிறுப்புற்றுத் துடிக்க வைக்கிறது? நமது கனவுலகவாசியின் கண்களில் கண்ணீர் அரும்பு கட்டியிருக்கிறதே, எதனால் அது? கண்ணீரில் நனைந்த வெளிறிய அவன் கன்னங்களைச் சிவக்க வைத்தது எது? அவன் உள்ளத்தில் அப்படிப் பேரானந்தம் பொங்குவானேன்? உறங்காது அவன் கண்விழித்திருக்கும் அந்த இரவுகள் சொல்லொணா இன்பத்திலும் களிப்பிலும் இமைப் பொழுதென சடுதியில் கழிவது ஏன்? ஆதவன் உதித்து சன்னலில் செங்கதிர் பளிச்சிட்டுச் சென்றதும் அருணோதயத்தின் அரசபுரசலான மாயாவினோத ஒளி அவனுடைய அறையினுள் புகும்போது—இங்கே நமது பீட்டர்ஸ்பர்கில் இப்படித் தானே பொழுது புலருகிறது—ஏன் நமது கனவுலகவாசி களைத்து ஒய்ந்து படுக்கை மீது விழுந்து பிணியுற்று நிலைகுலைந்த அவனுடைய ஆன்மாவை வருத்தும் உவகையும் அவன் இதயத்தில் நிரம்பியுள்ள தாங்கவொண்ணாத இனிய வலியும் பொறுக்க முடியாமல் மயங்கிப்போய்த் தூக்கத்தில் ஆழ்ந்துவிடுகிறான்? ஆம், நாஸ்தென்கா, அது உங்களை ஏமாற்றி விடுகிறது, ஏமாந்து போய் நீங்கள் அவன் உள்ளத்தை ஆட்டிப் படைக்கும் உணர்ச்சிகள் எல்லாம் மெய்யானவையே என்று நம்பத் தொடங்கிவிடுகிறீர்கள், அவன் காணும் கனாக்கள் வெறும் பிரமையல்ல, அவற்றில் மெய்யானது, ஜீவனுள்ளது ஏதோ இருக்கிறது என்று நம்ப முற்பட்டுவிடுகிறீர்கள். இந்த மோசடியை என்னென்பது! உதாரணமாக அவன் இதயத்தில் காதல் குடி கொண்டிருக்கிறது, அளவிலாத அதன் முழுப் பூரிப்புடனும் மிகக் கொடுமையான அதன் முழு வேதனையுடனும் குடி கொண்டிருக்கிறது. ஒரு முறை நீங்கள் அவனைப் பார்த்ததும் தெளிவாகத் தெரியுமே! அவனை இன்பத்தில் திளைக்கச் செய்யும் அந்தக் கனவு

களில் அப்படி அவன் இதயத்தைக் கொள்ளை கொண்டு விடுகிறாளே அவளை உண்மையில் அவன் பார்த்தறியாதவன் என்றால், அருமை நாஸ்தென்கா, நீங்கள் நம்புவீர்களா? மாய்மாலக் கற்பனைகளில்தான் அவளைப் பார்த்திருக்கிறான், இந்தக் காதலே வெறும் கனவுதான் என்றால் உங்களால் நம்ப முடியுமா? இது சாத்தியமா?—உண்மையில் இருவரும் தம் வாழ்க்கையை இணைத்துக் கொண்டு இத்தனை காலமாய்க் கைகோத்துச் செல்லவில்லையா? அனைத்து உலகையும் துறந்து இருவரும் உண்மையில் ஈருடலும் ஓருயிருமாக வாழவில்லையா? பிரியா விடை பெற்றுப் பிரிந்தார்களே அன்று இரவு இருண்ட வானில் மூண்டெழுந்த புயலின் அலறல் காதில் விழாதவளாக, கண்ணிமைகளின் கருமுடிகளில் பனித்திருந்த கண்ணீர்த் துளிகளைக் கவர்ந்து சென்ற கடுங்காற்றைக் கவனியாதவளாக அவன் நெஞ்சிலே தலையைக் கவிழ்த்துக் கொண்டு விம்மியழுதது அவள் இல்லையா? —நம்ப முடியுமா இதை? எல்லாம் வெறும் கனவுதானா? —அந்தப் பூங்காவும்கூட, நம்பிக்கையோடும் நம்பிக்கை இல்லாமலும் ஆனால் எக்காலத்தும் மாறாத, அடங்காக் காதல் கொண்டவர்களாக இருவரும் உலவினார்களே அந்தப் பூங்காவும் கூட, கவனியாது விடப்பட்டுக் காடாக வளர்ந்து, நடைபாதைகளில் புற்கள் மண்டிப் போய்ச் சோகம் தருவதாக இருந்த அந்தப் பூங்காவும்கூட வெறும் கனவுதானா? சோகமுற்று, தனிமையில் அத்தனைக் காலமாய் அவள் வசித்து வந்தாளே மூதாதையர் விட்டுச் சென்றிருந்த அந்த விசித்திர வீடும் கனவுதானா? வாட்ட முற்று எந்நேரமும் வாய் திறவாதிருக்கும் வயதான தனது சிடுமூஞ்சிக் கணவருடன் அங்கேதானே அவள் வசித்து வந்தாள். அந்தக் கணவரைக் கண்டு அவர்கள் இருவரும் எளிதில் மருளும் சிறுபிள்ளைகளைப் போல் பயந்து, அப்படித் தவித்து மிரண்டு போய்த் தம் காதலை ஒருவருக்கு ஒருவர் தெரியாதபடி மறைத்துக் கொண்டார்களே. இருவரும் எப்படி மனம் ஒடிந்து வேதனையுற்றனர், அஞ்சி அஞ்சி நடுங்கினர்! அவர்களுடைய காதல் எவ்வளவு தூய்மையாக, பழிபாவம் அறியாததாக இருந்தது! மக்கள் எவ்வளவு கடுமனம் கொண்டோராக இருந்தனர் (நாஸ்தென்கா, அதைக் கூறத் தேவையில்லை!). பிறகு நெடு நாட்களுக்குப் பிற்பாடு, தன் தாயகத்தின் கரைகளிலிருந்து நெடுந் தூரத்துக்கு அப்

பால், அந்த வியத்தகு ரோமாபுரியின் வெப்பமான, புழுக்கமான அந்நிய வானத்துக்கு அடியில் சந்தித்தாளே அவள் இல்லையா அது—அட தெய்வமே, அப்படியும்கூடவா இருக்க முடியும்? அந்நகரில் அதியற்புத நடன விருந்தில் அல்லவா, வாத்தியக் குழுவின் இசை முழங்க, ஒளி வெள்ளத்திலே மூழ்கிய அந்த மாளிகையில் (ஆம், மாளிகையேதான்), பைங்கொடியும் ரோஜாவும் பந்தலிட்டிருந்த உப்பரிகையிலே அவன் அவளைச் சந்திக்கவில்லையா? அவனைக் கண்டதும் அவசரமாக முக மூடியை உயர்த்திக் கொண்டு அங்கமெல்லாம் நடுங்க முணு முணுக்கும் குரலில் ''சுதந்திரம் அடைந்துவிட்டேன்'' என்று கூறியவாறு ஓடோடி வந்து அவனுடைய அரவணைப்பில் ஒட்டிக் கொண்டாளே! ஆனந்தக் கூச்சலிட்டு அல்லவா ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொண்டு இமைப் பொழுதில் யாவற்றையுமே அடியோடு மறந்தவர்களாய் இன்பமுற்றனர்—தமது துயரம், பிரிவாற்றுமை, இதுகாறும் அவர்களை வருத்திய எல்லாத் துன்பங்கள், துயரார்ந்த அந்த வீடு, வாய் திறவாத அந்தக் கிழவர், தொலைவில் தம் தாயகத்தில் இருந்த சோபையற்ற அந்தப் பூங்கா, அங்கே அவனுக்கு விடையளித்து உணர்ச்சிப் பரவசமுற்று முத்தமிட்டுவிட்டு கொடுந் துயரால் உணர்வற்றுவிட்ட அவன் கைகளின் அணைப்பிலிருந்து பிய்த்துக் கொண்டு எழுந்து ஓடினாளே அந்த ஆசனம் ஆகிய யாவற்றையும் மறந்தல்லவா இன்பமுற்றனர்.... நாஸ்தென்கா, நீங்களே சொல்லுங்கள், திடீரென்று உங்களது அறைக்கதவு திறக்கப் பட்டு, நீங்கள் அழையாத நண்பர் ஒருவர், உயரமானவர், வாட்டசாட்டமானவர், வேடிக்கையும் விளையாட்டுமான குதூகலமான நபர் உங்கள் முன்னே தோன்றி 'நண்பரே, இப்பொழுதுதான் பாவ்லொவ்ஸ்கிலிருந்து திரும்பினேன், ஒரு நிமிடம்கூட ஆகவில்லை' என்று அசாதாரணமாக எதுவும் நடந்துவிடாதது போல அட்டகாசமாய்ச் சொல்வாராயின் நீங்கள் திடுக்கிடுவீர்களா இல்லையா? பக்கத்து வீட்டுத் தோட்டத்திலிருந்து திருடிய ஆப்பிளை அப்பொழுதுதான் பைக்குள் ஒளித்து வைத்துக் கொண்ட பள்ளிக் கூடச் சிறுவனைப் போல் முகமெல்லாம் சிவந்து திறுதிறு வென விழிப்பீர்களா இல்லையா? அட கடவுளே! வயது முதிர்ந்த கோமகன் இறந்துவிட்டார், தெவிட்டாத இன்பம் காத்திருக்கிறது எனக்காக—ஆனால் இதோ 'பாவ்

லொவ்ஸ்கிலிருந்து இப்பொழுதுதான் வந்தேன்' என்று வந்து நிற்கிருனே!''

நாடகப் பாணியிலான என் பேச்சின் முடிவை வந்தடைந்த நான் நாடகப் பாணியில் திடீரென்று மௌனமாகி விட்டேன். அப்பொழுது நான் எப்படியாவது சிரிக்க வேண்டுமெனப் பெருமுயற்சி செய்தது என் நினைவுக்கு வருகிறது. என் நெஞ்சினுள் விஷமக்காரக் குட்டிச்சாத்தான் குதி போடுவது போன்ற உணர்வு ஏற்கனவே எனக்கு ஏற்பட்டுவிட்டது, தொண்டையில் ஏதோ குறுகுறுத்தது, என் முகவாய் அதிர்ந்தாடத் தொடங்கிற்று, என் கண்கள் மேலும் மேலும் சுழல ஆரம்பித்தன... ஒளி மிகுந்த தன் கண்கள் விரிந்து திறந்திருக்க என் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த நாஸ்தென்கா இப்பொழுது வாய்விட்டுச் சிரித்துவிடுவாளோ, அவளுடைய அடக்க முடியாத ஆனந்தமான சிறுபிள்ளைச் சிரிப்பு ஒலிக்கத் தொடங்கிவிடுமோ என்று பயந்தேன். ஏன் இவ்வளவையும் சொன்னேம், நெடு நாட்களாய் என் இதயத்தை வருத்திவந்ததையெல்லாம் தேவையின்றி சொல்லிவிட்டோமே என்று வருந்தினேன். மனப்பாடம் செய்த பாடத்தை ஒப்பிப்பது போல எப்பொழுது வேண்டுமானலும் இதையெல்லாம் என்னல் ஒப்பிக்க முடியும். ஏனெனில் நெடுங் காலத்துக்கு முன்பே நான் என்னைப் பற்றிய முடிவைத் தீர்மானித்து வைத்திருந்தேன், இதை அவளால் புரிந்து கொள்ள முடியுமென்று உண்மையில் நான் எதிர்பார்க்கவில்லை என்றலுங்கூட இதை அவளுக்குப் படித்துக் காட்ட வேண்டுமென்ற ஓர் ஆசையால் உந்தப்பட்டுவிட்டேன். ஆனல் நான் வியப்படையும்படி அவள் மௌனமாகவே இருந்தாள், பிறகு சிறிது நேரம் கழித்து மெல்ல என் கையை அழுத்தியவாறு அச்சமும் ஆவலும் தொனிக்கும் குரலில் கேட்டாள்:

''மெய்யாகவே உங்கள் வாழ்க்கை முழுவதையும் இப்படியா கழித்து வந்திருக்கிறீர்கள்?''

''ஆமாம், நாஸ்தென்கா, வாழ்வு முழுதையும்தான். என் இறுதிக் காலம் வரையில் இப்படியேதான் நான் வாழ வேண்டியிருக்கும் என்று நினைக்கிறேன்'' என்றேன்.

''இல்லை, இல்லை, அப்படி வாழ முடியாது!'' என்று கலக்கத்துடன் அவள் கூறினள். ''அது கூடாது, ஏனெனில் அப்பொழுது நானும் என் எஞ்சிய வாழ்வு அனைத்தும் என்

பாட்டியின் பக்கத்திலே அல்லவா உட்கார்ந்திருக்க வேண்டி யிருக்கும்? அம்மாதிரி வாழ்வது சரியல்ல, தெரியுமா?''

''தெரியும், நாஸ்தென்கா, தெரியும்'' என்று என் உணர்ச்சிகளை அடக்க முடியாமல் உரக்கக் கூறினேன். ''என் வாழ்வின் சிறந்த ஆண்டுகளை வீணுக்கிவிட்டேன் என் பது என்றையும்விட இப்பொழுது எனக்கு நன்ருய்த் தெரிகிறது! இப்பொழுது நன்ருய்த் தெரிகிறது, ஆகவே என்றையும்விட இப்பொழுது நான் அதிகமாக வருந்து கிறேன். எனது அருமை நாஸ்தென்கா! தெய்வமெதான் உங் களை என்னிடம் அனுப்பி வைத்திருக்கிறது, இதை எனக்கு எடுத்துரைத்து என்னைத் தெளிவு பெறச் செய்வதற்காக அனுப்பி வைத்திருக்கிறது. இப்பொழுது இங்கு உங்கள் பக்கத்தில் அமர்ந்து உங்களுடன் பேசும் பாக்கியம் பெற் றுள்ள படியால் நான் வருங்காலம் குறித்து நினைக்கவே அஞ்சுகிறேன். ஏனெனில் மீண்டும் தனிமையைத் தவிர, நாற்றமெடுக்கும் அந்த அர்த்தமற்ற வாழ்க்கையைத் தவிர வருங்காலம் எனக்குத் தரக் கூடியது எதுவும் இல்லை. கன வாக இல்லாமல் நனவிலே உங்கள் அருகே இருந்து இத் தனை இன்பம் பெற்றுள்ளேன், இனி நான் கனவு காண என்ன இருக்கிறது? எனது அருமை நாஸ்தென்கா, உங்களை நான் வாயார வாழ்த்துகிறேன், ஏனெனில் நீங்கள் என்னை விலகிப் போகச் சொல்லாமல் இருந்தீர்கள், என் வாழ்வில் இரு மாலைப் பொழுதுகளை நான் மெய்யாக வாழ்ந்து அனு பவித்திருக்கிறேன் என்று சொல்லிக் கொள்ள முடியும்!''

''ஓ, வேண்டாம், வேண்டாம்!'' என்று அழாக் குரலில் கூறிஞள் நாஸ்தென்கா. அவளுடைய கண்ணிமைகளில் கண்ணீர் பளிச்சிட்டது. ''வேண்டாம், அப்படிச் சொல்லா தீர்களே! அம்மாதிரி நாம் பிரிந்து போய்விட மாட்டோம்! இரண்டு மாலைப் பொழுதுகள் எம்மட்டில்!''

''நாஸ்தென்கா, ஓ, நாஸ்தென்கா! இனி நெடுங் காலத் துக்கு எனக்கு நீங்கள் இணக்கம் ஏற்படச் செய்திருக்கிறீர் கள், தெரியுமா உங்களுக்கு? இது வரை நான் அடிக்கடி செய்து வந்தது போல இனி என்னைப் பற்றி நான் மோச மாக நினைத்துக் கொள்ள மாட்டேன், தெரியுமா? குற்றம் புரிந்ததாக, பாவம் செய்ததாக நான் வருந்துவது வழக் கம், ஏனெனில் நான் வாழும் வாழ்க்கையானது ஒரு பெருங் குற்றமேயாகும், பாவமேயாகும். நாஸ்தென்கா, இனி நான்

அப்படி நினைத்து ஆருத் துயரால் என்னை வருத்திக் கொள்ள மாட்டேன், தெரியுமா? உங்களை மன்ருடிக் கேட்டுக் கொள்கிறேன், எதையும் நான் உங்களிடம் மிகைப் படுத்திச் சொல்வதாக நினைக்காதீர்கள்; நாஸ்தென்கா, உங்களுக்குப் புண்ணியம் உண்டு, அப்படி நினைக்கதீர்கள்! ஏனெனில், சில நேரங்களில் அப்படி நான் மனச் சோர்வா லும் ஏக்கத்தாலும் பீடிக்கப்பட்டு விடுகிறேன்... இவ்வாறு பீடிக்கப்படும்போது ஒரு புதிய, மெய்யான வாழ்க்கையைத் தொடங்க இனி எந்நாளும் என்னுல் முடியப்போவதில்லை என்று நினைக்க முற்படுகிறேன், ஏனெனில் மெய்யானவற் றுடன், எதார்த்தத்துடன் நான் தொடர்பை இழந்துவிட்ட தாக, அவை பற்றிய உணர்வையே மறந்துவிட்டதாக எனக்குத் தோன்றுகிறது, ஏனெனில் நான் என் ஆன்மா வையே விற்று வாழ்ந்துவந்திருக்கிறேன், ஏனெனில் நான் ஆகாயக் கோட்டைகள் கட்டி வாழும் இரவுகளைத் தொடர்ந்து, இப்பொழுது சித்தத் தெளிவுக்குரிய தருணங் கள் வருகின்றன, அவை மிகவும் பயங்கரமானவை! இதற் கிடையில் என்னைச் சுற்றிலும் வாழ்க்கை இரைவதும் மனித நீர்ச்சுழியில் சுற்றிச் சுழலுவதும் என் காதில் விழுகிறது; மக்கள் வாழ்வதை—மெய்யான வாழ்க்கை வாழ்வதை— காதால் கேட்கிறேன், கண்களால் பார்க்கிறேன்; அவர் களுடைய வாழ்க்கை மனம் போனபடி இட்டுக் கட்டப்பட் டதல்ல, கனவையோ கற்பனைக் காட்சியையோ போல அது தகர்ந்து நொறுங்கக் கூடியதல்ல, அவர்களுடைய வாழ்க்கை என்றும் இளமைத் துடிப்புடையது, என்றும் புத்துயிர் பெற்றெழுவது, அதில் ஒவ்வொரு மணி நேரமும் அதற்கு முந்தியதிலிருந்து மாறுபடும் என்பதைக் காண் கிறேன். ஆனுல் எளிதில் மருளும் கற்பனை அலுப்பு தட்டும் படி மாற்றமின்றி ஒரே மாதிரியானது; சோபையற்றது; அற்ப நிழலுக்கெல்லாம், எண்ணத்துக்கெல்லாம் அடிமைப் பட்டது; கதிரவனை மறைத்து, பீட்டர்ஸ்பர்க் கதிரவனைப் போற்றிப் பாராட்டும் மெய்யான பீட்டர்ஸ்பர்க்வாசி ஒவ் வொருவரையும் உள்ளம் குமுறச் செய்யும் முதலாவது கரு மேகத்துக்கே அடிபணிந்துவிடக் கூடியது—இப்படிப்பட்ட கற்பனை ஏங்கித் தவிப்பதாய் இருக்குமாயின் பிறகு சொல் லவும் வேண்டுமா? ஓயாத தொல்லைக்கு இலக்காகும்போது வற்றுத உன் கற்பனையும் கரைந்து மெலிந்து முடிவில் ஓய்ந்து

போவதைக் காண்பாய். ஏனெனில் நீ முதிர்ச்சியடைகிறாய், உன்னுடைய பழைய இலட்சியங்கள் இனி உனக்குப் பொருந்தாதபடி நீ வளர்ந்துவிடுகிறாய்; அவை சுக்கு நூறாகத் தகர்ந்து தவிடுபொடியாகிவிடுகின்றன; வாழ வேறு வாழ்க்கை இல்லையாதலால், நொறுங்கிய அதே துண்டுகளையும் துணுக்குகளையும் கொண்டு திரும்பவும் நீ கோட்டை கட்ட வேண்டியதாகிறது. ஆனால் உன் ஆன்மா அடங்காத ஆவலுடன் விரும்புவதும் ஏக்கத்துடன் கோருவதும் இது வல்ல, வேறொன்று. கனவுலகவாசி தனது பழைய கனவுகளின் சாம்பலை வீணில் கிண்டிக் கிளறிப் பார்க்கிறான், எரிந்து விழுந்து கிடப்பவற்றில் எங்காவது ஒரு சிறு தீப் பொறியேனும் தென்படாதா என்று தேடுகிறான். அதைக் கொண்டு மீண்டும் நெருப்பு உண்டாக்கலாமே, உறைந்து போன தனது இதயத்துக்கு இந்தப் புத்துயிர் பெற்ற தீயால் கதகதப்பு ஊட்டி முன்பு உயிரனையதாய் இருந்து தன் இதயத்தை இயங்க வைத்துத் தனது இரத்தத்தைப் பீறிட்டுப்பாய வைத்தவை யாவற்றையும், தன் கண்களில் கண்ணீர் ததும்பச் செய்து தன்னை அப்படி அற்புதமாய் ஏமாற்றி வந்தவை யாவற்றையும் திரும்பவும் தன் இதயத்துள் உசுப்பிவிடலாம் என்று பார்க்கிறான்! நாஸ்தென்கா, என் நிலை எப்படி ஆகிவிட்டது தெரியுமா உங்களுக்கு? இப்பொழுது நான் எனது கடந்த கால உணர்ச்சிகளின் ஆண்டுவிழாவைக் கொண்டாட வேண்டிய நிலைக்கு வந்துவிட்டேன். முன்பு இருந்தவற்றின் பால், ஆனால் உண்மையில் என்றுமே நடந்திராத அவற்றின் பால் எனக்கிருந்த ஆசையையும் பாசத்தையும் போற்றி நான் ஆண்டு விழாக் கொண்டாட வேண்டியிருக்கிறது—ஏனெனில் இந்த ஆண்டு விழாவையுங்கூட அதே அசட்டுத்தனமான, வெறுங் கற்பனையான கனவுகளுக்கு ஏற்பவே கொண்டாட வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நிலைக்கு வந்துவிட்டேன் நான், ஏனெனில் அந்த அசட்டுக் கனவுகளுங்கூட இப்பொழுது இல்லாது மறைந்துவிட்டவை—ஆதாரமான ஏதாவது இருந்தால்தானே அவை மறையாதிருக்க முடியும், கனவுகளுக்கும் ஓர் ஆதாரம் வேண்டுமே! எனக்கே உரிய தனி முறையில் ஒரு காலத்தில் நான் இன்பத்தைச் சுவைத்த இடங்களை இப்பொழுது நினைவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன்; தெரியுமா? குறிப்பிட்ட தேதிகளில் இவ்விடங்களுக்கு

மீண்டும் போய்வர ஆசைப்படுகிறேன், தெரியுமா? திரும்பப் பெற முடியாதபடி மறைந்துவிட்ட கடந்த காலத்துக்கு எனது நிகழ்காலத்தை இசைவு படுத்திக் கொள்ள விரும்புகிறேன். சோர்வுற்றுச் சோகத்தில் ஆழ்ந்து, காரியமோ காரணமோ எதுவுமின்றி பேய் போல அடிக்கடி நான் பீட்டர்ஸ்பர்கின் தெருக்களிலும் சந்துகளிலும் திரிகிறேன், தெரியுமா? என் நினைவுகள்தான் எப்படிப்பட்டவை? உதாரணமாக இங்கே, ஒரு மணிகூடப் பிழையின்றி சரியாக ஓராண்டுக்கு முன்பு இதே நடைபாதையில், இப்பொழுது நான் இருக்கிறேனே அதேபோலத் தனியனுகவும் மனம் ஒடிந்தவனுகவும் சுற்றித் திரிந்தது என் நினைவுக்கு வருகிறது! என் கனவுகளும் இதே போலத் துயர மூட்டுவனவாகவே இருந்தன என்பதும் நினைவுக்கு வருகிறது. தற்போது இருப்பதைவிட எவ்வகையிலும் சிறப்பானதாய் இருக்கவில்லை என்றுலுங்கூட வாழ்க்கை அந்நாட்களில் ஓரளவு எளிதாக இருந்தது, அமைதியாக இருந்தது, இப்பொழுது என்னை வருத்தும் இருண்ட எண்ணத்தால் அன்று என் வாழ்க்கை களங்கமடையவில்லை இராப் பகலாக எனக்கு நிம்மதி சிறிதும் இல்லாதபடிப் படுத்தி வைக்கும் கடுமையான, வேதனை மிக்க நெஞ்சுக் குறுகுறுப்பால் அப்பொழுது நான் அவதியுறவில்லை என்று நினைக்கத் தோன்றுகிறது. உன்னுடைய அந்தக் கனவுகள் எல்லாம் எங்கே என்று உன்னையே நீ கேட்க வேண்டியிருக்கிறது. தலையை ஆட்டிக் கொண்டு வியப்படைகிருய்: ஆண்டுகள் எவ்வளவு வேகமாக உருண்டோடுகின்றன! மீண்டும் உன்னையே நீ கேட்டுக் கொள்கிருய்: உன் வாழ்க்கையை ஏன் இப்படி வீணுக்குகிருய்? உன் ஆயுளின் சிறந்த ஆண்டுகளை எங்கே கொண்டு போய்க் குழியில் தள்ளிப் புதைத்திருக்கிருய்? நீ வாழ்ந்திருக்கிருயா, இல்லையா? உலகில் குளிர் கடுமையாகி வருவதைப் பார் என்று கூறிக் கொள்கிருய். மேலும் ஆண்டுகள் ஓடி மறையும், ஆண்டுகள் செல்லச் செல்ல சோகமிக்க தனிமை கடுமையாகிச் செல்லும், பிறகு முட்டுக் கம்பை ஊன்றிக் கொண்டு தள்ளாத முதிய வயது வந்து சேரும், அதன்பின் ஓயாத துன்பமும் வெறுமையும் தவிர வேறு எதுவும் இருக்காது. உன்னுடைய மாயக் கற்பனை உலகம் ஒளியிழந்து இருண்டு செல்லும், உன் கனவுகள் கருகிப் போகும், பழுத்து உலர்ந்த இலைகளைப் போல அவை உதிர்ந்து

விழும்... ஓ, நாஸ்தென்கா, தனியனாக, தன்னந் தனியனாக இருப்பது எவ்வளவு சோகம் மிக்கது—நினைத்து வருந்துவதற்குக்கூட ஒன்றும் இருக்காதே, ஒன்றுமே இருக்காதே... ஏனெனில் நான் இழப்பது எதுவாயினும், அது உண்மையில் ஒன்றுமில்லாததாகத்தானே, வெறும் அசட்டுச் சின்னமாகத் தானே, வெறும் கனவுகளாகத்தானே இருக்கும்!''

''போதும், நீங்கள் மேலும் பேசினால் நான் அழத் தொடங்கி விடுவேன்!'' என்று கூறி நாஸ்தென்கா தன் கண்களிலிருந்து உதிர்ந்த துளியைத் துடைத்துக் கொண்டாள். ''அதெல்லாம் இப்பொழுது முடிவடைந்துவிட்டது. இனி நாம் இருவரும் இருப்போம், எனக்கு என்ன நேர்ந்தாலும் எந்நாளும் நாம் பிரியவே மாட்டோம். கேளுங்கள்! நான் மிகச் சாதாரணமானவள்; பாட்டி எனக்கு ஓர் ஆசிரியையை அமர்த்திப் பாடம் சொல்லித் தர வைத்தது மெய்யானாலும், நான் அதிகம் படிக்காதவள். இருந்த போதிலும் உங்களை நான் நன்றாகப் புரிந்து கொள்ள முடிகிறது, ஏனெனில் இப்பொழுது நீங்கள் சொன்னது எல்லாம் பாட்டி தனது உடையுடன் என்னை ஊக்கு போட்டுக் குத்தி வைத்திருந்தபோது நான் அனுபவித்தவையே. ஆனால் உங்களைப் போல என்னால் அவ்வளவு நன்றாக அவற்றைக் கூறியிருக்க முடியாது, ஏனெனில் நான் படித்தவளல்ல'' என்று கூச்சத்துடன் சொல்லிக் கொண்டாள். நாடகப் பாணியான என் பேச்சாலும் நான் பேசிய உன்னத முறையாலும் ஏற்பட்டிருந்த பரவச உணர்ச்சி இன்னும் அவளை விட்டு மறையவில்லை. ''மனம் விட்டு நீங்கள் யாவற்றையும் என்னிடம் சொன்னதைக் கேட்டு நான் மகிழ்கிறேன். இப்பொழுது உங்களை நான் தெரிந்து கொண்டு விட்டேன், சந்தேகத்துக்கு இடமின்றி நன்றாகத் தெரிந்து கொண்டுவிட்டேன். இனி நானும் என் கதையை உங்களிடம் சொல்ல விரும்புகிறேன். இதைக் கேட்டபின் நீங்கள் எனக்கு ஆலோசனை கூற வேண்டும். நீங்கள் மிகவும் கெட்டிக்காரராக இருக்கிறீர்கள், நான் சொல்வதைக் கேட்டபின் எனக்கு ஆலோசனை கூறுவீர்களா?''

''நாஸ்தென்கா, நான் ஆலோசகனாக, அதுவும் கெட்டிக்கார ஆலோசகனாக எந்நாளும் இருந்ததில்லை'' என்று பதிலளித்தேன். ''எனினும் நாம் இருவரும் இது போல எப்பொழுதும் நண்பர்களாக வாழ்வோமாயின் அதைக்

காட்டிலும் சிறப்பானது எதுவும் இருக்க முடியாது, அப்பொழுது ஒருவருக்கு ஒருவர் நாம் மிகவும் கெட்டிக்காரத்தனமாக ஆலோசனை கூறிக் கொள்வோம். எனது இனிய நாஸ்தென்கா, எதைப் பற்றி நீங்கள் என்னிடம் ஆலோசனை கேட்க விரும்புகிறீர்கள்? எதுவாயினும் தயங்காது கேளுங்க; இப்பொழுது நான் அப்படி குதூகலம் கொண்டவனாக, மகிழ்ச்சி மிக்கவனாக, துணிவு கொண்டவனாக, கெட்டிக்காரனாக இருக்கிறேன், ஆகவே என்ன கேட்டாலும் தடுமாற்றமின்றி உடனே என்னால் பதில் சொல்ல முடியும்.''

''இல்லை, இல்லை!'' என்று சிரித்துக் கொண்டு நாஸ்தென்கா என்னை இடைமறித்தாள். ''எனக்கு வேண்டியது கெட்டிக்காரத்தனமான ஆலோசனையல்ல, மனப்பூர்வமான சோதரவாஞ்சையோடு கூடிய ஆலோசனையே வேண்டும். வாழ்வெல்லாம் நீங்கள் என்மீது அன்பு கொண்டிருந்தால் கூறுவீர்கள் அல்லவா அப்படிப்பட்டதே வேண்டும்!''

''அப்படியே கூறுகிறேன், நாஸ்தென்கா, அப்படியே கூறுகிறேன்!'' என்று ஆனந்தமாகக் கூச்சலிட்டுக் கூறினேன். ''இருபது ஆண்டுகளாக உங்கள் மீது நான் அன்பு கொண்டவனாக இருந்திருந்தாலும் இப்பொழுது உங்கள் மீதுள்ளதைக் காட்டிலும் அதிக அன்புடையவனாக இருக்க முடியாதே!''

''உங்கள் கையைக் கொடுங்கள்!'' என்றாள் நாஸ்தென்கா.

''இதோ!'' என்று கையைத் தந்தேன்.

''இனி என் கதையைக் கூறுகிறேன் கேளுங்கள்!''

நாஸ்தென்காவின் கதை

''என் கதையில் பாதி ஏற்கனவே உங்களுக்குத் தெரியும், வயதான ஒரு பாட்டி எனக்கு இருப்பது உங்களுக்குத் தெரியுமே...''

''எஞ்சிய பாதியும் இது போல அவ்வளவு சுருக்கமாக இருந்தால்...'' என்று சிரித்தவாறு குறுக்கிட்டேன்.

''பேசாமல் கேட்க வேண்டும். இது நான் விதிக்கும் நிபந்தனை. என்னை இடைமறிக்காதீர்கள், இல்லையேல் நான்

குழம்பிப்போவேன். ஆகவே எதுவும் சொல்லாமல் கேட்டுக் கொண்டிருங்கள்.

''வயதான ஒரு பாட்டி எனக்கு உண்டு. என் தாயும் தந்தையும் இறந்துவிடவே சிறுமியாக இருக்கையிலேயே நான் பாட்டியிடம் வந்துவிட்டேன். இப்பொழுது இருப்பதைவிட பாட்டி அந்தக் காலத்தில் வசதியாக வாழ்ந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். ஏனென்றால் இன்னமும் அந்நாட்களைப் பற்றி நினைக்கையில் பாட்டிக்கு உற்சாகம் பிறந்துவிடும். பாட்டி எனக்கு பிரெஞ்சு மொழி கற்றுக் கொடுத்தாள். பிறகு எனக்குப் பாடம் சொல்லித் தருவதற்காக ஓர் ஆசிரியையை அமர்த்தினாள். எனக்குப் பதினைந்து வயதானதும் (இப்பொழுது எனக்கு வயது பதினேழு) என் படிப்பு முடிந்துவிட்டது. அப்பொழுது நான் செய்யக் கூடாத ஒரு காரியம் செய்துவிட்டேன். அது என்னவென்று உங்களிடம் சொல்லப் போவதில்லை. ஆனால் பெரிய தவறு எதுவும் செய்து விடவில்லை என்பதை மட்டும் கூறுகிறேன். ஆனால் பாட்டி ஒரு நாள் காலையில் என்னைக் கூப்பிட்டு, தனக்குக் கண் தெரியாததால் என்னைக் கண்காணிக்க முடியவில்லை என்று சொல்லி, என்னுடைய உடையைத் தன்னுடையதுடன் சேர்த்து வைத்து ஊக்குப் போட்டுவிட்டாள். நான் திருந்தினால் ஒழிய இனி வாழ்நாள் முழுதும் இருவரும் இப்படித்தான் உட்கார்ந்திருக்க வேண்டுமென்று பாட்டி கூறினாள். ஆரம்பத்தில் வெளியே போக வழியில்லாதவளாகவே இருந்து வந்தேன். நான் புத்தகம் படிப்பதானாலும் பாடம் கற்பதானாலும் பின்னல் வேலை செய்வதானாலும் பாட்டியின் பக்கத்தில் அமர்ந்திருக்க வேண்டியிருந்தது. ஆனால் ஒரு தரம் நான் ஒரு தந்திரம் செய்தேன். ஃபியோக்லாவுடன் பேசிச் சம்மதிக்க வைத்து அவளை எனக்குப் பதில் என்னிடத்தில் அமர்ந்திருக்கச் சொன்னேன். ஃபியோக்லாதான் எங்கள் வேலைக்காரி, அவளுக்குக் காது செவிடு. என்னிடத்தில் அவள் உட்கார்ந்து கொண்டாள், பாட்டி நாற்காலியில் சாய்ந்தபடி தூங்கிக் கொண்டிருந்த நேரம் அது. அருகாமையில் வசித்துவந்த ஒரு பெண்ணைப் பார்ப்பதற்காக நான் புறப்பட்டுச் சென்றேன். ஆனால் இது மோசமாகவே முடிவுற்றது. நான் இல்லாதபோது விழித்துக் கொண்டு விட்ட பாட்டி, பக்கத்தில் இன்னும் நான் பணிவுடன் உட்கார்ந்திருப்பதாக நினைத்து ஏதோ

கேட்டாள். பாட்டி கேட்பது ஃபியோக்லாவுக்குத் தெரிந் தது,. ஆனால் காது செவிடாகையால், அது என்னவென்று புரிந்து கொள்ள முடியவில்லை. என்ன செய்யலாமென்று ஏதேதோ யோசனை செய்து பார்த்துவிட்டு முடிவில் அவள் ஊக்கைக் கழற்றிக் கொண்டு அங்கிருந்து ஓடிவிட்டாள்...''

இதைச் சொல்லி நாஸ்தென்கா வாய்விட்டுச் சிரித் தாள். அவளுடன் சேர்ந்து நானும் சிரித்தேன். உடனே அவளுடைய சிரிப்பு நின்றுவிட்டது.

''இதோ பாருங்கள், நீங்கள் சிரிக்கக் கூடாது, அது பாட்டியைக் கேலி செய்வதாகிவிடும். எனக்கு வேடிக்கை யாக இருக்கிறது, அதனால் நான் சிரிக்கலாம்... பாட்டி பாவம், குறை சொல்லக் கூடாது, அதன் குணம் அப்படி. இருந்தாலும் பாட்டியிடம் எப்பொழுதும் எனக்குப் பிரி யம் உண்டு. எனக்கு அப்பொழுது சரியானபடி தண்டனை கிடைத்தது. எனக்கு உரிய இடத்தில் மீண்டும் இருத்தப் பட்டேன், அதன்பின் அங்கிருந்து நான் அங்குலம்கூட நகர முடியவில்லை.

''நிற்க, ஒன்று சொல்ல மறந்துவிட்டேன். எங்களுக்கு, அதாவது பாட்டிக்கு, சொந்த வீடு இருக்கிறது. சின்னஞ் சிறு வீடுதான், தெருப் பக்கத்தில் மூன்று சன்னல்கள் இருக் கின்றன. முற்றிலும் மரத்தாலான இந்த வீடு பாட்டியைப் போலவே மிகவும் பழமையானது. இதில் மச்சு அறை ஒன்று இருக்கிறது, ஒரு நாள் புதிய ஆள் ஒருவர் இந்த மச்சு அறைக்குக் குடி வந்தார்...''

''அப்படியென்றால், அதற்கு முன்பு அங்கு வேறொருவர் குடி யிருந்தாரா?'' என்று நான் இடையில் கேட்டேன்.

''இருந்தார்'' என்றாள் நாஸ்தென்கா. ''அவர் உங் களைப் போலல்லாமல் வாயை மூடிக் கொண்டு பேசாமல் இருக்கக் கூடியவர். உண்மையில் வாயைத் திறந்து ஒழுங் காக இரண்டு வார்த்தை பேசும் திறனை இழந்துவிட்டவர். தொண்டு கிழவர் அவர், குச்சியாய் மெலிந்திருந்தார், காது செவிடு, கண் குருடு, கால் நொண்டி. முடிவில் மேலும் தொடர்ந்து வாழ முடியாமல் இறந்து விட்டார். ஆகவே நாங்கள் ஒரு புதிய ஆளைக் குடி வைத்துக் கொள்ள வேண் டியதாயிற்று, ஏனென்றால் அந்த வாடகைப் பணம் இல்லா மல் நாங்கள் வாழ்வது கடினம், இந்த வாடகையும் பாட்டி யின் பென்ஷனும்தான் எங்களுடைய பிரதான வருமானம்.

விதி வசமாய், புதிதாய்க் குடி வந்த ஆள் இளைஞன், ஊருக்குப் புதுசு, வாடகை குறித்துப் பேரம் பேசாததால் பாட்டி அந்த இளைஞனுக்கே அறையை வாடகைக்கு விட்டுவிட்டாள். 'நாஸ்தென்கா, குடி வந்திருக்கிற ஆள் இளைஞனாக வா இருக்கிறான்?' என்று பிற்பாடு பாட்டி என்னிடம் கேட்டாள். நான் பொய் சொல்ல விரும்பவில்லை. ஆகவே 'அப்படி ஒன்றும் இளைஞனல்ல பாட்டி, ஆனால் கிழவனென்றும் சொல்ல முடியாது' என்றேன். 'ஆள் பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறானா?' என்று பாட்டி கேட்டாள்.

''பொய் சொல்ல மீண்டும் விருப்பமில்லாதவளாய் 'நன்றாகத்தான் இருக்கிறான்' என்றேன். இதைக் கேட்டதும் பாட்டி 'கஷ்ட காலம், கஷ்ட காலம்! பெண்ணே உன்னை நான் எச்சரிக்கை செய்கிறேன், அவனைப் பார்க்காதே, அவனைப் பற்றி நினைக்காதே. காலம் கெட்டுப் பேச்சு! நீயே பார், கேவலம் மச்சு அறையில் குடியிருக்கிறவன், அவனைப் போய் நன்றாக இருக்கிறான் என்கிறாய்! அந்தக் காலத்தில் நடக்குமா இப்படி?'

''அந்தக் காலம், அந்தக் காலம்—பாட்டிக்கு எந்நேரமும் இதே பாட்டுத்தான்! அந்தக் காலத்தில் பாட்டி இளம் பெண், வெயில் அன்று எவ்வளவு கதகதப்பாக இருக்கும் தெரியுமா, தயிர் இவ்வளவு சீக்கிரம் புளித்துப் போகாது அன்றெல்லாம்—எதற்கு எடுத்தாலும் அந்தக் காலம்தான்! பாட்டிக்குப் பக்கத்தில் உட்கார்ந்த நான் என்னுள் கூறிக் கொண்டேன்: குடி வந்த ஆள் இளைஞனா, பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறானா என்று கேட்டு, பாட்டி ஏன் இப்படி எனக்கில்லாத எண்ணங்களை எல்லாம் என் தலையிலே உதிக்க வைக்கிறாள்? போகிற போக்கில் திடீரென்று எனக்கு இப்படி ஒரு நினைப்பு வந்தது, பிறகு பின்னலை மீண்டும் எடுத்து வைத்துக் கொண்டு ஊசியிலிருந்த சுற்றுகளை எண்ண முற்பட்டதும் இதை அறவே மறந்துவிட்டேன்.

''குடி வந்தவரின் அறையில் சுவர்களுக்குக் காகிதம் ஒட்டித் தருவதாகச் சொல்லியிருந்தோம். ஆகவே ஒரு நாள் காலை அது பற்றிக் கேட்பதற்காக அவர் வந்திருந்தார். பேச்சு வளர்ந்து சென்றது, பாட்டி நன்றாக அரட்டையடிப்பாள். முடிவில் பாட்டி 'நாஸ்தென்கா, என்னுடைய படுக்கை அறைக்குப் போய், கணக்கிடும் கோலிச் சட்டத்தை எடுத்து வா' என்று கூறினாள். ஏனோ தெரியவில்லை, உடனே

எனக்கு முகமெல்லாம் சிவந்துவிட்டது, துள்ளியெழுந்தேன். ஊக்கு போட்டுக் குத்தி நான் இருத்தி வைக்கப்பட்டிருந்தது நினைவில்லாமல் எழுந்துவிட்டேன். குடி வந்தவருக்குத் தெரியாமல் மெல்ல ஊக்கைக் கழற்றியெடுக்காமலே, வேகமாக அடியெடுத்து வைத்ததும் என்னுடன் கூட பாட்டியின் நாற்காலியும் தரையிலே நகர்ந்தது. என்னைப் பற்றிய முழு விவரமும் அந்த இளைஞருக்குத் தெரிந்துவிட்டது என்பதைக் கண்டதும் நான் செக்கச் சிவந்து போய், கல்லாய்ச் சமைந்து அப்படியே நின்றுவிட்டேன். திடீரென்று எனக்கு அழுகை வந்துவிட்டது—இழிவும் அவமானமும் பொறுக்க முடியவில்லை! 'ஏன் அப்படியே நிற்கிறாய்?' என்று பாட்டி அதட்டினாள், நான் முன்னிலும் அதிகமாக அழுதேன். தன்னால் தான் நான் வெட்கம் தாங்காமல் அழுகிறேன் என்பதைக் கண்டதும் அந்த இளைஞர் அவசரமாக விடை பெற்றுக் கொண்டு அங்கிருந்து போய்விட்டார்.

''அதன்பின் அறைவாயிலில் காலடி ஓசை கேட்டதும் எனக்கு வெலவெலத்துப் போய்விடும். இதோ அவர் வருகிறார் என்று நினைத்துக் கொள்வேன், எதற்கும் தயாராக இருக்கும் பொருட்டு மெல்ல ஊக்கைக் கழற்றியெடுப்பேன். ஆனால் வந்தது அவரல்ல, அவர் வரவே இல்லை. இரண்டு வாரங்கள் கழிந்தன, பிறகு ஒருநாள் ஃபியோக்லா மூலம் இளைஞர் எங்களுக்குச் செய்தி சொல்லியனுப்பினார்; தன்னிடம் பிரெஞ்சுப் புத்தகங்கள் நிறைய இருப்பதாகவும் எல்லாம் நல்ல புத்தகங்கள், படிப்பதற்கு ஏற்றவை என்றும், பாட்டி அவற்றை படித்துக் காட்டச் சொல்ல விரும்பலாம், கொடுத்தனுப்பலாமா என்று கேட்டிருந்தார். பாட்டி நன்றியுடன் ஏற்றுக் கொண்டாலுங்கூட, அவை நன்னெறி புகட்டும் புத்தகங்கள்தானா என்று திரும்பத் திரும்ப என்னை விசாரித்தாள். அவை நன்னெறி புகட்டுபவை அல்லவென்றால், 'நாஸ்தென்கா, நீ அவற்றைப் படிக்கக்கூடாது, தவறான போதனை அளித்து உன்னை அவை தவறான பாதையிலே இழுத்துச் சென்றுவிடும்' என்று பாட்டி எச்சரித்தாள்.

'' 'எதைப் பற்றி அவை எனக்குப் போதனை அளிக்கும், பாட்டி? அவற்றில் என்ன எழுதியிருக்கும்?' என்று கேட்டேன்.

'' 'அதை ஏன் கேட்கிறாய்!' என்று பாட்டி பதிலளித்

தாள். 'எல்லாம் இளைஞர்கள் அருமையான பெண்களாய்ப் பார்த்து ஆசைகாட்டி மயங்க வைத்து, திருமணம் புரிந்து கொள்ளுவதாகப் பாசாங்கு செய்து, பெற்றோர் வீடுகளி லிருந்து அவர்களைக் கடத்திச் சென்று, பிறகு நடுத் தெரு விலே விட்டுவிட்டு ஓடுவதை அவை கூறும், இந்தப் பெண் களின் முடிவு சொல்லத் தக்கதாயிராது, அவ்வளவு பரி தாபமாக இருக்கும். இது போன்ற புத்தகங்கள் பலவும் நான் படித்திருக்கிறேன். யாவற்றையும் அவை அவ்வளவு சுவையாகச் சொல்லும், இரவேல்லாம் தூங்காமல் நீ இரக சியமாகப் படித்துக் கொண்டிருப்பாய். ஆகவே, நாஸ் தென்கா, அப்படிப்பட்ட புத்தகங்களை நீ தொடவே தொ டாதே! எம்மாதிரியான புத்தகங்கள் அனுப்பியிருக்கிறான் என்று சொன்னாய்?'

''எல்லாம் வால்டர் ஸ்காட்டின் நாவல்கள், பாட்டி.'

''ஸ்காட் நாவல்களா? அதில் தந்திரம் எதுவும் இல் லையா, நிச்சயம்தானா? நல்லா பார், காதல் கடிதம் ஏதா வது எழுதி மறைத்து வைத்திருக்கிறானா பார்.'

''இல்லை, பாட்டி, கடிதம் ஏதும் இல்லை' என்றேன்.

''முதுகுக் கட்டுக்குள் இருக்கா பார், சில சமயம் அந்த இடுக்கில் ஒளித்து வைத்துவிடுவான்கள், போக்கிரிப் பசங்கள்!..'

''இல்லை பாட்டி, அந்த இடுக்கிலும் எதுவும் இல்லை.'

''எதற்கும் நீ கவனமாக இரு!'

''இவ்வாறு நாங்கள் வால்டர் ஸ்காட் நாவல்களைப் படிக்க ஆரம்பித்தோம். ஒரு மாதத்தில் பாதிப் புத்தகங் களைப் படித்து முடித்தோம். பிறகு அந்த இளைஞர் மேலும் புத்தகங்கள் அனுப்பிக் கொண்டிருந்தார். பூஷ்கின் புத் தகங்களும் சில அனுப்பினார். முடிவில் நான் புத்தகங்கள் இல்லாமல் வாழ முடியாதவளாகி விட்டேன், சீன அரசிளங் குமரனை மணந்து கொள்வதாகக் கனவு காண்பது நின்று போயிற்று.

''இப்படி இருந்தபோதுதான் ஒருநாள் நான் மாடிப் படிக்கட்டில் அந்த இளைஞரைச் சந்திக்க நேர்ந்தது. எதை யோ எடுத்துவரச் சொல்லி பாட்டி என்னை அனுப்பவே நான் அங்கே போயிருந்தேன். அவர் நின்று விட்டார். எனக்கு முகம் சிவந்துவிட்டது, அவருக்கும் சிவந்துவிட்டது. ஆனால் அவர் சிரித்துக் கொண்டு என்ன சேதி, பாட்டி சுகம்

தானே என்று கேட்டார். பிறகு 'நான் அனுப்பிய புத்தகங் களைப் படித்தீர்களா?' என்று விசாரித்தார். 'படித்தேன்' என்றேன். ''எந்தப் புத்தகம் உங்களுக்கு அதிகம் பிடித் திருந்தது?' என்று கேட்டார். **ஐவன்ஹோவும்*** **பூஷ்கின்** புத்தகங்களும்தான் எனக்கு அதிகம் பிடித்திருந்தன' என் றேன். அந்தத் தடவை நாங்கள் பேசியது அவ்வளவுதான்.

''ஒரு வாரத்துக்குப் பிறகு, படிக்கட்டில் திரும்பவும் அவரைச் சந்தித்தேன். இம்முறை பாட்டி என்னை அனுப்பி வைக்கவில்லை. நானேதான் சென்றிருந்தேன், எதையோ எடுத்து வருவதற்காக. மணி இரண்டுக்கு மேலாகிவிட்டது, வழக்கமாக அவர் வீட்டுக்குத் திரும்பும் நேரம் அது. அவர் வணக்கம் கூறினார், பதிலுக்கு நானும் வணக்கம் கூறினேன்.

'' 'நாள் முழுவதும் பாட்டியுடன் உட்கார்ந்திருக்கிறீர் களே, உங்களுக்கு அலுப்பாக இல்லையா?' என்று கேட்டார்.

''இப்படி அவர் கேட்டதும் உடனே வெட்கத்தாலும் வேதனையாலும் எனக்கு மீண்டும் முகம் சிவந்துவிட்டது. அது ஏன் அப்படியோ, இந்த விவகாரம் குறித்து மற்ற வர்கள் என்னைக் கேட்கையில் எனக்குப் பொறுக்க முடியா மற் போய்விடும். ஒன்றும் சொல்லாமலே அங்கிருந்து போய் விட வேண்டுமென்று நினைத்தேன், ஆனால் அதற்குரிய துணிவு என்னிடம் இல்லை.

'' 'நீங்கள் நல்ல பெண்' என்று அவர் மேலும் பேசினார். 'உங்களிடம் இப்படிப் பேசுவதற்காக என்னை மன்னிக்க வேண்டும், ஆனால் நீங்கள் நன்றாக இருக்க வேண்டும் என் பதில் பாட்டியைக் காட்டிலும் நான் அதிக ஆர்வமுடைய வன். நீங்கள் போய்ப் பார்த்துப் பேசக்கூடிய சினேகிதிகள் யாருமே உங்களுக்கு இல்லையா?'

'' 'யாரும் இல்லை. மாஷென்கா என்று ஒருத்தி இருந் தாள். ஆனால் அவள் ப்ஸ்கோவுக்குப் போய்விட்டாள்' என் றேன்.

'' 'இதோ பாருங்கள், என்னுடன் நாடகம் பார்க்க வருவீர்களா?' என்று கேட்டார்.

'' 'நாடகம் பார்க்கவா? பாட்டி என்ன சொல்லுமோ?'

'' 'பாட்டியிடம் சொல்லாமலே வாருங்கள், போ வோம்...'

---

* ஐவன்ஹோ—வால்டர் ஸ்காட் எழுதிய நாவல்.—**ப-ர்.**

‘‘ ‘வேண்டாம், பாட்டியை நான் ஏமாற்ற விரும்ப வில்லை. வணக்கம்!’ என்றேன்.

‘‘ ‘வணக்கம்’ என்றார் அவரும். அதற்குமேல் ஒரு வார்த்தையும் பேசவில்லை.

‘‘பிறகு அன்றைய தினமே இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு அவர் எங்களிடம் வந்தார். ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு நெடுநேரம் பாட்டியுடன் பேசினார். வெளியே எங்கும் போவதில்லையா, தெரிந்தவர்கள் யாரும் இல்லையா என்று பாட்டியை விசாரித்தார். பிறகு திடீரென்று பாட்டியிடம் சொன்னார்: ‘இன்று இரவு இசை நாடகத்துக்குப் போகலாமென்று ஒரு தனி அடைப்பறை எடுத்திருக்கிறேன்; **செவில் நகர முடி ஒப்பனையாளன்** நடைபெறுகிறது; என் நண்பர்கள் சிலர் வருவதாக இருந்தனர்; ஆனால் பிறகு அவர்கள் தம் திட்டத்தை மாற்றிக் கொண்டு விட்டனர்; அதனால் இப்பொழுது என்னிடம் உபரியாய் டிக்கெட்டுகள் இருக்கின்றன.’

‘‘ ‘**செவில் நகர முடி ஒப்பனையாளனா!**’ என்று பாட்டி வியப்போடு கேட்டாள். ‘அந்தக் காலத்தில் நடிப்பார்களே, அதே **முடி ஒப்பனையாளனா?**’ என்று கேட்டாள்.

‘‘ ‘அமாம், அதே **முடி ஒப்பனையாளன்** தான்’ என்று சொல்லி அவர் என்னைப் பார்த்தார். யாவற்றையும் நான் முன்பே புரிந்து கொண்டுவிட்டேன். எனக்கு முகம் சிவந்து விட்டது, என் இதயம் துள்ளிக் குதித்தது.

‘‘ ‘நான் நன்கு அறிந்த நாடகமாயிற்றே! அந்தக் காலத்தில் எங்கள் வீட்டு நாடக நிகழ்ச்சிகளில் நான் ரொஸீனாவாக நடிப்பது வழக்கம்’ என்றாள் பாட்டி.

‘‘ ‘இன்று இரவு போகலாமா, வருகிறீர்களா? என்னிடம் டிக்கெட்டுகள் இருக்கின்றன’ என்றார் அவர்.

‘‘ ‘ஓ, போகலாம், நன்றாக இருக்குமே. என் நாஸ்தென்கா இதுவரை நாடகமே பார்த்ததில்லை’ என்று பாட்டி சொன்னாள்.

‘‘அப்புறம் கேட்பானேன், என் பூரிப்பை! உடனே தயார் செய்ய முற்பட்டோம், உடுத்திக் கொண்டோம், புறப்பட்டுச் சென்றோம். பாட்டிக்குக் கண் தெரியாதுதான், ஆனால் இசையைக் கேட்கலாமே என்று ஆசை. அது மட்டுமின்றி பாட்டிக்குத் தங்கமான உள்ளம், நான் மனம் மகிழ வேண்டுமென்று விரும்பினாள். நாங்களாகவே ஒரு

நாளும் ஏற்பாடு செய்து கொண்டு நாடகம் பார்க்கப் போயிருக்க மாட்டோம். செவில் நகர முடி ஒப்பனையாளனைப் பற்றி என்னுடைய அபிப்பிராயங்களை நான் சொல்ல வேண்டியதில்லை. ஆனல் எங்கள் மச்சு அறையில் குடியிருந்த இளைஞர் அன்று மாலை முழுவதும் அன்புடன் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார், அருமையாக என்னுடன் பேசிக் கொண்டிருந்தார். தனியே தன்னுடன் வரும்படி அன்று காலை என்னை அவர் அழைத்தது என்னைச் சோதிப்பதற்காகத் தான் என்பது உடனே எனக்குப் புரிந்தது. நான் மட்டிலா மகிழ்ச்சியுற்றேன். அன்று இரவு நான் பெருமிதமும் குதூகலமும் கொண்டவளாய்ப் படுக்கச் சென்றேன், என் இதயம் அப்படி அடித்துக் கொண்டது, கொஞ்சம் காய்ச்சல் அடிப்பது போல ஒரு மாதிரியாக இருந்தது. இரவு முழுவதும் தூக்கத்தில் செவில் நகர முடி ஒப்பனையாளனைப் பற்றி உளறிக் கொண்டிருந்தேன்.

''இனி அவர் அடிக்கடி எங்களிடம் வருவார் என்று நினைத்தேன், ஆனல் அம்மாதிரி ஒன்றும் நடைபெறவில்லை. அவர் வருவது அனேகமாய் நின்றேவிட்டது. மாதத்தில் எப்பொழுதாவது ஒரு தரம் வந்து எட்டிப் பார்ப்பார், அதுவும் எங்களை மீண்டும் நாடகத்துக்குக் கூப்பிடுவதற்காகவே இருக்கும். ஆனல் எனக்கு இது முன்பு போல மகிழ்ச்சியாக இருக்கவில்லை. பாட்டியால் துன்புறுத்தப்படுகிறேன் என்று என்மீது பரிதாபப்படுகிறர், அவ்வளவுதான், அதற்கு மேல் ஒன்றும் இல்லை என்பதைக் கண்டேன். எண்ணியெண்ணி ஏங்கிக் கொண்டிருந்தேன், பிறகு எனக்கு என்னமோ ஆகிவிட்டது; என்னல் சும்மா உட்கார்ந்திருக்க முடியவில்லை, படிக்கவும் முடியவில்லை, பின்னல் வேலையும் செய்ய முடியவில்லை; சில நேரம் பாட்டிக்கு ஆத்திரமூட்ட வேண்டுமென்றே ஏதாவது செய்வேன்; வேறுசில நேரம் சும்மாவே அழுவேன். மெலிந்து போய் நோயுற்றவளைப் போலாகிவிட்டேன். இசை நாடகப் பருவம் முடிவுற்றதும் அந்த இளைஞர் எங்களைப் பார்க்க வருவது அறவே நின்று போய்விட்டது. நாங்கள் இருவரும் சந்திக்க நேர்ந்தபோது—அந்த மாடிப் படிக்கட்டில்தான்—என்னுடன் பேச விரும்பாதவரைப் போல முகத்தை 'உம்' என்று வைத்துக் கொண்டு மௌனமாகத் தலை குனிந்து வணக்கம் தெரிவித்து விட்டு வாயில் முகப்புக்குச் சென்று வெளியே போய்விடு

வார். படிக்கட்டில் பாதிவழி ஏறிய நான் செர்ரிப் பழம் போல முகம் செக்கச் சிவந்து போய் அப்படியே நின்று கொண்டிருப்பேன். அவரைப் பார்க்கும் போதெல்லாம் அப்படித்தான் இரத்தம் குபுகுபுவென்று என் தலைக்கு வந்து விடும்.

''அனேகமாக என் கதையின் முடிவுக்கு வந்துவிட்டேன். கடந்த ஆண்டு மே மாதத்தில் அவர் எங்களிடம் வந்து பாட்டியிடம் பேசினார். இங்கு தன் வேலைகள் யாவும் முடிந்து விட்டதால் ஓராண்டுக்குத் திரும்பவும் மாஸ்கோ செல்லப் போவதாகப் பாட்டியிடம் சொன்னார். இதைக் கேட்டதும் எனக்கு முகம் வெளிறிப் போயிற்று, மூர்ச்சையடைந்த வளைப் போல அப்படியே ஒரு நாற்காலியில் சாய்ந்துவிட் டேன். பாட்டியால் எதையும் பார்க்க முடியவில்லை. அவர் போய் வருவதாகக் கூறித் தலை குனிந்து வணக்கம் தெரி வித்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்.

''இனி நான் என்ன செய்வது? யோசித்து யோசித்துப் பார்த்தேன், எண்ணியெண்ணி வருந்தினேன், முடிவில் ஒரு தீர்மானத்துக்கு வந்தேன். மறுநாள் அவர் புறப்பட்டுப் போய்விடுவார், ஆகவே பாட்டி படுக்கப் போனதும் அன்று இரவே செயலில் இறங்குவதென்று ஒரு முடிவுக்கு வந் தேன். அம்முடிவை நிறைவேற்றவும் செய்தேன். என்னிட மிருந்த எல்லா ஆடைகளையும் கொஞ்சம் உள்ளுடுப்புகளை யும் எடுத்து மூட்டையாய்க் கட்டி, இந்த மூட்டையைக் கையில் எடுத்துக் கொண்டு, உயிர் ஒடுங்கிய நிலையில் நடைப் பிணம் போல மச்சு அறையின் படிக்கட்டில் ஏறினேன். அந்தப் படிகளில் ஏறி மேலே செல்வதற்கு ஒரு மணி நேர மாகியிருக்குமென்று நினைக்கிறேன். அவருடைய அறைக் கத வைத் திறந்தேன், என்னைப் பார்த்ததும் அவர் திடுக்கிட்டு விட்டார். பேய் என்றே நினைத்துவிட்டார். பிறகு சிறிது நேரத்துக்கெல்லாம் எனக்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வருவதற்காக ஓடினார், ஏனெனில் நான் நிற்க முடியாத வளாகிவிட்டேன். என் தலை கிறுகிறுக்கும்படி அப்படிப் பலமாக என் இதயம் படபடத்தது, சிந்தை கலங்கியவ ளாகத் தடுமாறினேன். பிறகு நிதானம் திரும்பியதும் கை யிலிருந்த மூட்டையை அவருடைய படுக்கைமீது வைத்து, அதன் பக்கத்தில் உட்கார்ந்து, கைகளால் முகத்தை மூடிக் கொண்டு தாரையாய்க் கண்ணீர் வழிந்தோட வாய்விட்டு

அழுதேன். எல்லாவற்றையும் உடனே அவர் புரிந்து கொண்டிருக்க வேண்டும், முகம் வெள்ளை வெளேரென வெளுத்துப் போய்க் கண்களிலே துயரம் ததும்ப என் நெஞ்சு பதறும் படி சோகமே உருவெடுத்தாற்போல என் எதிரே நின்றார்.

'' 'நாஸ்தென்கா, நான் சொல்வதைக் கேளுங்கள்' என்றார். 'நான் எதுவும் செய்ய இயலாதவன், ஏழை; ஒன்றும் இல்லாதவன், நல்லபடியாய் இன்னும் எனக்கு ஒரு வேலை கிடைத்தாகவில்லை. இப்படிப்பட்ட நான் உங்களை மணந்து கொண்டால் நாம் வாழ்வது எப்படி?'

''நெடுநேரம் நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். நான் மனம் ஒடிந்து போய், இனி என்னால் பாட்டியுடன் வாழ முடியாது, ஊக்கு போட்டுக் குத்தி இருத்தி வைக்கப்பட நான் விரும்பவில்லை என்றேன்; அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் எப்படியும் அவருடன் நான் மாஸ்கோ போக வேண்டும், ஏனெனில் அவரில்லாமல் என்னால் வாழ முடியாது என்றேன். வெட்கம், காதல், தன்மான உணர்ச்சி எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரே நேரத்தில் என்னுள் பொங்கியெழவே திணறிப் போய் மூர்ச்சித்துவிடும் நிலையில் அவர் படுக்கை மீது விழுந்துவிட்டேன். அவர் முடியாதென்று சொல்லிவிடுவாரோ என்று அப்படிப் பயந்து நடுங்கினேன்!

''சில நிமிடங்கள் மௌனமாய் உட்கார்ந்துவிட்டு அவர் எழுந்து நின்றார்; பிறகு என் அருகே வந்து என் கையை எடுத்து அணைத்துப் பிடித்துக் கொண்டார்.

'' 'என் அன்புக்குரிய, எனது அருமை நாஸ்தென்கா' என்று அவர் பேசத் தொடங்கியதும் அவருடைய முகத்தில் கண்ணீர் தாரையாய் வழிந்தோடிற்று. 'நான் சொல்வது பூராவையும் பொறுமையுடன் கேளுங்கள். உங்களுக்கு நான் சத்தியம் செய்து தருகிறேன், நான் திருமணம் புரிந்து கொள்ளத்தக்க நிலையை எந்நாளிலும் அடைவேனுயின், என் வாழ்வை இன்பமாக்கக் கூடியவள் நீங்களே அன்றி வேறு எவரும் அல்ல. நான் சொல்வதை நீங்கள் நம்ப வேண்டும், உங்களால் மட்டுமேதான் இப்பொழுது எனக்கு இன்ப வாழ்வு அளிக்க முடியும். ஆகவே நான் சொல்வதைக் கேளுங்கள்: நான் மாஸ்கோவுக்குப் போகிறேன், சரியாக ஓராண்டு அங்கே இருப்பேன். அதற்குள் என் விவகாரங்களுக்குத் தக்கதோர் ஏற்பாட்டைச் செய்து கொண்டுவிடு

வேன் என்று திடமாக நம்புகிறேன். நான் திரும்பி வந்ததும், என்மீது அப்பொழுதும் உங்களுக்குக் காதல் இருக்குமாயின், நாம் இருவரும் இன்பமாக வாழ்வோம் என்று சத்தியம் செய்து தருகிறேன். ஆனால் இப்பொழுது அது சாத்தியமல்ல, தற்போது நான் எதுவும் செய்ய முடியாதவன், அதற்குரிய உரிமை இல்லாதவன். திரும்பவும் கூறுகிறேன், ஓராண்டில், இல்லையெனில் எப்படியும் ஒரு நாள் அது நடைபெற்றே தீருமென்று உறுதி கூறுகிறேன். எனக்குப் பதிலாக வேறொருவனை நீங்கள் விரும்பாமல் இருக்கும் பட்சத்தில் தான் இப்படி என்பதைக் கூறத் தேவையில்லை, ஏனெனில் எந்த உறுதிமொழிக்கும் உங்களை உட்படச் செய்து கட்டுப் படுத்தி வைக்க நான் நினைக்கவில்லை, அது நியாயமும் அல்ல.'

''இதுதான் அவர் என்னிடம் சொன்னது. மறுநாள் அவர் புறப்பட்டுச் சென்றுவிட்டார். இது பற்றி பாட்டியிடம் எதுவும் சொல்வதில்லை என்று நாங்கள் முடிவு செய்து கொண்டோம். அப்படித்தான் அவர் விரும்பினார். அவ்வளவு தான், என் கதை இப்பொழுது அனேகமாய் முடிந்து விட்டது. சரியாக ஓராண்டு கழிந்திருக்கிறது. அவர் திரும்பி வந்திருக்கிறார், அவர் வந்து முழுசாக மூன்று நாட்கள் ஆகின்றன, அப்படியும்...''

''அப்படியும் என்ன?'' கதையின் முடிவு தெரிய வேண்டுமென்று தவித்த நான் பொறுமையின்றி இடைமறித்துக் கேட்டேன்.

''அப்படியும் இன்னும் என்னிடம் அவர் தலைகாட்டவே இல்லை!'' நாஸ்தென்கா பெரு முயற்சி செய்துதான் பதிலளித்தாள். ''எந்தத் தகவலுமே இல்லை, பேச்சுமூச்சின்றி இருக்கிறார்...''

அத்துடன் நிறுத்திக் கொண்டு சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள். பிறகு திடீரென்று கைகளிலே முகத்தைப் புதைத்துக் கொண்டு கதறி அழுதாள், எனக்கு நெஞ்சு பிளந்துவிடும் போலாகி விட்டது.

இது போன்ற ஒரு முடிவை நான் எதிர்பார்க்கவே இல்லை.

''நாஸ்தென்கா!'' என்று தயங்கியவாறு கெஞ்சும் குரலில் நான் சொன்னேன். ''நாஸ்தென்கா, வேண்டாம்,

வேண்டாம்! அழாதீர்கள்! எப்படித் தெரியும் உங்களுக்கு? இன்னும் அவர் இங்கு திரும்பி வந்திருக்க மாட்டார்...''

''வந்துவிட்டார், வந்துவிட்டார்'' என்ருள் நாஸ் தென்கா. ''எனக்குத் தெரியும், திரும்பி வந்துவிட்டார். இங்கிருந்து அவர் புறப்பட்டதற்கு முந்திய இரவில் நாங்கள் யாவற்றுக்கும் ஏற்பாடு செய்திருந்தோம், யாவற்றையும் பேசி, இப்பொழுது நான் சொன்னபடி நாங்கள் உடன் பாட்டுக்கு வந்தபின், வெளியே சென்று உலாவிவிட்டு வரலாமென்று இங்கே இதே இடத்துக்கு வந்தோம். மணி பத்து இருக்கும், இந்தப் பெஞ்சில் உட்கார்ந்தோம். முன்பே எனக்கு அழுகை நின்றுவிட்டது. சொக்கிப்போய் அவருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தேன்... இங்கு திரும்பியதும் அத்தருணமே நேரே என்னிடம் வருவதாகச் சொன்னுர். நான் அவரை ஏற்க மறுக்கவில்லை என்ருல், பாட்டியிடம் எல்லாவற்றையும் சொல்வோம் என்று கூறினுர். இப்பொழுது அவர் திரும்பி வந்துவிட்டார், எனக்குத் தெரியும், ஆனுல் என்னிடம் வரவே இல்லை, வரவே இல்லை!''

மீண்டும் அவள் அழத் தொடங்கினுள்.

''அட தெய்வமே! உங்களுக்கு உதவியாக என்னுல் ஒன்றும் செய்ய முடியாதா?'' என்று கேட்டபடி மனம் பொறுக்க மாட்டாதவனுகப் பெஞ்சிலிருந்து வெடுக்கென்று எழுந்தேன். ''நாஸ்தென்கா, நான் போய் அவரைப் பார்த்துப் பேசினுல் உதவியாய் இருக்காதா?''

''நீங்கள் போய்ப் பேசலாமா? பேசலாம் என்ரு நினைக்கிறீர்கள்?'' திடுமெனத் தலையை உயர்த்தி என்னைப் பார்த்தபடி அவள் வினவினுள்.

இந்த யோசனை எவ்வளவு முட்டாள்தனமானது என்பதை உணர்ந்து கொண்ட நான், ''வேண்டாம், அது சரியல்ல'' என்றேன். ''எனக்கு இன்னெரு யோசனை தோன்றுகிறது: அவருக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்.''

''நான் எழுதக் கூடாது, அது நன்ருய் இராது'' என்ருள் தீர்மானமாக. அதே நேரத்தில் கண்களைத் தணித்துக் கொண்டு என் பார்வையைத் தவிர்த்துக் கொள்ள முயன்ருள்.

''ஏன் கூடாது, ஏன் நன்ருய் இராது என்கிறீர்கள்?'' எனக்கு உதித்த அந்த யோசனையால் கவரப்பட்டு நான்

உற்சாகமாகப் பேசினேன். ''ஆனல், நாஸ்தென்கா, நீங்கள் எழுதும் கடிதம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் தெரியுமா? ஒரு தனி வகையானதாக இருக்க வேண்டும். எப்படி எழுதுகிறீர்கள் என்பதையே பொறுத்திருக்கிறது எல்லாம். ஆம், நாஸ்தென்கா, நான் சொல்வதுதான் சரி! என்னை நம்புங்கள்! நான் தகாத ஆலோசனை எதையும் உங்களிடம் சொல்ல மாட்டேன். எல்லாம் நல்லபடி ஆகிவிடும், நான் சொல்கிறபடி செய்யுங்கள்! முன்பு நீங்கள்தான் முதலில் முயற்சியெடுத்து செயலில் இறங்கினீர்கள், இப்பொழுது திரும்பவும் அதே போல ஏன் செய்யக் கூடாது என்கிறீர்கள்?''

''கூடாது, கூடாது! அப்படிச் செய்தால் நான் ஏதோ கட்டாயப்படுத்துவது மாதிரி இருக்கும்...''

''எனது அருமை, எனது இனிய நாஸ்தென்கா!'' என்று மகிழ்ந்து புன்னகை புரிந்தவாறு நான் குறுக்கிட்டேன். ''அப்படி ஒன்றும் இருக்காது, இருக்கவே இருக்காது. உங்களுக்கு உரிமை இருக்கிறது, ஏனென்ருல் அவர் உங்களுக்கு வாக்களித்துச் சென்ருர். அது மட்டுமல்ல, நீங்கள் சொன்னதிலிருந்து அவர் பண்புடையவர், மிகவும் கண்ணியமாக நடந்து கொள்பவர் என்பது தெரிகிறது.'' என்னுடைய வாதத்தின், வற்புறுத்தலின் தர்க்க நியாயத்தைக் கண்டு மேலும் மேலும் மகிழ்ச்சியுற்றுத் தொடர்ந்து பேசினேன். ''உங்களிடம் அவர் நடந்து கொண்ட முறையைப் பாருங்கள்! தன்னை அவர் வாக்குறுதிக்குக் கட்டுப்படுத்திக் கொண்டார். தான் எப்பொழுது மணம் புரிந்து கொள்வதாயினும் உங்களை அன்றி வேறு யாரையும் மணம் புரிந்து கொள்வதில்லை என்று வாக்களித்தார். அதே போது நீங்கள் எப்பொழுது விரும்பினுலும் அவரை வேண்டாமெனச் சொல்வதற்கு உங்களுக்கு முழுச் சுதந்திரம் அளித்தார். ஆகவே நீங்கள் முதலில் முயற்சி எடுப்பது முற்றிலும் நியாயமாகும், அதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. அவருக்கு இல்லாத அனுகூலமான நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள் வாக்குறுதியிலிருந்து நீங்கள் அவருக்கு விடுதலை அளிக்க விரும்புவதாக வைத்துக் கொள்வோம்...''

''எப்படி எழுதலாம்? அதைச் சொல்லுங்கள்.''

''எதை?''

''இந்தக் கடிதத்தைத்தான்.''

'' 'அன்பரே' என்று தொடங்க வேண்டும்...''

''அன்பரே என்றுதான் எழுத வேண்டுமா?''

''ஆமாம், அது வேண்டாமெனில் வேறுவிதமாகவும் ஆரம்பிக்கலாம்...''

''அது போகட்டும், அப்புறம் என்ன எழுதுவது, சொல்லுங்கள்.''

'' 'அன்பரே, என்னை மன்னிக்கும்படி வேண்டுகிறேன்...' இல்லை, அப்படி வேண்டாம், மன்னிப்புக் கேட்க வேண்டியதில்லை. உங்களது கடிதமே யாவற்றையும் தெளிவுபடுத்தும், நேரடியாகவே எழுதுங்கள்:

'உங்களுக்குக் கடிதம் எழுதுகிறேன். எனது பொறுமையின்மைக்காக மன்னிக்கவும். இன்பமாக வாழலாம் என்று நம்பிக்கையுடன் ஓராண்டாகக் காத்திருந்தேன். இப்பொழுது என்ன ஆகுமோ என்ற இந்தச் சந்தேகத்தை நான் ஒரேயொரு நாளைக்குங்கூட சகிக்க மாட்டாதவளாக இருப்பது குற்றமாகுமா? நீங்கள் திரும்பி வந்திருக்கிறீர்கள், உங்களுக்கு மனம் மாறிப் போயிருக்கலாம். அப்படி மாறியிருந்தால் நான் குறைபட்டுக் கொள்ளவுமில்லை, உங்கள்மீது குற்றம் சாட்டவுமில்லை என்பதை இந்தக் கடிதம் உங்களுக்கு அறிவிக்கும். உங்கள் மீது நான் குற்றம் சாட்டவில்லை, ஏனெனில் நான் உங்களது உள்ளத்தின் உடைமையாக முடியாதவள்—என் தலைவிதி அப்படி!

'' 'நீங்கள் மாண்புமிக்கவர், பொறுமையின்றி நான் எழுதும் இவ்வரிகளைக் கண்டு நகைக்கவோ அலுத்துக் கொள்ளவோ மாட்டீர்கள். இவற்றை எழுதுகிறவள் தன்னந் தனியளான ஒரு பேதைப் பெண், தனக்கு வழிகாட்டவோ புத்திமதி சொல்லவோ யாரும் இல்லாதவள், தன் இதயத்தை அடக்கியாளும் திறனற்றவள் என்பதை நீங்கள் மறக்கலாகாது. என் உள்ளத்தில் ஒரு கணத்துக்கு ஊடுருவிவிட்ட சந்தேகத்துக்காக என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். உங்கள் மீது காதல் கொண்டவளுக்கு, இன்னமும் உங்களையே காதலித்து வருகின்றவளுக்கு சிந்தனையிலுங்கூட ஊறு செய்வதற்குத் தாங்கள் விரும்பமாட்டீர்கள்.' ''

''அப்படித்தான் எழுத வேண்டும்! நான் எப்படி நினைத்தேனோ அப்படியே நீங்களும் சொல்கிறீர்கள்!'' என்று கண்கள் பிரகாசிக்க ஆனந்தமாக நாஸ்தென்கா கூவினாள். ''என் மனத்தின் சஞ்சலத்தை நீங்கள் விரட்டியடித்து விட்டீர்

கள்! தெய்வம் தான் உங்களை என்னிடம் அனுப்பி வைத்திருக்க வேண்டும்! நன்றி, உங்களுக்கு நன்றி!''

''எதற்காக நன்றி? தெய்வம் என்னை உங்களிடம் அனுப்பி வைத்திருக்கிறது என்பதற்காகவா?'' என்று நான் ஆனந்தம் பொங்கிய அவளுடைய முகத்தைக் களிப்புடன் உற்று நோக்கியவாறு கேட்டேன்.

''ஆம், வேறு எதற்கும் இல்லையேனும் அதற்காக மட்டுமாவது என்றும் நான் உங்களுக்கு நன்றிக் கடன்பட்டவளாகவே இருப்பேன்!''

''நாஸ்தென்கா! சிலர் நம்முடன் கூட இதே உலகில் வாழ்கிறார்களே, அதுவே போதுமென நாம் அகமகிழ்ந்து அவர்களுக்கு நன்றி செலுத்துகிறோம், தெரியுமா உங்களுக்கு? நாம் இருவரும் ஒருவரையொருவர் தெரிந்து கொள்ள நேர்ந்ததற்காக உங்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன், ஏனெனில் இனி என் வாழ்நாள் முழுதும் உங்களை நான் மறக்கவே மாட்டேன்!''

''அது சரிதான்! இப்பொழுது நான் சொல்வதைக் கேளுங்கள்: அவர் திரும்பி வந்ததும் உடனே எனக்குத் தகவல் தெரிவிக்க வேண்டுமென்று நாங்கள் பேசி முடிவு செய்திருந்தோம். எனக்குத் தெரிந்த குடும்பம் ஒன்று இருக்கிறது. அவர்கள் நல்லவர்கள், எளிமையானவர்கள், எங்கள் விவகாரத்தைப் பற்றி ஏதும் அறியாதவர்கள்—அவர்களுடைய இடத்தில் எனக்கு அவர் கடிதம் எழுதி வைத்துவிட்டுப் போக வேண்டும், அப்படி அவரால் எனக்கு எழுத முடியாமற் போகும் பட்சத்தில்—யாவற்றையும் கடிதத்தில் எழுத சில சமயம் முடியாது அல்லவா?—அவர் திரும்பி வரும் அதே நாளன்று சரியாகப் பத்து மணிக்கு இதே இடத்துக்கு, நம்முடைய சந்திப்பு இடமாகிவிட்ட இதே இடத்துக்கு, வந்துவிட வேண்டும் என்று நாங்கள் ஏற்பாடு செய்திருந்தோம். எனக்குத் தெரியும், அவர் திரும்பி வந்துவிட்டார், மூன்று நாளாகிவிட்டது; ஆயினும் அவர் இங்கு வரவுமில்லை, எனக்குக் கடிதம் எழுதி வைக்கவுமில்லை. பகற்பொழுதில் என்னால் பாட்டியை விட்டு வர முடியாது. ஆகவே, நான் கூறிய இந்த நல்லவர்களிடம் நாளைக்கு நீங்கள் என்னுடைய கடிதத்தைக் கொண்டு போய்க் கொடுக்க முடியுமா? அவர்கள் கடிதத்தை அவரிடம் சேர்ப்பித்துவிடுவார்கள், அதற்கு அவரிடமிருந்து பதில் ஏதாவது

இருக்குமானால் நாளைக்குப் பத்து மணிக்கு நீங்கள் அதை இங்கே எடுத்து வர வேண்டும்.''

''ஆனால் கடிதம் வேண்டுமே! கடிதம்! முதலில் நீங்கள் கடிதத்தை எழுதியாக வேண்டுமே! நாளைக்கு மறுநாளைக்கு முன்னதாய்க் காரியம் முடிவடையாதே.''

''கடிதம்...'' என்றாள் நாஸ்தென்கா, சற்றுக் குழப்பத்துடன், ''கடிதம்தானே...''

வாக்கியத்தை அவள் முடிக்கவில்லை. முதலில் முகத்தை என்னிடமிருந்து திருப்பிக் கொண்டாள், ரோஜா மாதிரி அது செக்கச் சிவந்து போயிற்று, பிறகு திடீரென்று என் கையில் அந்தக் கடிதம் தட்டுப்படக் கண்டேன். நெடு நேரத்துக்கு முன்பே எழுதி முடிக்கப்பட்டு, முகவரி குறிக்கப்பட்டு, மூடி ஒட்டப்பட்டுத் தயாராயிருந்தது கடிதம்! இதமான, மென்மையான ஓர் நினைவின் நிழலுருவம் என் மனதில் குதித்தோடிற்று.

''ரொ—ரொ, ஸீ—ஸீ, ன—ன'' என்று நான் பாடத் தொடங்கினேன்.

''ரொஸீனா!'' என்று இருவருமாகச் சேர்ந்து பாடினோம். எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிப் பெருக்கில் அனேகமாய் அவளைக் கட்டித் தழுவிக் கொண்டுவிட்டேன். அங்கமெல்லாம் புல்லரிக்கச் செக்கச் சிவந்து விட்ட அவள் தன் கண்ணிமைகளின் கரு முனைகளில் முத்து முத்தாகப் பளிச்சிட்ட கண்ணீருக்கிடையே இனிமையாகச் சிரித்தாள்.

''சரி, போதும் இது! இனி விடை பெற்றுக் கொள்வோம், போய்வருகிறேன்!'' என்று அவசரமாகக் கூறினாள். ''இதோ இருக்கிறது கடிதம், அதைக் கொண்டு போய்க் கொடுக்க வேண்டிய முகவரி இது. நாளைக்குச் சந்திப்போம், போய் வருகிறேன்!''

அவள் ஆர்வமுடன் என் கைகளை அழுத்திக் குலுக்கி, தலையை அசைத்துக் காட்டிவிட்டு, அம்பு போல ஒரு சந்துக்குள் பறந்தோடினாள். என் பார்வை அவளைப் பின் தொடர்ந்து செல்ல அங்கேயே நான் நெடு நேரம் நின்று கொண்டிருந்தேன்.

''மீண்டும் நாளைக்குச் சந்திப்போம், நாளைக்குச் சந்திப்போம்!''—என் பார்வையிலிருந்து அவள் மறைந்ததும் இந்த எண்ணம் என் மனதில் நடனம் ஆடிற்று.

மூன்றும் இரவு

இன்று பகல் மழையும் மந்தாரமுமாகத் துயரம் தோய்ந் திருந்தது; ஒளியின் மினுமினுப்பு சிறிதுமின்றி, என்னுடைய முதுமைப் பருவம் எப்படி இருக்குமோ அதே போன்றதாக இருந்தது. விபரீத எண்ணங்கள் என்னுள் எழுந்து மொய்க் கின்றன, தெளிவற்ற உணர்ச்சிகளும் குழம்பிய பிரச்சினை களும் என் மனத்துள் அடித்து மோதிக் கொள்கின்றன. ஆயினும் ஏனே தெரியவில்லை, அவற்றுக்குத் தீர்வு காண் பதற்குரிய பலமோ விருப்பமோ என்னிடம் இல்லை. அது என் பணியல்ல, இவற்றுக்கு எல்லாம் தீர்வு காண்பது என் பணியல்ல!

இன்று நாங்கள் சந்திக்க முடியப் போவதில்லை. நேற்று இரவு நாங்கள் விடை பெற்றுக் கொண்டு பிரிந்தபோது வானத்தில் மேகங்கள் திரளத் தொடங்கிவிட்டன, மூடு பனி மூண்டெழுந்து விட்டது. நாளைக்கு வானம் நன்ரு யிராது என்று அவளிடம் சொன்னேன்; அவள் பதில் கூற வில்லை, தனக்கு ஒவ்வாத ஒன்றைக் கூற அவளுக்கு மனம் வரவில்லை. வரும் பகற் பொழுதானது அவளுடைய இன் பத்துக்கு ஊறு செய்யும் சிறு மேகம் எதுவுமின்றித் தெளி வாகவும் பிரகாசமாகவும் இருக்க வேண்டுமென்று விரும் பினுள்.

''மழை பெய்தால் நாம் சந்திக்க முடியாமற் போய் விடும், நான் வர மாட்டேன்'' என்று கூறியிருந்தாள்.

இன்று அவள் மழையைக் கவனித்தே இருக்க மாட் டாள் என்று நான் நினைத்தேன், ஆனல் அவள் வரவில்லை.

நேற்று இரவு மூன்ருவது முறையாக நாங்கள் சந்தித் தோம், அது எங்களுடைய மூன்ரும் வெண்ணிற இரவு...

என்னென்பது இதை! இன்பமும் மகிழ்ச்சியும் எப்படிப் பட்ட அழகை உண்டாக்கிவிடுகின்றன! உங்கள் இதயத்தில் எப்படி அன்பு பொங்கி வழிகிறது! இந்த அன்பு அனைத்தையும் நீங்கள் இன்னெரு இதயத்தினுள் பாயச் செய்ய வேண்டும் என்று அல்லவா விரும்புகிறீர்கள்! உங்களைச் சுற்றியுள் ளவை யாவற்றையும் குதூகலத்திலும் சிரிப்பிலும் திளைக்கச் செய்ய வேண்டும் என்று அல்லவா விரும்புகிறீர்கள்! இன்பப் பூரிப்பு—அது எல்லோரையும் அல்லவா தொத்திக் கொண்டு விடுகிறது! நேற்று இரவு அவளுடைய பேச்சில்

அவ்வளவு கனிவு இருந்தது, அவளுடைய இதயத்தில் அவ்வளவு அன்பு நிறைந்திருந்தது... என்பால் அவ்வளவு இனிமையாய் நடந்துகொண்டாள், எனக்கு அவ்வளவு பரிவு காட்டினுள், என் இதயத்தில் அவ்வளவு ஆர்வமும் தெம்பும் பிறக்கச் செய்துவிட்டாள்! தன் இன்பக் களிப்பால் தூண்டப் பெற்று எப்படிக் குழைந்து குலாவினுள்! உடனே நானும்... நானும் நினைத்துவிட்டேனே, இவை எல்லாம் மெய்தான் என்று, மெய்யாகவே என்பால் அவள்...

அட தெய்வமே, அது எப்படி அம்மாதிரி என்னல் நினைக்க முடிந்தது? அது எப்படி நான் அந்த அளவுக்குக் குருடனுக முடிந்தது? யாவும் வேருெருவனுக்கு உரியதாகி எதுவுமே என்னுடையதல்ல என்னும்போது, அவளுடைய இனிமையும் பரிவும் அன்பும்—ஆம், என்பால் அவள் காட்டிய அன்பும் கூடத்தான்—அந்த இன்னெருவனை விரைவில் சந்திக்கப் போகிருேம் என்பதால் அவளுக்கு உண்டான களிப்பே அன்றி, தனது இன்பத்தை என்னுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலே அன்றி வேறு எதுவும் அல்ல என்னும் போது, எப்படி நான் அம்மாதிரி குருடனுக முடிந்தது?... அவன் வரத் தவறியதும், அவனுக்காக நாங்கள் வீணில் காத்திருந்தோம் என்பது தெரிந்ததும், அவளுக்கு முகம் சுண்டிவிட்டதே, பீதியுற்றுக் கலங்கிவிட்டதே. அவளுடைய பாவனைகளிலும் பேச்சிலும் வேடிக்கையும் விளையாட்டும் குதூகலமும் குறைந்துவிட்டன. ஆனல் விந்தை என்னவெனில், இப்பொழுது அவள் என்னிடம் இரு மடங்கு கூடுதலான கவனம் செலுத்தலானுள்; இதுவரை அவள் எதற்காக ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாளோ, எது ஈடேருமல் போய்விடுமோ என்று நினைத்துக் கலங்கினுளோ, அதை என்மீது சொரிய வேண்டுமென்ற உள்ளுணர்வால் உந்தப் பட்டவளைப் போல நடந்து கொண்டாள்.

எனதருமை நாஸ்தென்கா அப்படி பீதியுற்றுக் கதிகலங்கிப் போன காரணத்தால், நான் அவளைக் காதலிப்பதை முடிவில் புரிந்து கொண்டு எனது பரிதாப நிலை குறித்து இரக்கம் கொண்டுவிட்டாள் என்று நினைக்கிறேன். நமக்குத் துன்பம் ஏற்படும் பொழுதுதான் அடுத்தவருடைய துன்பத்தை நாம் மேலும் கூர்மையாக உணர முடிகிறது; அப்பொழுது நமது உணர்ச்சி மேலும் கூர்மையாகிறதே ஒழியக் குலைந்து போவதில்லை....

நான் மன நிறைவுடன் அவளிடம் சென்றேன், சந்திப்பதற்குரிய நேரம் எப்பொழுது வருமென்று ஆவலோடு சென்றேன். பிற்பாடு எனக்கு ஏற்படப் போகும் உணர்ச்சி குறித்தோ, இவற்றின் முடிவு எப்படி இருக்கும் என்பது குறித்தோ அப்பொழுது நான் அறியேன். மகிழ்ச்சியால் அவள் பூரிப்படைந்து மலர்ந்திருந்தாள், அவருடைய பதிலை எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்குரிய பதிலாக அவரே வரப் போகிறுர். அவளுடைய குரலுக்குச் செவி சாய்த்து அவர் ஓடோடி வரப் போகிறுர். எனக்கு ஒரு மணி நேரம் முன்னதாகவே அங்கு அவள் வந்துவிட்டாள். ஆரம்பத்தில் யாவும் அவளை மகிழ்விப்பதாக இருந்தன, நான் கூறிய ஒவ்வொரு சொல்லையும் கேட்டு அவள் சிரித்து மகிழ்ந்து கொண்டாள். என் உள்ளத்தில் இருந்ததை அவளிடம் சொல்ல வாயெடுத்தேன், ஆனுல் சொல்லாமலே வாயை மூடிக் கொண்டேன்.

''நான் ஏன் இப்படிக் குதூகலமாக இருக்கிறேன், தெரியுமா? உங்களைப் பற்றி ஏன் இப்படி மனம் மகிழ்கிறேன்? இன்று ஏன் உங்களிடம் இவ்வளவு பாசம் கொண்டிருக்கிறேன்?'' என்று அவள் கேட்டாள்.

''தெரியவில்லையே'' என்றேன். என் இதயம் துள்ளிக் குதித்தது.

''என்மீது நீங்கள் காதல் கொண்டுவிடாமல் இருப்பதால் தான் நான் உங்களிடம் இவ்வளவு பாசமாக இருக்கிறேன். வேறு யாராவது உங்களிடத்தில் இருந்தால் என்னை நச்சரித்துப் பாடாய்ப் படுத்தியிருப்பானே, பெருமூச்செறிந்தும் முனகியும் இருப்பானே. ஆனுல் நீங்கள் இனிமையிலும் இனிமையாய் நடந்து கொள்கிறீர்களே!''

இதைச் செல்லி அவள் என் கையைப் பலமாக அழுத்தி அப்படி ஒரு நசுக்கு நசுக்கினுள், நான் வாய்விட்டுக் கத்தும்படி ஆகிவிட்டது. அவள் உரக்கச் சிரித்தாள்.

பிறகு ஒரு நிமிடத்துக்கெல்லாம் வேடிக்கையை விடுத்து மிகவும் அமைதியாக ''அருமையிலும் அருமையான நண்பர் நீங்கள்!'' என்ருள். ''கடவுள்தான் உங்களை என்னிடம் அனுப்பி வைத்திருக்க வேண்டும். நீங்கள் எனக்குக் கிடைத்திராவிடில் இப்பொழுது என் கதி என்னவாகி இருக்கும், தெரியுமா? சிறிதும் தன்னலமற்றவராக இருக்கிறீர்கள்! என்பால் அவ்வளவு தூய நேசமும் பாசமும் கொண்டுள்ளீர்கள்!

நான் திருமணம் புரிந்து கொண்ட பிறகும், நாம் இருவரும் மிகச் சிறந்த நண்பர்களாக இருப்போம்,அண்ணனும் தங்கையுமாகப் பிறந்தவர்களைக் காட்டிலும் அதிக நேசமும் பாசமும் கொண்டவர்களாக இருப்போம். அவரிடம் எனக்கு எவ்வளவு பிரியம் இருக்குமோ ஏறத்தாழ அதே அளவுக்கு உங்களிடமும் பிரியம் கொண்டிருப்பேன்...''

கணப் பொழுதுக்கு என்னை ஒரு பயங்கரச் சோகம் வருத்திற்று; ஆனால் அதேபோதில் சிரிப்பையொத்த ஏதோ ஒன்று என் நெஞ்சினுள் குறுகுறுத்துக் கொண்டிருந்தது.

''நீங்கள் கலக்கமுற்று நிலைகுலைந்துவிட்டீர்கள்,'' என்றேன், ''பீதியடைந்திருக்கிறீர்கள், அவர் வர மாட்டார் என்று நினைக்கிறீர்கள்.''

''அட தெய்வமே, அதெல்லாம் இல்லை!'' என்று அவள் பதிலளித்தாள். ''நான் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டிருக்கிறேன், இல்லையேல் உங்களுடைய இந்தக் குற்றச்சாட்டையும் நீங்கள் தெரிவிக்கும் அவநம்பிக்கையையும் கேட்டு நான் அழத் தொடங்கியிருப்பேன். ஆயினும் நெடுநேரத்துக்கு நான் சிந்திப்பதற்கு வேண்டியவற்றை நீங்கள் எனக்குத் தந்திருக்கிறீர்கள், பிற்பாடு இவை குறித்துச் சிந்தனை செய்வேன். ஆனால் இப்பொழுது நான் ஒத்துக் கொள்கிறேன்: நீங்கள் சொன்னது மெய்தான். ஆம்! எனக்கு என்னமோ போலத்தான் இருக்கிறது, என்ன நடைபெறுமோ என்று குழம்புகிறேன். சரி, இருக்கட்டும் பார்க்கலாம்!..''

காலடி ஓசை கேட்டு நாங்கள் துணுக்குற்றோம்: இருட்டிலிருந்து வெளிப்பட்ட ஓர் ஆள் எங்களை நோக்கி நடந்து வந்தான். இருவரும் நடுங்கிப் போனோம்; அவள் வாய் விட்டுக் கூவியழைக்கப் போனாள். நான் அவளுடைய கையை விட்டு விட்டு அவளிடமிருந்து விலகி வர முற்பட்டேன். ஆனால் நாங்கள் நினைத்தது சரியல்ல: வந்தவர் அவரல்ல.

''எதற்காக நீங்கள் பயப்படுகிறீர்கள்? என் கையை விட்டு விட்டு நீங்கள் ஏன் நகர்ந்தீர்கள்?'' என்று கேட்டு அவள் திரும்பவும் தன் கையை என்னிடம் கொடுத்தாள். ''அதனால் என்ன? இருவரும் சேர்ந்து அவரைச் சந்திக்கலாம். நாம் இருவரும் ஒருவரையொருவர் காதலிப்பதை அவர் பார்க்க வேண்டும் என்பதுதான் என் விருப்பம்.''

''நாம் இருவரும் ஒருவரை யொருவர் காதலிப்பதையா?!'' என்று நான் வியந்து கூவினேன்,

''ஓ, நாஸ்தென்கா, நாஸ்தென்கா!'' என்று நான் என்னுள் கூறிக் கொண்டேன். ''ஒரேயொரு சொல்லைக் கொண்டு நீ அளவின்றி எவ்வளவோ சொல்லிவிட்டாயே! இப்படிப்பட்ட காதல் இதயத்தை உறைய வைத்து ஆன்மாவை ஒடுங்கச் செய்துவிடுமே. உன்னுடைய கை ஜில்லிட்டுக் குளிர்ந்திருக்க என்னுடைய கை நெருப்புப் போல சுடுகின்றதே. ஓ, நாஸ்தென்கா, நீ ஏன் இப்படிப் பார்வை இழந்து போனாய்?.. இன்பத்திலே திளைப்பவர் சில நேரங்களில் எப்படிச் சகிக்க முடியாதவராகி விடுகிறார்! ஆனால் உன்மீது எந்தாளும் நான் கோபம் கொள்ள முடியாது!''

முடிவில் என்னால் என் உள்ளத்து உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்த முடியவில்லை.

''நாஸ்தென்கா!'' என்று கூவியழைத்தேன். ''நேற்று இரவு முதலாக நான் என்னவெல்லாம் அனுபவித்துள்ளேன், தெரியுமா உங்களுக்கு?''

''தெரியாதே, சொல்லுங்கள், சீக்கிரமாகச் சொல்லுங்கள். இதுவரை ஏன் அதைச் சொல்லாமல் இருந்தீர்கள்?''

''நாஸ்தென்கா, முதலில், நீங்கள் கொடுத்த வேலைகளை எல்லாம் செய்து முடித்தபின், கடிதத்தைக் கொண்டுபோய்ச் சேர்ப்பித்துவிட்டு, உங்களுக்குத் தெரிந்த அந்த நல்லவர்களிடமும் சென்றபின்... அதன்பின் நான் என் அறைக்குத் திரும்பி வந்து தூங்கினேன்.''

''அவ்வளவுதானா?'' என்று குறுக்கிட்டுக் கேட்டு விட்டுச் சிரித்தாள் அவள்.

''ஆம், அனேகமாய் அவ்வளவுதான்.'' நெஞ்சுக் குமுறலுக்கிடையே பதிலளித்தேன், ஏனெனில் அசட்டுக் கண்ணீர் என் கண்களில் நிறைந்துவிட்டது. ''நாம் சந்திக்க வேண்டிய நேரத்துக்கு ஒரு மணி முன்னதாக விழித்துக் கொண்டேன். ஆனால் நான் தூங்கியதாகவே எனக்குத் தோன்றவில்லை. எனக்கு என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அதை எல்லாம் உங்களிடம் சொல்ல வேண்டுமென்று இங்கு வந்தேன். காலமே எனக்கு அப்படியே நின்றுவிட்டது போலத் தோன்றிற்று; அந்தக் கணம் முதலாக ஒரேயொரு உணர்ச்சி மட்டும்தான் என்றென்றும் எனக்குள் இருந்து கொண்டிருக்கும் என்றும், வாழ்வு அனைத்துமே எனக்கு அப்படியே சலனமற்று நின்றுவிட்டதுபோல அந்த ஒரு கணம் மட்டுமே சாசுவதமாய் நீடித்து நிலவும் என்றும்

தோன்றிற்று—உங்களிடம் இதையெல்லாம் சொல்ல வேண்டுமென்று இருந்தேன். நான் விழித்துக் கொண்டபோது, நெடுங்காலத்துக்கு முன்பு கேட்ட ஒரு இசை, எங்கோ ஒரு முறை கேட்டுப் பிற்பாடு மறந்துவிட்ட இனிமையான ஒரு இசை எனக்கு நினைவுக்கு வருவதாக நினைத்தேன். இது வாழ்வெல்லாம் என் இதயத்தினுள்ளிருந்து வெடித்து வெளியே வரத் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தது போலவும் முடிவில் இப்பொழுது தான் இது...''

''அட தெய்வமே, என்ன இது?'' என்று நாஸ்தென்கா இடைமறித்தாள். ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!''

''ஆ, நாஸ்தென்கா! எப்படியாவது முயற்சி செய்து அதிவினோதமான இந்த உணர்ச்சியை உங்களுக்கு உணர்த்திக் காட்ட வேண்டுமென்று விரும்பினேன்...'' என்று துயரம் தோய்ந்த குரலில், இம்மியளவே ஆயினும் நம்பிக்கையின் சிறு சுடர் ஒளிர்ந்த குரலில் நான் விளக்கிக் கூற முற்பட்டேன்.

''மேற்கொண்டு சொல்ல வேண்டாம், புரிகிறது!'' என்றாள்; பொல்லாதவள், திடுமென யாவற்றையும் புரிந்து கொண்டுவிட்டாள்.

உடனே அவள் வழக்கத்துக்கு மாறாக மளமளவென ஏதேதோ வேடிக்கையாகப் பேசவும் விளையாடவும் ஆரம்பித்தாள். என் கையைப் பிடித்துக் கொண்டு சிரித்தாள், அவளுடன் சேர்ந்து என்னையும் சிரிக்க வைக்க வேண்டுமென்று விரும்பினாள். குழப்பமடைந்துவிட்ட நான் இடையிடையே கூறிய ஒவ்வொரு சொல்லும் அவளை விழுந்து விழுந்து தொடர்ந்து மேலும் சிரிக்கவே செய்தது... எனக்குக் கோபம் வரத் தொடங்கியதும் திடுமென அவள் கொஞ்சிக் குலாவும் குரலில் பேச முற்பட்டாள்.

''இங்கே பாருங்கள்!'' என்று அவள் ஆரம்பித்தாள். ''நீங்கள் என் மீது காதல் கொள்ளாதிருப்பது குறித்து எனக்குக் கொஞ்சம் ஏமாற்றமாகத்தான் இருக்கிறது. பெண்ணின் இதயம் எப்படிப்பட்ட புதிர் என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளுங்கள்! ஐயா, பிடிவாதக்காரரே, எப்படியும் நீங்கள் என்னுடைய ஒளிவுமறைவற்ற வெகுளித்தனமான பேச்சுக்காக என்னைப் பாராட்டியே ஆக வேண்டும். எதையும் ஒளிக்காமல் யாவற்றையும் நான் உங்க

ளிடம் சொல்லி வருகிறேன். எவ்வளவு தான் அசட்டுத் தனமாக இருப்பினும் என் தலையில் உதிக்கும் ஒவ்வொரு எண்ணத்தையும் உங்களுக்குத் தெரிவித்து வருகிறேன்!''

''அதைக் கேளுங்கள்! மணி பதினொன்று ஆகிவிட்டதா, என்ன?'' என்றேன், தொலைவில் நகர மணிக்கூண்டிலிருந்து எழுந்த சந்தம் தவருத மணி நாதத்தைக் கேட்ட நான். உடனே அவளுடைய சிரிப்பு நின்றுவிட்டது, திடுதிப்பென மௌனமாகிவிட்ட அவள் எத்தனை மணி அடிக்கிற தென்று எண்ண ஆரம்பித்தாள்.

''ஆம், பதினொன்ருகிவிட்டது'' என்று அச்சமும் பதட்டமும் தொனிக்கும் குரலில் முடிவில் மெதுவாகக் கூறினாள்.

அவளை மிரளச் செய்து மணி அடிப்பதை எண்ணும் படிச் செய்துவிட்டோமே என்று உடனே நான் வருத்தப்பட்டுக் கொண்டேன். திடுதிப்பெனக் கடுப்புக் கொண்டு இப்படிச் செய்ததற்காக என்னை நான் சபித்துக் கொண்டேன். அவளுடைய நிலையைக் கண்டு சோகமடைந்தேன். நான் செய்த பாவத்துக்கு எப்படி மன்னிப்புத் தேடுவதென்று எனக்குத் தெரியவில்லை. அவளுக்கு ஆறுதல் கூற முற்பட்டேன், அவர் வராததற்குத் தக்க காரணங்களைக் கண்டுபிடித்துச் சொல்லி அவர் வரத் தவறியது நியாயமே என்பதாக நிரூபிக்க முயன்றேன். இது போன்ற ஒரு தருணத்தில் நாம் கூறுவதை நாஸ்தென்காவைப் போல அவ்வளவு எளிதில் ஏற்றுக் கொண்டு விடுகிறவர் வேறு யாரும் இருக்க முடியாது. ஆம், இது போன்ற ஒரு தருணத்தில் எவரும் நாம் கூறக்கூடிய எந்த விதமான ஆறுதலுக்கும் மகிழ்ச்சியுடன் செவி சாய்த்து, எவ்வளவு அற்பமான நொண்டிச் சாக்கு கிடைத்தாலும் உடனே மனதைத் தேற்றிக் கொண்டு ஆனந்தப்பட்டுக் கொள்வார்தான்.

''நன்ருக இருக்கிறது! இந்த வேடிக்கை'' என்று நான் மேலும் மேலும் ஆர்வமடைந்து வாதாடினேன், என்னுடைய வாதங்களின் அதிவிசேஷத் தெளிவை மெச்சிக் கொண்டேன். ''அவரால் வந்திருக்க முடியவே முடியாதே! நாஸ்தென்கா, நீங்கள் என்னை ஏமாற வைத்து அப்படிக் குழப்பி விட்டு விட்டீர்கள், கால வரம்புகளை நான் குழப்படி செய்துவிட்டேன். கொஞ்சம் ஆலோசித்துப் பாருங்கள், உங்களுக்கே தெரியும்: கடிதம் அதற்குள் அவர் கைக்குக் கிடைத்திருப்

பது துர்லபம்; அவரால் வர முடியவில்லை, பதில் கடிதம் எழுதுவதாக வைத்துக் கொள்ளுங்கள், அந்தக் கடிதம் நாளைக்கு முன்னதாக உங்களுக்கு வந்து சேராதே! நாளைக்கு நான் எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரம் போய் அதை எடுத்து வருகிறேன். உடனே உங்களுக்குத் தெரிவிக்கிறேன். எதிர்பாராத விதமாக நடை பெறக்கூடிய ஆயிரக்கணக்கான சம்பவங்களை நினைத்துப் பாருங்கள்: உங்களது கடிதம் போய்ச் சேர்ந்தபோது அவர் வீட்டில் இல்லாமல் இருந்திருக்கலாம், இன்னும் அவர் அதைப் படித்துக்கூடப் பார்க்காமல் இருக்கலாம்! இன்னும் ஏதேதோ நடந்திருக்கலாம்.''

''ஆம், ஆம்!'' என்று நாஸ்தென்கா பதிலளித்தாள். ''நான் நினைத்தே பார்க்கவில்லை, ஏதேதோ நடைபெற்றிருக்கலாம்தான்'' என்று இணக்கமும் இசைவும் தெரிவிக்கும் இதமான குரலில் சொன்னாள், ஆயினும் தெளிவற்ற எதிர்மறை எண்ணம் ஒன்றின் சந்தேகத் தொனி அவள் குரலை மாசுபடுத்திற்று. ''நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்'' என்றாள். ''நாளைக்கு எவ்வளவு சீக்கிரமாகப் போக முடியுமோ அவ்வளவு சீக்கிரம் சென்று, பதில் கடிதம் இருக்குமாயின் உடனே எனக்குத் தெரிவிக்க வேண்டும். நான் வசிக்கும் இடம் உங்களுக்குத் தெரியும் அல்லவா?'' அவளுடைய முகவரியைத் திரும்பவும் என்னிடம் சொன்னாள்.

பிறகு திடுமென என்பால் அளவிலாக் கனிவும் பரிவும் கொண்டவளாக நடந்து கொண்டாள். நான் அவளிடம் கூறியதை எல்லாம் கூர்ந்து கவனமாய்க் கேட்பது போலக் கேட்டுக் கொண்டிருந்தாள், ஆனால் நேரடியாக நான் ஒரு கேள்வி கேட்டதும் அவள் பதில் சொல்லவில்லை, கலவரமடைந்து முகத்தை என் பக்கத்திலிருந்து திருப்பிக் கொண்டு விட்டாள். நான் அவள் கண்களினுள் எட்டிப் பார்த்தேன்— ஆம், நான் நினைத்தது சரிதான், அவள் அழுது கொண்டிருந்தாள்.

''அட பாவமே! நீங்கள் அழலாமா? பச்சைக் குழந்தையாக இருக்கிறீர்களே!.. அழாதீர்கள்!''

அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கு, சிரிப்பதற்கு முயன்றாள், ஆனால் அவளுடைய முகவாய் அதிர்ந்து

கொண்டு தான் இருந்தது, அவளுடைய நெஞ்சு இன்னும் விக்கியெழுந்து கொண்டுதான் இருந்தது.

சற்று நேரம் மௌனமாக இருந்தபின், ''நான் உங்களைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றாள். ''நீங்கள் அவ்வளவு நல்லவராக இருக்கிறீர்கள், என் மனம் கல்லாக இருந்தால்தான் இதை நான் உணராதிருக்க முடியும்... இப்பொழுது என் மனத்தில் தோன்றிய எண்ணம் என்ன தெரியுமா? உங்கள் இருவரையும் நான் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஏன் அவர் உங்களைப் போல இல்லை? அவரையே அதிகம் விரும்புகிறேன் என்றாலும் நீங்கள் அவரைக் காட்டிலும் நல்லவராக இருக்கிறீர்கள்.''

நான் பதில் சொல்லாமல் வாயை மூடிக் கொண்டிருந்தேன். ஏதாவது சொல்வேன் என்று எதிர்பார்ப்பதைப் போல அவள் காத்திருந்தாள்.

''இன்னமும் அவரை நான் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை, போதிய அளவுக்கு அவரைத் தெரிந்து கொள்ளவில்லை என்பதாகவே கருத வேண்டியிருக்கிறது. எப்பொழுதுமே அவரிடம் எனக்குக் கொஞ்சம் பயமாகத்தான் இருக்கும், எப்பொழுதும் அவர் அப்படி அச்சம் தருகிறவராகவும் ஒரு மாதிரி விறைப்பாகவும்தான் இருப்பார். ஆனால் எனக்குத் தெரியும், அது வெறும் வெளித்தோற்றம்தான்; உண்மையில் அவருடைய உள்ளம் தங்கமானது, என்னைக் காட்டிலும் அவர் எளிதில் மனம் உருகிவிடுவார். மூட்டையைக் கட்டிக் கொண்டு முன்பு நான் அவரிடம் போய்ச் சேர்ந்தபொழுது என்னை அவர் பார்த்தாரே அந்தப் பார்வை என் நினைவுக்கு வருகிறது. இருந்த போதிலும் நான் அவரிடம் மட்டுமீறிய மரியாதை செலுத்துகிறவளாக இருக்கிறேன், நாங்கள் இருவரும் சரிசமமானவர்களாக இல்லை என்பதைத்தானே இது காட்டுகிறது?''

''இல்லை, நாஸ்தென்கா, இல்லை!'' என்று நான் பதிலளித்தேன். ''அவரை நீங்கள் அப்படி மட்டுமீறிக் காதலிக்கிறீர்கள், உலகில் வேறு எதையும்விட, உங்களையும்விடக் கூட, அவரிடம் அவ்வளவு அதிக ஆசையும் பாசமும் கொண்டிருக்கிறீர்கள் என்பதைத்தான் காட்டுகிறது.''

''ஆம், அப்படித்தான் இருக்கும்'' என்று ஒத்துக் கொண்டாள் அந்தப் பேதைப் பெண். ''இப்பொழுது என்

மனதில் தோன்றிய எண்ணத்தைச் சொல்லட்டுமா? ஆனால் இப்பொழுது நான் சொல்லப் போவது அவரைப் பற்றியது அல்ல. பொதுவில் பேசுகிறேன்: இந்த எண்ணம் நீண்ட காலமாக என் மனதில் இருந்து வந்திருக்கிறது. நாம் எல்லோரும் ஏன் உடன்பிறந்தோர் மாதிரி நடந்து கொள்வதில்லை? மிகச் சிறந்தோருங்கூட எதையோ வெளியே தெரியாதபடி மறைத்துக் கொள்ள விரும்புவது போல, ஏனையோருக்குத் தெரியாத்படி இரகசியமாக வைத்துக் கொள்ள நினைப்பது போல நடந்து கொள்கிறார்களே, அது ஏன்? மனதில் இருப்பது மெய்யாகவே நாம் விரும்புவதுதான் என்பது தெரியுமாயின், வெளிப்படையாகவே அதைச் சொன்னால் என்னவாம்? பிறகு ஏன் ஒவ்வொருவரும் உண்மையில் தாம் இருப்பதைக் காட்டிலும் உக்கிரமானவராய்க் காட்டிக் கொள்ள முயல வேண்டும்? தமது உள்ளத்து உணர்ச்சிகளை விரைவில் வெளிப்படுத்திவிட்டால் தம் உணர்ச்சிகளைப் பழிப்பதாகிவிடுமென்று அஞ்சுவது போல நடந்து கொள்ள ஏன் முயல வேண்டும்?''

''ஆமாம், நாஸ்தென்கா! நீங்கள் சொல்வது மெய்தான், ஆனால் வெவ்வேறான பல காரணங்களை முன்னிட்டே அப்படிச் செய்கிறார்கள்'' என்று கூறி நான் முன்னிலும் கடுமையாக என் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டேன்.

''இல்லை, இல்லை'' என்று அவள் உணர்ச்சி வயப்பட்டவளாகக் கூறினாள். ''எல்லோரும் அப்படி இல்லை, உதாரணமாக நீங்கள் அப்படி இல்லை! என் மனதில் இருப்பதைத் தெளிவாக எப்படிச் சொல்வதென்று தெரியவில்லை. எனக்குத் தோன்றுகிறது, உதாரணமாய் நீங்கள் இப்பொழுது... நீங்கள் எனக்காக வேண்டி எதையோ தியாகம் செய்கிறீர்கள் என்பதாக எனக்குத் தோன்றுகிறது'' என்று பார்வையை என் பக்கம் திருப்பி கணப் பொழுதுக்கு என்னை நோக்கியவாறு மெல்லக் கூறினாள். ''இதை உங்களிடம் சொல்வதற்காக நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். நான் அதிகம் தெரியாதவள், உலகில் இன்னமும் மிகப் பலவற்றையும் அறியாதவள்; சில நேரங்களில் எப்படிப் பேசுவது என்று கூடத் தெரியாது எனக்கு'' என்றாள். அவள் புன்னகை புரிந்து வெளியே தெரியாதபடி தன்னுள் மறைத்துக் கொள்ள முயன்ற ஏதோ ஓர் உணர்ச்சியின் காரணமாக

அவளுடைய குரல் நடுங்கிற்று. ''உங்களுக்கு நான் ஆழ்ந்த நன்றி செலுத்துகிறேன் என்பதையும், இவற்றை எல்லாம் என்னுலும் உணர முடிகிறது என்பதையும்தான் உங்களிடம் கூற விரும்பினேன்... இதற்காகக் கடவுள் உங்களுக்குக் குறைவற்ற இன்பம் கிட்டச் செய்வாராக! உங்களுடைய கனவுலகவாசி குறித்து நீங்கள் அன்று சொன்னீர்களே அதெல்லாம் உண்மையல்ல, அதாவது உங்களுக்கு உண் மையில் நிகழ்ந்ததல்ல என்று கூற விரும்புகிறேன். நீங்கள் நல்லபடி ஆகி வருகிறீர்கள், உங்களைப்பற்றி நீங்கள் கூறிக் கொண்டதிலிருந்து உண்மையில் நீங்கள் முற்றிலும் மாறு னவர். என்றுவது உங்களுக்குரியவளை நீங்கள் சந்திப்பீர் கள், அவளுடன் உங்களுக்குக் கடவுள் எல்லா இன்பமும் கிட்டச் செய்வாராக! அவளுக்கு நான் வாழ்த்துரைக்கத் தேவையில்லை, ஏனெனில் நிச்சயம் அவள் உங்களுடன் இனிது வாழ்ந்து எல்லா இன்பமும் பெறுவாள். அது எனக்குத் தெரியும், பெண்ணுகிய நான் அதை அறிவேன், நான் சொல்வதை நீங்கள் நம்ப வேண்டும்...''

அவள் மௌனமாகி என் கையை ஆர்வமுடன் அழுத்திப் பிடித்துக் கொண்டாள். உணர்ச்சி வயப்பட்டுவிட்ட என்னு லும் ஒன்றும் பேச முடியவில்லை. இப்படிச் சில நிமிடங்கள் கழிந்தன.

''இன்று அவர் வரப் போவதில்லை, தெளிவாகத் தெரி கிறது'' என்று அவள் தலையை உயர்த்தியவாறு முடிவாகக் கூறினுள். ''நேரமாகிவிட்டது!..''

''நாளைக்கு நிச்சயம் வருவார்'' என்றேன் நான், நம் பிக்கை தரும் உறுதியான குரலில்.

''ஆம்'' என்று சொல்லி உற்சாகம் அடைந்தாள் அவள். ''இப்பொழுது எனக்கும் தெளிவாகத் தெரிகிறது—நாளைக் குத் தான் அவரால் வர முடியும். சரி, போய் வருகிறேன்! நாளைக்குச் சந்திப்போம். மழை பெய்தால் நான் வருவது சந்தேகம்தான். ஆனுல் நாளை மறுநாள், என்ன ஆனுலும் நிச்சயம் வருவேன், நீங்களும் தவருமல் வந்துவிடுங்கள். அவசியம் உங்களைப் பார்க்க வேண்டும், யாவற்றையும் உங் களுக்குச் சொல்வேன்.''

நாங்கள் விடைபெற்றுக் கொள்கையில் அவள் எனக்குக் கை கொடுத்துத் தயக்கம் சிறிதுமின்றி என்னை உற்று நோக்கியவாறு கூறினுள்:

''இனி எப்பொழுதும் நாம் இணைபிரிய மாட்டோம், இல்லையா?''

நாஸ்தென்கா, நாஸ்தென்கா! இப்பொழுது நான் எப்படித் தன்னந்தனியனாக விடப்பட்டுள்ளேன் என்பது உனக்குத் தெரியவில்லையே!

மணி ஒன்பது அடித்ததும் அறையில் தங்க எனக்கு மனம் ஒப்பவில்லை. உடுத்திக் கொண்டு மழையைப் பொருட்படுத்தாமலே புறப்பட்டேன். அங்கே சென்று எங்களுடைய பெஞ்சின்மீது உட்கார்ந்தேன். பிறகு அவளுடைய சந்துக்குள் சென்றேன். ஆனால் வெட்கப்பட்டுக் கொண்டு அவளுடைய வீட்டின் சன்னல்களைப் பார்க்காமலே திரும்பி வந்து விட்டேன், அவளுடைய வீட்டை அடையுமுன்பே திரும்பி விட்டேன். இதன்முன் என்றுமே இல்லாதபடி துயரார்ந்த நிலையில் என் அறைக்குத் திரும்பினேன். மழையும் மந்தாரமுமான சோபையற்ற நாள்! வானம் இப்படி இல்லாதிருந்தால் இரவு முழுவதும் அங்கே சுற்றியலைந்திருப்பேன்...

நாளை வரைக் காத்திருப்போம்! நாளைக்கு அவள் யாவற்றையும் எனக்குச் சொல்லுவாள்.

இன்று கடிதம் எதுவும் இல்லை. எதுவும் இருக்க முடியாதே. இருவரும் இப்பொழுது ஒன்று சேர்ந்துவிட்டார்களே...

நான்காம் இரவு

தெய்வமே, இவை யாவும் முடிந்த விதத்தை என்னென்பது! எப்படிப்பட்ட முடிவு!

ஒன்பது மணிக்கு நான் போய்ச் சேர்ந்தேன். அதற்கு முன்பே அவள் அங்கே இருந்தாள். சற்று தொலைவில் வரும்போதே அங்கு அவள் இருப்பதைக் கண்ணுற்றேன். முதல் இரவு போலவே ஆற்றங் கரையின் கிராதிமீது சாய்ந்து குனிந்து பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள். நான் வந்ததை அவள் கவனிக்கவில்லை.

''நாஸ்தென்கா!'' என்னுடைய பரபரப்பு வெளியே தெரியாதபடி பெருமுயற்சி செய்து மறைத்துக் கொண்டு நான் அவளைக் கூப்பிட்டேன்.

உடனே அவள் வேகமாகத் திரும்பிப் பார்த்தாள்.

''என்னிடம் கொடுங்கள்! சீக்கிரம் கொடுங்கள்!'' என்றாள்.

நான் திகைப்புடன் அவளைப் பார்த்தபடி நின்றேன்.

''கடிதம் எங்கே? கடிதம் கொண்டு வரவில்லையா?'' என்று ஒரு கையால் கிராதியைப் பிடித்து அழுத்திக் கொண்டு அவள் திரும்பவும் கேட்டாள்.

''கடிதம் எதுவும் இல்லையே'' என்றேன் நான். ''இன்னும் நீங்கள் அவரைப் பார்க்கவில்லையா?'' என்று கேட்டேன்.

அவள் முகம் வெள்ளைவெளேரென வெளுத்துப் போய் விட்டது, நெடுநேரம் என்னை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் உள்ளத்தில் எஞ்சியிருந்த கடைசி நம்பிக்கையையும் நான் தகர்த்துவிட்டேன்.

''சரி, அவர் கிடக்கட்டும் விடுங்கள்!'' என்று முடிவில் அவள் தவிப்பு தொனிக்கும் கரகரப்பான குரலில் சொன்னாள். ''என்னை இப்படி நிர்க்கதியில் விட விரும்புகிறவரை விட்டுவிடுங்கள்!''

பார்வையைக் கவிழ்த்துக் கொண்டு நின்ற அவள், கண்களை உயர்த்தி என்னைப் பார்க்க விரும்பினாள், ஆனால் முடியவில்லை. தன்னுள் குமுறியெழுந்த துயரத்தை அடக்கிக் கொள்ள மேலும் சில நிமிடங்கள் முயன்று பார்த்துவிட்டு முடிவில் வெடுக்கென எதிர்ப் பக்கம் திரும்பி கிராதியில் கவிழ்ந்து கொண்டு அழுதாள்.

''அழாதீர்கள், அழாதீர்கள்!'' என்று நான் ஏதோ சொல்ல முற்பட்டேன், ஆனால் அவளுடைய நிலையைப் பார்த்துக் கொண்டிருந்த என்னால் அதற்குமேல் பேச முடியவில்லை. பேசுவதற்குத்தான் என்ன இருந்தது?

''எனக்கு ஆறுதல் எதுவும் சொல்ல வேண்டாம்'' என்றாள் அவள், கண்ணீருக்கு இடையில். ''அவரைப் பற்றி என்னிடம் பேச வேண்டாம், அவர் என்னிடம் வருவார் என்று சொல்ல வேண்டாம், கொடுமையிலும் கொடுமையாய் நெஞ்சில் ஈரமின்றி என்னை அவர் நடுத் தெருவில் விட்டு விட்டுப் போகவில்லை என்று சொல்ல வேண்டாம். ஆனால் ஏன் இப்படிச் செய்கிறார்? ஏன் அது? அந்தக் கடிதத்தில், என்னுடைய அந்த அவலக் கடிதத்தில் அப்படி ஒன்றும் நான் எழுதிவிடவில்லையே...''

விம்மல் அவள் தொண்டையை அடைத்துவிட்டது; அவளைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது.

''எவ்வளவு கொடுமையானவன், இரக்கமற்றவன்!'' என்று மீண்டும் பேசத் தொடங்கினுள். ''ஒரு வரிகூட, ஒரேயொரு வரிகூட எழுதாமல் இருக்கிருரே! இனி நான் அவருக்கு வேண்டியதில்லை, என்னை அவர் கைவிட்டுவிடு கிருர் என்ருவது எழுதியிருக்கலாமே, மூன்று நாட்களாகி யும் ஒரு வரிகூட இல்லையே! பரிதாபத்துக்குரிய பெண், திக்கற்றவர், அவர்மீது காதல் கொண்டுவிட்டாள் என் பதன்றி வேறு எந்தப் பாவமும் புரியாதவள், அவளைப் போய் எவ்வளவு சுலபமாய்க் கேவலப்படுத்திக் கொடுமைப் படுத்துகிருர்! இந்த மூன்று நாட்களாக நான் பட்ட துன் பத்துக்கு அளவு உண்டா? என் தெய்வமே, எனக்கு ஏன் இந்தத் தண்டனை! நான் அல்லவா முதன்முதல் அவரிடம் சென்றேன், அவரிடம் மண்டியிட்டு என்னைத் தாழ்த்திக் கொண்டேன், அவருடைய காதல் கடுகளவாவது கிடைக் காதா என்று அழுது கண்ணீர் வடித்தேன், அவரைக் கெஞ்சி னேன்—இதை நினைக்கையில் எப்படி இருக்கிறது எனக்கு! இதற்கெல்லாம் பிற்பாடு இப்படியா ஆக வேண்டும்!.. நான் சொல்கிறேன் கேளுங்கள்'' என்று என் பக்கம் திரும்பி ஞள், அவளுடைய கரிய கண்கள் பளிச்சிட்டுப் பிரகாசித் தன. ''அப்படி இருக்காது! அப்படி இருக்க முடியாது! இது இயற்கைக்கு முரணனது! நம்மில் யாரோ ஒருவர், நீங்களோ நானே, தவறிழைத்திருக்கிருேம். இன்னும் என் கடிதம் அவருக்குக் கிடைக்கவில்லையோ? இன்னும் ஏதும் அறியாதவராகவே இருக்கிருரோ? கடிதம் கிடைத் திருந்தால் ஏன் இப்படிச் செய்கிருர்? உங்களுக்குப் புண்ணி யம் உண்டு, நீங்கள் சொல்லுங்கள், என்ன நினைக்கிறீர்கள் விளக்கமாகச் சொல்லுங்கள், ஏனெனில் என்னல் புரிந்து கொள்ள முடியவில்லை—என்னிடம் அவர் நடந்து கொள் வதைப் போல இவ்வளவு கொடுமையாக, இப்படி ஈவிரக்க மின்றி யாராலும் நடந்து கொள்ள முடியுமா? ஒரு வார்த் தைகூட பதில் இல்லையே! நாயினும் கேடானபிறவிக்குங்கூட இன்னும் அதிக இரக்கம் காட்டப்படுமே. ஒரு வேளை என்னைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாய் ஏதாவது கேள்விப் பட்டிருப்பாரோ, யாராவது என்னைப் பற்றி அவரிடம் கதை கட்டி விட்டிருக்கலாம் அல்லவா?'' என்று என் பக்கம் திரும்பி என்னைக் கேட்டாள். ''நீங்கள் என்ன நினைக்கிறீர் கள்?''

''இதோ பாருங்கள், நாஸ்தென்கா! நாளைக்கு நான் அவரிடம் போய் உங்கள் சார்பில் பேசுகிறேன்.''

''அப்புறம்?''

''யாவற்றையும் பற்றி அவரிடம் விசாரிப்பேன். யாவற்றையும் அவரிடம் சொல்வேன்.''

''அப்புறம் என்ன நடக்கும்?''

''நீங்கள் அவருக்குக் கடிதம் எழுதுவீர்கள், மாட்டேன் என்று சொல்ல வேண்டாம், நாஸ்தென்கா, நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது! நீங்கள் காட்டும் இந்தத் தயவை அவர் மதித்து நடக்கும்படிச் செய்வேன் நான். யாவற்றையும் அவர் தெரிந்து கொள்வார், வேண்டுமானால்...''

''வேண்டாம், என் நண்பரே, வேண்டாம்'' என்று அவள் இடைமறித்தாள். ''போதும்! இனி நான் ஒரு வார்த்தை கூட எழுதமாட்டேன்—எழுதியது போதும்! அவரை எனக்குத் தெரியாது. இனி அவர்மீது எனக்குக் காதலும் இல்லை, அவரை நான் மறந்துவிடுவேன்...'' அதற்குமேல் பேச முடியவில்லை அவளால்.

''நீங்கள் வருந்தக் கூடாது, அமைதி இழக்கக் கூடாது! நாஸ்தென்கா, இப்படி வந்து உட்காருங்கள்!'' என்று சொல்லிப் பெஞ்சு அருகே அவளை அழைத்துச் சென்றேன்.

''நான் அமைதியாகத்தான் இருக்கிறேன். கவலைப் படாதீர்கள், ஒன்றும் ஆகிவிடாது எனக்கு. வெறும் கண்ணீர், இது காய்ந்துவிடும். என் வாழ்க்கைக்கு முடிவு கட்டிக் கொண்டு விடுவேன், ஆற்றிலே குதித்துவிடுவேன் என்று நினைத்தீர்கள்?..''

எனக்கு நெஞ்சு பொறுக்கவில்லை. என்னமோ சொல்ல விரும்பினேன், ஆனால் முடியவில்லை, வாய் அடைத்துப் போய்விட்டது.

''நீங்கள் சொல்லுங்கள்'' என்று என் கையைப் பிடித்துக் கொண்டு அவள் தொடர்ந்து பேசினாள். ''நீங்களாக இருந்தால் இப்படிச் செய்திருக்க மாட்டீர்கள் அல்லவா? தானாகவே உங்களிடம் வந்தவளை நீங்கள் நடுத் தெருவிலே விட்டுச் சென்றிருக்க மாட்டீர்கள், அசட்டுப் பெண் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டாள் என்று ஆணவமாக அவளை நீங்கள் இகழ்ச்சி செய்திருக்க மாட்டீர்கள் அல்லவா? அவளை நீங்கள் பேணிப் பாதுகாத்திருப்பீர்கள் இல்லையா? தன்னந் தனியே இருந்தவள், இதெல்லாம் எப்படி ஆரம்பித்தது

என்று தெரியாதவள், உங்கள்பால் இருந்த காதலிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ள அறியாதவள், எந்தத் தவறும் செய்யாதவள், குற்றமற்றவள் என்பதை உணர்ந்து கொண்டிருப்பீர்கள் அல்லவா... தெய்வமே, என் தெய்வமே!..''

நான் இதற்கு மேலும் என் உணர்ச்சிகளை அடக்கிக் கொள்ள முடியாதவனாகி ''நாஸ்தென்கா!'' என்று கூவினேன். ''நாஸ்தென்கா! நீங்கள் என்னைச் சித்திரவதை செய்கிறீர்கள்! என் இதயத்தைத் திக்குமுக்காடச் செய்கிறீர்கள், என்னைச் சாகடிக்கிறீர்கள் நாஸ்தென்கா! என்னால் வாயை மூடிக் கொண்டு இருக்க முடியவில்லை! நான் பேசியே ஆக வேண்டும், என் இதயத்தில் பொங்கியெழுவது அனைத்தையும் மறைக்காமல் இனி உங்களுக்குச் சொல்லியே ஆக வேண்டும்!..''

இதைச் சொல்லியவாறு நான் பெஞ்சிலிருந்து எழுந்தேன். அவள் என் கையைப் பிடித்துக் கொண்டு வியப்புடன் என்னை உற்று நோக்கினாள்.

''என்ன ஆயிற்று உங்களுக்கு?'' என்றாள் முடிவில்.

''நான் சொல்வதைக் கேளுங்கள்!'' என்று நான் தீர்மானமாகச் சொன்னேன். ''நாஸ்தென்கா! நான் சொல்வதைக் கேளுங்கள்! இப்பொழுது நான் உங்களிடம் சொல்லப் போவது நடைபெற முடியாத ஒன்றுதான், அசட்டுக் கனவுதான், முற்றிலும் பொருளற்றதுதான். எந்நாளும் அது நனவாக முடியாது என்பது தெரியும் எனக்கு, இருப்பினும் இப்பொழுது என்னால் அதைச் சொல்லாமல் மௌனமாய் இருக்க முடியவில்லை. உங்களை இப்பொழுது எது வருத்தி வதைக்கின்றதோ அதன் பெயரில் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன், முன் கூட்டியே என்னை மன்னிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்...''

''அது என்ன, சொல்லுங்கள்!'' என்றாள். அழுகை அறவே நின்று போய் விந்தையும் வியப்புமான விநோத ஒளி பளிச்சிட்ட அவளுடைய கண்கள் என்னைப் பார்த்தபடி குத்திட்டு நின்றன. ''என்ன ஆயிற்று? சொல்லுங்கள் அதை!''

''இது நடைபெறக் கூடியதல்ல, தெரியும் எனக்கு; ஆனாலும் நான் உங்களைக் காதலிக்கிறேன், நாஸ்தென்கா! ஆம், அதுதான் உண்மை! யாவற்றையும் இப்பொழுது உங்களுக்குத்

தெரிவித்துவிட்டேன்!'' என்று கையை விரித்தவாறு கூறினேன். ''இதுகாறும் என்னுடன் பேசியது போல நீங்கள் இனியும் என்னுடன் பேசலாமா, மற்றும் இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லப் போவதைக் காது கொடுத்துக் கேட்கலாமா என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்...''

''அதனுல் என்ன?'' என்று என்னை இடைமறித்தாள் நாஸ்தென்கா. ''உங்களுக்கு என்னிடம் அதிகமான பாசம் உண்டென்பது எனக்குத் தெரிந்ததுதான், ஆனுல் அது வேறுவிதமானது. இப்படிப்பட்டதல்ல என்பதாக நினைத்துக் கொண்டுவிட்டேன்... அட தெய்வமே!''

''முதலில் அப்படித்தான், வேறு விதமானதாய்த்தான் இருந்தது. ஆனுல் இப்பொழுது, நாஸ்தென்கா!.. முன்பு நீங்கள் மூட்டையைத் தூக்கிக் கொண்டு அவரிடம் போன போது உங்களுக்கு எப்படி இருந்ததோ அதே போலத்தான் எனக்கு இப்பொழுது இருக்கிறது. நாஸ்தென்கா, என்னுடைய நிலை இன்னுங்கூட மோசமானது, ஏனென்ருல் அவர் வேறு யாரையும் காதலிக்கவில்லை, ஆனுல் நீங்கள் வேெருருவனைக் காதலிக்கிறீர்கள்.''

''என்ன சொல்கிறீர்கள்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே, ஆனுல் இதைக் கேளுங்கள் நீங்கள். ஏன் இப்படி.... இல்லை, இல்லை... எதனுல் நீங்கள், ஏன் நீங்கள்... இப்படித் திடுமென... அட கடவுளே! நான் உளறுகிறேன்! நீங்கள் ஏன்...''

நாஸ்தென்கா முற்றிலும் குழம்பிப் போய்விட்டாள். அவள் கன்னங்கள் செக்கச் சிவந்துவிட்டன. பார்வையைக் கவிழ்த்துக் கொண்டுவிட்டாள்.

''ஆனுல் நான் என்ன செய்வேன்; நாஸ்தென்கா, என்ன செய்வேன்? தவறிழைத்துவிட்டேன், உங்களுடைய நிலைமையைத் தகாத வழியில் பயன்படுத்திக் கொண்டுவிட்டேன்... இல்லை, இல்லை, நான் தவறிழைக்கவில்லை, நாஸ்தென்கா; எனக்குத் தெரிகிறது, நான் அதை உணருகிறேன், ஏனெனில் நான் நேர் வழியில்தான் நடந்து கொண்டேன் என்று என் மனம் எனக்குச் சொல்கிறது, ஏனெனில் உங்களுக்குத் தீங்கிழைக்கவோ, உங்களை அவமதிக்கவோ ஒருபோதும் சகியாதவன் நான்! உங்களது நண்பனுகவே இருந்தேன், இப்பொழுதும் உங்களது நண்பனுகவே இருக்கிறேன், எவ்விதத்

திலும் நான் நம்பிக்கைத் துரோகம் செய்துவிடவில்லை. நாஸ்தென்கா, என் கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடுவதைப் பாருங்கள். ஓடட்டும் அது, ஓடட்டும்—அதனுல் தீங்கு ஏதும் இல்லை. அது காய்ந்துவிடும், நாஸ்தென்கா...''

''உட்காருங்கள், உட்காருங்கள்'' என்று அவள் என்னைப் பிடித்துத் தன்னருகே இழுத்தாள். ''அட தெய்வமே!'' என்று கூவினுள்.

''வேண்டாம்! நாஸ்தென்கா, நான் உட்கார மாட்டேன். இனி நான் இங்கே இருக்கக் கூடாது, என்னை நீங்கள் இனி பார்க்கக் கூடாது. யாவற்றையும் சொல்லிவிட்டு இங்கிருந்து போய்விடுவேன். நான் காதலிக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியக் கூடாதென்றுதான் இருந்தேன். என் இரகசியத்தை நான் வெளியிட்டிருக்க மாட்டேன். இது போன்ற ஒரு தருணத்தில் எனது தன்னலத்தால் உங்களைத் துன்புறுத்த ஒருபோதும் நினைத்திருக்க மாட்டேன். ஆனுல் என்னுல் சகிக்க முடியவில்லை; நீங்கள்தான் இது பற்றிப் பேச்செடுத்தீர்கள், தவறு உங்களுடையது; உங்களைத்தான் குறை சொல்ல வேண்டுமே ஒழிய என்னை அல்ல. நீங்கள் என்னை விலகிப் போகச் சொல்லக் கூடாது...''

''இல்லையே, நான் உங்களை விலகிப் போகச் சொல்லவில்லையே, இல்லையே!'' என்ருள் நாஸ்தென்கா, பாவம், தனக்கு ஏற்பட்ட குழப்பத்தை மறைத்துக் கொள்ள அவள் முடிந்த மட்டும் முயற்சி செய்தாள்.

''நீங்கள் என்னை விலகிப் போகச் சொல்லவில்லையா? இல்லையா! ஆனுல் நான் உங்களிடமிருந்து ஓடத்தான் போகிறேன். ஆனுல் போகுமுன் யாவற்றையும் உங்களிடம் சொல்லிவிடுகிறேன். இங்கு நீங்கள் என்னிடம் சொன்னதைக் கேட்டபோது என்னுல் பொறுக்க முடியவில்லை. நீங்கள் அழுதபோதும், உள்ளம் ஒடிந்து போய் வருத்தப்பட்டபோதும், நீங்கள், ஆம்.... நீங்கள் (இதைக் குறிப்பிடுவதற்காக என்னை மன்னிக்க வேண்டும்) நடுத் தெருவிலே விடப்படுவதாய், உங்களது காதல் இகழ்ச்சிக்குரியதெனக் கருதப்படுதாய் நினைத்து வேதனைப்பட்டபோதும், உங்கள்மீது என் இதயத்தில் அத்தனை காதல் நிரம்பி வழிகிறதே என்று நினைத்துக் கொண்டேன்! ஆம், நாஸ்தென்கா, அத்தனை காதல்!.. ஆனுல் அந்தக் காதலைக் கொண்டு உங்களுக்கு நான் உதவ முடியவில்லையே என்று நெஞ்சு பதறினேன்...

என் இதயமே வெடித்துவிடும் போலிருந்தது, என்னல் மௌனமாக இருக்க முடியவில்லே, நாஸ்தென்கா, நான் பேச வேண்டியதாகிவிட்டது!..''

''நீங்கள் பேசுங்கள், இதைப் போல நன்ருகப் பேசுங்கள்!'' என்று விவரிக்க முடியாத கனிவுடன் நாஸ்தென்கா கூறினுள். ''நான் இப்படிச் சொல்வதைக் கேட்பதற்கு உங்களுக்கு விபரீதமாக இருக்கலாம்... ஆனுல் நீங்கள் பேசுங்கள், நன்ருய்ப் பேசுங்கள்! பிற்பாடு உங்களுக்குச் சொல்கிறேன்! யாவற்றையும் சொல்கிறேன்!''

''நாஸ்தென்கா, நீங்கள் என் நிலேயைப் பார்த்து இரக்கப் படுகிறீர்கள்! எனது அருமை நாஸ்தென்கா, நீங்கள் பரிதாபப்படுகிறீர்கள்! ஆம்; செய்தது செய்ததுதான், சொன்னது சொன்னதுதான்! இனி ஒன்றும் செய்வதற்கில்லே. இப்பொழுது நீங்கள் யாவற்றையும் தெரிந்து கொண்டு விட்டீர்கள். ஆகவே இதையே துவக்க நிலேயாகக் கொண்டு பேசலாம். நல்லது, இப்பொழுது யாவும் இனிதே அமைந்துவிட்டது! மேலும் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிடுகிறேன், கேளுங்கள்.அங்கே உட்கார்ந்து கொண்டு நீங்கள் அழுதபோது நான் நினேத்துக் கொண்டேன் (என்ன நினேத்தேன் என்பதைச் சொல்ல நீங்கள் அனுமதிக்க வேண்டும்),நான் நினேத்துக் கொண்டேன் (ஆனுல் நாஸ்தென்கா, ஒருபோதும் அது நடைபெற முடியாததுதான்), நான் நினேத்துக் கொண்டேன்... எப்படியோ உங்களுக்கு முன்பு போல அவர்மீது காதல் இல்லே என்று நினேத்தேன். பிறகு நான்—நாஸ்தென்கா இது பற்றி நேற்று இரவும், நேற்றுக்கு முந்திய இரவும் சிந்தித்துக் கொண்டிருந்தேன்—நான் ஏதோ செய்யப் போவதாக, என்மீது உங்களுக்குக் காதல் ஏற்படும்படி நிச்சயமாக ஏதோ செய்யப் போவதாக நினேத்தேன். நீங்கள் என்னிடம் சொன்னீர்கள், நாஸ்தென்கா, நீங்களே தான் சொன்னீர்கள், நீங்கள் என்னேக் காதலிக்கும் அளவுக்கு வந்துவிட்டதாகச் சொன்னீர்கள். ஆம், வேறு நான் சொல்ல விரும்பியது என்ன? யாவற்றையும் சொல்லிவிட்டேன் என்று தான் நினேக்கிறேன்... மேலும் நான் சொல்லக் கூடியது எல்லாம், என்ருவது நீங்கள் என்னேக் காதலிப்பீர்களானுல் எப்படி இருக்கும் என்பது தான்—அது ஒன்றை மட்டும் தான் நான் கூற வேண்டும், அவ்வளவுதான்! நான் சொல்வதைக் கேளுங்கள், என் அன்புக்குரிய நாஸ்தென்கா—எது

எப்படியானாலும் நீங்கள் என் அன்புக்குரியவள்தான்—நான் மிகச் சாதாரண மனிதன், பணம் இல்லாதவன், எவ்வகையிலும் பெயர் பெறாதவன், ஆனால் இதெல்லாம் முக்கியமல்ல (நான் ஏதேதோ பேசுகிறேன், நாஸ்தென்கா, என்னுடைய கூச்சம்தான் காரணம்), நான் சொல்ல விரும்புவது என்னவெனில், உங்களை நான் அப்படிக் காதலிப்பேன், அந்த இன்னொருவரையே, நான் அறியாத அவரையே நீங்கள் அதிகம் நாடினாலுங்கூட, அவரே இனியும் உங்களது பற்றுதலுக்கு உரியவராக இருந்தாலுங்கூட, என் காதலால் உங்களுக்கு எவ்விதத் தொல்லையும் உண்டாகாத வண்ணம் உங்களை நான் அப்படிக் காதலிப்பேன்; இணைபிரியாது எந்நேரமும் உங்களுடன் ஒட்டிக் கொண்டு ஓர் இதயம் இயங்குகிறது என்பதைத் தவிர, நன்றியுணர்வுடைய நேசமும் பாசமும் கொண்ட ஓர் இதயம், என்றும் உங்களுக்கே உரியதாயிருந்து உங்களுக்காக எதுவும் செய்யத் தயாராயுள்ள ஓர் இதயம் உங்களுடன் இணைந்து இயங்குகிறது என்பதைத் தவிர வேறு எதுவும் உங்களுக்குத் தெரியாத படி, நீங்கள் எதையும் உணர முடியாதபடி, அப்படி உங்களைக் காதலிப்பேன். நாஸ்தென்கா, நாஸ்தென்கா! நீங்கள் எனக்கு என்ன காரியம் செய்துவிட்டீர்கள்!..''

''நீங்கள் அழக் கூடாது, நீங்கள் அழுவதை நான் விரும்பவில்லை'' என்று கூறி நாஸ்தென்கா அவசரமாக பெஞ்சிலிருந்து எழுந்தாள். ''எழுந்திருங்கள், என்னுடன் வாருங்கள், அழாதீர்கள், நீங்கள் அழக் கூடாது'' என்று கைக்குட்டையை எடுத்து என் முகத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்தாள். ''எழுந்திருங்கள், வாங்கள் போகலாம், உங்களுக்கு நான் ஏதாவது சொன்னாலும் சொல்வேன், வாருங்கள்... அவர் என்னைக் கைவிட்டு விட்டார், அவர் என்னை மறந்துவிட்டார், இன்னமும் நான் அவரைக் காதலிக்கிறேன் என்றாலுங்கூட (உங்களை ஏமாற்ற விரும்பவில்லை நான்)... ஆனால் நீங்கள் இதைச் சொல்லுங்கள், இதற்குப் பதில் சொல்லுங்கள். எனக்கு உங்கள்மீது காதல் ஏற்படுவதாக வைத்துக் கொள்ளுங்கள், அப்படி நேரும் பட்சத்தில், அப்பொழுது மட்டும்தான்... அடாடா! என் நண்பனே, இன்னரும் நண்பனே! எனக்கு நினைவு வருகிறது— உங்களது உள்ளத்தை எப்படி நான் புண்படுத்திவிட்டேன்! உங்களுடைய

காதலை கிண்டல் செய்து சிரித்தேனே, என் மீது காதல் கொள்ளாததற்காக உங்களை மெச்சிப் புகழ்ந்தேனே—உங்கள் உள்ளம் அப்பொழுது எப்படிப் புண்பட்டிருக்கும்!.. வருவதை அறியாதவளாக எப்படி இருக்க முடிந்தது என்னால்? எவ்வளவு பெரிய முட்டாளாக இருந்திருக்கிறேன்!.. சரி, இப்பொழுது நான் ஒரு முடிவுக்கு வருகிறேன், யாவற்றையும் உங்களிடம் சொல்வதென்று முடிவு செய்கிறேன்...''

''இதைக் கேளுங்கள், நாஸ்தென்கா! நான் என்ன நினைக்கிறேன் தெரியுமா? உங்களை அமைதியாக விட்டுவிட்டு நான் இங்கிருந்து போய்விட வேண்டும். நீங்கள் என்னைப் பார்த்துச்சிரித்தீர்கள். இன்று உங்கள் நெஞ்சு உறுத்த ஆரம்பித்துவிட்டது; அதை நான் விரும்பவில்லை, இல்லை, விரும்பவில்லை, உங்களுக்கு இருக்கும் துன்பம் போதாதா? நான் தவறிழைத்துவிட்டேன், நாஸ்தென்கா, நான் போய் வருகிறேன்!''

''போகாதீர்கள், போகாதீர்கள்—நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள்! சற்று நேரம் காத்திருக்க முடியாதா உங்களால்?''

''காத்திருக்கவா—எதற்காக?''

''நான் அவரைக் காதலிக்கிறேன், ஆனால் அது போய்விடும், போயே ஆக வேண்டும், போகாமல் இருக்க முடியாது. அதோ போக ஆரம்பித்துவிட்டது, என்னால் உணர முடிகிறது... யாருக்குத் தெரியும், இன்று இரவே அது மறைந்தாலும் மறையலாம், ஏனெனில் நான் அவரை வெறுக்கிறேன், ஏனெனில் என்னை அவர் அவ்வளவு கேவலமாக நடத்திவிட்டார், ஆனால் நீங்கள் எனக்காக அழுதீர்கள், என்னை நீங்கள் காதலிக்கிறீர்கள், அவர் செய்தது போல நீங்கள் என்னை நடுத்தெருவில் விட்டு விலகிச் செல்லவில்லை, என்றுமே அவருக்கு என்மீது காதல் இல்லை—அது மட்டுமல்ல, நானும் உங்களைக் காதலிக்கிறேன்... ஆம், உண்மை அது! நீங்கள் என்னைக் காதலிக்கும் அதே அளவுக்கு நானும் உங்களைக் காதலிக்கிறேன்! முன்பே நான் இதைப் பற்றி உங்களிடம் சொன்னேன்; ஆம், உங்களுக்குத் தெரியும், நான் சொன்னேன்—நான் உங்களைக் காதலிக்கிறேன், ஏனெனில் அவரைக் காட்டிலும் நீங்கள் மிகவும் நல்லவர், கண்ணியமானவர், ஏனெனில், ஏனெனில்...''

பாவம் நாஸ்தென்கா, சமாளிக்க முடியாதபடி அப்படி

உணர்ச்சி வயப்பட்டுவிட்டாள், அவளால் பேச முடியவில்லை. தலையை என் தோள்மீது சாய்த்துக் கொண்டாள், பிறகு மேலும் சாய்த்து என் மார்புடன் அணைத்து வைத்துக் கொண்டு ஆற்றமாட்டாதவளாகத் தேம்பி அழுதாள். நான் ஆறுதல் சொல்லிப் பார்த்தேன், அவளை அமைதி பெறச் செய்ய முயன்றேன். ஆனால் அழுகையை அவளால் கட்டுப் படுத்த முடியவில்லை. என் கையைப் பிடித்து அழுத்திக் கொண்டு விம்மல்களுக்கிடையே மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருந்தாள்: ''ஒரேயொரு கணம், ஒரேயொரு கணம், சரியாகிவிடும்! இதை உங்களுக்குச் சொல்ல விரும்பு கிறேன்... இந்தக் கண்ணீரை நீங்கள் பொருட்படுத்தக் கூடாது—பலவீனம்தான் இப்படி நான் அழுகிறேன், ஒரே கணத்தில் யாவும் சரியாகிவிடும்...'' முடிவில் அவளுடைய விம்மல் நின்றது, கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள், நாங்கள் மேலும் நடக்கலானோம். நான் பேச வாய் எடுத் தேன், ஆனால் சற்று நேரம் காத்திருக்கும்படி அவள் என்னை வேண்டினாள். இருவரும் மௌனமாகி விட்டோம்... அதன் பின் அவள் ஒருவாறு அமைதியடைந்து மீண்டும் பேச ஆரம்பித்தாள்:

''நான் நிலையற்றவளாக, சபல புத்தி கொண்டவளாக இருப்பதாய் நினைக்கக் கூடாது நீங்கள்'' என்று மெலிந்து அதிர்ந்த குரலில் கூறினாள். ஆனால் திடுமென அவள் குரலில் ஒலித்த ஏதோ ஒன்று நேரே என் இதயத்தைத் துளைத்துச் சென்று அங்கே துள்ளிக் குதித்து இனிய வலியை உண் டாக்கிற்று. ''எளிதில், விரைவில் மறந்துவிடக் கூடியவள், அல்லது நம்பிக்கைத் துரோகம் புரியக்கூடியவள் என்பதாக நீங்கள் நினைக்கக் கூடாது... ஓராண்டு முழுவதும் நான் அவரைக் காதலித்து வந்தேன், கடவுள் சாட்சியாகச் சொல் கிறேன், என் சிந்தனையிலுங்கூட ஒருபோதும் அவருக்குத் தவறிழைத்ததில்லை. என்னுடைய இந்த விசுவாசத்தை அவர் அவமதித்துவிட்டார், என்னை ஏளனம் செய்துவிட் டார்—அவர் கிடக்கிறார் விடுங்கள்! என் மனதைப் புண் படுத்திவிட்டார், என் காதலைக் கேவலப்படுத்திவிட்டார். நான்... நான் அவரைக் காதலிக்கவில்லை, பெருந்தன்மையும் நல்லுணர்வும் கண்ணியமும் உடையவரைத்தான் என்னால் காதலிக்க முடியும், ஏனெனில் நான் இவை யாவும் உடை யவள். அவர் எனக்கு ஏற்றவர் அல்ல, என்னை அடை

வதற்குரிய தகுதியில்லாதவர்—கிடக்கிறார் விடுங்கள்! அவர் செய்ததும் நல்லதுதான், பிற்பாடு அவருடைய மெய்யுருவை நான் தெரிந்து கொண்டு ஏமாற நேர்வதைக் காட்டிலும் இது எவ்வளவோ நல்லதுதான்... இப்பொழுது அதெல்லாம் முடிந்து தீர்ந்து போன காரியம்! ஆனால் யார் அறிவார், என் அருமை நண்பரே'' என்று அவள் தன் விரல்களால் என் விரல்களை அணைத்துப் பற்றிக் கொண்டாள், ''யார் அறிவார், அவர்மீது எனக்கு இருந்த காதலே வெறும் போலிப் பிரமைதானே, என் கற்பனையின் விளையாட்டுத்தானோ என்னவோ? பாட்டியின் பார்வையிலிருந்து விலக முடியாதவாறு இருத்தி வைக்கப்பட்டிருந்ததை எதிர்த்து நான் புரிந்த கலகத்திலும் அசட்டுக் குறும்பிலும் பிறந்ததோ என்னமோ? என் காதலுக்கு உரியவர் அவரல்ல, நான் காதலிக்க வேண்டியவர் வேறொருவராக இருக்கலாம். ஆம், எனக்குரியவர் வேறு வகையானவர், என்மீது பரிதாபம் கொள்ளக் கூடியவர், என்பால்... சரி, போதும்! அது பற்றிப் பேச வேண்டாம் விடுங்கள்!'' என்று அவள் பரபரப்புற்று மூச்சுத் திணறியவாறு திடுமெனக் கூறினாள். ''நான் சொல்ல விரும்பியது இதுதான்... உங்களிடம் நான் சொல்ல விரும்பியது என்னவெனில், நான் அவரைக் காதலிக்கிறேன் என்ற போதிலும் (இல்லை, காதலித்தேன் என்ற போதிலும்), நீங்கள் திரும்பவும் கூறுவீர்களானால்... உங்களுடைய காதல் மெய்யாகவே அந்த இன்னொன்றை என் இதயத்திலிருந்து அகற்றிவிடும் அளவுக்கு அவ்வளவு சக்தி மிக்கதாய் இருக்குமென்று நீங்கள் நினைத்தீர்களானால்... நீங்கள் எனக்கு இரக்கம் காட்ட விரும்புவீர்களானால், என்னை ஆற்றாத் துயருற்றவளாய், நம்பிக்கை இழந்தவளாய், திக்கற்றவளாய்த் தன்னந் தனியே நடுத் தெருவில் விட்டுவிட விரும்ப மாட்டீர்களானால், இப்பொழுது நீங்கள் என்னைக் காதலிப்பது போலவே என்றென்றும் என்னைக் காதலிக்க விரும்புவீர்களானால், நான் சத்தியம் செய்து தருகிறேன்: என்னுடைய நன்றியுணர்வு... என்னுடைய காதல் உங்களுடைய காதலுக்கு ஒத்த சிறப்புடையதாக இருக்கும்... இப்பொழுது நீங்கள் என்னை ஏற்று என் கையைப் பிடித்துக் கொள்வீர்களா?''

''நாஸ்தென்கா!'' விம்மல்கள் என் தொண்டையை அடைக்க நான் கூறினேன். ''நாஸ்தென்கா! நாஸ்தென்கா!''

''போதும், போதும்! இவ்வளவு போதும்!'' பேச முடியாமல் பேசினுள் அவள். ''சொல்ல வேண்டியவை யாவற்றையும் சொல்லிவிட்டோம், இல்லையா? உங்களுக்கு இப்பொழுது ஆனந்தமாக இருக்கிறது, எனக்கும் அப்படித்தான் இருக்கிறது. இது குறித்து மேற்கொண்டு ஒரு வார்த்தை பேச வேண்டாம், இப்பொழுது வேண்டாம், எனக்குக் கருணை காட்டு!.. உங்களுக்குப் புண்ணியம் உண்டு, வேறு எதையாவது பற்றிப் பேசுங்கள்!..''

''ஆம், நாஸ்தென்கா! இது போதும், இப்பொழுது எனக்கு ஆனந்தமாகத்தான் இருக்கிறது. நான்... ஆம், வேறு எதையாவது பற்றிப் பேசுவோம். நாஸ்தென்கா, பேசுவதற்கு வேறு ஏதாவது ஒன்றைச் சீக்கிரமாகத் தேடிப் பிடித்துக் கொள்வோம், ஆம்! நான் தயார்...''

பேசுவதற்கு எங்களுக்கு வேறு ஒன்றும் கிடைக்கவில்லை, சிரித்துக் கொண்டோம், அழுது கண்ணீர் விட்டோம், அர்த்தமின்றி, தொடர்பின்றி ஏதேதோ பேசினேம். ஆற்றங்கரையில் மேலும் கீழுமாய் நடந்து சென்ருேம், அல்லது திடுமெனத் திரும்பி, வந்த வழியிலே நடந்தோம், எதிர்ப் பக்கத்துக்குப் போகலாமென்று சாலையின் குறுக்கே சென்ருேம், பிறகு வேண்டாமென்று திரும்பி, ஆற்றங்கரைக் கிராதிக்கு வந்தோம். குழந்தைகளாக நடந்து கொண்டோம்...

''இப்பொழுது நான் ஒண்டியாய் இருக்கிறேன், ஆனுல் நாளைக்கு...'' என்று ஆரம்பித்தேன். ''நான் ஏழைதான், உங்களுக்குத் தெரியும். நாஸ்தென்கா, எனக்குக் கிடைப்பதெல்லாம் ஆண்டுக்கு ஆயிரத்து இரு நூறுதான். ஆனுல் இது ஒரு பெரிய பிரச்சினை அல்ல...''

''ஆமாம், இது பெரிய பிரச்சினை அல்ல. அப்புறம் பாட்டிக்குப் பென்ஷன் கிடைக்கிறது, ஆகவே நமக்கு அது சுமையாய் இருக்காது. பாட்டியை நம்முடன் வைத்துக் கொள்வோம்.''

''நிச்சயமாகப் பாட்டியை நம்முடன்தான் வைத்துக் கொள்ள வேண்டும்... பிறகு மத்ரியோனு இருக்கிருள்...''

''ஆம், எங்கள் ஃபியோக்லா வேறு இருக்கிருள்!''

''மத்ரியோனு ரொம்ப நல்லவள், அவளுக்குள்ள ஒரேயொரு குறை என்னவென்றுல் கற்பனைத் திறன் இல்லாதவள், கடுகளவுகூட இல்லாதவள். அதனுல் என்ன, பரவாயில்லை,..''

''அதனுல் என்ன? இருவருமாய்ச் சேர்ந்து இருப்பார்கள். ஆனுல் நாளைக்கே நீங்கள் வீட்டை மாற்றிக் கொண்டு எங்கள் வீட்டுக்குக் குடி வந்துவிடுங்கள்.''

''என்ன? உங்களுடைய வீட்டுக்கா? நல்லது, அப்படியே வந்துவிடுகிறேன்...''

''ஆம், எங்கள் வீட்டில் நீங்கள் குடியிருக்கலாம். எங்கள் மச்சு அறை இப்பொழுது காலியாகத்தான் இருக்கிறது. பிரபுக் குலத்தைச் சேர்ந்த வயதான அம்மாள் அதில் இருந்து வந்தாள்; இப்பொழுது காலி செய்துவிட்டுப் போய்விட்டாள். இளைஞனைகப் பார்த்துக் குடி வைத்துக் கொள்ள வேண்டுமென்று பாட்டி நினைக்கிறது, எனக்குத் தெரியும். 'ஏன் இளைஞனாக இருக்க வேண்டும் என்கிருய்?' என்று நான் கேட்டேன். 'நான் தள்ளாத கிழவியாகி வருகிறேன், அதனுல்தான்; ஆனுல் நாஸ்தென்கா, உனக்கு மணம் முடிப்பதற்காக நான் மாப்பிள்ளை தேடுவதாக மனக்கோட்டை கட்ட ஆரம்பித்து விடாதே நீ!' என்ருள் பாட்டி. உடனே பாட்டியின் திட்டத்தை நான் புரிந்து கொண்டுவிட்டேன்...''

''ஹ—ஹா, நாஸ்தென்கா!''

இருவரும் சிரிக்கத் தொடங்கினேம்.

''சரி போதும்! நீங்கள் எங்கே குடியிருக்கிறீர்கள்? அதைக் கேட்க மறந்துவிட்டேனே.''

''அங்கேதான், பாலத்துக்கு அருகே, பரான்னிக்கவ் வீட்டில்.''

''அது ரொம்பப் பெரிய வீடாயிற்றே!''

''ஆம், பெரிய வீடுதான்''.

''எனக்குத் தெரியும், அது நல்ல வீடு. இருந்த போதிலும் அங்கிருந்து காலி செய்து கொண்டு, எங்கள் வீட்டுக்கு வந்துவிடுங்கள்.''

''பொழுது விடியட்டும், நாஸ்தென்கா, நாளைக்கே வந்து விடுகிறேன். கொஞ்சம் வாடகை பாக்கி இருக்கிறது, அதனுல் பரவாயில்லை... சம்பளத் தேதிதான் வந்துவிட்டதே...

''நான் பாடம் செல்லிக் கொடுத்துக் கொஞ்சம் சம்பாதிக்கலாமென்று பார்க்கிறேன், தெரியுமா? அதாவது மேலும் படித்து முடித்துவிட்டு, பிறகு பாடம் சொல்லிக் கொடுப்பேன்.''

''சபாஷ், அப்படித்தான் செய்ய வேண்டும்!.. எனக்கும் சீக்கிரத்தில் ஊழிய வெகுமதித் தொகை கிடைக்கப் போகிறது, நாஸ்தென்கா...''

''சரி, நாளைக்கே எங்கள் வீட்டுக்குக் குடி வந்துவிடுங்கள்...''

''வந்துவிடுகிறேன், பிறகு நாம் **செவில் நகர முடி ஒப்பனையாளன்** நாடகம் பார்க்கப் போவோம், விரைவில் இந்த நாடகம் திரும்பவும் தொடங்கப் போகிறது.''

''ஓ, போகலாமே'' என்று சிரித்துக் கொண்டாள் நாஸ்தென்கா. ''வேண்டாம், **முடி ஒப்பனையாளன்** வேண்டாம், வேறு எதற்காவது போவோம்...''

''அது சரிதான், வேறு எதற்காவது போகலாம்; அது தான் நல்லது, ஆலோசிக்காமல் அவசரப்பட்டுச் சொல்லி விட்டேன்...''

இப்படிப் பேசி, நாங்கள் இருவரும் போதை கொண்டவர்களைப் போல, மதி மயங்கிய நிலையில் சுற்றித் திரிந்தோம், என்ன செய்கிறோம் என்ற நினைவில்லாமலே அலைந்து கொண்டிருந்தோம். ஓரிடத்தில் வந்து நின்று நெடுநேரம் பேசுவோம், அல்லது திரும்பவும் நடக்க ஆரம்பித்து எங்கு செல்கிறோம் என்பது அறியாமலே போய்க் கொண்டிருப்போம், மீண்டும் சிரிப்போம், கண்ணீர் வடிப்போம்... அல்லது வீட்டுக்குப் போக வேண்டுமென நாஸ்தென்கா திடுமென திரும்புவாள், மேலும் அவளை இருக்கச் சொல்ல எனக்குத் துணிவு இருக்காது, நேரே அவள் வீட்டு வாயிற்படி வரை கொண்டு போய் விடுகிறேன் என்பேன்; இருவருமாக உடனே புறப்படுவோம், ஆனால் கால் மணிக்குப் பிற்பாடு மீண்டும் நாங்கள் ஆற்றங் கரைக்குத் திரும்பி வந்து எங்களுடைய பெஞ்சில் உட்கார்ந்து கொண்டுவிட்டதைக் கண்டு வியப்படைவோம். அல்லது திடுமென அவள் பெருமூச்செறிவாள், அவளுடைய கண்களில் கண்ணீர்த் துளிகள் பளிச்சிடும், எனக்கு உள்ளம் ஒடுங்கிவிடும், என் இரத்தமே உறைந்துவிட்டது போல் இருக்கும்... ஆனால் அடுத்த கணமே அவள் என் கையைப் பிடித்து இழுத்துத் தன்னுடன் அழைத்துச் செல்வாள், மீண்டும் ஏதேதோ பேசியவாறு நடக்க ஆரம்பித்துவிடுவோம்...

''நேரமாகிவிட்டது, நான் வீட்டுக்குப் போகவேண்டும், இரவு நெடுநேரமாகிவிட்டது'' என்று நாஸ்தென்கா முடி

வில் கூறினுள். ''நேரம் தெரியாமல் இப்படிச் சிறு பிள்ளைகளாகச் சுற்றியது போதும்!''

''ஆம், நாஸ்தென்கா, நேரமாகிவிட்டது, ஆனுல் இனி எனக்குத் தூக்கம் வராது, நான் என் அறைக்குப் போகப் போவதில்லை.''

''எனக்கும் தூக்கம் வருமென்று நினைக்கவில்லை, ஆயினும் என்னை வீட்டுக்கு அழைத்துச் செல்லுங்கள்...''

''இதோ அழைத்துச் செல்கிறேன்!''

''இம்முறை நாம் தவருமல் நேரே வீட்டுக்குச் சென்ருக வேண்டும்.''

''நிச்சயமாய்ப் போய்விடுவோம்.''

''உறுதியாகச் சொல்கிறீர்களா? ஏனெனில் எப்படியும் ஒரு நேரம் நான் வீட்டுக்குத் திரும்பியாக வேண்டும்!''

''வாக்கு அளிக்கிறேன்'' என்று சிரித்தவாறு பதிலளித்தேன்.

''சரி, வாருங்கள் போவோம்!''

''சரி.''

''வானத்தைப் பாருங்கள், நாஸ்தென்கா, அங்கே பாருங்கள்! நாளைக்குப் பொழுது அருமையாக இருக்கும்! சந்திரனைப் பாருங்கள், வானம் எவ்வளவு தூய நீலமாய் இருக்கிறது பாருங்கள்! மஞ்சள் மேகம் சந்திரன்மீது மெல்லத் தவழ்கிறது பாருங்கள், அதோ பாருங்கள்! இல்லை, நகர்ந்து சென்றுவிட்டது. இப்பொழுது பாருங்கள், அதோ பாருங்கள்!..''

ஆனுல் நாஸ்தென்கா மேகத்தைப் பார்க்கவில்லை, அப்படியே கல்லாய்ச் சமைந்து போய் வாய் பேசாமல் நின்ருள். பிறகு அச்சத்துடன் என்னுடன் அவள் ஒண்டிக் கொண்டதையும், நான் பிடித்திருந்த அவளுடைய கை நடுங்கியதையும் உணர்ந்தேன். நான் அவள் பக்கம் திரும்பி அவளைப் பார்த்தேன். என் கரத்தை மேலும் பலமாய் அழுத்திக் கொண்டு அவள் என்மீது சாய்ந்துவிட்டாள்.

இளைஞன் ஒருவன் எங்களைக் கடந்து சென்ருன். திடுமென நின்று எங்களை உற்றுப் பார்த்தான், பிறகு தொடர்ந்து நடந்தான். எனக்குப் 'பகீர்' என்றது...

''நாஸ்தென்கா'' என்றேன் மெல்லிய குரலில், ''அது யார், நாஸ்தென்கா?''

''அவர்தான்!'' என்று முணுமுணுக்கும் குரலில் கூறிய

வாறு அவள் முன்னிலும் நெருக்கமாய், முன்னிலும் நடுக்க முற்றவளாய் என்னுடன் ஒண்டிக் கொண்டாள். எனக்குக் கால்கள் நடுங்கின, நிற்க முடியாமல் தடுமாறினேன்.

''நாஸ்தென்கா! நாஸ்தென்கா! நீதானு?'' என்று எங்களுக்குப் பின்பக்கத்திலிருந்து ஒரு குரல் ஒலிக்கக் கேட்டோம், அதே கணத்தில் அந்த இளைஞன் இரண்டொரு தப்படிகள் எங்களை நோக்கி நடந்தான்.

அடகடவுளே! எப்படிக் கூச்சலிட்டுத் திடுக்கிட்டுவிட்டாள்! என் கரங்களிலிருந்து எப்படிப் பியத்துக் கொண்டு அவனிடம் பறந்தோடினுள்!.. அவர்கள் இருவரையும் பார்த்தவாறு உடல் முழுவதும் ஒடுங்கிப் போய் நான் நின்று கொண்டிருந்தேன். ஆனல் அவள் அவனுக்குக் கை கொடுத்து அவனுடைய அரவணைப்பினுள் பாய்ந்த அதே கணத்தில் திடுமெனத் திரும்பி என்னைப் பார்த்தாள்; உடனே மின்னல் வேகத்தில் காற்றென ஓடோடி மீண்டும் என்னை வந்தடைந்து, நான் என்ன நடைபெறுகிறது என்பதை உணருமுன் தன் கரங்களால் என் கழுத்தைக் கட்டிக் கொண்டு அடங்காத ஆர்வத்தோடும் ஆசையோடும் என்னை முத்தமிட்டாள். பிறகு ஒரு வார்த்தைகூடப் பேசாமல் திரும்பவும் அவனிடம் பாய்ந்தோடி அவன் கைகளைப் பற்றிக் கொண்டு அவனைத் தன்னுடன் அழைத்துச் சென்றுள்.

அவர்கள் செல்வதைப் பார்த்தவாறு நெடுநேரம் நான் நின்று கொண்டிருந்தேன்... முடிவில் அவர்கள் இருவரும் என் பார்வையிலிருந்து மறைந்தனர்.

காலை

எனது இரவுகள் மறுநாள் காலையுடன் முடிவுற்றன. பொழுது அழுது விடிந்தது. மழை பெய்தது, சன்னலில் சோகமாய்ச் சடசடத்தது. என்னுடைய சிறிய அறையினுள் இருட்டாக இருந்தது, வானம் கறுத்திருந்தது. எனக்குத் தலை வலித்துக் கிறுகிறுத்தது; என் உடல் காய்ச்சலினல் கொதித்தது.

''இதோ ஒரு கடிதம் வந்திருக்கிறது, தபால்காரன் கொண்டு வந்தான், தபாலில் வந்திருக்கிறது'' என்று, என் அருகே வந்து நின்று கொண்டு மத்ரியோனு கூறினுள்.

''கடிதமா? யாரிடமிருந்து?'' என்று நான் நாற்காலியிலிருந்து துள்ளியெழுந்தேன்.

''எனக்குத் தெரியாது; வாங்கிப் பார், யார் எழுதியது என்று அதில் இருந்தாலும் இருக்கும்.''

முத்திரையைப் பிரித்தேன். அவள்தான் எழுதியிருந்தாள்!

''என்னை மன்னிக்க வேண்டும், நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும்'' என்று நாஸ்தென்கா எழுதிஞள். ''மண்டியிட்டுக் கேட்டுக்கொள்கிறேன், நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும்! என்னையும் ஏமாற்றிக் கொண்டேன், உங்களையும் ஏமாற்றிவிட்டேன். அது ஒரு கனவு, பொய்த் தோற்றம். உங்களை நினைத்து உள்ளம் பதறுகிறேன்; மன்னித்து விடுங்கள், மன்னித்துவிடுங்கள் என்னை!..

''என்மீது கோபப்படாதீர்கள், உங்கள்பால் என் உணர்ச்சிகள் எவ்விதத்திலும் மாறிவிடவில்லை; உங்களைக் காதலிப்பேன் என்று சொன்னேன், உங்களைக் காதலிக்கவே செய்கிறேன், காதலிலும் உயர்வான பாசம் கொண்டுள்ளேன்! தெய்வமே! உங்கள் இருவரையும் ஒருங்கே காதலிக்க முடிந்தால் எப்படி இன்புறுவேன்! நீங்கள் அவராக இருக்கக் கூடாதா!''

''அவர் நீங்களாய் இருக்கக் கூடாதா!''—அந்த நினைவு என் மனதில் பளிச்சிட்டுச் சென்றது. நாஸ்தென்கா, முன்பு நீ கூறிய அச்சொற்களை நினைத்துக் கொண்டேன்!

''உங்களுக்கா இப்பொழுது நான் எதுவேண்டுமாஞலும் செய்வேன், உண்மை இது, தெய்வம் அறியும்! நீங்கள் வருந்துகிறீர்கள், வேதனைப் படுகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். நான் உங்களுக்குத் தவறிழைத்துவிட்டேன், ஆஞல் காதலிப்பவர் தவறை எளிதில் மறந்து மன்னித்துவிடுவார் என்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் என்னைக் காதலிப்பவர்!

''உங்களுக்கு எனது உளம் கனிந்த நன்றி! உங்களுடைய காதலுக்காக எனது நன்றி. ஏனெனில் விழித்தெழுந்த பிறகும் நெடு நேரம் நினைவில் நிலைத்திருக்கும் இனிய கனவு போல உங்களது காதல் என் உள்ளத்தில் ஆழப் பதிந்திருக்கிறது; ஏனெனில் அப்படிக் கபடமின்றிச் சோதரனைப் போல உங்களது உள்ளத்தில் உள்ளதை மறைக்காமல் எனக்குத் தெரிவித்தீர்கள், அப்படித் தயாள சிந்தையோடு எனது உடைந்த உள்ளத்தை வெகுமதியாக ஏற்று அதைப் பேணிக் காக்கவும் அன்பு செலுத்தி அதை மீண்டும் நலம் பெறச்

செய்யவும் முன்வந்தீர்கள். நீங்கள் என்னை மன்னிப்பீர்களானல் உங்களைப் பற்றிய என் நினைவு மேலும் உன்னதமாகிவிடும், என்றென்றும் உங்களுக்கு நான் செலுத்தும் நன்றியால், எந்நாளும் என் இதயத்தை விட்டு நீங்காது நிலைத்திருக்கும் நன்றியுணர்வால் மேலும் புனிதமடைந்துவிடும். இந்த நினைவை நான் கண்ணின் கருமணியெனப் பாதுகாப்பேன், அதற்கு விசுவாசம் செலுத்துவேன், அதற்குக் களங்கம் உண்டாக்க மாட்டேன், என் இதயத்துக்கு முரணுக எதுவும் செய்ய மாட்டேன், என் இதயம் நிலை மாருதது. நேற்று இரவு எவ்வளவு வேகமாக ஓடி அது தனக்குரியவரைச் சென்றடைந்தது!

''நாம் சந்திப்போம், நீங்கள் எங்களிடம் வந்து செல்வீர்கள், எங்களை நீங்கள் கைவிட்டுவிட மாட்டீர்கள், என் நண்பனுக, என் சோதரனுக எந்நாளும் இருப்பீர்கள்... என்னைப் பார்க்கும்பொழுது எனக்கு உங்களது கையைத் தருவீர்கள், இல்லையா? நிச்சயம் தருவீர்கள் உங்களது கையை, என்னை நீங்கள் மன்னித்துவிட்டீர்கள், இல்லையா? முன்பு போலவே என்னைக் காதலிக்கிறீர்கள், இல்லையா?

''ஆம், என்னை நீங்கள் காதலிக்க வேண்டும், என்னை நீங்கள் கை விட்டுவிடக் கூடாது, ஏனெனில் இத்தருணத்தில் உங்களை நான் அப்படி நேசிக்கிறேன், உங்களது காதலுக்கு ஏற்றவள் நான், என்றும் ஏற்றவளாயிருக்கவே விரும்புகிறேன்... அருமையிலும் அருமையான என் நண்பரே! அடுத்த வாரம் நான் அவரை மணம் புரிந்து கொள்ளப் போகிறேன். அவர் திரும்பி வந்துவிட்டார், என்மீது காதல் கொண்டவராகவே இருக்கிறர், என்னை அவர் மறக்கவே இல்லை... அவரைப் பற்றி எழுதுவதற்காக நீங்கள் கோபம் கொள்ள மாட்டீர்கள். அவரையும் அழைத்துக் கொண்டு உங்களிடம் வர விரும்புகிறேன்; உங்களுடைய நட்பு அவருக்குக் கிடைக்கும், இல்லையா?

''நீங்கள் மன்னிக்க வேண்டும், மறவாதிருக்க வேண்டும், காதலிக்க வேண்டும், உங்களுடைய

நாஸ்தென்காவை.''

இந்தக் கடிதத்தைத் திரும்பத் திரும்பப் படித்தேன், என் கண்களில் கண்ணீர் ததும்பிற்று. கடிதம் என் விரல்

களிலிருந்து நழுவி விழுந்தது, முகத்தை என் கைகளில் புதைத்துக் கொண்டேன்.

''கண்ணு, இதைப் பார்! கண்ணு!'' என்றாள் மத்ரியோனா.

''என்ன அது?''

''இதோ பார், ஒட்டடை எல்லாம் அடித்துச் சுத்தம் செய்துவிட்டேன். திருமண விருந்தோ, வரவேற்போ அளிக்க விரும்புவாயானால் யாவும் தக்கபடி இருக்கின்றன, அப்பழுக்கின்றி அப்படிச் சுத்தம் செய்து வைத்திருக்கிறேன்...''

நான் மத்ரியோனாவை உற்றுப் பார்த்தேன்... இன்னமும் அவள் திடகாத்திரமான **இளங்** கிழவியாகவே இருந்தாள். ஆனால் ஏனோ தெரியவில்லை, திடுமென அவள் தொண்டு கிழமாகக் கூனிப்போய், கண்கள் ஒளியிழந்து, முகத்தில் சுருக்கங்கள் விழுந்து என் எதிரே நிற்பதாக எனக்குத் தோன்றிற்று... ஏனோ தெரியவில்லை, திடுமென என்னுடைய அறையுங்கூட மத்ரியோனாவைப் போலவே கிழடாகிவிட்டதாகத் தோன்றியது. தரையும் சுவர்களும் சாயம் போய்ச் சோபையற்றதாகிவிட்டதாகவும், யாவும் மங்கிப் போய் விட்டதாகவும், ஒட்டடை என்றையும்விட அடையாய்த் தொங்கியதாகவும் நினைத்தேன். ஏனோ தெரியவில்லை, சன்னல் வழியே வெளியே பார்த்தபோது எதிர்வீடும் மிகப் பழையதாகி விட்டதாகவும், தூண்களிலிருந்து காரை சில்லுச் சில்லாய்ப் பெயர்ந்து விழுந்துவிட்டதாகவும், சுவர் பிதுக்கங்கள் கருகிப்போய் வெடித்துவிட்டதாகவும், பளபளப்பான மஞ்சள் சுவர்கள் அழுக்கேறித் திட்டுத் திட்டாகக் கறை படிந்து விட்டதாகவும் நினைத்தேன்...

திடீரென மேகத் திரளுக்கிடையிலிருந்து பளிச்சிட்டு வீசிய கதிரவனது ஒளிக் கற்றை மீண்டும் கரு மேகத்தின் பின்னே மறைந்து கொண்டுவிட்டதால் யாவும் என் கண்ணெதிரே திரும்பவும் மங்கி இருளடைந்துவிட்டது போலத் தோன்றியிருக்கலாம், அல்லது எனது வருங்கால வாழ்க்கை முழுதும் அப்படி வெறிச்சோடிப் போய், சோகமாய் என் எதிரே கண்ணுக் கெட்டிய தொலைவுக்கு விரிந்து சென்றதாலும் இப்படித் தோன்றியிருக்கலாம்; தற்போது நான் இருக்கும் அதே நிலையில், சரியாகப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு வயதான கிழவனாக, பழைய அதே அறையில் எப்பொழுதும் போலத் தன்னந்தனியனாக, ஓடிமறைந்த ஆண்டுகளின் விளைவாக எவ்வகையிலும் கெட்டிக்காரியாகி

விடாத வயதான அதே மத்ரியோனுவுடன் இருப்பதைக் கண்ணுற்றதாலும் இப்படித் தோன்றியிருக்கலாம்.

ஆனல், நாஸ்தென்கா, எனது புண்களை நான் கிண்டி விட்டுக் கொண்டு துயரப்படலாமா—கூடாது! தூய்மையான, ஆனந்தமான உன்னுடைய இன்பத்தை நான் துயரத்தின் மேகத்தைக் கொண்டு களங்கப்படுத்த மாட்டேன்; மனங்கசந்து குறை கூறி உன் இதயத்தில் சோகத்தைத் தலைகாட்டச் செய்ய மாட்டேன்; மனச்சாட்சியின் இரகசிய உறுத்தலால் உன் இதயத்தைத் துன்புறச் செய்ய மாட்டேன்; பொங்கும் இன்பத்திலே திளைத்திடும் உன் இதயத்தை வேதனையால் வதங்கச் செய்ய மாட்டேன்; அவனுடன் சேர்ந்து நீ மண மேடைக்குச் சென்றபோது உனது கருங்குழலில் நீ சூடியிருந்த அந்த இன்னரும் மலர்களில் ஒன்றையேனும் கசக்கி விழச் செய்ய மாட்டேன்—மாட்டவே மாட்டேன்! உன் வானம் என்றும் நிர்மலமாய் ஒளிர்வதாக, உனது இனிய புன்னகை துன்பத்தால் தீண்டப்பெருது என்றும் ஒளி வீசுவதாக; தனிமையான, நன்றி நிறைந்த ஓர் இதயத்துக்குக் கணப் பொழுதுக்கு ஆனந்தமும் இன்பமும் அளித்தாய் அல்லவா, அதற்காக என்றென்றும் இறைவன் உனக்கு அருள் புரிவாராக!

என் தெய்வமே! முழுதாய் ஒரு கணப் பொழுதுக்கல்லவா ஆனந்த இன்பம் கிட்டிற்று! அது போதாதா, ஓர் ஆயுட்காலம் முழுமைக்கும் அது போதாதா?..

பலவீனமான இதயம்

சிறுகதை

மொழிபெயர்ப்பாளர்: இரா. பாஸ்கரன்

ஒரே வீட்டில், ஒரே கூரையின் கீழ், ஒரே நான்காவது மாடியில் அர்க்காதி இவானவிச் நிபெதேவிச், வாஸ்யா ஷூம்கோவ் எனும் இரண்டு இளம் வாலிபர்கள் வசித்து வந்தனர். இவர்கள் ஒரே இடத்தில் வேலை செய்பவர்கள்... இவ்வாறு ஒரு கதாநாயகனின் பெயரை முழுமையாகவும் மற்றவரை பாதிப் பெயரிட்டும் அழைப்பதன் காரணத்தை வாசகர்களுக்கு விளக்குவது அவசியமென நான் எண்ணு கிறேன். ஏனெனில் இப்படிக் கூறியதை தகாததென்றும் மரி யர்தைக் குறைவானதென்றும் நினைத்து விடக்கூடாது. ஆனுல் இதற்கு நம் பாத்திரங்களின் பதவி, வயது, பட்டம், அந் தஸ்து, ஏன் அவர்களின் குணநலன்கள் ஆகியவற்றை முதலில் விளக்க வேண்டும்; இப்படி ஆரம்பிக்கும் எழுத்தாளர்கள் பலர் உள்ளதால் இவர்களைப் போல் செய்யக் கூடாது என் பதற்காக கட்டுமே (அதாவது தம்முடைய மட்டற்ற சுயமரி யாதையால் ஒரு சிலர் கூறக் கூடுமே அதைப் போல்) நான் நேரடியாக கதையை ஆரம்பிக்க முடிவு செய்துள்ளேன். இத்தகைய ஒரு முன்னுரைக்குப் பின் கதைக்கு வருவோம்.

புத்தாண்டு பிறக்கும் தறுவாயில் மாலை ஆறு மணி வாக் கில் ஷூம்கோவ் வீடு திரும்பினுன். கட்டிலில் படுத்திருந்த அர்க்காதி இவானவிச் விழித்து அரைக் கண்ணுல் தன் நண் பனைப் பார்த்தான். வாஸ்யா தன்னுடைய மிகச் சிறந்த பண்டிகைக் கால கோட்டையும் தூய்மையான சட்டையை யும் அணிந்திருப்பதை அவன் கண்டான். நிச்சயமாக, இது அவனை வியப்பில் ஆழ்த்தியது. ''வாஸ்யா இந்தக் கோலத்

தில் எங்கே போயிருக்க முடியும்? அதுவும் அவன் வீட்டில் மதிய உணவு அருந்தவுமில்லே!'' இதனிடையே ஷூம்கோவ் மெழுகுவர்த்தியை ஏற்றினன். நண்பன் தன்னை எதிர்பாரா விதமாக எழுப்பத் தயாராவது உடனே அவனுக்குப் புரிந்தது. வாஸ்யா இரண்டு முறை இருமினன், இரண்டு தடவை அறையில் குறுக்கும் நெறுக்குமாக நடந்தான், இறு தியாக முற்றிலும் தற்செயலாக கணப்பு அடுப்பருகே மூலே யில் அடிக்க வேண்டிய குழாயை கையிலிருந்து நழுவ விட்டான். அர்க்காதி இவானவிச்சுக்கு சிரிப்பை அடக்க முடிய வில்லை.

''வாஸ்யா, தந்திரங்கள் போதுமப்பா!'' என்ருன் அவன்.

''அர்க்காஷா*, நீ தூங்கவில்லேயா?''

''அனேகமா என்ருல் சரியாக சொல்ல முடியாது; தூங்க வில்லே என்று நினைக்கிறேன்.''

''ஓ, அர்க்காஷா! சௌக்கியமா! நான் இப்போது உனக்கு என்ன சொல்லப் போகிறேன் தெரியுமா!..''

''நிச்சயமாகத் தெரியாது; இங்கே அருகில் வா.''

இதற்காகவே காத்திருந்ததைப் போல் வாஸ்யா உடனே அருகில் சென்ருன். ஆனல் அவன் அர்க்காதி இவானவிச்சின் சீற்றத்தை எதிர்பார்க்கவில்லே. அவன் வாஸ்யாவின் கைகளே லாவகமாகப் பற்றி திருப்பி, முறுக்கி, பலியாட்டை ''அமுக்கு வது'' போல் அமுக்கினன். இது மகிழ்ச்சி பொங்கும் அர்க்காதி இவானவிச்சுக்கு எல்லேயற்ற திருப்தியை அளித்தது போல தோன்றியது.

''மாட்டிக்கிட்டியா, மாட்டிக்கிட்டியா!'' என்று உரத்த குரலில் கூறினன் அவன்.

''அர்க்காஷா, நீ என்ன செய்கிருய்? உனக்கு புண்ணிய மாகட்டும் விடு, கோட்டு அழுக்காகுது!..''

''அவசியமில்லே; கோட்டு உனக்கு எதற்கு? என் கையில் மாட்டிக்கிற மாதிரி நீ ஏன் அனேத்தையும் எளிதில் நம்பு கிருய்? எங்கே போயிருந்தாய், எங்கே சாப்பிட்டாய் சொல்.''

''அர்க்காஷா, உனக்கு புண்ணியமா போகட்டும் விடு.''

''எங்கே சாப்பிட்டாய்?''

''அதைப் பத்திதான் நான் சொல்ல வந்தேன்.''

''அப்ப சொல்லு.''

---

* அர்க்காதி என்னும் பெயரின் சுருக்கம்.—ப-ர்.

''நீ முதலில் கையை விடு.''

''நீ சொல்லும் வரை நான் விடப் போவதில்லை.''

''அர்க்காஷா, அர்க்காஷா! உனக்குப் புரியவில்லையா என்ன, முடியாது, முடியவே முடியாது, சில விஷயங்கள் உள்ளன!..'' என்று தன் நண்பனின் பலத்த பிடியிலிருந்து விடுபட்டுக் கொண்டே பலவீனமான வாஸ்யா கத்தினன்.

''என்ன விஷயங்கள்?..''

''இப்படிப்பட்ட நிலையில் சொன்னல் கௌரவமே போய் விடும், அந்த மாதிரியான விஷயங்கள்; முடியவே முடியாது; சிரிப்புக்கு இடமாயிடும்—ஆனல் விஷயமோ சிரிப்பானதில்லை, முக்கியமானது.''

''அந்த முக்கியத்தைத் தூக்கிப்போடு, அது என்ன கற்பனையோ! எனக்கு சிரிப்பு வரும் மாதிரி நீ சொல்லு; முக்கியமானவை எனக்கு வேண்டாம், அப்போது நீ என்ன நண்பன்? சொல்லுப்பா நீ எப்படிப்பட்ட நண்பனுக இருக்கப் போகிருய் சொல்லு.''

''அர்க்காஷா, புண்ணியமா போகட்டும், கூடாதுப்பா!''

''எனக்கு கேட்கவே இஷ்டமில்ல...''

''சரி, அர்க்காஷா!'' என்று கட்டிலின் குறுக்காகப் படுத்துக் கொண்டு, தன் சொற்களுக்கு இயன்ற அளவு முக்கியத்துவத்தை அளிக்க சகல விதங்களிலும் முயன்றபடியே வாஸ்யா துவங்கினன். ''அர்க்காஷா, நான் அப்ப சொல்கிறேன்; ஆனு...''

''என்ன சொல்லு!..''

''எனக்குக் கல்யாணம் நிச்சயமாகியுள்ளது!''

அர்க்காதி இவானவிச் வேறொன்றும் பேசாது மௌனமாக, வாஸ்யா ஒல்லியாக இருந்தாலும் உயரமானவன் என்பதைப் பொருட்படுத்தாது கரங்களில் அவனை ஏந்தி லாவகமாக அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து தாலாட்டுவது போல் பாவனை செய்தான்.

''மணமகனே, உனக்கு நான் துணி மாற்றுகிறேன்'' என்றன் அவன். ஆனல் வாஸ்யா அசைவின்றி, வாய் திறக்காமல் தன் கரங்களில் இருப்பதைக் கண்ட அவன் தன் நகைச்சுவை நீண்ட தூரம் சென்று விட்டதை உணர்ந்தான்; அவன் வாஸ்யாவை அறையின் நடுவில் இறக்கிவிட்டு, மனப்பூர்வமாக, நட்புணர்வோடு வாஸ்யாவின் கன்னத்தை தடவிக் கொடுத்தான்.

''வாஸ்யா, கோபமா?..''

''அர்க்காஷா, கேளு...''

''சரி, அப்ப புத்தாண்டையொட்டி மன்னிக்கின்றேன்.''

''எனக்கு ஒன்றுமில்லே; ஏன் நீ பைத்தியக்காரனைப் போல் நடந்து கொள்கிறாய்? அர்க்காஷா, கடவுள் புண்ணியத்தில் இது ஒன்றும் அதிசயமானது அல்ல!''

''அப்ப உனக்கு கோபமில்லேயே?''

''எனக்கு ஒன்றுமில்லே; யார் மேல் நான் கோபப்படுவேன்! நீ என்னே கஷ்டப்படச் செய்தாய், புரியுதா உனக்கு!''

''நான் எப்படி கஷ்டப்படுத்தினேன்?''

''நண்பன் என்ற முறையில் முழு இதயத்துடன் மனதை திறந்து காட்ட, என்னுடைய சந்தோஷத்தை சொல்ல உன்னிடம் வந்தேன்...''

''என்ன சந்தோஷம்? நீ ஏன் சொல்ல மாட்டேங்கறே?..''

''நான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்!'' என்று வாஸ்யா எரிச்சலோடு பதிலாளித்தான், ஏனெனில் உண்மையிலேயே அவனுக்கு சிறிது கோபம் வந்தது.

''நீயா, நீ கல்யாணம் பன்னிக்கப் போறீயா!'' உண்மையாகவா!'' என்று உச்சக் குரலில் கத்தினன் அர்க்காஷா. ''இல்லே, இல்லே... இது என்ன? அப்படிச் சொல்லிய அவன் கண்களிலிருந்து கண்ணீர் சிந்தியது... வாஸ்யா, வாஸ்யா, என்னுடை பையனே, போதும்பா! உண்மையாகவா என்ன?'' மீண்டும் அர்க்காதி இவானவிச் அவனேக் கட்டித் தழுவப் பாய்ந்தான்.

''இப்போது என்ன ஆச்சுன்னு உனக்கு புரியுதா?'' என்ருன் வாஸ்யா. ''நீ நல்லவன், நண்பன் என்று எனக்கு தெரியும். நான் அவ்வளவு மகிழ்ச்சியோடு, மன உற்சாகத்தோடு உன்னிடம் வருகிறேன், திடீர் என்று இதய சந்தோஷம் முழுவதையும் இந்த உற்சாகம் முழுவதையும் கட்டிலுக்கு குறுக்கே தத்தளித்து கொண்டு, கௌரவத்தை இழந்து வெளிப்படுத்த வேண்டி நேரிடுகிறது... அது வேடிக்கையாக இருந்தது, உனக்குப் புரியுதா, அர்க்காஷா'' என்று அரைச் சிரிப்போடு தொடர்ந்தான் வாஸ்யா. ''அப்போது நான் ஒரு விதத்திலே நாளுகவே இருக்கவில்லே. அந்த விஷயத்தை என்னுல் இழிவு படுத்த முடியாது... பெயர் என்ன என்று மட்டுமே நீ கேட்டிருந்தால், சத்தியமாக நீ என்னே கொன்னுப் போட்டால் கூட சொல்லியிருக்க மாட்டேன்.''

''ஆமாம், வாஸ்யா, நீ ஏன் மௌனமாக இருந்தே! நீ எல்லாவற்றையும் முன்பே சொல்லிருந்தால் நான் குறும்பு பண்ணியிருக்க மாட்டேன்'' என்று அர்க்காதி இவானவிச் உண்மையான வருத்தத்தோடு சொன்ஞன்.

''சரி, போதும், போதும்! நான் ஒரு இதுக்கு சொன்னேன்... இதெல்லாம் எதஞலேன்னுதான் உனக்குத் தெரியுமே—எல்லாம் என்னுடைய அன்பான மனசாலேதான். நான் இஷ்டப்பட்டபடி உன்னிடம் சொல்லி, மகிழ்ச்சி உண்டாக்க, சந்தோஷம் கொண்டு வர, நல்லா சொல்லி நல்ல படியா அர்ப்பணிக்க முடியவில்லேயே என்று எனக்கு வருத்தம்தான்... உண்மையில், அர்க்காஷா, உன்னே நான் மிகவும் விரும்புகிறேன், நீ மட்டும் இல்லாவிடில் நான் கல்யாணமே செய்து கொள்ள மாட்டேன், ஏன் பூமியில் உயிர் வாழ்ந்திருக்கவே மாட்டேன் என்று தோன்றுகிறது!''

அசாதாரண நுண்ணுணர்வுள்ள அர்க்காதி இவானவிச், வாஸ்யா சொல்வதைக் கேட்டு சிரிக்கவும் செய்தான், அழவும் செய்தான். வாஸ்யாவும் அப்படியே செய்தான். இருவரும் மீண்டும் கட்டித் தழுவிக் கொண்டு பழையதை மறந்தனர்.

''அது எப்படி என்று எனக்கு சொல்லேன், வாஸ்யா! தம்பி, நீ என்னே மன்னிச்சிடு, எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது, முழுக்க ஆச்சரியமாக உள்ளது; அட ஆண்டவனே! இடிமாதிரியான செய்தியாக இருக்கிறது; இல்லேயப்பா, இல்லே, இல்லே, நீ கற்பனே செய்திருக்கிருய், கனவு கண்டிருக்கின்ருய், நீ பொய் சொல்கிருய்!'' என்று உரக்கக் கூறிய அர்க்காதி இவானவிச், உண்மையான சந்தேகத்தோடு வாஸ்யாவின் முகத்தைப் பார்த்தான். கூடிய விரைவில் திருமணம் செய்து கொள்ளும் உறுதியான முடிவின் மிகச் சிறப்பான ஆமோதிப்பை வாஸ்யாவின் முகத்தில் கண்ட அவன் படுக்கையில் விழுந்து, குதூகலத்தில் குட்டிகரணம் போட ஆரம்பித்தான். இதஞல் சுவர்களெல்லாம் ஆட ஆரம்பித்தன.

இறுதியாக கட்டிலில் அமர்ந்த அவன், ''வாஸ்யா, இங்கே உட்கார்'' என்ருன்.

''தம்பி, எனக்கு உண்மையில் எதிலிருந்து துவங்குவது என்று தெரியவில்லே!''

இருவரும் மகிழ்ச்சி பொங்க ஒருவரையொருவர் பார்த்தனர்.

''யார் அவள், வாஸ்யா?''

''அர்தேமியெவ்கள்...'' என்று மகிழ்ச்சியால் தளர்ந்த குரலில் சொன்ஞன் வாஸ்யா.

''அப்படியா?''

''நான் அவர்களைப் பற்றி உன் காதில் போட்டிருக்கிறேன், பின் மௌனமானேன், நீதான் ஒன்றையுமே கவனிக்கவில்லை. ஓ, அர்க்காஷா, உன்னிடமிருந்து மறைக்க நான் என்ன பாடுபட்டேன் தெரியுமா, எனக்கு சொல்ல பயமாக இருந்தது. எல்லாம் பாழாயிடும் என்று நினைத்தேன். நான் காதலிக்கிறேன், அர்க்காஷா! ஓ, கடவுளே! கடவுளே! விஷயம் என்ன என்று கேட்டால்,''—என்று அவன் உணர்ச்சித் ததும்பலால் இடையருது நிறுத்தி நிறுத்தி தொடர்ந்தான்—''ஒரு வருடத்திற்கு முன் அவளை ஒருவன் கல்யாணம் செய்து கொள்ள இருந்தான், திடீர் என்று வேலை விஷயமாக அவன் வேறு இடத்திற்குச் சென்ருன்; எனக்கு அவனை தெரியும், அவன் ஒரு மாதிரியானவன், சரி, அவன் கிடக்கட்டும் விடு! அவன் கடிதமே எழுதவில்லை, தொலைந்து போஞன். காத்திருக்காங்க, காத்திருக்காங்க, என்ன ஆவது?.. திடீர் என்று அவன் நான்கு மாதத்திற்கு முன் கல்யாணம் பன்னிக் கொண்டு வந்து நிற்கிருன், இவர்களை வந்து எட்டிக் கூட பார்க்கவில்லை. அயோக்கியத்தனம்! அகம்பாவம்! இவர்களுக்கு ஆறுதல் சொல்ல யாருமில்லை. பாவம் அந்தப் பெண் ரொம்ப அழுதாள், எனக்கு அவள் மேல் காதல் வந்தது... நான் ரொம்ப நாளாகவே, ஏன் எப்பவுமே அவளை விரும்பினேன்! சரின்னு ஆறுதல் சொன்னே, அடிக்கடி போக ஆரம்பித்தேன்... உண்மையாகச் சொன்ஞல் எப்படி இந்த மாதிரி யெல்லாம் ஆச்சுன்னு எனக்குத் தெரியாது, ஆஞல் அவளும் என்னை காதலித்தாள், ஒரு வாரத்துக்கு முன் என்ஞல் தாங்க முடியவில்லை, நான் கேவி அழுதபடியே அவளிடம் எல்லாவற்றையும் சொன்னேன்—அவளை காதலிப்பதாகச் சொன்னேன்—சுருங்கச் சொன்ஞல், எல்லாவற்றையும் சொன்னேன்!.. 'வசீலி பெத்ரோவிச், நானே உங்களை விரும்பத் தயார், ஆஞல் நான் ஒரு ஏழைப் பெண். என்னை கிண்டல் செய்யாதீர்கள்; எனக்கு யாரையும் காதலிக்க தைரியம் வராது.' என்னப்பா, நான்

சொல்வது உனக்கு புரியுதா?.. நாங்கள் உடனே வார்த்தைகளாலேயே கல்யாணம் பன்னிக் கொள்வதாக நிச்சயம் செய்து கொண்டோம்; நான் யோசித்து யோசித்து பார்த்து, சொன்னேன்: அம்மாவிடம் எப்படிச் சொல்வது? அவள் சொன்னுள்: கஷ்டம்தான், சிறிது பொறுத்து கொள்ளுங்கள்; அவள் பயப்படுகிருள்; இப்போது இன்னும் என்னே உங்களிடம் கொடுக்க மாட்டாள் அவள் அழுது கொண்டு இருக்கிருள். நான் அவளிடம் முன்கூட்டியே சொல்லாமலேயே கிழவியிடம் இன்னேக்கு விஷயத்த போட்டு உடைத்தேன். லீஸன்கா அம்மா முன் மண்டியிட்டாள், நானும் அப்படியே செய்தேன்... ஆசிர்வாதம் பன்னிஞள். அர்க்காஷா, என்னருமை நண்பனே, ஒன்ருகச் சேர்ந்து வாழ்வோம். இல்லே! நான் எது வந்தாலும் உன்னே விட்டு பிரிய மாட்டேன்.''

''வாஸ்யா, நான் உன்னே எப்படி பார்த்தாலும் நம்ப முடியவில்லே, கடவுளே நம்ப முடியவில்லே, சத்தியமாகச் சொல்கிறேன்.. உண்மையிலேயே எனக்கு ஏதோ தோன்று கிறது... ஆமாம், நீ எப்படி கல்யாணம் பன்னிக்கப் போகிருய்?.. எனக்கு எப்படி தெரியாமல் போனது? உண்மையிலேயே, வாஸ்யா, எனக்கே கல்யானம் செஞ்சுக்க தோணிச்சு; ஆனுல் இப்போது நீ தான் கல்யாணம் செய்து கொள்கிருயே எல்லாம் ஒன்றுதான்! அப்ப நீ சந்தோஷமாக, மகிழ்ச்சியாக இரு!..''

''இப்போது நெஞ்சில் அவ்வளவு இனிமையாக, மனசில் அவ்வளவு நிம்மதியாக இருக்குதப்பா...'' என்று உணர்ச்சி ததும்ப எழுந்து அறையில் நடந்து கொண்டே வாஸ்யா கூறினுன். ''உண்மை, இல்லேயா? நீயும் இதே மாதிரி தான் உணருகிருய், இல்லேயா? நாம் ஏழ்மையில் வாழ்ந்தாலும் சந்தோஷமாக இருப்போம்; இது ஒன்றும் கற்பனே யில்லேயே; நமது மகிழ்ச்சி ஒன்றும் புத்தகத்திலிருந்து வருவதில்லே: நாம் உண்மைலேயே சந்தோஷமாக இருப்போம்!..''

''வாஸ்யா, வாஸ்யா, கேளு!''

''என்ன?'' என்று அர்க்காதி இவானவிச்சின் முன் நின்ற வாஸ்யா கேட்டான்.

''எனக்கு ஒன்று தோனியது; உண்மையிலேயே உனக்கு அதைச் சொல்ல எனக்கு பயமாக இருக்கிறது!.. நீ என்னே

மன்னித்து விடு, என்னுடைய சந்தேகங்களுக்கு பதில் சொல்லு. நீ எப்படி வாழப் போகிருய்? நீ கல்யாணம் செய்து கொள்வதில் எனக்கு மிக சந்தோஷம்தான், இந்த சந்தோஷத்தை கட்டுப்படுத்தக் கூட முடியவில்லை, ஆனுல் நீ எப்படி வாழப் போகிருய்?''

''ஓ, கடவுளே, கடவுளே! நீ எப்படிப்பட்ட ஆள், அர்க்காஷா!'' என்று நிபெதேவிச்சை மிக வியப்போடு பார்த்துக் கொண்டே சொன்னுன் வாஸ்யா. ''ஆமாம், நீ உண்மையில் என்ன சொல்கிருய்? நான் அந்த பாட்டியிடம் எல்லாவற்றையும் தெளிவாகச் சொன்னபோது அவள் இரண்டு நிமிடம் கூட யோசிக்கவில்லை. அவர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்று நீ கேள்! ஒரு வருடத்தில் மூன்று பேருக்கு ஐந்நூறு ரூபிள்கள்: புருஷன் செத்த பிறகு இவ்வளவுதான் பென்ஷன் கெடச்சுது. அவளும் அந்த கிழவியும் தம்பிப் பயலும் இதில்தான் வாழ்ந்தார்கள். தம்பிக்கான பள்ளிக் கட்டணத்தையும் இந்த பணத்திலிருந்துதான் கொடுத்தார்கள்,—இப்படி வாழுகிருர்கள்! நானும் நீயும்தான் முதலாளிகள்! எனக்கு ஒரு சில நல்ல வருடங்களில் எழுநூறு வரை கிடைக்குமே.''

''கேள் வாஸ்யா, நீ என்னை மன்னித்துவிடு; நான் கடவுள் புண்ணியத்தில் ஒரு இதுக்கு சொன்னேன், கவலை உண்டாக்க கூடாது என்றுதான் நான் யோசிக்கிறேன்,—எழுநூறு எங்கே, முந்நூறு மட்டுந்தானே...''

''முந்நூறு!.. ஜுலியன் மஸ்தாக்கொவிச்சை மறந்துட்டியா?''

''ஜுலியன் மஸ்தாக்கொவிச்! தம்பி, அது நம்ப முடியாத ஒரு காரியம். ஒவ்வொரு ரூபிளும் உறுதியான நண்பனுக இருக்கும் நம்பகரமான வருமானமாகிய முந்நூறு ரூபிள்கள் அல்ல அது. ஜுலியன் மஸ்தாக்கொவிச் நிச்சயமாக, ஏன் அவர் ஒரு மாபெரும் நபர், நான் அவரை மதிக்கிறேன், அவரை எனக்குப் புரிகிறது, அவர் அவ்வளவு உயரமான இடத்தில் இருகின்ருர், கடவுள் புண்ணியத்தில் அவரை நேசிக்கிறேன், ஏன் என்று கேட்டால் அவர் உனக்கு காசு தராமல் வேறு ஒரு அதிகாரியை வேலைக்கு வைத்திருக்கலாம் என்ருலும் அவர் உன்னை நேசித்து, உன்னுடை வேலைக்காக பரிசு தருகிருர்—ஆனுல், வாஸ்யா, இதை நீ ஒத்துக் கொள்வாய் என்று நினைக்கிறேன்... இன்

னும் கேள்: நான் ஒன்றும் மோசமானதை சொல்லவில்லை; பீட்டர்ஸ்பர்கிலேயே உன்னை மாதிரி யாரையும் கண்டு பிடிக்க முடியாது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன், நான் உனக்காக விட்டுத்தர தயார்,''—என்று உற்சாக மாக முடித்தான் நிபெதேவிச், —''ஆனால், கடவுளே, திடீர் என்று உன்னை பிடிக்கவில்லை என்றால், திடீர் என்று நீ அவருக்கு ஒத்து வரவில்லையெனில், திடீர் என்று அவரு டைய வேலை முடிந்து போனால், திடீர் என்று அவர் வேறு ஆளை எடுத்துக் கொண்டால்—அதெல்லாம் போகட்டும், கடைசியில் ஏதாவது ஒன்று நடந்தது என்றால்! ஜுலியன் மஸ்தாக்கொவிச் இருந்தவர் மாயமா மறைந்தால், வாஸ் யா...''

''கேள், அர்க்காஷா, இப்போது இந்த கூரை இப்படி யே நம் மேல் விழப் போகுது...''

''ஆமாம், நிச்சயமா, நிச்சயமா... நான் ஒன்றும் சொல் லலையே...''

''இல்லை, என்னை கேள், நான் சொல்வதைக் கேள்—நீ பார்த்தாயா: அவர் எப்படி என்னை விரட்ட முடியும்... இல்லை, இல்லை, நான் சொல்வதைக் கேள். நான் எல்லாவற் றையும் உற்சாகமாதானே செய்யறேன்; அவர் அவ்வளவு அன்பானவர், அர்க்காஷா, அவர் இன்னைக்கு எனக்கு ஐம் பது ரூபிள் வெள்ளிப் பணம் தந்தார்.''

''அப்படியா, வாஸ்யா? இது உனக்கு ஊதியமா?''

''ஊதியம் இல்லை, சொந்த பாக்கெட்டிலிருந்து தந்தார். தம்பி, ஐந்தாவது மாசமா நீ பணம் வாங்கிக்கொள்ளவில்லை; வேண்டுமெனில் எடுத்துக் கொள் என்றார்; நன்றி, உனக்கு நன்றி, திருப்தி என்று சொன்னார்... கடவுளே! நீ எனக்கு சும்மா ஒன்றும் வேலை செய்யவில்லையே அப்படின்னார்—உண்மையாக அப்படித்தான் சொன்னார்! எனக்கு கண்ணீரே வந்துவிட்டது, அர்க்காஷா. கடவுளே!''

''கேளு வாஸ்யா, நீ அந்த காகிதங்களை எழுதி முடித்து விட்டாயா?..''

''இல்லை... இன்னமும் முடிக்கவில்லை.''

''வாஸ்யா! என்னுடைய தேவதையே! நீ என்ன செய் தாய்?''

''கேள், அர்க்காதி, ஒன்றுமில்லை; இன்னும் இரண்டு நாட்கள் பாக்கியிருக்கு, முடித்து விடுவேன்...''

‘‘ஆமாம், ஏன் அதை முடிக்கவில்லை?..’’

‘‘அது அப்படித்தான் என்று வைத்துக் கொள்! நீ பார்க்கும் நொந்து போன பார்வையில் என் மனது பூராவும் நடுங்குகிறது, நெஞ்சு வலிக்கிறது. அதனுல் என்ன? நீ எப்பவுமே இப்படி சாகடிக்கிறே! அ-அ-அ!!!வென்று கத்துகிருய். இப்போது என்ன ஆகிவிட்டது என்று யோசித்துப் பார்: முடித்து விடுவேன், கடவுளே முடித்து விடுவேன்...’’

‘‘முடிக்கவில்லையெனில் என்ன ஆகும்?’’ என்று துள்ளியெழுந்து கத்தினுன் அர்க்காதி. ‘‘அந்த ஆளு உனக்கு இன்று பரிசு கொடுத்திருக்கார்! நீயோ இங்கே கல்யாணம் பன்னிக்கறே... அச்சச்சோ!..’’

‘‘அதெல்லாம் பரவாயில்லை,’’ என்று கத்தினுன் ஷூம்கோவ். ‘‘நான் இப்பவே, இந்த நிமிஷமே உட்காரப் போகிறேன்; சரிதானே!’’

‘‘வாஸ்யா, ஆமாம், உன்னுல் எப்படி அசட்டை செய்ய முடிந்தது?’’

‘‘ஓ, அர்க்காஷா! என்னுல் இப்படி உட்கார்ந்திருக்க முடியுமா? நான் இப்படியா இருந்தேன்? நான் ஆபிசிலேயே உட்கார்ந்ததில்லை; என்னுல் பொறுக்க முடியவில்லை... இப்போது ராத்திரி உட்கார்ந்து, நாளை ராத்திரியும் நாளை மறு நாளும் உட்கார்ந்து முடிச்சிடறேன்!..’’

‘‘இன்னும் நிறைய பாக்கியிருக்கின்றதா?’’

‘‘கடவுளுக்கு புண்ணியமாகப் போகட்டும், தொந்தரவு செய்யாதே, வாயை மூடு...’’

அர்க்காதி இவானவிச் நுனிக் கால்களால் கட்டிலை நெருங்கி அதில் அமர்ந்தான்; பின் திடீரென எழுந்து கொள்ள விரும்பினுன், ஆனுல் பிறகு இடையூருக இருக்கக் கூடும் என்று தோன்றியதால் மீண்டும் அமரும்படி கட்டாயப்படுத்தப்பட்டான், என்ருலும் உள்ளக் கிளர்ச்சியால் அவனுல் உட்கார்ந்திருக்க இயலவில்லை: கேள்விப்பட்ட செய்தி அவனை பெரிதும் பாதித்துள்ளது என்பதும் முதல் உற்சாகத்திலிருந்து அவன் இன்னமும் மீளவில்லை என்பதும் நன்கு தெரிந்தது. அவன் ஷூம்கோவைப் பார்க்க, ஷூம்கோவ் இவனைப் பார்த்து, புன்முறுவல் பூத்து, விரல்களால் மிரட்டுவது போல் சைகை செய்து, பயங்கரமாக புருவத்தை நெறித்து (இதில்தான் எல்லா பலமும் வேலையின் முழு

வெற்றியும் அடங்கியிருப்பதைப் போல்) காகிதங்களின் மீது பார்வையைச் செலுத்தினன்.

அவனும் தனது உணர்ச்சி ததும்பிய நிலையிலிருந்து மீள வில்லையெனத் தோன்றியது, சிறகுகளைக் கையில் வைத்து திரித்தான், நாற்காலியின் மீது உட்கார்ந்து சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தான், மனதை ஒரு நிலைப்படுத்தி திரும்பவும் எழுத உட்கார்ந்தான், ஆனல் அவனுடைய கை நடுங்கி, மேலே அசைய மறுத்தது.

''அர்க்காஷா! நான் அவர்களுக்கு உன்னைப் பத்தி சொன்னேன்,'' என்று ஏதோ இப்போதுதான் நினைவிற்கு வந்ததைப் போல் உரக்கச் சொன்ஞன்.

''அப்படியா?'' என்று உரக்க கேட்டான் அர்க்காதி. ''நான் இப்பதான் கேக்கனுமன்னு நினைச்சேன்; அப்புறம்!''

''அப்புறம்! சரி நான் பின்னடி எல்லாம் சொல்றேன்! ஓ, கடவுளே, நான்தான் குற்றவாளி, நாலு பேப்பர் எழுதி முடிக்கும் வரை ஒன்றும் பேசக் கூடாதுங்கறது சுத்தமாக மறந்தே போச்சு; உன்னைப் பத்தியும் அவர்களைப் பத்தியும் எனக்கு ஞாபகம் வந்தது. எனக்கு ஒன்றுமே எழுத முடியலேப்பா: உங்களைப் பத்தியே நினைவு வருது...'' என்று கூறிய வாஸ்யா புன்முறுவல் பூத்தான்.

நிசப்தம் நிலவியது.

''சே! என்ன மோசமான நிப்பு!'' என்று கத்திய ஷூம்கோவ் வெறுப்போடு அதை மேசை மீது எறிந்து விட்டு இன்னென்றை எடுத்துக் கொண்டான்.

''வாஸ்யா! கேளேன், ஒரு வார்த்தை...''

''சரி! சீக்கிரமா சொல்லு, இதுதான் கடைசி தடவை.''

''இன்னும் நிறைய பாக்கியிருக்கா?''

''நீ வேற என்னப்பா!...'' இக் கேள்வியை விட மோசமான, பயங்கரக் கேள்வி வேறில்லை என்பது போல் முகம் சுளித்த வாஸ்யா. ''நிறைய, இன்னும் ஏராளம்!'' என்று பதிலளித்தான்.

''எனக்கு ஒரு எண்ணம் தோணிச்சு...''

''என்னது?''

''சரி, இல்லை இல்லை, நீ எழுது.''

''என்ன? சொல்லு என்ன?''

''வாஸ்யா! இப்ப ஏழு மணியாகுது.''

அப்போது நிபெதேவிச் புன்சிரிப்பு சிரித்து, வாஸ்யா

என்ன நினைப்பான் என்ற சிறிது கூச்சத்தோடு, குறும்புத் தனமாக அவனைப் பார்த்து கண் சிமிட்டினான்.

''சரி, என்ன வேணும்?'' எழுதுவதை முழுவதுமாக நிறுத்தி விட்டு நேரடியாக அவருடைய கண்களைப் பார்த்து, எதிர் பார்ப்பினால் சற்றே வெளுத்துப் போய் கேட்டான் வாஸ்யா.

''என்ன தெரியுமா?''

''கடவுள் புண்ணியத்தில் என்னவென்று சொல்லேன்.''

''என்ன தெரியுமா? நீ உணர்ச்சி வசப்பட்டிருக்கின்றாய், உன்னால் நிறைய வேலை செய்ய முடியாது... நில்லு, நில்லு—தெரியும், தெரியும்—நான் சொல்வதைக் கேள்!'' உற்சாக மாக கட்டிலிலிருந்து குதித்தெழுந்து, பேச வந்த வாஸ்யா வைத் தடுத்து நிறுத்தி, மறுப்புகளை சகல விதங்களிலும் நிராகரித்தபடியே கூறினான் நிபெதேவிச். ''முதலில் சாந் தமாகனும், மனதை நிதானத்திற்கு கொண்டு வரனும், என்ன சரிதானே?''

''அர்க்காஷா, அர்க்காஷா!'' நாற்காலியிலிருந்து துள்ளி யெழுந்த வாஸ்யா உரக்கக் கத்தினான். ''ராத்திரி பூரா, கட வுள் புண்ணியத்தில், ராத்திரி பூரா உக்காரப் போறேன்!''

''ஆமா, ஆமா! காலையில் நீ தூங்கிவிடுவாய்...''

''தூங்க மாட்டேன், என்ன ஆனாலும் சரி தூங்க மாட் டேன்...''

''இல்லே, கூடாது, கூடாது; நிச்சயமா, தூங்கிவிடுவாய், ஐந்து மணிக்கு தூங்கு. எட்டு மணிக்கு நான் எழுப்பி விடு கிறேன். நாளைக்கு பண்டிகை நாள்; நீ உட்கார்ந்து, நாள் பூராவும் எழுது... பின் ராத்திரி—ஆமா, நிறைய பாக்கி இருக்கா?..''

''ஆமா, இதோ இவ்வளவு இருக்கு!..''

உள்ளக் கிளர்ச்சியாலும் எதிர்பார்ப்பாலும் நடுங்கிக் கொண்டே வாஸ்யா நோட்டுப் புத்தகத்தைக் காட்டினான்.

''இதோ!..''

''கேளப்பா, அது ஒன்னும் அவ்வளவு இல்லேயே...''

''என் அன்பான நண்பனே, இன்னும் அங்க இருக்கு,'' —போவதா இல்லேயா என்று முடிவு செய்வது ஏதோ நிபெதேவிச்சைப் பொறுத்து இருந்ததைப் போல் வெட்கத் தோடு அவனைப் பார்த்தபடியே கூறினான் வாஸ்யா.

''எவ்வளவு?''

''இரண்டு... ஷீட்டுகள்...''

''அதனுல் என்ன? நான் சொல்வதைக் கேள்! முடிச்சிடலாம், கடவுளே, அத நிச்சயமா முடிச்சிடலாம்.''

''அர்க்காஷா!''

''வாஸ்யா! கேளு! இன்று புது வருஷம் பிறக்கும் போது எல்லாரும் குடும்பத்தோடு ஒன்ருகச் சேர்ந்து கொண்டாடுகின்ருர்கள், நாம்தான் வீட்டில்லாதவர்கள், அநாதைகள்... ஓ! வாஸ்யா!''

நிபெதேவிச் வாஸ்யாவைக் கட்டித் தழுவி தன் உறுதியான கரங்களால் இறுகப் பிடித்தான்...

''அர்க்காதி, முடிவு செஞ்சாச்சு!''

''வாஸ்யா, நானும் அதைப் பத்திதான் சொல்ல வந்தேன். பாத்தியா, வாஸ்யா, நீ என்னுடை தங்கக் குட்டி, கேளு! கேளு!..''

அர்க்காதி திறந்த வாயோடு நின்று விட்டான், ஏனெனில் குதூகலத்தால் அவனுல் பேசவே முடியவில்லே. வாஸ்யா அவனுடைய தோள்களைப் பிடித்துக் கொண்டு கண் பார்வை முழுவதையும் அவன் மீது செலுத்தி, அவனுக்காக தானே பேச விரும்புவதைப் போல் உதடுகளை அசைத்தான்.

''அப்ப சரி!'' இறுதியாக அவன் வாய் திறந்தான்.

''அவர்களுக்கு என்னே இன்னேக்கு அறிமுகம் செஞ்சுவை!''

''அர்க்காதி! வா அங்கே போய் தேநீர் குடிப்போம்! என்ன தெரியுமா? நாம் அங்கே புத்தாண்டு வரைக்கும் கூட உட்கார வேண்டாம், முன்னுடியே வந்து விடுவோம்'' என்று உண்மையான உற்சாகக் களிப்பில் சத்தமிட்டுச் சொன்னுன் வாஸ்யா.

''அதாவது இரண்டு மணி நேரம், கொஞ்சம் கூட அதிகமோ, குறைவோ இல்லே!..''

''பின் நான் முடிக்கும் வரை பிரிவு!..''

''வாஸ்யா!..''

''அர்க்காதி!''

மூன்றே நிமிடங்களில் அர்க்காதி விழாக் கோலத்தில் காட்சியளித்தான். வாஸ்யா தன் ஆடைகளை தூய்மைப் படுத்திக் கொண்டான், ஏனெனில் அவன் தன் கோட்டைக் கழட்டக் கூடவில்லே: அவ்வளவு முனேப்போடு அவன் வேலேயில் உட்கார்ந்தான்.

அவர்கள் அவசர அவசரமாக வீதிக்கு வந்தனர், ஒரு வன் மற்றவனை விட மகிழ்ச்சியாகக் காணப்பட்டான். பீட்டர்ஸ்பர்க் பக்கத்திலிருந்து கலோம்னு வட்டத்தை நோக்கிச் செல்ல வேண்டியிருந்தது. அர்க்காதி இவானவிச் மகிழ்ச்சியோடு, உற்சாகமாக அடியெடுத்து வைத்து நடந்தான். இவனது இந்த நடையை வைத்தே மேன்மேலும் மகிழ்ச்சியாகி வந்த வாஸ்யாவின் நல்வாழ்வு குறித்து இவன் அடைந்த மகிழ்ச்சி முழுவதையும் காண முடிந்தது. வாஸ்யா சிறு சிறு அடியெடுத்து தத்தி தத்தி ஆனுல் கௌரவத்தை இழக்காதபடி நடந்தான். அர்க்காதி இவானவிச் இதை விட மகிழ்ச்சியாக இவனை இதற்கு முன் கண்டதில்லை. இத்தருணத்தில் அவன் அதிகமாக மதித்தான்; அர்க்காதி இவானவிச்சின் நெகிழ்ந்த இதயத்தில் எப்போதுமே ஆழ்ந்த, அன்பான இரக்க உணர்வுகளை ஏற்படுத்தி வந்த வாஸ்யாவின் உடற்குறை (இதைப் பற்றி வாசகர்களுக்கு இதுவரை தெரியாது—வாஸ்யாவிற்கு சிறிது கூன் விழுந்திருந்தது) இப்போது ஆழ்ந்த மனமுருகலுக்கு வழிகோலியது. இந்த நிமிடத்தில் நண்பனின் பாலான இந்த உணர்வு அவனிடம் அதிகமாகவே இருந்தது, நிச்சயமாக இதற்கு வாஸ்யா சகல விதங்களிலும் தகுதியானவனுக இருந்தான். அர்க்காதி இவானவிச்சுக்கு மகிழ்ச்சியால் அழ வேண்டும் போலிருந்தது; ஆனுலும் அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

''வாஸ்யா, நீ எங்கே போகிருய்? இப்படிப் போனுல் சீக்கிரம் போயிடலாம்!'' என்று வாஸ்யா வஸ்னெசேன்ஸ்கி நெடுஞ்சாலையை நோக்கித் திரும்புவதைப் பார்த்து சத்தமாகச் சொன்னுன் அவன்.

''பேசமா இரு அர்க்காஷா, பேசாதே...''

''வாஸ்யா, உண்மையில் இது பக்கமானது.''

''அர்க்காஷா, என்ன தெரியுமா? லீஸன்காவிற்கு பரிசு கொடுக்க ஆசையாக உள்ளது...'' என்று மகிழ்ச்சி பொங்க ரகசியக் குரலில் சொன்னுன் வாஸ்யா.

''என்ன?''

''இங்கே முனையில் மேடம் லெரூவிற்குச் சொந்தமான நல்ல கடை இருக்குதுப்பா!''

''சரி என்ன!''

''தொப்பி, என்னருமை நண்பா, தொப்பி, இன்று நான் ஒரு அழகிய சிறிய தொப்பியைப் பாத்தேன்; நான்

கேட்டேன்: மோஸ்தர், Manon Lescaut என்று பேர் சொன்ஞங்க — அற்புதம் போ! கருஞ்சிவப்பு நிறமுள்ள ரிப்பன்கள்... விலை மட்டும் அதிகமில்லாவிட்டால்... அர்க்காஷா, விலை அதிகமா இருந்தா கூட என்ன!..''

''வாஸ்யா, நீ எல்லா கவிஞர்களை விட உயர்ந்தவன்; சரிவா போலாம்!..''

அவர்கள் வேகமாக நடந்து சென்று இரண்டு நிமிடங்களுக்குப் பின் கடையில் நுழைந்தனர். கறுப்பு நிறக் கண்களையும் சுருள் முடியையும் உடைய ஒரு பிரெஞ்சுப் பெண் அவர்களை வரவேற்ருள். தன் கடைக்கு வாங்க வந்தவர்களைப் பார்த்ததுமே அவர்களைப் போன்றே தன்னையும் அவள் மகிழ்ச்சியானவளாக, உற்சாகமானவளாக, இன்னமும் சொன்னுல் அவர்களை விட அதிக மகிழ்ச்சியானவளாக ஆக்கிக் கொண்டாள். குதூகலத்தால் மேடம் லெரூவை முத்தமிடக் கூட வாஸ்யா தயாராக இருந்தான்...

''அர்க்காஷா!'' கடையின் பெரும் மேசையில் மரப் பலகைகளின் மீதிருந்த அழகான, மகத்தான எல்லாவற்றின் மீதும் சாதாரணப் பார்வையை செலுத்தி அரைக் குரலில் சொன்ஞன். ''அற்புதம்! இது என்ன? அது என்ன? இதோ உதாரணமா இந்த அழகிய பொருளைப் பார்த்தாயா?'' என்று ஓரத்திலிருந்த ஒரு அழகிய தொப்பியைச் சுட்டிக் காட்டி முணுமுணுத்தான் வாஸ்யா. ஆனுல் அது அவன் வாங்க விரும்பிய தொப்பியே அல்ல. ஏனெனில் தூரத்திலிருந்தே அவன் வேருெரு மூலையிலிருந்த இன்ஞெரு பிரபல அழகிய தொப்பியைக் கண்டு அதை வைத்த கண் வாங்காமல் பார்த்தான். இத்தொப்பியை வேறு யாராவது எடுக்கப் போவது போல அல்லது திருடப் போவது போல அல்லது தொப்பியே வாஸ்யாவின் கைகளுக்கு கிட்டாமலிருப்பதற்காக தன்னிடத்திலிருந்து காற்றில் பறந்து போவது போல தோன்றும்படி அவன் அத் தொப்பியைப் பார்த்தான்.

''இதோ,''—ஒரு தொப்பியைச் சுட்டிக்காட்டி கூறிஞன் அர்க்காதி இவானவிச். ''இது மிகவும் சிறந்தது என்று தோனுகிறது.''

''அடடா, அர்க்காஷா! இது உனக்கு கௌரவம் கூட; உண்மையில், உன்னுடைய அழகியல் உணர்ச்சிக்காக உனக்கு மரியாதை தர துவங்குவேன்'' என்று அர்க்காதியின் ரசனைக்

காக பெரும் பாராட்டுதலை தெரிவிப்பதாகக் காட்டியபடியே சொன்னான் வாஸ்யா. ''உன்னுடைய தொப்பி அம்சமாக இருக்கிறது, அது இருக்கட்டும், ஆனால் இங்கே வாயேன்!''

''எங்கப்பா, இதை விட நன்றாக இருப்பது?''

''இதோ இங்கே பார்!''

''இதுவா?'' என்று சந்தேகத்தோடு கேட்டான் அர்க்காதி.

மேற்கொண்டு பொறுக்க முடியாமல் வாஸ்யா அதை மரச் சட்டத்திலிருந்து பிடுங்கிய போது (நீண்ட காலம் காத்திருந்த பின் இத்தகைய ஒரு நல்ல ஆள் வாங்குவதைக் குறித்து மகிழ்ச்சியால் அது தானாகவே பறந்து வந்ததைப் போல் தோன்றியது), எல்லா ரிப்பன்களும் பின்னல் வேலைகளும் சலசலத்த போது அர்க்காதி இவானவிச்சின் பலம் மிகு மார்பிலிருந்து ஒரு எதிர்பாராத மகிழ்ச்சி கூக்குரல் எழுந்தது. ரசனையில் மேன்மையை வெளிப்படுத்திய, ஆனால் இரக்கத்தின் காரணமாக மட்டுமே மௌனம் சாதித்த மேடம் லெரூ கூட வாஸ்யாவை ஆமோதிப்பது போல் ஒரு புன்னகை பூத்தாள். ஆம்! நீங்கள் சரியாக ஊகித்தீர்கள், உங்களை எதிர் நோக்கியுள்ள மகிழ்ச்சிக்குத் தகுதியானவர் என்று அப்பெண்ணின் பார்வையும் சைகையும் புன்னகையும் எல்லாமே ஒட்டுமொத்தமாக கூறுவது போலிருந்தன.

''தனிமையிலே இதுவரைக்கும் சரசமா ஆடிக் கொண்டிருந்தாய், சரசம்!'' தன் பாசம் முழுவதையும் அச் சிறு தொப்பி மீது கொட்டி கத்தினான் வாஸ்யா. ''என்னருமை தொப்பியே, குறும்புக்காரத் தொப்பியே, வேண்டுமென்றே ஒளிந்து கொண்டாய்!'' அவன் அதை, அதாவது அதைச் சுற்றியிருந்த காற்றை முத்தமிட்டான், ஏனெனில் தன்னுடைய செல்வத்தைக் கைகளால் தொட அவன் பயந்தான்.

''உண்மையான தகுதியும் நற்குணமும் இப்படித்தான் தன்னைத்தானே மறைத்துக் கொள்ளும்'' என்று குதூகலமாக கூறிய அர்க்காதி நகைச் சுவைக்காக தான் அன்றாடம் காலையில் படிக்கும் ஒரு கூர்மதியுள்ள பத்திரிகையின் வாசகத்தைக் கூடச் சேர்த்துக் கொண்டான். ''சரி வாஸ்யா, அப்ப என்ன?''

''மிக நல்லது, அர்க்காஷா! நீ இன்று சக்கை போடு போடுகிறாய், பெண்கள் மத்தியில் பயங்கர வெற்றி போ,

ஜோசியம் சொல்கிறேன் கேட்டுக் கொள். மேடம் லெரூ, மேடம் லெரூ!''

''என்ன வேண்டும் சொல்லுங்கள்.''

''என்னருமை மேடம் லெரூ!..''

மேடம் லெரூ அர்க்காதி இவானவிச்சைப் பார்த்து இரக்கத்தோடு புன்முறுவல் பூத்தாள்.

''எனக்கு உங்களை இப்பொழுது எவ்வளவு பிடித்திருக்கிறது தெரியுமா, நம்பக் கூட மாட்டீர்கள்... உங்களை முத்தமிட அனுமதியுங்கள்...'' வாஸ்யா கடைக்காரப் பெண்ணை முத்தமிட்டான்.

இப்படிப்பட்ட ஒரு தவறினுல் தன்னிலை இழக்காமல் இருக்க சகலவித மேன்மைக்குணங்களையும் உறுதியாக ஒன்று திரட்ட வேண்டியிருந்தது. ஆனுலும் வாஸ்யாவின் குதூகலத்தைச் சந்திக்க மேடம் லெரூவின் கூடப் பிறந்த, உண்மையான விநயமும் ஒயிலும் தேவை என்று என்னுல் உறுதியாகச் சொல்ல முடியும். அவள் அவனை மன்னித்தாள், அவள் தான் அச் சூழ்நிலையிலிருந்து எவ்வளவு புத்திசாலித்தனமாக, எவ்வளவு மேன்மையோடு மீண்டும் வந்தாள்! வாஸ்யா மீது கோபப்பட்டிருக்க முடியுமா என்ன?

''மேடம் லெரூ, விலை என்ன?''

''ஐந்து வெள்ளி ரூபிள்கள்'' என்று தன்னைச் சரி செய்து கொண்டு புதிய புன்முறுவலுடன் பதில் கூறினுள் அவள்.

''மேடம் லெரூ, இது என்ன விலை?'' தான் தேர்ந்தெடுத்ததைச் சுட்டிக்காட்டி கேட்டார் அர்க்காதி இவானவிச்.

''அது எட்டு வெள்ளி ரூபிள்கள்.''

''இருங்கள், இருங்கள்! மேடம் லெரூ, இவற்றில் எது சிறந்தது, மகத்தானது, அழகானது, எது உங்களுக்கு மிகவும் பொருத்தமாயிருக்கும் சொல்லுங்களேன்.''

''அது சிறந்தது, ஆனுல் நீங்கள் தேர்ந்தெடுத்துள்ளது —c'est plus coquet*.

''அப்படியெனில் அதையே எடுத்துக் கொள்கிறோம்!''

மேடம் லெரூ மிக மெல்லிய காகிதத்தை எடுத்து அதில் வைத்துக் கட்டி, பின் குத்தி தந்தாள். தொப்பியில்லா காகிதத்தை விட தொப்பியோடு சுற்றப்பட்டக் காகிதம் இப்போது இலகுவாக ஆனது போலத் தோன்றியது. வாஸ்யா

* கவர்ச்சிகரமானது (பிரெஞ்சு).—ப-ர்.

அதை மிகக் கவனமாக எடுத்துக் கொண்டு, மெதுவாக மூச்சு விட்டு, மேடம் லெரூவிற்கு வணக்கம் சொல்லிவிட்டு இன்னமும் ஏதோ அன்பாகக் கூறிய பின் கடையிலிருந்து வெளியே வந்தான்.

''நான் viveur*, அர்க்காஷா, நான் viveur ஆக இருப்ப தற்காகவே பிறந்தவன்!'' உரக்க கத்திச் சொன்ன வாஸ்யா வாய்விட்டு சிரித்தான், கேட்க முடியாதபடி நடுக்கமான சிறிய சிரிப்பும் சிரித்தான், சுற்றிச் செல்பவர்களைப் பார்த் தான், அவர்கள் தன்னிடமுள்ள மதிப்பு மிக்கத் தொப்பி யை பிடுங்கிச் சென்று விடுவார்களோ என்று எல்லோரை யும் சந்தேகப்பட்டான்.

''கேளேன், அர்க்காதி, கேளு!'' ஒரு நிமிடம் கழித்து ஆரம்பித்த அவனுடைய குரலில் ஏதோ ஒரு குதூகலமும் சொல்ல முடியாத அவளிற்கு ஏதோ அன்பான ஒன்றும் ஒலித்தது. ''அர்க்காதி, நான் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக் கிறேன் தெரியுமா!..''

''வாஸ்யா! என் மனதிற்கினியவனே! நானும் மகிழ்ச்சி யாக இருக்கிறேன்!''

''இல்லை, அர்க்காஷா, இல்லை, என்னிடம் நீ வைத்தி ருக்கும் அன்பு எல்லையற்றது என்று எனக்குத் தெரியும்; ஆனாலும் நான் இந்த நிமிடத்தில் அனுபவிப்பதில் நூறில் ஒரு பங்கைக் கூட உன்னால் உணர முடியாது. என் மனது அந்த அளவு நிரம்பி வழிகிறது! அர்க்காஷா! எனக்கு இந்த மகிழ்ச்சிக்கு அருகதையே இல்லை! இது எனக்கு கேட்கிறது, இதை நான் உணருகிறேன். எதற்காக என்னை,''—அடக் கப்பட்ட குமுறல்களுடன் கூடிய குரலில் அவன் சொன் னான்,—''நான் அப்படி என்ன செய்தேன், என்னிடம் சொல்! பார், எவ்வளவு மக்கள், எவ்வளவு கண்ணீர், எவ் வளவு துக்கம், விழாக்கள் இல்லாத சாதாரண வாழ்க் கைதான் எவ்வளவு! நானோ! என்னை அப்படிப்பட்ட பெண் காதலிக்கிறாள், என்னை... இப்பொது நீயே அவளைப் பார்க்கப் போகிறாய், அந்த நல் இதயத்தை நீயே மதிப்பிடு. நான் ஒரு கீழான பதவியில் பிறந்தவன், இப்போது எனக்குப் பதவி, சுயமான வருமானம்—ஊதியம். நான் உடற்குறை

---

* தன் இன்பங்களுக்காக பணம் செலவு செய்பவன் (பிரெஞ்சு).—மு-ர்.

யோடு பிறந்தவன், எனக்கு சிறிது கூன் விழுந்துள்ளது. ஆனாலும் என்னை அவள் காதலிக்கிறாள், பார்த்தியா. இன்று ஜூலியன் மஸ்தாக்கொவிச் மிகவும் மென்மையானவராக, கவனமானவராக, மரியாதை தருபவராக இருந்தார்; அவர் என்னுடன் மிக அபூர்வமாகத்தான் பேசுவார்; அவர் இன்று என்னருகே வந்து, 'அப்ப என்ன வாஸ்யா (கடவுள் புண்ணியத்தில், அப்படியே வாஸ்யா என்று கூப்பிட்டார்), இன்னைக்கு பண்டிகையில் ஒரே குடித்து கொண்டாட்டம் போடப் போகிறாயா?' என்று கேட்டார் (அவரே சிரித்து விட்டார்).

'' 'கொஞ்சம் கொஞ்சம்,மேன்மை தாங்கிய கணவானே, சிறிது வேலை உள்ளது என்று சொன்ன நான் உற்சாகமடைந்து கூறினேன்: ஒரு வேளை ஆடிப்பாடிக் கொண்டாடவும் செய்வேன், மேன்மை தாங்கிய கணவானே'—கடவுள் புண்ணியத்தில் சொல்லிட்டேன். அப்போது அவர் எனக்கு பணம் கொடுத்து இரண்டொரு வார்த்தைகள் சொன்னார். நான் அழுதே விட்டேன், ஆண்டவனே, கண்ணீர் உருண்டோடியது, அவருக்கும் சிறிது நெகிழ்வேற்பட்டது என்று தோன்றியது. அவர் என் தோள்களைத் தட்டிக் கொடுத்து சொன்னார்: 'வாஸ்யா, நீ இன்று இருப்பது போலவே என்றும் இரு...' ''

வாஸ்யா ஒரு நொடிப் பொழுது மௌனமானான். அர்க்காதி இவானவிச்சும் திரும்பி கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

''இன்னும்...'' என்று தொடர்ந்தான் வாஸ்யா. ''அர்க்காதி, இதை நான் இதுவரை உனக்குக் கூறியதில்லை... அர்க்காதி! நீ உன்னுடைய நட்பால் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியைத் தருகிறாய் தெரியுமா, நீயின்றி நான் இப்பூமியில் வாழ்ந்திருக்கவே மாட்டேன்—வேண்டாம், வேண்டாம், ஒன்றும் சொல்லாதே, அர்க்காஷா! உன் கைகளைப் பற்றி குலுக்க அனுமதி, ந...ன்...றி சொல்ல அனுமதி!..'' வாஸ்யா மீண்டும் முடிக்கவில்லை.

அர்க்காதி இவானவிச் நேராகப் பாய்ந்து வாஸ்யாவின் கழுத்தைக் கட்டிப் பிடிக்க விரும்பினான். ஆனால் அவர்கள் வீதியைக் கடந்து கொண்டிருந்ததாலும் கிட்டத்தட்ட அவர்களின் காதுகளுக்கு வெகு அருகாக ''ஓரம் ஓரம்'' என்ற கீச்சொலி ஒலித்ததாலும் இருவரும் அஞ்சியவர்களாக,

உணர்ச்சி ததும்பியவர்களாக நடைபாதை வரை ஓட்டமாக ஓடி வந்தனர். அர்க்காதி இவானவிச்சுக்கு இதனால் மகிழ்ச்சியாகக் கூட இருந்தது. அந்த நிமிடத்தின் அசாதாரணத் தன்மையால் மட்டுமே அவன் வாஸ்யா தன் நன்றியைக் கொட்டித் தீர்த்ததை மன்னித்தான். அவனைப் பொறுத்த மட்டிலோ வருத்தமாக இருந்தது. இதுவரை தான் வாஸ்யாவிற்காக மிகக் குறைவாகவே செய்துள்ளதாக அவன் உணர்ந்தான். இது போன்ற சிறிய விஷயத்திற்காக வாஸ்யா நன்றி சொல்ல ஆரம்பித்த போது அவனுக்கு தன்னைப் பற்றி வெட்கமாகக் கூடத் தோன்றியது. ஆனால் இன்னும் முழு வாழ்க்கை முன்னிருந்தது, அர்க்காதி இவானவிச் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்...

நிச்சயமாக, அவர்களுக்காக காத்திருப்பதை கைவிட்டார்கள். அவர்கள் ஏற்கனவே தேநீர் அருந்த உட்கார்ந்ததே இதற்குச் சான்று. உண்மையில், வயதானவர் இளைஞர்களை விட—அதிலும் எப்படிப்பட்ட இளைஞர்களை விட—தூரப் பார்வை உடையவர்கள். லீஸன்கா மிகத் தீவிரமாக வர மாட்டான் என்று உறுதியாகச் சொன்னாள்; ''வர மாட்டார் அம்மா, அவர் வர மாட்டார் என்று மனது கூறுகிறது''; அவர் வருவாரென தன் மனது கூறுவதாக, சொன்ன தாய், உட்கார்ந்திருக்க மாட்டார், ஓடி வருவார், இப்போதோ வேலையும் கிடையாது, அதுவும் புத்தாண்டு பிறக்கும் தறுவாய் என்று கூறினாள். கதவைத் திறந்த லீஸன்கா முற்றிலுமாக எதிர்பார்க்கவேயில்லை—அவளால் தன் கண்களையே நம்ப முடியவில்லை, மூச்சுத் திணற, பிடிக்கப்பட்ட சிறு பறவையைப் போல திடீரென படபடவென அடிக்கும் இதயத்தோடு, நாணத்தால் சிவந்து, செர்ரிப் பழத்தை மிகவும் ஒத்திருந்த அவள் முகத்தில் செம்மை படர அவர்களை வரவேற்றாள். கடவுளே, என்ன ஒரு ஆச்சரியம்! அவளுடைய உதடுகளிலிருந்து ''ஆ!'' என்ற மிக மகிழ்ச்சியான சொல் வெளிவந்தது. ''ஏமாற்றுக்காரனே, என் மனதிற்கினியவனே!''—கத்திய அவள் வாஸ்யாவின் கழுத்தைக் கட்டிப் பிடித்தாள்... ஆனால் பெரும் வியப்பும் திடீரென பெரும் வெட்கமும் அவளைக் கவ்வின: வாஸ்யாவின் பின்னால், அவன் பின் மறைந்து கொள்ள விரும்புவது போல் சிறிதே தடுமாறிப் போன அர்க்காதி இவானவிச் நின்றிருந்தான். அவன் பெண்கள் மத்தியில் சங்கடப்படக் கூடி

யவன், ஏன் மிகவும் சங்கடப்படுபவன் என்பதைக் கூற வேண்டும். ஒரு முறை என்ன நடந்ததெனில்... சரி, அது இருக்கட்டும். ஆனால் அவன் நிலையிலிருந்து பாருங்கள்: இங்கே சிரிப்புக்கு இடமானது எதுவுமே இல்லை; அவன் முன்னறையில், பூட்சுகளின் மேலுறைகளோடு, மேல் கோட்டில், காதுகளை மூடிய தொப்பியோடு காட்சியளித்தான், இதை அவசர அவசரமாக கழட்ட முயற்சித்தான், கையால் பின்னப்பட்ட மஞ்சள் நிற மப்ளர் மிகவும் அலங்கோலமாக அவனது கழுத்ததை வளைத்து சுற்றப்பட்டு, அவிழாமல் இருப்பதற்காகப் பின்புறமாக முடிச்சிடப்பட்டிருந்தது. இவற்றையெல்லாம் அவிழ்த்து, விரைவில் கழட்டி நல்ல ஒரு நிலையில் அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும், ஏனெனில் இதை விட நல்ல ஒரு நிலையில் அறிமுகப்படுத்திக் கொள்ளதான் அனைவரும் விரும்புவார்கள். ஆனால் இங்கோ வருத்தமடைந்த, சகிக்க முடியாத வாஸ்யா, ஆனாலும் நிச்சயமாக அதே இனிமையான, அன்பு மிக்க வாஸ்யா, ஆனால் இறுதியில் சகிக்க முடியாத, இரக்கமற்ற வாஸ்யா! ''இதோ,'' என்று கத்தினன் அவன், ''லீஸன்கா, இதோ பார், என்னுடைய அர்க்காதி! எப்படியிருக்கான்? இதுதான் என்னோட மிகச் சிறந்த நண்பன், அவனைக் கட்டித் தழுவி முத்தம் கொடு, முதலில் முத்தம் கொடு, நன்ருக பின்னர் தெரிந்து கொள்ளலாம், முத்த மழை பொழியலாம்...'' என்ன? அதனால் என்ன என்று நான் கேட்கிறேன், அர்க்காதி இவானவிச் என்ன செய்திருக்க வேண்டும்? ஆனால் அவனோ தன் மப்ளரில் பாதியைத்தான் கழட்டியிருந்தான். உண்மையில், எனக்கு சில நேரங்களில் வாஸ்யாவின் அளவிற்கதிகமான குதூகலத்தைக் கண்டு வெட்கமாக உள்ளது; நிச்சயமாக அது அன்பான இதயத்தைக் காட்டுகிறது, ஆனாலும்... கூச்சமாக உள்ளது, சரியில்லை!

இறுதியாக இருவரும் உள்ளே நுழைந்தனர். அர்க்காதி இவானவிச்சை சந்தித்ததில் கிழவி சொல்ல முடியாத அளவு மகிழ்ச்சி அடைந்தாள்; ஏராளமாகக் கேள்விப்பட்டிருக்கிருள், அவள்... ஆனல் அவள் இன்னமும் முடிக்கவில்லை. அறையில் மகிழ்ச்சியோடு ஒலித்த ''ஆ!'' எனும் குரல் அவளை பாதி வாக்கியத்திலேயே நிறுத்தியது. கடவுளே! திடீரென பிரித்துக் காட்டப்பட்ட தொப்பியின் முன் லீஸன்கா நின்ருள், தன் கரங்களை மிக வெகுளித்தனமாக

மடித்து புன்னகைத்தபடி அவள் நின்ருள். அந்தப் புன்ன கையோ... கடவுளே, ஏன் மேடம் லெரூவிடம் இதை விடச் சிறந்த தொப்பி வேறு இருக்கவில்லையா என்ன!

அடக் கடவுளே, இதை விடச் சிறந்த தொப்பியை வேறு எங்கே நீங்கள் கண்டுபிடிப்பீர்கள்? அதைப்பற்றி நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. இதை விட மேலானதை எங்கே தேடுவது? நான் உண்மையாகச் சொல்லுகிறேன்! காதலர்களின் இத்தகைய நன்றியின்மை எனக்கு சிறிது கோபமூட்டுகிறது, ஏன் சிறிது ஏமாற்றத்தைக் கூட ஏற்படுத்துகிறது. கணவான்களே, நீங்களே பாருங்கள், தேவதையைப் போன்ற தொப்பியை விடச் சிறந்தது வேறு ஏதாவது இருக்க முடியுமா! இதோ பாருங்கள்... இல்லை, இல்லை, நான் சொல்வதெல்லாம் பயனற்றவை; அவர்கள் எல்லோரும் ஏற்கனவே நான் சொல்வதை ஒப்புக் கொண்டு விட்டனர்; அது ஒரு நொடிப் பொழுது குழப்பம், தெளிவின்மை, உணர்ச்சி சிதறல்; நான் அவர்களை மன்னிக்கத் தயார்... ஆனால் பாருங்கள்... கணவான்களே, என்னை மன்னித்து விடுங்கள், நான் இன்னமும் அந்த தொப்பியைப் பற்றிதான் பேசுகிறேன்: பட்டு வலை, பஞ்சு போல் இலேசானது, பின்னல் வேலைப்பாடால் மூடப்பட்ட அகலமான கருஞ்சிவப்பு நிற ரிப்பன், இது அந்த தொப்பியின் மேற்புறத்தில் நடுப்பகுதியில் உள்ளது; பின்புறமும் இரண்டு அகலமான, நீண்ட ரிப்பன்கள்; இவை பிடரிக்கு சற்று கீழே, கழுத்து வரை தொங்கும்... தொப்பியை முழுமையாக சற்று பிடரியில் அணிந்து கொண்டால் போதும்; இப்போது பாருங்கள்; நான் அதன் பின் நீங்கள் சொல்வதைக் கேட்கிறேன்!.. நீங்கள் பார்க்கவில்லை என்பது எனக்குத் தெரிகிறது!.. உங்களுக்கு எது எப்படியிருந்தாலும் ஒன்றுதான் போல்! நீங்கள் வேறு பக்கம் பார்க்கின்றீர்கள்... முத்துக்களைப் போன்ற இரண்டு பெரிய கண்ணீர்த் துளிகள் தார் போன்ற கறுப்பு நிறத்தையுடைய கண்களில் ததும்பி ஒரு நொடிப் பொழுது நீண்ட கண்ணிமைகளில் நடுங்கி, மேடம் லெரூவின் கலைப்பொருள் எந்த பட்டிழையால்—இல்லையில்லை காற்ருல்—செய்யப்பட்டதோ அதில் பட்டுத் தெறித்ததை நீங்கள் பாருங்கள்... மீண்டும் எனக்கு ஏமாற்றம்: அந்த இரு கண்ணீர்த் துளிகளும் தொப்பிக்காக அல்லவே!.. இல்லை! என் கருத்துப்படி இத்தகையப் பொருளை மனத்திடத்தோடு

பரிசாகக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அதை உண்மையாக மதிப்பிட முடியும்! கணவான்களே, நான் ஒத்துக் கொள்கிறேன், எல்லாமே தொப்பிக்காகத்தான்!

வாஸ்யா லீஸன்காவுடனும் கிழவி அர்க்காதி இவானவிச்சுடனும் உட்கார்ந்தனர்; பேச்சு ஆரம்பமாகியது, அர்க்காதி இவானவிச் முழுமையாகப் பேச்சில் கலந்து கொண்டான். நான் மகிழ்ச்சியோடு அவன் பக்கம் நியாயமிருப்பதை ஒப்புக் கொள்கிறேன். அவனிடமிருந்து எதிர்பார்ப்பது கூட கடினமாயிருந்தது. வாஸ்யாவைப் பற்றிய இரண்டொரு வார்த்தைகளுக்குப் பின் அவன் ஜுலியன் மஸ்தாக்கொவிச்சைப் பற்றியும் அவரது நற்குணத்தைப் பற்றியும் மிக உயர்வாக பேசத் துவங்கினான். அவன் புத்திசாலித்தனமாக பேசிய பேச்சில் உரையாடல் ஒரு மணி நேரம் கூட நீடிக்கவில்லை. வாஸ்யாவுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புடைய ஜுலியன் மஸ்தாக்கொவிச்சின் ஒரு சில சிறப்பியல்புகளைப் பற்றி அவன் எவ்வளவு திறமையாக, நயமாகப் பேசினான் என்பதைப் பார்த்திருக்க வேண்டும்! கிழவி வசீகரிக்கப்பட்டாள், உண்மையாகவே மிகவும் கவரப்பட்டாள்: அவளே இதை ஒப்புக் கொண்டாள், அவள் வாஸ்யாவை தனியாகக் கூப்பிட்டு அவனுடைய நண்பன் மிக உயர்வானவன், அன்பான இளைஞன், முக்கியமானது என்னவெனில் மிக கண்டிப்பான, கம்பீரமான இளைஞன் என்று கூறினாள். வாஸ்யா பேரானந்தத்தால் வாய் விட்டு சிரித்து விட இருந்தான். கால் மணி நேரத்திற்கு முன் அந்த கம்பீரமான மனிதன் தன்னைக் கட்டிலில் வைத்து ஆட்டியது அவன் நினைவிற்கு வந்தது. பிறகு கிழவி வாஸ்யாவைப் பார்த்து கண்களால் சைகை செய்து தன்னைப் பின் தொடர்ந்து அரவமின்றி, கவனமாக அடுத்த அறைக்கு வருமாறு சொன்னாள். லீஸன்கா விஷயத்தில் அவள் சிறிது மோசமாக நடந்து கொண்டாள் என்று ஒப்புக் கொள்ள வேண்டும்: அவள் அதி மகிழ்ச்சியின் காரணமாக, பெண்ணுக்குத் தெரியாமலே, அவள் புத்தாண்டிற்காக வாஸ்யாவிற்கு தயார்படுத்தியிருந்த பரிசைக் காட்ட முடிவு செய்தாள். அது ஆபரணக் கற்களாலும் தங்க இழையாலும் அழகுபடுத்தப்பட்ட பர்சாகும், அதில் மிக அழகிய ஓவியம் இருந்தது: அதி வேகமாக ஓடக் கூடிய நிஜ மானை மிகவும் ஒத்திருந்த மான் ஒரு புறம் இருந்தது, அது அவ்வளவு நிஜமான

தாக, அழகாக இருந்தது. மறு புறத்தில் ஒரு பிரபல ஜெனரலின் படம் இருந்தது. அது தத்ரூபமாக, அழகாக வரையப்பட்டிருந்தது. வாஸ்யாவின் களிப்பைப் பற்றி சொல்லத் தேவையில்லை. இதனிடையே ஹாலிலும் நேரம் வீணுகக் கழியவில்லை. லீஸன்கா நேரடியாக அர்க்காதி இவானவிச்சின் அருகே வந்தாள். அவள் அவனுடைய கரங்களை எடுத்து, எதற்காகவோ நன்றி சொன்னுள், விலைமதிப்பற்ற அதே வாஸ்யாவைப் பற்றிய விஷயம்தான் என்பது இறுதியில் அர்க்காதி இவானவிச்சுக்குப் புரிந்தது. லீஸன்கா மிகவும் மனம் இளகி இருந்தாள்: அர்க்காதி இவானவிச் தன் காதலனின் மிக உண்மையான நண்பன் என்றும் அவனை மிகவும் நேசித்து வந்தான் என்றும் ஒவ்வொரு கட்டத்திலும் அவனைக் கவனித்து நல்ல அறிவுரைகளை வழங்கினுன் என்றும் அவள் கேள்விப்பட்டிருந்ததால் அவளால் அவனுக்கு நன்றி சொல்லாமல் இருக்க முடியவில்லை, தன் நன்றியைக் காட்டாமலிருக்க முடியவில்லை, அர்க்காதி இவானவிச் வாஸ்யாவை நேசிப்பதில் பாதியளவாவது தன்னை நேசிப்பான் என்று அவள் நம்பினுள். பின் அவள், வாஸ்யா தன் உடல் நலத்தை கவனித்துக் கொள்கிறுனு என்று கேட்டாள், அவனுடைய குணத்தின் விசேஷ உற்சாகத் தன்மையைப் பற்றியும் மக்கள் மற்றும் நடைமுறை வாழ்வைப் பற்றி போதுமான அளவு நடைமுறை ஞானம் இல்லாதது பற்றியும் சில கவலைகளைத் தெரிவித்தாள், காலப்போக்கில் பயபக்தியோடு தான் அவனை கவனித்துக் கொள்வதாயும் அவனுடைய எதிர்காலத்தை பேணிப் பாதுகாக்கப் போவதாயும் அர்க்காதி இவானவிச் அவர்களை விட்டு அகலாதது மட்டுமல்ல அவர்களோடு கூடச் சேர்ந்து வாழ வேண்டும் என்று தான் நம்புவதாயும் அவள் கூறினுள்.

''நாம் மூவரும் சேர்ந்து ஒருவரைப் போல் வாழுவோம்!'' என்று குழந்தைத் தனமான குதூகலத்தில் கூச்சலிட்டாள் அவள்.

ஆனுல் திரும்பிப் போக வேண்டியிருந்தது. போக வேண்டாம் என்று தடுக்கப் பார்த்தார்கள். ஆனுல் வாஸ்யா முடியாது என்று உறுதியாகச் சொல்லிவிட்டான். அர்க்காதி இவானவிச்சும் அப்படியே சொன்னுன். ஏன் என்று கேட்டதற்கு, ஜூலியன் மஸ்தாக்கொவிச் வாஸ்யாவிற்கு தந்துள்ள அவசரமான, அவசியமான, முக்கியமான வேலை உள்ளது,

இதை நாளை மறுநாள் முடிக்க வேண்டும், இதை முடிக்காதது மட்டுமில்லை, முற்றிலுமாக வேலை ஆரம்பிக்கப்படவேயில்லை என்று உடனடியாகப் பதில் வந்தது. இதைக் கேட்டதும் அம்மா ஆவென வாய் பிளந்தாள், லீஸன்கா பயம் கொண்டாள், கவலைப்பட்டு வாஸ்யாவை துரத்தக் கூடச் செய்தாள். இதனுல் கடைசி முத்தத்திற்கு எவ்விதக் குறையும் இருக்கவில்லை; அது சிறிய, அவசர முத்தமாயிருந்தாலும் அன்பான, உறுதியான முத்தமாயிருந்தது. இறுதியாக விடை பெற்றுக் கொண்டு இரண்டு நண்பர்களும் வீடு நோக்கி புறப்பட்டனர்.

தெருவிற்கு வந்ததுமே இருவரும் தத்தம் கருத்துகளை ஒருவருக்கொருவர் உடனடியாகச் சொல்லத் துவங்கினர். இது இப்படித்தான் இருக்க முடியும்: அர்க்காதி இவானவிச் காதல் வயப்பட்டிருந்தால், லீஸன்கா மீது பயங்கரக் காதல் கொண்டிருந்தான்! மிக மகிழ்ச்சிகரமான வாஸ்யாவால் அல்லாது வேறு யாரால் இதை நம்ப முடியும்? அவன் அப்படியே செய்தான்: அவன் வெட்கப்படாமல் உடனேயே வாஸ்யாவிடம் எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டான். வாஸ்யா பயங்கரமாகச் சிரித்தான், பெரும் மகிழ்ச்சியடைந்தான், இப்போது அவர்கள் இன்னமும் நெருங்கிய நண்பர்களாயிருப்பார்கள் என்பது நல்லதே என்று கூட குறிப்பிட்டான். ''வாஸ்யா, நீ என்னைப் புரிந்து கொண்டாய்,'' என்று சொன்னுன் அர்க்காதி இவானவிச். ''ஆம்! நான் உன்னை நேசிப்பது போன்றே அவளையும் நேசிக்கிறேன், அவள் உனக்கு இருப்பதைப் போன்றே என்னுடைய தேவதையாகவும் இருப்பாள், எனவே உங்களுடைய மகிழ்ச்சி என்னையும் தழுவும், அது என்னை உற்சாகமுறச் செய்யும். வாஸ்யா, அவள்தான் என் வீட்டரசியாக இருப்பாள்; என் மகிழ்ச்சி அவளுடைய கரங்களில் இருக்கும்; உன்னைக் கவனித்து கொள்வதைப் போன்றே என்னையும் கவனித்து கொள்ளட்டும். உன்னுடன் உள்ள நட்பு அவளுடன் உள்ள நட்பாக இருக்கும்; நீங்கள் என்னைப் பொறுத்தமட்டில் இப்போது பிரிக்க இயலாதவர்கள்; ஒருவனுக்குப் பதில் உன்னைப் போல் இருவர் இப்போது எனக்கு இருக்கின்றுர்கள்...'' அர்க்காதி உணர்ச்சி வசப்பட்டதால் மௌனமானுன்; வாஸ்யாவோ அவனுடைய வார்த்தைகளைக் கேட்டு மனம் நெகிழ்ந்தான். ஏனெனில் அவன் அர்க்காதியிடமிருந்து இப்

படிப்பட்ட வார்த்தைகளை எதிர்பார்க்கவில்லை. அர்க்காதி இவானவிச்சுக்கு பொதுவாகப் பேசவே வராது, கனவு காணவோ முற்றிலுமாகத் தெரியாது; இப்போது இவையெல்லாம் மறைந்து போய் மிக மகிழ்ச்சியான, மிகப் பசுமையான, மிக உற்சாகமான கனவுகள்! ''உங்கள் இருவரையும் நான் எப்படித்தான் பேணிப் பாதுகாத்து, பராமரிக்கப் போகிறேனே!'' என்று மீண்டும் கூறினன் அர்க்காதி. ''வாஸ்யா, முதலாவதாக, நான் ஒரு குழந்தை பாக்கி விடாமல் உன்னுடைய எல்லா குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் செய்யப் போகிறேன், இரண்டாவதாக, வாஸ்யா, எதிர்காலத்தைப் பற்றியும் கவனம் கொள்ள வேண்டும். கட்டில், மேசை, நாற்காலிகள் வாங்க வேண்டும், வீடு வாடகைக்கு எடுக்க வேண்டும், அதில் அவளுக்கும் உனக்கும் எனக்கும் தனியறைகள் இருக்க வேண்டும். வாஸ்யா, நான் நாளையே ஓடிப்போய் வாசலில் தொங்க விடும் விளம்பர அட்டைகளை பார்க்கிறேன். மூன்று... இல்லையில்லை, இரண்டு அறைகள் போதும், அதற்கு மேல் நமக்கு வேண்டாம். வாஸ்யா, நான் இன்று பேசியது கூட பொருளற்றது என்று நினைக்கிறேன், பணம் நமக்கு வரும்; என்ன தெரியுமா! நான் அவளுடைய கண்களைப் பார்த்த அந்த கணமே பணம் வரும் என எனக்குப் பட்டது. எல்லாம் அவளுக்காக! ஓ, எப்படி வேலை செய்யப் போகின்றோம் தெரியுமா! வாஸ்யா, அடுத்தபடியாக துணிந்து வீட்டிற்காக ஒரு இருபத்தைந்து ரூபிள்களைச் செலுத்த வேண்டும். வீடு, தம்பி, அதுதான் முக்கியம்! நல்ல அறைகள்... அவற்றில் நாம் மகிழ்ச்சியாக இருக்கலாம், நல்ல கனவுகள்! இரண்டாவதாக, லீஸன்கா பொதுவாக நம் கணக்கு வழக்குகளைப் பார்த்து கொள்வாள்: ஒரு கோப்பெக் கூட தவறவிடக் கூடாது! நான் இனிமேல் கேளிக்கைகளுக்கு போக மாட்டேன்! நீ என்னை யாரென்று நினைத்தாய்? அதெல்லாம் ஒன்றுமில்லை! கூடுதல் பணமும் விருதுகளும் வரும், ஏனெனில் நாம் மிகச் சிறப்பாக வேலை செய்வோம், ஓ! மாடுகள் நிலத்தை உழும் மாதிரி வேலை செய்வோம்!.. சற்று எண்ணிப் பார்,'' அர்க்காதி இவானவிச்சின் குரல் களிப்புணர்வால் சிறிதே கம்மியது, ''திடீரென தலைக்கு முப்பது அல்லது இருபத்தைந்து ரூபிள்கள் கூடுதலாக கிடைக்கிறது!.. ஒரு பரிசு என்றால் தொப்பி அல்லது மப்ளர் அல்லது ஏதாவது பெண்களுக்கான

காலுறை! அவள் கண்டிப்பாக எனக்கு மப்ளர் பின்னித் தர வேண்டும்; எப்படிப்பட்ட காணச்சகியாத மப்ளர் என்னிடம் உள்ளது பார்த்தாயா: மஞ்சள் கறை படிந்து, கிழிந்து போனது, இது இன்று எனக்கு நல்ல தொல்லே கொடுத்தது! ஆனுல் விஷயம் அதுவல்ல. உனக்குச் சொல்லுகிறேன்: வெள்ளி கரண்டி வகையருக்கள் பூராவையும் நான் பார்த்துக் கொள்கிறேன்! நான் உங்களுக்குப் பரிசளிக்க கடமைப்பட்டவன்—இது என்னுடைய கௌரவம், என்னுடைய சுயவிருப்பம்!.. என்னுடைய பரிசுப் பணங்கள் ஒன்றும் ஓடி விடாது. தம்பி, நான் உங்களுக்கு வெள்ளிக் கரண்டிகளேயும் நல்ல கத்திகளேயும்—வெள்ளிக் கத்திகள் அல்ல, நல்ல கத்திகளே,—கையில்லா மார்புச் சட்டையையும், இது எனக்கு ஏனெனில் நான் மாப்பிளேத் தோழனுகப் போகிறேன் அல்லவா, வாங்கப் போகிறேன். நீ இப்போது என் கண் பார்வையிலேயே இரு, இன்றும் நாளேயும் இரவு பூராவும் கையில் குச்சியோடு நான் உன்னேச் சுற்றி வருவேன், தம்பி, வேலே செய்யும்படி கட்டாயப் படுத்துவேன்: முடி! முடி, தம்பி, விரைவாக முடி! பின் மீண்டும் மாலே உல்லாசமாயிருப்போம், இருவரும் மகிழ்ச்சியாக இருப்போம்: சீட்டு விளேயாடுவோம்!.. மாலே நேரங்களில் ஒன்ருக உட்கார்ந்திருப்போம்—ஓ, எவ்வளவு நல்லது! ப்பூ, ச்சே! உனக்கு உதவ முடியவில்லேயென எவ்வளவு எரிச்சலாக உள்ளது தெரியுமா. முடிந்திருந்தால் எல்லாவற்றையும் நானே எடுத்துக் கொண்டு உனக்காக எழுதியிருப்பேன்... ஏன் நம்மிருவருடைய கையெழுத்துக்களும் ஒரே மாதிரியில்லே?''

''ஆம்!'' பதில் சொன்னுன் வாஸ்யா. ''ஆம்! சீக்கிரம் முடிக்க வேண்டும். இப்போழுது பதிஞேரு மணியிருக்குமென நினேக்கிறேன்; விரைவாகப் போகனும்... வேலேயில் இறங்கனும்!'' இதைச் சொல்லியதும், எப்போதும் சிரித்துக் கொண்டிருந்த அல்லது அளவிற்கதிகமான நட்புணர்வுகளே ஏதாவது குதூகலமான குறிப்புகளால் எப்படியாவது தடுக்க முற்பட்ட, ஒரே வார்த்தையால் மிக முழுமையான உற்சாகம் காட்டிய வாஸ்யா திடீரென சாந்தமாகி, மௌனமடைந்து, தெருவில் ஓட்டமும் நடையுமாக நடக்கத் துவங்கினுன். கிளர்ச்சி மிக்க அவனுடைய தலேயை ஏதோ ஒரு கடினமான கருத்து கெட்டிப்படுத்தியதைப் போலிருந்

தது, அவனுடைய இதயம் முழுவதுமே சுருங்கியது போலி ருந்தது.

அர்க்காதி இவானவிச் கவலைப்படக் கூட ஆரம்பித் தான்; தான் அவசரமாகக் கேட்ட கேள்விகளுக்கு வாஸ்யா விடமிருந்து பதில்கள் வரவில்லை. வாஸ்யா ஓரிரு வார்த் தைகளுடன் பல நேரங்களில் விஷயத்திற்குச் சம்பந்தமில் லாத வியப்புச் சொற்களுடன் நிறுத்திக் கொண்டான். ''உனக்கு என்ன ஆயிற்று, வாஸ்யா?'' என்று கஷ்டப்பட்டு இறுதியாக வாஸ்யாவை எட்டிப் பிடித்த அர்க்காதி, வாஸ் யாவைப் பார்த்து கத்தினன். ''நீ அவ்வளவு கவலைப்படு கிருயா என்ன?..'' ''ஓ, போதுமப்பா பேசியது!'' என்று வாஸ்யா சிறிதளவு எரிச்சலுடன் கூறினன். ''துக்கப்ப டாதே, வாஸ்யா, போதும்'', என்று குறுக்கிட்டுச் சொன் ஞன் அர்க்காதி, ''இதை விட குறுகிய நேரத்தில் அதிகமாக நீ எழுதியதை நான் பார்த்திருக்கிறேன்... உனக்கு என்ன குறைச்சல்! உன்னிடம் திறமை இருக்கிறது! கடைசியில் நிச்சயமாக வேகமாக எழுதலாம்: இந்த எழுத்துக்களை ஒன் றும் அச்செடுக்கப் போவதில்லையே. முடித்து விட முடியும்!.. நீ இப்போது கவலைப்பட்டு, கவனம் சிதறினல்தான் வேலை மெதுவாகப் போகும்...'' வாஸ்யா பதில் சொல்லவில்லை அல்லது ஏதோ முணுமுணுத்தான், இருவரும் பெரும் கவலை யுடன் வீட்டை நோக்கி ஓடினர்கள்.

வாஸ்யா உடனேயே வேலையில் இறங்கினன். அர்க்காதி இவானவிச் சாந்தமடைந்து அமைதியானன், அரவமின்றி ஆடைகளைக் களைந்து, வாஸ்யாவின் மீதுள்ள பார்வையை அகற்ருமல் கட்டிலில் சாய்ந்தான்... ஏதோவொரு அச்சத்தை வாஸ்யாவிடம் அவன் கண்டான்... ''அவனுக்கு என்ன நேர்ந்தது?'' என்று வாஸ்யாவின் வெளுத்துப் போன முகம், ஒளிர் விடும் கண்கள், அவனுடைய ஒவ்வொரு அசைவி லும் தென்பட்ட அமைதியின்மை ஆகியவற்றைப் பார்த்த படியே அர்க்காதி தனக்குத் தானே கூறிக் கொண்டான். ''அவனுடைய கை கூட நடுங்குகிறது... ப்பூ, உண்மையில்! இரண்டு மணி நேரம் தூங்கும்படி அவனுக்குச் சொன்னல் என்ன? தன்னுடைய எரிச்சலையாவது தூக்கத்தில் அகற்று வான்.'' வாஸ்யா ஒரு பக்கத்தை முடித்து, கண்களை உயர்த்தி தற்செயலாக அர்க்காதியைப் பார்த்தான், உடனேயே கண் களைத் தாழ்த்தி மீண்டும் பேனவை எடுத்தான்.

''நான் சொல்வதைக் கேள், வாஸ்யா,'' என்று திடீரென அர்க்காதி இவானவிச் தொடங்கினான். ''நீ சிறிது நேரம் தூங்கினால் நல்லது; பார், உனக்கு ஜுரமே வந்து விட்டது...''

வாஸ்யா எரிச்சலோடு ஏன் சிறிது கோபத்தோடு அர்க்காதியைப் பார்த்தான், ஆனால் பதில் சொல்லவில்லை.

''வாஸ்யா, கேள், நீ உனக்கு என்ன செய்து கொள்கிறாய்?..''

வாஸ்யா உடனேயே மனதை மாற்றிக் கொண்டான்.

''தேநீர் குடித்தால் என்ன, அர்க்காஷா?'' என்று அவன் கேட்டான்.

''ஏன்? எதற்காக?''

''பலம் வரும். எனக்கு தூங்க விருப்பமில்லை, நான் தூங்கப் போவதில்லை. நான் எழுதப் போகிறேன். இப்போது தேநீர் குடித்தால் சிறிது ஓய்வு கிடைக்கும், களைப்பும் போகும்.''

''அற்புதம் தம்பி, மிக நல்லது! நானே இப்படிக் கூற வேண்டுமென நினைத்தேன். எனக்கு எப்படி இது உதிக்கவில்லையென ஆச்சரியமாக உள்ளது. ஆனால் என்ன தெரியுமா? மாவ்ரா எழுந்திருக்க மாட்டாள், என்னவானாலும் விழிக்க மாட்டாள்...''

''அப்படியா...''

''போகட்டும், விடு!'' என்று வெறுங்காலோடு கட்டிலிலிருந்து குதித்த அர்க்காதி இவானவிச் உரக்கச் சொன்னான். ''நானே வெந்நீர் போடுகிறேன. இது எனக்குப் புதிதா என்ன?..''

அர்க்காதி இவானவிச் சமையலறைக்கு ஓடிப் போய் வெந்நீர் போடுவதில் ஈடுபட்டான்; வாஸ்யா இதனிடையே எழுதினான். அர்க்காதி இவானவிச் ஆடைகளையணிந்து, இரவில் வாஸ்யா நன்கு தனக்கு சக்தி வரவழைத்துக் கொள்ள ஏதாவது வாங்கி வர ரொட்டிக் கடைக்கு ஓடினான். கால் மணி நேரம் கழித்து வெந்நீர் மேசை மீதிருந்தது. அவர்கள் தேநீர் அருந்தினார்கள், ஆனால் பேச்சு மலரவில்லை. வாஸ்யா இன்னமும் சிதறிய சிந்தனைகளில் இருந்தான்.

''இப்போது,'' என்று ஏதோ மறு சிந்தனை செய்தது போல் அவன் இறுதியாகக் கூறினான். ''நாளை சென்று வாழ்த்து கூற வேண்டும்...''

''நீ வர வேண்டியதே இல்லை.''

''இல்லையப்பா, கூடாது'' என்றான் வாஸ்யா.

''நான் உனக்காக அனைவரிடமும் போய் கையெழுத்து போடுகிறேன்... உனக்கு என்ன! நீ நாளை வேலை செய். இன்று நான் சொன்னபடி ஐந்து மணி வரை வேலை செய்து விட்டு பின் தூங்கு. இல்லாவிடில் நீ நாளை எப்படியிருப் பாய் தெரியுமா? நான் சரியாக எட்டு மணிக்கு உன்னை எழுப்பி விடுகிறேன்...''

''ஆமாம், நீ எனக்காக கையெழுத்திட்டால் அது நன் றாக இருக்குமா?'' என்று அரை குறையாகச் சம்மதித்துக் கொண்டே வாஸ்யா கேட்டான்.

''இதை விட எது நல்லது, எல்லோரும் அப்படித்தான் செய்கின்றார்கள்!..''

''உண்மைதான், ஆனால் பயமா இருக்கு...''

''வேறென்ன வேண்டும்?''

''மற்றவர்களுக்கு அது பரவாயில்லை, ஆனால் ஜூலியன் மஸ்தாக்கொவிச் இருக்கின்றாரே—அவர், அர்க்காஷா, எனக்கு நல்லவற்றைச் செய்ய விரும்புகிறவர்; வேறு ஒரு கை என்று அவர் பார்த்து விட்டால்...''

''பார்ப்பாரா! நீ என்ன, வாஸ்யா! அவர் எப்படி கண்டு பிடிப்பார்?.. உனக்குத் தெரியுமா, நான் உன் பெயரை நீ எழுதுவது மாதிரியே எப்படி எழுதுகிறேன் என்று, அதே மாதிரி வளைவு. உண்மையாகத்தான்; நீ என்ன! யாரால் இங்கு கண்டு பிடிக்க முடியும்?..''

வாஸ்யா பதில் சொல்லாமல் தன் டம்பளரில் இருந் ததை அவசர அவசரமாகக் குடித்தான்... பின் அவன் சந் தேகத்தோடு தலையை ஆட்டினான்.

''வாஸ்யா, என்னருமை நண்பனே! நாம் ஜெயித்தாக வேண்டும்! வாஸ்யா, உனக்கு என்ன ஆயிற்று? நீ என்னை அச்சுறுத்துகிறாய்! நான் இப்போது படுக்கப் போவதில்லை, வாஸ்யா, நான் தூங்கப் போவதில்லை. எங்கே காட்டு, நிறைய பாக்கி உள்ளதா?''

வாஸ்யா அவனைப் பார்த்த பார்வையில் அர்க்காதி இவானவிச்சின் இதயம் நின்று போய் நாக்கு உலர்ந்தது.

''வாஸ்யா! உனக்கு என்ன ஆயிற்று? என்ன? நீ ஏன் என்னை அப்படிப் பார்க்கிறாய்?''

''அர்க்காதி, நான் நாளை ஜுலியன் மஸ்தாக்கொவிச்சுக்கு வாழ்த்து சொல்லப் போகிறேன்.''

''சரி, அப்படியேச் செய்!'' என்று அலுப்பூட்டும் எதிர்பார்ப்போடு அவன் மீது வைத்த கண் வாங்காது அர்க்காதி கூறினர்.

''கேள், வாஸ்யா, சீக்கிரமாக எழுது; நான் உனக்கு தீமையை ஆலோசனை கூறவில்லை, கடவுளே! உன்னுடைய தெளிவுதான் தனக்கு மிகவும் பிடித்துள்ளதாக ஜுலியன் மஸ்தாக்கொவிச் எவ்வளவு முறை கூறியுள்ளார்! ஸ்கரப்லியோஹின் தான் அரிச்சுவடி புத்தகத்தில் இருப்பதுபோல் தெளிவாகவும் அழகாகவும் இருக்க வேண்டுமென்று விரும்புவான், ஏனெனில் அப்போதுதானே அவனல் இதைக் கிழித்தெடுத்து குழந்தைகள் எழுதுவதற்காக வீட்டிற்கு எடுத்துச் செல்ல முடியும். அவனல் இதை வாங்க முடியாது போலும்! ஜுலியன் மஸ்தாக்கொவிச் எவ்வளவு சொல்கின்றரோ அவ்வளவை எதிர்பார்க்கவும் செய்வார்: தெளிவாக, தெளிவாக, தெளிவாக!.. உனக்கு என்ன வேண்டும்! உண்மையில், வாஸ்யா, எனக்கு உன்னுடன் எப்படிப் பேசுவதெனத் தெரியவில்லை... எனக்கு பயமாகக் கூட இருக்கிறது... உன்னுடைய அலுப்பினல் என்னைக் கொல்லுகிருய்.''

''பரவாயில்லை, பரவாயில்லை!'' என்று கூறிய வாஸ்யா சோர்வினல் நாற்காலியில் விழுந்தான். அர்க்காதி பயந்தே விட்டான்.

''வாஸ்யா! வாஸ்யா! தண்ணீர் வேண்டுமா?''

''வேண்டாம், வேண்டாம்,'' என்று அவனுடைய கையைப் பிடித்து அழுத்தியபடியே வாஸ்யா சொன்னன். ''எனக்கு ஒன்றுமில்லை; எனக்கு துக்கம் பொங்கி வந்தது, அர்க்காதி. எதனல் என்று எனக்கு தெரியாது. வேறு எதைப் பற்றியாவது பற்றி பேசேன்; எனக்கு அதைப் பற்றி நினைவு படுத்தாதே...''

''சாந்தமடை, வாஸ்யா, கடவுள் புண்ணியத்திலே அமைதியா இரு. கடவுளே நீ முடித்து விடுவாய், நிச்சயம் முடித்து விடுவாய். முடிக்காவிட்டாலும் தொல்லையில்லை. இது குற்றமா என்ன!''

''அர்க்காதி,'' என்று சொல்லி வாஸ்யா பார்த்த பார்வையில் அவன் நடுங்கியே போனன், ஏனெனில் வாஸ்யா எப்போதுமே இவ்வளவு பயங்கரமாக ஆனதில்லை. ''நான்

மட்டும் முன் போன்றே தனியானவனுக இருந்தால்... இல்லே! நான் அதைச் சொல்லவில்லே. எனக்கு எல்லாமே உன்னிடம் சொல்ல வேண்டும் போல், நண்பனேப் போல், நம்ப வேண்டும் போல் இருக்கிறது... சரி, உன்னே ஏன் நான் தொந்தரவு செய்ய வேண்டும்?.. பார்த்தியா, அர்க்காதி, சிலருக்கு ஏராளமாகக் கிடைக்கும், என்னேப் போன்ற சிறியோர்க்கோ சிறிதுதான் கிடைக்கும். சரி, உன்னிடமிருந்து நன்றியை எதிர்பார்த்தால் நீ அதைச் செய்திருக்க மாட்டியா?..''

''வாஸ்யா! எனக்கு உன்னே முற்றிலுமாகப் புரியவேயில்லே!''

''நான் என்றுமே நன்றி கெட்டவனுக இருந்ததில்லே,'' என்று தனக்குத்தானே வாதித்துக்கொள்வது போல் வாஸ்யா அமைதியாகத் தொடர்ந்தான். ''எனக்குத் தோன்றுவது எல்லாவற்றையும் என்னுல் சொல்ல முடியாத நிலே ஏற்பட்டால், அது ஒரு மாதிரி... அர்க்காதி, நான் உண்மையிலேயே நன்றி கெட்டவன் என்றுகிறது, அது என்னேக் கொல்லுகிறது.''

''நீ என்ன சொல்கிருய்! நீ உரிய நேரத்தில் எல்லாவற்றையும் எழுதுகிருய் என்பதிலா நன்றி முழுவதும் அடங்கியுள்ளது? வாஸ்யா, நீ என்ன சொல்கிருய் என்று யோசித்துப் பார்! இதிலா நன்றி வெளிப்படுகிறது?''

வாஸ்யா திடீரென மௌனமாகி, அர்க்காதியின் எதிர்பாராத வாதம் எல்லா சந்தேகங்களேயும் தரைமட்டமாக்கி விட்டதைப் போல் அவனே வைத்த கண் வாங்காமல் பார்த்தான். அவன் புன்முறுவல் கூட பூத்தான், ஆனுல் உடனேயே மீண்டும் முந்தைய சிந்தனேத் தோற்றத்தை மேற்கொண்டான். இப் புன்னகையை எல்லா அச்சங்களும் அகன்றதற்கான அடையாளமாயும் மீண்டும் தோன்றிய கவலேயை நல்லது ஏதாவது செய்ய வேண்டும் என்பதற்கான உறுதியின் அடையாளமாயும் எடுத்துக் கொண்ட அர்க்காதி மிகவும் மகிழ்ச்சியடைந்தான்.

''சரியப்பா அர்க்காஷா, விழி,'' என்று சொன்னுன் வாஸ்யா, ''என்னேப் பார்; நான் தூங்கினுல் கேடுதான்; இப்போது நான் வேலேயில் உட்காருகிறேன்... அர்க்காஷா!''

''என்னது?''

''இல்லை, நான் அப்படித்தான், நான் ஒன்றுமில்லை... நான் விரும்பியது...''

வாஸ்யா உட்கார்ந்து, மௌனமானுன், அர்க்காதி படுத்துக் கொண்டான். யாருமே கலோம்னு வாசிகளைப் பற்றி ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை. இருவருமே சிறிது குற்ற மிழைத்ததாக, காலம் தவறி ஒரு வேளை எண்ணியிருக்க லாம். விரைவிலேயே அர்க்காதி இவானவிச் வாஸ்யாவைப் பற்றி கவலைப் பட்டுக் கொண்டே கண்ணுறங்கினுன். தானே ஆச்சரியப்படும்படியாக அவன் சரியாக காலை எட்டு மணிக்கு கண் விழித்தான். வாஸ்யா நாற்காலியில் உட்காந்து, கையில் பேனுவைப் பிடித்தபடியே உறங்கிக் கொண்டிருந்தான், அவன் வெளிறிப் போய், களைத்திருந்தான், மெழுகுவர்த்தி எரிந்து போயிருந்தது. சமையலறையில் மாவ்ரா வெந்நீர் போட்டுக் கொண்டிருந்தாள்.

''வாஸ்யா, வாஸ்யா!'' என்று பயத்தில் கத்தினுன் அர்க்காதி... ''நீ எப்போது கண் மூடினுய்?''

வாஸ்யா கண் திறந்து, நாற்காலியிலிருந்து துள்ளிஎழுந் தான்...

''ஓ!'' என்ருன் அவன். ''நான் அப்படியே தூங்கிப் போய் விட்டேன்!..''

அவன் உடனேயே காகிதங்களைப் பார்த்தான்—ஒன்று மில்லை: எல்லாம் ஒழுங்காக இருந்தது; பேனுமையாலோ மெழுகுவர்த்தி எரிந்ததாலோ காகிதங்கள் பாதிக்கப்பட வில்லை.

''ஆறு மணி வாக்கில் கண் மூடினேன் என்று நினைக்கி றேன்'' என்ருன் வாஸ்யா. ''இரவு என்ன குளிர் தெரியுமா! வா, தேநீர் அருந்துவோம், பின் மீண்டும்...''

''உனக்கு பலம் வந்து விட்டதா?''

''ஆமாம், ஆமாம், இப்போது பரவாயில்லை!..''

''புத்தாண்டு வாழ்த்துகள், வாஸ்யா.''

''வணக்கமப்பா, வணக்கம். என் அன்பு நண்பா, உனக் கும் என்னுடைய வாழ்த்துகள்.''

அவர்கள் கட்டித் தழுவினர். வாஸ்யாவின் தாடை நடுங் கியது, கண்கள் குளமாயின. அர்க்காதி இவானவிச் மௌ னம் சாதித்தான்: அவனுக்கு துக்கம் பொங்கியது; இருவரும் விரைவிலேயே தேநீர் அருந்தினர்...

''அர்க்காதி! நானே ஜூலியன் மஸ்தாக்கொவிச் இடம் செல்வதென முடிவு செய்துள்ளேன்...''

''அவர் ஒன்றும் கண்டு பிடிக்க மாட்டார்...''

''ஆனால் என்னை என் மனசாட்சி தொந்தரவு செய்கிற தேயப்பா.''

''நீ அவருக்காக அல்லவா உட்கார்ந்து கொண்டு உன்னை நீயே சாகடித்துக் கொள்கிறாய்... போதும்! நான், என்ன தெரியுமா, அங்கே போய் வருகிறேன், தம்பி...''

''எங்கே?'' கேட்டான் வாஸ்யா.

''அர்தேமியெவ் வீட்டிற்கு. உன் சார்பாயும் என் சார்பாயும் வாழ்த்து சொல்லி விட்டு வருகிறேன்.''

''என்னருமை நண்பனே, இனிதவனே! ஆமாம், நான் இங்கேயே இருக்கிறேன்; நான் இங்கே வேலை அல்லவா செய்கிறேன், கொண்டாட்டத்தில் ஒன்றும் கலந்து கொள்ள வில்லையே! ஒரு நிமிடம் இரு, நான் இப்பொழுதே கடிதம் எழுதித் தருகிறேன்.''

''எழுது, தம்பி, எழுது, இன்னமும் நேரம் உள்ளது; நான் முகம் கழுவ வேண்டும், சவரம் செய்ய வேண்டும், மேலாடையை சுத்தம் செய்ய வேண்டும். நாம் திருப்தியாக வும் மகிழ்ச்சியாகவும் இருப்போம், தம்பி! என்னைக் கட்டித் தழுவு, வாஸ்யா!''

''ஓ, தம்பி, அது மட்டும்...''

''கணம் அதிகாரி ஷூம்கோவ் இங்கே வசிக்கின்றாரா?'' என்று படியருகே குழந்தைக் குரல் கேட்டது...

''இங்கேதானப்பா இருக்கிறார்'' என்று மாவ்ரா சொல் லியபடியே விருந்தினரை உள்ளே விட்டாள்.

''என்ன அங்கே? என்ன, என்ன?'' நாற்காலியிலிருந்து துள்ளியெழுந்து முன்னறையை நோக்கிப் பாய்ந்தபடியே வாஸ்யா சத்தமாகக் கேட்டான். ''பேத்யா, நீயா?..''

''வணக்கம், புத்தாண்டு வாழ்த்துகள், வசீலி பெத்ரோ விச், உங்களுக்கு வாழ்த்து சொல்லுவது ஒரு கௌரவம்'' என்று நல்ல, கறுப்பு நிறச் சுருள் முடியுடைய பத்து வயது சிறுவன் கூறினான். ''அக்கா உங்களுக்கு தன் வணக்கத்தைச் சொன்னாள், அம்மாவும் கூட, அக்கா தன் சார்பில் உங்களை முத்தமிடச் சொன்னாள்...''

வாஸ்யா அத்தூதுவனை தூக்கி உயரே போட்டுப்பிடித்து லீஸன்காவின் உதடுகளை மிகவும் ஒத்திருந்தன அவனுடைய

உதடுகளில் தன் உதடுகளைப் பதித்தான், தேன் போன்று இனிய, நீண்ட, உற்சாகமான முத்தம்.

''முத்தமிடு, அர்க்காதி!'' என்று கூறிய அவன் இவனிடம் பேத்யாவைக் கொடுத்தான். பேத்யா தரையைத் தொடாமலேயே அர்க்காதி இவானவிச்சின் உண்மையிலேயே பலத்த, பேராசை மிக்கத் தழுவலில் சிக்குண்டான்.

''என்னியவனே, தேநீர் குடிக்கிருயா?''

''மிக்க நன்றிங்க. நாங்கள் ஏற்கனவே குடித்து விட்டோம்! இன்று சீக்கிரமே எழுந்தோம். எங்கள் வீட்டார் தொழுகைக்காக மாதாகோவிலுக்கு போய் விட்டார்கள். அக்கா இரண்டு மணி நேரம் எனக்கு தலை வாரி விட்டாள், பவுடர் போட்டாள், கழுவி விட்டு சுத்தப்படுத்திஞள், என்னுடைய காற்சட்டைகளைத் தைத்தாள், ஏனெனில் நேற்று சாஷ்காவுடன் தெருவில் விளையாடும் போது அவற்றைக் கிழித்து விட்டேன்; நாங்கள் பனிக் கட்டிகளை வீசி விளையாடிஞேம்...''

''அப்படியா!''

''ஆமாம், உங்களிடம் போகச் சொல்லி என்னை அழகு படுத்திஞள்; பின் நினைவுபடுத்திஞள், பின் நன்கு முத்தமிட்டுச் சொன்ஞள்: வாஸ்யாவிடம் போ, வாழ்த்துச் சொல், அவர்கள் நன்ருக இருக்கின்ருர்களா, அமைதியாகத் தூங்கிஞர்களா என்று கேள், இன்னும்... இன்னும் ஏதோ கேட்கச் சொன்ஞளே—ஆம்! இன்னும் நீங்கள் நேற்று எதைப் பற்றியோ... ஏதோ... இதோ நான் எழுதி வந்துள்ளேன்,'' என்று பையிலிருந்து எடுத்த காகிதத்தைப் படித்த படியே கூறிஞன் சிறுவன், ''ஆம், கவலைப்பட்டீர்களே அதை முடித்து விட்டீர்களா என்றும் கேட்கச் சொன்ஞள்.''

''முடித்து விடுவேன், முடித்து விடுவேன்! அப்படியே அவளிடம் சென்று சொல், கண்டிப்பாக முடித்து விடுவேன், சத்தியம்!''

''ஆம், இன்னும் ஒன்று... ஓ, நான் மறந்துவிட்டேன்; அக்கா சிறு துண்டு கடிதமும் பரிசும் கொடுத்தாள், நான் மறந்தே விட்டேன்!..''

''ஆண்டவனே!.. ஓ, என் இனியவனே! எங்கே... எங்கே? இதுவா?! இங்கே பாரப்பா என்ன எழுதியுள்ளது என்று. என் இனியவளே, அன்பே! தெரியுமா, நான் எனக்கான ஒரு பர்சை அவளிடம் பார்த்தேன்; அது இன்னமும்

முழுமையடையவில்லை. எனவே அவள் ஒரு மயிர்கற்றையை அனுப்பி விட்டு மற்றதை பின்னர் அனுப்புவதாகச் சொன்னாள். பாரப்பா, பார்!''

வாஸ்யா உற்சாகம் கரை புரண்டோட அடர்த்தியான, உலகிலேயே கருமையான மயிர்ச் சுருளை அர்க்காதி இவானவிச்சுக்குக் காட்டினான்; பின் அன்போடு அதை முத்தமிட்டு பக்கவாட்டுப் பையில், இதயத்திற்கு அருகே வைத்துக் கொண்டான்.

''வாஸ்யா, அந்த மயிர்க் கற்றைக்காக நான் உனக்கு ஒரு பேழையை ஆர்டர் செய்கிறேன்!'' என்று இறுதியில் உறுதியாகச் சொன்னான் அர்க்காதி இவானவிச்.

''எங்கள் வீட்டில் சூடான கன்றுக் குட்டி கறி சமைக்கப் போகின்றார்கள், பின் நாளை மூளைக் கறி; அம்மா பிஸ்கெட் செய்ய விரும்புகிறாள்... கோதுமைக் கூழ் கிடையாது'' என்று தன் கட்டுக் கதைகளை எப்படி முடிப்பது என்று யோசித்த சிறுவன் கூறினான்.

''அட, எவ்வளவு நல்ல சிறுவன்!'' என்று சத்தமாகச் சொன்னான் அர்க்காதி இவானவிச். ''வாஸ்யா, நீ ரொம்ப சந்தோஷமான மனிதனப்பா!''

சிறுவன் தேநீரைக் குடித்து முடித்து, சிறு கடிதத்தை வாங்கிக்கொண்டு, ஆயிரம் முத்தங்களைப் பெற்றுக் கொண்டு முன்போன்றே மகிழ்ச்சியோடும் விளையாடிக்கொண்டும் வெளியே போனான்.

''சரி, தம்பி,'' என்று மகிழ்ச்சி பொங்க அர்க்காதி இவானவிச் கூறினான், ''பார்த்தாயா, எவ்வளவு நல்லது! எல்லாம் நல்லபடியாக ஆகிவிட்டது, துக்கப்படாதே, கூச்சப்படாதே, வேலையில் இறங்கு! முடி, வாஸ்யா, முடி! இரண்டு மணிக்கு நான் திரும்பி விடுவேன்; அவர்களைப் பார்த்து விட்டு பின் ஜூலியன் மஸ்தாக்கொவிச்சைப் பார்க்கப் போகிறேன்...''

''சரி, போய் வா, போய் வா... ஓ, அப்படியானால்!.. சரி, நல்லது, நடைபோடு, நல்லது,'' என்று சொன்னான் வாஸ்யா, ''நான் நிச்சயம் ஜூலியன் மஸ்தாக்கொவிச்சிடம் போகப் போவதில்லை.''

''விடைகொடு!''

''நில்லுப்பா, நில்; அவர்களுக்கு... உனக்கு தோன்று

வதையெல்லாம் சொல்; அவளுக்கு முத்தம் கொடு... வந்து சொல்லுப்பா, எல்லாவற்றையும் பின்னர் சொல்...''

''நிச்சயமா, நிச்சயமா—என்னன்னு தெரியும்! மகிழ்ச்சி உன்னை தலைகீழாக்கி விட்டது! அது எதிர்பாராதது; நேற்று முதல் நீ நீயாகவே இல்லை. நீ இன்னமும் உன்னுடைய நேற்றைய மனப் பதிவுகளிலிருந்து ஓய்வு பெறவில்லை. சரி, நீ நேராக உட்கார், என்னருமை வாஸ்யா! விடைகொடு, போய் வருகிறேன்.''

இறுதியாக நண்பர்கள் பிரிந்தனர். காலை பூராவும் கவனம் சிதறியிருந்த அர்க்காதி இவானவிச், வாஸ்யாவைப் பற்றி மட்டுமே சிந்தித்தான். அவனுடைய பலவீனமான, எரிச்சலூட்டும் குணம் அவனுக்குத் தெரியும். ''ஆம், அந்த மகிழ்ச்சி அவனைத் தலைகீழாக மாற்றி விட்டது, நான் தவருக கணிக்கவில்லை!'' என்று தனக்குத் தானே அவர் கூறிக் கொண்டார். ''கடவுளே! அந்த ஏக்கத்தை அவன் எனக்கும் கொடுத்துவிட்டான். எதிலிருந்து இவனுல் சோகத்தை உண்டாக்க முடிகிறது! எப்படிப்பட்ட உணர்ச்சி வசப்பட்டவன்! ஓ, அவனைக் காப்பாற்ற வேண்டும், நிச்சயம் காப்பாற்ற வேண்டும்!'' என்று அநேகமாக சிறிய வீட்டுக் கவலைகளை, சாராம்சத்தில் ஒன்றுமே இல்லாதவற்றை தானே தன் மனதில் தொல்லைகளாக மாற்றி விட்டதை கவனிக்காமலேயே அர்க்காதி சொன்னுன். ஜூலியன் மஸ்தாக்கொவிச்சின் வரவேற்பறையில் சுற்றிலும் கோடுகளிடப்பட்டு வைக்கப்பட்டிருந்த காகிதத்தில் இருந்த மரியாதைக்குரிய நபர்களின் நீண்ட பட்டியலில் தன்னுடைய சிறு பெயரையும் எழுதுவதற்காக வரவேற்பறைக்கு பதிஞேரு மணிக்குதான் அவன் வந்தான். ஆனுல் அவனுடைய கண்களுக்கு முன் வாஸ்யா ஷூம்கோவின் சொந்தக் கையெழுத்து மின்னிய போது அவன் பெரும் ஆச்சரியம் அடைந்தான். அது அவனை வியப்பில் ஆழ்த்தியது.''அவனுக்கு என்ன நேர்ந்தது?'' என்று எண்ணினுன் அர்க்காதி. சற்று முன்வரை இன்னமும் நம்பிக்கையோடிருந்த அர்க்காதி இவானவிச் மனமுடைந்து வெளியே வந்தான். உண்மையிலேயே தொல்லை தயாராகி வந்தது: ஆனுல் எங்கே? எப்படிப்பட்ட தொல்லை?

அர்க்காதி மோசமான மனநிலையில் கலோம்னுவிற்கு வந்தான். முதலில் குழப்பமாகக் காணப்பட்டான், ஆனுல் லீஸன்காவுடன் பேசியபின் கண்களில் கண்ணீருடன் வெளி

யே வந்தான், ஏனெனில் வாஸ்யாவிற்காக மிகவும் பயப் பட்டான். ஓட்டமும் நடையுமாக வீடு நோக்கிச் சென்ற அவன் நீவா ஆற்றின் கரையில் ஷும்கோவுடன் முட்டிக் கொள்ளப் பார்த்தான். இவனும் ஓடிக் கொண்டிருந் தான்.

''நீ எங்கே போகிருய்?'' உரக்கக் கேட்டான் அர்க்காதி இவானவிச்.

குற்றவாளி கையுங்களவுமாக பிடிபட்டது போல் வாஸ் யா நின்ருன்.

''நான் அப்படியே வந்தேனப்பா, உலாவ வந்தேன்.''

''தாங்க முடியாமல் கலோம்னுவிற்கு போகிருயா? ஓ! வாஸ்யா, வாஸ்யா! சரி, நீ ஏன் ஜூலியன் மஸ்தாக்கொவிச் சின் வீட்டிற்குப் போனுய்?''

வாஸ்யா பதில் சொல்லவில்லை; பின் கைகளை வீசிய படியே சொன்னுன்:

''அர்க்காதி! எனக்கு என்ன ஆகிவிட்டது என்றே எனக்கு தெரியவில்லை! நான்...''

''போதும், வாஸ்யா, போதும்! அது என்னவென்று தான் எனக்குத் தெரியுமே. அமைதியாக இரு! நேற்றிலி ருந்து நீ உணர்ச்சி வசப்பட்டு நிலைகுலைந்து போயிருக்கிருய். யோசித்துப் பார்: எப்படி உன்னுல் அதையெல்லாம் தாங்க முடிகிறது? எப்படி உன்னுல் அதையெல்லாம் தாங்க முடி கிறது? எல்லோரும் உன்னை நேசிக்கின்றனர், உன்னையே சுற்றி வருகின்றனர், உன் வேலை நடந்து கொண்டிருக்கிறது, நீ அதை முடித்து விடுவாய், கண்டிப்பாக முடிப்பாய், எனக்குத் தெரியும்: நீ எதையோ கற்பனை செய்கிருய்,உன் னிடம் ஏதோ அச்சங்கள்...''

''இல்லை, ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை...''

''நினைவிருக்கிறதா, வாஸ்யா, யோசித்துப் பார், இதே மாதிரி உனக்கு நடந்திருக்கிறது: உனக்கு பதவி வந்த போது நீ மகிழ்ச்சியாலும் நன்றியாலும் பொருமையை இரட்டிப்பாக்கி ஒரு வாரம் உன்னுடைய வேலையை மோச மாகச் செய்தாய். அதேதான் இப்போதும் நடக்கிறது...''

''ஆமாம், அமாம், அர்க்காதி; ஆனுல் இப்போது வே ருென்று, முற்றிலும் அதுவல்ல...''

''இரு, இரு எப்படி அதுவல்ல! ஒரு வேளை காரியம்

அவசரமற்றதாக இருக்கலாம், நீயோ உன்னையே சித்திர வதை செய்து கொள்கிறாய்...''

''பரவாயில்லை, பரவாயில்லை, நான் சும்மா சொன்னேன். சரி, பேகலாம் வா!''

''நீ ஏன் வீட்டிற்குப் போகிறாய், அவளுடைய வீட்டிற்குப் போகவில்லையா?''

''இல்லையப்பா, நான் எந்த முகத்தோடு அங்கு போய் நிற்பது?.. நான் மனதை மாற்றிக் கொண்டேன். என்றால் நீயின்றி தனியாக உட்கார்ந்திருக்க முடியவில்லை; இதோ இப்போது நீ என்னுடன் இருக்கிறாய், நான் உட்கார்ந்து எழுதப் போகிறேன். போகலாம், வா!''

அவர்கள் நடந்தனர், சிறிது நேரம் மௌனம் நிலவியது. வாஸ்யா அவசர அவசரமாக நடந்தான்.

''அவர்களைப் பற்றி நீ ஏன் என்னிடம் ஒன்றும் கேட்கவில்லை?'' கேட்டான் அர்க்காதி இவானவிச்.

''ஓ, ஆமாம்! அர்க்காதி, என்ன ஆயிற்று சொல்.''

''வாஸ்யா, நீ உன்னைப் போன்றே இல்லை!''

''சரி, சரி, பரவாயில்லை. எல்லாவற்றையும் எனக்குச் சொல், அர்க்காதி!'' என்று மேற்கொண்டு விளக்கங்களைத் தவிர்க்க முயலுவது போல் கெஞ்சும் குரலில் வாஸ்யா கேட்டான். அர்க்காதி இவானவிச் பெருமூச்சு விட்டான். வாஸ்யாவைப் பார்த்த அவன் பெரிதும் கவலைப்பட்டான்.

கலோம்னு வாசிகளைப் பற்றியச் செய்திகள் அவனை உற்சாகப் படுத்தின. அவன் உரையாடக் கூடத் துவங்கினான். அவர்கள் மதிய உணவு அருந்தினர். கிழவி அர்க்காதி இவானவிச்சின் பை நிறைய போட்டு அனுப்பியிருந்த பிஸ்கெட்டுகளை நண்பர்கள் சாப்பிட்டுக் கொண்டே மகிழ்ச்சியாக இருந்தனர். இரவு பூராவும் உட்கார்ந்திருக்கும் பொருட்டு மதிய உணவிற்குப்பின் தூங்குவதாக வாஸ்யா வாக்களித்தான். அவன் உண்மையாகவே படுத்துக் கொண்டான். காலையில், தட்டிக் கழிக்க முடியாத யாரோ ஒருவர் அர்க்காதி இவானவிச்சைத் தேநீர் அருந்த கூப்பிட்டார். நண்பர்கள் பிரிந்தனர். முடிந்த வரை விரைவாக, ஏன் எட்டு மணிக்கே திரும்புவதாக அர்க்காதி உறுதி கூறினான். மூன்று மணி நேரப் பிரிவு அவனுக்கு மூன்று ஆண்டுகளைப் போலிருந்தது. இறுதியாக அவன் வாஸ்யாவைக் காண ஓடோடி வந்தான். அறையில் நுழைந்த அவன் எங்கும் இருட்டாக

இருந்ததைப் பார்த்தான். வாஸ்யா வீட்டில் இல்லை. அவன் மாவ்ராவைக் கேட்டான். வாஸ்யா எழுதிக் கொண்டிருந்ததாயும் தூங்கவேயில்லை என்றும் பின் அறையில் குறுக்கும் நெறுக்கும் நடந்ததாயும் அதற்குப்பின் ஒரு மணி நேரத்திற்கு முன், அரை மணியில் வந்து விடுவதாகச் சொல்லி விட்டு சென்றதாயும் மாவ்ரா சொன்னுள்; ''அர்க்காதி இவானவிச் வந்து கேட்டால், நான் உலாவப் போயிருப்பதாகச் சொல் என்று மூன்று முறை, இல்லையில்லை நான்கு முறை கட்டளையிட்டார்'' என்று முடிவாகக் கூறினுள் மாவ்ரா.

''அர்தேமியெவ்களுடைய வீட்டிற்கு அவன் போயிருக்க வேண்டும்!'' என்று நினைத்த அர்க்காதி இவானவிச் தலையை ஆட்டினுன்.

ஒரு நிமிடம் கழித்து அவன் நம்பிக்கையோடு துள்ளி யெழுந்தான். வாஸ்யா முடித்திருப்பான் என்று நினைத்தான் அர்க்காதி. அவ்வளவுதான், பொறுமையின்றி அங்கு ஓடியிருப்பான். இல்லை! அவன் எனக்காக காத்திருந்திருக்கனும்... அவன் வேலை எப்படியிருக்கிறது என்று பார்ப்போமே!

அவன் மெழுகுவர்த்தியை ஏற்றி வாஸ்யாவின் மேசையை நோக்கிப் பாயந்தான்: வேலை நடந்து கொண்டிருந்தது, முடிவு ஒன்றும் அவ்வளவு தொலைவில் இல்லை என்று தோன்றியது. அர்க்காதி இவானவிச் மேற்கொண்டு ஆராய விரும்பினுன், ஆனுல் திடீரென வாஸ்யா உள்ளே வந்தான்...

''ஓ, நீ இங்கேயா இருக்கிருய்?'' என்று பயத்தால் நடுங்கியபடியே உரக்க கூவினுன் அவன்.

அர்க்காதி இவானவிச் மௌனம் சாதித்தான். அவன் வாஸ்யாவைக் கேட்கப் பயப்பட்டான். இவனே கண்பார்வையைத் தாழ்த்திக் கொண்டு மௌனமாக காகிதங்களைப் புரட்ட ஆரம்பித்தான். இறுதியாக அவர்களுடைய கண்கள் சந்தித்து கொண்டன. வாஸ்யாவின் பார்வை மன்றுடும், கெஞ்சும், மனம் நொந்த பார்வையாக இருந்தது, இதைக் கண்ட அர்க்காதி நடுங்கிப் போனுன். அவனுடைய இதயம் ஆடிப் போய், அடித்துக் கொண்டது...

''வாஸ்யா, என் தம்பி, உனக்கு என்ன நேர்ந்தது? உனக்கு என்ன?'' என்று அவனை நோக்கிப் பாய்ந்து, அவனைக் கட்டிப் பிடித்து கத்தினுன். ''எனக்குச் சொல்; நீயும் உன்

னுடைய கவலைகளும் எனக்குப் புரியவில்லை; வதைபடுப வனே, உனக்கு என்ன ஆயிற்று? என்ன? இரகசியங்களை மறைக்காது எல்லாவற்றையும் சொல். இது மட்டும் உன்னை இப்படி ஆக்கியிருக்க முடியாது...''

வாஸ்யா அவனை இறுகத் தழுவினான். அவனால் ஒன்றுமே பேச முடியவில்லை. அவன் திக்கு முக்காடிப் போனான்.

''போதும், வாஸ்யா, போதும்! நீ முடிக்கவில்லையெனில், என்ன ஆகும்? எனக்கு உன்னைப் புரியவில்லை; உன்னுடைய துன்பங்களை என்னிடம் சொல். நான் உனக்காகத் தானே... ஓ, கடவுளே, கடவுளே!'' அறையில் அங்குமிங்கும் நடந்து கொண்டே, வாஸ்யாவிற்கான மருந்தை தேடுவது போல் கையில் பட்டதையெல்லாம் எடுத்துக் கொண்டு கூறினான் அவன். ''நானே நாளை உனக்குப் பதிலாக ஜூலியன் மஸ்தாக்கொவிச்சிடம் செல்கிறேன், இன்னும் ஒரு நாள் கெடு தரும்படி அவரைக் கேட்கப் போகிறேன், அவரிடம் மன்றாடப் போகிறேன். அது மட்டும் உன்னை அவ்வளவு சித்திரவதை செய்தால் நான் அவருக்கு எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்கிறேன்...''

''ஓ, கடவுளே!'' என்று கூக்குரலிட்ட வாஸ்யா சுவரைப் போல் வெளிறிப் போனான். அவன் நின்ற இடத்தில் தள்ளாடினான்.

''வாஸ்யா, வாஸ்யா!..''

வாஸ்யா தன்னைச் சுதாரித்துக் கொண்டான். அவனுடைய உதடுகள் நடுங்கின; அவன் ஏதோ சொல்ல விரும்பினான், ஆனால் மௌனமாக, நடுக்கத்துடன் அர்க்காதியின் கையைப் பிடித்து அழுத்தினான்... அவனுடைய கை சில்லிட்டிருந்தது. அர்க்காதி கவலை தரும், சித்திரவதையான எதிர்பார்ப்புடன் அவன் முன் நின்றான். வாஸ்யா மீண்டும் கண்களை உயர்த்தி அவனைப் பார்த்தான்.

''வாஸ்யா, கடவுள் உன்னுடன் இருக்கட்டும், வாஸ்யா! என் நண்பனே, என் இனியவனே, நீ என் இதயத்தை கவலைக்கு உள்ளாக்கிவிட்டாய்.''

வாஸ்யாவின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக விழுந்தது; அவன் அர்க்காதியின் மார்பில் சாய்ந்து கொண்டான்.

''அர்க்காதி, நான் உன்னை ஏமாற்றி விட்டேன்!'' சொன்னான் அவன். ''நான் உன்னை ஏமாற்றினேன்; மன்

னித்து விடு! நான் உன்னுடைய நட்பை ஏமாற்றினேன்...''

''என்ன ஆயிற்று, வாஸ்யா? என்ன?'' என்று அர்க்காதி மிகவும் அச்சத்துடன் கேட்டான்.

''இதோ!..''

வாஸ்யா ஒரு மனம் தளர்ந்த சைகையுடன், அவன் எழுதிக் கொண்டிருந்த நோட்டு புத்தகத்தைப் போன்ற ஆறு பெரிய நோட்டுப் புத்தகங்களை மேசை உள்ளிருந்து எடுத்து மேசை மீது போட்டான்.

''என்ன இது?''

''நாளை மறுநாள் நான் செய்து முடிக்க வேண்டிய வேலை. இதில் கால் பங்கைக் கூட நான் செய்யவில்லை! என்னைக் கேட்காதே... இது எப்படி நடந்தது என்று!'' தொடர்ந்தான் வாஸ்யா, அந்தக் கணமே அது தன்னை எப்படித் துன்புறுத்தியது என்று குறிப்பிட்டான். ''அர்க்காதி, என் நண்பனே! எனக்கு என்ன ஆயிற்று என்று எனக்கே தெரியாது! நான் ஏதோ ஒரு கனவிலிருந்து மீள்வது போல் உள்ளது. நான் மூன்று முழு வாரங்களை வெறுமனே இழந்தேன். நான்... நான்... அவளிடம் சென்று வந்தேன்... என் இதயம் வலித்தது, நான் துன்பப்பட்டேன்... சொல்ல முடியாத வேதனை அனுபவித்தேன்... என்னுல் எழுத முடியவில்லை; நான் அதைப் பற்றி நினைக்கக் கூட இல்லை. இப்போது, மகிழ்ச்சி வரும்போதுதான் நான் ஒரு நிதானத்திற்கு வந்தேன்.''

''வாஸ்யா!'' அர்க்காதி இவானவிச் உறுதியோடு சொன்ஞன். ''வாஸ்யா! நான் உன்னைக் காப்பாற்றுகிறேன். எனக்கு இது அனைத்தும் புரிகிறது. இது வேடிக்கையல்ல. நான் உன்னைக் காப்பாற்றுகிறேன். கேள், நான் சொல்வதைக் கேள்: நான் நாளையே ஜூலியன் மஸ்தாக்கொவிச்சிடம் போகிறேன்... தலையை ஆட்டாதே, கேள்! நடந்தது எல்லாவற்றையும் நான் அவருக்குச் சொல்லுகிறேன்; என்னை அந்த மாதிரி செய்ய விடு... நான் அவருக்கு விளக்கிச் சொல்லுகிறேன்... நான் எல்லாவற்றிற்கும் தயார்! நீ எப்படி மனமுடைந்து போயிருக்கின்ருய், நீ எப்படித் துன்புறுகிருய் என்று நான் அவருக்குச் சொல்லுகிறேன்.''

''நீ இப்போது என்னை சித்திரவதை செய்கிருய், இது உனக்குப் புரிகிறதா?'' என்று பயத்தால் சில்லிட்டுப் போன வாஸ்யா சொன்ஞன்.

அர்க்காதி இவானவிச் வெளிறிப் போனான், ஆனால் அவன் சுதாரித்துக் கொண்டு உடனேயே சிரித்தான்.

''அப்படியா? அவ்வளவுதானா?'' என்று கூறினான் அவன். ''கேள், வாஸ்யா, கேள், உனக்கு வெட்கமாக இல்லையா? நான் சொல்வதைக் கேள். நான் உன்னை துன்புறுத்துவது எனக்குத் தெரிகிறது. பார்த்தாயா, எனக்கு உன்னைப் புரிகிறது: உன்னுள் என்ன நடக்கிறது என்பது எனக்குத் தெரியும். நாம் ஐந்து ஆண்டுகள் அல்லவா ஒன்றாக வாழுகின்றோம், கடவுளுக்கு புண்ணியமாகட்டும்! நீ அன்பானவன் மென்மையானவன் ஆனால் பலவீனமானவன், மன்னிக்க முடியாத அளவிற்குப் பலவீனமானவன். லீஸன்கா கூட இதை கவனித்திருக்கிறாள். மேலும், நீ ஒரு கற்பனையாளன், இதுவும் நல்லதல்ல; பைத்தியம் பிடித்து விடக்கூடும், தம்பி! நான் சொல்வதைக் கேள், உனக்கு என்ன வேண்டும் என்று தான் எனக்குத் தெரியுமே! உதாரணமாக, ஜூலியன் மஸ்தாக்கொவிச் தன்னிலே மறந்திருக்க வேண்டுமென்றும், நீ திருமணம் செய்து கொள்வதால் அவர் ஆனந்தக் கூத்தாட வேண்டுமென்றும் உனக்கு விருப்பம்... இரு, இரு! நீ முகம் சுளிக்கிறாய். பார்த்தாயா, என்னுடைய ஒரு வார்த்தையினாலேயே நீ ஜூலியன் மஸ்தாக்கொவிச்சுக்காக கோபமடைகிறாய்! நான் அவரை விட்டு விடுகிறேன். உனக்குச் சற்றும் குறையாமல் நானும் அவரை மதிக்கிறேன்! ஆனால் நீ திருமணம் செய்து கொள்ளும் போது பூமியில் மகிழ்ச்சியற்றவர்களே இருக்கக் கூடாது என்று நீ விரும்புவதாக நான் எண்ணுவதை நீ மறுக்கமாட்டாய்... ஆமாம், தம்பி, உதாரணமாய் உன்னுடைய மிகச் சிறந்த நண்பனாகிய என்னிடம் திடீரென நூறாயிரம் மூலதனம் வரவேண்டுமென்றும்; உலகிலுள்ள எல்லா விரோதிகளும் திடீரென சமாதானமாகி, தெருவின் நடுவில் ஒருவரையொருவர் மகிழ்ச்சியால் கட்டித் தழுவி பின் உன் வீட்டிற்கு விருந்தினர்களாக வர வேண்டுமென்றும் உனக்கு விருப்பம் என்பதை ஒப்புக் கொள். என் நண்பனே! என் இனியவனே! நான் உன்னைப் பார்த்து எள்ளி நகையாடவில்லை, இது உண்மை, அப்படியே உள்ளது; நீ நீண்ட காலமாகவே கிட்டத்தட்ட இதையே பல விதங்களில் எனக்கு காட்டியிருக்கிறாய். ஏனெனில் நீ மகிழ்ச்சியானவன், அனைவரும், ஒருவர் பாக்கி விடாமல் அனைவரும் நொடிப் பொழுதில் மகிழ்ச்சியானவர்களாக ஆக

வேண்டுமென விரும்புகிருய். நீ மட்டும் மகிழ்ச்சியானவனுக இருப்பது உனக்குப் பிடிக்கவில்லை, கஷ்டமாக உள்ளது. எனவேதான் நீ இந்த மகிழ்ச்சிக்கு ஏற்றவனுக இருக்க சகலவிதங்களிலும் விரும்புகிருய், உன்னுடைய மனசாட்சியைத் தூய்மைப்படுத்த ஏதாவது தியாகம் செய்ய விரும்புகிருய்! எங்கே தேவையோ அங்கே உன் பற்றுர்வத்தையும் திறமையையும் காட்ட உன்னை நீயே துன்புறுத்திக் கொள்ளத் தயார் என்பது எனக்குப் புரிகிறது... நீ சொல்லும்படி நன்றியை நீ திடீரென அசட்டை செய்து விட்டாய்! ஜுலியன் மஸ்தாக்கொவிச் உன் மீது வைத்திருந்த நம்பிக்கைகளை நீ மெய்ப்பிக்காததைப் பார்க்கும் போது அவர் முகம் சுளிப்பார், அவருக்கு கோபம் கூட வரலாம் என்னும் சிந்தனை உனக்கு மிகவும் கசக்கிறது. நீ யாரை நல்லெண்ணம் கொண்டவராக எண்ணியிருக்கின்ருயோ அவரிடமிருந்து நிந்தனையைக் கேட்பதே—அதுவும் இந்தத் தருணத்தில்!—உனக்கு இம்சையாக உள்ளது. உன்னுடைய இதயம் மகிழ்ச்சியால் பொங்கி வழியும் போது, உன்னுடைய நன்றியை யார் மீது கொட்டுவது என்பது தெரியாத போது... அப்படித்தானே? அப்படித்தானே?''

நடுங்கியக் குரலில் பேசிய அர்க்காதி இவானவிச் தன் பேச்சை முடித்து, மூச்சு விட்டான்.

வாஸ்யா அன்புடன் தன் நண்பனைப் பார்த்தான். அவனுடைய உதடுகளில் புன்னகை மலர்ந்தது.

நம்பிக்கையின் எதிர்பார்ப்பு அவனுடைய முகத்திற்கு ஒளியூட்டியதைப் போலிருந்தது.

''சரி, அப்பொழுது நான் சொல்வதைக் கேள்,'' என்று நம்பிக்கையால் இன்னமும் அதிக உற்சாகமடைந்த அர்க்காதி மீண்டும் ஆரம்பித்தான். ''ஜுலியன் மஸ்தாக்கொவிச் உன் மீதான தன்னுடைய நல்லெண்ணத்தை மாற்ற வேண்டியதில்லை. அப்படித்தானே, என் நண்பா? இதுதானே பிரச்சினை? இதுதான் பிரச்சினை எனில் நான்,'' இடத்திலிருந்து துள்ளியெழுந்த அர்க்காதி கூறினுன், ''நான்தான் உனக்காக என்னைத் தியாகம் செய்கிறேனே. நான் நாளை ஜுலியன் மஸ்தாக்கொவிச்சிடம் செல்கிறேன்... நான் சொல்வதை மறுத்துப் பேசாதே! வாஸ்யா, நீ உன்னுடைய நடத்தையை குற்றமாக ஆக்குகிருய். ஆனுல் ஜுலியன் மஸ்தாக்கொவிச் பரந்த மனப்பாங்குடையவர், இரக்கமானவர்,

மேலும் உன்னைப் போன்றவர் அல்ல! தம்பி வாஸ்யா, அவர் நாம் சொல்வதைக் காது கொடுத்து கேட்டு நம்மைத் தொல்லையிலிருந்து மீட்பார். சரி, நீ அமைதியடைந்தாயா?''

கண்களில் கண்ணீர் தளும்ப வாஸ்யா அர்க்காதியின் கரங்களைப் பற்றி அழுத்தினான்.

''போதும், அர்க்காதி, போதும்'' என்று சொன்னான் அவன். ''பிரச்சினை தீர்ந்தது. நான் முடிக்கவில்லை, சரி அதனால் என்ன; முடிக்கவில்லை என்றால் முடிக்கவில்லை. நீ போக வேண்டாம்: நானே போகிறேன், நானே எல்லாவற்றையும் சொல்கிறேன். நான் இப்போது சாந்தமடைந்து விட்டேன், முற்றிலும் அமைதியாக இருக்கிறேன்; நீ மட்டும் போகாதே... நான் சொல்வதைக் கேள்.''

''வாஸ்யா, என் அருமை நண்பா!'' என்று ஆனந்தத்தில் கத்தினான் அர்க்காதி இவானவிச். ''நான் உன் வார்த்தைகளின்படி சொன்னேன்; நீ திரும்ப யோசித்து, நிதானமடைந்தது குறித்து எனக்கு மகிழ்ச்சி. ஆனால் உனக்கு என்ன நேரிட்டாலும், என்ன நடந்தாலும், நான் உனக்குத் துணையாக இருக்கிறேன் என்பதை நினைவில் கொள்! நான் ஜூலியன் மஸ்தாக்கொவிச்சுக்கு ஒன்றும் சொல்லி விடக் கூடாதே என்பது உன்னை வதைப்பது எனக்குத் தெரிகிறது, —நான் சொல்ல மாட்டேன், ஒன்றும் சொல்ல மாட்டேன், நீயே சொல். நீ நாளை போ... இல்லையில்லை, நீ போக வேண்டாம், நீ எழுதப் போகிறாய், புரிந்ததா? அது எப்படிப்பட்ட வேலை, அவசரமானதா இல்லையா, உரிய நேரத்தில் அது வேண்டுமா, காலதாமதமானால் என்ன ஆகும் என்றெல்லாம் நான் விசாரித்து வருகிறேன். பின் உன்னிடம் ஓடி வருகிறேன்... பார்த்தாயா, பார்த்தாயா! ஏற்கனவே நம்பிக்கை உள்ளது; அவசர வேலை இல்லை என்று வைத்துக் கொள்—நாம் ஆதாயமடையலாம். ஜூலியன் மஸ்தாக்கொவிச் நினைவில் வைத்துக் கொள்ளாமலிருக்கலாம், அப்போது எல்லாம் காப்பாற்றப்பட்டு விட்டது.''

வாஸ்யா சந்தேகத்தோடு தலையாட்டினான். ஆனால் அவன் நன்றி கலந்த பார்வையை தன் நண்பரின் முகத்திலிருந்து அகற்றவில்லை.

''சரி, போதும், போதும்! நான் மிக பலவீனமாக இருக்கிறேன், மிகக் களைத்துள்ளேன்'' என்று மூச்சு விட்டுக் கொண்டே அவன் சொன்னான். ''எனக்கே அதைப் பற்றி

நினைக்க விருப்பமில்லை. சரி, வேறு எதைப் பற்றியாவது பேசுவோம்! நான் இப்போது எழுதப் போவதில்லை, சும்மா இரண்டு பக்கங்களை மட்டும் முடித்து ஏதாவது ஒரு புள்ளி வரை வருகிறேன். கேள்... நான் நீண்ட நாட்களாக உன்னைக் கேட்க எண்ணியிருந்தேன்: உனக்கு எப்படி என்னை இவ்வளவு நன்ருகத் தெரியும்?''

வாஸ்யாவின் கண்களிலிருந்து கண்ணீர் தளும்பி அர்க்காதியின் கரங்களில் சிந்தியது.

''வாஸ்யா, நான் உன்னை எந்த அளவிற்கு நேசிக்கிறேன் என்பது மட்டும் உனக்குத் தெரிந்தால் நீ அதைக் கேட்டிருக்கவே மாட்டாய்,—ஆம்!''

''ஆமாம், ஆமாம், அர்க்காதி, எனக்குத் தெரியாது, ஏனெனில்... ஏனெனில் நீ ஏன் இப்படி நேசிக்கிருய் என்று எனக்குத் தெரியாது! ஆம், அர்க்காதி, உன்னுடைய நேசம் என்னை துன்புறுத்தக் கூடச் செய்துள்ளது உனக்குத் தெரியுமா? எவ்வளவு முறை நான் தூங்கச் செல்லும் போது உன்னைப் பற்றி எண்ணி (ஏனெனில் எப்போதும் தூங்கும் போது உன்னைப் பற்றிதான் சிந்திப்பேன்) கண்ணீர் சிந்தியிருக்கிறேன் தெரியுமா, என்னுடைய இதயம் அதனுல், எதனுல் தெரியுமா... நீ என்னை மிகவும் நேசிக்கிருய், என்னுல் இதயத்தை இலகுவாக்க முடியவில்லை, எப்படியும் நன்றி சொல்ல முடியவில்லை என்பதனுல் என் இதயம் ஆடிப் போயிருக்கிறது...''

''பார்த்தாயா, வாஸ்யா, பார்த்தாயா நீ எப்படிப்பட்டவன்!.. பார், உன்னுடைய கவனம் சிதறிப் போயுள்ளது'' என்ருன் அர்க்காதி. அவனுடைய மனது அப்போது ஏங்கியது, அவன் நேற்று வீதியில் நடைபெற்ற சம்பவத்தை எண்ணிப் பார்த்தான்.

''போதும்; நான் அமைதியடைய வேண்டுமென நீ விரும்புகிருய், ஆனுல் நாம் இப்போதுள்ளதைப் போல் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் எப்போதுமே இருந்ததில்லை! உனக்குத் தெரியுமா... கேள், எனக்கு எல்லாவற்றையும் உன்னிடம் சொல்ல வேண்டும் போலிருக்கிறது, ஆனுலும் உன்னைத் துன்புறுத்த நான் அஞ்சுகிறேன்... நீ மனம் தளர்ந்து என்னைப் பார்த்து கத்துகிருய்; நானே பயப்படுகிறேன்... பார்த்தாயா, இப்போது நான் நடுங்குகிறேன், ஏனென்று தெரியாது. நான் என்ன சொல்ல விரும்

புகிறேன் தெரியுமா. முன்பு எனக்கு தன்னைப் பற்றி தெரிந் திருக்கவில்லையெனத் தோன்றுகிறது,—ஆம்! மற்றவர்களை யும் கூட நேற்றுதான் தெரிந்து கொண்டேன். நான் உணரவே இல்லையப்பா, முழுமையாக மதிப்பிடவில்லை. இத யம்... அது இறுகிப் போயிருந்தது... உலகில் யாருக்குமே எப்படி என்ஞல் நன்மை செய்ய முடியாமல் போயிற்று என்று சொல்லேன்,—என் தோற்றம் கூட பார்க்கச் சகிக் காதது... எல்லோரும் எனக்கு நன்மையல்லவா செய்தார் கள்! இதோ நீ முதலாவதாக: நான் என்ன பார்க்காமலா இருக்கிறேன். நான் பேசாமல் இருந்தேன், அவ்வளவுதான்!''

''வாஸ்யா, போதும்!''

''என்ன, அர்க்காஷா, என்ன!.. நான் ஒன்றுமில்லாத வன்தானே...'' கண்ணீருடன் கஷ்டப்பட்டு வார்த்தைகளைச் சொன்ன வாஸ்யா குறுக்கிட்டான். ''நான் நேற்று ஜூலி யன் மஸ்தாக்கொவிச்சைப் பற்றிச் சொன்னேன். உனக்கே தான் தெரியுமே அவர் கண்டிப்பானவர், கடுமையான வர், நீ கூட சில சமயம் அவருடைய சுட்டிக்காட்டுதல் களுக்கு உள்ளாகியிருக்கிருய், என்னிடம் அவர் நேற்று நகைச்சுவையாகக் கூடப் பேசினுர், அன்பாகப் பேசினுர், மற்றவர்கள் முன் விவேகமாக மூடி மறைத்த தன் அன் பான இதயத்தைக் கூடத் திறந்து காட்டினுர்...''

''அதனுல் என்ன, வாஸ்யா? நீ உன்னுடைய மகிழ்ச் சிக்குத் தகுதியானவன் என்பதைத்தான் அது காட்டுகிறது.''

''ஓ, அர்க்காஷா! இந்த வேலையை எல்லாம் முடிக்க எனக்கு எவ்வளவு ஆசையாக உள்ளது தெரியுமா!.. இல்லை, நான் என் மகிழ்ச்சியை அழிக்கிறேன்! எனக்கு உள் உணர்வு சொல்கிறது! இல்லையில்லை, இதன் மூலமாக அல்ல,'' மேசையிலிருந்த நூறு பவுன்ட் அவசர வேலையை அர்க்காதி தொட்டதுமே குறுக்கிட்டான் வாஸ்யா, ''இது ஒன்றுமில்லை, இது எழுத்து காகிதம்... வீண் பேச்சு! இது முடிவான விஷ யம்... நான்... அர்க்காஷா, இன்று அங்கே, அவர்கள் வீட் டிற்குப் போயிருந்தேன்... ஆனுல் நான் உள்ளே போக வில்லை. எனக்கு கடினமாக, கசப்பாக இருந்தது! நான் கதவுகள் அருகில் நின்று கொண்டிருந்தேன். அவள் பியா ேனா வாசித்தாள், நான் கேட்டுக் கொண்டிருந்தேன். கேட்

டாயா, அர்க்காதி,'' என்று குரலைத் தாழ்த்தி அவன் சொன்ஞன், ''எனக்கு உள்ளே போகத் துணிவு வரவில்லை...''

''வாஸ்யா, ஆமாம், உனக்கு என்ன ஆயிற்று? நீ ஏன் என்னை அப்படிப் பார்க்கிருய்?''

''என்னவா? ஒன்றுமில்லை! எனக்கு சிறிது மோசமாக உள்ளது; கால்கள் நடுங்குகின்றன; ஏனெனில் நான் இரவு பூராவும் உட்கார்ந்திருந்தேன் அல்லவா. ஆமாம்! என் கண்கள் இருட்டிக் கொண்டு வருகின்றன. எனக்கு இங்கே, இங்கே...''

அவன் இதயத்தைக் காட்டிஞன். அவன் மயங்கி விழுந்தான்.

அவனுக்கு தன் நினைவு வந்த போது, அர்க்காதி வலுக்கட்டாயமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முயன்ருன். அர்க்காதி வாஸ்யாவை வலுக்கட்டாயமாகப் படுக்கையில் படுக்க வைக்கப் பார்த்தான். வாஸ்யா ஒத்துக் கொள்ளவே மாட்டேன் என்ருன். அவன் அழுதான், தன் கைகளை முறித்தான், எழுத விரும்பிஞன், உடனடியாக இரண்டு பக்கங்களை முடிக்க விரும்பிஞன். அவனை கோபமடையச் செய்யாமலிருப்பதற்காக அர்க்காதி அவன் காகிதங்களை நெருங்க அனுமதித்தான்.

''கேட்டாயா,'' என்று தன்னிடத்தில் உட்கார்ந்து கொண்டே சொன்ஞன் வாஸ்யா, ''எனக்கு ஒரு எண்ணம் தோன்றியுள்ளது, நம்பிக்கை உள்ளது.''

அவன் அர்க்காதியைப் பார்த்து புன்னகைத்தான், உண்மையிலேயே அவனுடைய வெளிறிய முகத்தில் நம்பிக்கை ஒளி பாய்ந்தாற் போலிருந்தது.

''என்ன தெரியுமா: நான் எல்லாவற்றையும் நாளை மறு நாள் அவரிடம் எடுத்துச் செல்லப் போவதில்லை. எஞ்சியவற்றைப் பற்றி பொய் சொல்லப் போகிறேன், எரிந்து விட்டது, ஈரமாகிப் போனது, தொலைந்து விட்டது என்று சொல்வேன்... சரி, அதஞல் என்ன, முடிக்கவில்லை என்பேன், என்ஞல் பொய் சொல்ல முடியாது. நானே விளக்குகிறேன் — நானே எல்லாவற்றையும் அவருக்குச் சொல்கிறேன்: இப்படி நடந்தது, என்ஞல் முடியவில்லை... என் காதலைப் பற்றி அவருக்குச் சொல்லுகிறேன்; அவரே சமீபத்தில் திருமணம் செய்து கொண்டவர், என்னைப் புரிந்து கொள்வார்! இதையெல்லாம் மரியாதையாக, அமைதியாக

நான் செய்வேன்; அவர் என் கண்ணீரைப் பார்ப்பார், அவை அவரது மனதை இளக வைக்கும்...''

''ஆம், நிச்சயமாக அவரிடம் போய் விளக்கமாகச் சொல்... இங்கே கண்ணீர் வேண்டாம்! எதற்காக? உண் மையில், வாஸ்யா, நீ என்னை அச்சுறுத்தி விட்டாய்.''

''ஆம், நான் போகப் போகிறேன். இப்போது என்னை எழுத விடு, அர்க்காஷா. நான் யாரையும் தொடவில்லை, என்னை எழுத விடு.''

அர்க்காதி படுக்கையில் விழுந்தான். அவன் வாஸ்யா வை நம்பவில்லை, முழுக்க நம்பவேயில்லை. வாஸ்யாவால் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும். ஆனால் மன்னிப்பு கேட்பது எதற்காக, எப்படி? அதுவல்ல விஷயம். வாஸ்யா தன் கடமைகளை நிறைவேற்றவில்லை, தனக்கு முன்னே அவன் தன்னைக் குற்றவாளியாக நினைக்கிறான், விதியின்பால் தன்னை நன்றியற்றவனாக உணருகிறான், வாஸ்யா மகிழ்ச்சியால் ஒடுக்கப்பட்டு அலைக்கழிக்கப்படுகிறான், தான் இதற்கு ஏற்ற வனல்ல என்று கருதுகிறான், இந்தப் பக்கம் திரும்புவதற் கான சாக்கை மட்டுமே அவன் கண்டு பிடித்திருக்கிறான், தனக்கு எதிர்பாராமல் நேரிட்டதிலிருந்து நேற்று முதல் அவன் மீளவில்லை என்பதுதான் விஷயம். ''இதுதான் நடந் தது!'' நினைத்தான் அர்க்காதி இவானவிச். ''அவனைக் காப் பாற்ற வேண்டும். அவனை அவனுடனேயே சமரசப்படுத்த வேண்டும். அவன் தனக்குத் தானே சமாதி கட்டிக் கொள் கிறான்.'' அவன் நன்கு நீண்ட நேரம் யோசித்து, உடனடி யாக, நாளையே ஜூலியன் மஸ்தாக்கொவிச்சிடம் போய் எல் லாவற்றையும் சொல்வதென முடிவு செய்தான்.

வாஸ்யா உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தான். விஷ யத்தை பற்றி மீண்டும் நன்கு சிந்திப்பதற்காக அலுத்துப் போயிருந்த அர்க்காதி இவானவிச் படுத்தான். விடிவதற்கு முன் அவன் கண்விழித்தான்.

''அட, சனியனே! மீண்டுமா!'' வாஸ்யாவைப் பார்த்து அவன் சத்தமாகச் சொன்னான்; வாஸ்யா உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தான்.

அர்க்காதி அவனை நோக்கிப் பாய்ந்து, பிடித்து இழுத்து, வலுக்கட்டாயமாகப் படுக்கையில் படுக்கவைத்தான்; வாஸ் யா புன்முறுவல் பூத்தான்: அவனுடைய கண்கள் பலவீனத்

தால் மூடிக் கொண்டன, அவனுல் பேசவே முடியவில்லை.

''நானே படுக்க இருந்தேன்'' என்று சொன்ஞன் அவன். ''அர்க்காதி, தெரியுமா, எனக்கு ஒரு கருத்து உள்ளது; நான் முடித்து விடுவேன். நான் விரைவாக எழுதத் துவங்கியுள்ளேன்! என்ஞல் இனி உட்கார்ந்திருக்க முடியாது; என்னை எட்டு மணிக்கு எழுப்பி விடு.''

அவன் மேற்கொண்டு பேசாமல், அடித்துப் போட்டவன் போல் உறங்கிப் போஞன்.

''மாவ்ரா!'' தேநீர் கொண்டு வந்த மாவ்ராவிடம் மெல்லியக் குரலில் அர்க்காதி இவானவிச் சொன்ஞன். ''ஒரு மணி நேரம் கழித்து தன்னை எழுப்புமாறு அவன் கேட்டுக் கொண்டான். வேண்டவே வேண்டாம்! பத்து மணி நேரம் வேண்டுமாஞலும் உறங்கட்டும், புரிந்ததா?''

''புரிந்தது, கனவானே!''

''மதிய உணவு தயாரிக்காதே, விறகுகளை அங்குமிங்கும் எடுத்துச் செல்லாதே, சத்தம் போடாதே, உனக்குத் தொல்லை! என்னைப் பற்றிக் கேட்டால், நான் வேலை நிமித்தமாகப் போயுள்ளதாகச் சொல், என்ன புரிந்ததா?''

''புரிகிறது கனவானே; முடிந்த வரை தூங்கட்டும், எனக்கு என்ன! எஜமான் பிரபு தூங்கிஞல் எனக்கு மகிழ்ச்சி; எஜமானனின் நலத்தை நான் பேணிப் பாதுகாப்பேன். நேற்று நான் கோப்பையை உடைத்ததற்காக என்னை கண்டித்தீர்கள், அது நானல்ல, மாஷ்கா பூனைதான் உடைத்தது, நான் அதைக் கவனிக்கவில்லை; ஒழிஞ்சு போ, சனியனே என்றேன்!''

''ஸ்... பேசாம இரு!''

அர்க்காதி இவானவிச் மாவ்ராவை சமையலறை வரை அழைத்துச் சென்று, அவளிடமிருந்து சாவி வாங்கி, அங்கேயே அவளை வைத்து பூட்டிஞன். பின் வேலைக்குச் சென்றுன். ஜுலியன் மஸ்தாக்கொவிச்சை எப்படிச் சந்திப்பது, அது நன்ருக இருக்குமா, மரியாதையின்மையாக இருக்காதா என்று போகும் வழியில் யோசித்தான். வேலையிடத்திற்கு அவன் வெட்கத்தோடு வந்து கூச்சப்படுக் கொண்டே மேன்மை மிகு கனவான் இருக்கின்ருரா என கேட்டான்; இல்லை என்றும் வர மாட்டார் என்றும் பதில் வந்தது. அர்க்காதி இவானவிச் உடனேயே அவருடைய வீட்டிற்குப்

போக விரும்பினுன், ஆனுல் ஜுலியன் மஸ்தாக்கொவிச் வரவில்லையெனில் வீட்டில் வேலை இருக்கும் என்று உரிய நேரத்தில் அவனுக்குப் பட்டது. அவன் போகாமல் தங்கினுன். நேரம் முடிவற்றதாக அவனுக்குத் தோன்றியது. ஷும்கோவுக்கு அளிக்கப்பட்ட வேலையைப் பற்றி அவன் விசாரித்தான். ஜுலியன் மஸ்தாக்கொவிச் அவனுக்கு ஏதோ விசேஷ வேலைகளைத் தந்திருந்தார் என்பது மட்டும்தான் தெரிந்திருந்ததே தவிர, என்ன வேலையென்று யாருக்கும் தெரியவில்லை. இறுதியாக மூன்று மணி அடித்ததும் அர்க்காதி இவானவிச் வீட்டை நோக்கிப் பாய்ந்தான். முன் அறையில் ஒரு எழுத்தன் அவனை நிறுத்தி, வசீலி ஷும்கோவ் ஒரு மணிக்கு அங்கு வந்ததாகக் கூறி மேற்கொண்டு தொடர்ந்தான்: நீங்கள் இங்கு இருக்கின்றீர்களா, ஜுலியன் மஸ்தாக்கொவிச் இங்கு வந்திருந்தாரா என்று கேட்டான். இதைக் கேட்ட பின் அர்க்காதி இவானவிச் வண்டியை அமர்த்தி கொண்டு பயத்தின் வசப்பட்டு வீடு நோச்சி விரைந்தான்.

ஷும்கோவ் வீட்டிலிருந்தான். அவன் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு அறையில் குறுக்கும் நெறுக்குமாக நடந்துகொண்டிருந்தான். அர்க்காதி இவானவிச்சைப் பார்த்ததுமே ஏதோ நிதானமடைந்து, மனம் மாறியது போல் அவசர அவசரமாக தன் கவலையை மறைக்க முயன்ருன். அவன் மௌனமாக காகிதங்களின் முன் உட்கார்ந்தான். அவன் தன் நண்பனின் கேள்விகளைத் தவிர்ப்பதாயும், அவை அவனுக்குப் பாரமாக இருப்பதாயும் பட்டது, அவன் தன்னைப் பற்றி ஏதோ நினைத்து தன் முடிவை வெளிப்படுத்துவதில்லை, ஏனெனில் இனி நட்புறவை நம்பக்கூடாது என்று தீர்மானித்தான். இது அர்க்காதியை வியப்பில் ஆழ்த்தியது, அவனுடைய இதயம் கடுமையான, ஊடுருவிப் பாய்ந்த வலியால் தவித்தது. அர்க்காதி கட்டிலில் அமர்ந்து, தன்னிடமிருந்த ஒரே புத்தகத்தைப் புரட்டினுன். தன் கண்களை மட்டும் துன்பப்பட்ட வாஸ்யாவின் மேலிருந்து அகற்றவில்லை. ஆனுல் வாஸ்யாவோ உறுதியாக மௌனம் சாதித்து எழுதிக்கொண்டிருந்தான், தலையை உயர்த்தவே இல்லை. ஒரு சில மணி நேரங்கள் இவ்வாறு கழிந்தன, அர்க்காதியின் வேதனை ஒரு எல்லையை அடைந்தது. இறுதியாக, பதினேரு மணி வாக்கில் வாஸ்யா தலையை உயர்த்தி அர்க்காதியின்

மீது தன் அழுத்தமான, அசைவற்ற பார்வையைச் செலுத்திஞன். அர்க்காதி காத்திருந்தான். இரண்டு, மூன்று நிமிடங்கள் கழிந்தன; வாஸ்யா மௌனமாக இருந்தான். ''வாஸ்யா!'' என்று கூவியழைத்தான் அர்க்காதி. வாஸ்யா பதில் சொல்லவில்லே. ''வாஸ்யா!'' கட்டிலிலிருந்து குதித்தெழுந்த அவன் மீண்டும் அழைத்தான். ''வாஸ்யா, உனக்கு என்ன ஆயிற்று? என்ன உனக்கு?'' என்று அவனே நோக்கி ஓடியபடியே கத்திஞன் அவன். வாஸ்யா தலேயை உயர்த்தி, அதே அழுத்தமான, அசைவற்றப் பார்வையை அவன் மீது செலுத்திஞன். ''அவனுக்கு திக்பிரமை பிடித்து விட்டது!'' என்று பயத்தால் நடுங்கிக் கொண்டே அர்க்காதி நினைத்தான். அவன் தண்ணீர் பாட்டிலே எடுத்து வாஸ்யாவின் அருகே கொணர்ந்து தலேயில் ஊற்றிஞன், கன்னப் பொறிகளே நனேத்து,கரங்களேத் தன் கரங்களால் தேய்த்து விட்டான், —வாஸ்யா சுய நினேவிற்கு வந்தான். ''வாஸ்யா, வாஸ்யா!'' மேற்கொண்டு கட்டுப்படுத்த இயலாமல் கண்ணீர் சிந்தியபடியே கத்திஞன் அர்க்காதி. ''வாஸ்யா, உன்னே நீயே அழித்துக் கொள்ளாதே, எழுந்திரு! எழுந்திரு!..'' அவன் மேற்கொண்டு பேசாமல் அவனே கட்டித் தழுவிஞன். ஏதோ ஒரு பார உணர்வு வாஸ்யாவின் முகம் பூராவும் பாய்ந்தது; அவன் நெற்றியைத் தடவி விட்டு, தலே ஏதோ பறந்து விடப் போவதாக அஞ்சி அதை இறுகப் பிடித்துக் கொண்டான்.

''எனக்கு என்ன ஆயிற்று என்று தெரியாது!'' அவன் இறுதியாகச் சொன்ஞன். ''நான் உடைந்துபோயிருக்கிறேன் எனத் தோன்றுகிறது. சரி, நல்லது, நல்லது! போதும், அர்க்காதி, துக்கப்படாதே; போதும்!'' சோகமான, சலிப்பான பார்வையை அவன் மீது செலுத்தியபடியே அவன் திரும்பச் சொன்ஞன், ''கவலேப்பட என்ன இருக்கிறது, போதும்!''

''நீ எனக்கு ஆறுதல் சொல்கிருய்,'' என்று உரக்கச் சொன்ஞன் அர்க்காதி, அவனுடைய இதயம் அறுந்து போயிருந்தது. ''வாஸ்யா,'' அவன் இறுதியாகச் சொன்ஞன், ''படு, சிறிது தூங்கு, என்ன? வீணுக உன்னே நீயே இம்சித்துக் கொள்ளாதே! பின்ஞல் உட்கார்ந்து வேலே செய்வதுதான் சிறந்தது!''

''ஆமாம், ஆமாம்!'' என்று திரும்பச் சொன்ஞன் வாஸ்

யா. ''என்னைத் தூங்க அனுமதி; நல்லது; ஆமாம், நான் முடிக்க விரும்பினேன், ஆனால் இப்போது அதை மாற்றிக் கொண்டேன், ஆமாம்...''

அர்க்காதி அவனைப் படுக்கைக்கு இழுத்துச் சென்றான்.

''கேள், வாஸ்யா!'' என்று அவன் உறுதியாகச் சொன்னான். ''அந்த விஷயத்தை இறுதியாகத் தீர்க்க வேண்டும்! எனக்குச் சொல், நீ என்ன நினைத்திருக்கிறாய்?''

''ஆ!'' பலவீனமடைந்த கையை ஆட்டி, தலையை வேறு பக்கம் திருப்பியபடியே சொன்னான் வாஸ்யா.

''போதும், வாஸ்யா, போதும்! முடிவு செய்! நான் உன்னைக் கொள்ள விரும்பவில்லை; என்னால் மேற்கொண்டு மௌனம் சாதிக்க முடியாது. உன்னால் முடிவு செய்யாமல் தூங்க முடியாது, எனக்குத் தெரியும்.''

''உனக்கு எப்படி விருப்பமோ அப்படியே'' என்று புரிந்துகொள்ள முடியாதபடி திரும்பச் சொன்னான் வாஸ்யா.

''சரணடைகிறான்!'' என்று எண்ணினான் அர்க்காதி இவானவிச்.

''வாஸ்யா, நான் சொல்வதைக் கேள்'' என்றான் அவன். ''நான் சொன்னதை நினைவில் கொள், நான் உன்னை நாளைக் காப்பாற்றுகிறேன்; நான் நாளை உன் விதியைத் தீர்க்கிறேன்! நான் என்ன சொன்னேன், விதியா! வாஸ்யா, நீ என்னை பயமுறுத்தியதில் நான் என்னுடைய வார்த்தைகளைப் பயன்படுத்த ஆரம்பித்து விட்டேன். என்ன விதி! வெறும் வெட்டிப் பேச்சு, ஒன்றுமில்லாதது. உனக்கு சலுகைகளை, காதலை, வேண்டுமெனில் ஜூலியன் மஸ்தாக்கொவிச்சை இழக்க விருப்பமில்லை, ஆமாம்! நீ இழக்கப் போவதுமில்லை, நீயே பார்க்கப் போகிறாய்... நான்...''

அர்க்காதி இவானவிச் இன்னமும் நிறைய பேசியிருப்பான், ஆனால் வாஸ்யா அவனைத் தடுத்து நிறுத்தினான். அவன் படுக்கையில் எழுந்து நின்று மௌனமாக இரு கைகளாலும் அர்க்காதி இவானவிச்சின் கழுத்தைக் கட்டி அவனை முத்தமிட்டான்.

''போதும்!'' என்று பலவீனமான குரலில் அவன் சொன்னான். ''போதும், அதைப் பற்றி போதும்!''

அவன் மீண்டும் சுவர் பக்கமாகத் தன் தலையைத் திருப்பிக் கொண்டான்.

''கடவுளே!'' என்று எண்ணினன் அர்க்காதி. ''கடவுளே! அவனுக்கு என்ன ஆயிற்று? அவன் முழுவதுமாக நிலை குலைந்து போயிருக்கிறான்; அவன் என்ன முடிவு செய்துள்ளான்? அவன் தன்னை தானே கொன்று விடுவான்.''

அர்க்காதி செய்வதறியாது அவனைப் பார்த்தான்.

''அவன் நோய்வாய்ப் பட்டால்,'' என்று எண்ணினன் அர்க்காதி, ''ஒருவேளை நன்றாக இருக்கும். நோயோடு அக்கறையும் போய் விடும், பின்னல் எல்லாவற்றையும் மிகச் சிறப்பாக முடித்து விடலாம். ஓ, நான் என்ன சொல்கிறேன்! ஓ, கடவுளே!..''

இதனிடையே வாஸ்யா கண்ணயர்ந்ததைப் போலிருந்தது. அர்க்காதி இவானவிச் மகிழ்ச்சியடைந்தான். ''நல்ல அடையாளம்!'' என்று எண்ணினன் அவன். வாஸ்யா அருகிலேயே இரவு பூராவும் உட்கார அவன் முடிவு செய்தான். ஆனல் வாஸ்யா அமைதியின்றி இருந்தான். அவன் அவ்வப்போது துணுக்குற்றான், படுக்கையில் புரண்டான், நொடிப்பொழுது கண்களைத் திறந்தான். இறுதியாக சோர்வு அவனை ஆட்கொண்டது; அவன் அடித்துப் போட்டது போல் தூங்குவதாகத் தெரிந்தது. நள்ளிரவு சுமார் இரண்டு மணியாகியது. அர்க்காதி இவானவிச் மேசையில் முழங்கைகளை ஊன்றியபடியே நாற்காலியில் கண்ணயர்ந்தான்.

அவனுடைய தூக்கம் கவலை தருவதாயும் அதிசயமானதாயும் இருந்தது. தான் தூங்காதது போன்றும் வாஸ்யா முன் போன்றே படுக்கையில் படுத்திருப்பதாயும் அவனுக்குத் தோன்றியது. ஆனல் ஆச்சரியம்! வாஸ்யா பாவனை செய்வதாயும், ஏமாற்றக் கூடச் செய்வதாயும், இதோ இப்போது மெதுவாக எழுந்து தன்னை அரைக் கண்களால் பார்த்துக் கொண்டே மேசையின் பின் மறைந்து கொள்வதாயும் அவனுக்குப் பட்டது. அர்க்காதியின் இதயத்தைக் கடும் வலி கவ்வியது; தன்னை நம்பாது, தன்னிடமிருந்து இரகசியமாக மறைந்து கொள்ளும் வாஸ்யாவைப் பார்க்க அவனுக்கு ஏமாற்றமாயும் சோகமாயும் கஷ்டமாகவும் இருந்தது. அவன் வாஸ்யாவைக் கட்டிப்பிடித்து, சத்தமிட்டுக் கூவி, படுக்கைக்கு இட்டுச் செல்ல விரும்பினன்... அப்போது அவனுடைய கரங்களில் வாஸ்யா கத்தினன், அவன் சுவாசமற்ற உடலைத்தான் படுக்கைக்கு எடுத்துச் சென்றான். அர்க்காதியின் நெற்றியில் வியர்வைத் துளிகள் ததும்பின, அவனு

டைய இதயம் பயங்கரமாக அடித்துக் கொண்டது. அவன் கண்களைத் திறந்து விழித்தான். வாஸ்யா அவன் முன் மேசையின் கீழ் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தான்.

அர்க்காதி தான் கண்டதை நம்பாமல் படுக்கையைப் பார்த்தான்; அங்கே வாஸ்யா இருக்கவில்லை. அர்க்காதி தன் கனவுகளின் செல்வாக்கின் கீழ் பயத்தால் துள்ளியெழுந் தான். வாஸ்யா அசையவேயில்லை. அவன் எழுதிக் கொண் டிருந்தான். அப்போது வாஸ்யா மை இல்லாத பேனவால் காகிதத்தில் எழுதியபடியே முற்றிலும் வெண்மையான தாள்களைப் புரட்டுவதையும், தான் ஏதோ மிகச் சிறப் பாக, வெற்றிகரமாக வேலை செய்வது போல் அவசர அவ சரமாக காகிதங்களை பூர்த்தி செய்வதையும் அர்க்காதி பயந்து கொண்டே பார்த்தான். ''இல்லை, இது திக்பிர மையில்லை!'' என்று உடல் பூராவும் நடுங்க அர்க்காதி இவானவிச் எண்ணினன். ''வாஸ்யா, வாஸ்யா! நான் சொல்வதைக் கேள்!'' அவன் இவனுடைய தோளைப் பிடித்த படியே கத்தினன். ஆனல் வாஸ்யா ஒன்றும் பேசாமல் முன் போன்றே மை இல்லாத பேனவால் எழுதினன்.

''கடைசியில் நான் **விரைவாக** எழுத ஆரம்பித்து விட் டேன்'' என்று அர்க்காதியை நோக்கித் தலையை உயர்த் தாமலேயே அவன் சொன்னன்.

அர்க்காதி அவனுடைய கையைப் பிடித்திழுத்து பேன வைப் பிடுங்கினன்.

வாஸ்யா ஏதோ புலம்பினன். அவன் கையை விட்டு, அர்க்காதியை நோக்கி பார்வையைத் திருப்பினன், பின் தன் மீதிருந்த ஏதோ ஒரு பாரமான சுமையை எடுக்க விரும்புவது போல் அலுப்பும் சலிப்பும் கலந்த உணர்வோடு கையை நெற்றியில் தேய்த்தான், பின் அமைதியாக, ஏதோ சிந்திப்பது போல் தலையைத் தொங்க விட்டான்.

''வாஸ்யா, வாஸ்யா!'' மனமுறிந்து கத்தினன் அர்க்காதி இவானவிச். ''வாஸ்யா!''

ஒரு நிமிடங் கழித்து வாஸ்யா அவனைப் பார்த்தான். அவனுடைய பெரிய, நீல நிறக் கண்களில் கண்ணீர் தளும் பியது, அவனுடைய வெளிறிய சிறு முகம் சொல்லி மாளாத வேதனையைக் காட்டியது... அவன் ஏதோ முணுமுணுத் தான்.

''என்ன, என்ன?'' அவனை நோக்கி தலை சாய்த்தபடியே உரக்கக் கேட்டான் அர்க்காதி.

''எதற்காக, எதற்காக என்னை?'' என்று முணுமுணுத் தான் வாஸ்யா. ''எதற்காக? நான் என்ன செய்தேன்?''

''வாஸ்யா! உனக்கு என்ன ஆயிற்று? எதைக் கண்டு பயப்படுகிறாய், வாஸ்யா? என்ன?'' ஏமாற்றத்தால் கைகளைப் பிசைந்து கொண்டே கேட்டான் அர்க்காதி.

''எதற்காக என்னை இராணுவத்திற்கு அனுப்ப வேண் டும்?'' என்று நேரடியாக தன் நண்பனின் கண்களைப் பார்த்த படியே வாஸ்யா சொன்னான். ''எதற்காக? நான் என்ன செய்தேன்?''

அர்க்காதியின் தலை மயிர் சிலிர்த்தது; அவன் நம்பவே விரும்பவில்லை. அவன் அடித்துப்போடப்பட்டவனைப் போல் நின்றான்.

ஒரு நிமிடம் கழித்து அவன் சுயநிலைக்கு வந்தான். ''அது ஒன்றுமில்லை, நொடிப் பொழுது விஷயம்!'' என்று முற்றிலும் வெளிறிப் போயிருந்த அவன் நீலம் பாய்ந்த நடுங்கும் உதடுகளால் தனக்குத் தானே கூறியபடியே ஆடை களை அணியப் பாய்ந்தான். அவன் நேரடியாக மருத்துவரி டம் ஓட விரும்பினான். திடீரென வாஸ்யா அவனைக் கூவிய ழைத்தான்; அர்க்காதி அவனை நோக்கி விரைந்து சென்று, சொந்தக் குழந்தையைப் பிடுங்கினால் தவிக்கும் தாயைப் போல் கட்டித் தழுவினான்...

''அர்க்காதி, அர்க்காதி, யாரிடமும் சொல்லாதே! கேட் டாயா; என்னுடை தொல்லை! நான் மட்டுமே அனுபவிக் கிறேன்...''

''உனக்கு என்ன ஆயிற்று, வாஸ்யா? சுயநினைவிற்கு வா, நிதானத்திற்கு வா!''

வாஸ்யா பெருமூச்சு விட்டான், கண்ணீர் அவனுடைய கன்னங்களில் வழிந்தோடியது.

''எதற்காக அவளைக் கொல்ல வேண்டும்? அவள் என்ன குற்றம் செய்தாள்?..'' என்று வேதனையான, இதயத்தைப் பிளக்கும் குரலில் அவன் சொன்னான். ''என் குற்றம், என் குற்றம்!..''

அவன் ஒரு நிமிடம் பேசாமலிருந்தான்.

''என் காதலே, விடைகொடு! என் காதலே, விடை கொடு!'' என்று இரங்கத்தக்க தன் தலையை ஆட்டியபடியே

அவன் முணுமுணுத்தான். திடுக்கிட்டுப் போன அர்க்காதி ஒரு நிலைக்கு வந்து, உடனேயே மருத்துவரை அழைக்க ஓட விரும்பினான். ''போகலாம்! நேரமாகிவிட்டது!'' என்று அர்க்காதியின் கடைசி அசைவுகளைப் பார்த்த வாஸ்யா கத்தினான். ''போகலாமப்பா, வா போகலாம்; நான் தயார்! நீ என்னை வழியனுப்பு!'' அவன் மௌனமாகி, அடித்துப் போடப்பட்ட, நம்பிக்கையற்ற பார்வையை அர்க்காதியின் மீது செலுத்தினான்.

''வாஸ்யா, என் பின்னால் வராதே, கடவுளுக்கு புண்ணியமாகட்டும்! எனக்காக இங்கு காத்திரு. நான் இப்போதே திரும்பி ஓடி வருகிறேன்'' என்று மருத்துவரிடம் ஓடுவதற்காக தானே தடுமாறியபடி தொப்பியை எடுத்த அர்க்காதி இவானவிச் கூறினான். வாஸ்யா அந்த நிமிடமே உட்கார்ந்தான்; அவன் அமைதியாக இருந்தான், சொன்னதைக் கேட்டான், ஆனால் அவனுடைய கண்களில் மட்டும் ஏதோ ஒரு ஏமாற்றமான உறுதி தென்பட்டது. அர்க்காதி அவசர அவசரமாகக் கிளம்பி, மேசையிலிருந்து விரித்து வைக்கப்பட்ட பேனாக்கத்தியை எடுத்துக் கொண்டு, கடைசி முறையாக அவனைப் பார்த்து விட்டு வீட்டிலிருந்து வெளியே ஓடினான்.

எட்டு மணியாகியிருந்தது. நீண்ட நேரம் முன்னதாகவே வெளிச்சம் அறையிலிருந்த இருட்டை விரட்டியிருந்தது.

அவன் யாரையும் கண்டு பிடிக்கவில்லை. அவன் ஏற்கெனவே ஒரு மணி நேரமாக அலைந்து கொண்டிருந்தான். மருத்துவர்களின் விலாசங்களை அவன் வீடு பெருக்குபவர்களிடம் அறிந்து கொண்டு எங்காவது ஒரு மருத்துவராவது இருப்பாரா என்று அவன் தேடினான். ஆனால் எல்லோரும் தம் வேலை நிமித்தமாகவோ, தம் காரியங்களுக்காகவோ வெளியே போயிருந்தனர். நோயாளிகளைப் பார்த்து கொண்டிருந்த ஒருவர் மட்டுமே அகப்பட்டார். நிபெதேவிச் வந்துள்ளதாகச் சொன்ன வேலையாளை அவர் நீண்ட நேரம் விரிவாகக் கேட்டார்: யாரிடமிருந்து, யார், எப்படி, எதற்காக, என்றும் இவ்வளவு சீக்கிரமான நேரத்தில் வந்தவன் எப்படியிருப்பான் என்றும் கூட கேட்டார். இறுதியாக வேலை நிறைய இருப்பதால் தன்னால் வர முடியாதென்றும், இப்

படிப்பட்ட நோயாளிகளை மருத்துவமனைக்கு கூட்டி வர வேண்டுமென்றும் கூறினார்.

விஷயம் இப்படி ஆகுமென்று எதிர்பாராத அர்க்காதி அடித்துப் போடப்பட்டவனைப் போல கவலையோடு எல்லா வற்றையும் உலகிலுள்ள எல்லா மருத்துவர்களையும் திட்டித் தீர்த்துவிட்டு, வாஸ்யாவிற்காக மிகவும் பயந்தபடியே வீட்டிற்குத் திரும்பினான். அவன் வீட்டினுள் ஓடி வந்தான். மாவ்ரா, ஒன்றுமே நடக்காதது போல் தரையைக் கழுவி யிருந்தாள், விறகுச் சிராய்களை உடைத்து கணப்பு அடுப்பை மூட்டத் தயாரானாள். அவன் அறையில் நுழைந்தான்—வாஸ்யா எங்கோ மறைந்து போயிருந்தான்: அர்க்காதி வீட்டின் பின்புறமாக வெளியே போயிருந்தான்.

''எங்கே போயிருப்பான்? அந்த அதிர்ஷ்டம் கெட்டவன் எங்கே ஓடியிருப்பான்?'' என்று பயத்தால் உடல் சில்லிட்டுப் போன அர்க்காதி யோசித்து பார்த்தான். அவன் மாவ்ரா வைக் கேட்க ஆரம்பித்தான். அவளுக்கும் ஒன்றும் தெரி யவில்லை, ஒன்றையும் அவள் பார்க்கவில்லை, ஒரு சத்தத் தையும் கேட்கவுமில்லை. நிபெதேவிச் கலோம்னு வாசிகளை நோக்கி விரைந்தான்.

வாஸ்யா அங்கேயிருப்பான் என்று அவனுக்கு எப்படித் தோன்றியதோ அது கடவுளுக்குதான் வெளிச்சம்.

அவன் அங்கே போன போது பத்து மணியாகியிருந்தது. அங்கே அவனை எதிர்பார்க்கவில்லை, அவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை, யாரையும் பார்க்கவில்லை. பயந்து குழம்பிய படி அவர்கள் முன் நின்ற அவன் வாஸ்யா எங்கே என்று கேட்டான். கிழவியின் கால்கள் ஆடின; அவள் சோபாவில் சாய்ந்து விழுந்தாள். லீஸன்கா பயந்தால் நடுங்கியபடியே என்ன நடந்தது என்று கேட்க ஆரம்பித்தாள். என்ன சொல் லுவது? அர்க்காதி இவானவிச் விரைவிலேயே சமாளித்துக் கொண்டு ஏதோ ஒரு கட்டுக் கதையைச் சொன்னான். இதை யாரும் நம்பவில்லை. அவன் அனைவரையும் கவலையிலும் வேதனையிலும் விட்டு விட்டு ஓடினான். தன் அலுவலகத்தில் விரைவில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக குறைந்த பட்சம் காலம் தாழ்த்தாது அங்கு சொல்வதற்காக விரைந் தான். வாஸ்யா ஜுலியன் மஸ்தாக்கொவிச்சிடம் இருக்க வேண்டுமென போகும் பாதையில் அவனுக்குப் பட்டது. இது தான் சரியான கணிப்பாக இருக்க வேண்டும். கலோம்னு

வாசிகளுக்கு முன்னதாகவே இதைப் பற்றி அர்க்காதி நினைத்தான். மேன்மை மிகு கனவானின் வீடு வழியாகச் செல்லும் போது அங்கு போய் பார்க்க விரும்பினுன், ஆனுலும் தொடர்ந்து சென்ருன். அலுவலகத்தில் ஏதாவது விஷயம் உள்ளதா என்று பார்ப்பது எனவும், அங்கு கண்டுபிடிக்கா விட்டால் குறைந்தபட்சம் வாஸ்யாவைப் பற்றிச் சொல்லுவதற்காக மேன்மை மிகு கனவானிடம் போவது என்று அவன் முடிவு செய்தான். யாருக்காவது சொல்லியாக வேண்டுமல்லவா!

முன்னறையிலேயே அவனைப் போன்று இளமையான, பெரும்பாலும் சம பதவிகளை வகிக்கும் தோழர்கள் அவனைச் சுற்றி வளைத்து வாஸ்யாவிற்கு என்ன நேர்ந்தது என்று ஒரே குரலில் கேட்க ஆரம்பித்தனர். அதே நேரத்தில் அவர்கள், வாஸ்யாவிற்கு பைத்தியம் பிடித்து விட்டது என்றும் பழுதின்றி வேலை செய்யாததற்காக தன்னை இராணுவத்திற்கு அனுப்பப் போவதாக கூறுகிருன் என்றும் கூறினுர்கள். அர்க்காதி இவானவிச் அனைவருக்கும் பதில் சொன்னுன், சரியாகச் சொன்னுல் யாருக்குமே நேரடியாகப் பதில் சொல்லாமல் உள் அறைகளை நோக்கிச் செல்ல முயன்ருன். வாஸ்யா ஜுலியன் மஸ்தாக்கொவிச்சின் அறையிலிருப்பதாயும் எல்லோரும் அங்கு நுழைந்திருக்கின்ருர்கள் என்றும் ஏஸ்பர் இவானவிச்சும் அங்கு இருப்பதாயும் அவர் போகும் வழியில் அறிந்தான். அவன் சற்றே நின்ருன். மேற்பதவியில் உள்ளவர்களில் யாரோ ஒருவர் அவன் எங்கே போகிருன், என்ன வேண்டுமென கேட்டார். முகத்தைப் பாராமலேயே அவன் வாஸ்யாவைப் பற்றி ஏதோ சொல்லிவிட்டு நேராக அறையில் நுழைந்தான். அங்கிருந்து ஜுலியன் மஸ்தாக்கொவிச்சின் குரல் கேட்டது. ''நீங்கள் எங்கே போகின்றீர்கள்?'' என்று கதவருகே அவனை யாரோ கேட்டார். அர்க்காதி இவானவிச் கிட்டத்தட்ட நிலை தடுமாறிப் போனுன்; அவன் திரும்ப விரும்பினுன், ஆனுல் சற்றே திறந்திருந்த கதவு வழியாக வெளிறிப் போன தன் வாஸ்யாவைப் பார்த்தான். அவன் அதைத் திறந்து கொண்டு எப்படியோ அறையினுள் நுழைந்தான். அங்கே பரபரப்பும் மலைப்பும் நிலவியது ஏனெனில் ஜுலியன் மஸ்தாக்கொவிச் மிகவும் எரிச்சல் அடைந்திருந்ததாகப் பட்டது. அவரருகே முக்கியமானவர்கள் அனைவரும் நின்றபடியே பேசிக் கொண்

டிருந்தார்கள், ஆனால் ஒன்றையும் முடிவு செய்யவில்லை. சிறிது தள்ளி வாஸ்யா நின்று கொண்டிருந்தான். அர்க்காதி அவனைப் பார்த்த போது அவனுடைய மனது உறைந்து போனது. நிமிர்த்திய தலையுடன் வெளிறிய வாஸ்யா அட்டென்ஷனில் நின்றான். அவன் நேராக ஜூலியன் மஸ்தாக்கொவிச்சின் கண்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது நிபெதேவிச்சைச் பார்த்தார்கள், அவர்கள் ஒன்றாக வசிப்பதை அறிந்த யாரோ ஒருவர் அதைப் பற்றி மேன்மை மிகு கனவானுக்குச் சொன்னார். அர்க்காதியைக் கூட்டிப் போனார்கள். அவன் தன்னைக் கேட்ட கேள்விகளுக்கு ஏதோ பதில் சொல்ல விரும்பினான், ஆனால் ஜூலியன் மஸ்தாக்கொவிச்சைப் பார்த்த போது அவருடைய முகத்தில் உண்மையான பரிதாபம் இருப்பதைக் கண்டு நடுங்கியபடியே குழந்தையைப் போல் தேம்பினான். அவன் இன்னமும் அதிகமாகச் செய்தான்: அவன் பாய்ந்து சென்று தலைமை அதிகாரியின் கரத்தைப் பற்றி தன் கண்களுக்கு எடுத்துச் சென்று கண்ணீரால் கழுவினான்; ஜூலியன் மஸ்தாக்கொவிச் தன் கரத்தை அவசரமாக விடுவித்துக் கொண்டு கையை அசைத்தபடியே சொன்னார்: ''சரிப்பா போதும், போதும்; உனக்கு அன்பான இதயம் உள்ளது என்பது தெரிகிறது.'' அர்க்காதி தேம்பியபடியே அனைவரின் மீதும் கெஞ்சும் பார்வையைச் செலுத்தினான். எல்லோரும் அவனுடைய பரிதாபமான வாஸ்யாவின் சகோதரர்கள் என்றும் அவர்களும் வேதனையடைந்து அவனுக்காக அழுகின்றார்கள் என்றும் அவனுக்குப் பட்டது. ''அது எப்படி அவனுக்கு இப்படி நேர்ந்தது?'' என்று கூறினார் ஜூலியன் மஸ்தாக்கொவிச். ''அவனுக்கு ஏன் பைத்தியம் பிடித்தது?''

''நன்றி உணர்வால்!'' என்று மட்டுமே அர்க்காதி இவானவிச் கூற முடிந்தது.

அவனுடைய பதிலை அனைவரும் மலைப்போடு கேட்டனர், அது அனைவருக்கும் ஆச்சரியமானதாயும் நம்ப முடியாததாயும் இருந்தது: அது எப்படி நன்றி உணர்வால் ஒரு மனிதனுக்கு பைத்தியம் பிடிக்க முடியும்? அர்க்காதி தன்னால் இயன்றவரை விளக்கினான்.

''கடவுளே, என்ன பரிதாபம்!'' இறுதியாகச் சொன்னார் ஜூலியன் மஸ்தாக்கொவிச். ''அவனுக்கு கொடுத்த வேலை கூட அவ்வளவு முக்கியமானதோ, முற்றிலும் அவசரமா

னதோ இல்லை. அப்படியெனில் ஒன்றுமே இல்லாததற்காக ஒருவன் பாதிக்கப்பட்டிருக்கிறுன்! சரி, அவனைக் கூட்டிச் செல்லுங்கள்!..'' இவ்வாறு சொன்ன ஜூலியன் மஸ்தாக் கொவிச் மீண்டும் அர்க்காதி இவானவிச்சைப் பார்த்து திரும்பவும் கேட்க ஆரம்பித்தார். ''இதைப் பற்றி ஏதோ ஒரு பெண்ணுக்குச் சொல்ல வேண்டாமென வேண்டுகிறுன் அவன்,'' என்று வாஸ்யாவைச் சுட்டிக் காட்டியபடியே அவர் சொன்ஞர். ''அவள் யார், காதலியா?''

அர்க்காதி விளக்கிச் சொல்ல ஆரம்பித்தான். இதனிடையே வாஸ்யா எதையோ பற்றி நினைத்ததைப் போல், இதோ இப்போது பயன்படக் கூடிய ஏதோ ஒரு முக்கிய, அவசிய விஷயத்தை மிகப்பெரும் சிரமத்தோடு நினைவு கூர்ந்தது போல் காணப்பட்டான். தான் மறந்ததை யாராவது நினைவுபடுத்துவார்களா என்று நம்புவது போல் அவன் வேதனையோடு கண்களை அலைய விட்டான். அவன் அர்க்காதியை கூர்ந்து நோக்கினன். இறுதியாக, தன் கண்களில் நம்பிக்கை ஒளிந்தது போல் இடது கால்களால் இடத்தை விட்டு நகர்ந்தான், இயன்ற வரை திறமையாக மூன்று அடி எடுத்து வைத்து, தம்மை அழைக்கும் இராணுவ அதிகாரியை நெருங்கி போர்வீரர்கள் செய்வது போல வலது காலணியால் தரையிலடிக்கக் கூடச் செய்தான். என்ன நடக்கப் போகின்றது என்று எல்லோரும் காத்திருந்தனர்.

''மேன்மை மிகு கனவானே, நான் உடற்குறையுள்ளவன், பலவீனமானவன், சிறியவன், சேவைக்கு லாயக்கற்றவன்'' என்று சுருக்கமாகச் சொன்னுன் அவன்.

அறையிலிருந்த அனைவரும் தம் இதயத்தை பிடித்து அழுத்துவதைப் போல் அவனுக்காக இரங்கினர்கள். ஜூலியன் மஸ்தாக்கொவிச் உறுதியான குணமுடையவராயிருந்தாலும் கூட அவருடைய கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. ''அவனைக் கூட்டிப் போங்கள்'' என்று கையை ஆட்டியபடியே அவர் சொன்னர்.

''அணிவகுப்புக் கட்டளை'' என்று அரை குறை குரலில் சொன்ன வாஸ்யா இடது புறமாக முழுவதும் திரும்பி, அறையிலிருந்து வெளியேறினுன். அவனுடைய விதியின் மீது அக்கறையுள்ள அனைவரும் அவன் பின் வெளியேறினர். மற்றவர்களோடு சேர்ந்து இடித்து தள்ளியபடியே அர்க்காதியும் சென்றுன். வாஸ்யாவை கூட்டிச் செல்ல மருத்துவ

மனையிலிருந்து வண்டியும் உத்தரவும் வரும் வரை அவனை முன்னறையில் உட்கார வைத்தனர். அவன் மௌனமாக உட்கார்ந்திருந்தான், அசாதாரணமான அக்கறை அவன் மீது காட்டப்பட்டதாகத் தேன்றியது. தெரிந்தவர்களையெல்லாம் பார்த்து ஏதோ விடைபெறுவது போல் தலையை ஆட்டினான். அவன் ஓயாமல் கதவைப் பார்த்து, எப்போது "கிளம்பு" என்று சொல்வார்களோ என்று தயாரானான். அவனைச் சுற்றி கும்பல் வட்டமாய் நின்றது; எல்லோரும் தலையாட்டினார்கள், புலம்பினார்கள். திடீரென பிரபலமான அவனுடைய கதை பலரை வியப்பில் ஆழ்த்தியது; சிலர் விவாதித்தார்கள், சிலர் பரிதாபப்பட்டு வாஸ்யாவைப் புகழ்ந்தார்கள், அவன் அடக்கமான இளைஞன், பலவற்றை வாக்களித்தான் என்றனர்; அவன் எப்படி கற்றுக் கொள்ள முயன்றான், அறிவு வேட்கையுடையவனாக இருந்தான், கல்வி கற்க பாடுபட்டான் என்றெல்லாம் பேசினார்கள். "சொந்த பலத்தால் கீழ் நிலையிலிருந்து உயர்ந்தான்!" என்று யாரோ ஒருவர் சொன்னார்.

மேன்மை மிகு கனவான் அவனிடம் எப்படி ஈடுபாடு கொண்டிருந்தாரென இரக்கத்தோடு குறிப்பிட்டார்கள். வேலையை முடிக்காததால் இராணுவத்திற்கு அனுப்புவார்கள் என்று ஏன் வாஸ்யாவிற்கு தலையில் உதிக்க வேண்டுமென சிலர் விளக்க ஆரம்பித்தனர். சமீபகாலம் வரை அவன் கீழ் மட்டத்தில் இருந்ததாயும் அவனுடைய திறமை, கீழ் படியும் குணம், அசாதாரண பணிவு ஆகியவற்றைக் கண்டு பிடித்த ஜூலியன் மஸ்தாக்கொவிச்சின் சிபாரிசினால்தான் முதல் பதவியைப் பெற்றதாயும் பேசினார்கள். சுருங்கச் சொன்னால், பல்வேறுவித பேச்சுகளும் கருத்துகளும் ஏராளமாயிருந்தன. திகைப்படைந்தவர்களில் வாஸ்யா ஷூம்கோவுடன் பணிபுரியும் குள்ளமான ஒருவன் குறிப்பாக கண்களில் பட்டான். மிக இளைஞன் என்று அவனைச் சொல்ல முடியாது, வயது சுமாராக முப்பது இருக்கும். அவன் மிகவும் வெளிறிப் போயிருந்தான், அவனுடைய உடல் முழுவதும் நடுங்கியது, அவன் ஏதோ விசித்திரமாகப் புன்னகைத்தான்—ஏனெனில் எந்த ஒரு சச்சரவான விஷயமும் அல்லது பயங்கர நிகழ்ச்சியும் பார்வையாளனை பயமுறுத்தும் அதே நேரத்தில் அவனுக்கு சிறிது மகிழ்ச்சியையும் தருவது ஒருவேளை இதற்கு காரணமாயிருக்கலாம். ஷூம்

கோவைச் சுற்றி நின்ற வட்டத்தை அவன் ஓயாமல் சுற்றி வந்தான், குள்ளமானவனுய் இருந்ததால் கால்களால் எம்பி நின்று, கண்ணில் பட்டவர்களையெல்லாம், அதாவது யாரை யெல்லாம் பிடித்திழுக்க அவனுக்கு உரிமையுள்ளதோ அவர் களையெல்லாம் இழுத்து இதெல்லாம் எதனுல் என்று தனக் குத் தெரியுமென்றும் இது ஒன்றும் அவ்வளவு சாதாரண மானதல்ல என்றும் மிக முக்கியமான விஷயமென்றும் இதை அப்படியே விட்டு விடக் கூடாதென்றும் சொன்னுன்; மீண் டும் குதிக்காலில் எட்டிப் பார்த்து கேட்பவரின் காதில் குசுகுசுத்தான், திரும்பவும் இரு முறை தலையை ஆட்டிவிட்டு மேலும் ஓடினுன். இறுதியாக எல்லாம் முடிந்தது: காவலா ளும் மருத்துவ மனையிலிருந்து மருத்துவ உதவியாளரும் வந் தனர். வாஸ்யாவை நெருங்கி கிளம்பு என்றனர். அவன் துள்ளியெழுந்து, பரபரப்பாக சுற்றும் முற்றும் பார்த்த வாறே அவர்களுடன் புறப்பட்டான். தன் கண்களால் அவன் யாரையோ தேடினுன். ''வாஸ்யா! வாஸ்யா!''—தேம்பிய படியே கத்தினுன் அர்க்காதி இவானவிச். வாஸ்யா நின்ருன், அர்க்காதி மற்றவர்களைத் தள்ளி விலக்கியபடி அவனை நோக்கி விரைந்தான். கடைசி முறையாக அவர்கள் ஒரு வரையொருவர் அணைத்துக் கொண்டு இறுகத்தழுவினர்... அவர்களைப் பார்க்கவே சோகமாக இருந்தது. எந்த ஒரு துரதிர்ஷ்டம் அவர்களின் கண்களிலிருந்து கண்ணீரை வர வழைத்தது? எதற்காக அவர்கள் அழுதனர்? எங்கே அந்த தொல்லை? ஏன் அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வில்லை?..

''இந்தா, இந்தா வாங்கிக் கொள், அதை பத்திரமாக வைத்திரு,'' என்று ஏதோ ஒரு காகிதத்தை அர்க்காதி யின் கைகளில் திணித்தவாறே ஷூம்கோவ் கூறினுன். ''அவர் கள் என்னிடமிருந்து பறித்துச் சென்று விடுவார்கள். பின்பு எனக்கு கொண்டு வந்து தா; பத்திரம்...'' வாஸ்யா முடிக்க வில்லை, அதற்குள் அவனைக் கூப்பிட்டார்கள். அவன் தலையை ஆட்டி எல்லோரிமும் விடை பெற்றுக் கொண்டே அவசர அவசரமாக படிகளில் ஓடினுன். அவனுடைய முகத்தில் ஏமாற்றமிருந்தது. இறுதியாக அவனை வண்டியில் உட்காரச் செய்து கூட்டிச் சென்ருர்கள். அர்க்காதி அவசர அவசர மாக காகிதத்தைப் பிரித்தான்: அது லீஸன்காவின் கறுப்பு நிற மயிர்க்கற்றை. இதை ஷூம்கோவ் எப்போதும் தன்

னுடன் வைத்திருந்தான். அர்க்காதியின் கண்களிலிருந்து அன்புக் கண்ணீர் வழிந்தது. ''ஐயோ, பாவம் லீஸன்கா!''

வேலை நேரம் முடிந்ததும் அவன் கலோம்னு வாசிகளின் இல்லத்திற்குச் சென்றான். அங்கு எப்படியிருந்தது என்று சொல்லத் தேவையே இல்லை! அன்பான வாஸ்யாவிற்கு என்ன நேரிட்டது என்று புரிந்து கொள்ளாத சிறு பேத்யா கூட மூலைக்குப் போய் தன் சிறு கைகளால் முகத்தை மூடிக் கொண்டு தன்னுடைய குழந்தை இதயத்தின் அடியாழத்தி லிருந்து அழ ஆரம்பித்தான். அர்க்காதி வீட்டிற்குத் திரும் பியபோது நன்கு இருட்டியிருந்தது. நீவா ஆற்றை நெருங் கிய அவன் ஒரு நிமிடம் நின்று ஆற்றின் ஓரமாக புகைமூட் டமான, பனி நிறைந்து மங்கலாகத் தெரிந்த தொலைதூரத் தின் மீது கூர்மையான பார்வையைச் செலுத்தினான்; பனி மூட்டமான தொடுவானத்தில் மங்கும் முன் ஒளிர்விட்டுக் கொண்டிருந்த இரத்தச் சிவப்பான சூரியனின் கடைசி கருஞ் சிவப்பு ஒளிக் கற்றைகளால் அது செந்நிறமாகிக் கொண்டி ருந்தது. நகரின் மீது இருள் சூழ்ந்தது, உறைந்து போன பனி கொட்டிக் கிடந்த நீவா அற்று ஓரத்தின் அகன்ற பரப்பில் சூரியனின் கடைசி ஒளி பட்டு எண்ணற்ற ஊசி போன்ற ஒளிக் கற்றைகள் மின்னின. கடுங் குளிர் நிலவியது. பயங்கரமாக விரட்டப்பட்ட குதிரைகளிலிருந்து, ஓடிய மனி தர்களிடமிருந்து வெளிவந்த காற்று உடனே உறைந்தது. இறுகிப் போயிருந்த காற்று சிறு ஒலியால் கூட ஆடியது, இரு கரையோரங்களிலும் இருந்த கூரை முகட்டுகளிலிருந்து புகை மூட்டங்கள் கிளம்பி குளிர்ந்த வானத்திற்கு பெரும் அரக்கனைப் போலச் சென்றன, பழைய கட்டிடங்களின் மீது புதிய கட்டிடங்கள் எழுவதைப் போல், வானில் புதிய நகரம் ஒன்று உருவாவதைப் போல் தோன்றும்படி அப் புகை மூட்டங்கள் மேலே ஒன்று கலந்தும் பிரிந்தும் போ யின... இறுதியில், இந்த உலகம் முழுவதும் அதன் மக்க ளோடும் இவர்கள் வலிமையானவர்களாக அல்லது வலிமை குன்றியவர்களாக இருக்கலாம், ஏழைகளின் குடிசைகளோ டும் அல்லது இவ்வுலகிலுள்ள வலிமையானவர்களின் மகிழ்ச் சியாகிய தங்க மாட மாளிகைகளோடும் இந்த அந்திப் பொழுதில் ஒரு அதிசய, மாயமந்திர கற்பனையைப் போல், கனவைப் போல் இருந்ததாகத் தோன்றியது, இதுவும் தன் பங்கிற்கு மறுகணமே கரு நீல வானத்தில் ஆவியாகிப் போய்

மறைந்துவிடும் போல் பட்டது. தன்னந்தனியனுகிப் போன பரிதாபகரமான வாஸ்யாவின் தோழனுக்கு ஏதோ ஒரு விசித்திர எண்ணம் வந்தது. அவன் திடுக்கிட்டான், அத் தருணத்தில் அவனுடைய இதயத்தில் சூடான இரத்தம் பாய்ந்து பொங்கி வழிந்தது போலிருந்தது, இந்த இரத் தம் இதுவரையில் அவனுக்குத் தெரியாத ஏதோ ஒரு பெரும் உணர்வு வந்ததால் கொதித்தது. அந்தக் கவலே முழுவதும் அவனுக்கு அப்போதுதான் புரிந்தது போலிருந்தது, தம் மகிழ்ச்சியை அனுபவிக்காத அவனுடைய பரிதாபமான வாஸ்யாவிற்கு ஏன் பைத்தியம் பிடித்தது என்பது அவ னுக்கு அப்போதுதான் தெரிந்ததுபோலிருந்தது. அவனுடைய உதடுகள் நடுங்கின, கண்கள் சிவந்தன, அவன் வெளிறிப் போனுன், அந் நேரத்தில் ஏதோ புதிய ஒன்றைப் பார்த்து அவனுடைய கண் திறந்தது போல ஆயிற்று...

அவன் உற்சாகம் குன்றியவனுய், கடுகடுப்பானவனுய் மாறினுன், தன் மகிழ்ச்சி முழுவதையும் இழந்தான். முந் தைய வீட்டின் மேல் அவனுக்கு வெறுப்பு வந்ததால் அவன் வேறு வீட்டிற்கு குடிபோனுன். கலோம்னு வாசிகளேப் பார்க்க அவனுக்கு விருப்பம் இருக்கவில்லே, அவனல் முடிய வுமில்லே. இரண்டு வருடங்களுக்குப் பின் லீஸன்காவை அவன் மாதாக்கோவிலில் சந்தித்தான். அவளுக்கு ஏற்க னவே திருமணம் ஆகியிருந்தது; அவள் பின் அவளுடைய தாதிப் பெண் கைக்குழந்தையை ஏந்தியபடியே வந்தாள். அவர்கள் முகமன் கூறினர், நீண்ட நேரம் பழையதைப் பற்றிப் பேசுவதைத் தவிர்த்தனர். லீஸன்கா தான் கடவுள் புண்ணியத்தில் மகிழ்ச்சியாக இருப்பதாயும் தான் ஏழ்மை யில் வாடவில்லே என்றும் தன் கணவன் அன்பானவன்என்றும் அவனேத் தான் நேசிப்பதாயும் கூறினுள்... ஆனல் திடீரென பேச்சின் நடுவே அவளுடைய கண்கள் குளமாயின, குரல் கம்மியது, அவள் திரும்பி, மற்றவர்களிடமிருந்து தன் துக் கத்தை மறைப்பதற்காக மாதாக்கோவில் சாரத்தின் மீது சாய்ந்து கொண்டாள்...

அருவருப்பான விவகாரம்

சிறுகதை

மொழிபெயர்ப்பாளர்: ரா. கிருஷ்ணையா

இந்த அருவருப்பான விவகாரம் அடங்காத் துடிப் போடும் இரங்கத்தக்க அப்பாவித்தனமான ஊக்கத்தோடும் நமது அருமைத் தாயகத்தின் மறுமலர்ச்சி ஆரம்பமாகி, அதன் தீரப் புதல்வர்களது நெஞ்சம் புத்தார்வத்தாலும் புது நம்பிக்கையாலும் உந்தப்பட்ட ஒரு நேரத்தில் நடை பெற்றது. குளிர் காலத்தில் வானம் தெளிந்திருந்த ஓர் இரவில் மணி பதினொன்றுக்கு மேலிருக்கும், பீட்டர்ஸ்பர்க் புறத்தில்* அழகான இரண்டடுக்கு மாளிகை ஒன்றில் யாவும் வசதியாய், ஏன் சொகுசாகவுங்கூட அமைந்திருந்த ஓர் அறையில் அமர்ந்து மதிப்புக்குரிய மூன்று கனவான்கள் மிகவும் சுவையான ஒரு பிரச்சினை குறித்து சிறப்புக்குரிய ஆழ்ந்த முறையில் உரையாடிக் கொண்டிருந்தனர். மூவரும் ஜெனரல் பட்டத்துக்கு உரிய** உயர் அதிகாரிகள். சிறு மேஜையைச் சுற்றி நேர்த்தியான மெல்லணைச் சாய்வு நாற் காலிகளில் உட்கார்ந்து அமைதியாகவும் சொகுசாகவும் ஷம் பெய்ன் பருகியவாறு உரையாடினர். பாதி அளவுக்கு ஐஸ் கட்டிகள் நிறைந்த ஒரு வெள்ளி வாளியினுள் அந்த மதுப்

---

* பழைய பீட்டர்ஸ்பர்க் நகர் அதன் ஆறுகளால் நான்கு பகுதிகளாய்ப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை வீபர்கு, பீட்டர்ஸ்பர்க், வசீலியெவ்ஸ்கயா, அட்மிரால்ஸ்கயா புறங்கள் என்பதாய் அழைக்கப்பட்டன.—ப-ர்.

** ஜார் கால ருஷ்யாவில் சிவில் துறை அதிகாரிகளின் உயர் பிரிவுகளைச் சேர்ந்த தனி ஆலோசகர், அரசு உயர்நிலை ஆலோசகர், அரசு ஆலோசகர் ஆகிய பதவிகள் வகித்தோர் ஜெனரல் என்னும் பட்டத்துக்கு உரியவர்களாக இருந்தனர். —ப-ர்.

புட்டி மேசையின் மீது இருந்தது. வீட்டுக்காரராகிய தனி ஆலோசகர் ஸ்தேப்பான் நிக்கீஃபரவிச் நிக்கீஃபரவ் அறுபத்தைந்து வயதான நிரந்தர பிரம்மச்சாரி. இப்பொழுதுதான் அவர் இந்த வீட்டை விலைக்கு வாங்கி இங்கு குடி வந்திருந்தார். பிறந்த தினம் கொண்டாடும் பழக்கமில்லாதவர் என்றாலும் இம்முறை அவருடைய பிறந்த தினம் மனைபுகு விழாவுடன் இணைந்து விட்டபடியால் இரண்டையும் முன்னிட்டு இந்தக் கொண்டாட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். உண்மையில் இதை ஒரு பெரிய கொண்டாட்டம் என்று கூறுவதற்கில்லை. ஏனெனில் மேலே நாம் கூறியது போல இரண்டே விருந்தினர்கள்தான் கூடியிருந்தனர். இருவரும் திருவாளர் நிக்கீஃபரவின் கீழ் வேலை செய்த அவரது முன்னாள் கூட்டாளிகள், இருவரும் அரசு உயர்நிலை ஆலோசகர்கள்—அவர்களுடைய பெயர்கள்: செமியோன் இவானவிச் ஷிப்புலேன்கோ, இவான் இலியீச் பிரலீன்ஸ்கி. தேநீர் விருந்துக்காக ஒன்பது மணி அளவில் இருவரும் வந்திருந்தனர், பிறகு ஷம்பெய்ன் அருந்த முற்பட்டனர். சரியாகப் பதினொன்றரை மணிக்கு விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டுவிட வேண்டுமென்று இருவருக்கும் தெரியும், ஏனெனில் அவர்களை விருந்துக்கு அழைத்திருந்தவர் எல்லாவற்றையும் நேரம் பிசகாமல் மணிப்படி ஒழுங்காகச் செய்கிறவர். அவரைப் பற்றி சில வார்த்தைகள்— எளிய சிறிய அதிகாரியாக வாழ்க்கையைத் தொடங்கியவர்; தாம் வந்ததையப் போகும் உயர் பதவியை நன்கு உணர்ந்தவராய்ப் பொறுமையுடன் நாற்பத்தைந்து ஆண்டுகளாக வேலை செய்தவர்; ஏற்கெனவே இரு நட்சத்திரப் பதக்கங்கள் பெற்றவர்தான் என்றாலும் வானத்து நட்சத்திரங்களைத் தம்மால் எட்டிப் பிடித்துவிட முடியுமென்ற எண்ணம் சிறிதும் இல்லாதவர்; இன்னும் முக்கியமாக எந்த விவகாரத்திலும் முந்திக் கொண்டு தமது சொந்த அபிப்பிராயத்தைக் கூற ஆசைப்படாதவர். அவர் நேர்மையானவர், அதாவது குறிப்பிடத்தக்கவாறு நேர்மையற்ற காரியம் எதுவும் செய்யும்படியான அவசியம் அவருக்கு ஏற்பட்டதில்லை; முற்றிலும் தன்னலங் கருதிப் பிரம்மச்சாரியாய் இருந்து வருகிறவர்; முட்டாள் அல்ல என்றாலும் முன்னிலையிலே நின்றவரல்ல. யாவற்றுக்கும் மேலாக ஒழுங்கின்மையும் ஆர்ப்பாட்டமும் அவருக்குப் பிடிக்கவே பிடிக்காது. ஆர்ப்பாட்டத்தை அவர் தார்மிக

ஒழுங்கின்மையாகக் கருதினர். வாழ்வின் கடைசிப் பகுதியை நெருங்கியதும் தமது இனிமையான, அசட்டுத்தனமான சொகுசு வாழ்க்கையிலும் தனிமையிலும் மூழ்கிவிட்டார். அவர் மேல் தரத்தவர்களைச் சில சமயம் போய்க் கண்டு வருவது உண்டென்றாலும் இளம் வயதிலிருந்தே தம் வீட் டுக்கு யாரையும் அழைத்து உபசரிக்க விரும்பியதில்லை. சில காலமாகத் தனியாள் சீட்டாட்டத்தில் பொழுதைப் போக் காத நேரங்களில் தமது கடிகாரமே ஏற்ற துணையென்று, கணப்படுப்பு மேடையின்மீது கண்ணாடிக் கவிகையினுள் இருந்து அது எழுப்பிய 'டிக்-டிக்' ஒலியைக் கேட்டவாறு அசங்காது உட்கார்ந்திருப்பது வழக்கமாகிவிட்டது. மதிப் புக்குரிய தோற்றமும் மழுக்கச் சிரைத்த முகமும் உடைய வராக இருந்தார், அவருடைய வயதுக்கு மிகவும் இளைய வராகத் தோன்றினர். உடல் நலக் குறை ஏதுமின்றி நல்ல படியாக இருந்தார், இன்னும் நெடுங் காலத்துக்கு நல்ல படியாகவே இருக்கப் போகிறவர் என்பதையும் காட்டிக் கொண்டார். கனவானுக்கு ஏற்ற நாசூக்கான முறையில் நடந்து கொண்டார். அவர் வகித்த பதவி ஓரளவு வசதி யானது, அமர்வுகளில் கலந்து கொள்வதையும் சிற்சில பத் திரங்களில் கையொப்பமிடுவதையும் தவிர்த்து அதிக வேலை கள் இல்லை. சுருக்கமாய்ச் சொல்வதெனில் மிகச் சிறந்த வராக எல்லோராலும் கருதப்பட்டவர். அவரிடம் ஒரே யொரு அடங்காத வேட்கை, அல்லது இன்னும் நல்லபடி யாகச் சொல்வதெனில் ஆர்வமிக்க விருப்பம் இருந்து வந் தது—தனக்கென சொந்த வீடு ஒன்றை, உறுதியாய் அமைந்த நல்ல வீடாக மட்டுமின்றி மெய்யான பிரபுவின் வீடாகவும் இருக்கக் கூடிய ஒன்றைப் பெற வேண்டுமென விரும்பினர் அவர். முடிவில் அவருடைய இந்த விருப்பம் நிறைவேறியது; பீட்டர்ஸ்பர்க் புறத்தில் ஒரு வீட்டைத் தேர்ந்தெடுத்து விலைக்கு வாங்கிக் கொண்டுவிட்டார்—ஓர ளவு தொலைவில் அமைந்ததெனினும் தோட்டமுடையது, அது மட்டுமல்ல கண்ணைப் பறிக்கும்படியானது. வீட்டின் புதிய உடைமையாளர் விருந்தினர்களை வீட்டுக்கு அழைத்து உபசரிக்க விரும்பாதவர் ஆனதால் தாம் தொலைவிலே வாழ்வதும் நல்லது தான் என்று நினைத்தார். அவர் வெளியே போய் யாரையும் பார்த்துவிட்டு வரவும் அலுவலகத்துக்குச் சென்று வரவும் அவரிடம் இரண்டு பேர் அமரக்கூடிய சாக்

கலெட் நிறமுள்ள அழகான கோச் வண்டியும், சிறியவை ஆயினும் வலுவான கண்ணுக்கு இனிய ஒரு ஜோடிக் குதிரைகளும் இருந்தன, மிஹேய் என்றொரு வண்டிக்காரனும் இருந்தான். நாற்பது ஆண்டுகளாக அவர் கையாண்ட கடுஞ்சிக்கனத்தால் கைவரப் பேற்றவை இவை யாவும். ஆகவே இதெல்லாம் குறித்து இப்பொழுது அவர் மனம் மகிழலாம். எனவேதான் வீட்டை வாங்கி அங்கே குடி வந்ததும் ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச், இது வரை தமது மிக நெருங்கிய நண்பர்களுக்குங்கூடத் தெரியாதபடிக் கவனமாக மறைத்து வந்திருந்த தனது பிறந்த நாளன்று விருந்தினர்களை அழைத்துக் கொண்டாடும் அளவுக்கு அவருடைய நிம்மதியான இதயம் நிறைவு பெற்றுவிட்டது. அத்துடன் தமது விருந்தினர்களில் ஒருவரிடம் அவர் பேச வேண்டியிருந்த காரியமும் ஒன்று இருந்தது. தமது வீட்டின் மாடிப் பகுதியில் மட்டுமே அவர் குடியிருந்தார், அந்த மாடிப் பகுதியைப் போல அமைந்திருந்த கீழ்ப் பகுதியை வாடகைக்கு எடுத்துக்கொள்ளக் கூடியவர் ஒருவர் அவருக்குத் தேவைப்பட்டார். ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச் இது விஷயமாய் செமியோன் இவானவிச் ஷிப்புலேன்கோவின் மீது ஒரு கண் வைத்திருந்தார். அன்று மாலை உரையாடலின் போது இருமுறை அவர் இது குறித்துப் பேச்செடுத்துப் பார்த்தார். ஆனால் செமியோன் இவானவிச் இதைப் பற்றி வாய் திறக்காமலே இருந்துவிட்டார். இவரும் பாடு பட்டு உழைத்து சிறுகச் சிறுகத் தமக்குப் பாதையைச் செப்பனிட்டு வாழ்க்கையில் முன்னேறியவர்தான். கரிய முடியும் கிருதாவுமுடையவர், அவருடைய முகபாவத்தில் ஏதோ ஒருவகைச் சிடுசிடுப்பு நிரந்தரமாகக் குடிகொண்டிருந்தது. அவர் திருமணமானவர், வெளியில் அதிகம் போகாமல் வீட்டிலே இருந்து கொண்டு சிடுசிடுத்து வீட்டிலுள்ளவர்களை எந்நேரமும் பயந்து நடுங்கச் செய்வார். அபாரத் தன்னம்பிக்கையுடன் தமது வேலைகளை எல்லாம் செய்து முடிப்பவர் என்பதுடன் தாம் அடையப் போகும் உயர் பதவியையும், அதனிலும் அதிகமாகத் தாம் அடைய முடியாததையும் தீர்க்கமாக அறிந்தவர். நல்ல பதவியில் இருந்தார், அதோடு அதை இறுகப் பற்றிக் கொண்டும் இருந்தார். அப்பொழுது பிறக்க ஆரம்பித்த புதிய சகாப்தத்தை ஒரு வகைக் குரோத உணர்ச்சியோடுதான் பார்த்தார் என்றாலும், அது

குறித்து அவர் ஒன்றும் கலவரமடைந்துவிடவில்லை, தன்னம்பிக்கை மிக்கவராகவே இருந்தார், புதிய காலம் குறித்து இவான் இலியீச் பிரலீன்ஸ்கியின் தடபுடலான பேச்சுக்களை ஏளனச் சிரிப்புடன்தான் கேட்டுக் கொண்டிருந்தார். எல்லோருமே இதற்குள் கொஞ்சம் போதையுற்றுக் கிறங்கிய நிலையில் இருந்தனர் என்பதைக் குறிப்பிட வேண்டும். ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச்சுங்கூட தமது உயர்நிலையிலிருந்து இறங்கி புதிய காலங் குறித்து திருவாளர் பிரலீன்ஸ்கியுடன் சிறிது நேரம் வாக்குவாதம் புரியுமளவுக்குச் சென்றுவிட்டார். இப்பொழுது நாம் மேதகு திருவாளர் பிரலீன்ஸ்கியைப் பற்றி சில வார்த்தைகள் கூற வேண்டும், அவர்தான் இந்தக் கதையின் நாயகன். எனவே இது மிகவும் அவசியமாகும்.

அரசு உயர்நிலை ஆலோசகர் இவான் இலியீச் பிரலீன்ஸ்கி நான்கு மாதங்களுக்கு முன்புதான் மேதகு என்னும் சிறப்பு அடைமொழிக்கு உரியவரானார், அதாவது அண்மையில் தான் அவர் ஜெனரல் பட்டம் பெற்றிருந்தார். வயதிலும் அவர் இளையவர்தான், நாற்பத்து மூன்றுக்கு மேல் ஆகவில்லை. பார்ப்பதற்கு இன்னுங்கூட இளையவராகத் தோன்றினார், அவ்வாறே தோன்ற வேண்டுமென்றும் விரும்பினார். உயரமாகவும் கண்ணுக்கு இனியவராகவும் இருந்தார், ஆடம்பரமாக உடுத்திக் கொண்டு தமது நாகரிக உடைகள் குறித்துப் பெருமிதப்பட்டுக் கொண்டார். மிகவும் பாங்காகவும் எடுப்பாகவும் தமது நட்சத்திரப் பதக்கத்தை அணிந்து கொண்டார். சிறுபிள்ளையாக இருந்தபோது கற்றுக் கொண்ட பிரபுக்குல நடை மற்றும் பாவனைகள் சிலவற்றை அவ்வப்பொழுது பகட்டாக வெளியே காட்டிக்கொண்டார். இன்னமும் பிரம்மச்சாரியாகவே இருந்து வந்த அவர் பணக்கார வீட்டுப் பெண்ணை, ஏன் பிரபுக் குலத்துப் பெண்ணைவுங்கூடப் பார்த்து மணம் முடித்துக்கொள்வது குறித்துக் கனவு கண்டு வந்தார். அசடாக இல்லை என்றாலும்கூட இன்னமும் அவர் ஆகாயக் கோட்டைகள் கட்டிக் கொண்டு தான் இருந்தார். தடபுடலாகப் பேசும் சுபாவமுடையவர், பாராளுமன்ற பாணியில் உரை நிகழ்த்த விரும்பினார். உயர்ந்த குடும்பத்திலிருந்து வந்தவர், ஜெனரலின் புதல்வராய்ப் பிறந்தவர், ஆடம்பரத்திலும் படாடோபத்திலும் ஆசை கொண்டவர். சிறு வயதில் அவர் வெல்வெட்டும் சல்லாத் துணியும் உடுத்தியவர், பிரபுக் குலத்தவரின்

பள்ளியில் படித்தவர். அங்கு அவர் கல்வியறிவு அதிகம் பெற்றுவிடவில்லை என்றாலும் அவருடைய அலுவலகத்தில் நன்றாகவே வேலை செய்தார், ஜெனரல் பட்டம் பெறும் அளவுக்கு உயர்ந்து சென்றார். அவருடைய மேலதிகாரிகள் அவரைத் திறமை மிக்கவராகக் கருதியதோடு, மேலும் பல சிறப்புக்கள் பெறுவார் என்றும் எதிர்பார்த்தனர். ஆனால் அவருடைய உத்தியோக வாழ்க்கையின் தொடக்கம் முதலாக அனேகமாய் ஜெனரல் பதவிக்கு உயர்வு பெறும் வரையில் அவருக்குத் தலைமை அதிகாரியாய் இருந்து வந்த ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச் என்றுமே அவரை அப்படி ஒரு திறமைசாலியாகக் கருதியதும் இல்லை, அவரிடமிருந்து அதிகம் எதிர்பார்த்ததும் இல்லை. ஆயினும் ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச்சுக்கு அவரைப் பிடித்திருந்தது; உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர், சொத்துடையவர்—அதாவது சிப்பந்தி ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வந்த ஒரு மாளிகையின் சொந்தக்காரர்—ஓரளவு உயர்நிலையிலிருந்த மேன் மக்கள் சிலரின் உறவினர் என்றும், உயர் குலத்தவரின் நடையுடை பாவனைகளைப் பெற்றிருந்தார் என்றும் அவர் மீது மதிப்பு வைத்திருந்தார். அவருடைய மிதமிஞ்சிய கற்பனைக்காகவும் யோசனையில்லாத, சிறுபிள்ளைத் தனமான போக்குக்காகவும் ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச் தன் மனத்துள் அவரைக் கண்டித்து வந்தார். இவான் இலியீச்சுங்கூட தான் அளவு மீறி தன் வயப்பட்டுவிடுவதையும், தொட்டாச் சிணுங்கியாகிவிடுவதையும் சில நேரங்களில் உணர்ந்து வருந்துவது உண்டு. காரணம் என்னவென்று அறியாமலே அடிக்கடி தன்னைத் தானே கண்டித்துக் கொண்டு மனம் நொந்து கொள்வார், தமது நெஞ்சு உறுத்தும்படியாகத் தான் ஏதோ தவறு செய்துவிட்டது போல வருந்துவார். தான் நினைக்க விரும்பியதுபோல உண்மையில் அவ்வளவு உயர்ந்த நிலையை இன்னமும் வந்தடையவில்லை என்பதைத் தனக்குத் தானே ஒத்துக்கொண்டு கசப்பும் மன வேதனையும் அடைவார். அத்தகைய தருணங்களில், முக்கியமாக அவருடைய மூல வியாதியின் உபத்திரவம் அதிகமாகிவிடும் போது, அவர் அறவே நம்பிக்கை இழந்து மனம் சோர்ந்து விடுவார், அப்பொழுது அவர் தமது வாழ்க்கையே விரயமாகிவிட்டதாகத் தம்முள் கூறிக் கொள்வார், தமது நாடாளுமன்ற வல்லமையில் தனக்குள்ள அந்தரங்க நம்பிக்கையையுங்கூட இழந்து, உளறுவா

யன் என்றும் வாய்வீச்சுக்காரன் என்றும் தன்னைத் தானே கடிந்து கொள்வார். இது மெச்சத்தக்கதே என்றாலுங்கூட, இதன்பின் அரை மணி நேரத்துக்கெல்லாம் சிறிதும் தயக்கமின்றி நெஞ்சை முன்னால் தள்ளிக் கொண்டு நிமிர்ந்து நின்று புது உற்சாகம் பெற்று, நான் எப்பேர்ப் பட்டவன் என்று காட்டுகிறேனா இல்லையா பார், உயர் அதிகாரியாக மட்டுமின்றி பெரும் புகழுக்குரியவனாகவும், ருஷ்ய நாடு நெடுங்காலம் நினைவில் வைத்திருக்கப் போகும் புகழுக்கு உரியவனாகவும் பெயரெடுக்கிறேனா இல்லையா பார் என்று முன்னிலும் உறுதியாகவும் ஆணவமாகவும் தம்முள் கூறிக் கொள்ள ஆரம்பித்துவிடுவார், அவருக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்பப்படும் காட்சி சில நேரங்களில் மெய்யாகவே அவர் மனக்கண்முன் தெரியும். இவான் இலியீச் உயர் சிகரங்களை எட்டிப் பிடிக்க நினைத்த போதிலும் தெளிவற்ற தமது கனவுகளையும் ஆசைகளையும் ஓரளவு அவநம்பிக்கை கொண்டவராகத் தம்முள் ஆழ் மட்டத்தில் மறைத்து வைத்திருந்தார் என்பதையே இவை யாவும் காட்டுகின்றன. சுருக்கமாய்ச் சொல்வதெனில் அவர் நல்ல மனிதர், அந்தரங்கத்தில் கவிஞராக இருந்தவர். கடந்த சில ஆண்டுகளாக வேதனை தரும் சோர்வு மனப்பான்மை பீடித்துக் கொண்டு விடும் தருணங்கள் மேலும் மேலும் அடிக்கடி அவருக்கு வர முற்பட்டன. எடுத்ததற்கெல்லாம் கோபங் கொள்ளவும் சந்தேகப்படவும் ஆரம்பித்தார், இம்மியளவேயான எதிர்ப்பையும் தமக்கு நேர்ந்த இழுக்காகக் கருதலானார். ஆனால் ருஷ்யாவில் தோன்றிய புதுமலர்ச்சி அவரிடம் நம்பிக்கையைக் கிளர்ந்தெழச் செய்துவிட்டது. அவர் ஜெனரல் பட்டத்துக்குரியவராகப் பதவி உயர்வு பெற்றதானது இந்த நம்பிக்கையை மேலும் உறுதியடையச் செய்தது. அவருக்குப் புதுத் தெம்பு பிறந்தது, கம்பீரமாகத் தலை நிமிர்ந்து நடக்கலானார். புத்தம் புதிய விவகாரங்களை எல்லாம் அதிவேகமாகவும் உற்சாகத்துடனும் உடனுக்குடன் தெரிந்து கொண்டு அவை குறித்து நிரம்பப் பேசினார், நாவன்மையுடன் அலுக்காமல் பேசினார். எப்பொழுது சந்தர்ப்பம் கிடைக்கும், பேசலாமென்று அலைந்தார்; நகரில் அங்கும் இங்கும் சென்று வந்தார்; எதற்கும் துணிந்த மிதவாதியென்று பல இடங்களில் பெயர் பெறலானார்; இதைப் பெரும் புகழுக்குரிய பெயராகக் கருதி மனம் மகிழ்ந்து

கொண்டார். அன்று அந்திப் பொழுதில் மூன்று, நான்கு தரம் மதுக் கோப்பை நிரப்பப்பட்டு ஷம்பெய்ன் அருந்தியதும் அவர் அபார உற்சாகமடைந்துவிட்டார். ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச்சை எல்லா விவகாரங்களிலுமே கருத்தை மாற்றிக் கொள்ளும்படிச் செய்ய வேண்டுமென்ற அடங்காத ஆவல் இப்பொழுது அவரைப் பற்றிக் கொண்டுவிட்டது. எப்பொழுதுமே அவர் ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச்சிடம் தனி மரியாதை செலுத்தி வந்தவர், அவருக்கு அடங்கிக் கீழ்ப்படிந்துங்கூட இருந்து வந்தவர். நெடுநாட்களுக்குப் பிறகு இப்பொழுதுதான் அவரை நேரில் சந்தித்துப் பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. என்ன காரணமோ தெரியவில்லை, அவர் ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச்சைப் பின்னுக்கிச் செல்பவராகக் கருதிக் காரசாரமாகத் தாக்கிப் பேசினார். தம்மைத் தற்காத்துக் கொள்வதற்காக ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச் சிறிதும் முயலவில்லை, விவாதப் பொருளில் கருத்துடையவராக இருந்த போதிலும் கேலிச் சிரிப்பு சிரித்தவாறு கேட்டுக் கொண்டிருந்தாரே ஒழிய பதில் ஏதும் சொல்லவில்லை. இவான் இலியீச் மேலும் மேலும் விறுவிறுப்படைந்து, பெரிய வாக்குவாதம் நடைபெறுவதாக நினைத்துக் கொண்டு, பேச்சு மும்முரத்தில் தனக்குரிய அளவுக்கும் கூடுதலாகவே மதுக் கோப்பையிலிருந்து பருக முற்பட்டார். பருகிவிட்டுக் கீழே வைத்ததும் ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச் புட்டியை எடுத்துத் தமது விருந்தினருடைய கோப்பையை மீண்டும் மீண்டும் நிரப்பிக் கொண்டிருந்தார். என்ன காரணத்தினாலோ இவான் இலியீச் திடுமென இது குறித்துத் தம்முள் குறைபட்டுக் கொண்டார். முக்கியமாக அவருடைய வெறுப்புக்குப் பாத்திரமாகிக் குரோதமும் துக்கிரிக் குணமும் கொண்டவராகக் கருதி அவர் அஞ்சி வந்த செமியோன் இவானவிச் ஷிப்புலேன்கோ சதிகாரரைப் போல் மௌனமாக அவர் பக்கத்தில் அமர்ந்து கொண்டு தேவைக்கும் கூடுதலாகவே அடிக்கடி புன்னகை புரிந்து வந்ததால் அவர் மேலும் கொதிப்படையலானார். ''என்னுடைய வாதங்கள் சிறுபிள்ளைத்தனமாக இருப்பதாக நினைக்கிறார்கள் போலும்'' என்று அவர் மனதில் ஓர் எண்ணம் பளிச்சிட்டுச் சென்றது.

''இல்லை, இனியும் காலம் நமக்காகக் காத்திருக்காது, நாம் விழித்தெழுந்தாக வேண்டும்'' என்று பரபரப்புற்ற

வராய் இவான் இலியீச் மேலும் தொடர்ந்து பேசினுர். ''நாம் அளவுமீறி நெடுங் காலமாக இதைக் கவனியாது சும்மாயிருந்து விட்டோம். என் கருத்துப்படி மனித நேயம் நமது முதற் பெருந்தேவையாகும். நமக்குக் கீழ்ப்பட்டோ ருக்கு நாம் மனித நேயம் காட்ட வேண்டும், அவர்களும் மனிதர்களே என்பதை நினைவில் கொண்டிருக்க வேண்டும். மனித நேயம் யாவற்றையும் பாதுகாக்க வல்லது, யாவற் றையும் செய்ய வல்லது...''

''ஹி-ஹி-ஹி!'' என்று செமியோன் இவானவிச்சிடமிருந்து ஏளனச் சிரிப்பொலி எழுந்தது.

''எதற்காக இப்படி எங்கள்மீது கண்டனக் கணைகளை வீசுகிறீர்கள்?'' என்று நயமாகச் சிரித்தவாறு ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச் முடிவில் வாய் திறந்து ஆட்சேபம் தெரிவித் தார். ''இவான் இலியீச், நீங்கள் என்ன சொல்ல முயலு கிறீர்கள் என்று இன்னமும் எனக்கு விளங்கவில்லை, என்னை மன்னிக்க வேண்டும். மனித நேயம் வேண்டும் என்கிறீர் கள். சக மனிதர்களை நேசிக்க வேண்டும் என்பது தானே இதன் பொருள்?''

''ஆம், சக மனிதர்களை நேசித்தல் என்பதாகவும் சொல் லலாம். நான் என்ன கூறுகிறேன் என்ருல்...''

' இருங்கள்! எனக்குத் தெரிந்தவரை இந்த விவகாரம் இத்துடன் நின்றுவிடக் கூடியது அல்ல. சக மனிதர்களை நேசிப்பது எப்பொழுதுமே போற்றத்தக்கதாகவே இருந்து வந்துள்ளது. ஆனுல் சீர்திருத்தமானது இத்துடன் திருப்திய டைந்துவிடக் கூடியதல்ல. விவசாயிகளைப் பற்றிய பிரச்சி னைகள், நீதித் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் அற நெறித் துறையிலும் மற்றும்... மற்றும்... ஏனைய மிகப் பலவற்றிலுமான பிரச்சினைகள் எல்லாம் எழுந்துள்ளன. இவை யாவும் ஒன்றுசேர்ந்து உடனடியாகவே எழும்போது இவை மிகப் பெரிய... பெரிய களேபரமாகிவிடலாம். நாங் கள் பயப்படுவதற்குக் காரணம் இதுதான், வெறும் மனித நேயம் மட்டும் அல்ல...''

''ஆம், பிரச்சினை மிகவும் ஆழமானது'' என்ருர் செமி யோன் இவானவிச்.

''அது எனக்குத் தெரிந்ததுதான்! செமியோன் இவான விச், உங்களுக்கு இதைக் கூற விரும்புகிறேன்: பிரச்சினையை ஆழமாகப் பரிசீலிப்பதில் உங்களுக்கு நான் எவ்வகையிலும்

சளைத்தவனல்ல'' என்று தேவைக்குச் சற்றுக் கூடுதலாகவே கடுமையாக ஒலித்த குரலில் இவான் இலியீச் குத்தலாகக் கூறினர். ''ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச், நான் இதைச் சொல்வதற்கு மன்னியுங்கள், ஆனல் என் கருத்தை நீங்கள் புரிந்து கொள்ளத் தவறிவிட்டீர்கள்...''

''ஆம், எனக்கு அது புரியவில்லை.''

''ஆயினும் திரும்பவும் கூறுகிறேன், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இக்கருத்தை ஓயாமல் வற்புறுத்துகிறேன்: மனித நேயம்தான், முக்கியமாக நமக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கு நாம் காட்டும் மனித நேயம்தான், அதிகாரியிலிருந்து குமாஸ்தா வரையில், குமாஸ்தாவிலிருந்து வீட்டு வேலைக்காரன் வரையில், வீட்டு வேலைக்காரனிலிருந்து பண்ணையாள் வரையில் இவர்கள் எல்லோருக்கும் நாம் காட்டும் மனித நேயம்தான், வரப்போகிற சீர்திருத்தங்களுக்கும் மொத்தத்தில் புத்தாக்கத்துக்கும் மலர்ச்சிக்கும் அடிப்படைக் கூருக விளங்கும். காரணம் என்ன? இதுதான் காரணம்: நேரடியான ஓர் உதாரணத்தைக் கொண்டு விளக்குகிறேன், கேளுங்கள்—நான் மனித நேயமுடையவனுக இருக்கிறேன், ஆகவே நேசிக்கப்படுகிறேன். நேசிக்கப்படுகிறேன், ஆகவே நம்பத் தக்கவனுகிறேன். நம்பத்தக்கவனுகிறேன், ஆகவே நான் சொல்வது நம்பப்படுகிறது. நான் சொல்வது நம்பப்படுகிறது, ஆகவே நேசிக்கப்படுகிறேன்—அதாவது நான் கூறுவது என்னவென்றுல், மக்கள் நம்புவார்களாயின் அவர்களுக்கு சீர்திருத்தத்தில் நம்பிக்கை ஏற்படும், விவகாரத்தின் சாரப்பொருளை அவர்கள் புரிந்து கொண்டவர்கள் ஆகிவிடுவார்கள், ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொள்வார்கள்—ஆன்மிக வழியில் கட்டித் தழுவிக் கொள்வார்கள் என்று சொல்கிறேன்—யாவற்றையும் சோதரர்களாய் அணுகித் தீர்க்கமான முடிவுக்கு வருவார்கள். செமியோன் இவானவிச், ஏன் சிரிக்கிறீர்கள்? இன்னுமா புரியவில்லை?''

ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச் மௌனமாகப் புருவங்களை உயர்த்திக் கொண்டார், அவருக்கு ஆச்சரியமாயிருந்தது.

''நான் கொஞ்சம் அதிகமாகக் குடித்துவிட்டேன் போலிருக்கிறது'' என்று செமியோன் இவானவிச் குத்தலாகக் கூறிக் கொண்டார். ''அதனுல்தான் என்னுல் சரியாகச் சிந்திக்க முடியவில்லை.''

இவான் இலியீச்சுக்குச் சுருக்கெனக் குத்திற்று.

''போதும் இது, தாங்க முடியாது'' என்று ஏதோ ஆலோசித்துக் கொண்டிருந்த ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச் திடுமெனக் கூறினர்.

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று எதிர்பாராத விதமாகத் திடீரென ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச் அப்படிக் கூறியதைக் கேட்டு வியப்புற்றுவிட்ட இவான் இலியீச் வினவினர்.

''போதும் இது, தாங்க முடியாது, முடியவே முடியாது'' என்றார் ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச். இது பற்றி மேலும் விளக்கமாகப் பேச அவர் விரும்பவில்லை என்பது புலப்பட்டது.

''புதிய ஒயினும் பழைய புட்டியும் என்பார்களே அப்படி நினைத்தா சொல்லுகிறீர்கள்?'' என்று கேலி தொனிக்கக் கேட்டார் இவான் இலியீச். ''அதெல்லாம் இல்லை, பொறுப்புணர்ந்துதான் பேசுகிறேன்.''

கடிகாரம் அப்பொழுது மணி அடித்தது, பதினென்றரை ஆகிவிட்டது.

''நேரமாகிவிட்டது, புறப்பட வேண்டியதுதான்'' என்று கூறி செமியோன் இவானவிச் நாற்காலியிலிருந்து எழப்போனர். அதற்குள் இவான் இலியீச் அவரை முந்திக் கொண்டு துள்ளியெழுந்து, கணப்படுப்பு மேடையிலிருந்து தமது சேபல் தொப்பியைக் கையில் எடுத்தார்; அவர் சற்று மனக் கசப்புற்றவராகவே தோன்றினர்.

''சரி, செமியோன் இவானவிச், ஆலோசித்துச் சொல்லுங்கள்'' என்று ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச் தமது விருந்தினர்களை வழியனுப்புகையில் கூறினர்.

''குடிவருவதைப் பற்றித்தானே? ஆலோசித்துச் சொல்கிறேன்.''

''ஒரு முடிவுக்கு வந்ததும் உடனே எனக்குத் தெரிவியுங்கள்.''

''ஏதோ சொந்தக் காரியமென நினைக்கிறேன், அப்படித் தானே?'' என்று கையிலிருந்த தொப்பியுடன் விளையாடியவாறு பணிவுடன் கேட்டார் திருவாளர் பிரலீன்ஸ்கி. தாம் உதாசீனம் செய்யப்பட்டுத் தனியே விடப்பட்டதாக அவர் நினைத்தார்.

ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச்சின் புருவங்கள் உயர்ந்தனவே அன்றி அவர் பதில் சொல்லவில்லை. தமது விருந்தினர்களை

மேலும் நிறுத்தி வைக்க விரும்பாதவரைப் போல நடந்து கொண்டார். செமியோன் இவானவிச் அவசரமாக விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

''சரி, உங்கள் இஷ்டம்... நல்ல முறையில் பழகுவதற்கான முறைகள்கூட உங்களுக்குப் புரியவில்லை என்ருல் என்ன செய்வது?'' என்று தமக்குள் கூறியவாறு திருவாளர் பிரலீன்ஸ்கி சற்று விரைப்பாகவே ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச்சுக்குக் கை கொடுத்துவிட்டுக் கிளம்பினுர்.

வெளியே கூடத்துக்கு வந்ததும் இவான் இலியீச் மென் முடி உள்வரியிடப்பட்ட விலையுயர்ந்த தமது மெல்லிய கோட்டை எடுத்து மாட்டிக் கொண்டு, செமியோன் இவானவிச்சின் பழைய ரக்கூன் கோட்டைக் கவனிக்காதது போல் பாவனை செய்து, தலையைத் திருப்பிக்கொள்ள முயன்ருர். பிறகு இருவருமாக மாடிப்படிகளில் இறங்கினர்.

''கிழவருக்குக் கொஞ்சம் கோபம் போலத் தெரிகிறது'' என்ருர் இவான் இலியீச் வாய் பேசாமல் தம்முடன் வந்த செமியோன் இவானவிச்சிடம்.

''அதெல்லாம் இல்லை, நீங்கள் ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?'' என்று அவர் அமைதியாகவும் வேண்டாவிருப்புடனும் பதிலளித்தார்.

''அடிவருடி!'' என்று தம்முள் கூறிக்கொண்டார் இவான் இலியீச்.

இருவரும் வாயில் முகப்புக்கு வந்து சேர்ந்தனர். செமியோன் இவானவிச் சிறிதும் கவர்ச்சியில்லாத சாம்பல் நிறக் குதிரை பூட்டிய தமது சறுக்கு வண்டியைக் கொண்டுவரும்படிக் கூறினுர்.

''அட சனியனே! எங்கே போனுன் இந்தத் திரீஃபன்? என்னுடைய கோச்வண்டியை எங்கே ஓட்டிச் சென்ருன்?'' என்று அங்கே எங்கும் தமது வண்டி தென்படாததைக் கண்ட இவான் இலியீச் கூச்சலிட்டார்.

அவர் சுற்றுமுற்றும் பார்த்தார், ஆனுல் அவருடைய வண்டியை எங்கும் காண முடியவில்லை. ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச்சின் வேலைக்காரனுக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. பிறகு அவர்கள் செமியோன் இவானவிச்சின் வண்டிக்காரனை வர்லாமை விசாரித்தனர். இவான் இலியீச்சின் வண்டி இவ்வளவு நேரம் இங்குதான் இருந்தது, இப்பொழுது இல்லை என்று வர்லாம் கூறினுன்.

''அருவருப்பான விவகாரமாக அல்லவா இருக்கிறது!'' என்று கூறி, ''என்னுடைய வண்டியில் கொண்டு போய் விடுகிறேன், வருகிறீர்களா?'' என்று கேட்டார் செமியோன் இவானவிச்.

''போக்கிரிப் பசங்கள்!'' என்று ஆத்திரத்தோடு கத்தினர் இவான் இலியீச். ''திருட்டுப் பயல், பீட்டர்ஸ்பர்க் புறத்தில் திருமணத்துக்குப் போக வேண்டும் என்று உத்தரவு கேட்டான். நாசமாய்ப் போக, அவனுக்கு வேண்டியவள் ஒருத்திக்குத் திருமணமாம். நான் போகக் கூடாதெனக் கண்டிப்பாகச் சொல்லியிருந்தேன். பயல் இப்பொழுது அங்கேதான் போயிருக்கிறான், பந்தயம் கட்டுகிறேன்.''

''ஆம், அங்குதான் போயிருக்கிறான்'' என்றான் வர்லாம். ''ஒரு நிமிடத்தில் வந்துவிடுவதாகச் சொன்னான், நீங்கள் வெளியே வருவதற்குள் வந்துவிடுகிறேன் என்றான்.''

''பார்த்தீர்களா? எனக்குத் தெரியும்! வரட்டும், சரியானபடி கொடுக்கிறேன்!''

''போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பி வைத்துக் கசையடி கொடுக்கச் சொல்லுங்கள். அப்பொழுதுதான் சொன்னபடி கேட்டுக் கொண்டிருப்பான்'' என்று கூறி செமியோன் இவானவிச் வண்டியின் கம்பளத்தை இழுத்துச் சரி செய்தார்.

''செமியோன் இவானவிச், உங்களுக்குச் சிரமம் வேண்டாம், நீங்கள் போய் வாருங்கள்!''

''எனக்கு ஒன்றும் சிரமம் இல்லை, நீங்களும் வரலாம்... பிறகு உங்கள் இஷ்டம்.''

''வணக்கம், நீங்கள் புறப்படுங்கள், நன்றி!''

செமியோன் இவானவிச்சின் வண்டி புறப்பட்டுச் சென்றது. இவான் இலியீச் மரத் தளமிடப்பட்ட நடை பாதையில் நடந்தார், அவருக்கு ஆத்திரம் பொங்கிற்று.

* * *

''உன்னை என்ன செய்கிறேன் பார், திருட்டு ராஸ்கல்! வேண்டுமென்றே நடந்தே போய்ச் சேர்கிறேன் பார், அப்பொழுதுதான் உன் மனதில் நன்றாய் உறைக்கும், நீ பதறிப் போவாய்! போக்கிரிப் பயல், திரும்பி வந்ததும் எசமானர் நடந்தே போய்விட்டார் என்பதைத் தெரிந்துகொள்வான்!''

இவான் இலியீச் இதன் முன் இப்படிக் கோபித்துக் கொண்டது கிடையாது, மெய்யாகவே அவருக்கு ஆத்திரம் பொறுக்க முடியவில்லை. அதோடுகூட அவருக்குத் தலை வேறு சுற்றியது. அவர் குடிப்பவர் அல்ல, ஐந்தாறு கோப்பை குடித்ததுமே பாதிக்கப்பட்டுவிட்டார். ஆனால் அன்று இரவு இனிமையாக இருந்தது, உறைந்து போய் என்றுமில்லாத படி அமைதியாகவும் காற்று வீசாமலும் இருந்தது. நிர்மல மான வானத்தில் விண்மீன்கள் பிரகாசித்தன. முழு நிலாவின் ஒளியில் தரை முழுதும் வெள்ளிபோன்ற ஒரு தகதகப்பு இதமாகச் சுடர்விட்டு ஒளிர்ந்தது. வெளியே நடப்பதற்கு அவ்வளவு இனிமையாக இருந்தது, ஐம்பது தப்படி நடந்ததும் இவான் இலியீச் தமக்கு நேர்ந்த அசம்பாவிதத்தை அனேகமாக மறந்துவிட்டார். விவரிக்க இயலாத இன்ப உணர்ச்சியால் அவர் ஆட்கொள்ளப்பட்டுவிட்டார். குடி போதையில் இருப்போரின் மனநிலை மாறிய வண்ண முள்ளது. ஆள் அரவமின்றி வெறிச்சோடிய தெருவின் இரு மருங்கிலும் இருந்த அவலட்சணமான சிறிய மர வீடுகளுங்கூட அவருக்குக் கவர்ச்சிகரமாய்த் தோன்றின.

''நடந்து செல்வதென்று நான் புறப்பட்டு வந்ததும் நல்லதுதான்'' என்று தனக்குத் தானே கூறிக் கொண்டார். ''திரீஃபனுக்கு இது ஒரு நல்ல பாடமாக இருக்கும், எனக்கும் இன்பமாக இருக்கிறது. நான் அதிகமாக நடக்க வேண்டும். ஆம், பல்ஷோய் பிரஸ்பேக்தில் ஜட்கா வண்டி கிடைக்கும். எவ்வளவு இன்பகரமான இரவு! சின்னஞ் சிறு வீடுகளாக அல்லவா இருக்கின்றன யாவும்! சின்ன மனிதர்கள் வசிக்கும் இடமாயிருக்கும், குமாஸ்தாக்கள்... கடைக்காரர்களும் இருக்கலாம். இந்த ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச் இருக்கிறாரே, இவரை என்னென்பது! எப்படிப்பட்ட பிற்போக்கர்களாய் இருக்கிறார்கள், பத்தாம் பசலிகள்! பத்தாம் பசலிகள்—சரியான பெயர் அது! இருந்தாலும் ஆள் கூரறிவு படைத்தவர், விஷயங்களைப் புரிந்து கொள்ளும் நடைமுறை ஞானமுள்ளவர். ஆனால் எல்லாம் கிழடுகள், படு கிழடுகள்! இவர்களிடம் இல்லை, அதன் பெயரென்ன—என்னமோ சொல்வார்களே, அது இல்லவே இல்லை. 'அவ்வளவுதான், அதற்குமேல் தாங்காது' என்றாரே—என்ன நினைத்து அப்படிச் சொன்னார்? சற்று நேரம் ஆலோசித்துவிட்டல்லவா அதைச் சொன்னார். நான் கூறியதை அவர் சரிவரப் புரிந்து

கொள்ளவில்லை. இதை எப்படிப் புரிந்து கொள்ளத் தவற முடியும்? புரிந்து கொள்வதைக் காட்டிலும் புரிந்து கொள் ளாமல் இருப்பது கடினமாயிற்றே. பிரதானமானது என்ன வெனில் எனக்கு இதில் துளிக்கூட சந்தேகமில்லை, ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளேன். மனிதநேயம்... சக மனிதர் கள் பால் அன்பு செலுத்தல். நான் மனிதன் என்னும் உணர்ச் சியை ஒவ்வொருவரிடமும் உண்டாகச் செய்வோம்... ஒவ் வொருவரிடத்தும் தன்மானத்தை உயிர் பெற்றெழச் செய் வோம்,பிறகு... பக்குவநிலையில் தயாராயிருப்பதை வைத்துக் கொண்டு புதிதாக வேலை தொடங்குவோம். தெளிவாகத் தெரிவது தானே இது? ஆம், சந்தேகம் என்ன? ஓர் உதா ரணம் கூறுகிறேன், மேதகையீர், அருள் கூர்ந்து தாங்கள் அனுமதிக்க வேண்டும். ஒரு குமாஸ்தாவை, ஒடுக்கப் பட்ட ஏழையாகிய குமாஸ்தாவைச் சந்திக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். 'நல்லது... யார் அப்பா நீ?' 'என் பெயர் இது, குமாஸ்தா நான், இந்தப் பிரிவில் இருக் கிறேன்' என்பதாக பதில் கிடைக்கிறது. 'வேலை செய்கி றாயா?' — 'செய்கிறேன்.' — 'ஆனந்தமாக வாழ விரும்பு கிறாயா?'—'விரும்புகிறேன்.' — 'ஆனந்தமாக வாழ்வதற்கு உனக்கு வேண்டியது என்ன?' அது வேண்டும், இது வேண் டும். 'ஏன்?' ஏனென்றால்... வாய் திறந்து நான் ஐந்தாறு வார்த்தைகள் சொன்னால் போதும், அந்த ஆள் உடனே என்னைப் புரிந்து கொள்கிறான், வலையில் அவன் மாட்டிக் கொள்கிறான் என்றே சொல்ல வேண்டும், பிறகு நான் விரும்புகிறபடி அவனை எது வேண்டுமானாலும் செய்யலாம், அவனுடைய நன்மைக்காக அவனை எது வேண்டுமானா லும் செய்யலாம் என்று சொல்கிறேன். அந்த செமியோன் இவானவிச் இருக்கிறாரே, படுமோசமான ஆள்! மூஞ்சியும் அவரும் அருவருப்புதான் ஏற்படுகிறது... 'கசையடி கொ டுக்கச் சொல்லுங்கள்!'' என்றாரே. என்னைக் கலாட்டா செய்ய வேண்டும் என்றுதானே அப்படிச் சொன்னார். வேண் டாம் அதெல்லாம் — நீங்கள் வேண்டுமானால் கசையடி கொடுக்கச் சொல்லுங்கள், நான் ஒன்றும் அப்படிச் செய்ய மாட்டேன்! சொற்களைக் கொண்டு, கண்டனக் கணைகளைக் கொண்டு நான் திரீஃபனை வெட்கப்படச் செய்வேன்; ஆம், அவனைத் தலை குனியச் செய்வேன்; தவறிழைத்ததை அவன் உணரவே போகிறான், நீங்கள் அதைப் பார்ப்பீர்கள். தண்

டத்தைப் பிரயோகிப்பதைப் பொறுத்தவரை, இது இன்னும் தீர்வு காணப் பெருத ஒரு பிரச்சினையாகும், ஆம்... திருவாட்டி எமரான்சைப் பார்க்கச் சென்ருல் என்ன? சனியன்—இந்த மரத்தள நடைபாதை நாசமாய்ப் போக!'' என்று அவர் திடுமெனக் கால் தவறியதும் கடிந்து கொண்டார். ''தலைநகரில் போய் இப்படியா இருக்க வேண்டும்! அறிவு மலர்ச்சியாம்! காலை முறித்துக் கொண்டல்லவா இருப்பேன்? உம்... இந்த செமியோன் இவானவிச்சை நினைத்தாலே வெறுப்பாக இருக்கிறது—அவர் மூஞ்சியும் அவரும்! 'ஆன்மீக வழியில் கட்டித் தழுவிக் கொள்வார்கள்' என்று நான் சொன்னதும் அப்படி ஏளனமாகச் சிரித்தாரே. ஆம், கட்டித் தழுவிக் கொள்வார்கள்தான், உங்களுக்கு என்னவாம்? உங்களை நான் கட்டித் தழுவிக் கொள்ளப் போவதில்லையே—பண்ணையாளிடம் சென்ருலும் செல்வேன், உங்கள் அருகே வர விரும்ப மாட்டேனே... இந்தப் பண்ணையாளை நான் சந்திக்க நேர்ந்தால் நின்று அவனுடன் சற்று நேரம் பேசுவேன். மெய்தான், எனக்குக் கொஞ்சம் குடி போதைதான், தெளிவாகப் பேச நான் தவறியிருக்கலாம். இப்பொழுதுங் கூட அவ்வளவு தெளிவாகப் பேசுகிறேனு என்பது தெரியவில்லை. ஊம்... இனி நான் குடிக்கவே மாட்டேன். மாலையில் மித மிஞ்சிப் பேசிவிட்டுப் பொழுது விடிந்ததும் ஏன் அவ்வளவு பேசினேம் என்று வருந்தும்படி வைத்துக்கொள்ளக் கூடாது. ஆனல் என்னல் நேராய் நடக்க முடிகிறதே... போக்கிரிகள், பொல்லாத போக்கிரிகள்!''

இவான் இலியீச் தொடர்ந்து நடந்தபடி இவ்வாறு தொடர்பின்றி தன்னுள் வாதாடினர். தூய காற்று ஓரளவு அவரை நிதானமடையச் செய்தது. இன்னும் ஐந்து நிமிடங்கள் நடந்திருந்தால் அவர் அமைதியடைந்திருப்பார், தூங்க வேண்டுமென விரும்பியிருப்பார். ஆனல் பல்ஷோய் சாலையை நெருங்கி வந்ததும் திடுமென இசையின் நாதம் ஒலிக்கக் கேட்டார். சுற்றிலும் பார்த்தார். தெருவின் எதிர்ச் சாரியில் ஓரடுக்கே கொண்டதாயினும் மிகவும் நீளமான மிகப் பழைய மர வீடு ஒன்றிலிருந்து கும்மாளமான ஒலிகள் எழுந்தன. பிடில்கள் கீச்சிட்டன, குவாட்ரில் நடனக் குதூகல இசை ஒரு குழலிலிருந்து உச்ச ஸ்தாயியில் கிளர்ந்தெழுந்தது. சன்னல்களுக்கு வெளிப்புறத்தில் சிறு கூட்டம் கூடியிருந்தது. கூட்டத்தினரில் பெரும்பாலோரும்

பெண்கள், தலையில் குட்டைகள் கட்டிக் கொண்டு பஞ்சடைத்த கோட்டுகள் போட்டிருந்த இந்தப் பெண்கள் சன்னல் அடைப்புகளின் இடுக்குகள் வழியே தெரிந்ததைப் பார்ப்பதற்காக முண்டியடித்துக் கொண்டு முயற்சி செய்தனர். கும்மாளமான கொண்டாட்டம் என்பது நன்றாகத் தெரிந்தது. நடனமாடியோரின் பாதங்கள் தட்டியெழுப்பிய சப்தத்தைத் தெருவின் எதிர்ச் சாரியிலிருந்து கேட்க முடிந்தது. அருகாமையில் ஒரு போலீஸ்காரன் நிற்பதைக் கண்ணுற்ற இவான் இலியீச் அவனிடம் சென்றார்.

''யார் வீடு அப்பா, இது?'' என்று கேட்டு, தமது மார்பிலிருந்த உயர் பதக்கம் அந்தப் போலீஸ்காரனுக்கு தெரியும்படி விலை உயர்ந்த தமது மேல் கோட்டைச் சிறிதளவு திறந்து காட்டினார்.

''பதிவாளர் பிசெல்தனீமவின் வீடு'' என்று அந்தப் போலீஸ்காரன் நேரே நிமிர்ந்து நின்று பணிவுடன் பதிலளித்தான். உயர் சிறப்புக்குரிய அந்தப் பதக்கத்தை அவன் கவனித்துவிட்டான்.

''பிசெல்தனீமவா? ஓகோ! பிசெல்தனீமவ்! என்ன நடைபெறுகிறது! பிசெல்தனீமவின் திருமணமா?''

''ஆமாம், மேதகையீர்! பட்ட ஆலோசகரின் மகளை மணந்து கொள்கிறார். பட்ட ஆலோசகர் மிலெக்கப்பித்தாயெவ் முன்பு நகராட்சி மன்றத்தில் பணியாற்றி வந்தவர். மணமகளுடன்கூட இவ்வீடும் அளிக்கப்படுகிறது.''

''அப்படியா? இனி இவ்வீடு பிசெல்தனீமவுக்குரியது, மிலெக்கப்பித்தாயெவினுடையதல்ல என்று சொல்.''

''ஆம், மேதகையீர், அப்படித்தான்! மிலெக்கப்பித்தாயெவுடையதாய் இருந்தது, இப்பொழுது பிசெல்தனீமவுக்கு உரியதாகி விட்டது.''

''அப்படிச் சொல். ஏன் கேட்கிறேன் என்றால் நான் அவருடைய தலைமை அதிகாரி. பிசெல்தனீமவ் வேலை செய்யும் அலுவலகத்தில் நான் ஜெனரல் பதவி வகிக்கிறேன்.''

''தங்களுக்கு என் வணக்கம், மேதகையீர்!'' என்று மேலும் நேராக அந்தப் போலீஸ்காரன் நிமிர்ந்து நின்றான். ஆனால் இவான் இலியீச் சிந்தனையில் ஆழ்ந்தவராகத் தோன்றினார். எதையோ ஆலோசித்தவாறு அங்கே நின்று கொண்டிருந்தார்...

ஆம், பிசெல்தனீமவ் அவருடைய இலாகாவில், அவரு

டைய அலுவலகத்தில்தான் வேலை செய்து வந்தான். இப்பொழுது அவருக்கு நினைவு வந்தது. மாதம் சுமார் பத்து ரூபிள் சம்பளம் பெறுகின்ற கீழ்நிலை அலுவலர் அவன். திருவாளர் பிரலீன்ஸ்கி மிக அண்மையில்தான் இந்த அலுவலகத்தின் அதிபராகப் பொறுப்பு ஏற்றவர், ஆகவே தமது சிப்பந்திகள் யாவரையும் நன்கு அறிந்தவராய் இருப்பது கடினம். எனினும் பிசெல்தனீமவை அவர் நன்ருய் நினைவில் வைத்திருந்தார், அந்த ஆளின் பெயர்தான் அதற்குக் காரணம். முதல் தரம் அந்தப் பெயர் எதிர்பட்டதுமே அது அவர் கவனத்தைக் கவர்ந்திருந்தது. சற்று கவனமாகவே அத்தகைய நூதனப் பெயருக்கு உரியவரைப் பார்த்து வைத்திருந்தார். இப்பொழுது அந்த ஆளின் உருவம் அவர் மனக்கண்முன் தோன்றியது: மிக இளம் வயது, நீண்டு வளைந்த கிளிமூக்கு, முடிச்சு முடிச்சாயிருந்த வெண்சணல் முடிகள், மிகவும் மெலிந்து வற்றலாயிருந்த உடல், அலங்கோலமான உடுப்பு, தாறுமாருன கால்சட்டை ஆகிய யாவும் அவர் நினைவுக்கு வந்தன. படுகேவலமான நிலையிலிருந்த இந்த ஆள் விழா நாளின் போது ஏதாவது வாங்கிக் கொள்ளும் பொருட்டு பத்து ரூபிள் நோட்டு ஒன்றை வழங்கலாமா என்பதாக ஓர் எண்ணம் அவருடைய மனத்தில் பளிச்சிட்டுச் சென்றதுகூட அவர் நினைவுக்கு வந்தது. ஆனுல் பரிதாபகரமான அந்த ஆளின் முகம் அப்படிச் சோபையற்று, அருவருப்பைத் தவிர வேறு எந்த உணர்ச்சியையும் உண்டாக்காத அவந்தரையான பாவமுடையதாக இருந்ததால் அவருடைய தயாள எண்ணம் எப்படியோ கரைந்து காற்ரேடு காற்ருகிவிட்டது, பிசெல்தனீமவ் சன்மானம் பெருமலே இருந்துவிட்டான். ஆகவே இதே பிசெல்தனீமவ் திருமணம் செய்து கொள்ளப் போவதாகக் கூறி அவரிடம் அனுமதி கேட்க* வந்ததும் அவருடைய வியப்பு மேலும் அதிகரிக்கலாயிற்று. இந்த விவகாரத்தைச் சரியாகப் பரிசீலிப்பதற்குத் தமக்கு அவகாசம் இல்லாமற் போனது பற்றியும், திருமணப் பிரச்சினை அவசரமாக மேலெழுந்தவாரியாக முடிவு செய்யப்பட்டது பற்றியும் அவர் நினைத்துக்

---

* ஜார் கால ருஷ்யாவில் அரசாங்க அலுவலர் திருமணம் செய்து கொள்ளுமுன் மேல் அதிகாரியிடம் அனுமதி பெற வேண்டியிருந்தது.—**ப-ர்.**

கொண்டார். பிசெல்தனீமவுக்கு மணமகளுடன்கூட ஒரு மர வீடும் நானூறு ரூபிள் ரொக்கமும் கிடைக்குமென்பது தெளிவாக அவர் நினைவுக்கு வந்தது. அப்பொழுது இந்தத் தகவல் வியப்புக்குரிய ஒன்ருக அவர் மனதில் பதிந்துவிட்டது. மிலெக்கப்பித்தாயெவ், பிசெல்தனீமவ்—இவ்விரு விநோதப் பெயர்களும் ஒன்றுசேரும் வேடிக்கை குறித்து தமாஷாய்த் தாம் ஏதோ கூறியதுகூட அவருக்கு ஞாபகம் வந்தது. இவை யாவும் பளிச்சென அவர் நினைவில் தெரிந்தன.

இந்த நினைவுகள் எழ எழ அவர் மேலும் மேலும் சிந்தனையில் மூழ்கிவிட்டார். நீண்ட வாக்குவாதங்கள் சில சமயம் நம் மனத்துள் இலக்கிய மொழியில் வேண்டாம், சாதாரணப் பேச்சு மொழியிலுங்கூட பெயர்க்கப்படாமலே உணர்ச்சிகளின் வடிவில் பளிச்சிட்டுவிட்டு ஓடுவதுண்டென்பது தெரிந்ததே. நமது கதைத் தலைவரின் மனத்துள் ஓடிய இந்த உணர்ச்சிகளை மொழி வடிவில் பெயர்த்து இவற்றின் சாரப்பொருளையாவது, இவற்றில் மிகவும் முக்கியமாகவும் புரியக்கூடியவையாகவும் இருந்தவற்றையாவது வாசகருக்குத் தெரிவிக்க முயலுகின்றோம். ஏனெனில் நமது உணர்ச்சிகளில் பலவும் சாதாரண மொழியில் பெயர்க்கப்பட்டதும் சிறிதும் நம்ப முடியாதனவாகத் தோன்றுகின்றன. எனவே தான், எல்லோரும் அனுபவித்துள்ள உணர்ச்சிகளே ஆயினும் இவை வெளிச்சத்துக்கு வராமலே உள்ளடங்கிவிடுகின்றன. இவான் இலியீச்சின் உணர்ச்சிகளும் எண்ணங்களும் ஒன்றுக்கொன்று அதிகம் தொடர்பின்றி இருந்தன. ஆனல் இதற்குரிய காரணம் நமக்குத் தெரிந்ததுதான்.

''ஏன்தான் இப்படியோ!'' அவர் மனத்துள் ஓர் எண்ணம் பளிச்சிட்டது. ''பேசுகிறோம், பேசிக் கொண்டே இருக்கிறோம்—அவ்வளவுதான். செயல் புரிய வேண்டி வந்ததும் மூஞ்சியைத் திருப்பிக் கொள்கிறோம். இந்த பிசெல்தனீமவையே உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். மணம் முடித்துக் கொண்டு இப்பொழுதுதான் திரும்பியுள்ளான்; பரபரப்பு அடைந்தவனக, நன்னம்பிக்கை கொண்டவனக, தாம்பத்திய வாழ்க்கையின் சுகத்தை அனுபவிக்க வேண்டுமென்ற துடிப்புடையவனகத் திரும்பியுள்ளான். அவனுடைய வாழ்வில் இது மிகவும் இன்பகரமான நாட்களில் ஒன்று... இப்பொழுது அவன் தனது விருந்தினர்களை அழைத்து உபசரிக்கின்றன், விருந்து அளிக்கின்றன்—எளி

மையானதாக, ஏழ்மையானதாக இருப்பினும் உவகை தரும் குதூகலமான உளமார்ந்த விருந்து... இந்தக் கணத்தில் நான்—அவனது தலைமை அதிகாரியான, அலுவலக அதிபரான நான்—அவனுடைய வீட்டுக்கு வெளியே நின்று அவனுடைய விருந்து இசையைக் கேட்கிறேன் என்பது அவனுக்குத் தெரிய வருமானால் எப்படியிருக்கும்! இந்த நிலைமையில் அவன் என்ன செய்வான்? நேரே நான் உள்ளே நுழைந்து எதிரே போய் நின்றால் என்ன செய்வான்? முதலில் திடுக்குற்றுப் போய்க் குழப்பமடைந்து விடுவான்தான். ஒருவேளை நான் போவது அவர்களுடைய கொண்டாட்டத்தில் குறுக்கிடுவதாய், குளறுபடி செய்வதாய் ஆகிவிடுமோ?.. ஆம், வேறு எந்த ஜெனரல் போனாலும் அப்படித்தான் ஆகும், ஆனால் நான் போனால்... அதுதான் இங்குள்ள விஷயம்... வேறு யாராயிருந்தாலும் நேரக் கூடியது நான் செல்லும்போது மட்டும் நேரவே நேராது...

''ஆம், ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச், நான் சொன்னதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை, இதோ பாருங்கள் — உங்களுக்குக் கண்கூடான ஓர் எடுத்துக்காட்டு!

''ஆம்! மனிதநேயத்தைப் பற்றி வாய் கிழியப் பேசுகிறோம், ஆனால் வீரச் செயல் புரியத் திறனற்றோராக இருக்கிறோம். மெய்யான காரியமாற்ற இயலாதோராக இருக்கிறோம்.

''வீரச் செயல் என்று எதைச் சொல்கிறேன்? இதைத்தான்: சமுதாய உறுப்பினர்கள் எல்லோரிடையிலும் தற்போது இருந்து வரும் உறவுகளின்படி, நான் அங்கே போவது, கீழ்த்தரச்சிப்பந்தி ஒருவருடைய, மாதம் பத்து ரூபிள் பெறும் ஒரு பதிவாளருடைய திருமணத்துக்கு நள்ளிரவுக்குப் பிற்பாடு போவது பைத்தியக்காரச் செயலாகவே, கருத்துக் குளறுபடியாகவே, பாம்பீயின் முடிவு நாளாகவே,* பெருங் குழப்பமாகவே கருதப்படும்! யாராலும் அதைப் புரிந்து கொள்ளமுடியாது. ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச் தமது இறுதி மூச்சு உள்ளவரை முயலுவதாயினுங்கூட அதைப் புரிந்து

---

* **பாம்பீய்**—பழங்காலத்திய ரோமானிய நகரம். வெசூவியஸ் எரிமலை வெடித்து நெருப்பைக் கக்கிய காரணத்தால் கி.பி. 79ல் இந்நகரம் அழிந்தது. இங்கே பேராபத்து என்ற பொருளில் கையாளப்பட்டிருக்கிறது.—**ப-ர்.**

கொள்ள மாட்டார். அவ்வளவுதான், அதற்குமேல் தாங்காது என்று அல்லவா கூறினர் அவர். ஆம், அப்படிப் பட்டவர்கள் நீங்கள் எல்லோரும்—பத்தாம் பசலிகள், முடக்கு வாதம் கண்டவர்கள், பிற்போக்கர்கள். ஏன் தாங்காது?—நான் தாங்கிக் காட்டுகிறேன்! பாம்பீயின் முடிவு நாளை எனது அலுவலகச் சிப்பந்தியின் இன்பகரமான நாளாக மாறச் செய்கிறேன்; பைத்தியக்காரச் செயலாகத் தோன்றுவதை முறையானதாக, தந்தை தனயர் உறவு வழிப்பட்டதாக, உயர் சிறப்புக்குரியதாக, நன்னெறியை வளர்ப்பதாக மாறச் செய்கிறேன். எப்படி இப்படி! அருள் கூர்ந்து கேளுங்கள் இதை!

''சரி... நான் உள்ளே போவதாக வைத்துக் கொள்வோம். அவர்கள் திகைப்புற்றுவிடுகிருர்கள், நடனம் நின்றுவிடுகிறது, வைத்த கண் வாங்காமல் என்னைப் பார்க்கின்றனர், ஓரடி பின்னுல் செல்கின்றனர். ஆனுல் உடனே நான் எப்படிப்பட்டவன் என்பதை அவர்களுக்குத் தெரியும்படிச் செய்கிறேன். கருணை மிகுந்த புன்னகை புரிந்தவாறு நேரே நான், அங்கே பீதியுற்று நிற்கும் பிசெல்தனீமவிடம் சென்று ஆடம்பரம் எதுவுமின்றி சர்வசாதாரணமான முறையில் பேசுகிறேன்: 'என்ன ஆயிற்று என்ருல், மேதகையர் ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச்சின் வீட்டுக்குச் சென்றிருந்தேன். இங்கேதான் அருகாமையில் இருக்கிறது அவர் வீடு, உனக்குத் தெரிந்திருக்கும்...' பிறகு திரீஃபன் மட்டம் போட்டுவிட்டு மறைந்தது பற்றி வேடிக்கையும் சிரிப்புமாக எடுத்துரைப்பேன். திரீஃபனைப் பற்றிக் கூறியபின் நான் நடந்து வந்ததை விவரிப்பேன்... 'இங்கே இசையின் முழக்கம் ஒலிக்கக் கேட்டதும் போலீஸ்காரனை விசாரித்தேன், உன்னுடைய திருமணம் என்பது தெரிய வந்தது. என்னுடைய அலுவலகச் சிப்பந்தியின் வீட்டுக்குப் போய்ப் பார்ப்போம், என்னுடைய குமாஸ்தாக்கள் ஆடிப் பாடி மகிழ்வதையும்... மணம் புரிந்து கொள்வதையும் கண்டு செல்வோம் என்று நினைத்தேன். வரக் கூடாது என்று சொல்லி என்னை விரட்ட மாட்டாய் அல்லவா?' என்னை விரட்டுவதாவது! எனக்குக் கீழ்ப்பட்ட சிப்பந்தி ஒருவன் செய்ய நினைப்பானு இப்படி? என்னை வரக் கூடாதென விரட்டுவதா — அது நடக்கக் கூடியது அல்லவே! நான் என்ன நினைக்கிறேன் என்ருல், பிசெல்தனீமவ் பித்துப்பிடித்தவன் மாதிரி ஆகிவிடுவான், என்னை ஒரு

சாய்வுநாற்காலியில் உட்கார வைக்க வேண்டுமென்று பறந்தோடுவான், முதலில் எதுவும் புரியாதவனாக அப்படிப் பரவசமுற்றுத் திகைத்துப் போய்விடுவான்!..

''இது போன்ற ஒரு செயலைக் காட்டிலும் உன்னதமானது எதுவும் இருக்க முடியுமா? எதற்காக நான் அங்கு போனேன்? அது முற்றிலும் வேறொரு பிரச்சினை! அதாவது இந்த விவகாரத்தின் நன்னெறி விளக்கமாக அதைச் சொல்லலாம். அதில்தான் இதன் எழில் அனைத்தும் அடங்கியுள்ளது!

''ஊம்! என்ன சிந்தித்துக் கொண்டிருந்தேன்? ஆம், அதுதான்!

''ஆமாம்... என்னை அழைத்துச் சென்று விருந்தினர்களில் மிகவும் முக்கியஸ்தர்களாக இருப்போரின் பக்கத்தில் உட்கார வைப்பார்கள். யாராவது பட்ட ஆலோசகராக இருக்கும், அல்லது உறவினராகிய ஓய்வு பெற்ற காப்டனாக இருக்கும், சிவந்த மூக்குடையவராக இருப்பார்... கோகல்* இந்த ரகங்களை அற்புதமாய்ச் சித்தரித்துள்ளார். ஆம், மணமகளுக்கு என்னை அறிமுகம் செய்து வைப்பார்கள், அவள் மகிழும் வண்ணம் பாராட்டிப் பேசுவேன். பிறகு விருந்தினர்களை உற்சாகப்படுத்துவேன்; கூச்சப்பட வேண்டாம், களிப்புற்று மகிழவேண்டும், நடனமாடுங்கள் என்று வேண்டிக் கொள்வேன்; வேடிக்கையாகப் பேசுவேன், சிரிப்பேன்—சுருங்கச் சொன்னால் ஆர்வமும் இனிமையும் மிக்கவனாக நடந்து கொள்வேன். என்னைப் பற்றி நான் திருப்திப்பட்டுக் கொள்கையில் எப்பொழுதுமே நான் ஆர்வமும் இனிமையும் மிக்கவனாகவே இருக்கிறேன். உம், ஆனால் இப்பொழுது கொஞ்சம் நான் கிறங்கிய நிலையில்தான் இருக்கிறேன்... ஆனால் நிதானம் தவறும் நிலையில்லை... கொஞ்சம் விறுவிறுப்பாக இருக்கிறது அவ்வளவுதான்...

''...இயல்பாகவே, நான் அவர்களை எனக்குச் சமமானவர்களாகக் கருதி வித்தியாசமின்றி நடந்து கொள்வேன், தனி மரியாதைக்குரிய முறைகள் அனுசரிக்கப்பட வேண்டுமென்று எதிர்பார்க்க மாட்டேன்... ஆனால் நன்னெறி... நன்னெறியைப் பொறுத்தவரையில் அது வேறு விவகாரம்.

---

* நிக்கலாய் வசீலியெவிச் கோகல் (1809—1852)—மாபெரும் ருஷ்ய எழுத்தாளர்.—ப-ர்.

அவர்கள் புரிந்து கொள்வார்கள், போற்றுவார்கள்... என் செயல் அவர்களிடம் இருக்கும் பெருந்தன்மையை வெளி வரச் செய்யும்... அங்கே சுமார் அரை மணி இருப்பேன்... அதிகம் போனால் ஒரு மணி நேரம். விருந்துக்கு முன்பு எப்படியும் புறப்பட்டுவிடுவேன். அவர்கள் ஓடியாடி வேலை செய்வார்கள், என்னைக் கேட்டுக் கொள்வார்கள், தண்ட னிட்டு வேண்டுவார்கள், ஆனால் நான் ஒரு கோப்பைக்கு மேல் மதுபானம் அருந்த மாட்டேன், அவர்களுக்கு வாழ்த்து ரைத்து விட்டு விருந்துக்கு முன்பு புறப்பட்டுவிடுவேன். 'அலுவல் இருக்கிறது!' என்பேன். 'அலுவல்' என்று நான் சொன்னதும் உடனே அவர்கள் எல்லோருடைய முகத்திலும் பணிவுக்கும் அடக்கத்துக்குமுரிய பாவனை படிந்துவிடும். அவர்களுக்கும் எனக்கும் இடையே பெரிய வேறுபாடு இருக் கிறது என்பதை இவ்விதம் நான் நயமாக உணர்த்துவேன் —மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடு இருக்கிறது! இதை நான் வெளிப்படக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை என்ரு லும், அவர்களாகவே இதை உணர்ந்து கொள்வார்கள்... இந்த வேறுபாடு அவசியம், யார் என்ன சொன்ன போதி லும் நன்னெறியின் கண்ணேட்டத்திலும் மிகவும் அவசியம். நான் புன்னகை புரிவேன், ஏன் சிரிக்கவுங்கூட செய்வேன், பிறகு எல்லோருக்கும் ஊக்கமும் உற்சாகமும் திரும்பி விடும்... மீண்டும் நான் மணமகளிடம் வேடிக்கையாக ஏதாவது சொல்வேன். உம், எனக்குத் தெரியும் என்ன சொல்வதென்று: சரியாக ஒன்பது மாதம் கழித்து திரும் பவும் வருவேன்—அருட்தந்தையாக—என்று ஜாடையாகச் சொல்வேன், ஹ-ஹா! சந்தேகம் வேண்டாம், காலம் தவரு மல் பெற்றெடுப்பாள். முயல்களைப்போல் பெருகிவிடுகிற வர்கள் ஆயிற்றே. ஆம், எல்லோரும் சிரிப்பார்கள், வெட் கத்தால் மணமகளுக்கு முகம் சிவந்துவிடும். உள்ளன்புடன் அவள் நெற்றியில் முத்தமிடுகிறேன், ஆசியும் கூறுகிறேன்... எனது இந்த தீரச் செயல் மறுநாள் அலுவலகத்தில் எல் லோருக்கும் தெரியவரும். மறுநாள் திரும்பவும் நான் கடு மைமிக்கவனாக, கண்டிப்பானவனாக ஆகிவிடுகிறேன், கல் மனம் கொண்டவனாகக்கூட நடந்து கொள்கிறேன்—ஆனால் நான் எப்படிப்பட்டவன் என்பது இப்பொழுது எல்லோருக் கும் தெரிந்திருக்கும். அவர்கள் என் அகத்தினை அறிந்து கொண்டவர்கள், எனது உண்மை உருவத்தைக் கண்டு

13—687

கொண்டவர்கள். 'கண்டிப்பான அலுவலக அதிபர், ஆனல் தங்கமான மனிதர்' என்று பேசிக் கொள்வார்கள். இவ் வாறு எனக்கு வெற்றி கிட்டுகிறது. உங்கள் மனத்துக்கு ஒரு போதும் எட்டியிருக்காத ஒரு சிறு காரியத்தைச் செய்து ஒரு பெரிய சாதனை காண்கிறேன். இப்பொழுது அவர்கள் என்ன வர்களாகிவிட்டனர். நான் தந்தை, அவர்கள் தனயர் — இப் படி ஆகிவிட்டோம்...இப்பொழுது என்ன சொல்கிறீர்கள், மேதகையீர் ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச், இது போன்ற ஒரு காரியத்தை உங்களால் செய்ய முடியுமா, சொல்லுங்கள்!..

''...தெரியவில்லையா, புரியவில்லையா உங்களுக்கு இது? — பிசெல்தனீமவ் தனது பிள்ளைகளிடம் சொல்வான், அவர் களுடைய தந்தையின் திருமணத்திற்கு ஜெனரலே நேரில் வந்திருந்து எப்படிக் குதூகலமுற்ருர், பானம்கூட அருந்தி ஞரே என்று சொல்வான். இந்தப் பிள்ளைகள் தமது பிள்ளை களிடம் சொல்வார்கள், தலைமுறை தலைமுறையாய்க் கூறப் பட்டு புனிதமடைந்துவிட்ட ஒரு கதையாக அவர்கள் பேரப் பிள்ளைகளிடம் சொல்வார்கள், மிக உயர்ந்த அதிகாரியும் அரசுப் பிரமுகருமான ஒருவர் (அதற்குள் நான் இவ்விரண் டுமாகி விடுவேன்) எப்படித் தம் தந்தையைக் கௌரவித் தார்... மதுபானம் அருந்திஞர்... என்றெல்லாம் சொல் வார்களே, தெரியவில்லையா உங்களுக்கு? கீழ்நிலையிலுள்ள வனை, நன்னெறியின் நிலையிலிருந்து பேசுகையில், உயரும் படி அல்லவா செய்கிறேன்? அவனையே அவனுக்கு மீட்டளிப் பதை அல்லவா செய்கிறேன்? மாதத்துக்குப் பத்தே ரூபிள் பெறுகிறவன் ஆயிற்றே அவன்! இப்படி நான் ஐந்து தடவை, பத்து தடவை, அல்லது இது போன்ற சிலபல தடவை செய்வேனுகில் எப்படிப்பட்ட உயர்ந்த செல்வாக்குடைய வனுகி விடுவேன்... அனைவரின் மனதிலும் ஆழப்பதிந்துவிடும்; அதன் விளவு, அந்தச் செல்வாக்கின் விளைவு எத்தகையதாக இருக்கும், சொல்ல முடியுமா யாராலும்!..''

இப்படித்தான், அல்லது ஏறத்தாழ இப்படித்தான் இவான் இலியீச் தன்னுள் வாதாடிஞர். (கனவான்களே, மனிதன் சில நேரம் தன்னுள் என்னவெல்லாம் கூறிக் கொள் கிருன்! அதுவும் கொஞ்சம் சரக்கு தலைக்கேறிவிடுமாயின் கேட்கவா வேண்டும்?) இந்த நினைப்புகள் ஒரு நிமிடத்துக் கும் குறைவான நேரத்துக்கே அவர் மனத்துள் பளிச்சிட்டுச் சென்றன. இந்த அற்ப விசாரங்களுடனும், தம் மனத்துள்

ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச்சை வெட்கித் தலை குனிய வைப்பதுடனும் அவர் நிச்சயம் திருப்தியடைந்து, பேசாமல் வீட்டுக்குப் போய்ப் படுத்துறங்கியிருப்பார். அது எவ்வளவோ நன்ருகவும் இருந்திருக்கும்! ஆனுல் துரதிர்ஷ்டவசமாக அந்தத் தருணம் கிறுக்குத்தனத்துக்குரிய ஒரு பொல்லாத தருணமாக இருந்தது.

அவருடைய போருத காலம், சரியாய் அத்தருணத்தில் ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச், செமியோன் இவானவிச் இவர்கள் இருவரின் மெத்தனமான முகங்களும் அவருடைய கிளர்ச்சி கொண்ட கற்பனையில் தோற்றமளித்தன.

''போதும் இது, தாங்க முடியாது'' என்று ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச் இளக்காரமாய்ச் சிரித்தவாறு அழுத்தம் திருத்தமாய்க் கூறினுர்.

''ஹி-ஹி-ஹி!'' என்று செமியோன் இவானவிச் பார்க்கச் சகிக்காதவாறு இளித்துக் கொண்டார்.

''அதற்குமேல் தாங்காதா என்பதைப் பார்ப்போம்!'' என்ருர் இவான் இலியீச், தீர்மானமாக. இரத்தம் குபீரென அவருடைய கன்னங்களில் பாய்ந்தது. நடைபாதையிலிருந்து கீழே இறங்கி, தமது சிப்பந்தியாகிய பதிவாளர் பிசெல்தனீமவின் வீட்டை நோக்கித் தெருவின் குறுக்கே திடமாக நடந்தார்.

* * *

பொல்லாத விதியானது அவரை உந்தித் தள்ளிற்று. திறந்திருந்த வேலிக் கதவைக் கடந்து துணிவுடன் உள்ளே சென்ருர். உள்ளே வருகிறவரைத் தடுக்கவேண்டும் என்றில்லாவிட்டாலும் தனக்குரிய சம்பிரதாய வேலையைச் செய்ய வேண்டுமென்று கரகரக்கும் குரலில் குரைத்துக் கொண்டு அவர் காலருகே ஓடி வந்த பறட்டை முடிகளையுடைய சிறிய நோஞ்சான் நாயை அலட்சியமாக உதைத்துத் தள்ளிவிட்டு மரப் பாதையிலே நடந்தார். காவலாளர் கூண்டுப் பெட்டியைப் போல முற்றத்தினுள் துருத்திக் கொண்டு நின்று கூரை வாயில் முகப்புக்குச் சென்று கடகடத்துப் போன மூன்று மரப் படிகள் மீது ஏறிச் சின்னஞ் சிறு வாயினுள் நுழைந்தார். உள்ளே எங்கோ ஒரு மூலையில் சிறிய மெழுகு வத்தியோ, அகல் விளக்கோ எரிந்து கொண்டிருந்

தது. ஆனால் இந்த வெளிச்சம், வெளியே ஆறுவதற்காக வைக்கப்பட்டிருந்த கறி வறுவலுக்குள் இவான் இலியீச் தமது இடது காலை பூட்ஸ் மேலுறையும் அடங்கலாக முக்கி யெடுப்பதைத் தடுத்துவிடவில்லை. இவான் இலியீச் குனிந்து பார்த்தார், ஆவலுடன் ஆராய்ந்த அவர் கண்களில் அங்கே இறைச்சி அல்லது மீன் ஜெல்லி வகை இருந்த வேறு இரு தட்டுகளும், மற்றும் இரு தட்டுகளும் ஆறுவதற்கு வைக் கப்பட்டிருந்ததைக் கண்டார். மிதித்துப் பாழாக்கப்பட்டு விட்ட கறி வறுவலைப் பார்த்ததும் அவர் கணநேரம் திடுக் கிட்டு விட்டார். நொடிப் பொழுதுக்கு அவர் மனத்துள் திடுமென ஓர் எண்ணம் தோன்றிற்று: உடனே அங்கிருந்து நழுவி வெளியே போய் விடுவது மேலல்லவா? ஆனால் இது கோழைத்தனமாகுமென அவர் முடிவு செய்தார். யாரும் தம்மைப் பார்க்கவும் இல்லை, தம்மீது சந்தேகம் கொள்ள நினைக்கவும் மாட்டார் என்று வாதாடியவாறு அவசரமாகத் தமது பூட்ஸ் மேலுறையைத் துடைத்து அதில் ஒட்டியி ருந்தவற்றை அகற்றிக் கொண்டு, ஒட்டுக் கம்பளியிட்ட கதவைக் கையால் துழாவிக் கண்டு பிடித்துத் திறந்தார். மிகச் சிறிய நுழைவு அறையினுள் அவர் அடியெடுத்து வைத் தார். அதன் ஒரு பாதியில் மேல் கோட்டுகளும் அங்கிகளும் தொப்பிகளும் கவிகைகளும் மப்ளர்களும் பூட்ஸ் மேலுறை களும் பெருங் குவியலாய்க் குவிந்திருந்தன. மற்றொரு பாதி யில் இசைக் குழுவினர்—இரண்டு பிடில்கள், ஒரு குழல், டபிள்-பாஸ், ஆக மொத்தம் நான்கு வாத்தியக்காரர்கள் —இருக்கை கொண்டிருந்தனர் (நால்வரும் தெருவில் தேடிப் பிடிக்கப்பட்டவர்களாகவே இருக்க வேண்டும்). வர்ணம் பூசப்படாத கள்ளிப் பலகை மேசையைச் சுற்றிலும் இவர் கள் அமர்ந்திருந்தனர், மேசையின்மீது தன்னந்தனியே மெ ழுகுவத்தி ஒன்று எரிந்து கொண்டிருந்தது. நால்வரும் தமது முழு பலத்தையும் கொண்டு குவாட்ரில் நாட்டியத்துக்கான இசையின் கடைசிச் சுற்றை வாசித்துக் கொண்டிருந்தனர். திறந்த கதவு வழியே அடுத்த அறையினுள் தூசிக்கும் சிக ரெட்டுப் புகைக்கும் ஆவிக்குமிடையே நடனமாடுவோரைக் காண முடிந்தது. வெடிவெடிப்பது போன்ற பலத்த சிரிப் பின் முழக்கமும் கூச்சலும் கீச்சொலியும் கேட்டன. குதிரைப் படை செல்கிறதோ என்று எண்ணும்படி இருந்தது ஆடவர் களின் பாதங்கள் தரையைத் தட்டி எழுப்பிய தடதடப்பு.

இந்தப் பேய்க் கூச்சலேயும் மூழ்க்கடித்துக் கொண்டு கிளர்ந் தெழுந்தன நடன நிர்வாகியின் அறிவிப்புகள். தயக்கமோ தடங்கலோ சிறிது மின்றி சகஜமாய்ப் பழகக் கூடியவர் அவர். ''கனவான்கள் நடுவில், சீமாட்டிகள் வளேயமிட்டு ஆடியசைக'' என்பது போன்ற அவருடைய அறிவிப்புகள் கிளர்ந்தெழுந்தன. இவான் இலியீச் சற்று கிலியுடனேதான் மேல்கோட்டையும் பூட்ஸ் மேலுறைகளேயும் கழற்றி வைத்து விட்டு கையில் தமது தொப்பியைப் பிடித்துக் கொண்டு அறையினுள் பிரவேசித்தார். எதைப் பற்றியும் இப்பொழுது அவர் ஆலோசிக்கும் நிலேயில் இல்லே.

அவர் வந்ததை முதலில் யாரும் கவனிக்கவில்லே, எல் லோரும் நடனத்தை ஆடி முடிப்பதில் முனேந்திருந்தனர். இவான் இலியீச் திகைப்படைந்து நின்று கொண்டிருந்தார், அந்தச் சந்தடியிலும் குழப்பத்திலும் அவரால் எதையும் தெளிவாகப் பார்க்க முடியவில்லே. பெண்டிரின் ஆடைகளும் பற்களுக்கிடையில் சிகரெட்டைக் கவ்வியிருந்த ஆடவர்களும் சுற்றிச் சுழன்று செல்வதுதான் தெரிந்தது... ஒரு சீமாட்டி யின் வெளிர் நீல ஸ்கார்ஃப் அவருடைய மூக்கின் நுனியைத் தேய்த்தவாறு பறந்தோடிற்று. தலே முடிகள் அலங்கோல மாகக் காற்றில் சுழன்ருட மருத்துவ மாணவன் ஒருவன் அந்தச் சீமாட்டியின் பின்னுல் பறந்தோடினுன், ஓடும்போது பாதையில் நின்ற இவான் இலியீச்சைப் பிடித்துத் தள்ளி னுன். மாதாகோயில் கோபுரம்போல உயரமான இராணுவ ஆபீசர் ஒருவர் அவர் முன்னுல் பாய்ந்தோடினுர். யாரோ ஒரு வர் இயற்கைக்கு மாருன கீச்சுக் குரலில் ''அப்பனே பிசெல் தனீமவ்!'' என்று கூச்சலிட்டுப் பறந்து சென்று ஏனேயோரின் தாளத்துக்கு இசைவாகப் பாதத்தால் தாளம் தட்டினுர். இவான் இலியீச்சின் காலுக்கடியில் தரை பிசுபிசுப்பாய் இருந்தது — மெழுகிட்டுத் தேய்த்து அது பளபளப்பாக்கப் பட்டிருக்க வேண்டும். அந்தப் பெரிய அறையினுள் முப்பது பேர் வரை இருந்திருப்பார்கள்.

மேலும் ஒரு நிமிடம் கழிந்திருக்கும், நடனம் முடிவடைந் தது. இவான் இலியீச் முன்பு வீட்டுக்குவெளியே நின்று கற் பனே செய்து கனவு கண்டது உடனே இப்பொழுது நடை பெற ஆரம்பித்தது. விருந்தினர்களிடமிருந்தும், நடனமாடி விட்டு இன்னமும் மேல்மூச்சு நிதானம் பெருமலும் முகத்

திலிருந்து வியர்வையைத் துடைத்துக் கொள்ளாமலும் நின்றவர்களிடமிருந்தும் ஒருவகைச் சலசலப்பு, விநோத மான ஒரு குசுகுசுப்பு எழுந்தது. எல்லாக் கண்களும் எல்லா முகங்களும் புதிதாக வந்த விருந்தினர் பக்கம் வேகமாகத் திரும்பின. இதைத் தொடர்ந்து மறு கணமே எல்லோரும் பின்னால் நகர்ந்தனர், இன்னமும் அவரைக் கவனிக்காமல் எங்கோ பார்த்துக் கொண்டு நின்றவர்களின் ஆடைகளைப் பிடித்திழுத்துக் கவனிக்கும்படிச் செய்தனர். உடனே இவர் களும் திரும்பிப் பார்த்துவிட்டு அவசர அவசரமாக ஏனை யோருடன் சேர்ந்து பின்னால் நகர்ந்தனர். இவான் இலியீச் இன்னும் ஓர் அடிகூட எடுத்து வைத்து உள்ளே வராமல் கதவருகேதான் நின்று கொண்டிருந்தார். அவருக்கும் விருந் தினர்களுக்கும் இடையே காலி இடம் மேலும் மேலும் பெரிதாகிச் சென்றது, இந்தக் காலி இடத்தில் மிட்டாய்க் காகிதங்களும் துண்டுக் கடுதாசிகளும் சிகரெட்டுத் துண்டு களும் கணக்கின்றிச் சிதறிக்கிடந்தன. அலுவலக நீள்கோட்டு அணிந்து பறட்டைச் சணல் முடியும் கிளி மூக்கும் கொண்ட இளைஞன் ஒருவன் தயங்கியவாறு திடுமென அந்தக் காலி இடத்தினுள் அடியெடுத்து வைத்தான். எஜமானனால் உதைப் பதற்காக அழைக்கப்படுகின்ற நாய் எப்படி பரிதாபமாக அவனைப் பார்க்குமோ அதேபோல அந்த இளைஞன், எதிர் பாராத வகையில் வந்து நின்ற தனது விருந்தினரை உற்றுப் பார்த்தவாறு தொய்ந்த தோள்களுடன் கூனிக் குறுகிக் கொண்டு முன்னே சென்றான்.

''பிசெல்தனீமவ், வணக்கம்—என்னைத் தெரிகிறதா?..'' என்று கேட்டார் இவான் இலியீச். தாம் இப்படிக் கேட் டது அசட்டுத்தனமாகும் என்ற உணர்வு உடனே அவருக்கு ஏற்பட்டது. இக்கணத்தில் தாம் செய்வது மிகப் பெரும் தவறாக இருக்குமோ என்பதாகவும் ஓர் உணர்வு உண்டா யிற்று அவருக்கு.

''மே-மே-மேதகையீர்!..'' என்று முணு முணுத்தான் பிசெல்தனீமவ்.

''ஹற-ஹறா! அகஸ்மாத்தாய் நான் இங்கு வந்து சேர்ந் திருக்கிறேன், ஏற்கனவே நீ இதை ஊகித்துக்கொண்டிருப் பாய்...''

ஆனால் பிசெல்தனீமவ் எதையும் ஊகித்துக் கொள்ளும் நிலையில் இல்லை என்பது நன்றாகத் தெரிந்தது. பீதியுற்றுக்

கதிகலங்கிப் போய் பேந்தப் பேந்த விழித்த கண்களுடன் அங்கே நின்று கொண்டிருந்தான் அவன்.

''சரி, இங்கே வராதே என்று என்னை விரட்டியடிக்க மாட்டாயென நினைக்கிறேன்—விரும்பினுலும் விரும்பாவிட்டாலும் நீ விருந்தினனை வரவேற்றே ஆக வேண்டும்!..'' என்று தொடர்ந்து இவான் இலியீச் பேசினார். சிறிதும் ஒவ்வாத ஒரு தளர்ச்சி ஏற்பட்டு அவரை மனம் குழம்பச் செய்தது; சிரிக்க முயற்சி செய்தார், ஆனல் முடியவில்லை; ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச்சையும் திரீஃபனையும் பற்றிய வேடிக்கையான பேச்சைத் தொடங்குவது மேலும் மேலும் முடியாத காரியமாகிவந்தது. ஆனல் நிலைமை மேலும் மோசமாகும் வண்ணம் பிசெல்தனீமவ் இன்னும் தமது கதிகலக்கத்திலிருந்து விடுபடாமல் பேசா மடந்தையாக அசடு வழியும் நிலையில் திருதிருவென விழித்துக் கொண்டு நின்முன். இவான் இலியீச் வெலவெலத்துப் போய்விட்டார், இந்த நிலைமையை இன்னுமொரு கணம் நீடிக்க விட்டால் சகிக்க முடியாமற்போய்விடும் என்று நினைத்தார்.

''வேண்டாம், உனக்குச் சங்கடமாக இருக்கும் போல் தெரிகிறது... நான் திரும்பிப் போய்விடுகிறேன்!'' என்று தயங்கியவாறு அவர் மெல்லக் கூறினார். அவருடைய வாயின் வலப்பக்கத்தில் தசைநார் துடித்தது...

ஆனல் அதற்குள் பிசெல்தனீமவுக்கு சுயநினைவு திரும்பி விட்டது...

''மேதகையீர்...எனக்குக் கிட்டியுள்ள பெருஞ்சிறப்பு...'' என்று அவசரமாகத் தலை குனிந்து வணங்கியவாறு முணுமுணுத்தான். ''அருள் கூர்ந்து இங்கே வந்து அமர வேண்டும்'' என்று அவன் தனது பிரமிப்பிலிருந்து மேலும் விடுபட்டவனக இரு கைகளையும் சோபாவின் பக்கம் காட்டினன். வழக்கமாக அந்த சோபாவின் எதிரே இருக்க வேண்டிய மேசை நடமாடுவோருக்கு இடம் வேண்டும் என்பதனல் அங்கிருந்து நகர்த்தப்பட்டிருந்தது.

பெருமூச்செறிந்தவாறு இவான் இலியீச் அந்த சோபாவில் சாய்ந்தார். உடனே யாரோ ஒருவர் ஓடி வந்து மேசையைத் திரும்பவும் சோபாவின் எதிரே நகர்த்தி வைத்தார். இவான் இலியீச் சுற்றிலும் நோட்டமிட்டார், தான் மட்டும் அமர்ந்திருக்க ஏனையோர் எல்லோரும், பெண்களும் அடங்கலாய், நின்று கொண்டிருப்பதைக் கவனித்தார்.

நல்ல குறியல்ல இது. ஆனால் இதை உணர்த்துவதற்கும் ஆர்வ மூட்டுவதற்கும் தக்க நேரம் இன்னும் வந்தாகவில்லை. விருந்தினர்கள் இன்னும் அவரிடமிருந்து விலகி ஒதுங்கிச் சென்ற வண்ணம்தான் இருந்தனர். பிசெல்தனீமவ் மட்டும் தான் அடக்கவொடுக்கமாய் அவர் பக்கத்தில் நின்று கொண் டிருந்தான். இன்னும் அவன் ஒன்றும் விளங்காத நிலையில் தான் இருந்தான், சிரிப்பின் சாயலை அவன் முகத்தில் காணவே முடியவில்லை. சுருங்கச் சொன்னால் ஹரூன்-அல்-ரஷீதின் பாணியில்* நமது கதைத் தலைவர் மேற்கொண்ட இலட்சிய முயற்சி மெய்யாகவே ஒரு மாபெரும் தீரச் செயலாகக் கருதப்பட வேண்டிய அளவுக்கு அந்த நேரத் தில் அப்படி அவர் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தார். ஆனால் திடீரென அப்பொழுது ஒரு சிறிய உருவம் பிசெல் தனீமவின் அருகே தோன்றி தலை குனிந்து வணக்கம் தெரி விக்க முற்பட்டது. இவான் இலியீச் தமது தலைமைக் குமாஸ் தா அக்கீம் பெத்ரோவிச் ஸூபிக்கவை அடையாளம் தெரிந்து கொண்டதும் விவரிக்க முடியாதவாறு மகிழ்ச்சியுற்றார், ஏன் புளகாங்கிதமடைந்தார். தலைமைக் குமாஸ்தாவுடன் அவ ருக்கு அலுவலகத்துக்கு வெளியே பரிச்சயம் இல்லைதான், ஆயினும் திறமை வாய்ந்த, வாய் பேசாத அதிகாரி என் பது அவருக்குத் தெரியும். இவான் இலியீச் உடனே எழுந்து அக்கீம் பெத்ரோவிச்சுக்குக் கை கொடுத்தார்— இரண்டே இரண்டு விரல்களை அல்ல, முழுக் கையையும் கொடுத்தார். பின்னவர் பக்திசிரத்தையோடு அதைத் தமது இரு கைகளா லும் அணைத்துப் பிடித்துக் கொண்டார். ஜெனரலுக்கு ஆனந்தமாயிருந்தது. இனி சமாளித்துக் கொண்டுவிடலாம், பயமில்லை.

ஏனெனில் இப்பொழுது இந்த உரையாடலில் பிசெல்த னீமவ் இரண்டாவது அல்ல, மூன்றாவது பாத்திரமாகிவிட் டதாகச் சொல்லலாம். இவான் இலியீச் இனி பிசெல்தனீ மவை வாய் மூடிய மௌனியாய்ப் பக்தி மிகுந்த அடக்க வொடுக்கத்தால் பயந்து நடுங்கும்படி விட்டுவிட்டு தாம்

---

* **ஆயிரத்து ஓர் இரவுகளில்** ஒரு கதை காலிப் ஹரூன்-அல்-ரஷீதைப் பற்றிக் கூறுகிறது. இவர் சாமான்ய மனித ராக மாறு வேடம் பூண்டு ஏழை மக்களது இல்லங்களுக்குச் சென்றார்.—**ப-ர்.**

கூற வேண்டியதை நேரே தமது தலைமைக் குமாஸ்தாவிடம் கூறலாமென மகிழ்ந்து கொண்டார். அனுசரிக்கப்பட வேண்டிய ஆசார முறைகள் இவ்விதம் அனுசரிக்கப்பட்டுவிடும். தாம் கூற வேண்டுமென நினைத்திருந்ததை நிச்சயம் கூறியாக வேண்டும், இது மிகவும் அவசியமென்று இவான் இலியீச் நினைத்தார். எல்லோரும் காது கொடுத்துக் கேட்பதற்காக ஆவலுடன் காத்திருந்ததை, குடும்பத்தினர் எல்லோரும் இரு வாயிற்படிகளிலும் நெரிசலாய்க் கூடி யாவற்றையும் பார்க்க வேண்டுமென்றும் கேட்க வேண்டுமென்றும் எம்பியடித்துக் கொண்டு நின்றதை அவர் காண முடிந்தது. தலைமைக் குமாஸ்தா இன்னமும் உட்காராமலே அப்படி அசட்டுத்தனமாக நின்று கொண்டிருக்கிறாரே என்று அவர் வேதனைப்பட்டுக் கொண்டார்.

''ஏன் நிற்கிறீர், உட்காரக் கூடாதா?'' என்று கூறி, இவான் இலியீச் சோபாவில் தம் பக்கத்தில் ஓரிடத்தைச் சங்கடப்பட்டுக் கொண்டு அவருக்குச் சுட்டிக்காட்டினார்.

''வேண்டாங்க! இங்கே உட்கார்ந்து கொள்கிறேன்'' என்றார் அக்கீம் பெத்ரோவிச். உட்காராமல் அசையாது நேரே நின்ற பிசெல்தனீமவ் அவருக்குப் பின்னால் குனிந்து நகர்த்தி வைத்த நாற்காலியில் அவசரக் கோலமாய் உட்கார்ந்து கொண்டார்.

''என்ன ஆயிற்று என்பதைச் சொல்கிறேன் கேளும்!'' என்று இவான் இலியீச் வேறு எங்கும் திரும்பாமல் முற்றிலும் அக்கீம் பெத்ரோவிச்சைப் பார்த்துப் பேச முற்பட்டார். அவருடைய குரல் சற்று நடுங்கியதென்றாலும் இப்பொழுது தடங்கலின்றித் தெளிவாகவே ஒலித்தது. சொற்களை இழுத்து நீட்டி ஒவ்வொரு அசையையும் அழுத்தி உச்சரித்தார்; உயிரெழுத்துக்கள் அதிகம் ஒலிக்காதவாறு மூடிமெழுகிச் சென்றார்; சுருங்கச் சொல்வதெனில் அவரே தம்முள் ஒத்துக் கொண்டது போல மிகவும் பகட்டான முறையில் பேசினார். அவரால் அப்படித்தான் பேச முடிந்தது, ஏதோ ஒரு சக்தி வெளியிலிருந்து அவரை ஆட்டி வைத்த மாதிரி இருந்தது. அந்த நேரத்தில் அவர் நிறைய உணர்ந்து கொண்டார், இந்த உணர்வு அவரைக் கொடிய முறையில் வதைத்தது.

''என்ன ஆயிற்று என்பதைச் சொல்கிறேன், ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச் நிக்கீஃபரவின் வீட்டிலிருந்து வருகிறேன்,

உமக்குத் தெரிந்திருக்கும்—தனி ஆலோசகர் அவர். உம்... அந்தக் கமிஷனில் இருக்கிறார்...''

''அவரைப் பற்றித் தெரியாதவரும் இருக்க முடியுமா?'' என்று சொல்ல விரும்பும் பாவனையுடன் அக்கீம் பெத்ரோவிச் தமது முழு உடலையும் முன்னால் நகர்த்திப் பணிவுடன் கீழே குனிந்தார்.

''இப்பொழுது அவர் உன்னுடைய அண்டை வீட்டுக்காரராகிவிட்டார்'' என்று பிசெல்தனீமவ் பக்கம் திரும்பியவாறு கூறினார். ஆசார முறைக்காகவும் சகஜமாய்ப் பழகுவதாய்க் காட்டிக் கொள்வதற்காகவும் வேண்டி பிசெல்தனீமவின் பக்கம் திரும்பி இதைச் சொன்னார், ஆனால் இதில் அவனுக்கு அக்கறை கிஞ்சித்தும் இல்லை என்பதை பிசெல்தனீமவின் முகபாவனையில் கண்டதும் அவசரமாகத் தலையைத் திருப்பிக் கொண்டுவிட்டார்.

''உமக்குத் தெரிந்திருக்கலாம், ஒரு வீடு வாங்கிக் கொள்ள வேண்டுமென்று வாழ்வெல்லாம் கிழவர் ஆசைப்பட்டு வந்தவர்... ஆகவே இப்பொழுது ஒரு வீட்டை வாங்கிவிட்டார். அருமையான சிறிய வீடு. ஆம்—இன்று அவருக்குப் பிறந்த நாள். இதன்முன் அவர் இந்நாளைக் கொண்டாடியதே இல்லை; ஏன், தமது பிறந்த நாள் எங்களுக்குத் தெரிந்துவிடாதபடி மறைத்து வந்தார், அவ்வளவு பெரிய கருமி... ஹ-ஹா! ஆனால் புதிய வீடு அப்படி அவரைப் பூரிப்படையச் செய்திருப்பதால் இம்முறை என்னையும் செமியோன் இவானவிச்சையும் அழைத்துப் பிறந்த நாள் கொண்டாடினார்—ஷிப்புலேன்கோவை உங்களுக்குத் தெரிந்திருக்கும்.''

சொல்ல முடியாத உற்சாகத்துடன் மீண்டும் அக்கீம் பெத்ரோவிச் முன்னால் நகர்ந்து பணிவுடன் குனிந்தார். இவான் இலியீச் கொஞ்சம் உற்சாகமடையலானார். தலைமைக் குமாஸ்தா தமது ஆதரவு மேதகையருக்கு அந்த நேரத்தில் இன்றியமையாததாக இருந்ததை உணர்ந்து கொண்டிருப்பாரோ, அதைக் காட்டிலும் அருவருப்பானது எதுவும் இருக்க முடியாதே என்று இவான் இலியீச் அச்சப்படத் தொடங்கியிருந்த நேரம் அது.

''சரி, மேசைமீது ஷம்பெய்ன், சுற்றிலும் நாங்கள் மூன்று பேர்... எங்கள் அலுவல்கள் குறித்து உரையாடிக் கொண்டிருந்தோம்... கேட்கவா வேண்டும், பேச்சு சுவாரஸ்யமாகி

விட்டது... பல பிரச்சனைகளும் எழுந்தன... சற்று காரசார மான வாக்குவாதம் மூண்டுவிட்டதாகக் கூட சொல்ல லாம்... ஹி-ஹி!''

அக்கீம் பெத்ரோவிச் மிகவும் பணிவுடன் தமது புருவங் களை மேலே உயர்த்திக் கொண்டார்.

''ஆனால் இங்கு நான் சொல்ல வந்தது அதுவல்ல. முடி வில் நாங்கள் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப் பட்டோம். கிழவர் தினமும் காலக் கிரமம் சிறிதும் தவ றுமல் யாவும் செய்பவர், வயதுக் காலமாதலால் முன்ன தாகவே படுக்கச் சென்றுவிடுகிறவர். நான் வெளியே வந்து பார்க்கிறேன்... என்னுடைய வண்டிக்காரன் திரீஃபன் எங் கோ மறைந்துவிட்டான்! எனக்குக் கொஞ்சம் அதிர்ச்சி யாய்த்தான் இருந்தது, ''வண்டியை எங்கே ஓட்டிச் சென்று விட்டான் இந்தத் திரீஃபன்?'' என்று கேட்டேன். நான் வருவதற்கு அதிக நேரமாகுமென நினைத்து எங்கோ திரு மணத்துக்குப் போய்விட்டானும், அவன் சகாவுக்கோ, தங் கைக்கோ திருமணமாம்... ஆண்டவனுக்குத்தான் தெரியும், யாருக்கென்று! இங்குதான் பீட்டர்ஸ்பர்க் புறத்திலாம். போனவன் சும்மா போகாமல், வண்டியையும் ஓட்டிச் சென்று விட்டான்.'' திரும்பவும் ஜெனரல் ஆசார முறைக் காக வேண்டி பிசெல்தனீமவின் பக்கம் திரும்பினர். அவரு டைய பார்வை தன்மீது படிவதைக் கண்டதும் பிசெல்தனீ மவ் வெலவெலத்துப் போய்விட்டான். இதுவல்ல ஜெனரல் அவனிடமிருந்து எதிர்பார்த்தது. ''கொஞ்சமாவது பரிவோ இரக்கமோ இருப்பதாகத் தெரியவில்லையே''—இந்த எண் ணம் அவர் மனத்துள் பளிச்சிட்டுச் சென்றது.

''இப்படியுமா ஒருத்தன் செய்வான்!'' என்று பெரிதும் வியப்புற்றவராக அக்கீம் பெத்ரோவிச் கூறினர். ஆச்சரியத் தின் அறிகுறியாக, கூட்டத்தினரிடையிலிருந்து லேசான சல சலப்பு எழுந்தது.

''இந்த நிலைமையில் நான் என்ன செய்ய முடியும், சொல்லுங்கள்...'' (இவான் இலியீச்சின் பார்வை அங்கு கூடியிருந்தோரை நோட்டமிட்டுச் சென்றது.) ''ஒன்றும் செய்வதற்கில்லை, நடக்க வேண்டியதுதான். பல்ஷோய் சாலை வரை நடந்தோமானல், அங்கே ஏதாவது ஜட்கா கிடைக்குமென்று புறப்பட்டேன், ஹி-ஹி!''

''ஹி-ஹி-ஹி!'' என்று பணிவுடன் அக்கீம் பெத்ரோவிச்

இளித்துக் கொண்டார். திரும்பவும் கூட்டத்தினரிடையே சலசலப்பு, இம்முறை களிப்பினைத் தெரிவித்த சலசலப்பு எழுந்தது. அதே நேரத்தில் சுவர் விளக்கு ஒன்றின் கண்ணாடி வெடிக்கும் பலத்த சப்தம் கேட்டது. யாரோ ஒருவர் அவசரமாய் அங்கே ஓடினார். துணுக்குற்றுவிட்ட பிசெல்தனீமவ் கடுப்புடன் அந்த விளக்கை உற்றுப் பார்த்தான். ஆனால் ஜெனரல் கவனிக்காதவர் போல் இருந்துவிடவே, எல்லோரும் நிம்மதியடைந்தனர்.

''நான் நடந்து வந்து கொண்டிருந்தேன்—அருமையான, அமைதியான இரவு. திடுமென இசையின் நாதமும், பலரும் நடனமாடி எழுப்பிய தடதடப்பும் கேட்டன. அங்கிருந்த போலீஸ்காரனிடம் சென்று விசாரித்தேன்—பிசெல்தனீமவுக்குத் திருமணம் என்றான் அவன். நீ நடன விருந்து அளிப்பது பீட்டர்ஸ்பர்க் புறம் எங்கும் தெரிந்திருக்கிறது, பாரேன்! ஹ-ஹா!'' என்று திடுமென அவர் பிசெல்தனீமவின் பக்கம் திரும்பினார்.

''ஹி-ஹி! நன்றாய்ச் சொன்னீர்கள்!'' என்று ஒத்து ஊதினார் அக்கீம் பெத்ரோவிச். விருந்தினர்களிடையே மீண்டும் பரபரப்பு ஏற்பட்டது. ஆனால் பிசெல்தனீமவ் திரும்பவும் தலை குனிந்து வணங்கி நிமிர்ந்தானே அன்றி சிரிக்கவே இல்லை, மரம் போல உணர்ச்சியற்றவனாக நின்று கொண்டிருந்தான். ''அடிமுட்டாளாக இருப்பான் போல் தெரிகிறதே!'' என்று நினைத்தார் இவான் இலியீச். ''அசட்டுக் கழுதை, கொஞ்சம் சிரிக்கக் கூடாதா? யாவும் எவ்வளவு இனிமையாக நடந்தேறும்!'' அவர் நெஞ்சினுள் சீற்றம் பொங்கிற்று. ''உள்ளே சென்று என்னுடைய சிப்பந்தியைப் பார்த்துவிட்டு வந்தால் என்ன?—என்று என்னுள் ஓர் எண்ணம் எழுந்தது. பிசெல்தனீமவ் என்னை வராதே என்று விரட்டிவிடப் போவதில்லை... விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் விருந்தினனை வரவேற்றே ஆக வேண்டும்! நீ என்னை மன்னிக்க வேண்டும், நான் வந்திருப்பது உனக்கு இடைஞ்சலாக இருக்குமாயின், நான் போய்விடுகிறேன்... எட்டிப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்...''

விருந்தினர்களுக்கு இப்பொழுதுதான் உயிர் திரும்ப ஆரம்பித்தது. ''மேதகையரால் இடைஞ்சல் ஏற்படுவதாவது?'' என்று கூறும் தோரணையில் அக்கீம் பெத்ரோவிச் இனிய முறையில் சிரித்துக் கொண்டார். விருந்தினர்கள்

மெல்ல அங்கும் இங்கும் நகர ஆரம்பித்தனர், கூச்சம் குறைந்து வருகிறதென்பதற்கான அறிகுறிகளை அவர்களி டையே காண முடிந்தது. அனேகமாக எல்லாப் பெண் களும் உட்காரத் தொடங்கினர். நல்ல அறிகுறி இது. அவர் களிடையே கொஞ்சம் துணிச்சலானவர்கள் கைக்குட்டை யை ஆட்டி விசிறிக்கொண்டனர். பழசாகிவிட்ட வெல்வெட் கவுன் அணிந்திருந்த ஒரு பெண் வேண்டுமென்றே பலத்த குரலில் ஏதோ சொன்னுள். அவள் யாரைப் பார்த்துப் பேசினுளோ அந்த இராணுவ ஆபீசர் மேலும் பலமான குரலில் அவளுக்குப் பதிலளிக்கப் போனுர், ஆனுல் வேறு யாரும் உரக்கப் பேசாததால், அவரும் தமது குரலைத் தணித்துக் கொண்டுவிட்டார். பெரும்பாலும் குமாஸ்தாக் களும் ஒருசில மாணவர்களுமாகிய ஆடவர்கள் கூச்சப்பட வேண்டாம் என்று கூறிக் கொள்வதுபோல ஒருவரையொ ருவர் பார்த்துக்கொண்டனர்; இருமியவாறு பல திசைகளி லும் இரண்டொரு அடியெடுத்து வைத்து நடக்க முற்பட் டனர். உண்மையில் யாருக்கும் அப்படி ஒன்றும் கூச்சமா யில்லை, ஆனுல் எல்லோருக்கும் சங்கடமாக இருந்தது. திடு மெனத் தம்மிடையே தோன்றித் தமது கேளிக்கையைக் கெடுத்த இந்த ஆளின்மீது பெரும்பாலோரும் உள்ளுக்குள் வெறுப்பும் குரோதமும் கொண்டிருந்தனர். தமக்கு ஏன் இந்தக் கோழைத்தனமென வெட்கமுற்ற அந்த இராணுவ ஆபீசர் முண்டியடித்துக் கொண்டு மேசையருகே வரலானுர்.

''இங்கே பார் அப்பா, உன் முதற் பெயரும் தந்தை வழிப் பெயரும் என்ன, சொல்'' என்று பிசெல்தனீமவிடம் கேட்டார் இவான் இலியீச்.

''பர்ஃபீரி பெத்ரோவிச், மேதகையீர்'' என்று பேந்தப் பேந்த விழித்தவாறு பட்டாள அணிவகுப்பின்போது சார் ஜண்டுக்குப் பதில் கூறும் படைவீரனைப் போல விறைத்து நின்று அவன் பதிலளித்தான்.

''பர்ஃபீரி பெத்ரோவிச், உன்னுடைய மணப்பெண்ணை நீ எனக்கு அறிமுகம் செய்து வைக்கப் போவதில்லையா? அவளிடம் என்னை அழைத்துச் செல்லேன்...''

இதைச் சொல்லி ஜெனரல் சோபாவிலிருந்து எழுந்தி ருக்கப் போனுர். ஆனுல் அதற்குள் பிசெல்தனீமவ் அடித்து மோதிக் கொண்டு வரவேற்பறைக்குள் ஓடினுன். மணமகள் அதுவரை வாயிற்படியில் நின்றுகொண்டிருந்தவள், தன்னைப்

பற்றி பேசப்பட்டது காதில் விழுந்ததும் ஒளிந்துகொண்டு விட்டாள். ஒரு நிமிடத்துக்குப் பிற்பாடு பிசெல்தனீமவ் அவள் கையைப் பிடித்து அழைத்து வந்தான். எல்லோரும் விலகி நின்று அவர்களுக்கு வழி விட்டனர். இவான் இலியீச் ஆடம்பரமாய் எழுந்து நின்று இனிய புன்னகையுடன் அவள் பக்கம் திரும்பினுர்.

''நேரில் சந்தித்துத் தெரிந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்திருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி கொள்கிறேன், மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன்!'' என்று கூறி மிகவும் பண்பட்ட முறையில் தலையைச் சாய்த்து வணக்கம் தெரிவித்தார். ''அதுவும் இது போன்ற நன்னுளில்...''

அவர் இனிமை தவழப் புன்னகை புரிந்து கொண்டார். அங்கிருந்த பெண்கள் எல்லோரும் பூரிப்புற்றுப் பரபரப்படைந்தனர்.

''பிரமாதம், பிரமாதம்!'' என்று போற்றிஞள் வெல்வெட் கவுன் அணிந்திருந்த பெண்.

மணமகள் பிசெல்தனீமவுக்குப் பொருத்தமானவள் தான். மெலிந்த உருவம், பதினேழு வயதுக்குமேல் இருக்காது, வெளிறிய நிறம், சின்னஞ்சிறு முகமும் கூர்மையான சிறு மூக்கும் உடையவள். வேகமாய்த் துள்ளியாடிய அவளுடைய சிறு கண்கள் சிறிதும் கூச்சமோ கலக்கமோ வெளியிடுவதாயில்லை, அதற்குப் பதில் கடுப்பின் சாயல் கலந்த துருதுருப்பான பார்வை அவற்றில் படிந்திருந்தது. அவளுடைய அழகினுல் கவரப்பட்டே பிசெல்தனீமவ் அவளைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். இளஞ்சிவப்பு உள்ளுறையிட்ட வெண்ணிற மஸ்லின் ஆடை அணிந்திருந்தாள். அவளுடைய கழுத்து மெலிந்து குச்சிபோலவும், உடல் குருவியினுடையதை ஒத்ததாகவும், எலும்புகள் முட்டிக் கொண்டு எடுப்பாகவும் இருந்தன. ஜெனரல் கூறிய முகமனுக்குப் பதிலளிக்கும் முறையில் அவளால் ஒரு வார்த்தைகூட பேச முடியவில்லை.

''ஆம், நல்ல அழகியாகத் தேர்ந்தெடுத்திருக்கிருயே!'' என்று அவர் பிசெல்தனீமவுக்கு மட்டும் கேட்கும்படிப் பேசுவதுபோல மெல்லக் கூறினுர், ஆனுல் அவர் குரல் மணப்பெண்ணின் காதிலும் விழும்படி பலமாகவே இருந்தது. இதற்கும் பிசெல்தனீமவ் பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாக இருந்தான், இம்முறை அவன் தலை குனிந்து வணக்

கம்கூடத் தெரிவிக்கவில்லை. அவன் கண்களில் ஒருவகைக் கொதிப்பும், இரகசியக் குரோதமும், ஏதோ கெட்ட எண்ணமும், சூழ்ச்சியும் மறைந்திருப்பதாக இவான் இலியீச் நினைத்தார். எனினும் அவனுடைய உள்ளத்தை எப்படியேனும் உருகச் செய்தாக வேண்டும். இவான் இலியீச் இங்கு வந்ததே அதற்காகத்தானே.

''எப்படிப்பட்ட ஜோடி!'' என்று நினைத்துக் கொண்டார். ''இருந்தபோதிலும்...''

மறுபடியும் அவர் மணமகளின் பக்கம் திரும்பினார், இப்பொழுது அவள் சோபாவில் அவர் பக்கத்தில் அமர்ந்திருந்தாள். ஆனால் அவளிடம் அவர் கேட்ட இரண்டு மூன்று கேள்விகளுக்கு ''ஆம்'' அல்லது ''இல்லை'' என்பதற்கு மேல் பதில் கிடைக்கவில்லை, அதுவுங்கூட தெளிவாகக் காதில் விழவில்லை.

''இவள் முகம் சிவக்கும்படி கொஞ்சம் கூச்சமடைவாளானால் எவ்வளவு நன்றாயிருக்கும்'' என்று அவர் தமக்குத் தாமே கூறிக் கொண்டார். ''அப்பொழுது நான் தமாஷாக எதாவது சொல்லலாம். ஆனால் இப்பொழுது எனது நிலை தர்ம சங்கடமாக அல்லவா இருக்கிறது.'' அக்கீம் பெத்ரோவிச்சுங்கூட வேண்டுமென்றே செய்வது போல வாய் மூடி மௌனியாக உட்கார்ந்திருந்தார். அவருடைய அசட்டுத்தனம் தான் காரணம் என்றாலும், அவர் செயல் மன்னிக்க முடியாததாகவே இருந்தது.

''சீமாட்டிகளே, கனவான்களே, உங்களுடைய கொண்டாட்டம் என்னால் தடைப்பட்டுவிட வேண்டாம்!'' என்று அங்கிருந்த எல்லோரையும் பார்த்து மேதகையர் வேண்டிக் கொண்டார். உள்ளங் கைகளில் வியர்த்துவிட்டது போன்ற ஓர் உணர்ச்சி அவருக்கு உண்டாயிற்று.

''இல்லை, இல்லை!.. மேதகையீர், நீங்கள் அப்படி நினைக்கக் கூடாது! இதோ ஒருநிமிடத்தில் மீண்டும் நாங்கள் ஆரம்பித்து விடுவோம், கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்கிறோம்... ஆடிய களைப்புத் தீர்வதற்காக'' என்று பதிலளித்தார் அந்த இராணுவ ஆபீசர். மணமகள் மகிழ்ச்சியுடன் அவரைப் பார்த்துக்கொண்டாள். அந்த ஆபீசருக்கு அதிகம் வயதாகி விடவில்லை, ஏதோவொரு ரெஜிமெண்டுக்குரிய உடை அணிந்திருந்தார். பிசெல்தனீமவ் முன்னால் சாய்ந்தவாறு இன்னமும் அங்கேதான் நின்றுகொண்டிருந்

தான். அவனுடைய கிளிமூக்கு மேலும் எடுப்பாகத் துருத்திக்கொண்டு தெரிந்தது. எசமானர் விடைபெற்றுக் கொண்டு புறப்படுவதற்காக கையில் மேல்கோட்டை ஏந்திப் பிடித்துக் கொண்டு காத்திருக்கும் பணியாளைப்போல நின்றிருந்த அவன் யாவற்றையும் கவனமாகக் கேட்டுக் கொண்டும் பார்த்துக் கொண்டும் இருந்தான். இவான் இலியீச்சின் மனதில் உதித்த ஒப்புமை இது. அவர் நிலைகுலைந்து வந்தார்; எக்கச்சக்கமான, மிகப் பெரிய எக்கச்சக்கமான நிலையில் சிக்கிக்கொண்டது போன்ற உணர்ச்சி அவரை வதைத்து வந்தது; காலுக்கடியில் தரை தகர்ந்து செல்வது போல், தப்பித்து வெளியே வர முடியாத ஓர் இடத்தில் மாட்டிக் கொண்டு இருட்டில் துழாவிச் செல்வது போல் தவித்தார்.

* * *

கட்டை குட்டையான, சற்று வயதான ஓர் அன்னைக்கு இடம் விட்டு எல்லோரும் திடுமென ஒதுங்கி நின்றனர். சீமாட்டி போலல்லாது எளிமையாகவும் அதேபோதில் பாங்காகவும் அந்த அன்னை உடுத்தியிருந்தாள். ஒரு பெரிய சால்வையைப் போர்த்திக் கழுத்தருகே ஊக்கிட்டுக் குத்தியிருந்தாள்; தலையில் வைத்திருந்த குல்லாய், அவளுக்குக் குல்லாய் அணிந்து பழக்கமில்லை என்பதைக் காட்டுவதாயிருந்தது. அவள் ஏந்திப் பிடித்து வந்த சிறிய வட்டத் தட்டில் தயாராகத் திறந்து வைக்கப்பட்ட ஒரு முழு ஷம்பெய்ன் மதுப்புட்டியும் இரண்டு கோப்பைகளும்—இரண்டே இரண்டு தான்—இருந்தன. அந்த மதுப்புட்டி இரண்டு விருந்தினர்களுக்கு மட்டும்தான் என்பது விளங்கிற்று.

அந்த அன்னை நேரே ஜெனரலிடம் சென்றாள்.

''மேதகையீர் மன்னித்தருள வேண்டும்'' என்று கூறிவிட்டு வணங்கினாள். ''என் மகனுடைய திருமணத்துக்கு வந்து சிறப்பிக்கும் தாங்கள், இன்பகரமான மணமக்களை வாழ்த்தி பானம் அருந்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன், தயை புரிய வேண்டும்!''

இவான் இலியீச்சுக்கு அவ்வன்னை இடுக்கண் களைபவளாக அங்கே வந்து சேர்ந்தாள். அவள் அப்படி ஒன்றும் அதிக வயதானவளல்ல, நாற்பத்தைந்து, நாற்பத்தாறு வயதுக்கு மேல் இருக்காது. அவள் முகம் இனிய சுபாவத்தைக்

காட்டும், கள்ளங் கபடமில்லாத, களையுடன் கூடிய உருண்டையான ருஷ்ய முகமாகும். அவளுடைய புன்சிரிப்பும் இதமளிப்பதாக இருந்தது, இயற்கையான எளிய முறையில் குனிந்து அவள் வணக்கம் கூறினாள். இவான் இலியீச் உடனே ஓரளவு உற்சாகமடையலானார், அவருக்கு நம்பிக்கை பிறக்கலாயிற்று.

''ஓகோ, மகனின் தாயாரா?'' என்று கூறி அவர் சோபாவிலிருந்து எழுந்தார்.

''எனது தாயார், மேதகையீர்'' என்று பிசெல்தனீமவ் தனது நீண்ட கழுத்தை நீட்டியவாறு முணுமுணுக்கும் குரலில் கூறினான், மீண்டும் அவனுடைய மூக்கு துருத்திக் கொண்டு முன்னால் தெரிந்தது.

''அப்படியா? உங்களைத் தெரிந்து கொள்வது குறித்து மகிழ்ச்சி கொள்கிறேன், மிகமிக மகிழ்ச்சி கொள்கிறேன்!''

''மேதகையீர், தயக்கம் வேண்டாம், ஒரு கோப்பை எடுத்துக் கொள்ளுங்கள்!''

''மட்டற்ற மகிழ்ச்சி!''

தட்டு கீழே வைக்கப்பட்டதும் பிசெல்தனீமவ் துள்ளிக் குதித்து முன்னே வந்து ஷம்பெய்னை ஊற்றினான். நின்று கொண்டிருந்த இவான் இலியீச் ஒரு கோப்பையைக் கையில் எடுத்துக் கொண்டார்.

''இந்த வாய்ப்புக் கிடைத்திருப்பது குறித்து ஆனந்தமடைகிறேன், அளவிலா ஆனந்தமடைகிறேன்'' என்று ஆரம்பித்தார். ''மனமார்ந்த வாழ்த்துக் கூறுகிறேன்... ஆம்... தலைமை அதிகாரி என்ற முறையில்... திருவளர் செல்வியே'' (மணமகளின் பக்கம் திரும்பினார்) ''உனக்கும், என் நண்பன் பர்ஃபீரியே, உனக்கும் வாழ்த்து கூறுகிறேன், நீங்கள் இருவரும் எல்லாப் பேறுகளையும் பெற்று இன்பம் தழைத்தோங்க நிறைவுடன் வாழ வேண்டுமென வாழ்த்துகிறேன்!''

மதுக் கோப்பையில் இருந்ததை ஆடம்பரமாக ஒரே வாயில் குடித்தார். அன்று அந்திக்குப்பின் அவர் குடித்த ஏழாவது கோப்பை அது. பிசெல்தனீமவின் முகம் 'உம்' மென்று இருந்தது, கொஞ்சம் சிடுசிடுப்பாக இருந்தென்று கூடச் சொல்லலாம். அவன்மீது ஜெனரலுக்கு அடங்காத வெறுப்பு மூண்டு வந்தது.

''நெடுமரம் போல நிற்கிறானே அதோ'' என்று அந்த இராணுவ ஆபீசரைப் பார்த்தவாறு தன்னுள் நினைத்துக்

கொண்டார். ''ஏன் சும்மாயிருக்கிறுன் அவன்? ஏதாவது வாழ்த்தொலி எழுப்பக் கூடாதா? யாவும் இனிதே நடந்தேறுமே...''

''அக்கீம் பெத்ரோவிச், நீங்களும் வாழ்த்துரைத்து பானம் அருந்த வேண்டாமா?'' வயதான அவ்வன்னே தலைமைக் குமாஸ்தாவின் பக்கம் திரும்பி அவரை வேண்டிஞள். ''நீங்கள் அவனுடைய மேல் அதிகாரி, அவன் உங்களுக்குக் கீழ்ப்பட்டவன். என் மகனே நீங்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டும், தாய் என்ற முறையில் உங்களை வேண்டுகிறேன். அக்கீம் பெத்ரோவிச், நீங்கள் ரொம்ப நல்லவர், வருங்காலத்தில் எங்களை நீங்கள் மறந்துவிடக் கூடாது.''

''வயதான இந்த ருஷ்யத் தாய்மார்கள் மெய்யாகவே போற்றத்தக்கவர்கள்!'' என்று இவான் இலியீச் நினைத்துக் கொண்டார். ''இவ்வன்னே எல்லோரையும் உற்சாகமடையச் செய்துவிட்டாரே! எப்பொழுதுமே நான் மக்களை நேசித்து வந்துள்ளேன்...''

அப்பொழுதுதான் மற்ருெரு தட்டு மேசைமீது கொண்டு வந்து வைக்கப்பட்டது. மடமடப்பான கிரிஞெலின் மீது மடிப்புகளிட்டுத் தைத்த கோடிச் சீட்டித் துணி ஆடை சரசரக்க நடந்த ஒரு பெண் அதை எடுத்து வந்தாள். கைகளால் அதை அவள் அணைத்துப் பிடிக்க முடியாதபடி அவ்வளவு பெரிதாக இருந்தது அந்தத் தட்டு. ஆப்பிளும் சாக்லெட்டும் மிட்டாய் வகைகளும் வால்னட்டும் மற்றும் பலவும் அடங்கிய எண்ணற்ற வட்டில்கள் இருந்தன. இது வரை அந்தத் தட்டு வரவேற்பறையில் எல்லா விருந்தினர்களுக்கும் பொதுவாக, முக்கியமாகப் பெண்களுக்காக வைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது அது தனியே ஜெனரலுக்காக என்று எதிரே கொண்டுவந்து வைக்கப்பட்டது.

''மேதகையீர், வேண்டாமெனச் சொல்லக் கூடாது, எங்களிடம் இருப்பதைத் தங்களுக்கு அளித்து மகிழ்கிறேம்'' என்று தலை வணங்கியவாறு வயதான அவ்வன்னே உபசரித்தாள்.

''நல்லாயிருக்கே நீங்கள் சொல்வது!'' என்று இவான் இலியீச் மகிழ்ச்சியுடன் ஒரு வால்னட்டை எடுத்து விரல்களால் அழுத்தி உடைத்தார். கடைசி வரை ஜனநாயக முறையில் பழகுவதென்ற தீர்மானத்துடன் அல்லவா வந்திருந்தார்.

இதற்கிடையில் மணப்பெண் திடுமெனக் கொக்கரித்துச் சிரித்துக் கொண்டாள்.

''என்ன பெண்ணே, ஏன் சிரிக்கிருய்?'' என்று இவான் இலியீச் சிரித்த முகத்துடன், ஜீவனுக்கான அறிகுறியைக் கண்டு பூரிப்புற்ற முறையில் கேட்டார்.

''ஒன்றும் இல்லே, இவான் கொஸ்தென்கீனிச் சும்மாயிருக்காமல், சிரிப்பு மூட்டிவிட்டுக் கொண்டிருக்கிருன்'' என்று பதிலளித்துக் கண்களேக் கவிழ்த்துக் கொண்டாள்.

நல்ல வடிவழகனுகிய மென்னிற முடிகளேயுடைய இளேஞன் ஒருவன் சோபாவுக்குப் பின்னுல் மறைவாக ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு திருமதி பிசெல்தனீமவாவின் காதுக்குள் ஏதோ குசுகுசுவென்று கூறிக் கொண்டிருந்ததை முன்பே ஜெனரல் கவனித்திருந்தார். இப்பொழுது அந்த இளேஞன் எழுந்து நின்ருன். அவன் மிகவும் கூச்சப்படுகிறவன், மிகவும் இளமையானவன் என்பது தெரிந்தது.

''மேதகையீர், சொப்பனப் புத்தகத்தைப் பற்றி அவளிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்'' என்று மன்னிப்புக் கேட்பவனேப் போல முணுமுணுக்கும் குரலில் சொன்னுன்.

''சொப்பனப் புத்தகமா? அது என்ன புத்தகம்?'' என்று கருணே மிக்கவராகக் கேட்டார் இவான் இலியீச்.

''புதிய சொப்பனப் புத்தகம்* ஒன்று வந்திருக்கிறது, இலக்கியத்தைப் பற்றியது. சொப்பனத்தில் ஒருவர் திருவாளர் பனுயெவைக் காண்பாராஞல், அவர் தமது சட்டையின் முன்மடிப்பில் காப்பியை ஊற்றிக் கொள்வாரென அர்த்தமென்று அவளிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்.''

''இது என்ன பித்துக்குளித்தனம்!'' என்று நினேத்து இவான் இலியீச் உள்ளுக்குள் எரிச்சல் அடைந்தார். சற்று முன் பேசும்போது கூச்சம் பொறுக்க மாட்டாமல் அந்த இளேஞனுக்கு முகம் செக்கச் சிவந்துவிட்டது என்ருலும், திருவாளர் பனுயெவை இங்கு தான் குறிப்பிட்டுவிட்டது குறித்து அவன் அளவிலா ஆனந்தமடைந்தான்.

---

* இங்கு குறிப்பிடப்படுவது **தற்கால ருஷ்ய இலக்கியச் சொப்பனப் புத்தகம்.** முற்போக்கு சஞ்சிகையான **சவ்ரிமேன்னிக்கின்** ஆசிரியர்களாகிய நெக்ராசவையும் பனுயெவையும் கிண்டல் செய்தது இது. இதன் ஆசிரியரான கவிஞர் ஷெர்பீனு (1821—1868) இதைக் கையெழுத்துப் பிரதியாக வாசகர்களிடையே சுற்றவிட்டார்.—**ப-ர்.**

''ஆமாம், கேள்விப் பட்டிருக்கிறேன்...'' என்ருர் மேத கையர்.

''இதைவிடச் சிறப்பான இன்னொரு வெளியீடு ஒன்று இருக்கிறது'' என்று இவான் இலியீச்சுக்கு அருகாமையிலிருந்து ஒலித்தது ஒரு குரல். ''புதிய சொற்களஞ்சியம் ஒன்று வெளிவரப் போகிறது, இதில் திருவாளர் கிரயேவ்ஸ்கி கட்டுரை எழுதுவதாகச் சொல்கிருர்கள்... அல்ஃபெராக்கி என்பவரைப் பற்றியும்... நிந்தனை இலக்கியம் குறித்தும் அவர் கட்டுரைகள் எழுதப் போகிருராம்.''*

இதைக் கூறியவர் ஓர் இளைஞர். அவர் சிறிதும் கூச்சப்படுகிறவராக இல்லை, அடக்கமில்லாதவராகவே காணப்பட்டார். கையுறைகளும் கையில்லாத வெள்ளைக் குட்டைக் கோட்டும் போட்டிருந்தார், தொப்பியைக் கையில் வைத்துக் கொண்டிருந்தார். நடனமாடாமல் அவர் அமைதலாய் யாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தார், ஏனெனில் அவர் நகைச்சுவைப் பத்திரிகையான **கொள்ளிக்கட்டை**யைச்** சேர்ந்த எழுத்தாளர், முன்னுதாரணமாய் நடந்து கொண்டவர். தற்செயலாகவே இந்தத் திருமண விழாவுக்கு வந்திருந்தார். சிறப்பு விருந்ினராக அவரை பிசெல்தனீமவ் அழைத்திருந்தான். ஜெர்மன் மாது ஒருத்தி வாடகைக்கு விட்டிருந்த ''அறை மூலைகளில்'' கடந்த ஆண்டில் இருவரும் பட்டினி கிடந்தபோது இவர்களுக்கிடையே பழக்கம் ஏற்பட்டிருந்தது. இந்த எழுத்தாளர் வோட்கா கிடைக்குமானல் வேண்டாமென விடுகிறவரல்ல. பின்பக்கத்தில் இருந்த ஒதுக்குப்புற அறைக்கு அடிக்கடி போய்விட்டு வந்

---

* கிரயேவ்ஸ்கி—ஒரு வர்த்தகர், கலை இலக்கியத் துறையுடன் சம்பந்தம் இல்லாதவர். 1861ல் ''ருஷ்ய விஞ்ஞானிகளாலும் இலக்கியத் துறையினராலும் தயாரிக்கப்பட்ட கலைக் களஞ்சியத்தின்'' தலைமை ஆசிரியராக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டார்.

அல்ஃபெராக்கி—தகன்ரோக் நகரைச் சேர்ந்த வர்த்தகர். விஞ்ஞானம், கலை, இலக்கியம் இவற்றுடன் தொடர்பில்லாதவர்.—**ப-ர்.**

** பீட்டர்ஸ்பர்கில் 1859—1873ல் வெளிவந்த புரட்சிகர ஜனநாயகப் போக்கு கொண்ட **இஸ்க்ரா** (தீப்பொறி) பத்திரிகையை தஸ்தயேவ்ஸ்கி **கொள்ளிக்கட்டை** என்று கேலி செய்கிருர்.—**ப-ர்.**

தார், அங்கே போவதற்குரிய வழி எல்லோருக்கும் தெரிந் திருந்தது. அவரைப் பார்த்ததுமே ஜெனரலுக்கு அவரைக் கொஞ்சமும் பிடிக்கவில்லே.

சட்டையில் காப்பியை ஊற்றிக் கொள்வது பற்றிக் கூறிய அந்த மென்முடி இளேஞனே கொள்ளிக்கட்டை எழுத் தாளர் வெறுப்புணர்ச்சியுடன்தான் கருதி வந்தார். இப் பொழுது அந்த மென்முடி இளேஞன் திடுமெனக் குறுக் கிட்டுப் பேசினுன்: ''மேதகையீர், இதிலுள்ள நகைச்சுவை என்னவென்ருல், திருவாளர் கிரயேவ்ஸ்கி எழுத்திலக்கணம் தெரியாதவர், நிந்தனே என்னும் சொல்லுக்கு அகரம்தான் முதலெழுத்தென நினேக்கிருர் என்பதுதான்...''

ஆனுல் மென்முடி இளேஞன் தான் தொடங்கிய வாக்கி யத்தைச் சொல்லி முடிப்பதற்குள் திண்டாடிப் போய்விட் டான். ஜெனரல் அவனேப் பார்த்த பார்வை இதெல்லாம் நெடுநாட்களுக்கு முன்பே தாம் கேட்டதுதான் என்பதைப் புலப்படுத்திற்று. இதைக் கண்டதும் இளேஞன் வெட்க முற்றுக் குழம்பிப் போய்விட்டான். இதன்பின் விரைவில் அங் கிருந்து நழுவிவிட்டான், அன்று எஞ்சிய பொழுது பூராவும் மிகவும் சோகமுற்றவனுய்க் காணப்பட்டான். கொள்ளிக்கட் டையின் துணிச்சல் மிகுந்த எழுத்தாளர் இப்பொழுது அவ னுடைய இடத்துக்கு வந்து சேர்ந்தார், மேலும் மேலும் ஜெனரலே நெருங்கி வந்து அவருக்குப் பக்கத்தில் அமர்ந்து கொள்ள முயன்ருர் என்பது தெரிந்தது. அவருடைய இந்தத் துணிச்சல் இவான் இலியீச்சுக்குச் சற்று அத்துமீறியதாக வே தோன்றியது.

ஏதாவது பேச வேண்டுமென்று விரும்பிய இவான் இலி யீச் ''ஆமாம், பர்ஃபீரி, இதைச் சொல்'' என்று பேச முற்பட்டார். ''நெடுநேரமாக உன்னிடம் நான் இதைக் கேட்க வேண்டுமென்று இருந்தேன்: பிசெவ்தனீமவ் என் பதற்குப் பதில் ஏன் உன் பெயர் பிசெல்தனீமவ் என்றிருக் கிறது? உன் பெயர் பிசெவ்தனீமவ் என்பதாகத் தானே இருக்க வேண்டும்?''

''மேதகையீர், இது குறித்து என்னுல் திட்டவட்டமாகத் தகவல் அளிக்க முடியவில்லே'' என்ருன் பிசெல்தனீமவ்.

''அவன் தந்தை வேலேயில் சேர்ந்தபோது பத்திரங் களில் அவர்கள் குளறுபடி செய்திருப்பார்கள், அதனுல் இப் பொழுது அவன் பிசெல்தனீமவ் என்று அழைக்கப்பட்டு

வருகிறுன். சில சமயம் இம்மாதிரி ஆவதுண்டு'' என்று அக்கீம் பெத்ரோவிச் விளக்கிஞர்.

''அப்படித்தான் இருக்கும்!'' என்று ஆர்வமுடன் ஆமோதித்தார் ஜெனரல். ''ஆம், அப்படித் தான் இருக்கும்! ஏனென்ருல் நீரே பாரும்—பிசெவ்தனீமவ் என்னும் பெயர் 'பிசெவ்தனீம்'* எனும் இலக்கியச் சொல்லிலிருந்து வருவதாகும். ஆஞல் பிசெல்தனீமவ் என்பது அர்த்தமற்ற பெயராக அல்லவா இருக்கிறது?''

''அறியாமையிலிருந்து தோன்றிய பெயர் அது'' என்ருர் அக்கீம் பெத்ரோவிச்.

''யாருடைய அறியாமையிலிருந்து தோன்றியது என்கிறீர்?''

''ருஷ்ய மக்களுடைய அறியாமையிலிருந்து. அறியாமையின் காரணமாக அவர்கள் சில சமயம் எழுத்துக்களை மாற்றி, தமக்குரிய தனி வழியில் சொற்களை உச்சரிக்கிருர்கள்—எண்பதுக்குப் பதில் எம்பளது என்கிருர்களே அது போல.''

''ஆமாம், ஆமாம்... எம்பளது, ஹி-ஹி-ஹி...''

''கயிதை என்றுகூட சொல்கிருர்கள், மேதகையீர்!'' என்று பலத்த குரலில் கூறிஞர், ஏதாவது சொல்லிச் சிறப்புப் பெற வேண்டுமென்று இவ்வளவு நேரமாகத் துடித்துக் கொண்டிருந்த அந்த நெட்டையான ஆபீசர்.

''கயிதையா? என்ன அது?''

''கழுதையைக் கயிதை என்கிருர்கள், மேதகையீர்.''

''ஓ, கழுதை கயிதையாகிவிடுகிறதா... நன்ருயிருக்கிறது, ஹி-ஹி-ஹி!''—அந்த ஆபீசருக்காக வேண்டி இவான் இலியீச் இளித்துக் கொண்டார்.

அந்த ஆபீசர் தமது கழுத்து 'டை'யைச் சரி செய்து கொண்டார்.

''அவர்கள் இன்ஞென்றும் கூறுகிருர்களே...'' என்று ஆரம்பித்தார் கொள்ளிக்கட்டை பத்திரிகையின் ஆசிரியர். ஆஞல் மேதகையர் அதைக் காது கொடுத்துக் கேட்கத் தயாராயில்லை. ஒவ்வொருவருக்காகவும் ஒரு தடவை அவர் இளித்துக் கொள்ள முடியுமா?

''குழந்தை என்பதற்குக் கொயந்தை என்கிருர்கள்'' என்று அந்த எழுத்தாளர் கடுப்புடன் கூறி முடித்தார்.

---

* 'பிசெவ்தனீம்' என்பதற்குப் புனைபெயர் என்று பொருள்.—ப-ர்.

இவான் இலியீச் அவரை முறைத்துப் பார்த்தார்.

''நீ ஏன் நடுவில் புகுந்து பேசுகிறாய்?'' என்று பிசெல்த னீமவ் அந்த எழுத்தாளரின் காதுக்குள் கூறினான்.

''எல்லோரையும் போல் நானும் பேசினேன்! பேசக் கூடாதென்றா சொல்கிறாய்?'' என்று அவர் முணுமுணுக்கும் குரலில் அவனுக்குப் பதிலளித்தார். ஆனால் இதன்பின் அவர் வாய் திறக்கவில்லை, உள்ளுக்குள் கடுங் கோபங் கொண்ட வராக அறையைவிட்டு வெளியே சென்றுவிட்டார்.

பலரையும் கவர்ந்து வந்த அந்தப் பின்பக்க அறைக்கு அவர் நேரே போய்ச் சேர்ந்தார். விருந்தின் தொடக்கத்தில் நடனமாடிய ஆடவர்களுக்காக, பூ பின்னிய யாரஸ்லாவ்ல் விரிப்பு போட்ட ஒரு சிறு மேசையின் மீது அங்கே இரு வகை வோட்காவும் உப்பிலிட்ட மீனும் கவியாரும் விரு விருப்பான உள்நாட்டு ஷெர்ரி மதுப்புட்டியும் வைக்கப்பட் டிருந்தன. உள்ளத்தினுள் ஆத்திரம் பொங்க அவர் தமக் குக் கொஞ்சம் வோட்கா ஊற்றியெடுத்துக் கொண்டார். பிசெல்தனீமவின் திருமண விருந்தில் ஏனையோரைக் காட் டிலும் சிறப்பாக நடனமாடிய பறட்டை முடிகளையுடைய மருத்துவக் கல்லூரி மாணவனுக்கும் இந்த ஒதுக்குப்புற அறை தெரிந்திருந்தது. இப்பொழுது அவன் இங்கே ஓடி வந்து அவசரமாக மதுக் கோப்பையைக் கையில் எடுத்துக் கொண்டான்.

அவன் வேகமாக ஊற்றிக் குடித்தவாறு ''இதோ ஆரம் பிக்கப் போகிறார்கள்! வந்து பாரேன்!'' என்றான். ''கைகளில் நின்று நான் தனி நடனம் ஆடப் போகிறேன். சாப்பாட்டுக்கு பிறகு துணிந்து 'மீன்' நடனம் ஆடுவதென்று இருக்கிறேன். திருமண விருந்துக்கு மிகவும் பொருத்தமான நடனம் அது. பிசெல்தனீமவுக்கு நேச முறையில் குறிப்பு காட்டுவதாயி ருக்கும்... கிளியோபாத்ரா செமியோனவ்னா தங்கமானவள், அச்சமின்றி எதுவும் செய்யலாம் அவளிடம்.''

''அந்த ஆள் ஒரு பிற்போக்காளர்'' என்று பத்திரிகை எழுத்தாளர் வோட்காவைக் குடித்துவிட்டுக் கடுப்புடன் பதி லளித்தார்.

''யார் பிற்போக்காளர்?''

''யார், மிட்டாய்த் தட்டை எதிரே கொண்டு வந்து வைத்தார்களே, அந்தப் பெரும் புள்ளியைத்தான் சொல் கிறேன். ஆம், பழுத்த பிற்போக்காளர் அந்த ஆள்!''

''ஏன் இப்படிப் பேசுகிருய்?'' என்று முணுமுணுத்து விட்டு அறையிலிருந்து அந்த மாணவன் வெளியே ஓடிஞன். நடன இசை முழங்கிற்று.

தனியே விடப்பட்ட பத்திரிகை எழுத்தாளர் தமக்குத் துணிவும் தெம்பும் வரவழைத்துக் கொள்வதற்காக மீண் டும் கோப்பையை நிரப்பிக் குடித்துவிட்டுத் தின்பதற்காக இருந்தவற்றில் ஒன்றை எடுத்து வாயில் போட்டுக் கொண் டார். அரசு உயர்நிலை ஆலோசகர் இவான் இலியீச்சுக்கு, கண்டதுமே அப்படிப் பிடிக்காதவராகிவிட்ட இந்தக் கொள் ளிக்கட்டை பத்திரிகை எழுத்தாளரைப் போன்ற பொல் லாத பகைவர் ஒருவர், வஞ்சம் தீர்க்காமல் விடமாட்டேன் என்று வைராக்கியம் பூண்ட— குறிப்பாக இரண்டு கோப்பை வோட்கா உள்ளே சென்றதும் இப்படியொரு வைராக்கி யம் பூண்ட—வைரி ஒருவர் இதன்முன் என்றுமே இருந்த தில்லை. அந்தோ! இவான் இலியீச் இதை அறியாதவராக வே, எதிர்பாராதவராகவே இருந்தார். மற்ெருரு முக்கிய உண்மையையும் அவர் அறிந்து கொள்ளவில்லை. ஆயினும் இவ்வுண்மை விருந்தினர்களுக்கும் மேதகையருக்கும் இனி இருக்கப் போகும் உறவுகளைப் பாதிப்பதாயிருந்தது. இவ்வுண் மை என்னவெனில், தமது சிப்பந்தியின் திருமணத்துக்குத் தாம் வர நேர்ந்தது குறித்துத் தமக்கு மிகவும் நியாயமான தாகவும், ஏன் மிகவும் விவரமானதாகவும்கூட தோன்றிய ஒரு விளக்கத்தை அவர் அளித்திருந்தாலுங்கூட, உண்மை யில் யாருக்கும் இந்த விளக்கம் திருப்தியளித்துவிடவில்லை; விருந்தினர்களுடைய கலவர நிலை மறைந்துவிடவில்லை; இன் னமும் அவர்கள் தயங்கிக்கொண்டுதான் இருந்தனர். பிறகு திடுதிப்பென்று மாயமாய் யாவும் மாறிவிட்டன. நொடிப் பொழுதில் தயக்கம் நீங்கி எல்லோரும் கலகலப்படைந்து விட்டனர், அழையாது வந்த அந்த விருந்தினர் அறையி லிருந்தே மறைந்துவிட்டது போல எல்லோரும் குதூகலிக் கவும் வாய்விட்டுச் சிரிக்கவும் குதூகலத்தோடு பேசவும் நடனமாடவும் தயாராகிவிட்டனர். வந்திருந்த விருந்தினர் உண்மையில் கொஞ்சம்... ஆம், குடிமயக்கத்தில் இருப் பதாக எப்படியோ ஒரு வதந்தி, இரகசியமாகக் காதோடு காதாகக் கூறிக் கொள்ளப்பட்ட ஒரு தகவல் பரவியது தான் இதற்குக் காரணம். ஆரம்பத்தில் இது அபாண்டமான ஓர் அவதூருகப் பலருக்கும் தோன்றிய தொன்ருலும், சிறிது

சிறிதாய் வலுவுற்று நம்பத்தக்கதாக ஏற்றுக் கொள்ளப் பட்டது. இதன்பின் திடுமென யாவும் சந்தேகத்துக்கு இட மின்றி தெட்டத் தெளிவானதாகிவிட்டது, உடனே விடு தலை பிறந்துவிட்டது போன்ற அற்புதமான ஒரு புத்துணர்ச்சி எல்லோருக்கும் உண்டாயிற்று. அதே கணத்தில் திரும்ப வும் நடனம் ஆரம்பமாயிற்று, சாப்பாட்டுக்கு முன்னதான கடைசி நடனம் அது. மருத்துவக் கல்லூரி மாணவன் இதற் காகத்தான் பொறுக்க மாட்டாமல் அவ்வளவு ஆவலுடன் காத்திருந்தான்.

இந்த நேரத்தில்தான் இவான் இலியீச் மணப்பெண் ணுடன் மீண்டும் பேசிப் பார்ப்பதென்று முடிவு செய்து கொண்டார். இம்முறை சிலேடையாய் ஏதேனும் கூறி மகிழ்வித்து அவளைத் தன்பால் ஈர்த்துக் கொள்வதென்று நினைத்தார். ஆனால் அதற்குள் அந்த நெட்டையான இரா ணுவ ஆபீசர் ஓடிவந்து ஒரு காலை மடித்து அவள் எதிரே மண்டியிட்டார். மணப்பெண் உடனே சோபாவிலிருந்து துள் ளியெழுந்து அவருடன் சேர்ந்து பறந்தோடி குவாட்ரில் நடன வரிசையில் சேர்ந்துகொண்டாள். அவளை அழைத்துச் செல்லுமுன் அந்த ஆபீசர் ஜெனரலிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று நினைக்கவே இல்லை, அவளும் ஜெனரலின் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்காமல் எழுந்து ஓடிவிட்டாள் —அவரை விட்டு விலகுவதில் அப்படி ஆனந்தம் கொண்ட வளாக எழுந்து ஓடிவிட்டாள்.

''அதனால் என்ன? தன் உரிமைக்கு அப்பாற்பட்டது எதையும் அவள் செய்து விடவில்லையே'' என்று இவான் இலியீச் தன்னுள் கூறிக் கொண்டார். ''இவர்களிடமிருந்து நாகரிகமான முறைகளை எதிர்பார்க்கக் கூடாது.''

''உம்... அப்பனே பர்ஃபீரி, போதும் இந்த மரியாதை முறைகள் எல்லாம்'' என்று பிசெல்தனீமவின் பக்கம் திரும் பியவாறு கூறினர். ''நீ செய்ய வேண்டிய காரியம் எதா வது இருக்கும், தயவு செய்து போய் உன் வேலையைக் கவனி.'' (''என்னுடைய மெய்க்காவலனுக வேலை பார்ப்ப தாகவா நினைத்துக் கொண்டிருக்கிறான்?'' என்று தன்னுள் கூறிக் கொண்டார்.)

பிசெல்தனீமவின் நீண்ட கழுத்தும் பேந்தப் பேந்த விழிக்கும் கண்களும் சகிக்க முடியாதபடி அப்படி அவரைத் துன்புறுத்தின. சுருக்கமாகச் சொல்வதெனில், இவை யா

வும் முன்பு அவர் கற்பனை செய்திருந்தது போல் சிறிதும் இருக்கவில்லை. ஆயினும் இன்னும் அவர் இவ்வுண்மையை ஒத்துக் கொள்ளும் அளவுக்கு வந்தாகவில்லை.

* * *

நடனம் ஆரம்பமாயிற்று.

அக்கீம் பெத்ரோவிச் அடக்கவொடுக்கமாக மதுப்புட்டியைக் கையில் எடுத்து ''மேதகையீர்! அனுமதிக்க வேண்டும்!'' என்று கூறி, அவருடைய கோப்பையில் ஊற்றப் போனர்.

''எனக்கா... எனக்கு வேண்டாம்... கொஞ்சமாய் வேண்டுமானல்...''

ஆனல் அக்கீம் பெத்ரோவிச் அதற்குள் இன்பக் களிப்புக்குரிய முகபாவத்துடன் ஷம்பெய்னை ஊற்றிக் கொண்டிருந்தார். மேதகையரின் கோப்பை நிரம்பியதும், யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாகச் செய்வது போல், பதற்றத்தோடும் உதறலோடும் தமது கோப்பையிலும் ஊற்றிக் கொண்டார். ஆனல் ஒரேயொரு வித்தியாசம்: விளிம்பிலிருந்து அரை அங்குலம் குறைவாகவே தமது கோப்பையில் ஊற்றிக் கொண்டார். இது மேதகையருக்கு அதிக மரியாதை காட்டுவதாக இருக்குமென்று அவருக்குத் தோன்றியது. தமது அலுவலக அதிபரின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தது அவருக்குப் பிரசவ வேதனையாய் இருந்தது. என்ன பேசுவதென்று தெரியாமல் திண்டாடினர். மேதகையரின் பக்கத்திலே உட்காரும் கௌரவம் தமக்குக் கிடைத்திருந்ததால், தக்கபடி எதாவது பேசி அவரை மகிழ்விப்பது தமது கடமையாகும் என்பது விளங்கிற்று. ஷம்பெய்ன் மதுப் புட்டி பேச்சுக் கொடுப்பதற்கு அவருக்கு வாய்ப்பு அளித்தது. அதோடு ஷம்பெய்னைத் தாம் ஊற்றிக் கோப்பையை நிரப்பித் தர வேண்டுமென மேதகையர் விரும்பினர் என்பதும் தெரிந்தது. மேதகையர் இப்படி விரும்பியது ஷம்பெய்ன் குடிக்க வேண்டும் என்பதற்காக அல்ல—அந்த ஷம்பெய்ன் வெதுவெதுப்பாக, சகிக்க முடியாததாகவே இருந்தது—ஆத்மார்த்திக மனநிறைவுக்காக வேண்டியே இப்படி விரும்பினர்.

''கிழவர் குடிக்க விரும்புகிருர்'' என்று இவான் இலியீச்

நினைத்துக் கொண்டார். ''ஆனால் நான் குடிக்காமல் தாம் மட்டும் குடிப்பதற்குத் துணிச்சல் இல்லை. தடையாய்க் குறுக்கே நிற்க நான் விரும்பவில்லை... தவிரவும் இருவருக்கும் எதிரே மதுப்புட்டி இருக்கையில் குடிக்காமல் சும்மாயிருந்தால் நன்றாயிராது.''

இவான் இலியீச் தமது கோப்பையிலிருந்து கொஞ்சம் பருகினார். ஒன்றும் செய்யாமல் சும்மாயிருப்பதைக் காட்டிலும் இது எவ்வளவோ தேவலை என்று நினைத்தார்.

''நான் இங்கே... தற்செயலாக வந்தவன்...'' என்று இடையிடையே நிறுத்தி சொற்களை அழுத்தம் திருத்தமாக உச்சரித்தார். ''சில பேர் நினைக்கக் கூடும்... அதாவது... இது போன்ற... ஒரு கேளிக்கையில் நான் கலந்து கொள்வது சரியல்ல என்று நினைக்கக் கூடும்.''

அக்கீம் பெத்ரோவிச் மௌனமாயிருந்தார், பணிவன்பு மிக்க ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்தார்.

''நான் ஏன் இங்கு வந்திருக்கிறேன் என்பது உமக்குப் புரியுமென்று நினைக்கிறேன்... குடிப்பதற்காக வந்திருக்கிறேன் என்று நினைக்க மாட்டீர் அல்லவா? ஹி-ஹி!''

அக்கீம் பெத்ரோவிச் மேதகையருடன் சேர்ந்து இளித்துக்கொள்ளவே விரும்பினார், ஆனால் ஏனோ தெரியவில்லை அவரால் முடியவில்லை. ஆறுதல் அளிக்க வல்லதாக அவரால் எதுவும் சொல்ல முடியாமல் திரும்பவும் திண்டாடினார்.

''நான் ஏன் இங்கு வந்திருக்கிறேன் என்றால்... ஊக்கமளிப்பதற்காக என்று சொல்லலாம்... ஆத்மார்த்திகக் குறிக்கோள்களைப் புலப்படுத்துவதற்காக என்று சொல்லலாம்...'' அக்கீம் பெத்ரோவிச்சின் அசட்டுத்தனமான மௌனத்தைக் கண்டு எரிச்சலுற்ற இவான் இலியீச் தொடர்ந்து பேசினார். ஆனால் அந்த அப்பாவி மனிதர் அக்கீம் பெத்ரோவிச் குற்றம் புரிந்துவிட்டவரைப் போல் பதற்றத்துடன் கண்களைக் கவிழ்த்துக் கொள்வதைக் கவனித்ததும் அவரும் மௌனமாகிவிட்டார். பிறகு சற்றுக் குழப்பத்துடன் அவசரமாகத் தமது கோப்பையை எடுத்து இன்னும் கொஞ்சம் அருந்தினார். அக்கீம் பெத்ரோவிச் தாம் தப்புவதற்கு இது ஒன்றே வழியெனக் கருதுகிறவரைப் போல, மதுப்புட்டியை உடனே எடுத்து ஜெனரலுடைய கோப்பையை நிரப்பினார்.

''உமக்குச் சாமர்த்தியம் அதிகம் இருப்பதாகத் தெரியவில்லையே'' என்று நினைத்தவாறு இவான் இலியீச் அந்த

அப்பாவி மனிதர் அக்கீம் பெத்ரோவிச்சைக் கடுப்புடன் உற்றுப் பார்த்தார். ஜெனரலின் கண்டிப்பு மிக்க பார்வை தம்மீது படிந்திருப்பதை உணர்ந்த அக்கீம் பெத்ரோவிச் இனி ஒரு வார்த்தையும் பேசக்கூடாது, கண்களை உயர்த்திப் பார்க்கவும் கூடாது என்று தீர்மானித்துக் கொண்டு விட்டார். தொடர்ந்து இரு நிமிடங்களுக்கு இருவரும் இந் நிலையில் உட்கார்ந்திருந்தனர். அக்கீம் பெத்ரோவிச்சுக்குப் பிராணவஸ்தையாயிருந்த இரு நிமிடங்கள் அவை.

அக்கீம் பெத்ரோவிச்சைப் பற்றி ஒருசில வார்த்தைகள். அவர் கோழிக் குஞ்சு போல் அவ்வளவு சாதுவானவர், பழங் காலத்து மனிதர், அடிபணிந்து வாழ்ந்தே பழக்கப் பட்டவர். ஆயினும் அவர் மிகவும் நல்லவர் என்பதுடன் நற் குண சீலர் என்றுங்கூடச் சொல்லலாம். பீட்டர்ஸ்பர்க் ருஷ்யர் அவர், அதாவது அவர் தந்தையும் தந்தையின் தந்தையும் பீட்டர்ஸ்பர்கில் பிறந்து வளர்ந்தவர்கள், இங் கேயே வேலை செய்தவர்கள், இந்நகரைவிட்டு வெளியே எங்கும் சென்றிராதவர்கள். ருஷ்யர்களில் இவர்கள் ஒரு தனி ரகம். ருஷ்யாவில் என்ன நடைபெறுகிறதென்று ஏதும் அறியாதவர்கள் என்பதோடு, தமது இந்த அறியாமை குறித்து கொஞ்சமும் கவலைப்படாதவர்கள். இவர்களுடைய நாட்டம் பீட்டர்ஸ்பர்குக்கு அப்பால், ஏன், இவர்கள் வேலை செய்யும் அலுவலகத்துக்கு அப்பால் செல்வதில்லை. இவர் களுடைய அக்கறையெல்லாம் சல்லிக் காசுச் சீட்டாட்ட மும், பெட்டிக் கடைகளும், தமது மாதச் சம்பளங்களும் தான். ருஷ்யப் பழக்க வழக்கங்கள் இவர்களுக்குத் தெரி யாது, ருஷ்யப் பாட்டுகளும் தெரியாது—ஒரேயொரு விதி விலக்காய் 'லுச்சீனுஷ்கா' பாட்டைக் குறிப்பிடலாம், இந்தப் பாட்டுங் கூட இசைக் கலம் வாசித்து ஊர் ஊராகத் திரி யும் பாடகர்கள் தெருவில் பாடிச் செல்வதால்தான் இவர் களுக்குத் தெரிய வந்தது. இரண்டு முக்கிய இயல்புகளைக் கொண்டு நீங்கள் பீட்டர்ஸ்பர்க் ருஷ்யர்களை மெய்யான ருஷ்யர்களிடமிருந்து இனம் கண்டு கொண்டுவிடலாம். முத லாவது இயல்பு: பீட்டர்ஸ்பர்க் ருஷ்யர்கள் எல்லோரும் ஒருவர் பாக்கியில்லாமல் **பேரவைச் செய்தியேடு** என்பார் களே ஒழிய, ஒருபோதும் **பீட்டர்ஸ்பர்க் செய்தியேடு*** என்று

---

* **பீட்டர்ஸ்பர்க் செய்தியேடு** விஞ்ஞானப் பேரவையின் சார் பில் தனியார் பதிப்பகங்களால் வெளியிடப்பட்டது.—**ப-ர்.**

சொல்ல மாட்டார்கள். இதே அளவுக்கு முக்கியமான இரண்டாவது இயல்பு: பீட்டர்ஸ்பர்க் ருஷ்யர் எவரும் ''காலே உண்டு'' என்னும் தொடரை உபயோகிக்கவே மாட்டார்; எப்பொழுதும் ''ஃபிரிஷ்டிக்'' என்பதாகவே குறிப்பிடுவார், அதுவும் பிரி என்கிற அசையை விசேஷமாய் அழுத்தியே உச்சரிப்பார். அத்தியாவசியமான இவ்விரு தனி இயல்புகளையும் கொண்டு எப்பொழுதும் நீங்கள் இவர்களை அடையாளம் தெரிந்து கொண்டுவிடலாம். சுருங்கச் சொன்ஞல் இவர்கள் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளில் உருவாகி இறுதி வடிவம் பெற்ற அடக்கவொடுக்கமான ரகத்தவர்கள். ஆஞல் அக்கீம் பெத்ரோவிச் எவ்வகையிலும் முட்டாளல்ல. அவருடைய துறைக்கு உட்பட்ட எதையேனும் குறித்து ஜெனரல் அவரைக் கேட்டிருந்தால், நிச்சயம் அவர் விடையளித்திருப்பார், உரையாடலும் சுணக்கமின்றி நடைபெற்றிருக்கும். மேதகையரின் தற்போதைய நோக்கங்கள் குறித்து மேலும் தெரிந்து கொள்ள வேண்டுமென்று அக்கீம் பெத்ரோவிச் துடித்துக் கொண்டிருந்தார் என்ருலுங்கூட, கீழ்ப்பட்ட நிலையிலுள்ள அவர் இத்தகைய கேள்விகளைக் கேட்பது சரியல்லவே...

இதற்கிடையில் இவான் இலியீச் மேலும் மேலும் சிந்தனையில் மூழ்கிச் சென்ருர், சுழித்தோடிய எண்ணங்களால் இழுத்துச் செல்லப்பட்டுவந்தார். அந்த மெய்மறந்த நிலையில் என்ன செய்கிருேம் என்று தெரியாமலே, முழு நேரமும் தமது கோப்பையை மீண்டும் மீண்டும் எடுத்து பானம் அருந்திய வண்ணமிருந்தார். அக்கீம் பெத்ரோவிச்சும் சளைக்காமல் அவருடைய கோப்பையை நிரப்பிக் கொண்டிருந்தார். இருவரில் யாரும் பேசவே இல்லை. இவான் இலியீச் நடனத்தைக் கருத்துடன் உற்றுநோக்க முற்பட்டுவிட்டார். இருந்தாற்போல் இருந்து அது அவருடைய கவனத்தை அப்படி ஈர்த்துவிட்டது. மேலும் மேலும் அது அவரை வியப்புறச் செய்யலாயிற்று...

நடனம் தங்குதடையற்றதாகி வெறியூட்டும் களியாட்டமாகிச் சென்றது. நடனமாடியோர் மற்றவை யாவற்றையும் மறந்து முழுமனத்துடன் இதில் ஈடுபட்டுக் களிப்புற்றனர், ஆசை தீர ஆடி மகிழ்வதென உறுதி பூண்டுவிட்டனர். ஆடவர்களில் மிகச் சொற்பமாஞேர்தான் திறமையாக ஆடினர், ஆயினும் தாறுமாருக ஆடியோரும் திறமை மிக்கோ

ராகக் கருதப்படும்படி அப்படி பலமாகத் தரையைத் தட்டி ஆடினர். முக்கியமாக அந்த இராணுவ ஆபீசரின் ஆட்டம் சிறந்து விளங்கிற்று. அவர் தனித்து ஒற்றையாள் நடனம் ஆடுவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். அப்பொழுது அவருடைய நடனம் வியக்கத்தக்கதாக இருந்தது—கம்பம் போல் நேராக நிமிர்ந்து நின்றார், பிறகு திடுமெனப் பக்கவாட்டில் விழுகிறவரைப்போல் சாய்ந்தார், மறு கணமே வெடுக்கென நிமிர்ந்து எதிர்ப் பக்கத்தில் தரையோடு குறுங் கோணமாகிவிடும்படிச் சாய்ந்தார். தமது ஆட்டத் திறனை எல்லோரும் மெச்சுகிறார்கள் என்ற முழு நம்பிக்கை அவருடைய முகபாவத்தில் தெரிந்தது. மற்றோர் ஆட்டக்காரர் நடனம் தொடங்குமுன் அதிகமாகக் குடித்திருந்ததால் முதலாவது அணிநடனம் முடிவடைந்ததுமே தமது ஆட்டக் கூட்டாளியின் எதிரே தூங்கி விழுந்துவிட்டார். ஆகவே அந்தப் பெண் அதன்பின் தனியே ஆடிச் செல்ல வேண்டியதாயிற்று. நீலத் துப்பட்டா அணிந்த சீமாட்டியுடன் சேர்ந்து ஆடிய இளம் பதிவாளர் அன்று மாலை ஆடப்பட்ட ஐந்து நடனங்களிலும் தவறாமல் ஒரே உத்தியைத் திரும்பத் திரும்பக் கையாண்டுவந்தார். அந்தச் சீமாட்டிக்குச் சற்றுப் பின்னால் சென்று அவளுடைய துப்பட்டாவின் முனையைப் பிடித்துக் கொண்டார், பிறகு கூட்டாளிகளை மாற்றிக் கொள்ள வேண்டிய நேரம் வந்ததும் பத்துப் பன்னிரண்டு தரம் அந்தத் துப்பட்டாவில் முத்தமிட்டார். எதையும் கவனிக்காதவள் போல அந்த சீமாட்டி அவருக்கு முன்னால் போய்க் கொண்டிருந்தாள். மருத்துவக் கல்லூரி மாணவன் மெய்யாகவே கைகளைத் தரையில் ஊன்றி ஒற்றையாள் நடனம் ஆடி உற்சாக ஆரவாரத்தையும் கால் தட்டல்களையும் மகிழ்ச்சிக் கூச்சல்களையும் கிளர்ந்தெழச் செய்தான். சுருங்கக் கூறின் தங்குதடையற்ற மனோபாவம் நிலவிற்று. ஷம்பெய்னின் விறுவிறுப்பு தலைக்கேறியிருந்த இவான் இலியீச் மகிழ்ச்சிப் புன்னகை புரியப் போனார், ஆனால் அப்பொழுதுதான் ஒரு சந்தேகம் அவர் உள்ளத்தைப் பீடித்துக் கொண்டு அவரை வதைக்க முற்பட்டது. அவர்கள் எல்லோரும் தங்குதடையின்றி கல கலப்பாக இருக்க வேண்டும், மகிழ வேண்டும் என்றுதான் அவர் விரும்பினார். முதலில் அவரைப் பார்த்ததும் அவர்கள் மிரண்டுபோய் ஒதுங்கிய போது அவர் இப்படிப்பட்ட கலகலப்பும் மகிழ்ச்சியும்

நிலவ வேண்டுமென்றுதான் மனமார விரும்பினார். ஆனால் இப்பொழுது இந்தக் கலகலப்பு எல்லா வரம்புகளையும் கடந்து மிக மிஞ்சியதாகி வந்தது. உதாரணமாக, நீலநிற வெல்வெட் கவுன் அணிந்த ஒரு பெண் எத்தனையோ கை மாறி மிகப் பழசாய்விட்ட அந்த கவுனின் அடிவிளிம்பை ஆறுவது ஆட்டத் தொடரின்போது மடக்கி மேலே இழுத்து ஊக்கு போட்டுக் குத்திக் கொண்டுவிட்டாள், தொளதொளப்பான குட்டைக் காற்சட்டை அணிந்தவள் மாதிரி இருந்தது அவளைப் பார்ப்பதற்கு. அவள் யாருமல்ல, தயங்காமல் அவளுடன் எதுவும் செய்யலாம் என்று மருத்துவக் கல்லூரி மாணவன் முன்பு சொன்னானே அதே கிளியோபாத்ரா செமியோனவ்னாதான். அந்த மருத்துவக் கல்லூரி மாணவனைப் பொறுத்தவரை அசல் ஃபோக்கின்* மாதிரியே அவன் நடந்து கொண்டான் என்பதற்குமேல் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. என்னென்பது இதை! முதலில் இவர்கள் மிரண்டு போய் ஒதுங்கிச்சென்றார்கள், பிறகு திடுமென இப்படிக் கட்டுக் கடங்காதவர்களாகிவிட்டனர். கண்டனத்துக்குரிய குற்றமல்ல என்றாலும்கூட இந்த மாற்றம் இப்படித் திடுதிப்பென ஏற்பட்டிருக்க வேண்டியதில்லை. இது நல்லதற்கல்ல என்பதாக அவருக்கு ஓர் அச்சம் ஏற்பட்டது. இவான் இலியீச் அங்கு இருப்பதையே மறந்து விட்டார்களோ என்றல்லவா நினைக்க வேண்டியிருந்தது. ஆயினும் அவர் எல்லோருக்கும் முன்னதாகச் சிரிக்கவே செய்தார், ஏன் பாராட்டு முழக்கமிடும் அளவுக்குங்கூடச் சென்றார். அவருடன் சேர்ந்து அக்கீம் பெத்ரோவிச்சும் பணிவுடன் இளித்துக் கொண்டார். மேதகையருக்கு ஏற்பட்டு வந்த புதிய மனக்கசப்பைச் சிறிதும் அறியாமலே அக்கீம் பெத்ரோவிச் திருப்தியுடன் இளித்துக் கொண்டார்.

நடனம் முடிவடைந்ததும் தம்மைக் கடந்து சென்ற மாணவனைப் பார்த்து இவான் இலியீச் ஏதாவது சொல்ல வேண்டுமென்று கருதி ''இளைஞனே, நீ நன்றாய் நடனமாடுகிறாயே!'' என்றார்.

உடனே அம்மாணவன் வெடுக்கென அவர் பக்கம் திரும்பிக் கோப்பு காட்டிவிட்டு, துடுக்குத்தனத்துடன் மேதகை

* அக்காலத்தில் பீட்டர்ஸ்பர்கின் பெயர்பெற்ற நாட்டியக்காரர்.—ப-ர்.

யரின் முகத்துக்கு அருகே தன் முகத்தைக் கொண்டு வந்து உச்சக் குரலில் சேவலைப் போலக் கூவினான். இது அத்து மீறிய துடுக்குச் செயல் என்பதில் சந்தேகமில்லை. இவான் இலியீச் எழுந்து நின்றுவிட்டார். அப்படியும் கட்டுக்கடங் காத சிரிப்பொலி நாற்புறமிருந்தும் எழுந்தது, ஏனெனில் இளைஞன் கூவியது அவ்வளவு இயற்கையாக இருந்ததென் பதுடன், யாரும் எதிர்பாராதபடி அப்படித் திடுமென அவன் இந்தக் குறும்பைச் செய்துவிட்டான். இவான் இலி யீச் பிரமித்துப் போய் நின்று கொண்டிருந்த அந்த நேரத் தில் பிசெல்தனீமவ் வணங்கியவாறு அவரிடம் வந்து சாப் பிட வரும்படி வேண்டினான்: அவனுக்குப் பின்னால் அவனு டைய தாயும் வந்து நின்றார்.

''தேவரீர்... மேதகையீர், எங்களுடைய எளியவிருந்தை வேண்டாமெனக் கூறாமல் தாங்களும் வந்தமர்ந்து எங்களைச் சிறப்பிக்க வேண்டும்'' என்று தலை குனிந்து வணங்கியவாறு அவ்வன்னை கேட்டுக் கொண்டாள்.

''இல்லை... நான்... நான்...'' என்றார் இவான் இலியீச். ''இதற்காக அல்ல நான் இங்கு வந்தது... நான்... விடை பெற்றுக் கொண்டு புறப்படலாமென்று எழுந்தேன்...''

மெய்யாகவே அவர் புறப்படுவதற்காகக் கையில் தொப் பியை வைத்துக்கொண்டு தயாராக நின்றார். என்ன நேர்வ தாயினும் இனி இங்கிருப்பதில்லை, புறப்பட்டுவிடுவதென்று அந்தக் கணம்தான் அவர் தம்முள் தீர்மானம் செய்திருந் தார்—ஆயினும் புறப்படாமலே தங்கிவிட்டார். இதன் பின் ஒரு நிமிடத்துக்கெல்லாம் எல்லோருக்கும் முன்னிலையிலே நடந்து சாப்பாட்டு மேசையை நோக்கிச் சென்றார். பிசெல் தனீமவும் அவன் தாயும் முன்னால் சென்று அவருக்கு வழி ஒதுக்கிவிட்டனர். மிகவும் சிறப்பான இடத்தில் அவரை உட்கார வைத்தனர். இன்னும் திறக்கப்படாத ஷம்பெய்ன் மதுப்புட்டி மீண்டுமோர் முறை அவருக்கு முன்னால் கொண்டு வந்து வைக்கப்பட்டது. மேசையின்மீது சிற்றுண்டிகளும் வோட்காவும் இருந்தன. கையை நீட்டி அவர் ஒரு பெரிய கிளாஸில் வோட்காவை ஊற்றி மடமடவெனக் குடித்தார். வோட்கா குடித்து அவருக்குப் பழக்கமில்லை. மலையிலிருந்து கீழே உருளுவது போன்ற, மேலும் மேலும் வேகமாக உரு ளுவது போன்ற ஓர் உணர்ச்சி அவருக்கு உண்டாயிற்று. தாம் கீழே உருண்டோடுவதை நிறுத்த வேண்டும், எதை

யாவது கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று தான் நினைத்தார், ஆனால் பிடித்துக் கொள்ள அங்கு எது வும் இல்லை.

* * *

அவருடைய நிலைமை மேலும் மேலும் கேலிக்குரியதாக வக்கரித்துச் சென்றது. விதியின் விளையாட்டோ என்று நினைக்க வேண்டியிருந்தது. ஒரேயொரு மணிநேரம், அதற் குள் அவருக்கு ஏன் இப்படி ஆக வேண்டும், ஆண்டவனுக்குத் தான் தெரியும். இந்த வீட்டுக்குள் அடியெடுத்து வைத்த போது அவர் மனித குலத்தவர் எல்லோரையும், தமக்குக் கீழ்ப்பட்ட எல்லாச் சிப்பந்திகளையும் கட்டித் தழுவி அன்பு செலுத்தத் தயாராயிருந்தார். ஒரு மணி நேரம்கூட ஆக வில்லை, அதற்குள் தாம் பிசெல்தனீமவை வெறுப்பதை யும், அவனையும் அவன் மனைவியையும் அவனுடைய திரு மணத்தையும் சபிப்பதையும் இதயத்தில் துயரம் பொங்க அவர் ஒத்துக் கொள்ள வேண்டியதாகிவிட்டது. அது மட்டு மல்ல, பிசெல்தனீமவின் முகபாவனையிலிருந்தே, அவனு டைய கண்களின் பார்வையிலிருந்தே அவனும் தம்மை இதே அளவுக்கு வெறுத்தான் என்பதை அவர் காண முடிந்தது. அவன் பார்த்த பார்வை ''உமது தலையில் இடி விழ! நாச மாய்ப் போக! ஏன் இப்படி என் உயிரை வாங்குகிறீர்?'' என்று அல்லவா கூறிற்று? பிசெல்தனீமவின் பார்வையில் இது தொனித்ததை இவான் இலியீச் நெடுநேரத்துக்கு முன்பே உணர்ந்து கொண்டுவிட்டார்.

ஆயினும் விருந்து மேசையின் முன்னால் அமர்ந்திருந்த இவான் இலியீச் இப்பொழுதுகூட இதுதான் உண்மை நிலை மை என்பதைத் தமது மனத்துள்ளுங்கூட ஒத்துக் கொள்ள இசைந்திருக்க மாட்டார், அதைக் காட்டிலும் தமதுகை வெட்டியெறியப்படுவதற்கு இசைவதே மேல் என நினைத் திருப்பார். உண்மையை ஒத்துக்கொள்வதற்குரிய தருணம் இன்னும் வந்தாகவில்லை, ஒருவகையான ஆத்மார்த்திகச் சமநிலை இன்னமும் நிலவி வந்தது. ஆனால் அவர் இதயம், அவர் இதயம்... அப்படி வேதனையுற்றது! விடுதலைக்காக, காற்றுக்காக, ஓய்வுக்காக ஏங்கித் தவித்தது. ஆம், இவான் இலியீச் மெய்யாகவே அன்பு உள்ளம் கொண்டவர், தெரி யுமா?

அவருக்குத் தெரியும், மிக நன்ருகத் தெரியும்—நெடு நேரத்துக்கு முன்பே தாம் சென்றிருக்க வேண்டும், தப் பித்தோம் பிழைத்தோமென ஓட்டமாய் ஓடியிருக்க வேண் டும் என்பது தெரியும். வெளியே தெருவில் நின்று கற்பனை செய்தது போல இம்மியளவுங்கூட எதுவும் நடைபெறவில்லை என்பதும் அவருக்குத் தெரிந்துதான் இருந்தது.

''எதற்காக இங்கு வந்தேன்? சாப்பிடுவதற்காகவும் குடிப்பதற்காகவுமா?'' என்று தம்மைத் தாமே கேட்டுக் கொண்டு, தட்டிலிருந்த ஹெர்ரிங் மீனை எடுத்துக் கடித் தார். தம்மைத் தாமே நிந்தனை செய்து கொள்ளும் அள வுக்குச் செல்ல முற்பட்டார். தாம் மேற்கொண்ட அருஞ் செயலைப் பழித்துப் பரிகாசம் செய்யும் ஏளன மனோபாவம் கணப் பொழுதுக்கு அவரைப் பீடித்துக் கொண்டது. தாம் இங்கு வந்த காரியம் என்ன என்று திகைப்புடன் கேட்டுக் கொண்டார்.

''அது எப்படிப் புறப்பட்டுப் போக முடியும்? வந்த காரியத்தைச் செய்யாமலே புறப்பட்டுப் போவது எப்படி? அவர்கள் என்ன சொல்வார்கள் தெரியுமா? தகாத இடங் களுக்கு எல்லாம் போய்க் கொண்டிருக்கிறேன் என்றல்லவா சொல்வார்கள்? வந்த காரியத்தை நான் செய்து முடிக்கா மல் புறப்பட்டுவிட்டால் அப்படித்தானே நினைக்கத் தோன் றும்? ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச், செமியோன் இவானவிச், மற்றும் அலுவலகத்திலுள்ள மற்றவர்கள் எல்லோரும், அந்த ஷெம்பெல்களும் ஷுபின்களும் நாளைக்கு என்ன வெல்லாம் பேசிக் கொள்வார்கள், தெரியுமா? (நிச்சயம் இந்த விவகாரம் எல்லோருக்கும் தெரியத்தானே போகி றது.) இல்லை, இல்லை, நான் இங்கு எதற்காக வந்தேன் என் பதை எல்லோரும் புரிந்து கொள்ளும்படிச் செய்து விட்டு தான், எனது ஆத்மார்த்திகக் குறிக்கோளைத் தெளிவாகப் புலப்படச் செய்துவிட்டுத்தான் இங்கிருந்து நான் செல்ல வேண்டும்.'' ஆனால் இதைச் செய்வதற்குரிய தக்க சந் தர்ப்பம் வருவதாக இல்லை. ''இவர்கள் என்னை மதிப்ப தாகக்கூடத் தெரியவில்லையே'' என்று மேலும் தொடர்ந்து அவர் சிந்திக்கலானார். ''எதற்காக இப்படி இவர்கள் சிரிக் கிறார்கள்? கூச்சம் இல்லாதவர்களாக இருக்கிறார்களே! உணர்ச்சி நயமற்றவர்களாக இருப்பார்கள் போல் இருக் கிறதே!.. ஆம், இளந் தலை முறையினர் உணர்ச்சி நயமற்

ரூராய் இருப்பதாகத்தானே நான் பல காலமாக நினைத்து வந்தேன்! என்ன நேர்வதாயினும் நான் இங்கு இருந்தே ஆக வேண்டும்!.. நடனத்தை முடித்துவிட்டு எல்லோரும் இப்பொழுது சாப்பாட்டு மேசையின்முன் கூடிவிட்டதால், இனி நான் இவர்களுக்குப் பலவற்றையும் எடுத்துரைக்க லாம்... பிரச்சினைகளையும் சீர்திருத்தங்களையும் ருஷ்யாவின் மகத்துவத்தையும் எடுத்துரைக்கலாம்... இனியும் இவர்களை நான் கவர்ந்திழுத்துக் கொள்வேன்! நிச்சயம் செய்து காட்டு வேன்! ஆம், ஒன்றும் கெட்டுவிடவில்லை... எதார்த்த வாழ்க் கையில் எப்பொழுதும் இப்படித்தான் யாவும் நடந்தேறும் போலும். நான் எப்படித் தொடங்க வேண்டும்? இவர்களைக் கவர்ந்திழுக்க நான் என்ன செய்ய வேண்டும்? எந்த வழி யைக் கையாள வேண்டும்? எனக்குத் திகைப்பாகத்தான் இருக்கிறது; ஆம், திகைப்புற்றுத் தவிக்கிறேன்... அவர்கள் விரும்புவது என்ன? என்ன வேண்டுமென்று கோருகிறார் கள்!.. அதோ அங்கே அவர்கள் சிரிக்கிறார்கள், தெரிகிறது எனக்கு. என்னைப் பார்த்தா சிரிக்கிறார்கள்?—அட தெய்வமே! மெய்தானா. இது?.. ஆனால் நான் விரும்புவது என்ன? இங்கே ஏன் வந்தேன்? ஏன் புறப்பட்டுச் செல்லாமல் இருக்கிறேன்? நான் சாதிக்க முயலுவது என்ன?..'' இப்படி எல்லாம் அவர் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, ஒரு வகை வெட்க உணர்ச்சி, மிகவும் கூர்மையான, பொறுக்க முடியாத வெட்க உணர்ச்சி மேலும் மேலும் ஆழமாய் அவர் இதயத் தை அரித்துச் சென்று வருத்திற்று.

* * *

ஆனால் யாவும் அவற்றுக்குரிய வரிசையில் ஒன்றன்பின் ஒன்றாக நடந்தேறின.

சாப்பாட்டு மேசையின் முன்னால் அவர் உட்கார்ந்து இரண்டு நிமிடங்களுக்கு எல்லாம் பீதியூட்டும் ஓர் எண் ணம் அவர் மனத்துள் உதித்து அவரைக் கதி கலங்கச் செய்தது. குடியின் போதை பயங்கரமாகத் தம் தலைக் கேறிவிட்டதை அவர் திடுமென உணரலானார்; முன்பு போலல்ல, இப்பொழுது அறவே நிதானம் இழக்கும் அள வுக்கு போதையுற்று விட்டோம் என்பதை அறியலானார். ஷம்பெய்னை அடுத்து ஒரு கிளாஸ் வோட்கா குடித்ததால்

வந்த வினை இது, வோட்கா உடனே தன் கைவரிசையைக் காட்டிவிட்டது. மயக்கத்தின் இறுதிக் கட்டத்தினுள் சரிந்து செல்கிறோம் என்பது அவர் மனதுக்குத் தெரிந்தது. திடுமெனக் குருட்டுத் துணிச்சல் அதிகரித்துவிட்டதென்றாலுங் கூட, அவர் நெஞ்சின் குறுகுறுப்பு அவரை வாட்டி வருத்திற்று: ''இது நன்றாயில்லை, கொஞ்சமும் நன்றாயில்லை, வெட்ககரமானது!'' என்று அவருடைய உள்மனம் ஓயாது புலம்பிற்று. குடி மயக்கத்தில் எழுந்த இந்தச் சிந்தனைகள் நிலைகொள்ளாது ஊசலாடிய வண்ணமிருந்தன: திடுமென அவருள் இரு தரப்புக்கள் தோன்றிவிட்டன, திட உருவம் கொண்டதாக நினைக்கும் படி அவை அவ்வளவு துல்லியமாயிருந்தன. ஒரு தரப்பில் குருட்டுத் துணிச்சலும் வெற்றிகொள்ள வேண்டும், எல்லாத் தடைகளையும் கடந்து செல்ல வேண்டுமென்ற துடிப்பும் இனியும் தன்னால் தனது குறிக்கோளைச் சென்றடைய முடியுமென்ற அசாத்திய உறுதியும் ஒன்று சேர்ந்திருந்தன. மறு தரப்பில் அவர் இதயத்தை நச்சரித்த ஓயாத ஒரு வலியும் உள்ளத்தை ஏதோ ஒன்று ஒடுக்குவது போன்ற உணர்ச்சியும் கூடியிருந்தன. ''எல்லோரும் என்ன சொல்வார்கள்? இதெல்லாம் எங்கே போய் முடியும்? நாளைக்கு, நாளைக்கு நடைபெறப் போவது என்ன, தெரியவில்லையே!..''

விருந்தினர்களிடையே தமக்குப் பகைவர்கள் சிலர் இருந்தனர் என்ற அரைகுறையான ஓர் உணர்வு இதுவரை அவர் உள்ளத்தில் ஒரு மூலையில் இருந்து வந்தது. ''இங்கு வரும்போது நான் கொஞ்சம் கிறங்கிய நிலையில் இருந்ததே இதற்குக் காரணமாக இருக்கும்'' என்று வேதனை மிகுந்த சந்தேகத்துடன் தமக்குத் தாமே சமாதானம் கூறிக் கொண்டார். ஆனால் இப்பொழுது சாப்பாட்டு மேசையைச் சுற்றிலும் மெய்யாகவே தமக்குப் பகைவர்கள் பலரும் இருந்ததைத் தெட்டத் தெளிவான சில அறிகுறிகளைக் கொண்டு கண்ணுற்ற அவர் துணுக்குற்றுப் போய்விட்டார். ஆம், இவர்கள் பகைவர்கள்தான், சந்தேகமே இல்லை.

''இவர்களைப் பகைத்துக் கொள்ளும்படி நான் அப்படி என்ன செய்துவிட்டேன்?'' என்று அவர் தன்னைத் தானே கேட்டுக் கொண்டார்.

இந்த மேசையைச் சுற்றிலும் மொத்தம் முப்பது விருந்தினர்கள் அமர்ந்திருந்தனர். இவர்களில் சிலர் ஏற்கனவே

உணர்வு கிறங்கிய நிலையில் இருந்தனர். ஏனையோர் ஒரு வகை அலட்சியமும் கடுப்பும் கொண்டவர்களாக, அடக்கம் சிறிதுமின்றி சுதந்திர மனிதர்களைப் போல நடந்து கொண்டனர். கூச்சலிட்டுக் கொண்டும், ஒரே நேரத்தில் எல்லோரும் பேசிக் கொண்டும், பொருத்தமின்றி வாழ்த்துக்கள் கூறி பானம் அருந்திக் கொண்டுமிருந்தனர். சின்னஞ் சிறு ரொட்டித் துண்டுகளைப் பெண்கள்மீது விட்டெறிந்தனர், உடனே அந்தப் பெண்கள் அவற்றை அவர்கள்மீதே திருப்பி விட்டெறிந்தனர். அழுக்கேறிய நீள் கோட்டு அணிந்து சோபையற்ற தோற்றமுடையவர் ஒருவர் நாற்காலியில் வந்து உட்கார்ந்த மறு கணமே கீழே விழுந்து விட்டார், விருந்து முடியும்வரை அவர் அங்கேயே தரையில் படுத்துக் கிடந்தார். மற்றொருவர் மேசையின்மேல் ஏறி நின்று வாழ்த்துரைத்து பானம் அருந்த வேண்டுமென்று துடித்தார், அவருடைய கோட்டு முனையை விடாமல் கெட்டியாய்ப் பிடித்து இழுத்த இராணுவ ஆபீசரின் முயற்சியால் தான் அவருடைய இந்த அளவுமீறிய ஆர்வம் கொஞ்சம் தணியலாயிற்று. யாரோ ஒரு ஜெனரலிடம் வேலை செய்த பண்ணையாளான சமையற்காரர் ஒருவர் பணம் கொடுத்து அமர்த்தப்பட்டிருந்தும்கூட, சாப்பாடு ரகம் ரகமான பல உண்டிகளும் சேர்ந்தமைந்த விசித்திரக் கதம்பமாயிருந்தது; கறி வறுவல், உருளைக்கிழங்கு, கட்லெட், பச்சைப் பட்டாணி, இவற்றுக்குப் பிற்பாடு வாத்திறைச்சி, யாவற்றுக்கும் முடிவில் பிளாங்மாஜ். பீர், வோட்கா, ஷெர்ரி முதலான பான வகைகள் இருந்தன. ஜெனரலின் தட்டுக்குப் பக்கத்தில் ஷம்பெய்ன் மதுப்புட்டி ஒன்று இருந்தது. மேதகையர் இப்பொழுது தமது கோப்பையை மட்டுமின்றி அக்கீம் பெத்ரோவிச்சின் கோப்பையையும் நிரப்ப வேண்டியிருந்தது, ஏனெனில் பின்னவர் முன்பு போல சாப்பாட்டு மேசையிலும் பணிவிடை செய்யத் துணியாதவராக ஒதுங்கிவிட்டார். ஏனைய விருந்தினர்கள் வாழ்த்துப் பானம் அருந்துவதற்காகக் கைக்குக் கிடைத்த மலிவான ஒயின் வைக்கப்பட்டிருந்தது. சாப்பாட்டு மேசையானது சீட்டாட்ட மேசை ஒன்றும் அடங்கலாகப் பல சிறு மேசைகளைச் சேர்த்துப் போட்டுத் தயார் செய்யப்பட்டிருந்தது. பல வகையான விரிப்புகளும் இவற்றின்மீது போடப்பட்டிருந்தன. இந்த விரிப்புகளில் ஒன்று பல வண்ண யாரஸ்லாவ்ல் பின்னல்

துணியாகும். ஆடவரும் பெண்டிருமாய் அமர்ந்திருந்தார்கள். பிசெல்தனீமவின் தாய் இங்கே உட்காராமல் ஓடியாடி வேலை செய்து கொண்டும், மேற்பார்வையிட்டுக் கொண்டும் இருந்தாள். இதுகாறும் தம் கண்ணில் படாத சிடுசிடுப்பான ஓர் அன்னை இப்பொழுது இங்கே இருக்கக் கண்டார் இவான் இலியீச். சிவப்புப் பட்டாடையும் கன்னங்களை மூடிக் கட்டிய தலைக் குட்டையும் மிகவும் உயரமான குல்லாயும் அணிந்திருந்த அவள் மணப்பெண்ணின் தாய் என்பது தெரியவந்தது. பின்கட்டு அறையில் இருந்த அவரை முடிவில் இப்பொழுது சரிக்கட்டி சாப்பாட்டு மேசைக்கு அழைத்து வந்திருந்தனர். பிசெல்தனீமவின் தாய்மீது அவள் தீராப் பகை கொண்டிருந்ததால் இதுவரை வெளியே தலை காட்டாமலே இருந்தாள்—இது பற்றி விவரமாகப் பிறகு கூறுவோம். அவ்வன்னையின் விரும்பத்தகாத பார்வை, இளக்காரமான பார்வை என்றுகூடச் சொல்லலாம், ஜெனரலின்மீது கணப் பொழுதுக்குப் படிந்து சென்றது. ஜெனரலுக்குத் தான் அறிமுகம் செய்து வைக்கப்பட வேண்டுமென்று அவள் கிஞ்சித்தும் விரும்பியதாகத் தெரியவில்லை. சிடுசிடுப்பான இந்தப் புதிய முகம் இவான் இலியீச்சுக்கு சந்தேகத்தைக் கிளர்த்துவதாயிருந்தது. ஆனால் சந்தேகத்துக்குரியவர்கள் வேறு சிலரும் அங்கே இருந்தனர். இவர்கள் குறித்து இவான் இலியீச்சுக்குக் கவலையாகவும் அச்சமாகவும்தான் இருந்தது. அவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து சதி புரிவதாக—இவான் இலியீச்சையே எதிர்த்துச் சதி புரிவதாக—தோன்றியது. மேதகையர் அப்படித்தான் நினைத்தார். விருந்தின் போது அவருக்கு இது மேலும் மேலும் உறுதியாகி வந்தது. தாடி வைத்திருந்த ஒருவர் மிகவும் சந்தேகத்துக்குரியவராகத் தோன்றினார். அவர் ஓர் ஓவியர், தறுதலைப் பேர்வழி என்பது தெரிந்தது. அடிக்கடி அவர் இவான் இலியீச்சைப் பார்த்துவிட்டு தம் பக்கத்திலிருந்தவர் பக்கம் திரும்பி அவருடைய காதுக்குள் ஏதோ கூறினார். மற்றோர் ஆள் ஒரு மாணவன், மிதமிஞ்சிக் குடித்திருந்தான், சந்தேகத்துக்குரிய அறிகுறிகள் அவனிடமும் தென்பட்டன. மருத்துவக் கல்லூரி மாணவனிடத்தும் அவநம்பிக்கையை உண்டாக்கிய ஏதோ ஒன்று இருந்தது. அந்த இராணுவ ஆபீசருங்கூட முற்றிலும் நம்பத்தக்கவராக இல்லை. ஆனால் இவர்கள் எல்லோரையும் விட கொள்ளிக்

கட்டை பத்திரிகை எழுத்தாளர்தான் மிகவும் குறிப்பிடத்தக்க, மிகவும் முனைப்பான வெறுப்பை வெளிப்படுத்தி வந்தார். நாற்காலியில் அட்டகாசமாக உட்கார்ந்து கொண்டு வீறுப் புடன் சுற்றிலும் பார்த்துப் பெரிய சுதந்திர வீரரைப் போன்ற பாவனையுடன் கனைத்துக் கொண்டிருந்தார். ஆனால் ஏனைய விருந்தினர்கள் அவரை அதிகமாகப் பொருட்படுத்திக் கொள்ளவில்லை. கொள்ளிக்கட்டை பத்திரிகையில் அப்படி ஒன் றும் அவர் அதிகமாக எழுதிவிடவில்லை, நான்கே நான்கு கவிதைகளை மட்டும்தான் இதுவரை எழுதியிருந்தார். அந்த நான்கு கவிதைகளை ஆதாரமாகக் கொண்டு மிதவாதி என்று பெயர் பெற்றுவிட்டார். அவரை யாருக்கும் பிடிக்க வில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. ஆயினும் இவான் இலியீச் தமக்கு அருகே சிறிய ரொட்டித் துண்டு திடுமென வந்து விழுந்ததும் அதை விட்டெறிந்தவர் கொள்ளிக்கட்டை பத்திரிகை எழுத்தாளர்தான் என்று சத்தியம் செய்யத் தயா ராயிருந்தார்.

இவை யாவும் இவான் இலியீச்சிடம் வருந்தத்தக்க விளைவுகளை உண்டாக்கின.

வேதனைக்குரிய மற்றோர் உண்மையும் இவான் இலியீச் சுக்குத் தெரிய வந்தது: சொற்களைத் தெளிவின்றி மிகவும் சிரமப்பட்டு உச்சரிக்கிறோம் என்பது தெரியலாயிற்று. அவர் நிறையப் பேச விரும்பினார், ஆனால் நாக்கு அவருக்குக் கீழ்ப் படிய மறுத்து வந்தது. பிறகு அவர் நினைவிழந்து ஏதேதோ செய்ய முற்பட்டார், இதனிலும் மோசமானது என்னவென் றால் காரணமில்லாமலே கனைக்கவும் சிரிக்கவும் தொடங்கி னார். இன்னொரு கோப்பை ஷம்பெய்ன் குடித்ததும் இந்தக் கட்டம் முடிவுற்றது. இந்தக் கோப்பையை அவரே தான் நிரப்பி வைத்திருந்தார், அப்பொழுது அவருக்கு இதைக் குடிக்கும் உத்தேசம் இல்லை, பிறகு திடீரென்று தற்செய லாகச் செய்வதைப்போலக் கோப்பையை எடுத்துக் குடித்து விட்டார். இதன்பின் அவருக்கு அழ வேண்டும் போலிருந் தது. விபரீதமாகத் தாம் உணர்ச்சி வயப்பட்டு வருவது அவருக்குத் தெரிந்தது. மீண்டும் அவர் உள்ளத்தில் அன்பு சுரந்தெழுந்தது; எல்லோரிடத்தும், பிசெல்தனீமவிடத்தும், கொள்ளிக்கட்டை பத்திரிகை எழுத்தாளரிடத்தும்கூட அவர் அன்பு கொள்ளலானார். எல்லோரையும் கட்டித்தழுவ வேண் டுமென்று, யாவற்றையும் மறந்துவிட்டு எல்லோருக்கும்

பிடித்தமானவராகிவிட வேண்டுமென்று திடீரென்று அவருக்கு ஓர் ஆசை உண்டாயிற்று. அது மட்டுமல்ல, தமது இதயத்தில் இருப்பதை இவர்கள் எல்லோருக்கும் காட்டி விட வேண்டும் என்று, யாவற்றையும் இவர்களிடம் கூற வேண்டுமென்று விரும்பினுர்—தான் எப்படிப்பட்ட அன்பு உள்ளம் கொண்ட தங்கமான மனிதர், எவ்வளவு ஆற்றலும் திறமையும் மிக்கவர், நாட்டுக்கு எப்படியெல்லாம் பணி புரியக் கூடியவர், பெண் பாலரை எப்படி மகிழச் செய்யக் கூடியவர், இன்னும் முக்கியமாக எவ்வளவு முற்போக்கானவர், யாவரிடத்தும், மிகமிக அடிநிலேயில் இருப்போரிடத்தும், எவ்வளவு நல்லெண்ணம் கொண்டிருப்பவர் என்றெல்லாம் இவர்களிடம் கூற வேண்டுமென விரும்பினுர். பிசெல்தனீமவின் வீட்டுக்கு அழையாத விருந்தினராக வந்து இரண்டு புட்டி ஷம்பெய்னேக் குடித்துவிட்டு தமது வருகையால் எல்லோரையும் இன்புறச் செய்யும்படித் தம்மை ஊக்குவித்த காரணங்கள் யாவை என்பதை ஒளிவு மறைவின்றி இவர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் விரும்பினுர்.

''உண்மை, புனிதமான உண்மை—யாவற்றுக்கும் மேலாக ஒளிவு மறைவற்ற திறந்த உள்ளம்! என்னுடைய உள்ளத்தில் இருப்பதை மறைக்காமல் அப்படியே எடுத்துரைத்து இவர்களுடைய உள்ளங்களேக் கவர்ந்து விடுவேன். இவர்கள் என்னே நம்புவார்கள், நிச்சயம் நம்புவார்கள். இப்பொழுது பகைமைக் கண் கொண்டு என்னேப் பார்க்கிருர்கள், ஆனுல் யாவற்றையும் நான் இவர்களிடம் கூறியதும் தவிர்க்க முடியாத வகையில் இவர்களே என் பக்கத்துக்குக் கவர்ந்து இழுத்துக் கொண்டுவிடுவேன். இவர்கள் தம்முடைய கோப்பைகளே நிரப்பிக் கொண்டு, ஆர்வமுடன் என்னே வாழ்த்தி முழக்கமிட்டுப் பானம் அருந்துவார்கள். எனக்கு இதில் சந்தேகமே இல்லே, இந்த இராணுவ ஆபீசர் தமது கோப்பையை பூட்ஸ் காலின் குதிமுள்ளில் தட்டி உடைக்கப் போகிருர். மகிழ்ச்சிக் குரலெழுப்பி எல்லோரும் முழக்கமிடுவார்கள்! குதிரைப் படை வீரர்களின் பாணியில் என்னே அப்படியே மேலே தூக்கிப் போட்டுப் பிடிக்க விரும்புவார்களாயின் தாராளமாகச் செய்யட்டும், எனக்கு ஆட்சேபம் இல்லே, உண்மையில் அது சாலச் சிறந்ததாகவே இருக்கும். மணப்பெண் சிறு பெண், அவள் நெற்றியில் முத்தமிடுவேன், அக்கீம் பெத்ரோவிச்சும் ரொம்ப நல்லவர்,

பிசெல்தனீமவ் காலப் போக்கில் மேம்பாடுற்றுவிடுவான். மேன் மக்களின் சமுதாயத்துக்குரிய சிறப்பு அவனிடம் இல்லை... புதிய தலைமுறையினர் அனைவருமே அந்த ஆத்மார்த்திக நயம் இல்லாதோராகவே இருக்கிறார்கள், என்றும் நான்... இவர்களிடம் பேசுவேன், ஏனைய ஐரோப்பிய அரசுகளிடையே ருஷ்யா தற்போது ஆற்ற வேண்டியுள்ள பணியினை இவர்களுக்கு எடுத்துரைப்பேன். விவசாயிகளுடைய பிரச்சினை குறித்தும் சில வார்த்தைகள் கூறுவேன், ஆம்... இவர்கள் எல்லோருக்கும் என்மீது தனிப்பாசம் பிறந்துவிடும், சீரும் சிறப்பும் மிக்க சூழலில் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டுச் செல்வேன்!..''

இந்த ஆசைக் கனவுகள் மிக இனிமையாகத் தான் இருந்தன, ஆனால் இந்த நன்னம்பிக்கைகளுடன் கூடவே எதிர்பாராத ஒரு வெறிப்போக்கு—எச்சில் துப்பும் ஒரு வெறிப்போக்கு— தம்முள் மூண்டெழுவதைத் திடுமென அவர் கண்டது அவ்வளவு இனிமையாக இல்லை. அவரையும் மீறி அவர் வாயில் எச்சில் குழைத்துக் கொண்டு வந்தது. அவர் வாயிலிருந்து வெளிப்பட்டு அது அக்கீம் பெத்ரோவிச்சின் கன்னத்தில் திட்டுத் திட்டாய்ப் படிந்ததைக் கவனித்தபோதுதான் இப்படி ஒரு வெறிப் போக்கு தம்முள் மூண்டு வருவதை அவர் உணரலானார். மரியாதையை முன்னிட்டு அக்கீம் பெத்ரோவிச் உடனே அதைத் துடைக்காமல் விட்டு வைத்திருந்தார். இவான் இலியீச் தமது கைத் துண்டை எடுத்துத் தாமே அதைத் துடைத்து அகற்றினார். ஆனால் அடுத்த நிமிடமே இது அவருக்குக் கோமாளித்தனமாக, பகுத்தறிவுக்கு ஒவ்வாத அசட்டுத்தனமாகத் தோன்றவே திகைத்துப் போய் மௌனமாகி விட்டார். அக்கீம் பெத்ரோவிச்சும்கூட நிறையக் குடித்திருந்தார், ஆயினும் அவர் குழப்பமடைந்து தடுமாறினார். கடந்த கால் மணி நேரமாக மிகவும் சுவையான ஒரு பொருள் குறித்து அக்கீம் பெத்ரோவிச்சுடன் தாம் பேசிக் கொண்டிருந்ததையும், தாம் கூறியதைக் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்த அக்கீம் பெத்ரோவிச் பதற்றமுற்று எதைப் பற்றியோ நினைத்து அஞ்சி நடுங்குவதாய்த் தோன்றியதையும் இவான் இலியீச் இப்பொழுது உணரலானார். தம்மிடமிருந்து மூன்றாவது இருக்கையில் அமர்ந்திருந்த பிசெல்தனீமவும்கூட கழுத்தை நீட்டித் தலையை ஒரு பக்கமாகச் சாய்த்துக்

கொண்டு சிறிதும் விரும்பத்தகாத முகபாவத்துடன் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். இவான் இலியீச்சுக்கு உண்மையில் அவன் தம்மைக் கண்காணிப்பதாகத் தோன்றிற்று. விருந்தினர்களை ஒரு முறை உற்று நோக்கிய இவான் இலியீச் இவர்களில் பலரும் தம்மைப் பார்த்துச் சிரிப்பதைக் கவனித்தார். வேடிக்கை என்னவெனில் இது அவரைச் சிறிதும் கலக்கமுறச் செய்யவில்லை, அதற்குப் பதில் அவர் தமது கோப்பையிலிருந்து கொஞ்சம் அருந்திவிட்டு எல்லோர் காதிலும் விழும்படி பேச முற்பட்டார்.

''கனவான்களே, இப்பொழுது நான் இங்கே கூறிக் கொண்டிருந்தேன்'' என்று பலத்த குரலில் பேசினார் அவர். ''அக்கீம் பெத்ரோவிச்சிடம் கூறிக் கொண்டிருந்தேன்... ருஷ்யா, ஆம்... ருஷ்யா... ஒரே சொல்லில் கூறுவதெனில்... நான் என்ன சொல்ல முயலுகிறேன் என்று தெரிகிறதல்லவா. ருஷ்யா இப்பொழுது கடந்து செல்லும் கட்டம்... மனித நேயக் கட்டமாகும்.''

''ஆம், மனித நே-நேயம்தான்!'' என்று மேசையின் எதிர் முனையிலிருந்து ஒரு குரல் ஒலித்தது.

''ஒ-ஒய்-யா!''

''அ-ஆய்-யா!''

இவான் இலியீச்சுக்கு வாய் அடைத்துவிட்டது. பிசெல்தனீமவ் எழுந்து நின்று மேலும் கீழுமாய்ப் பார்த்தான்—கூச்சலிட்டது யார்? இது சரியல்ல என்று விருந்தினர்களைப் பார்த்துக் கண்டிக்கும் முறையில் அக்கீம் பெத்ரோவிச் இரகசியமாகத் தலையை அசைத்துக் காட்டினார். இவான் இலியீச்சுக்கு இது நன்றாகவே தெரிந்தது, மௌனமாகச் சகித்துக் கொண்டு நின்றார்.

''மனித நேயம்!'' என்று விடாப்பிடியாகத் திரும்பவும் பேசத் தொடங்கினார். ''கொஞ்ச நேரத்துக்கு முன்புதான்... ஆம், இப்பொழுதுதான் கொஞ்ச நேரத்துக்கு முன்பு ஸ்தெப்பான் நிக்கீஃபரவிச்சிடம் நான் சொல்லிக் கொண்டிருந்தேன். அதாவது... புதுமலர்ச்சி என்று கூறலாம்... அது...''

''மேதகையீர்!'' என்று மேசையின் எதிர் முனையிலிருந்து ஒரு பலத்த குரல் ஒலித்தது.

''என்ன, சொல்லுங்கள்!'' என்று கேட்டு தமது பேச்சை நிறுத்திக் கொண்டு இவான் இலியீச் கூப்பிட்டது யார் என்று பார்த்தார்.

''மேதகையீர், ஒன்றுமில்லை, உற்சாகத்தில் கூப்பிட்டு விட்டேன், நீங்கள் பேசுங்கள்... பேசுங்கள்!'' என்றது அதே குரல்.

இவான் இலியீச் துணுக்குற்றார்.

''புதுமலர்ச்சி என்று சொல்லலாம், யாவும் இப்பொழுது...''

''மேதகையீர்!'' என்று திரும்பவும் கூவியழைத்தது அந்தக் குரல்.

''என்ன வேண்டும், சொல்லுங்கள்!''

''உங்களுக்கு என் வணக்கம்!''

இம்முறை இவான் இலியீச்சுக்குப் பொறுக்க முடியவில்லை. வாக்கியத்தின் நடுவே பேச்சை நிறுத்திக் கொண்டு, அமைதியைக் குலைத்து வந்த அந்த ஆளின் பக்கம் திரும்பினார். அவன் ஓர் இளம் மாணவன், சிறு பையன், நிதானம் தவறும்படி குடித்திருந்தான், சந்தேகத்துக்குரிய ஆள் என்பது தெரிந்தது. சிறிது நேரமாகவே அவன் ஏதோ கூச்சலிட்டுப் பேசி ரகளை செய்து வந்தான், திருமண விருந்தில் இப்படித்தான் செய்ய வேண்டுமென்று சொல்லி ஒரு கிளாசையும் இரு தட்டுகளையும் எடுத்து உடைத்துப் போட்டு விட்டுக் கூச்சலிட்டான். இவான் இலியீச் அவன் பக்கம் திரும்பியபோது, அந்த இராணுவ ஆபீசர் அவனைச் சப்தம் போடாதே என்று அதட்டிக் கொண்டிருந்தார்.

''ஏன் இப்படிக் கூச்சல் போடுகிறாய்? கழுத்தைப் பிடித்து வெளியே தள்ள வேண்டியிருக்கும், ஜாக்கிரதை!''

''மேதகையீர், நான் சொன்னது உங்களை அல்ல, உங்களை அல்ல! நீங்கள் பேசுங்கள்!'' என்று தனது நாற்காலியில் சாய்ந்து ஆடியவாறு கத்தினான், நிதானமிழந்த அந்தப் பள்ளி மாணவன். ''நீங்கள் பேசுங்கள்! கவனமாகக் கேட்கிறேன், பேசுங்கள்! உங்கள் பேச்சு! ரொம்பப் பிடித்திருக்கிறது எனக்கு, போற்றத்தக்கது! போற்றத்தக்கது!''

''குடிகாரப் பயல்!'' என்று முணுமுணுக்கும் குரலில் விளக்கம் கூறினான் பிசெல்தனீமவ்.

''குடி மயக்கம்தான் என்பது தெரிகிறது, ஆயினும்...''

''மேதகையீர், நான் அவனிடம் வேடிக்கையான ஒரு நிகழ்ச்சியைக் கூறிக் கொண்டிருந்தேன்'' என்று ஆரம்பித்தார் அந்த இராணுவ ஆபீசர். ''எங்கள் படைப் பிரிவில் இருந்த ஒரு லெப்டினண்டைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்

தேன். அவன் எங்களது தலைமை ஆபீசரிடம் இப்படித்தான் கூறிக் கொண்டிருந்தான். இப்பொழுது இந்தப் பையனும் அந்த லெப்டினண்டைப் போலவே பேசிப் பார்க்கிறான். ஆபீசர் எது சொன்னாலும் அந்த லெப்டினண்ட் 'போற்றத் தக்கது! போற்றத்தக்கது!' என்று கத்திக்கொண்டிருந்தான். பத்து ஆண்டுகளுக்கு முன்பு அவனைப் படையிலிருந்து தள்ளி விட்டார்கள்.''

''யார் அந்த லெப்டினண்ட்?''

''மேதகையீர், அவன் எங்கள் படைப்பிரிவில் இருந்து வந்தான். 'போற்றத்தக்கது' என்னும் சொல் அப்படி அவனைக் கவர்ந்து கொண்டுவிட்டது, பித்துக் கொண்டவனாகி விட்டான்... தகப்பன் மாதிரி அந்தத் தலைமை ஆபீசர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார், அவனைத் திட்டிப் பார்த்தார், ஆனால் எதற்கெடுத்தாலும் 'போற்றத்தக்கது! போற்றத்தக்கது!' என்றே பதில் கூறிக் கொண்டிருந்தான். இன்னொரு விசேஷம் என்னவென்றால் அந்த லெப்டினண்ட் பெயர் பெற்ற வீரன், ஆறு அடிக்கு மேல் இருப்பான். இராணுவ விசாரணைக்கு அனுப்பி அவனுக்குத் தக்க தண்டனை அளிக்க வேண்டுமென்று நினைத்தனர், ஆனால் மூளை கலங்கியவன் என்பது தெரிய வந்தது.''

''அவன் அறியாச் சிறுவன்—சிறு பையனுடைய குறும்பை அப்படிப் பெரிது பண்ணக் கூடாது... நானாக இருந்தால் மன்னித்திருப்பேன்...''

''மேதகையீர், மருத்துவப் பரிசோதனை நடத்தினார்கள்.''

''அட பாவமே! அவனைப் போய் அறுத்துச் சோதனை நடத்தினார்களா, என்ன?''

''ஐயய்யோ, அதெல்லாம் இல்லை! அவன் உயிரோடு தான் இருந்தான்.''

இதுவரை நல்லபடியாகவே நடந்து கொண்டு வந்த விருந்தினர்கள் அனேகமாய் ஏகோபித்த முறையில் இப்பொழுது வாய்விட்டுப் பலமாகச் சிரித்து விட்டார்கள். இவான் இலியீச்சுக்கு ஆத்திரம் வந்துவிட்டது.

''கனவான்களே, கனவான்களே!'' என்று அவர் பலக்கக் கூவினார். ஆரம்பத்தில் சில வினாடிகளுக்கு இப்பொழுது அவரால் திக்காமலே பேச முடிந்தது. ''உயிரோடிருப்பவர் யாரையும் அறுத்துச் சோதனை நடத்த மாட்டார்கள் என்பதைப் புரிந்துகொள்ளும் நிலையில்தான் இருக்கிறேன். பித்துப்

பிடித்துவிட்ட அந்த லெப்டினண்ட் உயிரோடு இல்லை என்பதாக நினைத்துக் கேட்டேன்... அதாவது அவன் இறந்து போய்விட்டான் என்பதாக நினைத்துவிட்டேன்... அதாவது... நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்ருல்... நீங்கள் என்னை நேசிக்கவில்லை... ஆனல் நான் உங்கள் எல்லோரையும் உளமார நேசிக்கிறேன்... ஆம், பர்-பர்ஃபீரியையுங்கூட நேசிக்கிறேன். இதைச் சொல்வதன் மூலம் என்னையே நான் இழிவுபடுத்திக் கொள்கிறேன்...''

ஆனல் அந்த நேரத்தில் இவான் இலியீச்சின் வாயிலிருந்து எச்சில் பீறிட்டு வெளிவந்து மேசை விரிப்பில் எடுப்பான ஓரிடத்தில் போய் விழுந்தது. பிசெல்தனீமவ் உடனே பாய்ந்து அதைத் தன் கைத்துண்டால் துடைத்தான். இந்தக் கடைசித் துர்ப்பாக்கியம் இவான் இலியீச்சை மனம் ஒடிந்து போய் நிலைகுலையச் செய்துவிட்டது.

''கனவான்களே, போதும் இது, இனி பொறுக்க முடியாது'' என்று அவலக் குரலில் முறையிட்டார்.

''மேதகையீர், குடியின் போதையால் நேர்ந்ததை நினைத்து நீங்கள்...'' என்று மீண்டும் பிசெல்தனீமவ் சமாதானம் கூற முற்பட்டான்.

''பர்ஃபீரி! எனக்குத் தெரிகிறது... உன்னை... உங்களை எல்லோரையும்... ஆம், நான் நம்புகிறேன்... ஆம், உங்கள் ஒவ்வொருவரையும் கேட்கிறேன், நீங்கள் இதைச் சொல்ல வேண்டுமென்று கேட்கிறேன்... உங்கள் கருத்தில் நான் என்னைக் கேவலப்படுத்திக் கொண்டுவிட்டேன், இல்லையா?''

இவான் இலியீச்சுக்கு அழுகையே வந்துவிட்டது.

''மேதகையீர், வேண்டாம்! வேண்டாம்!''

''பர்ஃபீரி, உன்னை நான் கேட்கிறேன்... நீ இதைச் சொல்லு... தக்க நோக்கம் இல்லாமலா நான் உன் திருமணத்துக்கு வந்தேன்?.. ஆத்மார்த்திக மேம்பாடு ஏற்பட வேண்டுமென்று விரும்பினேன்... உங்களை மனம் மகிழச் செய்ய வேண்டுமென்று விரும்பினேன். இப்பொழுது உங்களைக் கேட்கிறேன்—உங்களுடைய கருத்தில் என்னை நான் கேவலப்படுத்திக் கொண்டேனு, இல்லையா?''

மயான அமைதி போன்ற நிசப்தம் நிலவிற்று. என்னென்பது இதை!—உயிரனையதான இது போன்ற கேள்விக்குப் பதில் ஏதுமின்றி நிசப்தம் நிலவிற்று! ''இத்தகைய

ஒரு தருணத்தில் ஏன் இவர்கள் முழக்கமிட்டுப் பதிலளிக்காமல் சும்மாயிருக்கிறுர்கள்?'' என்று ஏக்கத்துடன் நினைத்தார் மேதகையர். விருந்தினர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்களே ஒழிய வாய் திறக்கவில்லை. அக்கீம் பெத்ரோவிச் பேச்சு மூச்சின்றி அமர்ந்திருந்தார். பீதியால் வாயடைத்துப் போய்விட்ட பிசெல்தனீமவ் நெடுநேரமாகத் தன்னை வருத்தி வந்த அச்சம் தரும் அதே கேள்வியைத் திரும்பத் திரும்பத் தன்னுள் கேட்டுக் கொண்டிருந்தான்:

''இவ்வளவுக்கும் பிற்பாடு நாளை என் கதி என்ன ஆகும்?'

குடி போதையில் தலை கிறுகிறுக்க இதுகாறும் வாய் பேசாமல் 'உர்'ரென்று உட்கார்ந்திருந்த **கொள்ளிக்கட்டை** பத்திரிகை எழுத்தாளர் இப்பொழுது கண்கள் பளிச்சிட்டு மின்னத் திடுமென இவான் இலியீச்சின் பக்கம் திரும்பி, விருந்தினர்கள் எல்லோரது சார்பிலும் அவருக்குப் பதிலளித்தார்.

''ஆம்!'' என்று இடியென அதிர்ந்த குரலில் அவர் பதிலளித்தார். ''ஆமாம், நீர் உம்மைக் கேவலப்படுத்திக் கொண்டுவிட்டீர், சந்தேகமில்லை! நீர் ஒரு பிற்போக்காளர்—பிற்-போக்காளரே-தான்!''

''இளைஞனே, என்ன பேசுகிறேம் என்ற நிதானமின்றிப் பேசுகிருய்! யாருடன் பேசுகிருய் என்று நினைத்துப் பார்த்துப் பேசு!''—இப்படி ஆவேசமாகக் கூச்சலிட்டு, இவான் இலியீச் மீண்டும் தமது இருக்கையிலிருந்து துள்ளியெழுந்தார்.

''உம்முடன்தான் பேசுகிறேன்! இரண்டாவதாக நான் இளைஞனல்ல... நீர் இங்கு வந்தது தற்பெருமைக்காக, சுயவிளம்பரத்துக்காக...''

''பிசெல்தனீமவ்—என்ன இதெல்லாம்?'' என்று கூச்சலிட்டார் இவான் இலியீச்.

உடனே துள்ளியெழுந்த பிசெல்தனீமவ் அதன் பின் என்ன செய்வதென்று புலப்படாமல் திகைத்துப் போய் நின்றுவிட்டான். விருந்தினர்கள் எல்லோரும் தமது இருக்கைகளில் கல்லாய்ச் சமைந்துவிட்டதுபோல் அசையாதிருந்தனர். கலைஞனும் மாணவனுமாகச் சேர்ந்து ''சபாஷ்! சபாஷ்!'' என்று முழக்கமிட்டனர்.

பத்திரிகை எழுத்தாளர் அடக்க முடியாத ஆத்திரம் கொண்டவராகத் தொடர்ந்து கூச்சலிட்டார்:

''ஆம், உம்முடைய மனிதநேயத்தைப் பற்றி பெருமையடித்துக் கொள்வதற்காக இங்கு வந்தீர்! இங்கு நிலவிய குதூகல மனப்பாங்கைக் கெடுத்தீர். ஷம்பெய்ன் குடித்தீர்—மாதம் பத்து ரூபிள் சம்பாதிக்கும் குமாஸ்தாவால் ஷம்பெய்ன் வாங்கிவைக்க முடியுமா என்பது பற்றிக் கவலைப் படாமலே குடித்தீர். தமக்குக் கீழ்ப்பட்ட சிப்பந்திகளுடைய இளம் மனைவிகள் மீது ஒரு கண் வைத்திருக்கும் அந்த உயர் அதிகாரிகளில் நீரும் ஒருவராக இருப்பீரோ என்று சந்தேகப் படுகிறேன்! அது மட்டுமல்ல—நிலங்களுக்கு மீட்புத் தொகைகள் அளிக்கப்படுவதன் ஆதரவாளராகவே இருப்பீரென நினைக்கிறேன். ஆம், சந்தேகமில்லை, அப்படிப்பட்டவராகத் தான் இருப்பீர் நீர்!''

''பிசெல்தனீமவ்! பிசெல்தனீமவ்!'' என்று அவன் பக்கம் கைகளை நீட்டியவாறு கூவினார் இவான் இலியீச். பத்திரிகை எழுத்தாளர் கூறிய ஒவ்வொரு சொல்லும் கூர்வாளைப்போல அவர் நெஞ்சினுள் பாய்ந்தது.

''மேதகையீர், இதோ பாருங்கள்! நீங்கள் வருத்தப்பட வேண்டாம்!'' என்று வைராக்கியம் தொனிக்கும் குரலில் கத்தியவாறு பிசெல்தனீமவ் அந்தப் பத்திரிகை எழுத்தாளரிடம் பாய்ந்தோடிக் கோட்டுக் காலரைப் பிடித்து அவரைச் சாப்பாட்டு மேசையிலிருந்து இழுத்துச் சென்றான். எலும்பும் தோலுமாய் இருந்த பிசெல்தனீமவ் அவ்வளவு பலசாலியாக இருப்பான் என்று யாரும் நினைத்திருக்க மாட்டார்கள். ஆனால் அந்தப் பத்திரிகை எழுத்தாளர் குடிமயக்க முற்றிருந்தார், பிசெல்தனீமவ் நிதான நிலையில் இருந்தான். பத்திரிகை எழுத்தாளருடைய முதுகில் இரண்டு தட்டு தட்டி அறையிலிருந்து அவரை வெளியே தள்ளினான்.

''நீங்கள் எல்லோருமே அயோக்கியர்கள்!'' என்று கூச்சலிட்டார் பத்திரிகை எழுத்தாளர். ''உங்களை நான் சும்மா விடப்போவதில்லை, நாளைக்குக் கொள்ளிக்கட்டை பத்திரிகையில் தோலை உறித்துவிடுகிறேன்!''

எல்லோரும் எழுந்துவிட்டனர்.

பிசெல்தனீமவும் அவனுடைய தாயும் விருந்தினர்களில் சிலரும் ஜெனரலைச் சூழ்ந்து நின்று கொண்டு அவரைத்

தேற்றினர்: ''மேதகையீர்! மேதகையீர்! நீங்கள் இதைப் பொருட்படுத்தக் கூடாது! மேதகையீர்!''

''இல்லை, இல்லை!'' என்று புலம்பினர் ஜெனரல். ''எனக்கு மனம் ஒடிந்துவிட்டது... இங்கு நான் வந்தது எதற்காக?.. அன்பு வளர வேண்டுமென்று... ஆசி கூறலாமென்று வந்தேன். அதற்கு இதுவா வெகுமதி?''

அவர் உணர்விழந்தவரைப் போல அப்படியே தமது நாற்காலியில் சாய்ந்து விழுந்தார். பிறகு கைகளை மேசையின் மேல் வைத்து அவற்றின் மீது தலையைச் சாய்த்துக் கொள்ளப் போனவர், அங்கே தட்டில் இருந்த 'பிளாமான்ஜே' கூழுக்குள் கவிழ்த்துக் கொண்டுவிட்டார். எல்லோருக்கும் ஏற்பட்ட அதிர்ச்சியையும் பரபரப்பையும் சொல்லி முடியாது. பிறகு ஒரு நிமிடத்துக்கெல்லாம் புறப்பட்டுச் சென்றுவிடும் உத்தேசத்துடன் அங்கிருந்து எழுந்தார், ஆனால் ஆடியவாறு அடியெடுத்து வைக்கையில் நாற்காலியின் காலில் இடறிக் கொண்டு பொத்தென்று தரையிலே விழுந்து குறட்டைவிட ஆரம்பித்துவிட்டார்...

குடிக்காதவர்கள் அளவுமீறிக் குடிக்க நேரும்போது இப்படி ஆவதுண்டு. கடைசித் தருணம் வரை இவர்கள் உணர்விழப்பதில்லை, பிறகு வெட்டி வீழ்த்தப்பட்ட மரம் போல் திடுமெனச் சாய்ந்து விடுகிறார்கள். இவான் இலியீச் பிரக்ஞை அற்றவராகத் தரையிலே கிடந்தார். பிசெல்தனீமவ் தன் தலை முடியைப் பிடித்திழுத்தவாறு சிலை போல நின்று கொண்டிருந்தான். விருந்தினர்கள் நடைபெற்ற நிகழ்ச்சி பற்றி பேசிக்கொண்டு அவசரமாகப் புறப்பட்டுச் சென்றனர். அப்பொழுது நேரம் அதிகாலை ஏறத்தாழ மூன்று மணி.

* * *

பிசெல்தனீமவின் தற்போதைய நிலை மிகவும் வருந்தத் தக்கதே என்றாலும், உண்மையில் அவனுடைய சூழ்நிலை யாரும் எதிர்பார்க்கக் கூடியதைக் காட்டிலும் மிகப் பல மடங்கு மோசமாகவே இருந்தது. ஆகவே இப்பொழுது இவான் இலியீச் தரையில் விழுந்து கிடக்க, பக்கத்தில் பிசெல்தனீமவ் ஒன்றும் புரியாமல் தன் தலைமுடியைப் பிடித்திழுத்துக் கொண்டு செயலற்று நிற்கும் இக்கட்டத்தில் நமது கதையைச் சற்று நிறுத்திக் கொண்டு பர்ஃபீரி பெத்ரோவிச்

பிசெல்தனீமவைப் பற்றி விளக்கம் தருவது பொருத்தமாயிருக்கும்.

இந்தத் திருமணத்துக்கு ஒரு மாதத்துக்கு முன்பெல்லாம் பிசெல்தனீமவ் திக்கற்றவனுகச் செத்துக்கொண்டிருந்தான். மாகாணத்திலிருந்து வந்தவன் அவன். அங்கே ஏதோ வேலையில் இருந்த அவனுடைய தந்தையின் மீது வழக்கு தொடரப்பட்டிருந்தது; விசாரணை நடைபெற்று வந்த போது அவர் இறந்து விட்டார். பீட்டர்ஸ்பர்கில் ஓராண்டாகப் பிசெல்தனீமவ் திக்கற்றவனுக இருந்து வந்தான். திருமணத்துக்கு ஐந்து மாதங்களுக்கு முன்பு பத்து ரூபிள் மாதச் சம்பளத்தில் ஒரு வேலை கிடைத்ததும் உடலிலும் உள்ளத்திலும் அவனுக்குப் புதுத் தெம்பு பிறந்தது போல் இருந்தது, ஆனுல் சீக்கிரமே நிலைமைகள் அவனை மீண்டும் தரையிலே கிடத்திவிட்டன. இப்பொழுது பிசெல்தனீமவ்கள் இரண்டே இரண்டு பேர் மட்டும்தான் எஞ்சியிருந்தனர்—அவனும் அவன் தாயும் மட்டும்தான். கணவர் இறந்ததும் இந்தத் தாயும் மாகாணத்தை விட்டுப் புறப்பட்டு வந்துவிட்டார். தாயும் மகனுமாகக் கடுங் குளிரின் துன்பதுயரங்களைப் பகிர்ந்து கொண்டனர், சொல்லும் தரமற்ற பலவற்றையும் புசித்துக் காலத்தை ஓட்டினர். சில நாட்களில் பிசெல்தனீமவ் கையில் ஒரு குவளையுடன் ஃபன்தான்கா ஆற்றுக்குச் சென்று தன் தாகத்தைத் தணித்துக் கொண்டதும் உண்டு. முடிவில் அவனுக்கு வேலை கிடைத்ததும் அவனும் அவன் தாயும் தமக்கு ஓர் ''அறைமூலையை'' வாடகைக்கு எடுத்துக் கொண்டனர். தாய் அக்கம் பக்கத்தாரின் துணிகளைச் சலவை செய்து கொடுத்தாள்; அவன் நான்கு மாதங்களாகப் பணம் சேர்த்துத் தனக்கு பூட்சும் மேல்கோட்டும் வாங்கிக் கொண்டான். அலுவலகத்தில் அவன் சகித்துக் கொள்ள வேண்டியிருந்த துயரங்களுக்கு அளவே இல்லை! அவன் குளித்து எவ்வளவு காலமாயிருக்கும் என்று அவனுடைய மேலதிகாரி அவனிடம் வந்து விசாரிப்பது வழக்கம். அவனுடைய அலுவலகக் கோட்டுக் காலருக்கு அடியில் மூட்டைப் பூச்சிகள் ஏராளமாகக் குடிகொண்டிருப்பதாகப் பேச்சு அடிபட்டது. ஆனுல் பிசெல்தனீமவிடம் திடச் சித்தம் நிறைய இருந்தது. பார்ப்பதற்குப் பயந்த சுபாவமுடையவனுகச் சாதுவாய் இருந்தான்; அவனுடைய கல்வி ஞானம் மிக மிகச் சொற்பம்; அவன் எந்த

அபிப்பிராயமும் தெரிவித்து யாரும் கேட்டிருக்க மாட்டார்கள். அவன் சிந்தித்தானு, திட்டங்கள் வகுத்துக் கொண்டானு, அவனுக்கு ஆசைக் கனவுகள் எவையேனும் இருந்தனவா என்பது குறித்து நான் திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை. இவற்றுக்குப் பதில், தனது நிலையிலிருந்து தன்னை விடுவித்து முடிவில் மெய்யாகவே நல்லபடியாக வாழ்க்கையைத் துவக்க வேண்டுமென்று அவனை அறியாமலே அவனுள் அசைக்க முடியாத வைராக்கியம் உருவாகி விட்டது. அவனிடம் எறும்புக்கு இருப்பதையொத்த விடாப்பிடியான உறுதி இருந்து வந்தது—எறும்புப் புற்றை அழித்துப் பாருங்கள், உடனே அவை திரும்பவும் கட்டிவிடும்; திரும்பவும் அழியுங்கள், திரும்பவும் கட்டத் தொடங்கி விடும்; முடிவின்றி இப்படியே தான் நடைபெறும். அவன் விடாமுயற்சி உடையவன், வீட்டிலே கவனம் செலுத்துகிறவன், தனக்கு வழி தேடிக்கொண்டு விடுவான், தனக்கொரு இல்லத்தை அமைத்துக்கொண்டு விடுவான், கொஞ்சம் பணமும் சேர்த்தாலும் சேர்த்து. விடுவான் என்று அவனைப் பார்த்ததுமே கூறி விடுவீர்கள். உலகில் அவன் தாயைத் தவிர அவனை நேசித்தவர் வேறு யாருமே இல்லை. அவ்வன்னை அவனைத் தனது கண்ணின் கருமணியாய்க் கருதி வந்தாள். அவர் உறுதி மிக்கவர், அயராது பாடுபட்டு வந்தார், அதே போகில் மிகவும் தங்கமான குணமுடையவர். ஓய்வு பெற்ற பட்ட ஆலோசகர் மிலெக்கப்பித்தாயெவை அவர்கள் சந்திக்க நேர்ந்திராவிடில், ஏதேனும் நடைபெறும் காத்திருப்போமென மேலும் ஐந்து ஆறு ஆண்டுகளுக்குத் தமது ''அறைமூலையிலே'' தொடர்ந்து வாழ்ந்து வந்திருப்பார்கள். மிலெக்கப்பித்தாயெவ் முன்னுள் கருவூலக் குமாஸ்தா. அவர்களுடைய மாகாணத்தில் முன்பு வேலை செய்து வந்தவர். அண்மையில் அவர் தமது குடும்பத்தோடு பீட்டர்ஸ்பர்குக்கு வந்து குடியேறியிருந்தார். அவருக்குப் பிசெல்தனீமவைத் தெரியும். முன்பு ஒரு காலத்தில் பிசெல்தனீமவின் தந்தை அவருக்கு உதவியிருந்தார். அதிகமில்லை என்ருலும் ஏதோ கொஞ்சம் பணம் அவரிடம் இருந்தது. உண்மையில் எவ்வளவு இருந்ததென்று யாருக்கும்—அவர் மனைவிக்கோ, மூத்த மகளுக்கோ, உறவினர்களுக்கோ—தெரியாது. அவருக்கு இரு புதல்விகள். முரட்டுக் குணமுடைய கிழவர் என்பதுடன், குடிகாரரும், வீட்டில் எல்லோரை

யும் சிரமப் படுத்தி வைக்கும் கொடுங்கோலரும், போதாத தற்கு உடல் நலமற்றவரும் ஆவார், மகள்களில் ஒருத்தி யைப் பிசெல்தனீமவுக்குக் கல்யாணம் செய்து வைக்கலா மென்று அவருக்கு ஓர் எண்ணம் உதித்தது. ''அவனை எனக் குத் தெரியும், அவன் தந்தை நல்லவர், ஆகவே மகனும் நல்லவனாகவே இருப்பான்.'' தாம் நினைத்ததை உடனே செய்துவிடுகிறவர் அவர். விபரீத வகைப்பட்ட கொடுங் கோலராக இருந்து வந்தார். நோயால் கால்கள் முடங்கிப் போகவே பெரும் பகுதி நேரத்தைச் சாய்வு நாற்காலி யிலே கழித்து வந்தார், ஆயினும் இந்த நிலைமை அவரைக் குடிக்காதபடி தடுக்கவில்லை. அதிகமாகக் குடித்துவிட்டு நாட்கணக்காக எல்லோரையும் ஏசிக் கொண்டிருப்பார். கொடுமனம் கொண்ட அவர் ஓயாமல் இம்சை செய்து மகிழ்வதற்காகத் தம் பக்கத்தில் யாராவது இருக்க வேண்டு மென்று விரும்பினர். இதன் பொருட்டு தூரத்து உறவினர் கள் சிலரைத் தம் வீட்டில் வைத்திருந்தார். ஓயாது முன கும் நோயாளிச் சகோதரி ஒருத்தியும் அவர் மனைவியின் இரு சகோதரிகளும்—இவர்களும் முசுடுகள்தான்—ஒரு விபத் தில் விலாவெலும்புகளில் ஒன்று முறிந்து போன வயதான ஒரு அத்தையும் ஆகிய தூரத்து உறவினர்களுடன்கூட, ஜெர்மன் பூர்வீகத்தவளான ஒரு பெண்ணையும், **ஆயிரத்து ஓர் இரவுகளி**லிருந்து கதைகள் சொல்வதில் தேர்ந்த திறமை யுடையவள் என்பதற்காக வேண்டி அழைத்து வந்து தம் வீட்டில் தம்மை அண்டிப் பிழைக்கும் நிலையில் வைத்திருந் தார். அவருடைய தயவில் வாழ்ந்து வந்த இந்தத் துர் பாக்கியசாலிகளை ஓயாமல் திட்டுவதும் துன்புறுத்துவதும் தான் மனத்துக்கு இனிய அவரது பிரதான பொழுது போக்கு. பிறவியிலேயே பல் வலியுடன் பிறந்தவளாகத் தோன்றிய அவர் மனைவியும் அடங்கலாய் இவர்களில் யா ருமே அவரை எதிர்த்து ஒரு வார்த்தை பேசத் துணியாத வர்கள். ஆயினும் அவர் எந்நேரமும் இவர்களைத் திட்டிக் கொண்டிருந்தார். இவர்களிடையே சண்டை மூட்டிவிட்டு வேடிக்கை பார்த்தார்; இல்லாததையும் பொல்லாததை யும் கண்டுபிடித்தும் பரப்பியும் வந்தார்; அவர்கள் ஒரு வரோடொருவர் முட்டி மோதிக் கொள்வதைக் கண்டு மட் டற்ற மகிழ்ச்சியடைந்தார். அவருடைய மூத்த மகள் தனது கணவரான ஆபீசருடன் கொடிய வறுமையில் பத்து

ஆண்டுகள் வாழ்ந்துவிட்டு விதவையாகி நோயாளிக் குழந்தைகள் மூவருடன் அவரிடம் திரும்பியபோது அளவிலா ஆனந்தமடைந்தார். இந்தக் குழந்தைகளை அவருக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லைதான், ஆயினும் தினமும் அவர் சோதனைகள் நடத்தி மகிழ இக்குழந்தைகள் புதிய வாய்ப்புகளை அளிக்கவே கிழவர் பரம திருப்தியடையலானார். பீட்டர்ஸ்பர்க் புறத்தில் அமைந்த அந்த மர வீட்டில் கடுப்பும் குரோதமும் கொண்ட இந்தப் பெண்களும் நோயாளிக் குழந்தைகளும் தம்மை வாட்டி வதைத்த கொடுங்கோலருடன் ஒண்டியடித்துக் கொண்டு வாழ்ந்து வந்தனர். கிழவர் ஒரு பெரிய கருமி, வோட்காவுக்காக எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்த அவர் ஏனைய எதற்கும் ஒவ்வொரு தரமும் ஒருசில கோப்பெக்குகளுக்கு மேல் தர மறுத்துவிட்டார். ஆகவே இந்தப் பெண்களும் குழந்தைகளும் பட்டினி கிடக்க வேண்டியிருந்தது. அதோடு இவர்கள் அதிகம் தூங்கவும் முடியவில்லை, ஏனெனில் கிழவருக்கு இராத் தூக்கம் இல்லையாதலால் இவர்கள் அருகிலிருந்து தம்மை மகிழ்விக்க வேண்டுமென்று விரும்பினார். சுருங்கக் கூறினால் இவர்கள் தமது விதியை நொந்து கொண்டு படு மோசமான வாழ்க்கை நடத்தி வந்தனர். இந்தக் காலத்தில் தான் மிலெக்கப்பித்தாயெவின் கண்களில் பிசெல்தனீமவ் படலானான். அவனுடைய நீண்ட மூக்கும் சாதுவான தோற்றமும் அவரைக் கவர்ந்துவிட்டன. பிணித் தோற்ற முடையவளாகக் கவர்ச்சியற்றிருந்த இளைய மகளுக்கு அப்பொழுது பதினேழு வயதாகியிருந்தது. ஒரு காலத்தில் ஒரு ஜெர்மன் பள்ளிக்குப் போய் வந்தாள் என்றாலும் அரிச்சுவடிக்கு மேல் அங்கு அவள் அதிகம் கற்றுக் கொண்டுவிடவில்லை. அதன் பின் அவள் தனது குடிகாரத் தந்தையின் கவைக்கோலின் நிழலில், ஒருவருக்கு எதிராக ஒருவர் உளவு வேலை செய்தும் கோள் சொல்லியும் கதைகட்டியும் வந்த அந்தக் குடும்பத்தின் நரக வாழ்வில் வளர்ந்து நோஞ்சான் ஆகியவள். அவளுக்கு சினேகிதிகள் யாருமில்லை, சாமர்த்தியமும் இல்லை. நீண்ட காலமாகத் திருமணம் செய்துகொண்டுவிட வேண்டுமென்று ஏங்கிக் கொண்டிருந்தாள். அயலார்கள் எதிரே மிகவும் சாது போல நடந்து கொண்டாள் என்றாலும் வீட்டில் தாயுடன் இருக்கையிலும் தம்மை அண்டிப் பிழைக்கும் பட்டாளத்தினிடையே இருக்கையிலும் அழும்புக்காரியாக

வும் துறப்பணத்தைப் போலக் குடைகிறவளாகவும் இருந்தாள். தன் அக்காள் குழந்தைகளைக் கிள்ளிவிடுவதில் அவளுக்கு ஒரு தனி மகிழ்ச்சி. அவர்களை அடித்தும், அவர்கள் சர்க்கரையோ ரொட்டியோ திருடும்போது காட்டிக் கொடுத்தும் வந்தாள். ஆகவே அவளுக்கும் அவள் அக்காளுக்கும் இடையே தீராப் பகைமை இருந்தது. கிழவர் அவளைப் பிசெல்தனீமவுக்கு மணம் புரிந்து கொடுக்கத் தாமாகவே முன்வந்தார். ஏழையே என்றாலும் பிசெல்தனீமவ் இது குறித்து ஆலோசிக்கத் தனக்குச் சிறிது அவகாசம் வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். அவனும் அவன் தாயும் இது பற்றி நெடுநேரம் விவாதித்தனர். ஆனால் பெண்ணுடன் வீடும் கிடைக்கும்; மாடியில்லாதது, மரத்தாலானது, மிகப் பழையது என்றாலுங்கூட வீடுதான் என்பதை மறுக்க முடியாது. அதோடு பெண்ணுக்கு நானூறு ரூபிள் பணம் வேறு தரப்படும்—நெடுங்காலம் பாடுபட்டாலன்றிச் சேகரிக்க முடியாத தொகை. ''நான் ஏன் ஓர் ஆடவனைக் கூப்பிட்டு என் வீட்டில் வந்திருக்கச் சொல்கிறேன் தெரியுமா?'' என்று கத்தினார் அந்தக் குடிகாரக் கொடுங்கோலர். ''முதலாவதாக, இந்த வீடு நிறையப் பெண்களாக இருக்கிறார்கள், என்னால் சகிக்க முடியவில்லை. பிசெல்தனீமவ் எனக்கு ஏற்றபடி தாளம் போடுவான், ஏனெனில் நான்தான் அவனுடைய இரட்சகன். இரண்டாவதாக, இவன் வருவது உங்களுக்குப் பிடிக்கவில்லை, தவியாய்த் தவிக்கிறீர்கள், அதனால்தான் இவனை இங்கு வந்துவிடும்படிச் சொல்கிறேன். உங்களைப் படுத்தி வைக்க வேண்டுமென்றே இதைச் செய்கிறேன். நான் என்ன நினைக்கிறேனோ அதையேதான் செய்வேன்! பார்ஃபீரி, இதைக் கேள் நீ! இவள் உன்னுடைய மனைவியானதும் நீ இவளை நையப்புடைக்க வேண்டும். பிறக்கும்போதே இவளை ஏழு பிசாசுகள் பிடித்துக்கொண்டு விட்டன; இவற்றை நீ அடித்து விரட்டியாக வேண்டும்; உனக்கு நான் ஒரு கவைக்கோல் வாங்கித் தருகிறேன்!..''

பிசெல்தனீமவ் பதில் சொல்லாமல் மௌனமாகவே இருந்தான், ஆயினும் ஏற்கெனவே அவன் தீர்மானம் செய்து கொண்டுவிட்டான். திருமணத்துக்கு முன்பு அவனும் அவன் தாயும் வீட்டுக்குள் அழைத்துச் செல்லப்பட்டனர். குளித்துவிட்டு வந்ததும் அவர்களுக்கு ஆடைகளும் பாத அணிகளும் தரப்பட்டன. பிறகு திருமணச் செலவுகளுக்காக அவர்

களுக்குப் பணம் தரப்பட்டது. கிழவர் இவர்களை ஆதரித்ததற்கு ஏனையோர் எல்லோரும் இவர்களை வெறுத்ததுதான் காரணமாக இருந்திருக்க வேண்டும். பிசெல்தனீமவின் தாய் மீது கிழவருக்கு மெய்யாகவே அபிமானம் ஏற்பட்டுவிட்டது, அவர் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டு இவ்வன்னையைத் துன்புறுத்தாமல் இருந்தார். ஆனால் பிசெல்தனீமவை, திருமணத்துக்கு ஒரு வாரம் முன்னதாக, அவர் கஸாக்கு நடனமாடும்படி உத்தரவிட்டார். அவன் ஆடியதும் ''அவ்வளவு போதும், இங்கு உனக்குரிய ஸ்தானத்தை நீ உணர்ந்து நடக்கிறாயா என்று தெரிந்து கொள்ளவே உன்னை ஆடச் சொன்னேன்'' என்றார். திருமணச் செலவுகளுக்காக அவர் மிகச் சொற்பத்தொகையே கொடுத்திருந்தார். ஆனால் தமது உற்றார் உறவினர்கள் எல்லோருக்கும் அழைப்பு அனுப்பிவிட்டார். மாப்பிள்ளை கொள்ளிக்கட்டை பத்திரிகை எழுத்தாளரையும் சிறப்பு விருந்தினராக அக்கீம் பெத்ரோவிச்சையும் மட்டுமே அழைத்திருந்தான். தான் மணக்கப் போகும் பெண் தன்னை வெறுத்தாள், தனக்குப் பதிலாக அந்த இராணுவ ஆபீசரையே மணக்க விரும்பினாள் என்பது பிசெல்தனீமவுக்குத் தெரிந்ததுதான். ஆயினும் அவன் யாவற்றையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டான், அவனும் அவன் தாயும் சேர்ந்து அப்படித் தீர்மானம் செய்திருந்தனர். திருமண நாளன்று பகற் பொழுது முழுவதும் அந்தியிலும் கிழவர் குடித்துவிட்டு வாயில் வந்தபடி கத்திக் கொண்டிருந்தார். வீட்டில் எல்லோரும் பின்கட்டு அறைகளில் மூச்சுத் திணறும்படி அடைந்து கிடந்தனர். முன் பக்கத்து அறைகள் நடனத்துக்காகவும் சாப்பாட்டுக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தன. முடிவில் இரவு பதினொரு மணிக்குக் கிழவர் குடிபோதையில் மூழ்கி உணர்விழந்த நிலையில் படுக்கச் சென்றார். மணப்பெண்ணின் தாய், அன்று பகல் பொழுது முழுதும் பிசெல்தனீமவின் தாய்மீது விசேஷக் கடுப்பு காட்டி வந்தவள், இதன் பிறகு மனம் இளகி நடனத்திலும் சாப்பாட்டு விருந்திலும் கலந்து கொள்வதென்று தீர்மானித்தாள். ஆனால் இவான் இலியீச்சின் வருகை யாவற்றையும் கெடுத்துவிட்டது. மிலெக்கப்பித்தாயெவின் மனைவி திரும்பவும் மனம் கோணிப் போய் ஆத்திரப்பட்டுக் கொண்டாள். மெய்யான ஜெனரல் ஒருவர் அழைக்கப்பட்டிருப்பதாக யாரும் தன்னிடம் சொல்லவில்லையே என்று அவள்

எல்லோரையும் ஏசினுள். அழைக்காமலே அவர் வந்துவிட்டார் என்று எல்லோரும் எவ்வளவோ சொல்லியும் அவள் அதை நம்ப மறுத்துவிட்டாள். ஷம்பெய்ன் வாங்கி வர வேண்டியிருந்தது. பிசெல்தனீமவின் தாயிடம் ஒரேயொரு ரூபிள்தான் இருந்தது, அவனிடம் ஒரு கோப்பெக்கூட இல்லை. ஆகவே பிசெல்தனீமவ் தன் மாமியார் காலில் விழுந்து கெஞ்ச வேண்டியதாயிற்று. முதலில் ஒரு ஷம்பெய்ன் புட்டிக்காகவும் பிறகு இரண்டாவது புட்டிக்காகவும் பணம் தரும்படி அவளிடம் மன்ருடினுன். தனது மேலதிகாரியுடன் தனக்கு இருக்க வேண்டிய உறவுகள் குறித்தும் அலுவலகத்தில் தன்னுடைய எதிர்காலம் குறித்தும் நினைத்துப் பார்க்குமாறு, மனம் இறங்குமாறு அவளை வேண்டினுன். இறுதியில் அவள் பிசெல்தனீமவுக்குப் பணம் கொடுத்தாள்; ஆனுல் அதன்முன் அவனை அப்படி அவமானப் படுத்திப் பதறும்படிச் செய்துவிட்டாள்; அவன் பொறுக்க மாட்டாதவனுகப் பன்முறை மணமக்களது படுக்கை தயாரித்துப் போடப்பட்டிருந்த சிறு அறைக்குள் ஓடிச் சென்று மௌனமாகத் தலைமுடிகளைப் பிடித்திழுத்துக் கொண்டான்; சுவர்க்கபுரியின் இன்பங்களைச் சுவைப்பதற்குரிய அந்தப் படுக்கையிலே முகத்தைப் புதைத்துக் கொண்டான்; ஆத்திரம் தாங்க முடியாமல் அங்கமெல்லாம் துடித்தான். ஆம், இவான் இலியீச்சுக்கு இதெல்லாம் தெரியாது, அன்று இரவு தாம் குடித்த இரு ஷம்பெய்ன் புட்டிகளும் எவ்வளவு கடுமையான விலை கொடுத்து வாங்கப்பட்டவை என்பதை அவர் அறியார்! இவை யாவற்றுக்கும் பிற்பாடு இப்படி ஆனதும் பிசெல்தனீமவுக்கு ஏற்பட்ட உதறலையும் துயரையும் நம்பிக்கைக்கு இடமில்லா ஏக்கத்தையும் சொல்லவும் வேண்டுமா? மீண்டும் அவன் எதிரே ஓயாத தொல்லைதான் காத்திருந்தது. எடுத்ததற்கெல்லாம் சிணுங்கும் மணப் பெண்ணின் முனகலையும் அழுகையையும் அவளுடைய அசட்டு உறவினர்களுடைய வசவுகளையும்தான் இரவு முழுவதும் அவன் எதிர்நோக்க வேண்டியிருக்கும். ஏற்கெனவே அவனுக்குத் தலைவலி தாங்க முடியவில்லை, சோகம் நிறைந்த காரிருள் அவன் பார்வையை மறைத்து வந்தது. உடனே உதவி தேவைப்படும் நிலையில் இதோ இங்கே இவான் இலியீச் தரையிலே கிடக்கிருர். அதிகாலை மூன்று மணியாகிவிட்ட இந்த வேளையில் டாக்டரை அழைத்து வர வேண்டும்; அல்லது

அவரை வீட்டுக்கு அனுப்பி வைக்க கோச் வண்டியைத் தேடிப்பிடித்தாக வேண்டும்; அது கோச் வண்டியாக இருக்க வேண்டும், ஏனெனில் இத்தகைய ஒரு முக்கிய ஸ்தரை அவரது தற்போதைய நிலையில் சாதாரண ஜட்கா வண்டியில் வீட்டுக்கு அனுப்பி வைக்க முடியாது. கோச் வண்டியை ஏற்பாடு செய்யப் பணத்துக்கு எங்கே போவது? மணப் பெண்ணின் தாய், விருந்தின் போது ஜெனரல் தன்னுடன் ஒரு வார்த்தை பேசவில்லை, தன் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை என்று கடுங் கோபம் கொண்டிருந்தாள், தன்னிடம் இனி ஒரு கோப்பெக் காசுகூடக் கிடையாதென்று சொல்லிவிட்டாள். மெய்யாகவே அவளிடம் இல்லாமலும் இருந்திருக்கலாம். எங்கே போவது பணத்துக்கு? என்ன செய்யலாம்? ஆம், அவன் தலைமுடியைப் பிடித்து இழுத்துக் கொள்வதற்குப் போதிய காரணம் இருந்தது!

* * *

இதற்கிடையில் இவான் இலியீச்சைத் தூக்கிச் சென்று சாப்பாட்டு அறையிலிருந்த சிறிய தோல் மஞ்சத்தின்மீது படுக்க வைத்தனர். மேசைகள்மீது இருந்தவை அகற்றப் பட்டு மேசைகள் தனித்தனியே பிரித்து எடுத்துச் செல்லப் பட்டன. அப்பொழுது பிசெல்தனீமவ் யாரிடமாவது கொஞ்சம் கடன் வாங்கலாமென்று அங்குமிங்கும் ஓடினான். வேலைக்காரர்களிடம்கூடக் கேட்டுப் பார்த்தான், ஆனால் யாரிடத்தும் பணம் இல்லை. பிறகு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அக்கீம் பெத்ரோவிச்சை அணுகினான். ஏனையோருடன் சென்றுவிடாமல் அவர் தங்கியிருந்தார். அவர் நல்ல மனமுடையவர்தான் என்றாலும் பணமென்றதும் திகைத்துப் போய்த்தடுமாறினார், பீதியடைந்துவிட்டார் என்றே சொல்லலாம். ஒன்றும் விளங்காதவாறு ஏதோ உளறுவதைத் தவிர அவரால் அதிகம் பேச முடியவில்லை.

''இன்னொரு சமயம் மகிழ்ச்சியுடன் தருவேன்...'' என்று முனகினார். ''ஆனால் இப்பொழுது—என்னை மன்னிக்க வேண்டும்... ஆம், மன்னிக்க வேண்டும்...''

அவர் உடனே தொப்பியை எடுத்துக் கொண்டு அவசரமாக வீட்டை விட்டு வெளியே சென்றார். கனப்புத்தகத்தைப் பற்றிப் பேசினானே அன்பு உள்ளம் கொண்ட அந்த

இளைஞன் ஒருவன் மட்டும்தான் ஏதோ ஓரளவுக்கு உதவ முன்வந்தான், அவனாலும் அதிகமாக ஒன்றும் செய்துவிட முடியவில்லை. பிசெல்தனீமவுக்கு நேர்ந்த இன்னல்களைக் கண்டு இரக்கப்பட்ட அவன் ஏனையோருடன் சென்றுவிடாமல் தங்கியிருந்தான். முடிவில் பிசெல்தனீமவும் அவன் தாயும் இந்த இளைஞனுமாகக் கலந்தாலோசித்தனர், டாக்டருக்குச் சொல்லியனுப்புவதைக் காட்டிலும் கோச் வண்டி ஒன்றைக் கொண்டு வந்து ஜெனரலை அவருடைய வீட்டுக்கு எடுத்துச் செல்வதுதான் நல்லதென்று முடிவு செய்தனர். வண்டி வந்து சேரும் வரை, உடனடியாக வீட்டு வைத்திய முறைகள் சிலவற்றை—குளிர்ந்த நீரைக் கொண்டு நெற்றியையும் தலையையும் கழுவுதல், தலையில் ஐஸ் வைத்து ஒத்துதல் முதலான முறைகளை—கையாண்டு பார்ப்பதென்று தீர்மானித்தனர். பிசெல்தனீமவின் தாய் இவற்றைச் செய்வதில் முனைந்தாள். இளைஞன் கோச் வண்டியைப் பிடித்து வருவதற்காக ஓடினான். அந்த நேரத்தில் பீட்டர்ஸ்பர்க் புறத்தில் ஐட்கா வண்டிகூடக் கிடைக்காததால் அவன் வெகு தொலைவில் இருந்த வண்டிக்காரர்களது சத்திரத்துக்குச் சென்று அவர்களை எழுப்பினான். இரவில் அந்த நேரத்தில் வண்டி கொண்டுவர ஐந்து ரூபிள் கொடுத்தாலும் போதாதென்று அவர்கள் பேரம் பேசினர். முடிவில் அவர்களில் ஒருவன் மூன்று ரூபிளுக்கு வர இசைந்தான். விடியற்காலை நான்கு மணிக்குச் சற்று முன்னதாக வாடகை வண்டியுடன் இளைஞன் பிசெல்தனீமவின் வீட்டுக்கு வந்து சேர்ந்தான், ஆனால் அதற்கு நெடு நேரம் முன்னதாகவே திட்டங்கள் மாற்றப் பட்டுவிட்டன. இன்னமும் பிரக்ஞையின்றி இருந்த இவான் இலியீச் புரண்டு கொண்டும் பரிதாபமாக முனகிக்கொண்டும் அவஸ்தைப் பட்டதைக் கண்டு அவர்கள் இந்த நிலையில் அவரை எடுத்துச் செல்வது சரியல்ல, அபாயகரமாகவுங்கூட ஆகிவிடலாம் என்று அஞ்சினர். ''அதனால் என்ன நேருமோ, யாருக்குத் தெரியும்?'' என்று முற்றிலும் மனம் ஒடிந்து போய்த் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான் பிசெல்தனீமவ். மற்றொரு பிரச்சினை எழுந்தது: அவரைத் தம் வீட்டிலேயே வைத்துக் கொள்வதென்றால், படுக்கைக்கு என்ன செய்வது? அந்த வீட்டில் இரண்டே இரண்டு கட்டில்கள் தான் இருந்தன—ஒன்று மிலெக்கப்பித்தாயெவும் அவர் மனைவியும் படுத்துக் கொண்ட மிகப்

பெரிய மஞ்சம்; மற்ருென்று திருமணத் தம்பதிகளுக்காகப் புதிதாய் வாங்கப்பட்ட, வால்னட் மரத்தாலானது போன்ற தோற்றமுடைய இரட்டைக் கட்டில். மற்ற எல்லோரும் தரையிலே தான் படுத்துக் கொண்டனர், சிறகடைத்த மெத்தைகளில் ஒண்டியடித்துக் கொண்டு படுத்துறங்கினர். அந்த மெத்தைகள் அலங்கோலமான நிலையில் நாற்றம் வீசும்படி அழுக்கேறியிருந்தன. அவையுங்கூட பற்ருக் குறையாகவே இருந்தன. ஆகவே ஜெனரலை எங்கே படுக்க வைப்பது? சிறகடைத்த மெத்தை ஒன்றை எப்படியோ தேடிக் கொண்டு வந்தாலுங்கூட—தூங்கிக் கொண்டிருப் போருக்கு அடியிலிருந்து இழுத்து எடுத்து வந்தாலுங்கூட—அதை எங்கே, எதன்மீது போடுவது? வசிப்பறைதான் சிறந்த இடமாகும், குடும்பத்தாரின் உறைவிடங்களிலிருந்து இது தனித்துச் சற்று தொலைவில் இருந்ததோடு தனி வாயிலையும் பெற்றிருந்தது. ஆனல் மெத்தையை எதன்மீது போடுவது? நாற்காலிகளை இழுத்து வைத்து அவற்றின்மீது போடுவது சரியல்ல. சனி, ஞாயிறு விடுமுறையின்போது பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு அல்லவா நாற்காலிகளில் படுக்கை தயாரித்துக் கொடுப்பது வழக்கம்! இவான் இலியீச்சைப் போன்ற ஒருவருக்கு இப்படிப் படுக்கை தயாரித்தால் அது கௌரவக் குறைவாகக் கருதப் படும். காலையில் அவர் விழித்துக் கொண்டதும் நாற்காலிகள்மீது படுத்திருந்தோம் என்பதைக் காணும் போது என்ன சொல் வார்? பிசெல்தனீமவ் இந்த ஆலோசனைக்குச் செவி சாய்க்கக் கூடாது. ஒரேயொரு வழிதான் இருக்கிறது—மணமக்களது படுக்கையிலே அவரைப் படுக்க வைப்பது ஒன்றுதான் வழி. ஏற்கெனவே நாம் கூறியது போல மணமக் களுக்கான இந்தக் கட்டில் சாப்பாட்டு அறையை ஒட்டி ஞற்போல ஒரு சிறு அறையில் இருந்தது. புதிதாக வாங் கப்பட்ட இரட்டைமெத்தை இதன்மீது போடப்பட்டிருந் தது. இதுவரை யாரும் இதில் படுக்கவில்லை. சுத்தமான விரிப்புகளும், மடிப்பு விளிம்புகளையுடைய மஸ்லின் உறை களிட்ட நான்கு மென்சிவப்புத் தலையணைகளும் இருந்தன. மிருதுவான வாத்து இறகு அடைத்த மெத்தைப் போர்வை மென்சிவப்பு சாட்டின் துணியில் கோலத் தையல்களிட்டு அழகாகத் தைக்கப் பட்டிருந்தது. மஸ்லின் திரைச்சீலை ஒரு கில்ட் வளையத்தினுள் கோத்து மாட்டப்பட்டிருந்தது.

மொத்தத்தில் சிறப்பாகவே இருந்தது. அனேகமாய் எல்லா விருந்தினர்களும் இந்தப் படுக்கையறையினுள் வந்து பார்வையிட்டனர், எல்லோரும் வாயாரப் புகழ்ந்துவிட்டுச் சென்றனர். மணப்பெண்ணுக்குப் பிசெல்தனீமவைக் கொஞ் சமும் பிடிக்கவில்லை என்ருலும், யாருக்கும் தெரியாமல் இந்தப் படுக்கையை இன்னொரு தரம் பார்த்துவிட்டு வர வேண்டுமென்று பல தடவை அன்று மாலை அவள் இவ்வறைக் குள் வந்தாள். மணப்பெண்ணுகிய தனக்குரிய இப்படிப் பட்ட படுக்கையில், காலரா போன்றதோர் உபாதையால் பீடிக்கப்பட்ட அந்த விருந்தினரைப் படுக்க வைக்கப் போகி ருர்கள் என்பது தெரிந்ததும் அவளுக்கு வந்த ஆத்திரத் தையும் ஆவேசத்தையும் கூற வேண்டுமா? மணப்பெண் ணின் தாய் அவள் சார்பில் போராட முற்பட்டு வாயில் வந்தபடி ஏசினுள், மறுநாள் தன் கணவரிடம் புகார் செய்யப் போவதாக மிரட்டினுள். ஆனுல் பிசெல்தனீமவ் எதற்கும் மசியவில்லை, தான் சொல்கிறபடியே நடை பெற வேண்டு மென்று கூறிவிட்டான். இவான் இலியீச்சைத் தூக்கி வந்து மணமக்களது படுக்கையிலே படுக்க வைத்தனர். மணமக் களுக்காக நாற்காலிகளின்மீது விரைப்பான மெத்தையைப் போட்டுப் படுக்கை தயாரிக்கப்பட்டது. மணப்பெண் செறு மியழுதாள், எல்லோரையும் நறுக்கெனக் கிள்ள விரும்பி ஞள், ஆனுல் முடிவில் வேறு வழியின்றி அடங்கிவிட்டாள். அப்பாவிடமிருந்த கவைக்கோலை அவள் நன்கு அறிவாள்; மறுநாள் அவர் இவ்விவகாரங்கள் குறித்து விவரமாய்க் கேட்டுத் தெரிந்து கொண்டுவிடுவார் என்பது அவளுக்குத் தெரியும். அவளுக்கு ஆறுதல் அளிக்கும் பொருட்டு மென் சிவப்பு வாத்து இறகு மெத்தைப்போர்வையும் மஸ்லின் உறைகளிட்ட தலையணைகளும் வசிப்பறைக்கு எடுத்து வரப் பட்டன. அந்த நேரத்தில் கோச் வண்டியுடன் வந்து சேர்ந் தான் அந்த இளைஞன். வண்டி தேவையில்லை என்பதைக் கேட்டதும் அவன் வெலவெலத்துப் போனுன். வண்டிச் சத் தத்தை அவன்தான் கொடுத்தாக வேண்டும். ஆனுல் தன்னு டையது என்று சொல்லிக் கொள்ள இதுவரை ஒரு பத்துக் கோப்பெக் காசுகூட இளைஞனிடம் இருந்ததில்லையே, என்ன செய்வான் அவன்? பிசெல்தனீமவ் தனது வக்கற்ற நிலை யை அறிவித்துக் கொண்டான். வண்டிக்காரனைச் சாந்தப் படுத்த முயன்று பார்த்தனர், ஆனுல் அவன் கூச்சலிட்டும்

சன்னல் அடைப்புகளைத் தடதடவென தட்டியும் ரகளை செய்தான். முடிவில் என்ன ஆயிற்றோ, எனக்குத் தெரியாது. இளைஞன் தன்னைப் பிணையமாய் ஒப்படைத்துக் கொண்டு வண்டியில் ஏறி நான்காவது ரழ்தேஸ்த்வென்ஸ்கயாத் தெருவுக்குச் சென்றான், அங்கே தன் நண்பனுடைய வீட்டில் இரவைக் கழித்த ஒரு மாணவனை எழுப்பி அவனிடம் ஏதாவது பணம் இருக்குமா, பார்க்கலாமெனச் சென்றான். மணமக்கள் இருவரும் அறையில் பூட்டப்பட்டுத் தனியே விடப்பட்டபோது காலை நான்கு மணிக்கு மேலாகி விட்டது. பிசெல்தனீமவின் தாய் பிணியுற்ற ஜெனரலுக்கு அருகே இரவு முழுவதும் இருந்து அவரைக் கவனித்துக் கொண்டாள், தரையிலே ஒரு கம்பளத்தை விரித்து தனது பழைய கோட்டைப் போர்த்திக் கொண்டு படுத்தாள். ஆனால் அவ்வன்னை தூங்க முடியவில்லை, அடிக்கடி எழுந்து வர வேண்டியிருந்தது—இவான் இலியீச்சுக்கு வயிற்றுப் போக்கு நிற்கவே இல்லை. துணிவும் பெருந்தன்மையும் படைத்த வயதான அவ்வன்னை தம் கையால் அவர் உடைகளைக் கழற்றி தன் சொந்த மகனைக் கவனித்துக் கொள்வது போல அவரைக் கவனித்துக்கொண்டாள், தேவையான பாத்திரத்தை எடுத்துக் கொண்டு இரவு முழுவதும் அந்தப் படுக்கை அறையிலிருந்து நடைபாதை வழியே போய் வந்த வண்ணமிருந்தார். ஆயினும் அன்றைய இரவின் சோக நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்துவிட்டதாக நினைக்க வேண்டாம்.

* * *

இளம் தம்பதிகள் அறைக்குள் பூட்டப்பட்டுப் பத்து நிமிடம்கூட ஆகியிருக்காது, அதற்குள் நெஞ்சைப் பிளக்கும் கூச்சல் கேட்டது — மகிழ்ச்சிக் கூச்சலல்ல, பெரிய அபாயத்தை அறிவிக்கும் கூச்சல். இதைத் தொடர்ந்து தொப் பென்ற சப்தமும் நாற்காலிகள் தடதடவென விழுவதும் கேட்டன. உடனே துணுக்குற்றுப் பதறிப் போய் ஓடோடி வந்த பெண்களது பெருங் கூட்டம் அந்த இருட்டறையின் மீது படையெடுத்தது. ஆடைகளைக் களைந்து உள்ளுடுப்புகளில் இருந்தோரும் அரைகுறையாய்க் களைந்தோரும் அப்படியப்படியே வந்து விட்டனர். மணப்பெண்ணின் தாய், பிணியுற்ற குழந்தைகளை விட்டுவிட்டு ஓடிவந்த அக்காள்,

விலாவெலும்பு முறிந்தவள் உட்பட மூன்று அத்தைகள் முதலான பலரும் துடிதுடித்துக் கொண்டு ஓடிவந்துவிட்டனர். சமையற்காரியும், மற்றும் கதை சொல்வதில் வல்லவளாக இக்குடும்பத்தில் அண்டிப் பிழைத்து வந்த அந்த ஜெர்மன் நாட்டுக்காரியும் என்ன ஆயிற்றெனப் பார்ப்பதற்காக அங்கு வந்திருந்தனர். இந்த ஜெர்மன் நாட்டவளின் மெத்தைதான், அந்த வீட்டில் இருந்தவற்றுள் மிகச் சிறந்ததும் அவளுக்கிருந்த ஒரேயொரு ஆஸ்தியுமான அம்மெத்தைதான், பலாத்காரமாக அவளுக்கு அடியிலிருந்து இழுத்தெடுக்கப்பட்டு மணமக்களுக்குத் தரப்பட்டிருந்தது. பொல்லாத சாமர்த்தியசாலிகளாகிய இந்தப் பெண்கள் எல்லோரும் அடங்காத ஆவல் கொண்டு கடந்த கால் மணி நேரமாக அடுப்பங்கரையிலிருந்து திருட்டுத் தனமாக வெளியே வந்து ஓசையின்றி நடைவழியிலே நுனிவிரல்களில் நடந்து கூடத்தில் என்ன நடைபெறுகிறதென்று காதைத் தீட்டிக் கொண்டு கவனித்து வந்தனர். இதற்கிடையில் அவசரமாக யாரோ ஒருவர் மெழுகுவத்தியைப் பற்றவைத்ததும், சிறிதும் எதிர்பாராத ஒரு காட்சியை அவர்கள் எல்லோரும் கண்ணுற்றனர். விரைப்பான மெத்தையின் மூலைகளை மட்டுமே தாங்கி நின்ற நாற்காலிகள் தம்பதிகள் இருவரின் எடையாலும் அழுத்தப்பட்டதும் நகர்ந்துவிடவே மெத்தை அவற்றுக்கிடையே சரிந்து தரையில் விழுந்துவிட்டது. மணப்பெண் ஆத்திரம் தாங்காமல் செறுமிக் கொண்டிருந்தாள். இம்முறை அவளுடைய சீற்றம் எல்லை கடந்துவிட்டது. கதி கலங்கிப் போன பிசெல்தனீமவ் கையும் களவுமாகப் பிடிபட்ட திருடனைப் போலத் திறுதிறுவென விழித்துக் கொண்டு நின்றான். அவன் தன்னைத் தற்காத்துக் கொள்வதற்குக்கூட முயலவில்லை. நாற்புறமிருந்தும் அங்கலாய்ப்பு முனகல்களும் ஆத்திரக் கூச்சல்களும் எழுந்தன. சப்தத்தைக் கேட்டு பிசெல்தனீமவின் தாயும் அங்கு ஓடி வந்தாள், ஆனால் இந்தத் தடவை மணப்பெண்ணின் தாய் முழு வெற்றி பெற்றாள். பிசெல்தனீமவின்மீது பெரும்பாலும் நியாயமற்ற முறையில் விநோத வகையில் வசைமாரி பொழிய முற்பட்டாள்; இதன் பின் கணவனென்று கூறிக் கொள்ள அருகதை உண்டா உனக்கு? இந்த அவக்கேட்டுக்குப் பிற்பாடு உன்னை யாராலும் மதிக்க முடியுமா? என்றெல்லாம் ஏசிவிட்டு முடிவில் தன் மகளின் கையைப் பிடித்து

மணமகனிடமிருந்து அவளை அழைத்துச் சென்றுவிட்டாள். பொழுது விடிந்ததும் மணப்பெண்ணின் தந்தை ஆவேச முற்று விசாரிக்கையில் அவருக்குப் பதிலளிக்கும் பொறுப் பைத்தானே ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்துவிட்டாள். ஏனை யோரும் அங்கலாய்த்தவாறும் தமது தலையை ஆட்டி ஆட் சேபம் தெரிவித்தவாறும் அவளைப் பின்தொடர்ந்து வெளியே சென்றனர். பிசெல்தனீமவுடன் இப்பொழுது அவன் தாய் மட்டுமே இருந்தாள். அவ்வன்னை அவனைத் தேற்ற முயன் றாள், ஆனால் அவன் உடனே அவளை அங்கிருந்து போய் விடும்படி விரட்டியடித்தான்.

அவனை ஆற்றாத் துயர் ஆட்கொண்டுவிட்டது. அத்தி யாவசியமான சில உள்ளுடுப்புகள் அணிந்து வெறுங்காலு டன் இருந்த அவன் தள்ளாடி நடந்து மஞ்சத்திடம் சென்று அதன்மீது அமர்ந்துகொண்டு பொறுக்க மாட்டாத சோகச் சிந்தனையில் மூழ்கலானான். எண்ணங்கள் ஒன்றையொன்று விரட்டிச் சென்று அவன் மூளையைக் குழப்பின. உணர்வற்ற வனாகச் சற்று நேரம் அவ்வறையைச் சுற்றிலும் தன் பார் வையைச் செலுத்தினான். கொஞ்ச நேரத்துக்கு முன்பு விருந் தினர்கள் இதே அறையில்தான் அப்படி ஆவேசமாக ஆடிக் களிப்புற்றனர், சிகரெட்டுப் புகை இன்னும் இங்கு அடங்கி யாகவில்லை. அழுக்கேறிய தரையில் திட்டுத்திட்டாக ஈரம் படிந்திருந்ததோடு மிட்டாய்க் காகிதங்களும் சிகரெட்டுத் துண்டுகளும் சிதறிக் கிடந்தன. மணத் தம்பதிகளுடைய படுக்கை கிடந்த அலங்கோலக் காட்சியும், கவிழ்ந்து கிடந்த நாற்காலிகளும் மிகச் சிறந்த உறுதியான மண்ணுலக நன்னம்பிக்கைகள், கனவுகளின் வீண்பெருமைக்குச் சான்று கூறின. பிசெல்தனீமவ் ஏறத்தாழ ஒரு மணி நேரம் வரை இவ்வாறு உட்கார்ந்து இருந்தான். அலுவலகத்தில் இனி எனக்கு ஏற்படப் போகும் கதி என்ன?—என்பது போன்ற இருண்ட எண்ணங்களைத் தவிர அவன் மனத்துள் வேறு எதுவும் உதிக்கவில்லை. எப்படியும் தான் வேறொரு வேலை தேட வேண்டியிருக்கும், இன்று இரவு நடைபெற்றவை யாவற்றுக்கும் பிறகு தனது பழைய வேலையில் இருந்து கொண்டிருக்க முடியாது என்பதை உணர்ந்து துயரம் அவன் நெஞ்சை அடைத்தது. மிலெக்கப்பித்தாயெவைப் பற்றி நினைத்துக் கொண்டான்—அவருக்குப் பணிந்து நடப் பவன் தானா என்று சோதிப்பதற்காக வேண்டி நிச்சயம்

நாளைக்கு கஸாக்கு நடனம் ஆடிக் காட்டும்படி தனக்கு உத்தர விடுவார். திருமணச் செலவுகளுக்காக அவர் தனக்கு ஐம்பது ரூபிள் பணம் கொடுத்தது மெய்தான், இதில் ஒரு கோப்பெக்கூட பாக்கியில்லாமல் யாவும் செலவாகிவிட்டது. ஆனால் சீதனமாக அவர் வாக்களித்திருந்த அந்த நானூறு ரூபிளைத் தருவது குறித்து அவர் வாய் திறக்கவே இல்லை, வீடுங்கூட இன்னும் தன் பெயரில் பதிவு செய்யப்பட்டாக வில்லை. பிறகு அவன் தன் மனைவியைப் பற்றிச் சிந்திக் கலானான்; தன் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான ஒரு தருணத்தில் அவள் தன்னைப் புறக்கணித்துவிட்டதையும், உயரமான அந்த இராணுவ ஆபீசர் ஒற்றைக் காலில் அவள் முன்னால் மண்டியிட்டதையும் நினைத்துப் பார்த்தான். ஆம், அவன் அதை நன்றாகவே பார்த்து மனத்துள் பதிவு செய்து வைத்திருந்தான். அவளைப் பிடித்திருந்த ஏழு பேய்களையும் பற்றி நினைத்தான்—அவளுடைய தந்தையேதான் இது பற்றி சாட்சியம் அளித்திருந்தாரே. இந்த ஏழு பேய்களையும் விரட்டியடிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட கவைக்கோலையும் நினைத்துப்பார்த்தான். மிகப் பலவற்றையும் சகித்துக் கொள் ளும் ஆற்றல் தனக்கு உண்டென நினைத்திருந்தான் என் றாலுங்கூட, தன் பலத்திலேயே இப்பொழுது அவனுக்குச் சந்தேகம் உண்டாகும்படி விதி அவனை வஞ்சித்து வேடிக் கை பார்த்தது.

இப்படி யெல்லாம் நினைத்து பிசெல்தனீமவ் துயரப் பட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது மெழுகுவத்தியின் சுடர் தணிந்து வந்தது. படபடத்துக் கொண்டிருந்த அதன் வெளிச்சம் நேரே பிசெல்தனீமவின் பக்கவாட்டு உருவரை மீது பட்டு சுவரில் பிரம்மாண்ட நிழலை விழச் செய்தது— கொக்கு போன்ற நீண்ட கழுத்தும், வளைந்த கிளிமூக்கும், நெற்றியிலிருந்து ஒன்றும் பின்தலையிலிருந்து மற்றொன்று மாகத் துருத்திக் கொண்டு நின்ற இரு குடுமிகளும் இந்த நிழலில் தெரிந்தன. இறுதியில் அதிகாலையின் புத்தொளியும் உணர்வும் அறையினுள் மெல்லத் தலைகாட்ட முற்பட்ட பொழுது, அங்கமெல்லாம் நடுங்கும் நிலையில் பிரமித்துப் போனவனைப்போல் தட்டுத்தடுமாறியபடி நாற்காலிகளுக்கு இடையே விழுந்து கிடந்த மெத்தையிடம் சென்றான். எதை யும் சரி செய்யாமலே மெழுகுவத்தியை அணைத்து விட்டு, தலைக்கடியில் ஒரு தலையணையைக்கூட எடுத்து வைத்துக்

கொள்ளாமல், கலைந்து கிடந்த மெத்தை விரிப்புகளின் மீது விழுந்து, மறுநாள் தூக்கிலிடப்படப் போகும் மரண தண்டனைக் கைதிகளுக்கு மட்டுமே தெரிந்திருக்கக் கூடிய சாக்காட்டை ஒத்த உணர்வற்ற ஆழ்ந்த நித்திரையில் மூழ்கினான்.

* * *

ஆனால் மணமக்களது படுக்கையில் இவான் இலியீச் பிரலீன்ஸ்கி கழிக்க நேர்ந்த அந்த இரவின் நரகவேதனையுடன் ஒப்பிடக் கூடியது எதுவுமே இல்லை! ஆரம்பத்தில் கணப்பொழுதுகூட ஓய்வின்றி தலைவலியும் குமட்டலும் ஏனைய பல உபாதைகளும் அவரை வேதனைப்படுத்தின. நரகத்தின் எல்லா வேதனைகளையும் அவர் அனுபவிக்க வேண்டியிருந்தது. இலேசாகத் துளியளவே அவருள் எஞ்சியிருந்த சுயநினைவு அவ்வளவு பயங்கரமான, சோகம் நிறைந்த, வெறுக்கத்தக்க காட்சிகளை அவர் கண்ணெதிரே தெரியச் செய்தது, அறவே அவர் நினைவிழந்திருந்தால்கூட இதைக் காட்டிலும் நன்றாக இருந்திருக்குமே என்று நினைக்கத் தோன்றிற்று. இன்னும் அவர் எண்ணங்கள் குழப்படியாகவேதான் இருந்தன. பிசெல்தனீமவின் தாயை அவர் அடையாளம் தெரிந்து கொள்ள முடிந்தது, 'வேண்டாம், வேண்டாம்! கொஞ்ச நேரம் பொறுத்துக் கொள்ளுங்கள்! எல்லாம் சரியாகிவிடும்!' என்று அவர் அருமையாகக் கூறியதைக் கேட்க முடிந்தது. அவர் யார் என்று அடையாளம் தெரிந்தாலுங் கூட அவர் ஏன் தன்னருகே இருக்க வேண்டும் என்பதற்கான காரணம் இவான் இலியீச்சுக்கு விளங்கவே இல்லை. தீய நிழலுருவங்கள் அவர் எதிரே தோன்றின—அடிக்கடி செமியோன் இவானவிச் தம் எதிரே தோன்றக் கண்டார். ஆனால் கூர்ந்து கவனித்ததும் அது செமியோன் இவானவிச் அல்ல, பிசெல்தனீமவின் மூக்கு என்பது தெரிந்தது. அந்த ஓவியர், இராணுவ ஆபீசர், கன்னங்களை அணைத்துத் தலைக்குட்டை கட்டியிருந்த அந்த வயதான அம்மையார் ஆகிய எல்லோரும் அதிவேகமாகத் தோன்றி அவர் கண்களிலிருந்து மறைந்தனர். யாவற்றையும்விட அவருடைய சிந்தனையை ஈர்த்து வந்தது திரைச்சீலைகளைக் கோப்பதற்காகத் தலைக்கு மேலே இருந்த அந்த கில்ட் வளையம்தான். உருகிக் கரைந்து அடிமுனைக்கு அருகே வந்துவிட்ட அந்த மெழுகுவத்தியின் மங்

கலான வெளிச்சத்தில் அது தெளிவாய் அவர் கண்ணுக்குத் தெரிந்தது. ''இந்த வளையம் எதற்காக? இது ஏன் இங்கே இருக்கிறது?'' என்று அவர் ஓயாமல் தம்மைத் தாமே கேட்டுக் கொண்டிருந்தார். அந்த வயதான அன்னையிடம் திரும்பத்திரும்ப விசாரித்தார். ஆனுல் தாம் கேட்க விரும்பியதை அல்லாமல் வேறு ஏதோ ஒன்றை அவர் சொல்லி யிருக்க வேண்டும்; ஏனெனில் அவர் விளக்கிக் கூற எவ்வளவோ முயன்றும்கூட அவ்வன்னையால் புரிந்து கொள்ள முடியவில்லை. முடிவில், விடிவதற்குச் சற்று முன்னதாக உபாதைகள் நின்று அவர் தூங்க முற்பட்டார், சுமார் ஒரு மணி நேரத்துக்குக் கனவின்றி நன்ருகத் தூங்கினுர். அவர் விழித்துக் கொண்டபோது அனேகமாய் முழு அளவுக்குச் சுய நினைவு திரும்பிவிட்டது. தலைவலி தாங்க முடியவில்லை, வாயில் அருவருப்பான ஒரு கசப்பு குமட்டிற்று, நாக்கு சொரணையற்றுக் கம்பளித் துணி போல் இருந்தது. அவர் எழுந்து உட்கார்ந்தார், சுற்றிலும் பார்த்துவிட்டுச் சிந்திக்க முயன்ருர். அதிகாலைப்பொழுதின் மங்கலான ஒளி சன்னல் அடைப்புக்களின் இடுக்குகள் வழியே கசிந்து வந்து சுவரில் அகன்று விரிந்த பட்டைகளாய்ப் படிந்தன. காலை சுமார் ஏழு மணி இருக்கும். எங்கே இருக்கிருேம் என்பதை அவர் உணர்ந்து கொண்டார்; இரவில் நடைபெற்றவையும், விருந்தின்போது நிகழ்ந்தவையும், தீரச் செயல் புரிய முயன்று தாம் தோல்வியுற்றதும், தாம் நிகழ்த்திய சொற்பொழிவும் அவருக்கு நினைவு வந்தன; இவை யாவற்றின் விளைவாய் என்னவெல்லாம் பேசப்படும், நினைக்கப்படும் என்பது நொடிப்பொழுதில் பயங்கரத் தெளிவோடு அவர் எதிரே தெரிந்தது; அவர் கண்கள் சுற்றிலும் பார்வையிட்டுத் தமது சிப்பந்தி ஒருவருக்காகத் தயார் செய்யப்பட்டிருந்த இனிய மணமக்கள் படுக்கையைக் காணச் சகியாத அலங்கோலமாகத் தாம் பாழ்படுத்தியிருந்ததைக் கவனித்தன. உடனே அவர் இதயத்தில் துடித்தெழுந்த வேதனையும் வெட்கமும் தாள முடியாமல் அவர் வாய் விட்டுக் கத்தியவாறு, கைகளால் முகத்தை மூடிக் கொண்டு மனம் ஒடிந்துபோய்த் தலையணைமீது சாய்ந்து விழுந்தார். ஒரு நிமிடத்துக்குப் பிற்பாடு படுக்கையிலிருந்து துள்ளி எழுந்தார். தமது ஆடைகள் சுத்தமாக மடித்து ஒரு நாற்காலியின்மீது வைக்கப்பட்டிருந்ததைக் கண்டதும் உடனே பாய்ந்து அவற்றை எடுத்

தார்; பீதியுற்றுப் பின்பக்கம் திரும்பிப் பார்த்துக் கொண்டு அவசர அவசரமாக அவற்றை அணிந்து கொண்டார். அவருடைய கோட்டும் தொப்பியும் இன்னொரு நாற்காலியில் இருந்தன. அவருடைய கரும்பழுப்புக் கையுறைகள் தொப்பியினுள் பத்திரமாக வைக்கப் பட்டிருந்தன. யார் கண்ணிலும் படாமல் வெளியே நழுவி விட வேண்டுமென அவர் விரும்பினுர். ஆனுல் திடுமெனக் கதவைத் திறந்து கொண்டு பிசெல்தனீமவின் வயதான தாய் உள்ளே வந்தாள். மண் கூஜாவையும் ஒரு பெரிய பீங்கான் வட்டிலேயும் அவள் எடுத்து வந்தாள். வட்டிலேக் கீழே வைத்துவிட்டு, அவரிடம் முகத்தைக் கழுவிக் கொள்ளும்படி கூறினுர்.

''தேவரீர் கழுவிக் கொள்ள வேண்டும், முகம் கழுவாமல் வெளியே போகக் கூடாது...''

இவ்வுலகில் தாம் யார் எதிரிலும் அச்சமின்றி அமைதியாக இருக்க முடியுமாயின், அவர் இந்த வயதான அன்னேயே அன்றி வேறு யாருமல்ல என்று அக்கணத்தில் இவான் இலியீச் நினேத்துக்கொண்டார். அவர் முகம் கழுவிக் கொண்டார். இதன்பின் நெடு நாட்களுக்குப் பிறபாடு, மனச் சோர்வுற்ற தருணங்களில், துயரத்துக்குரிய ஏனேய பலவற்றுக்குமிடையே அவர் இப்பொழுது இங்கு விழித்தெழுந்தது பற்றிய விவரங்களேயும் நினேத்துக் கொள்வார்; மண் கூஜா, நீர் நிறைந்த பீங்கான் வட்டில், அதில் மிதந்த பனிக் கட்டி வில்லேகள், இளம் மணத் தம்பதிகளுக்காக வாங்கப் பட்டதாயினும் விதி வசத்தால் தான் அதை முதலில் உபயோகிக்க நேர்ந்த எழுத்துப் பதிக்கப்பட்டு சென்னிறக் காகிதத்தில் சுற்றி வைக்கப்பட்ட பதினேந்து கோப்பெக் பெறுமானமுள்ள அந்த நீள்வட்ட வடிவ சோப்பு... மற்றும் தமது இடது தோளில் கைத்துண்டுடன் தயாராக அந்த வயதான அன்னே நின்றுகொண்டிருந்த காட்சி... ஆகிய எல்லா விவரங்களேயும் கண்ணெதிரே காண்பார். குளிர்ந்த நீர் அவருக்குப் புத்துணர்வு அளித்தது, அவர் துடைத்துக் கொண்டார், பிசெல்தனீமவின் தாய் எடுத்துக் கொடுத்த தொப்பியையும் கோட்டையும் அவசரமாகப் பற்றிக் கொண்டு, வாய் திறந்து ஒரு வார்த்தை சொல்லாமலே, இரவெல்லாம் அருகே இருந்து தம்மைக் கவனித்துக் கொண்ட அவ்வன்னேக்கு நன்றி தெரிவிக்காமலே நடைவழியையும் சமையலறையையும் கடந்து ஓடினுர். சமையலறை

யில் பூனை கத்திக் கொண்டிருந்தது, சமையற்காரி தனது மெத்தையிலிருந்து எழுந்து அவரை வியப்புடன் உற்றுப் பார்த்தாள். முற்றத்துக்கும் பிறகு தெருவுக்கும் விரைந் தோடி வந்து அங்கே போய்க் கொண்டிருந்த ஜட்கா வண் டியைக் கூப்பிட்டார். காலைப் பொழுது கடுங்குளிராக இருந் தது, மஞ்சள் நிறப் பனிமூட்டம் எல்லா வீடுகளையும் பிறவற் றையும் மறைத்திருந்தது. இவான் இலியீச் கோட்டுக் கால ரைத் தூக்கிவிட்டுக் கொண்டார். எல்லோரும் தம்மையே உற்று நோக்குவது போல, எல்லோரும் தம்மை அடையா ளம் தெரிந்து கொண்டுவிட்டது போல, தாம் யார் என் பதை அறிந்து கொண்டுவிட்டது போல அவருக்கு ஓர் உணர்ச்சி உண்டாயிற்று...

* * *

எட்டு நாட்கள் வரை அவர் வீட்டை விட்டு எங்கும் செல்லவில்லை, தமது அலுவலகத்தின் பக்கம் தலைகாட்ட வில்லை. அவருக்குப் பிணி, கடும் பிணி—உடற்பிணி அல்ல, மனப் பிணி. அந்த எட்டு நாட்களில் அவர் நரகத்தின் எல்லாக் கொடுமைகளையும் அனுபவித்துவிட்டார், அடுத்த உலகில் இது அவர் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்க வேண்டும். மடாலயத் துறவியாகிவிட வேண்டுமென்று மெய் யாகவே சில தருணங்களில் நினைக்கலானார். ஆம், மெய்யாக வே அவருடைய கற்பனை இத்திசையிலே செல்ல முற்பட் டது. தரைக்கடியிலிருந்து மெதுவாய்ப் பாட்டு ஒலிக்கக் கேட்டார், திறந்த சவப்பெட்டி கண்ணெதிரே தெரியக் கண்டார், காடு அல்லது குகையில் தனிக் கொட்டடி ஒன் றில் வாழ்ந்து வருவதாகக் கற்பனை செய்து பார்த்தார். பிறகு பித்தம் தெளிந்ததும் இதெல்லாம் சுத்த அபத்தம், அளவு மீறிச் செல்வதாகும் என்பதை ஒத்துக் கொண்டார், இப்படியும் தனக்கு ஓர் எண்ணம் வந்ததே என்று வெட்கப் பட்டுக்கொண்டார். பாழ்பட்டுவிட்ட தமது எதிர்காலத்தை எண்ணி மனம் வருந்த முற்பட்டார். பிறகு திரும்பவும் அவர் இதயத்தில் வெட்கம் நிரம்பி வழிந்து, வதைத்தது, அவருடைய புண்களைக் குத்திக் கிளறியது. அவருடைய மனத் திரையிலே ஓடிய நினைவுகள் அவரை நடுங்கச் செய்தன. அலுவலகத்துக்கு அவர் திரும்பிச்சென்றதும் அவர்கள் தம் மைப் பற்றி என்னவெல்லாம் கூறுவார்கள், என்னவெல்லாம்

நினைப்பார்கள், ஆண்டு முழுவதும், ஏன் பத்தாண்டும் கூட, தம் வாழ்வெல்லாம்கூட தம்மைப் பற்றி இரகசியமாக என்னவெல்லாம் சொல்வார்கள்? இந்த விவகாரத்தைப் பற்றிய பேச்சு வருங்காலச் சந்ததிகளிடமும் அல்லவா அடிபடும். சில தருணங்களில் அவருக்கு ஏற்பட்ட பீதியில் அவர் செமியோன் இவானவிச்சிடம் சென்று மன்னிப்புக் கேட்பதற்கும் அவருடைய நட்புக்காக மன்ருடுவதற்கும் தயாராக இருந்தார். தமது செயலுக்கு நியாயம் கூற அவர் முயற்சி செய்யவில்லை; அதற்குப் பதில் தம்மைத் தாமே கடுமையாகக் கண்டித்துக் கொண்டார். தமது நடத்தைக்கு அவரால் எந்த நியாயமும் கூற முடியவில்லை, அப்படிப்பட்ட ஒரு நியாயத்தைத் தேடிப் பிடிக்கவும் அவருக்கு வெட்கமாக இருந்தது.

அவர் உடனே ராஜினுமா எழுதிக் கொடுத்துவிட்டு, தனித்திருந்து மனித குலத்தின் இன்ப வாழ்வுக்காகப் பாடு படலாம் என்றுகூட நினைத்தார். எப்படியும் இனி அவர் தமது நண்பர்கள் எல்லோரையும் மாற்றிக்கொண்டே ஆக வேண்டும், தன்னைப் பற்றிய நினைவுகளை அடியோடு அழித்து விடும் படியான முறையில் இதைச் செய்தாக வேண்டும். பிறகு இதுவும் அபத்தம்தான், தம்மிடம் வேலை செய்யும் சிப்பந்திகளுடன் மேலும் கண்டிப்புடன் நடந்து கொள்ளுவ தன் மூலம் யாவற்றையும் சரி செய்துவிடலாம் என்ற எண் ணம் அவர் மனத்துள் உதித்தது. இத்தகைய தருணங் களில் அவருக்கு நம்பிக்கை பிறந்துவிடும்; அவர் உற்சாக மடைவார். தொடர்ந்து எட்டு நாட்களாக இவ்வாறு சந் தேகத்தால் பீடிக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளானபின், இனியும் தயங்கிக் கொண்டு வீட்டிலே இருந்தால் தன்னுல் சகிக்கவே முடியாதென்று நினைத்து, அலுவலகத்துக்குப் போவதென ஒரு நன்னுளன்று தீர்மானித்தார்.

மனச் சோர்வுற்று வீட்டில் தங்கியிருந்தபோது, அலுவ லகத்தினுள் தாம் எப்படிச் செல்ல வேண்டுமென ஆயிரம் தடவை அவர் கற்பனை செய்து பார்க்க முயன்றிருப்பார். தாம் செல்லுகையில் இரகசியக் குரலில் பலவாருகவும் பேசப் படுவது காதில் விழும், பலவாருன முகபாவனைகளையும் காண வேண்டியிருக்கும், ஏளனச் சிரிப்புகளை எதிர்நோக்க வேண்டி யிருக்கும் என்று நினைத்துப் பீதியுற்று வந்தார். இவற்றில் எதுவும் நேராமற்போனதும் அவர் வியப்புற்று விட்டார்.

எல்லோரும் அவரை மரியாதையுடன்தான் வரவேற்றனர், தலைகுனிந்து வணக்கம் தெரிவித்தனர். யாவரும் முனைப்புடன் வேலை செய்தனர். அவர் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கிற்று, தமது தனியறைக்குள் போய்ச் சேர்ந்தார்.

இவ்வறைக்குள் வந்ததும் உடனே அவர் தமது அலுவல்களை மேற்கொண்டுவிட்டார். சில அறிக்கைகளையும் விளக்கங்களையும் கேட்டுத் தெரிந்துகொண்டு உத்தரவுகளை அளித்தார். அன்று காலை போல என்றுமே தாம் அவ்வளவு அறிவார்ந்த முறையில், அவ்வளவு காரியார்த்தக் கண்ணோட்டத்துடன் பரிசீலித்ததுமில்லை, விவாதித்ததுமில்லை என்பதாக அவருக்குத் தோன்றியது. தாம் செய்த வேலைகள் குறித்து எல்லோரும் திருப்தியடைந்தனர், எல்லோரும் தம்மைப் போற்றினர், மதித்து நடந்தனர் என்பதைக் கண்டார். சந்தேகம் கொண்டு கூர்ந்து நோக்கும் கண்களுக்கும் இங்கு எதுவும் முறை தவறி நடப்பதாகத் தெரிந்திருக்காது. யாவும் அப்படிச் செவ்வனே நடந்தேறின.

சில காகிதங்களை எடுத்துக் கொண்டு முடிவில் அக்கீம் பெத்ரோவிச் நேரில் வந்து சேர்ந்தார். அவரைப் பார்த்ததும் இவான் இலியீச்சுக்கு 'பகீர்' என்றது, ஆனால் கணப் பொழுதுக்குத்தான். உடனடி விவகாரத்தை அவர் அக்கீம் பெத்ரோவிச்சுடன் விவாதித்தார், ஆர்ப்பாட்டமாகப் பேசினார், என்ன செய்ய வேண்டுமென்பதைக் கூறி யாவற்றையும் அவருக்கு விளக்கினார். அதேபோதில் அதிக நேரத்துக்குத் தமது பார்வை அக்கீம் பெத்ரோவிச்சின்மீது படியாதவாறு தமது பார்வையைத் திருப்பிக் கொள்வது போலவும், இன்னும் குறிப்பாக அக்கீம் பெத்ரோவிச் தம்மை உற்று நோக்க அஞ்சுவது போலவும் அவருக்குத் தோன்றியது. இப்பொழுது அக்கீம் பெத்ரோவிச் வேலைகளை முடித்துக் கொண்டு காகிதங்களைக் கையில் எடுக்க முற்பட்டார்.

''இன்னும் ஒரு வேண்டுகோள் இருக்கிறது'' என்று அவர் வறண்ட குரலில் பேச முயன்றார். ''பதிவாளர் பிசெல்தனீமவ் மாற்றிக்கொண்டு செல்ல விரும்புகிறான்... மேதகையர் செமியோன் இவானவிச் ஷிப்புலேன்கோ தமக்கடியில் அவனுக்கு வேலை தருவதாக வாக்களித்துள்ளார். மேதகையீர், தங்களுடைய உதவியும் கிடைக்க வேண்டுமென்று பிசெல்தனீமவ் கேட்டுக் கொள்கிறான்.''

''அப்படியா? மாற்றிக் கொண்டு போகவா விரும்பு கிருன்?'' என்று கேட்டார் இவான் இலியீச். ஒரு பெரும் சுமை தம்மிடமிருந்து நீக்கப்பட்டுவிட்டது போன்ற ஓர் உணர்வு அவருக்கு ஏற்பட்டது. அவர் அக்கீம் பெத்ரோவிச் சைப் பார்த்தார், கணப் பொழுதுக்கு இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.

''சரி... என்னைப் பொறுத்தவரை... இயன்றதனைத்தும் செய்கிறேன்...'' என்று பதிலளித்தார் இவான் இலியீச். ''எனக்கு ஆட்சேபம் இல்லை.''

அக்கீம் பெத்ரோவிச் இதன்பின் சீக்கிரமே போய்விட விரும்பினார். ஆனால் இவான் இலியீச் திடுமென தயாள சிந்தை மிக்கவராகப் பேசத் தீர்மானித்துவிட்டார்; மீண் டும் திடீர் ஆர்வம் அவரைப் பற்றிக் கொண்டு விட் டது.

அக்கீம் பெத்ரோவிச்சை ஆழ்ந்த முக்கியத்துவம் வாய்ந்த முறையில் உற்றுப் பார்த்தவாறு, ''அவனிடம் சொல்லுங் கள், அவன்மீது எனக்குக் கோபமில்லை என்று சொல்லுங் கள். ஆம், அவன்மீது எனக்குக் கோபம் துளிக்கூட இல்லை. நடந்ததை மறந்துவிட, யாவற்றையும் அறவே... அறவே மறந்துவிடத் தயாராயிருக்கிறேன்...'' என்று கூறினார்.

ஆனால் இவான் இலியீச் திடுமெனத் தமது பேச்சை நிறுத்திக் கொண்டுவிட்டார். அக்கீம் பெத்ரோவிச்சின் விப ரீத நடத்தையைக் கண்டு வியப்புற்று அவர் பேச்சை நிறுத்திக் கொண்டுவிட்டார். இதுவரை கூர் அறிவுடைய வராய் நடந்து வந்த அக்கீம் பெத்ரோவிச் விளங்காத ஏதோவொரு காரணத்தால் திடுதிப்பென படுமுட்டாளாய் மாறிவிட்டாரோ என்று நினைக்க வேண்டியிருந்தது. பணிவு டன் காது கொடுத்துக் கேட்பதற்குப் பதில், அவர் திடு மென அசடுபோல முகம் சிவந்துபோய் வேகமாய் மீண்டும் மீண்டும் தலைகுனிந்து வணக்கம் கூறியவாறு பின்பக்கமாக நகர்ந்து கதவை நோக்கிச் சென்றார். தரைக்கு அடியில் மறைந்துவிட விரும்புவது போல, உடனே தமது இடத் துக்கு ஓடிச் சென்று விட நினைப்பது போல நடந்து கொண் டார். தனியே விடப்பட்டதும் இவான் இலியீச் சற்றுக் கலக்க முற்றவராகத் தமது நாற்காலியிலிருந்து எழுந்தார். கண்ணாடியில் பார்த்தார், ஆனால் அதில் தெரிந்த தமது பிம்பத்தை அவர் கவனிக்கவில்லை,

''இல்லை—கண்டிப்பு அவசியம், மிகமிக அவசியம்'' என்று தம்மை அறியாமலே மனதுக்குள் கூறிக் கொண்டார். அவர் முகம் முழுதும் திடுதிப்பென செவ்வொளி படர்ந்தது. அவருக்கு ஏற்பட்ட வெட்க உணர்ச்சியும் உபத்திரவமும் எட்டு நாட்களாகப் பிணியுற்றிருந்த போது அவர் அனுப வித்ததைக் காட்டிலும் கடுமையாக இருந்தது. ''போதும் இது, தாங்க முடியவில்லை!'' என்று மனதுக்குள் கூறிக் கொண்டு, செயலற்றவராகத் தமது நாற்காலியில் சாய்ந்து விட்டார்,

அடக்கமான பெண்

புனைகதை

மொழிபெயர்ப்பாளர்: நா. தர்மராஜன், எம்.ஏ.

ஆசிரியர் குறிப்பு

''நாட்குறிப்பிலிருந்து'' வழக்கம் போல ஒரு பகுதியைக் கொடுப்பதற்கு பதிலாக ஒரு குறு நாவலைத் தருவதற்காக என்னுடைய வாசகர்கள் என்னை மன்னிப்பார்களா? ஆனால் இந்தக் குறு நாவலை எழுதுவதற்கு ஒரு மாதத்தில் பெரும்பகுதி எனக்கு உண்மையிலேயே அவசியமாக இருந்தது. எப்படியிருந்தாலும் என்னுடைய வாசகர்கள் பொறுத்தருள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது கதைக்கு வருவோம். இது ''புனைகதை'' என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் இது மிகவும் எதார்த்தமான கதை என்று நான் தனிப்பட்ட முறையில் கருதுகிறேன். எனினும் இதில், அதாவது இந்தக் கதையின் அமைப்பிலேயே ஒரு கற்பனைக் கூறு இருக்கிறது. அதை ஆரம்பத்திலேயே விளக்கிக் கூறிவிட வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

உண்மையில் இது கதை அல்ல, குறிப்புகளின் தொகுப்பும் அல்ல. சில மணி நேரத்துக்கு முன்னர் சன்னலிலிருந்து கீழே குதித்துத் தற்கொலை செய்துகொண்ட ஒரு பெண்ணின் கணவனை நீங்கள் கற்பனை செய்து பாருங்கள். அவளுடைய உடல் மேசையின் மேல் வைக்கப்பட்டிருக்கிறது. அவர் குழப்பமடைந்திருக்கிறார், அவரால் தன்னுடைய சிந்தனைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ள முடியவில்லை. அவர் தன் அறைகளில் முன்னும் பின்னுமாக நடந்துகொண்டிருக்கிறார்; என்ன நடந்தது என்று புரிந்து கொள்வதற்கும் ''தன்னுடைய சிந்தனைகளை ஒருமுகப்படுத்துவதற்கும்'' முயற்சித்துக் கொண்டிருக்கிறார். அந்த மனிதர் குணப்படுத்த முடியாத

மன நோயாளி, தனக்குத் தானே ஓயாமல் பேசிக் கொள் பவர்களில் ஒருவர் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். ஆகவே அவர் தனக்குத் தானே பேசிக் கொண்டிருக் கிருர்; நடைபெற்று முடிந்தவற்றை நினைத்துப் பார்க்கிருர்; அவை அனைத்தையும் **புரிந்து கொள்வதற்கு** முயற்சி செய் கிருர். அவருடைய அகமும் புறமும் ஒத்திருப்பதைப் போல வெளிப் பார்வைக்குத் தோன்றினாலும் தன்னுடைய தர்க்க முறைகளிலும் உணர்ச்சிகளிலும் அவர் தன்னையே அடிக் கடி மறுத்துக் கொள்கிருர். அவர் தன்னை நியாயப்படுத்து வது, அவனைக் குற்றஞ் சாட்டுவது இரண்டையுமே செய் கிருர்; பிறகு சம்பந்தமில்லாத விளக்கங்களுக்குள் நுழை கிருர். அவரிடத்தில் இதயம் மற்றும் அறிவின் நயமற்ற தன் மை ஆழமான உணர்ச்சியுடன் கலந்து வெளிப்படுகிறது. அவர் சிறிது சிறிதாக எல்லாவற்றையும் **புரிந்து கொள்கிருர்;** ''தன்னுடைய சிந்தனைகளை ஒருமுகப்படுத்துகிருர்''. அவர் கிளறிவிட்ட நினைவுக் கோவைகள் கடைசியாக அவரைத் தடுக்க முடியாதபடி **உண்மைக்கு** அருகே கொண்டு வரு கின்றன. அந்த உண்மை தடுக்க முடியாதபடி அவருடைய இதயத்தையும் அறிவையும் மேம்படுத்துகிறது. தொடக் கம் புரிந்துகொள்ள முடியாதபடி இருந்தாலும் முடிவை நோக்கி வரும் பொழுது அவருடைய கதையின் தொனி வேறுவிதமாக இருக்கிறது. அந்தப் பரிதாபகரமான மனி தருக்கு உண்மை முற்றிலும் தெளிவாகவும் திட்டவட்ட மாகவும்—குறைந்த பட்சம் அவர் மட்டும் புரிந்து கொள் வதற்குப் போதுமான அளவுக்காவது—எடுத்துக் காட்டப் படுகிறது.

கதைக் கருவைப் பற்றி இது போதும். இந்தக் கதையை —இடையிடையே நிறுத்திச்—சொல்வதற்குச் சில மணி களாகும் என்பது உண்மையே, அது வடிவத்தில் இணைப்பில் லாமல் இருக்கும். ஏனென்றால் அவர் தன்னோடு வாதாடு கிருர்; அல்லது பார்வைக்குத் தென்படாமல் கேட்டுக் கொண்டிருக்கும் நீதிபதியைப் போன்ற ஒருவரை நோக்கிப் பேசுகிருர். ஆனால் உண்மையான வாழ்க்கையில் அது எப் பொழுதுமே அப்படித்தான் இருக்கிறது. ஒரு சுருக்கெழுத் தாளர் அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டு எல்லாவற் றையுமே குறித்துக் கொள்ள முடியுமென்றால் அதை என் னுடைய வர்ணனையுடன் ஒப்பிடும் பொழுது ஓரளவுக்கு

நயம் குறைந்து முழுமையின்றி இருக்கும். ஆனால் மனோரீதி யான சம்பவக் கோவை அநேகமாக ஒரே விதமாகத்தான் இருக்கும் என்று நான் நம்புகிறேன். இந்தக் கற்பனையான சுருக்கெழுத்தாளரை (அவருடைய குறிப்புகளுக்குத்தான் நான் வடிவம் கொடுத்திருக்கிறேன்) ''கற்பனையானவர்'' என்று என்னுடைய கதையில் குறிப்பிட்டிருக்கிறேன். எனினும் இம்மாதிரியான ஏதோ ஒன்று முன்பு இலக்கியத்தில் அனு மதிக்கப் பட்டிருக்கிறது. உதாரணமாக, விக்டர் ஹியூகோ தன்னுடைய சிறந்த படைப்பாகிய ''மரணதண்டனை விதிக் கப்பட்ட மனிதனுடைய கடைசி நாள்'' என்ற நூலில் அநேகமாக இதே முறையைத்தான் கடைப்பிடித்தார். அவர் ஒரு சுருக்கெழுத்தாளரைப் படைக்காவிட்டாலும் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒரு நபர் பூமியில் தன்னுடைய கடைசி நாளை மட்டுமல்ல கடைசி மணி நேரத்தையும், மெய் யாகவே கடைசி நிமிடத்தையும் பற்றிக் குறிப்பு எழுத முடிந்தது (அதற்குப் போதுமான நேரம் இருந்தது) என்று அனுமானித்ததன் மூலம் அதை இன்னும் குறைவாகவே நம்பப்பட முடியாத ஒன்றாக்கினார். ஆனால் அவர் இந்த நம்ப முடியாத நிலையைப் படைத்திருக்காவிட்டால் அவரு டைய நூல்களிலேயே மிகவும் எதார்த்தமான, மிகவும் உண் மையான அந்த நூலை எழுதியிருக்க முடியாது.

முதல் பகுதி

1

நான் யார் என்பதும் அவள் யார் என்பதும்

...அவள் இங்கே இன்னும் இருக்கும்பொழுது அது அவ்வளவு மோசமல்ல: நான் ஒவ்வொரு நிமிடமும் உள்ளே வர முடியும், அவளைப் பார்க்க முடியும்; ஆனால் அவர்கள் நாளைக்கு அவளை எடுத்துக் கொண்டு போய்விடுவார்கள்; பிறகு நான் தன்னந் தனியாக என்ன செய்யப் போகிறேன்? தற்பொழுது முன் அறையில், மேசையின் மேல் அவள் வைக்கப்பட்டிருக்கிறாள். அவர்கள் இரண்டு மேசைகளை ஒன்றாகச் சேர்த்துப் போட்டிருக்கிறார்கள், சவப்பெட்டி நாளைக்குத் தயாராகிவிடும், மிகவும் வெண்மையான நிறம் gros de Naples*, *ஓ! நான் தொடர்பில்லாமல் பேசுகிறேன்... நான் முன்னும் பின்னும், முன்னும் பின்னும் நடந்து கொண்டிருக்கிறேன், எல்லாவற்றையும் புரிந்து கொள்ள முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். நான் முழுசாக ஆறு மணி நேரம் முயற்சி செய்தும் என்னுடைய சிந்தனைகளை ஒருமுகப்படுத்த முடியவில்லை. முன்னும் பின்னும், முன்னும் பின்னும் நடந்து கொண்டிருக்கிறேன்... நடந்தது இதுதான். சம்பவங்களை வரிசைக்கிரமமாக எடுத்துக் கூறுகிறேன் (ஓ! வரிசைக்கிரமம்!). கனவான்களே! நான் ஒரு எழுத்தாளன் அல்ல. அது உங்களுக்கே தெரியும். ஆனால் அதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. அந்த விவகாரத்தை நான் எப்படிப் புரிந்து கொண்டேனே அப்படியே சொல்கிறேன். ஆனால் எல்லாவற்றையும் என்னால் புரிந்து கொள்ள முடிவதுதான் திகைப்பை ஏற்படுத்துகிறது!*

---

* *நேப்பிள்சில் தயாரிக்கப்பட்ட மிகவும் அழுத்தமான பட்டுத் துணி (பிரெஞ்சு).*—**ப-ர்.**

சரி, நீங்கள் தெரிந்து கொள்ள விரும்பினுல் அல்லது முதலிலிருந்து தொடங்குவதென்ருல், அவள் தனக்கு ஆசிரியை வேலை தேடி, பிரயாணம் செய்வதற்கு ஆட்சேபமில்லை, தனிமுறையில் கற்பிப்பதற்குத் தயார், மற்றும் இதரவை பற்றிக் குரல் பத்திரிகையில் விளம்பரம் செய்வதற்குக் கட்டணத்துக்காகத் தன்னுடைய உடைமைகளை அடமானம் வைப்பதற்கு என்னிடம் வந்தாள். அது இப்படி ஆரம்பமாயிற்று, நான் இயற்கையாகவே அவளை மற்றவர்களிடமிருந்து பிரித்துப் பார்க்கவில்லை. அவள் மற்ற எல்லோரையும் போலவே வந்தாள். அவ்வளவுதான். எனினும் பின்னர் நான் அவளை வேறுபடுத்திப் பார்த்தேன். அவள் மிகவும் ஒல்லியாக, மிகவும் இனிமையான அழகுடையவளாக, நடுத்தர உயரத்துக்குச் சற்று அதிகமாக இருந்தாள். என்னிடம் எப்பொழுதுமே சற்று கூச்சத்துடனும் வெட்கத்துடனும் நடந்துகொள்வாள். (அவள் புதிதாகச் சந்திக்கின்ற எல்லோரிடமும் அம்மாதிரித்தான் நடந்துகொண்டாள் என்று நினைக்கிறேன்; ஒரு அடகுக்கடைக்காரர் என்று இல்லாமல் மனிதன் என்ற முறையில் பார்த்தால் நானும் அடுத்த நபரும் அவளுக்கு ஒன்ருகத்தான் இருக்க வேண்டும்.) அவள் பணத்தைப் பெற்றுக் கொண்ட மறு நிமிடமே திரும்பி வெளியே போய்விடுவாள். அவள் ஒரு போதும் ஒரு வார்த்தைகூடப் பேச மாட்டாள். கடைக்கு வரும் மற்றவர்கள் கூடக்கொடுங்கள் என்று மிகவும் வாதாடுவார்கள், மன்ருடுவார்கள், பேரம் பேசுவார்கள்... எனக்குக் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்... ஆமாம்! எனக்கு முதலில் ஆச்சரியத்தைத் தந்தவை அவள் அடகு வைப்பதற்குக் கொண்டு வந்த பொருள்களே: தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளித்தோடுகள், பளபளப்பான ஒரு சிறு பதக்கம்—எல்லாம் அதிகமான மதிப்பில்லாத சிறு நகைகளே. அவை மதிப்பில்லாதவை என்பது அவளுக்குத் தெரியும்; ஆனுல் அவளுக்கு அவை அரிய பொருள்கள் என்று அவள் முகபாவம் உணர்த்தியது. அவள் தகப்பனும் தாயாரும் அவளுக்கு விட்டுச் சென்றவை அவைதான் என்று நான் பிறகு தெரிந்து கொண்டேன் என்பது உண்மையே. ஒரே ஒரு தடவை மட்டுமே நான் அவள் கொண்டு வந்த பொருள்களை அலட்சியமாகக் கருதுவதற்கு என்னை அனுமதித்தேன். அதாவது நான் ஒருபோதும் அப்படி நடந்து கொள்ள மாட்

டேன். ஏனென்ருல் நான் என்னுடைய வாடிக்கையாளர் களிடம் எப்பொழுதுமே ஒரு கனவாளுகவே—குறைவாகப் பேசுதல், மரியாதையளித்தல், கண்டிப்புடன்—நடந்து கொள்வேன். ''கண்டிப்பு, கண்டிப்பு மறுபடியும் கண்டிப்பு''. ஆனல் அவள் ஒரு தடவை ஒரு பழைய முயல்-பர் கோட்டின் மிச்சங்களை (உண்மையாகவே மிச்சங்கள் தான்) கொண்டு வருகின்ற அளவுக்கு மூளையில்லாமல் நடந்துகொண்டாள். நான் அதைப் பற்றி ஏளனமாக ஏதோ சொல்லிவிட்டேன்... அவள் மிகவும் வாடிவிட்டாள்! அவளுடைய நீல நிறக் கண்கள் அகன்று, கனவில் தோய்ந்திருக்கும். ஆனல் அன்று அவை நெருப்பைக் கக்கின. அவள் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை, ''மிச்சங்களை'' எடுத்துக் கொண்டு வெளியேறி ஞள். நான் அப்பொழுதுதான் அவளை முதல் தடவையாகக் **குறிப்பாகப்** பார்த்தேன், அவளைப் பற்றி ஒரு விதமாக, அதாவது குறிப்பிட்ட விதமாகப் பார்த்தேன். ஆமாம். இன்னொரு எண்ணமும் அல்லது இப்படிக் கூறலாம், முக் கியமான எண்ணமும் எல்லாவற்றையும் ஒன்று கூட்டிய எண்ணமும் அதாவது அவள் மிகவும் இளமையோடிருக் கிருள், பதிஞன்கு வயதுதான் ஆகியிருக்கும் என்று கருதி யதும் என் நினைவுக்கு வருகிறது. ஆனல் அவளுக்கு ஏற் கெனவே பதிஞறு வயதாகியிருந்தது, பதிஞறுக்கு மூன்று மாதங்கள் குறைவு. நான் சொல்லப் போவது அதுவல்ல. ஒத்திசைவு என்று நான் குறிப்பிட்டது அது அல்ல. அவள் மறுபடியும் மறுநாள் வந்தாள். அவள் தன்னுடைய முயல்-பர் கோட்டை டபிரனிராவோவிடமும் மோஸரிடமும் எடுத்துக் கொண்டு போஞள் என்று நான் பின்னர் தெரிந்து கொண்டேன். ஆனல் அவர்களிருவரும் தங்கத்தைத் தவிர வேறு எதையும் வாங்கிக் கொள்வதில்லை. ஆகவே அவர்கள் அவளிடம் பேசக்கூட விரும்பவில்லை. ஆனல் நான் இதற்கு மாருக ஒரு சமயத்தில் அவளிடமிருந்து ஒரு செதுக்கு மணியை (மிகவும் மூன்ருந்தரமானது) வாங்கிக்கொண்டு பணம் கொடுத்திருந்தேன். அதை சிந்தித்துப்பார்க்கும்பொ ழுது என்னுடைய செயலைப் பற்றி நான் ஆச்சரியமடைந் தேன். நான் தங்கம் அல்லது வெள்ளியைத் தவிர வேறு பொருட்களை ஒருபோதும் அடமானம் வாங்கியதில்லை. ஆனல் அவள் விஷயத்தில் ஒரு செதுக்கு மணியை வாங்குகின்ற அளவுக்கு நான் கீழே இறங்கிவிட்டேன். அப்பொழுது நான்

அவளைப் பற்றி இரண்டாவது தடவையாக நினைத்தேன். ஆம். அது நன்றாக நினைவிருக்கிறது.

அந்த சந்தர்ப்பத்தில் அவள் ஒரு அம்பர் சிகரெட் குழாயை எடுத்துக் கொண்டு என்னிடம் வந்தாள், அதாவது மோஸரிடம் போய்விட்டு வந்தாள். அது மிகவும் மோசமான பொருளல்ல. அப்படிப்பட்ட பொருள்களை அடமானம் வாங்குபவர்களுக்கு உகந்ததே. ஆனால் நாங்கள் தங்கப் பொருள்களை மட்டும் வாங்கியபடியால் அது எங்களுக்கு மதிப்பில்லாததே. அவள் **ஆட்சேபம்** காட்டியதற்கு மறு நாள் இது நடைபெற்றது. நான் அவளைக் கண்டிப்பான தோரணையில் பார்த்தேன். என்னிடம் கண்டிப்பு என்பதற்கு இரக்கமில்லாமை என்று அர்த்தம். எனினும் நான் அவளிடம் இரண்டு ரூபிள்களைக் கொடுத்த பொழுது சிடுசிடுப்புடன் பின்வரும் வார்த்தைகளைச் சொல்லாமலிருக்க என்னால் முடியவில்லை: "**உங்களுக்காகவே** இதைச் செய்கிறேன். இப்படிப்பட்ட பொருளை மோஸர் உன்னிடமிருந்து ஒரு போதும் எடுத்துக் கொள்ள மாட்டார்." **உங்களுக்காகவே** என்ற வார்த்தையைச் சிறப்பாகவும் **குறிப்பிட்ட அர்த்தத்திலும்** நான் அழுத்திச் சொன்னேன், எனக்கு எரிச்சலாக இருந்தது. **உங்களுக்காகவே** என்ற வார்த்தையைக் கேட்டு அவள் மறுபடியும் கூச்சமடைந்தாள், ஆனால் ஒன்றும் சொல்லவில்லை. அவள் பணத்தை என் மீது வீசியெறியவில்லை. அதை எடுத்துக் கொண்டாள் — அதுதான் வறுமை. புரிகிறதா? ஓ! அவள் எப்படிக் கூச்சமடைந்தாள் தெரியுமா? அவள் உணர்ச்சியை நான் புண்படுத்தி விட்டேன் என்று புரிந்து கொண்டேன். அவள் மீது எனக்குக் கிடைத்த வெற்றி இரண்டு ரூபிள் மதிப்புள்ளதுதானா என்று அவள் போன பிறகு நான் என்னைத் திடீரென்று கேட்டுக்கொண்டேன். ஹா-ஹா-ஹா! அந்தக் கேள்வியை இரண்டு தடவை கேட்டுக்கொண்டது எனக்கு நினைவிருக்கிறது. அது மதிப்புள்ளதுதானா? அது மதிப்புள்ளதுதானா? நான் சிரித்தபடியே ஆமாம் என்று பதிலளித்தேன். அப்பொழுது நன்றாகச் சிரித்தேன். அந்தச் சிரிப்பில் வெறுப்பு இல்லை, ஆனால் அதற்கு ஒரு நோக்கம் இருந்தது. நான் காரணத்தோடுதான் அப்படி நடந்து கொண்டேன். நான் அவளைச் சோதனை செய்து பார்க்க விரும்பினேன், ஏனென்றால் என் மனம் திடீரென்று அவளைப் பற்றி ஒரு குறிப்பிட்ட திசையில் சிந்

திக்கத் தொடங் கிவிட்டது. அவளைப் பற்றி நான் குறிப்பாக நினைத்த மூன்றாவது சிந்தனை அது.

...இப்படித்தான் எல்லாம் தொடங்கியது. நான் உடனே அவளைப் பற்றி எல்லா விவரங்களையும் ஓசையில்லாமல் சேகரிக்கத் தொடங்கினேன், அவள் எப்பொழுது வருவாள் என்று குறிப்பிட்ட அவசரத்துடன் எதிர்பார்க்கத் தொடங்கினேன் என்பதைச் சொல்வது அவசியமல்ல. அவள் சீக்கிரமாக மறுபடியும் வருவாள் என்று எனக்குத் தோன்றியது. அவள் மறுபடியும் வந்தபொழுது அவளை அதிகமான மரியாதையுடன் வரவேற்று சுமுகமாகப் பேசிக் கொண்டிருந்தேன். நான் ஒன்றும் மோசமாக வளர்க்கப்பட்டவன் அல்ல—உங்களுக்குத்தான் தெரியுமே—என் பழக்க வழக்கங்கள் நல்லவையே. ஹ்ம்... அவள் மென்மையானவள், அடக்க ஒடுக்கமானவள் என்பதை அப்பொழுதுதான் நான் புரிந்து கொண்டேன். மென்மையும் பணிவும் உடையவர்களால் எதிர்த்து நிற்க முடியாது. அவர்கள் தம்முடைய சங்கோஜத்தைக் கைவிடாத போதிலும் அவர்களால் நிச்சயமாக உரையாடலைத் தவிர்க்க முடியாது. அவர்கள் சுருக்கமாக பதிலளித்தாலும் அவசியமாக பதிலளிப்பார்கள், நீங்கள் இன்னும் ஏதாவது கேட்டால் அவர்கள் அதற்கும் கூடுதலாக பதிலளிப்பார்கள். உங்களுக்கு அக்கறை இருந்தால் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்க வேண்டும். அது தான் முக்கியமான விஷயம். அவ்வளவுதான். அந்த சந்தர்ப்பத்தில் அவள் தன்னைப் பற்றி என்னிடம் ஒன்றும் சொல்லாதது இயற்கையே. அதற்குப் பிறகுதான் நான் குரல் பத்திரிகையைப் பற்றியும் மற்றும் இதர எல்லாவற்றைப் பற்றியும் கண்டு பிடித்தேன். அவள் தன்னிடம் மிச்சமிருந்த கடைசிப் பணத்தை விளம்பரம் செய்வதற்கு உபயோகித்துக் கொண்டிருந்தாள். முதலில் விளம்பரங்களில் செருக்கான வார்த்தைகளை உபயோகித்தாள்: ''ஆசிரியைக்கு வேலை வேண்டும், பிரயாணம் செய்வதற்கு ஆட்சேபமில்லை, ஊதிய விவரங்களைக் கடிதத்தில் எழுதுங்கள்''. அதன் பிறகு: ''ஆசிரியை, உதவியாளர், வீட்டு நிர்வாகி, நோயாளிகளுக்கு செவிலிப்பெண், தையல்காரி ஆகிய எந்த வேலைக்கும் தயார்'', இதரவை, இதரவை. வழக்கமான கதைதான். அவள் விளம்பர வாசகத்தைப் படிப்படியாக மாற்றிக் கொண்டாள் என்பதும் உண்மையே. கடைசியில்

அவள் மனமுறிவுக் கட்டத்தை அடைந்த பொழுது உண்மையாகவே இப்படி விளம்பரம் செய்தாள்: ''ஊதியத்தை எதிர்பார்க்கவில்லை, உணவு போதும்''. ஆனால் அப்படியும் அவளுக்கு வேலை கிடைக்கவில்லை. நான் அவளை ஒரு முடிவான சோதனைக்கு உட்படுத்த முடிவு செய்து அன்றைய தினத்தில் வெளியான குரல் பத்திரிகையை எடுத்தேன். ''உறவினர்கள் யாருமில்லாத இளம் பெண்ணுக்கு ஆசிரியை வேலை வேண்டும். மனைவியை இழந்த முதியவரது குடும்பமாக இருப்பது மிகவும் நன்று. வீட்டு வேலைகளையும் செய்யத் தயார்'' என்று வெளியிடப்பட்டிருந்த விளம்பரத்தைச் சுட்டிக் காட்டினேன்.

''இதைப் பாருங்கள். காலையில் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. அநேகமாக இன்று இரவுக்குள் வேலை கிடைத்து விடும்! விளம்பரம் செய்கின்ற முறை இதுதான்!''

அவள் வெட்கமடைந்தாள். அவளுடைய கண்கள் மறுபடியும் நெருப்புத் துண்டங்களாக மாறின. அவள் திரும்பி உடனடியாக வெளியே நடந்தாள். எனக்கு அது மிகவும் பிடித்திருந்தது. எனினும் ஏற்கெனவே நான் மிகவும் நம்பிக்கையும் துணிவும் உடையவனாகியிருந்தேன். அவளுடைய சிகரெட் குழாய்களை வேறு யாரும் வாங்கிக்கொள்ள மாட்டார்கள். அவளுடைய சிகரெட் குழாய்கள்கூடத் தீர்ந்துவிட்டன. நான் நினைத்தபடி நடந்தது. இரண்டு நாட்களுக்குப் பிறகு அவள் மிகவும் வெளிறிய முகத்தோடு, கலவரமடைந்தவளாக என்னிடம் வந்தாள்—வீட்டில் ஏதாவது நெருக்கடி ஏற்பட்டிருக்க வேண்டும் என்று நான் ஊகித்தேன். உண்மையும் அதுவே. அந்த நெருக்கடி என்ன என்பதை நான் நேரடியாக விளக்குகிறேன். ஆனால் நான் திடீரென்று அவளுடைய நன்மையில் அக்கறை கொண்டவனாக நடித்ததையும் அதன் மூலம் அவளுடைய நன்மதிப்பைப் பெற்றதையும் முதலில் எடுத்துக் கூற விரும்புகிறேன். அந்தக் கணத்தில் ஏற்பட்ட உத்வேகத்தில் நான் அதைச் செய்தேன். அன்று அவள் அடமானம் வைப்பதற்காக தெய்வ வடிவத்தைக் கொண்டு வந்திருந்தாள் (அதாவது அந்த நிலைமைக்குத் துரத்தப்பட்டிருந்தாள்)... கேளுங்கள், கவனமாகக் கேளுங்கள்! இனி முறைப்படி சொல்கிறேன், ஏனோ எல்லாவற்றையும் குழப்பிக் கொண்டேயிருக்கிறேன். எல்லாவற்றையுமே கடைசி விவரம் உள்பட, கடைசியான சிறு விஷயம் உள்பட

நினைவுபடுத்திச் சொல்ல விரும்புகிறேன் என்பது இதன் அர்த்தம். என்னுடைய சிந்தனைகளை ஒரு முகப்படுத்த முயற்சி செய்து கொண்டே இருக்கிறேன் ஆனால் முடியவில்லை; எல்லாம் அந்தச் சிறு விஷயங்கள், சிறு விஷயங்களால்தான்...

புனித மரியாள் குழந்தையுடன் இருக்கும் தெய்வ வடிவம் அது. குடும்பத்திலிருந்து பழைய தெய்வ வடிவமாக இருக்க வேண்டும். தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளிச் சட்டம் போடப்பட்டிருந்தது. அதன் மதிப்பு ஆறு ரூபிள் இருக்கும். அந்த தெய்வ வடிவம் அவளுக்கு மிகவும் முக்கியமானதாக இருக்க வேண்டும் என்பதை நான் கண்டேன். ஏனென்றால் சட்டத்தைக் கழட்டாமல் அப்படியே அதை அடமானம் வைக்க அவள் விரும்பினாள். ''சட்டத்தை என்னிடம் கொடுத்துவிட்டு தெய்வ வடிவத்தை நீங்கள் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போவது நல்லது. ஏனென்றால் தெய்வ வடிவத்தை அடமானம் வைப்பது சரியல்ல'' என்று நான் அவளிடம் கூறினேன்.

''ஏன்? உங்கள் விதிமுறைகள் அதை அனுமதிப்பதில்லையா?''

''இல்லை. விதிமுறைகள் காரணமல்ல. ஒரு எண்ணம் ஏற்பட்டது. ஒரு வேளை உங்களுக்கு...''

''மிகவும். சட்டத்தைத் தனியாக எடுத்துவிடுங்கள்.''

''இங்கே பாருங்கள். நான் சட்டத்தைப் பிரிக்கப் போவதில்லை. அங்கே தெய்வ வடிவ விளக்குக்குப் பின்னால் உள்ள தெய்வ வடிவங்களுடன் இதையும் வைக்கிறேன்,'' என்று நான் சிறிது நேரம் சிந்தித்த பிறகு கூறினேன். (நான் இந்தத் தொழிலை ஆரம்பித்ததிலிருந்து அங்கே எப்பொழுதும் ஒரு விளக்கு எரிந்து கொண்டிருக்கும்.) ''இதற்கு உங்களுக்குப் பத்து ரூபிள் கொடுக்கிறேன்.''

''எனக்குப் பத்து வேண்டாம்; ஐந்து கொடுத்தால் போதும். நிச்சயமாக நான் அதைத் திருப்பிவிடுவேன்.''

''உங்களுக்குப் பத்து வேண்டாமா? இந்த தெய்வ வடிவம் பத்து ரூபிள் பெறுமதிப்புள்ளதே'' என்று நான் கூறிய பொழுது அவளுடைய கண்கள் மறுபடியும் நெருப்பாக மாறுவதைக் கண்டேன். அவள் ஒன்றும் பேசவில்லை. நான் அவளிடம் ஐந்து ரூபிள்களைக் கொடுத்தேன்.

''மற்றவர்களைப் பற்றி மட்டமாக நினைக்காதீர்கள்,'' என்று நான் கூறினேன். ''இப்படிப்பட்ட கஷ்டங்கள் எனக்

கும் ஏற்பட்டதுண்டு. ஒரு வேளை இதைக் காட்டிலும் மோசமானவையாகக் கூட இருக்கலாம். இப்பொழுது நான் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பதை நீங்கள் பார்க்கிறீர்கள் என்றால்... எனக்கேற்பட்ட துன்பங்களே அதற்குக் காரணம்...''

''சமூகத்தைப் பழி வாங்குகிறீர்களாக்கும், அப்படித் தானே?'' என்று அவள் எரிச்சலாகக் கேட்டபடியே என்னுடைய பேச்சில் குறுக்கிட்டாள். ஆனால் அந்த வார்த்தைகள் மிகவும் கபடமில்லாதிருந்தன. (பொதுவாக அவற்றில் கபடமில்லை என்பது என் கருத்து, ஏனென்றால் அப்பொழுது அவள் என்னைக் கூட்டத்திலிருந்து வேறுபடுத்திப் பார்க்கவில்லை. எனவே அவளுடைய வார்த்தைகள் எனக்கு வேதனையுண்டாக்கவில்லை.) ''அப்படியா!'' என்று நான் நினைத்தேன். ''நீ இப்படிப்பட்டவளா! புதிய குணம்சங்களுடன் உன் பண்பு இப்பொழுது ஆதாரத்துடன் வெளிப்படுகிறதே...''

''இங்கே பாருங்கள்,'' என்று நான் வேகமாகப் பாதி வேடிக்கையாகவும் பாதி மர்மமாகவும் பேசினேன். ''தீமை செய்ய விரும்புகின்ற ஆனால் நன்மையே செய்கின்ற மொத்தத்தில் நான் ஒரு பகுதி...''

அவள் அதிகமான ஆர்வத்தோடு என்னை வேகமாகப் பார்த்தாள். அவள் பார்வை ஒரு குழந்தையின் பார்வையைப் போல இருந்தது.

''சற்றுப் பொறுங்கள்... அவை யார் சொன்ன வார்த்தைகள்? எதில் இருக்கிறது? நான் அவற்றை எங்கேயோ கேட்டிருக்கிறேன்...''

''உன் மூளையைக் கஷ்டப்படுத்தாதே. மெபிஸ்டோபிலிஸ் பௌஸ்டசுக்கு முன்னால் தோன்றியபொழுது கூறிய வார்த்தைகள் இவை. நீங்கள் பௌஸ்டசைப் படித்திருக்கிறீர்களா?''

''இல்லை... கவனமாகப் படிக்கவில்லை.''

''வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் படிக்கவில்லை. நீங்கள் அவசியம் அதைப் படிக்க வேண்டும். ஆனால் நீங்கள் மறுபடியும் உதடுகளை ஏளனமாகச் சுழிப்பதைப் பார்க்கிறேன். உங்களுக்கு முன்னால் மெபிஸ்டோபிலிசாகத் தோன்றுவதன் மூலம் அடகுக் கடைக்காரன் என்ற என்னுடைய தொழிலை மூடி மறைப்பதற்கு நான் முயற்சி செய்கின்ற அளவுக்குப் பண்புக்குறைவான நபர் என்று என்னைப்

பற்றி நீங்கள் தயவு செய்து நினைத்து விடாதீர்கள். அடகுக் கடைக்காரன் எப்பொழுதும் அடகுக் கடைக்காரன் தான். அது எனக்கு நன்ருகத் தெரியும்.''

''நீங்கள் விசித்திரமானவர்தான். உண்மையில்... நான் அப்படி எதுவும் நினைக்கவில்லை...''

''நீங்கள் படித்த மனிதராக இருப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை'' என்று சொல்ல அவள் விரும்பினுள். அவள் அப்படிச் சொல்லவில்லை. ஆனுல் அந்த எண்ணம் இருந்தது என்று எனக்குத் தெரியும். அவள் மிகவும் இனிமையான ஆச்சரியத்துக்குள்ளானுள்.

''இங்கே பாருங்கள். ஒருவர் எந்த வாழ்க்கையை மேற்கொண்டாலும் நன்மை செய்ய முடியும். நான் என்னைப் பற்றிச் சொல்லவில்லை என்பது உண்மை. நான் தீமையைத் தவிர வேறு ஒன்றுமே செய்வதில்லை. ஆனுல்...''

''ஒருவர் எந்த நிலைமையில் இருந்தாலும் நன்மை செய்ய முடியும் என்பது நிச்சயமே,'' என்று என்னை வேகமாகவும் புரிந்து கொண்ட முறையிலும் பார்த்தபடியே அவள் கூறினுள். ''ஆமாம். எந்த நிலைமையிலும்,'' என்று அவள் திடீரென்று திருப்பிச் சொன்னுள். ஓ! அந்தக் கணங்களை, நான் எவ்வளவு நன்ருக நினைவில் வைத்திருக்கிறேன்! நம்முடைய இளைய வயதினர், நமது அன்புமிக்க இளைய தலைமுறையினர் மிகவும் புத்திசாலித்தனமாகவும் புரிந்து கொண்ட முறையிலும் ஏதாவது சொல்ல விரும்புகின்ற நேரத்தில் அவர்களுடைய முகங்கள் மிகவும் மனப்பூர்வமாகவும் வெகுளித்தனமாகவும் ''நான் உங்களிடம் மிகவும் புத்திசாலித்தனமாகவும் புரிந்து கொண்ட முறையிலும் ஒரு விஷயத்தைப் பேசுகிறேன்'' என்று எடுத்துக் காட்டுகின்றன என்பதையும் நான் சேர்த்துச் சொல்கிறேன். என்னைப் போன்றவர்களிடம் இது அகம்பாவத்தில் தோன்றுவதைப் போல அல்ல; அவர்கள் அதை மிக அதிகமாக மதிக்கிருர்கள், நம்புகிருர்கள், சிறப்புத் தருகிருர்கள்; நீங்களும் அவர்களைப் போல அதே அளவுக்கு மதிப்பதாகக் கற்பனை செய்கிருர்கள் என்பதை நீங்கள் பார்க்க முடியும். எப்படிப்பட்ட கபடின்மை! அது அவர்களுடைய மிகவும் உண்மையான ஆயுதம். அவளிடம் அது மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது!

நான் அவை அனைத்தையும் நினைவில் வைத்திருக்கிறேன், எதையும் மறக்கவில்லை! அவள் வெளியே நடந்த

பொழுது நான் உடனே ஒரு முடிவுக்கு வந்தேன். அன்றைய தினத்திலேயே அவளைப் பற்றி என்னுடைய விசாரணைகளை முடித்துக் கொள்ளவும் அவளுடைய வாழ்க்கையைப் பற்றி இன்னும் எஞ்சிய, நடப்பிலுள்ள ரகசியங்களைக் கண்டுபிடிக்கவும் புறப்பட்டேன். பழைய ரகசியங்கள் அனைத்தையும் அப்பொழுது அவர்களிடமிருந்த லுக்கேரியா என்ற வேலைக்காரியின் மூலம்—சில நாட்களுக்கு முன்பு அவளுக்கு லஞ்சம் கொடுத்து வைத்திருந்தேன்—தெரிந்து கொண்டிருந்தேன். அந்த ரகசியங்கள் எனக்கு மிகவும் அதிர்ச்சியைக் கொடுத்தன, அவளுடைய சொந்த நிலைமை இவ்வளவு பயங்கரமாக இருக்கும் பொழுது அவளால் எப்படிச் சிரிக்க முடிகிறது, மெபிஸ்டோபிலிசின் வார்த்தைகளைப் பற்றி ஆர்வம் காட்ட முடிகிறது என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் இதுதான் இளமை! நான் அப்பொழுது அவளைப் பற்றி இப்படித்தான் பெருமிதம், மகிழ்ச்சியுடன் நினைத்தேன், ஏனென்றால் இதில் வீரார்ந்த பெருந்தகைமை இருந்தது; ''நான் அழிவின் விளிம்பில் நிற்கலாம், ஆனால் கேதேயின் சிறந்த வார்த்தைகள் பேரொளியுடன் சுடர் விடுகின்றன'' என்று கூறுவதைப் போல இருந்தது. இளமை எப்பொழுதுமே பெருந்தன்மையானது—அது எவ்வளவு சிறிதாக இருந்தாலும் அல்லது தவறாக உபயோகிக்கப் பட்டாலும். நான் அவளை, அவளை மட்டுமே குறிப்பிடுகிறேன். நான் ஏற்கெனவே அவளை **எனக்குரியவளாகக்** கருதிக்கொண்டிருந்தேன் என்பதுதான் முக்கியமானது, என்னுடைய சக்தியைப் பற்றி எனக்குச் சந்தேகங்கள் இல்லை. உங்களிடம் சந்தேகம் இல்லாதிருப்பது மிகவும் இனிமையான உணர்ச்சி என்பது உங்களுக்குத் தெரியுமா?

ஆனால் நான் எதைப் பேசிக்கொண்டிருக்கிறேன்? நான் இப்படி நடந்து கொண்டால் ஒருபோதும் என்னுடைய சிந்தனைகளை ஒருமுகப்படுத்த முடியாது. ஓ! சீக்கிரம், சீக்கிரம், எல்லாமே விஷயத்திற்குப் புறம்பானவை, அட கடவுளே!

2

திருமணக் கோரிக்கை

அவளைப் பற்றி நான் கண்டு பிடித்த ''ரகசியங்களை'' நான் சுருக்கமாகச் சொல்கிறேன்: அவளுடைய தகப்பனு

ரும் தாயாரும் மூன்று வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார்கள். அவள் வசதியற்ற அத்தைகளிடம் போய்ச் சேர்ந்தாள். அவர்களை வசதியற்றவர்கள் என்று சொல்வது அவர்களுடைய நிலைமையைச் சரியாக விளக்குவதாகாது. ஒரு அத்தை பெரிய குடும்பத்தைக் கொண்ட விதவை. வரிசைக் கிரமமாக ஆறு குழந்தைகள். அடுத்த அத்தை திருமணமாகாத முதியவள், மோசமான குணம். இரண்டு அத்தைகளுமே மோசமான குணமுடையவர்கள்தான். அவள் தகப்பனுர் அரசாங்க இலாகாவில் வேலை செய்தவர். வெறும் எழுத்தர் வேலைதான். அவருக்கு உயர்குடி அந்தஸ்து கொடுக்கப்பட்டது தனிப்பட்ட கௌரவம் என்ற முறையில் தான்—அதற்கு மேல் அது முக்கியமானதல்ல, சுருக்கமாகச் சொல்வதென்றுல் இவை எல்லாமே எனக்குச் சாதகமானவை. நான் ஒரு வகையில் அவர்களைக் காட்டிலும் உயர்வான உலகத்தைச் சேர்ந்தவன். ஒரு முக்கியமான படைப்பிரிவின் ஓய்வு பெற்ற ஜூனியர் காப்டன் நான். உயர்ந்த குடியில் பிறந்தவன், சொந்தமாகப் பண வசதி உடையவன் மற்றும் இதரவை. என்னுடைய அடகுக் கடையைப் பொறுத்த மட்டில் அவளுடைய அத்தைகள் அதைப் பற்றி மரியாதையாகவே நினைப்பார்கள். வேறு எவ்விதமான உணர்ச்சியும் அவர்களிடம் ஏற்பட முடியாது. அத்தைகள் அவளை மூன்று வருடங்கள் அடிமையைப் போல நடத்திஞர்கள்; எனினும் எங்கோ பள்ளிக்கூடத் தேர்வுகள் எழுதி அவள் வெற்றி பெற்ருள்; அவள் எப்படியோ வெற்றியடைந்திருக்கிருள், கொடுமையான அடிமை உழைப்பிலிருந்து தப்பிச் சென்று அதைச் சாதித்திருக்கிருள்; அவள் சிறப்பான, உயர்வான விஷயங்களைப் பற்றி ஏங்கிஞள் என்பதை அது நிச்சயமாக நிரூபித்தது. நன்ருகக் கவனி! நான் அவளைத் திருமணம் செய்வதற்கு விரும்பிய காரணம்... வேண்டாம். அதைப் பிறகு சொல்கிறேன்... அது முக்கியமா என்ன? அவள் தன் அத்தைகளின் குழந்தைகளுக்குப் பாடம் கற்பித்தாள், அவர்களுடைய உடைகளைத் தயாரித்தாள், கடைசியில் அவர்களைக் குளிப்பாட்டுவது மட்டுமல்லாமல் வீட்டைத் தேய்த்துக் கழுவுவதும் அவளுடைய வேலையாயிற்று, இத்தனைக்கும் அவளுடைய நுரையீரல்கள் மோசமான நிலையில் இருந்தன! உண்மையைச் சொல்வதென்ருல் அவர்கள் அவளை அடித்தார்கள்,

அவளுக்கு உணவளிப்பதற்குக் கூட அவர்கள் கருமித்தனம் காட்டினுர்கள். முடிவில் அவளே விற்பனே செய்துவிட அவர்கள் விரும்பினுர்கள். சே! அந்தக் கேவலமான விவரங்களே நான் சொல்லப் போவதில்லே. அவை எல்லாவற்றையும் அவள் பின்னர் என்னிடம் கூறினுள். அடுத்த வீட்டிலிருந்த ஒரு பருமனுன கடைக்காரன் இவை அனேத்தையும் ஒரு வருட காலம் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் சாதாரணமான கடைக்காரன் அல்ல. ஏனென்ருல் அவனுக்கு இரண்டு கடைகள் இருந்தன. அவன் ஏற்கெனவே இரண்டு மனேவிகளேக் கல்லறைக்கு அனுப்பிவிட்டான். மூன்ருவது மனேவியைத் தேடிக் கொண்டிருந்தான். ''அவள் அமைதியானவள், வறுமையில் வளர்ந்தவள், என்னுடைய அனுதைக் குழந்தைகளுடைய நன்மைக்காகவே நான் அவளேத் திருமணம் செய்யப் போகிறேன்'' என்று அவன் நினேத்தான். அவன் குழந்தைகளே யாராவது வளர்ப்பது உண்மையாகவே அவசியமாக இருந்தது. அவன் தன்னுடைய உத்தேசத்தைத் தெரிவித்தான், அவனும் அவளுடைய அத்தைமார்களும் ஏற்பாடுகளேச் செய்யத் தொடங்கினுர்கள் (அவன் வயது ஐம்பது). அவள் பீதியடைந்தாள். அதன்பிறகு தான் குரல் பத்திரிகையில் விளம்பரம் செய்வதற்குப் பணத்துக்காக அவள் என்னிடம் வரத் தொடங்கினுள். கடைசியில் அவள் அதைப் பற்றிச் சிந்தித்து முடிவு செய்வதற்கு அவகாசம்—அது எவ்வளவு குறைவான நேரமாக இருப்பினும்—கொடுக்குமாறு அத்தைமார்களிடம் கெஞ்சினுள். அவர்கள் சரி என்று கூறி அவளுக்கு ஒரு கண நேரம் கொடுத்தார்கள்—ஆனுல் ஒரே ஒரு கண நேரம் மட்டும் தான்; இரண்டாவது கணம் கிடையாதென்று மறுத்தார்கள். அவளுடைய வாழ்க்கையைத் துன்பமயமாக்கினுர்கள். ''எங்களுக்கே சாப்பிட ஒன்றுமில்லாத பொழுது உனக்கு எங்கிருந்து போடுவது?'' இவை அனேத்தும் எனக்கு ஏற்கெனவே தெரியும். காலே நேர உரையாடல் முடிந்தபிறகு அன்று நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். கடைக்காரன் ஐம்பது கோபெக்குகளுக்கு சாக்லேட்டைக் கடையிலிருந்து வாங்கிக் கொண்டு மாலே நேரத்தில் அவளேப் பார்க்க வந்தான். அவள் அவனேடு உட்கார்ந்திருந்தாள். நான் சமையலறையிலிருந்த லுக்கேரியாவைக் கூப்பிட்டேன். நான் வாயிலில் காத்துக் கொண்டிருக்கிறேன், அவளிடம் முக்கியமாக ஏதோ சொல்ல

விரும்புகிறேன் என்று இரகசியமாகத் தெரிவிக்கும்படி லுக்கேரியாவை அனுப்பினேன். என்னுடைய திட்டம் எனக்குத் திருப்தியைக் கொடுத்தது. மொத்தத்தில் அன்று முழுவதும் நான் மிகவும் மகிழ்ச்சியோடிருந்தேன்.

அந்தக் கதவுக்குப் பக்கத்தில் லுக்கேரியாவுக்கு முன்னால் அவளிடம்—நான் அவளைக் கூப்பிட்டதே அவளுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது—எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும், கௌரவமாகக் கருதுவேன் என்று கூறினேன்... அடுத்தபடியாக, என்னுடைய தோரணையையும் கதவுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு திருமணக் கோரிக்கை செய்வதையும் பற்றித் திகைப்படைய வேண்டாம் என்று நான் அவளிடம் கூறினேன். ''நான் கபடமில்லாதவன், அவளுடைய நிலைமை எனக்கு நன்றாகத் தெரியும்'' என்று அவளிடம் கூறினேன். நான் கபடமில்லாதவனே. அது பொய் அல்ல. என்னுடைய பேச்சு கண்ணியமாக இருந்தது—அது என்னுடைய நற்பண்புக்குச் சான்று—மட்டுமல்லாமல் தற்சிந்தனையாகவும் இருந்தது. அதுதான் முக்கியமானது. ஓ, சரி! அதை ஒத்துக்கொள்வதைத் தவறு என்று ஏன் கருத வேண்டும்? நான் என்னைப் பற்றித் தீர்ப்புக் கூற விரும்புகிறேன், அப்படியே ஆகட்டும். ஆதரித்தும் எதிர்த்தும் நானே பேச வேண்டும். அப்படியே ஆகட்டும். அது முட்டாள்தனமானது என்று எனக்குத் தெரியும்; ஆனால் அதை நினைவு கூர்வது அதற்குப் பிறகும் கூட எனக்கு ஆனந்தத்தைக் கொடுத்தது. நான் குறிப்பிடத்தக்க அளவுக்குத் திறமைசாலியோ அல்லது புத்திசாலியோ அல்ல, ஒருவேளை குறிப்பிடத்தக்க அளவுக்கு அன்புள்ளம் கொண்டவனும் அல்ல; நான் ஒரு மலிவான ஆணவக்காரனே (அந்தச் சொற்றொடர் எனக்கு நினைவிருக்கிறது, நான் அங்கே போய்க் கொண்டிருந்தபொழுது அது எனக்குத் தோன்றியது, நான் அதை ரசித்தேன்); மற்ற விஷயங்களிலும் அதிருப்திகரமான அம்சங்கள் என்னிடம் அதிகமாக இருப்பது கூட முற்றிலும் சாத்தியமே. நான் இவை அனைத்தையுமே ஒரு பிரத்யேகமான இறுமாப்புடன் கூறினேன்—இப்படிப்பட்ட விஷயங்கள் எப்படிச் சொல்லப்படுகின்றன என்பது நம் எல்லோருக்கும் தெரியும். என்னுடைய குறைகளைத் திறந்த மனதுடன் எடுத்துக் கூறிய பிறகு என்னுடைய திறமைகளைப் பற்றி நான் எடுத்துக் கூறாமலிருக்கின்ற அளவுக்கு என்னிடம்

போதிய நாகரிகமிருந்தது என்பது குறிப்பிடாமலே விளங்கும்: ''ஆனால் அதற்கு மாற்றாக என்னிடம் இது இருக்கிறது, அது இருக்கிறது''. அவள் இன்னும் அதிகமான பயத்துடனிருந்தாள் என்பதை நான் பார்க்க முடிந்தது ஆனால் நான் என்னுடைய பேச்சின் தொனியைக் குறைக்கவில்லை. அதற்கு மாறாக அவள் பயத்தோடிருப்பதைப் பார்த்ததும் நான் வேண்டுமென்றே அதை இன்னும் கடுமையாக்கினேன்: அவளுக்குப் போதுமான உணவு கிடைக்கும், ஆனால் நவநாகரிக உடைகள், நாடக அரங்குகளுக்கும் நடனங்களுக்கும் செல்லுதல் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் அவை இப்போது கிடையாது, ஒரு வேளை பிற்காலத்தில் என்னுடைய இலட்சியம் நிறைவேறிய பிறகு அவற்றுக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று அவளிடம் நேரடியாகச் சொன்னேன். என்னுடைய கண்டிப்பு எனக்கு உணர்ச்சியூட்டியது. நான் அடகுக் கடைத் தொழிலை நடத்திக் கொண்டிருந்த போதிலும், நான் ஒரு இலட்சியத்துக்காகவே பாடுபடுகிறேன், சில சந்தர்ப்பங்களை எதிர்பார்க்கிறேன் என்று என்னாலியன்ற அளவுக்கு சாதாரணமாகத் தெரிவித்தேன்... ஆனால் அப்படிச் சொல்ல எனக்கு உரிமையுண்டு. எனக்கு உண்மையிலேயே ஒரு இலட்சியம் இருந்தது, சில சந்தர்ப்பங்கள் இருந்தன. கனவான்களே, ஒரு கணம் பொறுங்கள். வேறு எல்லோரையும் காட்டிலும் நான் என் வாழ்க்கை முழுவதுமே அடகுத் தொழிலை வெறுத்தவன். மறைவான சொற்றொடர்களில் ஒருவர் தன்னிடம் பேசுவது உண்மையிலேயே முட்டாள்தனம் என்ற போதிலும் நான் உண்மையாகவே ''சமூகத்தைப் பழிவாங்கிக் கொண்டிருந்தேன்''. நான் பழிவாங்கினேன். ஆம். பழிவாங்கினேன்! ஆகவே அவள் அன்று காலையில் ''சமூகத்தை நான் பழிவாங்குகிறேனா?'' என்று கிண்டலாகக் கேட்டது நியாயமற்றது. இங்கே பாருங்கள். ''ஆம். நான் சமூகத்தைப் பழிவாங்கிக் கொண்டிருக்கிறேன்'' என்று நான் அவளிடம் பச்சையாகச் சொல்லியிருந்தால் அவள் அன்று காலையில் சிரித்ததைப் போல சிரித்திருப்பாள். அது உண்மையிலேயே அபத்தமாக ஒலித்திருக்கும். மேலும் நான் ஒரு தெளிவில்லாத சூசகத்தைச் சொல்லி, ஒரு மர்மமான வாக்கியத்தைக் கூறி அவளுடைய கற்பனையோடு விளையாட முடியும் என்பதை நான் கண்டேன். அது மட்டுமல்ல. நான் ஏற்கெனவே எதற்கும் பயப்படவில்லை: எப்படி இருந்தாலும் அந்தப்

பருமஞன கடைக்காரனைப் பற்றி அவள் அதிகமாக அருவருப் படைந்திருப்பாள், தன்னை விடுதலை செய்ய வந்தவராக என்னைக் கருதுவாள் என்பதை நான் அறிவேன். நான் அதைப் புரிந்துகொண்டிருந்தேன், உங்களுக்குப் புரிகிறதா? இழிவான சந்தர்ப்பங்களை மதிப்பிடுவதில் மனிதன் குறிப்பிடத்தக்க அளவுக்குத் திறமையானவனே. ஆனல் நான் செய்தது தவரு? ஒரு மனிதனை எப்படி மதிப்பிடலாம்? நான் அந்த சமயத்தில் கூட அவளைக் காதலிக்கவில்லையா?

ஒரே ஒரு நிமிடம் பொறுங்கள்: நான் அவளுக்கு நன்மை செய்பவன் என்று சூசகமாகக்கூட அப்பொழுது அவளிடம் நான் இயற்கையாகவே குறிப்பிடவில்லை, ஓ, இல்லை; அதற்கு மாருக, ''அவளுக்குக் கடன் பட்டிருப்பது **நானே** தவிர **அவள்** அல்ல'' என்று அவளிடம் கூறினேன். நான் மெய்யாகவே அப்படிச் சொன்னேன்; என்ஞல் அப்படிச் சொல்லாதிருக்க முடியவில்லை. அது அசட்டுத்தனமாகக் கூட இருந்திருக்க வேண்டும், ஏனென்ருல் அவள் முகத்தில் சட்டென்று ஒரு பாவம் தோன்றி மறைவதை நான் கவனித்தேன். ஆனல் மொத்தத்தில் நிச்சயமாக வெற்றியடைந்தது நானே. இதோ பார், அந்த இழிதகவான எல்லாவற்றையும் நான் நினைவுபடுத்திக் கூறுகின்றபடியால் என்னுடைய கடைசிப் பண்பில்லாத செயலையும் சொல்லிவிடுகிறேன். நான் அங்கே நின்றுகொண்டிருந்த பொழுது என் மனம் பின்வருமாறு சிந்தித்துக் கொண்டிருந்தது: ''நான் உயரமானவன், கட்டான உடல், நல்ல வளர்ப்பு, பெருமையாகச் சொல்கிறேன் என்பதில்லை, ஆனல் என் தோற்றம் மோசமானதல்ல''. இப்படிப்பட்ட சிந்தனைகள்தான் என்னுடைய மூளையில் மோதிக் கொண்டிருந்தன. அவள் அந்தக் கதவுக்குப் பக்கத்தில் நின்றபடியே ''சரி'' என்று கூறினள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? ஆனல்... ஆனல் ஒன்றை நான் கூடுதலாகச் சொல்லிவிட வேண்டும்: அவள் சரி என்று சொல்வதற்கு முன்பு கதவுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு வெகு நேரம் சிந்தித்துக் கொண்டிருந்தாள். அவள் சிந்தனையில் மூழ்கித் தன்னை மறந்துவிட்டாள் என்று தோன்றியபடியால் நான் ''என்ன?'' என்று கேட்க நினைத்தேன். ஆனல் என்னுடைய குரலிலிருந்த செருக்கை என்ஞல் மறைக்க முடியாமல் ''அப்படியாஞல் என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''பொறுங்கள், நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.''

அவளுடைய இனிமையான முகம் கருமையடைந்தது. நான் அப்பொழுதே அதைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஆனல் ''எனக்கும் அந்தக் கடைக்காரனுக்கும் இடையில் யாரைத் தேர்ந்தெடுப்பது என்று அவள் சிந்திக்கிருளா?'' என்று நினைத்து நான் மனவாட்டமடைந்தேன். ஓ! அப்பொழுது எனக்கு ஒன்றும் புரியவில்லை. நான் ஒன்றையும் புரிந்து கொள்ளவில்லை, ஒன்றையுமே புரிந்து கொள்ளவில்லை! இன்றுவரை நான் ஒன்றையும் புரிந்து கொள்ளவில்லை! நான் போகத்திரும்பியபொழுது லுக்கேரியா எனக்குப் பின்னல் ஓடிவந்து என்னை நிறுத்திக் கொண்டு மூச்சுத் திணறியபடி ''அன்பான ஐயா! எங்களுடைய அன்பான செல்வியைத் திருமணம் செய்து கொள்வதற்காகக் கடவுள் உங்களைக் காத்தருள்வார், அவள் அகம்பாவம் உடையவள், அவளிடம் இதைத் தெரிவிக்க வேண்டாம்'' என்று கூறியது எனக்கு நினைவிருக்கிறது.

ஓ! அவள் அகம்பாவம் உடையவளா, அப்படியா! எனக்கு அகம்பாவமான இளம் பெண்களைப் பிடிக்கும். அகம்பாவமானவர்கள் மிகவும் சிறப்பானவர்களே... அதிலும்... சரி, அவர்கள் மீது உங்களுடைய சக்தியை நீங்கள் இனியும் சந்தேகிக்காத பொழுது. ஓ! நான் எவ்வளவு இழிவான, முரட்டுத்தனமான மனிதன்! ஓ! அப்பொழுது எவ்வளவு மகிழ்ச்சியடைந்தேன்! அவள் என்னிடம் சரி என்று ஒப்புதல் தருவதற்கு முன்னல் கதவுக்குப் பக்கத்தில் சிந்தித்தவாறு நின்று கொண்டிருந்த பொழுது—அது எனக்குப் புதிராகத்தான் இருந்தது—அவள் உண்மையில் எதைப் பற்றிச் சிந்தனை செய்துகொண்டிருந்தாள் என்பது உமக்குத் தெரியுமா? ''இங்கே எனக்குத் துன்பம், அங்கும் எனக்குத் துன்பமே ஏற்படும். எனவே ஆக மோசமான ஒன்றை அதாவது அந்தப் பருமஞன கடைக்காரனை உடனடியாகத் தேர்ந்தெடுப்பதுதானே மிகவும் சிறந்ததாக இருக்கும். அவன் குடி மயக்கத்தில் என்னை அடித்துக் கொல்லட்டும் எவ்வளவு சீக்கிரம் மரணமடைகிறேஞே அவ்வளவு எனக்கு நல்லது!'' சொல்லுங்கள், அவள் இப்படி நினைத்துக் கொண்டிருந்திருப்பாளா?

ஆனல் இப்பொழுது கூட எனக்கு அது புரியவில்லை, இப்பொழுது கூட நான் ஒன்றையும் புரிந்து கொள்ளவில்லை!

இரண்டு தீமைகளில் மிகவும் மோசமான ஒன்றை, அதாவது கடைக்காரனைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அவள் நினைத்துக் கொண்டிருந்திருப்பாள் என்று சற்று முன்னர் நான் கூறினேன். ஆனால் அப்பொழுது அவளுக்கு எங்கள் இருவரில் மோசமானதாகத் தோன்றியது யார், கடைக்காரனா அல்லது நானா? கடைக்காரனா அல்லது மெபிஸ்டோபிலிசை மேற்கோள் காட்டிய அடகுக் கடைக்காரனா? இது நல்ல கேள்வி! எப்படிப்பட்ட கேள்வி? இதையாவது உம்மால் புரிந்து கொள்ள முடிகிறதா? உங்கள் பதில் அதோ மேசையின்மீது கிடக்கிறது. ஆகவே கேள்வி வேறு எப்படி இருக்க முடியும்? பிறகு எனக்குத் தொல்லை கொடுங்கள். இங்கே பிரச்சினை நான் அல்ல... பிரச்சினை நானா அல்லது இல்லையா என்பதைப் பற்றி இப்பொழுது எனக்குக் கவலை ஏது? அது நான் முற்றிலும் தீர்க்க முடியாத ஒன்று. ஒரு வேளை நான் படுத்துத் தூங்க வேண்டியதுதான். என் தலை மிகவும் வலிக்கிறது...

3

மனிதர்களில் மிகவும் மேன்மையானவன், ஆனால் நான் உண்மையிலேயே அதை நம்பவில்லை

என்னால் தூங்க முடியவில்லை. என் மூளை கொதித்துக் கொண்டிருக்கும் பொழுது எப்படித் தூங்க முடியும்? நான் எல்லாவற்றையும், அந்த இழிதகவுகள் அனைத்தையும் சுவீகரிக்க விரும்புகிறேன். ஓ, இழிதகவு! அப்பொழுது அவளை எந்த இழிவான நிலைமையிலிருந்து காப்பாற்றினேன்! அவள் நிச்சயமாக அதைப் புரிந்து கொண்டு என்னுடைய செயலைப் பாராட்டியிருக்க வேண்டுமே? நான் பல மகிழ்ச்சியான சிந்தனைகளை நினைத்துக் களிப்படைந்தேன் அவளுக்குப் பதினாறு வயது மட்டுமே, எனக்கு நாற்பத்தொரு வயது என்பது அவற்றில் ஒன்று. இந்த வயது வேற்றுமை எனக்கு வசீகரமாக இருந்தது. அது எனக்கு இனிமையான உணர்ச்சியைக் கொடுத்தது, மிகவும் இனிமையான உணர்ச்சியைக் கொடுத்தது.

எங்கள் திருமணம் à l'anglaise* நடைபெற வேண்டும் என்று நான் விரும்பினேன். அதாவது இரண்டு சாட்சிகள் மட்டும் இருப்பார்கள்—அவர்களில் லுக்கேரியா ஒரு நபர்—உடனே ரயிலில் புறப்பட்டு, ஒரு வேளை மாஸ்கோவுக்குப் போக வேண்டியது (அங்கே எனக்குச் சில வேலைகள் இருந்தன). ஒரு ஹோட்டலில் இரண்டு வாரங்களோ அல்லது கூடுதலாகவோ தங்குவது. அவள் இதை மறுத்தாள். அவள் இதை அனுமதிக்கவில்லை. ஒருவர் திருமணம் செய்ய விரும்புகின்ற பெண்ணின் பெற்றோர்களை முறைப்படி பார்க்கச் செல்வதைப் போல அவளுடைய அத்தைமார்களை வணக்க முறையில் பார்க்கும்படி நான் நிர்ப்பந்திக்கப்பட்டேன். நானும் அதை ஒத்துக் கொண்டேன். அத்தைமார்கள் உரிய மரியாதையைப் பெற்றார்கள். அந்தக் கிழவிகள் ஒவ்வொருவருக்கும் நூறு ரூபிள்கள் கொடுத்து இன்னும் கொடுப்பேன் என்று வாக்குறுதியளிக்கின்ற அளவுக்கு நான் சென்றேன். இவற்றைப் பற்றி நான் அவளிடம் ஒன்றும் சொல்லவில்லை என்பது உண்மையே. ஏனென்றால் இந்த மொத்த விவகாரத்தின் கீழ்மையினால் அவள் மனச் சங்கடம் அடையக்கூடாதென்று கருதினேன். அத்தைமார்கள் உடனே பணிவாகவும் அடக்கமாகவும் மாறினார்கள். அவளுடைய மணப்பெண் உடைகளைப் பற்றியும் எங்களுக்கிடையில் வாக்குவாதம் நடைபெற்றது. அவளிடம் ஒன்றுமில்லை, உண்மையில் அநேகமாக ஒன்றுமில்லை. ஆனால் அவள் ஒன்றையும் விரும்பவில்லை. அப்படியிருக்க முடியாது என்று நான் ஒரு வழியாக அவளிடம் நிரூபித்தேன். நான் அவளுக்குத் திருமண உடைகளை வாங்கினேன். இல்லையென்றால் வேறு யார் வாங்கிக் கொடுப்பார்கள்? ஓ! பெருந்தொல்லை. எனினும் அந்த சமயத்தில், குறைந்த பட்சம் அவளிடம் என்னுடைய கருத்துக்களைப் பற்றி ஓரளவேனும் தெரிவிப்பதற்காக அவளிடம் கூறினேன். ஒரு வேளை நான் அவசரப்பட்டு விட்டேனோ என்னவோ? ஆரம்பத்திலிருந்தே அவள் அந்த உந்துதலைக் கட்டுப்படுத்த முயற்சி செய்தபோதிலும் வெறியுடன் என்னைக் காதலித்தாள். நான் மாலை நேரத்தில் அவளைப் பார்க்க வந்த பொழுது என்னை ஆர்வத்துடன் வரவேற்றாள், தன்னுடைய குழந்தைப் பருவத்தையும். அவளுடைய பெற்றோர்களின் வீட்டையும் அவளு

* ஆங்கிலநாட்டு முறையில் (பிரெஞ்சு).—ப-ர்.

டைய தகப்பனுரையும் தாயாரையும் பற்றிக் களிப்போடு குதலைப் பேச்சுப் பேசினுள். (கவர்ச்சிகரமான, கவடில்லாத குதலைப் பேச்சு!) ஆனுல் நான் அந்தக் கணத்திலேயே அவளு டைய உணர்ச்சிப் பரவசத்தை உடைத்துவிட்டேன். நான் கொண்டிருந்த கருத்து அப்படிச் செய்யுமாறு என்னைத் தூண்டியது. அவள் பரவசமடைந்த பொழுது நான் மௌன மாக இருந்தேன், கருணை நிறைந்த மௌனங்கள் என்பது உண்மையே... ஆனுல் நாங்கள் வெவ்வேருனவர்கள், நான் ஒரு புதிர் என்பதை அவள் சீக்கிரத்தில் புரிந்து கொண் டாள். அப்படி ஒரு புதிராகத் தோன்ற வேண்டும் என்பதற் காகவே நான் அதிகமாகப் பாடுபட்டுக் கொண்டிருந்தேன். அந்த நோக்கத்துக்காகவே என்னுடைய மொத்த சோர் வான அணுகுமுறையும் கடைப்பிடிக்கப்பட்டது. முதலாவ தும் முக்கியமானதும்—கண்டிப்பு. திருமணம் முடிந்த பிற கும் அதைக் கடைப் பிடித்தேன். சுருக்கமாகச் சொல்வ தென்ருல் அப்பொழுது எனக்குத் திருப்தி ஏற்பட்டிருந்தா லும் நான் ஒரு மொத்த அமைப்பு முறையை உருவாக்கி வைத்திருந்தேன். ஓ! என்னுடைய தரப்பில் எந்த முயற்சி யும் இல்லாமலே அது வடிவமெடுத்தது. ஆனுல் நான் வேறு விதமாக இருந்திருக்க முடியாது. ஒரு அசாதாரணமான சந்தர்ப்பத்தின் விளைவாக அந்த அமைப்பை உருவாக்கிக் கொள்ளும்படி நான் நிர்ப்பந்திக்கப் பட்டேன்—ஆனுல் உண்மையாகவே, நான் ஏன் என் மீதே பொய்க் குற்றத் தைச் சுமத்திக் கொள்ள வேண்டும்!'' அந்த அமைப்பு சரியானது. இல்லை, இல்லை, நான் சொல்வதைக் கேளுங்கள், ஏனென்ருல் ஒரு நபரைப் பற்றி நீங்கள் தீர்ப்புக் கூற வேண் டுமென்ருல் நீங்கள் சந்தர்ப்பங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்... கேளுங்கள்!

எப்படி ஆரம்பிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்ருல் எல்லாமே மிகவும் கடினமாக இருக்கிறது. ஒரு நபர் தன்னுடைய சொந்தத் தரப்பில் வாதாடத் தொடங் கும் பொழுது அது கடினமானதே. அது எப்படி என்று நீங் கள் பாருங்கள்: உதாரணமாக, இளமை பணத்தை இழி வாகக் கருதுகிறது; ஆகவே நான் உடனடியாக அதிகமான பணத்தைச் சம்பாதித்தேன். நான் பணத்துக்கு முக்கியத் துவம் கொடுத்தேன். அதை நான் மிகவும் வெளிப்படை யாகச் சொன்னபடியால் அவள் மென்மேலும் மௌனமாக

இருந்தாள். அவள் தன்னுடைய பெரிய விழிகளை அகல மாக விரித்தபடியே கவனித்தாள், கேட்டாள், அமைதி யாக இருந்தாள். இங்கே பார், இளைஞர்கள் பெருந்தகைமை யானவர்கள் அதாவது நல்ல பண்புகளைக் கொண்ட இளை ஞர்கள் பெருந்தகைமையுடனும் வெறியுடனும் இருக்கிறார் கள், ஆனால் அவர்களிடம் பொறுமை இல்லை. அவர்கள் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை என்றால் அக்கணமே அவர் களிடம் இகழ்ச்சி தோன்றி விடுகிறது. நான் பரந்த உள் ளத்தை விரும்பினேன், அவளுடைய இதயத்தில், அந்த இதயத்திலிருந்து வெளிவருகின்ற சிந்தனையில் விரிந்த பார்வையை விதைக்க நான் விரும்பினேன். உங்களுக்குப் புரிகிறதா? நான் ஒரு மட்டமான உதாரணத்தை உங்களி டம் சொல்லப் போகிறேன்; அவளைப் போன்ற ஒரு பெண் ணிடம் என்னுடைய அடகுத் தொழிலை எப்படி நான் நியா யப்படுத்த முடியும்? நான் எல்லாவற்றையும் அவளிடம் சட்டென்று சொல்லவில்லை என்பது இயற்கையே. நான் அப்படி நடந்து கொண்டிருந்தால் என்னுடைய அடகுத் தொழிலை நியாயப்படுத்துவதற்கு சமாதானங்கள் சொல் வதாகத் தோன்றியிருக்கும். எனவே நான் அகம்பாவமிக்க மௌனத்தைக் கடைப் பிடித்தேன். அதாவது, அவளிடம் நடைமுறையில் மௌனமாகவே உரையாடினேன். இப்படி மௌனமாகப் பேசுவதில் நான் கைதேர்ந்தவன். நான் மௌனமாகப் பேசிக் கொண்டிருந்திருக்கிறேன், ஒரு வாழ் நாள் காலத்தைக் கழித்திருக்கிறேன். நான் என்னுடன் தனி மையில் மௌன நாடகங்களை வாழ்ந்து முடித்திருக்கிறேன். ஆனால் நானும் துயரத்தை அறிந்திருக்கிறேன்! என்னை எல் லோருமே கைவிட்டிருக்கிறார்கள், கைவிட்டு மறந்திருக் கிறார்கள். அதைப் பற்றி எவருக்கும்—ஒருவருக்குக் கூடத்— தெரியாது! என் சம்பந்தப்பட்ட எல்லாமே என் இதயத் தில் பூட்டப்பட்டிருந்த பொழுது இந்த அனுபவமில்லாத, அறியாப் பெண் யாரோ சில போக்கிரிகளிடமிருந்து என் னைப் பற்றிய வதந்திகளைக் கேள்விப்பட்டிருக்கிறாள். தனக்கு எல்லாமே தெரிந்து விட்டதாக நம்பியிருக்கிறாள்! நான் மௌனமாக இருந்தேன். நேற்று வரை, இவ்வளவு காலம் முழுவதும் நான் அவளிடம் அர்த்தமுள்ள மௌனத்தைக் கடைப்பிடித்தேன்—நான் ஏன் மௌனமாக இருந்தேன்? என்னுடைய அகம்பாவத்தினால்தான். அவள் தானாகவே

தெரிந்து கொள்ள வேண்டும், என்னுடைய தூண்டுதல் இல்லாமல்—அந்தப் போக்கிரிகளின் கதைகளின் மூலமாக இல்லாமல் என்பது நிச்சயம்—நான் **எத்தகைய மனிதன்** என்பதை அவள் **அறிய வேண்டும்,** என்னைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்பினேன். நான் அவளை என்னுடைய வீட்டுக்குள் கொண்டுவருவதால் அவள் என்னை முழுமையாக மதிக்க வேண்டும் என்று நான் விரும்பினேன். நான் அனுபவித்திருக்கும் துன்பங்களை முன்னிட்டு அவள் என்னைக் கண்டு பயப்பட வேண்டும் என்று நான் விரும்பினேன்—அது என்னுடைய மதிப்புரிமை. ஓ! நான் எப்பொழுதுமே அகம்பாவமாகவே நடந்திருக்கிறேன், எப்பொழுதும் எனக்கு எல்லாமே வேண்டும் அல்லது எதுவுமே வேண்டாம். நான் மகிழ்ச்சியில் அரை நடவடிக்கைகளை நிராகரித்து எல்லாவற்றையுமே விரும்பியதனுல்தான் துல்லியமாக இந்த அணுகுமுறையைப் பின்பற்றும்படி நிர்ப்பந்திக்கப் பட்டேன்: ''நீயே கண்டுபிடித்து என்னுடைய தகுதிக்கு மதிப்புக் கொடு!'' என்னைப் பற்றி நானுகவே விளக்கங்கள் கொடுப்பது, மதிப்புக்காகக் கெஞ்சுவதும் வாதாடுவதும் பிச்சை கேட்டுக் கெஞ்சுவதைப் போலவே இருந்திருக்கும் என்பதை நீங்கள் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்... ஆனுல், அவை அனைத்தையும் பற்றிப் பேச வேண்டுமா?

அது முட்டாள்தனம், முட்டாள்தனம், முட்டாள்தனம்! இளம் வயதினரிடம் பெருந்தகைமை என்பது கவர்ச்சிகரமானது, ஆனுல் மதிப்பில்லாதது என்பதைச் சில வார்த்தைகளில் வெளிப்படையாகவும் கடுமையாகவும் (கடுமை என்ற வார்த்தைக்கு நான் அழுத்தம் கொடுக்கிறேன்) நான் அப்பொழுது அவளிடம் விளக்கினேன். அதற்கு ஏன் மதிப்பில்லை? ஏனென்றுல் அவர்கள் அதை மலிவான முறையில் அடைகிறுர்கள், அவர்கள் வாழத்தொடங்குவதற்கு முன்பே அது அவர்களுக்குக் கிடைக்கிறது. அது ''வாழ்க்கையின் முதல் பதிவுகள்'' என்பதைத் தவிர வேறென்றும் அல்ல. ஆனுல் அவர்கள் அதை முதலில் கடைப்பிடிப்பதைப் பார்க்க நான் விரும்புகிறேன். மலிவான பெருந்தகைமை எப்பொழுதும் சுலபமானது, வாழ்க்கையை தியாகம் செய்வதுகூட மலிவானதே, ஏனென்றுல் இளம் ரத்தமும் உடல்வலிமையும் வடிகாலைத் தேடுகிறது, சிறப்பான ஏதோ ஒன்றைச் செய்ய வேண்டுமென்று வெறி ஏற்படுகிறது என்பதைத்

தவிர அது வேறு எதுவுமில்லை. ஓ! இல்லை. உங்களுடைய பெருந்தகைமையைக் கடினமான, பார்க்கப்பட முடியாத, கேட்கப்பட முடியாத காரியத்தில், எந்தப் பெருமையும் இல்லாத, அதற்கு பதிலாக அவதூறும் மாபெரும் தியாகமும் உள்ள, ஒரு துளிப் புகழும் இல்லாத ஒரு காரியத்தில் உங்களுடைய பெருந்தகைமையை ஈடுபடுத்திப் பாருங்கள் —நேர்மையில் பூமியில் யாரும் உங்களுக்கு நிகராக இல்லாத பொழுது, நீங்கள் ஒளிவீசுகின்ற தூய்மையுடன் இந்தக் காரியத்தில் ஈடுபடுகின்ற நேரத்தில் உலகத்துக்கு முன்னால் ஒரு போக்கிரியாகக் காட்டப்படுவீர்கள்—நீங்கள் இப்படிப் பட்ட சாதனைக்கு முயற்சி செய்வதை நான் பார்க்க விரும்புகிறேன், இல்லை, நீங்கள் அந்த முயற்சியிலிருந்து பின்வாங்குவீர்கள்! நான்—என்னுடைய மொத்த வாழ்க்கையுமே இப்படிப்பட்ட ஒரு செயல் என்பதைத் தவிர வேறு ஒன்றுமல்ல.

அவள் முதலில் என்னோடு மிகவும் உக்கிரமாக வாதாடினாள், பிறகு அவள் பேச்சைக் குறைத்துக் கொண்டாள், முற்றிலும் மௌனமானாள், நான் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்கும் பொழுது தன்னுடைய கண்களை மிகவும் அகலமாக விரித்தாள்—எவ்வளவு பெரிய கண்கள், எல்லாவற்றையும் கவனிக்கும் கண்கள். அது மட்டுமல்ல, அவள் முகத்தில் சிரிப்புத் தவழ்வதை நான் திடீரென்று பார்த்தேன்—அவநம்பிக்கையான, மௌனமான, கெட்ட சிரிப்பு. என்னுடைய வீட்டுக்கு நான் அவளைக் கூட்டிக்கொண்டு வந்தபொழுது அவள் அப்படித்தான் சிரித்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு வேறு போக்கிடம் இல்லை என்பதும் உண்மையே...

4

திட்டங்கள், திட்டங்களைத் தவிர வேறு எதுவுமில்லை

எங்களிருவரில் அதை முதலில் தொடங்கியது யார்?

ஒருவருமில்லை. அது ஆரம்பத்திலேயே தானாகத் தொடங்கிவிட்டது. அவளை என்னுடைய வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்த பொழுது நான் கண்டிப்பாக நடந்து கொண்டேன் என்று ஏற்கெனவே கூறினேன். ஆனால் அந்தக் கடுமையை உடனடியாகக் குறைத்துக் கொண்டேன். அவள்

அடகுக் கடையில் என்னுடைய வேலையைச் செய்ய வேண்டும், அடகு வைக்கப் படும் பொருள்களைப் பெற்றுக் கொண்டு பணத்தைக் கொடுக்க வேண்டும் என்று திருமணத் துக்கு முன்பே அவளிடம் விளக்கியிருந்தேன். அவள் அப் பொழுது இதை ஆட்சேபிக்கவில்லை (இதைக் குறித்துக் கொள்ளுங்கள்). அது மட்டுமல்ல, அவள் உண்மையிலேயே இந்த வேலையை உற்சாகத்துடன் செய்தாள். அறை மற் றும் நாற்காலி மரச் சாமான்கள் அனைத்தும் அப்படியே இருந்தன. இரண்டு அறைகள்: முன் பகுதியில் ஒரு பெரிய அறை, அதை இரண்டாகத் தடுத்து ஒரு பகுதியில் அடகுக் கடை இருந்தது. அடுத்த பகுதியும் பெரியதே. அது எங் களுடைய அறை—படுக்கை அறை மற்றும் வசிக்கின்ற அறை. நாற்காலி, மேசை சாதாரணமானவையே; அவளு டைய அத்தைமார்களிடம் கூட இன்னும் சிறப்பானவை இருந்தன. அடகுக் கடை இருந்த முன்புற அறையில் என் னுடைய தெய்வ வடிவ விளக்குடன் கூடிய தெய்வ வடிவ நிலைமேடை இருந்தது. அடுத்த அறையில் இருந்த என்னு டைய புத்தக அடுக்குப் பெட்டியில் சில புத்தகங்கள் இருந் தன. என்னுடைய பெட்டியும் அங்கேதான் இருந்தது. பெட் டிச் சாவிகள் என்னிடமிருந்தன, அடுத்தபடியாகக் கட்டில், மேசைகள், நாற்காலிகள். எங்களுடைய உணவுக்கு அதா வது அவள், நான், லுக்கேரியா—அவளுடைய அத்தைமார் களிடமிருந்து அவளை நான் இங்கே கொண்டு வந்து விட் டேன்—ஆகியோருடைய உணவுக்காக நான் நாளொன்றுக்கு ஒரு ரூபிள் அனுமதிக்க முடியும், அதற்கு மேல் முடியாது என்று திருமணத்துக்கு முன்பு நான் அவளிடம் கூறியிருந் தேன். ''நான் மூன்று வருடங்களில் முப்பதாயிரம் ரூபிள் கள் சேமிக்க வேண்டும், அதற்கு இது ஒன்றுதான் வழி'' என்று நான் அவளிடம் விளக்கினேன். அவள் ஆட்சேபிக்க வில்லை. ஆனால் இந்த நாட்படியில் முப்பது கோபெக்குகள் நாளுகவே கூட்டினேன். நாடகங்களுக்குப் போகின்ற விஷ யத்திலும் அப்படியே. நாடகங்களுக்குப் போக முடியாது என்று நான் அவளிடம் திருமணத்துக்கு முன்பு கூறியிருந் தேன். எனினும் மாதத்துக்கு ஒரு தடவை நாடகத்துக்குப் போவதை—அதிலும் கௌரவமான முறையில், நாற்காலி ஆசனங்களில்—நான் அனுமதித்தேன். நாங்கள் மூன்று தட வை நாடகங்களுக்குப் போனோம், மகிழ்ச்சியைத் தேடல்,

பாடும் பறவைகள் ஆகிய நாடகங்களைப் பார்த்தோம். (சீ! துப்ப வேண்டும், காறித்துப்ப வேண்டும்!) நாங்கள் மௌனமாகச் சென்றோம், மௌனமாகத் திரும்பினோம். ஆனால் தொடக்கத்திலிருந்தே நாங்கள் மௌனத்தைக் கடைப் பிடித்தது ஏன், ஏன்?.. தொடக்கத்தில் எங்களுக்கிடையில் சச்சரவுகள் இல்லை, அது உங்களுக்குத் தெரியும், எனினும் நாங்கள் மௌனமாகவே இருந்தோம். ஆரம்பத்தில் அவள் என்னை ரகசியமான முறையில் பார்ப்பதுண்டு என்பது என் நினைவிலிருக்கிறது. அதை நான் கவனித்த அக்கணமே மௌனத்தை வலியுறுத்தினேன். மௌனத்தை அதிகமாகக் கடைப்பிடித்தது நானே, அவளல்ல என்பது உண்மையே. அவளைப் பொறுத்தமட்டில் என் கரங்களில் அவள் தன்னை ஒப்படைத்துக் கொண்டபொழுது ஓரிரு தடவைகள் அவள்; ஆனால் இவை நோய் இயல்போடு மிகை உணர்ச்சியாகவும் இருந்தபடியால்—நான் அவள் தரப்பில் மரியாதையையும் என் தரப்புக்கு முழுமையான ஆனந்தத்தையும் விரும்பிய படியால்—நான் இவற்றை அடக்கினேன். நான் செய்தது முற்றிலும் சரியானதுதான். ஏனென்றால் இந்தக் குமுறல்களுக்குப் பிறகு மறு நாள் தவிர்க்க முடியாத வகையில் சச்சரவுகள் தொடர்ந்தன.

அதாவது, அங்கே சச்சரவுகள் இல்லை, ஆனால் மறுபடியும் மௌனம் நிலவியது. அவளுடைய முகபாவத்தில் மென்மேலும் துடுக்குத்தனம் அதிகரித்தது. அது ''கலகமும் சுதந்திரமும்'' என்று சூசகமாகக் காட்டியது. அதை எப்படிச் செய்வது என்பதுதான் அவளுக்குத் தெரியவில்லை. ஆம். அவளுடைய அடக்கமான தோற்றத்தில் மென்மேலும் துடுக்குத்தனம் அதிகரித்தது. என்னைக் கண்டு அவள் அருவருப்படைந்து கொண்டிருந்தாள் என்பது உண்மையே. நான் அதை கவனமாக ஆராய்ந்தேன் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். அவளுடைய குமுறல்கள் அவளை முற்றிலும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தன என்பதில் சந்தேகமில்லை என்பது உண்மையே. உதாரணமாக, அழுக்கிலும் வறுமையிலும் பிறந்து வளர்ந்து, தரையை மெழுகுவது மற்றும் எல்லாவற்றையும் செய்தபிறகு அவள் எப்படி திடீரென்று என்னுடைய வறுமையைப் பற்றி முகத்தைச் சுளிக்கத் தொடங்கினாள்? அது வறுமை அல்ல—சிக்கனமே என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். தேவைப்

படுமானல் அங்கே வளமும்—உதாரணமாகத் துணிகளில்—சுத்தமும் இருந்தன. கணவனிடமுள்ள தூய்மையை மனைவி எப்பொழுதுமே விரும்புவாள் என்று நான் எப்பொழுதும் கற்பனை செய்தேன். அவள் என்னுடைய வறுமையை ஏளனம் செய்யவில்லை, என்னுடைய கருமித்தனம் என்று கூறப் பட்டதை ஏளனம் செய்தாள். ''அவருக்கு ஒரு இலட்சியம் இருக்கிறது. அவர் தன்னுடைய குணும்சத்தின் வலிமையை எடுத்துக் காட்டுகிறார்''. நாங்கள் நாடகத்துக்குப் போவதை அவள் திடீரென்று தானகவே ரத்துச் செய்துவிட்டாள். அவளுடைய இகழ்ச்சியைக் காட்டுகின்ற தோற்றம் மென் மேலும் அழுத்தமாக வெளிப்பட்டது... நான் அதிகமாக மௌனத்தைக் கடைப்பிடித்தேன், அதிகமாக அமைதி காத்தேன்.

சரி. என்னைப் பற்றி ஏன் சமாதானங்களைச் சொல்ல வேண்டும்? அடகுக் கடையைப் பற்றித்தான் பிரச்சினை ஏற்பட்டது. இங்கே பாருங்கள். ஒரு பெண், அதிலும் பதினறு வயதே நிரம்பிய இளம்பெண் ஒரு ஆணினுடைய சித்தத்துக்குத் தன்னை முழுமையாக உட்படுத்திக் கொள்வதைத் தவிர்க்க முடியாது. பெண்களிடம் சுய-சிந்தனை கிடையாது, அது எல்லோரும் நன்கறிந்ததே. இப்பொழுது கூட அது எனக்கு நன்ருகத் தெரிகிறது, அவள் அதோ அந்த மேசையின் மேல் படுத்திருக்கிருள் என்ருல் என்ன? உண்மை உண்மைதான், மில்* கூட அதை மாற்ற முடியாது. மோகத்திலிருக்கும் பெண் ஆம், மோகத்திலிருக்கும் பெண் தான் காதலிக்கின்ற நபரின் குறைகளை—குற்றங்களைக் கூட—வழிபடுவாள். அவனுடைய குற்றங்களுக்கு அவள் சமாதானங்களைக் கண்டுபிடிப்பாள், அந்த மாதிரி அவனல் கூடக் கண்டுபிடிக்க முடியாது. அது பெருந்தகைமையே, ஆனல் தற்சிந்தனை அல்ல. தற்சிந்தனை இல்லாதிருப்பதுதான் பெண்களை வீழ்த்திவிட்டது. அந்த மேசையின் மேல் இருப்பதை நீங்கள் சுட்டிக் காட்டுவதில் என்ன பயன்? ஆம், அதில் என்ன பயன் என்று நான் மறுபடியும் கேட்கிறேன். ஏன், அந்த மேசை மேல் உள்ள உடலில் ஏதேனும் தற்சிந்தனை இருக்கிறதா? ஓ! ஓ!

---

* 19ஆம் நூற்ருண்டைச் சேர்ந்த ஆங்கிலத் தத்துவ ஞானி.—ப-ர்.

கேளுங்கள்: அப்பொழுது அவளுடைய காதலைப் பற்றி நான் நிச்சயமாக இருந்தேன். அவள் என்னைக் கண்டவுடன் பாய்ந்தோடி வந்து என் கழுத்தைக் கட்டிக் கொள்வாள், அவள் செய்யவில்லையா, என்ன? ஆகவே அவள் என்னைக் காதலித்தாள் அல்லது என்னைக் காதலிக்க விரும்பினுள். ஆம், அப்படித்தான்: அவள் காதலிக்க விரும்பினுள், யாராவது ஒருவரைக் காதலிக்க வேண்டுமென்று ஏங்கினுள். அது மட்டுமல்ல, நான் குற்றம் செய்திருப்பதாக எந்த சாட்சியமும் இங்கே இல்லை என்பதால் அவள் சமாதானங்களைத் தேட வேண்டியதும் இல்லை. அடகுக் கடைக்காரன் என்று நீங்கள் சொல்வீர்கள், எல்லோருமே சொல்கிறுர்கள் நான் அடகுக் கடைக்காரனுக இருந்தால் என்ன? மிகவும் பெருந்தன்மையான ஒரு மனிதன் அடகுக் கடைக்காரனுக மாறியதற்குக் காரணங்கள் இருக்க வேண்டும் என்பது வெளிப்படையான உண்மை. கனவான்களே, இங்கே பாருங்கள், சில கருத்துக்கள் இருக்கின்றன... அதாவது அந்தக் கருத்துக்களைப் பேச்சிலே தெரிவித்தால் அவை மிகவும் முட்டாள்தனமாகத் தோன்றும். நீங்கள் அவமானத்தால் குன்றிப் போய்விடுவீர்கள். ஏன்? அப்படித்தான். நாம் அனைவருமே அழுகிப் போனவர்கள். நம்மால் உண்மையைத் தாங்கிக் கொள்ள முடியாது அல்லது வேறு காரணம் எனக்குத் தெரியவில்லை. ''மிகவும் பெருந்தன்மையான மனிதன்'' என்று நான் இப்பொழுது கூறினேன். அது கேட்பதற்கு வேடிக்கையாக இருக்கிறது. ஆனுல் உண்மையில் அது வேடிக்கையானதுதான். அது உண்மை, உங்களுக்குத் தெரியும், அது மிகவும் நேர்மையான உண்மை. ஆம். எனக்கு ஓரளவுக்குப் பாதுகாப்புத் தேடுவதற்கும் இந்த அடகுக் கடையைத் தொடங்குவதற்கும் எனக்கு உரிமை இருந்தது. ''நீங்கள் அதாவது பொதுமக்கள் என்னை வெளியே தள்ளிவிட்டீர்கள். உங்களுடைய இகழ்ச்சியான மௌனத்தின் மூலம் என்னை விரட்டியடித்துவிட்டீர்கள். நான் உணர்ச்சியுடன் உங்களிடம் மன்றுடியபொழுது நீங்கள் எனக்குக் கொடுத்த பதில் என் வாழ்க்கை முழுவதும் மறக்க முடியாத அவமதிப்பே. ஆகவே உங்களுக்கும் எனக்கும் சம்பந்தமில்லாத முறையில் சுவரை எழுப்பிக்கொண்டு முப்பதாயிரம் ரூபிள்களைச் சேமித்து கிரீமியாவில், தெற்குக் கடலோரத்தில் எங்காவது மலைகளிலும் திராட்சைத் தோட்டங்களிலும், இந்த முப்

பதாயிரம் ரூபிள்களுக்கு வாங்கப்பட்ட என்னுடைய சொந்தப் பண்ணையில்—முக்கியமானது என்னவென்ருல், உங்கள் எல்லோரிடமிருந்தும் தனியாகத் தள்ளிப் போய், ஆனல் உங்கள் மீது வெறுப்பு இல்லாமல்—வாழ்க்கை நடத்துவது, குறையில்லாத இலட்சியத்தை என்னுடைய இதயத்திலே ஏந்திக் கொண்டு, நான் காதலிக்கும் பெண்ணைக் கடவுள் ஆசியுடன் ஒரு குடும்பத்தையும் எனக்குப் பக்கத்தில் வைத்துக் கொண்டு பக்கத்திலுள்ள கிராம மக்களுக்கு உதவி செய்வதில் நாட்களைக் கழித்தேன் என்ருல் அது நியாயம்தானே.'' என்னைப் பற்றிய இவை அனைத்தையும் இப்பொழுது சொல்வது சரி என்பது உண்மையே. ஆனல் இவற்றை அப்பொழுது அவளிடம் விரித்துச் சொல்லியிருந்தால் அது மிகப் பெரிய தவருக இருந்திருக்காதா? அதனல் தான் அகம்பாவமான மௌனம். அதனல் தான் நாங்கள் மௌனத்திலேயே வாழ்ந்தோம். அவளால் புரிந்து கொண்டிருக்க முடியுமா? பதினறு. இளமை மலர்கின்ற வயது—என்னுடைய சமாதானங்களை, என்னுடைய வேதனைகளை அவள் புரிந்து கொண்டிருக்க முடியுமா? நேர்மை, உலகியல் அறிவின்மை, இளமையின் மலிவான சிந்தனைகள், ''உயர்ந்த இதயங்களின்'' மங்கலான பார்வை — ஆனல் அடகுக் கடைதான் இதில் தீர்மானமான காரணியாக இருந்தது. புரிகிறதா? (ஆனல் என்னுடைய அடகுக் கடைதான் வில்லனு? நான் அதை நடத்திய முறையை அவள் பார்க்கவில்லையா? நான் எப்பொழுதாவது அநியாயமாக நடந்திருக்கிறேனு?) ஓ, இந்த உலகத்தில் உண்மை எவ்வளவு பயங்கரமானது? இந்த அன்பு மிக்கவள், இந்த அடக்கமானவள், இந்த தெய்விகமானவள்—அவள் என்னுடைய ஆன்மாவை ஈவிரக்கமில்லாமல் சித்திரவதை செய்த கொடுமைக்காரி. நான் அதைச் சொல்லவில்லை என்ருல் எனக்கே நான் தீமை செய்தவனுவேன். நான் அவளைக் காதலிக்கவில்லை என்று நீங்கள் நினைக்கிறீர்களா? நான் அவளைக் காதலிக்கவில்லை என்று இங்கே யாராவது சொல்ல முடியுமா? அது விதியின், இயற்கையின் கொடுமையான முரண் நகை. நாம் சபிக்கப்பட்டவர்கள். எப்படியும் ஆண்களுடைய (குறிப்பாக என்னுடைய!) வாழ்க்கையின் மேல் ஒரு சாபம் விதிக்கப்பட்டிருக்கிறது. நான் எங்கோ தவறு செய்துவிட்டேன் என்பதை இப்பொழுது நன்ருகப் புரிந்து

கொண்டேன். எங்கோ ஏதோ ஒன்று தவறிவிட்டது. எல்லாமே மிகத் தெளிவாக இருந்தது. என்னுடைய திட்டம் வானத்தைப் போலத் தெளிவாக இருந்தது: ''கண்டிப்பானவர், அகம்பாவமானவர், அவருக்கு யாருடைய தார்மிக ஆதரவோ, அனுதாபமோ தேவையில்லை. அவர் அமைதியாகவே துன்பங்களைத் தாங்கிக் கொள்பவர்.'' அது உண்மையில் அப்படித்தான். இல்லை. நான் ஏமாற்றவில்லை. நான் ஏமாற்றவில்லை! ''இதில் பெருந்தகைமை இருந்தது என்று அவள் தானாகவே பிறகு தெரிந்துகொள்வாள். அவள்தான் அதை கவனிக்கத் தவறிவிட்டாள்; அவள் அதைத் தெரிந்து கொண்ட பிறகு அதைப் பத்து மடங்கு பாராட்டுவாள், தன் கைகளை மார்பில் கட்டிக் கொண்டு கெஞ்சும் பொழுது அவள் தூசியாகத்தான் இருப்பாள்.'' என்னுடைய திட்டத்தைப் பற்றி இவ்வளவு போதும். ஆனால் நான் தவறுதலாக விட்டது அல்லது மறதியில் விட்டு விட்டது ஏதோ இருக்க வேண்டும். நான் ஏதோ ஒன்றை அங்கே செய்திருக்க வேண்டும். ஆனால் செய்யவில்லை. ஆனால் போதும், போதும். இப்பொழுது மன்னிக்கும்படி நான் யாரிடம் கெஞ்ச வேண்டும்? அது முடிந்துவிட்டது. முடிந்துவிட்டது. துணிவாக இரு, மனிதனே, உன் பெருமையைப் பற்றி நினை! குற்றம் உன்னுடையதல்ல!..

மிகவும் சரி. நான் உண்மையைப் பேசப் போகிறேன். நான் உண்மையைச் சந்திப்பதற்குக் கூசப் போவதில்லை: **அவள்** தான் காரணம், **அவள்** தான் காரணம்!..

5

அடக்கமான பெண் கலகம் செய்கிறாள்

அவள் திடீரென்று கடன்களைத் தன் விருப்பப்படி நிர்ணயிக்கலாம் என்று முடிவு செய்தாள், அடமானம் வைக்கக் கொண்டுவரப்பட்ட பொருள்களை உயர்த்தி மதிப்பிட்டாள், இந்த விஷயத்தைப் பற்றி ஓரிரு தடவைகள் என்னுடன் விவாதம் செய்தாள். அப்பொழுதுதான் எங்களுடைய சண்டைகள் தொடங்கின. நான் என்னுடைய நிலையில் உறுதி

யாக இருந்தேன். அதற்குப் பிறகுதான் காப்டனுடைய விதவை வந்து சேர்ந்தாள்.

ஒரு காப்டனின் விதவையான வயோதிகப் பெண் ஒரு பதக்கத்தை அடகு வைப்பதற்கு வந்தாள். அது காலஞ் சென்ற கணவருடைய அன்பளிப்பு; வழக்கமான ரகத்தைச் சேர்ந்த பொருள்தான். நான் அவளுக்கு முப்பது ரூபிள்கள் கொடுத்தேன். அவள் சிணுங்கிக் கொண்டு அழுவதற்குத் தொடங்கினாள்—அதை விற்றுவிட வேண்டாம் என்று என்னிடம் கெஞ்சினாள். சரி. ஐந்து நாட்களுக்குப் பிறகு, திடீரென்று அவள் மறுபடியும் வந்தாள். அதற்கு பதிலாக எட்டு ரூபிள் மதிப்புள்ள ஒரு கைவளையலைக் கொண்டு வந்திருந்தாள். நான் மறுத்தேன். அது முற்றிலும் இயற்கை தானே. என் மனைவியின் கண்களில் தோன்றிய குறிப்பு அவளுக்கு ஏதோ உணர்த்தியிருக்க வேண்டும். நான் வெளியே போயிருந்த சமயத்தில் அவள் மறுபடியும் வந்து அந்த வளையலைக் கொடுத்துவிட்டுப் பதக்கத்தை வாங்கிக் கொண்டு போய்விட்டாள்.

அன்றைய தினத்தில் அதைப் பற்றி நான் தெரிந்து கொண்டவுடன் என் மனைவியிடம் அன்பாக ஆனால் உறுதியாக, நியாயமான முறையில் பேசினேன். அவள் படுக்கையில் உட்கார்ந்து கொண்டு தரையைப் பார்த்துக் கொண்டு தன் வலது பாதத்தால் கம்பளத்தின் மேல் தட்டிக் கொண்டிருந்தாள் (அது அவளுடைய வழக்கம்); அவள் உதடுகளின் மீது பொல்லாத சிரிப்பு விளையாடிக் கொண்டிருந்தது. நான் என்னுடைய குரலைச் சிறிதும் உயர்த்தாமல் அது என்னுடைய பணம், என்னுடைய சொந்தக் கருத்துக்கு எனக்கு உரிமையுண்டு, அவள் என் வாழ்க்கைத் துணைவியாக வேண்டும் என்று நான் முதலில் சொன்ன பொழுதிருந்தே நான் அவளிடமிருந்து ஒரு விஷயத்தையும் மறைக்கவில்லை என்பது அவளுக்கே தெரியும் என்று அமைதியான முறையில் அவளிடம் கூறினேன்.

திடீரென்று அவள் குதித்தெழுந்தாள்; அவள் உடல் குலுங்கியது. இதை நீங்கள் நம்ப மாட்டீர்கள். அவள் என்னை நோக்கிக் காலைத் தூக்கித் தரையில் மிதித்தாள். அவள் ஒரு காட்டு மிருகம். அது ஒரு வெறி. அவள் வெறி கொண்ட காட்டு மிருகம். எனக்கேற்பட்ட திகைப்பில் பேச வாயெழவில்லை. அப்படி அவள் சீறுவாள் என்று நான் ஒரு

போதும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் நான் என்னுடைய மனஞ்சோராமையை இழக்கவில்லை. நான் சிறிதும் அசையவில்லை. இனிமேல் என்னுடைய தொழிலில் அவள் உதவி செய்வதற்கு நான் அனுமதிக்கப் போவதில்லை என்று மறுபடியும் அதே நிதானமான குரலில் அவளிடம் கூறினேன். அவள் என்னை உற்றுப் பார்த்துச் சிரித்துவிட்டு என் வீட்டிலிருந்து வெளியேறினாள்.

என் வீட்டை விட்டுப் போவதற்கு அவளுக்கு உரிமை கிடையாது என்பதே இங்கே முக்கியம். நான் இல்லாமல் அவள் ஒரு காலடி கூட வைக்கக் கூடாது. திருமணத்துக்கு முன்பே நான் அந்த நிபந்தனையைக் கூறியிருக்கிறேன். அவள் மாலையில் திரும்பி வந்தாள். நான் அவளிடம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

மறு நாள் காலையில் அவள் மறுபடியும் வெளியே சென்றாள். அதற்கடுத்த நாளும் அப்படியே சென்றாள். நான் என்னுடைய அடகுக் கடையைப் பூட்டிவிட்டு அவளுடைய அத்தைமார்களைப் பார்க்கச் சென்றேன். திருமணம் முடிந்த உடனே அவர்களுடன் எல்லா உறவுகளையும் நான் முறித்துக் கொண்டிருந்தேன். அவர்களை என் வீட்டுக்கு அழைக்கவில்லை, நானும் அவர்களுடைய வீட்டுக்குப் போகவில்லை. அவள் அங்கே வரவில்லை என்ற தகவல் எனக்குக் கிடைத்தது. நான் கூறிய எல்லாவற்றையும் அவர்கள் அதிகமான ஆர்வத்துடன் கேட்டார்கள். பிறகு எனக்கு நேரே ஏளனமாகச் சிரித்தார்கள். ''உனக்கு வேண்டியதுதான்'' என்றார்கள். ஆனால் நான் அவர்களுடைய சிரிப்பை எதிர்பார்த்தேன். சிறிதும் காலதாமதமில்லாமல் அவளுடைய இளைய அத்தை, திருமணமாகாத முதியவளிடம் நூறு ரூபிள் லஞ்சம் கொடுப்பதாகக் கூறி இருபத்தைந்து ரூபிளை முன்பணமாகக் கொடுத்தேன். இரண்டு நாட்களுக்குப் பிறகு அவள் என்னிடம் வந்து பின்வரும் தகவலைக் கூறினாள்: ''இதில் யெபிமோவிச் என்ற அதிகாரி சம்பந்தப்பட்டிருக்கிறார். அவர் உன்னுடைய பழைய படைப் பிரிவில் லெப்டினென்டாக இருந்தவர்.'' நான் திகைப் படைந்தேன். இந்த யெபிமோவிச் என்னுடைய படைப்பிரிவில் எனக்கு அதிகமாகத் தீமை செய்திருக்கிறான். ஒரு மாதத்துக்கு முன்னால் அவன் வாடிக்கைக்காரனைப் போல நடித்துக் கொண்டு என்னுடைய அடகுக் கடைக்கே—ஒரு தடவை அல்ல, இரண்டு தடவை

கள்—வந்துவிட்டான். அவன் என் மனைவியிடம் பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டுமிருந்தது எனக்கு நினைவிருக்கிறது. நான் உடனே அவனிடம் சென்று பழைய சம்பவங்களை முன்னிட்டு இனி மறுபடியும் என் கடைக்குள் வருவதற்குத் துணியவேண்டாம் என்று கூறினேன். ஆனால் அப்படிப்பட்ட எதுவும் அப்பொழுது எனக்குத் தோன்றவில்லை. அவன் வீம்புக்காரன் என்று மட்டுமே நான் நினைத்தேன். அவ்வளவுதான். அவள் ஏற்கெனவே அவனைத் தனியிடத்தில் சந்தித்திருக்கிறாள், அவளுடைய அத்தைமார்களுக்கு நன்கு பழக்கமான யூலியா சம்சோனவ்னா என்ற விதவை—அதிலும் ஒரு கர்னலின் விதவை—இந்த நடவடிக்கைகளில் உதவி செய்கிறாள் என்று இப்பொழுது அவளுடைய அத்தை என்னிடம் தெரிவித்தாள். ''உன் மனைவி அவளிடம்தான் அடிக்கடி போய்க்கொண்டிருக்கிறாள்'' என்று அவள் கூறினாள்.

நான் இந்தப் பகுதியைச் சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன். இரண்டு நாட்களுக்குப் பிறகு என் மனைவி யெபிமோவிச்சுடன் தனியாக இருக்கப் போகின்ற முதல் சந்திப்பின்போது நான் அடுத்த அறையில் கதவுக்குப் பின்னால் நின்று கொண்டு அவர்களுடைய உரையாடலைக் கேட்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கு முந்நூறு ரூபிள் எனக்குச் செலவாயிற்று. இதற்கிடையில், அந்தச் சந்திப்பிற்கு முதல் நாளன்று எங்களுக்கிடையே சச்சரவு ஏற்பட்டது. அது மிகவும் குறுகியதாக இருந்தபோதிலும் எனக்கு அதிகமான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது.

அவள் மாலையில் வீட்டுக்குத் திரும்பினாள். படுக்கையின் மீது உட்கார்ந்து கொண்டு தன்னுடைய பாதத்தினால் கம்பளத்தைத் தட்டியபடியே என்னை ஏளனமாகப் பார்த்தாள். நான் அவளை ஏறிட்டுப் பார்த்தேன். சென்ற மாதம் முழுவதும் அல்லது இன்னும் துல்லியமாகச் சொல்வதென்றால், கடந்த இரண்டு வாரங்கள் முழுவதும் அவள் தன்னுடைய சுபாவப்படி இருக்கவில்லை என்று எனக்கு திடீரென்று தோன்றியது. அவளுடைய சுபாவத்துக்கு முற்றிலும் மாறாக, வெறி பிடித்தவளாக, மூர்க்கமானவளாக—வெட்கமில்லாதவளாக என்று துல்லியமாகச் சொல்ல முடியாது—ஆனால் சண்டை போடத் தயாராக இருக்கின்ற, சம நிலை இல்லாத பிறவியாக இருந்தாள் என்று கூட நான்

சொல்ல வேண்டும். சண்டை போடத் தயாராக இருக்கின்ற பெண். ஆனால் அவளுக்கு வழக்கமான அடக்கம் குறுக்கிட்டது. அவளைப் போன்ற ஒரு பெண்ணுக்கு வெறி ஏற்படும் பொழுது அவள் எல்லா வரையறைகளையும் மீறி விட்ட போதிலும் அப்படி நடந்து கொள்ளும்படி அவள் தன்னை நிர்ப்பந்தித்துக் கொள்கிறாள், தன்னையே தூண்டிக் கொள்கிறாள், தன்னுடைய கற்புக்கும் மான உணர்ச்சிக்கும் எதிராகத் தோல்வியில் முடிவடையக் கூடிய யுத்தத்தை நடத்திக்கொண்டிருக்கிறாள் என்பதை நீங்கள் பார்க்க முடியும். அதனால் தான் அடக்கமானவர்கள் சில சமயங்களில் வரையறைதளை மீறிவிடுவது சாத்தியம்—நம்முடைய அறிவு நாம் கண்ணால் பார்த்ததை நம்புவதற்குக் கூட மறுக்கிறது. இதற்கு மாறாக இத்தகைய கீழான நடத்தையை வழக்கமாகக் கொண்டிருக்கின்ற பெண் தன்னுடைய வெறிக் கூச்சலைத் தவறாமல் மட்டுப்படுத்திக் கொள்வாள். அவள் அசிங்கமாகப் பேசினாலும் நீங்கள் மறுக்க முடியாத தலைமைக்கு ஆசைப்படுகின்ற கண்ணியமான மாறுவேடத்தை அணிந்து கொள்வாள்.

''நீங்கள் சண்டை போட விரும்பாத அளவுக்குப் பேடியாக இருந்த காரணத்தினால்தான் உங்களைப் படையிலிருந்து விரட்டி விட்டார்கள் என்பது உண்மையா?'' என்று அவள் திடீரென்று ஒரு நாள் கண்களில் தழல் வீசக் கேட்டாள்.

''ஆமாம்; அதிகாரிகள்... என்னைப் படையிலிருந்து விலகும் படிக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் உண்மையில் அதற்கு முன்பே நான் என்னுடைய விலகல் மனுவை அனுப்பி விட்டேன்.''

''அவர்கள் உங்களைப் பேடி என்றுதானே விரட்டிவிட்டார்கள்!''

''ஆமாம். நான் பேடி என்று அவர்கள் முடிவு செய்தார்கள். நான் அந்தச் சண்டையில் ஈடுபட மறுத்தது நான் பேடி என்பதனால் அல்ல. நான் அவமதிக்கப்பட்டதாகக் கருதாமலிருக்கும் பொழுது அவர்களுடைய எதேச்சாதிகாரமான முடிவுக்குக் கட்டுப்பட்டு யாரோ ஒரு நபரை சண்டைக்கு வரும்படி சவால் விடுவதற்கு நான் விரும்பவில்லை. இது தான் உண்மை.'' பின்வரும் வார்த்தைகளை என்னால் சொல்லாமலிருக்க முடியவில்லை. ''அத்தகைய கொடுங்கோன்மையை எதிர்ப்பதற்கும் அதனால் ஏற்படக்கூடிய எல்லா விளை

வுகளையும் ஏற்றுக் கொள்வதற்கும் உலகத்திலேயே உக்கிர மான சண்டையில் பங்கெடுப்பதைக் காட்டிலும் அதிகமான துணிவு அவசியமாக இருந்தது.''

அந்த வார்த்தையைச் சொல்லாமலிருக்க என்னால் முடியவில்லை.

நான் என்னை நியாயப்படுத்திக் கொள்ள முயற்சிப் பதைப் போல அவை ஒலித்தன. எனக்கு இந்தப் புதிய அவ மதிப்பு ஏற்பட வேண்டுமென்றுதான் அவள் விரும்பினாள். அவள் இகழ்ச்சியாகச் சிரித்தாள்.

''அதற்குப் பிறகு மூன்று வருட காலம் வரை நீங்கள் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் தெருக்களில் பிச்சை கேட்டு அலைந் தீர்கள், இரவு நேரங்களில் பில்லியர்ட் மேசைகளின் கீழ் படுத்து உறங்கினீர்கள் என்பது உண்மையா?''

''நான் சென்னயா சதுக்கதிலுள்ள வியாஸெம்ஸ்கி விடு தியில் தங்கினேன். ஆம். அது உண்மையே. படையிலிருந்து விலகிய பிறகு நான் மிகவும் கஷ்டப்பட்டேன், சீர்குலைந் தேன். ஆனால் தார்மிகச் சீரழிவு ஒருபோதும் எனக்கு ஏற் படவில்லை. ஏனென்றால் அந்த நேரத்தில் கூட என்னுடைய செயல்களுக்காக முதலில் வருந்தியது நான்தான். என்னு டைய மனமும் அறிவும் மட்டுமே சீரழிந்தன. அதற்கு என் னுடைய மிக நெருக்கடியான நிலைமை மட்டுமே காரணம். ஆனால் அது முடிந்து விட்டது...''

''ஆமாம். நீங்கள் இப்பொழுது ஒரு பிரமுகர்—முத லாளி!''

அது என்னுடைய அடகுக் கடையைப் பற்றிய குறிப் பாகும். ஆனால் நான் என்னை விரைவில் கட்டுப்படுத்திக் கொண்டேன். என்னை இழிவாகக் காட்டக் கூடிய விளக்கங் களை அவள் மேலும் விரும்புகிறாள் என்பதை நான் கண்டேன். எனவே நான் அவளுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை. அப்பொழுது ஒரு வாடிக்கைக்காரர்—மிகப் பொருத்தமான நேரத்தில் வந்தார். நான் அவரை கவனிப்பதற்காக அவளி டமிருந்து சென்றேன். அதற்கு ஒரு மணி நேரத்துக்குப் பிறகு அவள் வெளியே போவதற்குரிய சிறப்பான உடையணிந்து எனக்கு முன்னால் திடீரென்று வந்தாள்.

''திருமணத்துக்கு முன்பு இவற்றில் **எதையும்** நீங்கள் என்னிடம் சொல்லவில்லை, அல்லவா?'' என்று அவள் கேட் டாள்.

நான் பதிலளிக்கவில்லே. அவள் வெளியே சென்ருள்.

மறுநாள் நான் அந்த அறையின் கதவுக்குப் பின்ஞல் நின்று கொண்டு என் விதியை முடிவு செய்வதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். என் பையில் ஒரு கைத்துப்பாக்கி இருந்தது. அவள் அந்தச் சந்திப்புக்காக சிறப்பான முறையில் உடை அணிந்து மேசைக்கு முன்ஞல் உட்கார்ந்திருந்தாள். யெபிமோவிச் அவளுக்கு முன்ஞல் நடித்துக் கொண்டு தனுக்காகப் பேசிக் கொண்டிருந்தான். அப்பொழுது என்ன நடைபெற்றது? எப்படி நடைபெறும் என்று நான் கற்பனே செய்தேஞே அல்லது உத்தேசமாகக் கருதினேஞே அப்படியே துல்லியமாக நடைபெற்றது (இதை ஒத்துக் கொள்வதில் நான் பெருமை அடைகிறேன்). ஆஞல் அந்த சமயத்தில் நான் இதைக் கற்பனே செய்வதாகவோ அல்லது உத்தேசமாகக் கருதுவதாகவோ நான் உணரவில்லே. நீங்கள் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் நான் தெளிவாகப் பேசுகிறேஞ என்று எனக்குத் தெரியவில்லே.

அங்கே நடைபெற்றது இதுவே. நான் முழுசாக ஒரு மணி நேரம் நின்று கேட்டுக் கொண்டிருந்தேன். மிகவும் மேன்மையான, மிகவும் தூய்மையான ஒரு பெண்ணுக்கும் பாம்பின் இதயத்தைக் கொண்ட நாகரிகமான போக்கிரிக்கும்—ஒழுக்கக் கேடன், முட்டாள்—நடந்த போராட்டத்தின் போது நான் அங்கே முழுசாக ஒரு மணி நேரம் நின்று கொண்டிருந்தேன். வெகுளித்தனமான, அடக்கமான, சாதுவான அந்தப் பெண் இவை அனேத்தையும் எங்கே கற்றுக் கொண்டாள், எங்கே என்று நான் வியப்படைந்தேன். வாழ்க்கையின் வேடிக்கையை நாடகமாக எழுதுகின்ற மிகவும் நகைச்சுவையான எழுத்தாளர்கூட *இவ்வளவு ஏளனமான கூற்றுக்களேயும், மிகவும் வெகுளித்தனமான சிரிப்பையும் தீயொழுக்கத்தைப் பற்றி நல்லொழுக்கத்தின் புனிதம் நிறைந்த இகழ்ச்சியையும் கற்பனே செய்திருக்க முடியாது. அவனேப் பற்றி அவளுடைய கண்டனத்தில் எவ்வளவு மேதாவிலாசமான பேச்சும் பதிலும், எவ்வளவு உடனடியான நகைச்சுவையும், எவ்வளவு உண்மையும் இருந்தன! அதே சமயத்தில் உண்மையிலேயே எப்படிப்பட்ட பெண்ணின் பேதமையின் உலகம்! அவனுடைய காதல்பேச்சையும் செய்கைகளேயும் திட்டங்களேயும் பற்றி அவன் முகத்திலடித்தாற் போல அவள் சிரித்தாள். தன்னுடைய

பண்பில்லாத தாக்குதலுக்கு எவ்விதமான எதிர்ப்பையும் எதிர்பார்க்காமல் அவன் வந்திருந்தான். இப்பொழுது அவன் தளர்வடைந்து விட்டதாகத் தோன்றியது. அவள் பசப்பு கிருள் என்று கூட நான் முதலில் நினைத்திருப்பேன்: ''ஒழுக் கங்கெட்ட ஆனல் கூர்மையான அறிவுள்ள ஒரு பெண் தன்னுடைய மதிப்பை அதிகப்படுத்திக் கொள்வதற்காகப் பசப்புகிருள்.'' இல்லே. உண்மை சூரியனேப் போல ஒளி மயமாகப் பிரகாசித்தது. அதில் சந்தேகத்துக்கு இடமில்லே. அவள் அனுபவமில்லாதவள். அவள் என் மீது கொண்டி ருந்த கற்பனையான, அவசரத்தனமான வெறுப்பு இந்த சந் திப்புக்கு ஏற்பாடு செய்யும்படி அவளே விரட்டியிருக்கிறது; ஆனல் விளிம்புக்கு வந்ததும் அவள் கண்களே மறைத்திருந்த திரை உடனடியாக விழுந்துவிட்டது. அவள் என்னே அவம திப்பதற்கு ஏதாவதொரு வழியைத் தேடிக் கொண்டிருந் தாள்; ஆனல் அவள் செய்யவிருந்த காரியத்தின் கீழ்மை அவளே அக்காரியத்திலிருந்து விரட்டிவிட்டது. அவளேப் போன்று தூய்மையான, கபடமில்லாத ஒரு பெண், ஒரு இலட்சியத்துக்காக வாழ்கின்ற பெண் யெபிமோவிச்சை அல்லது வேறு ஒரு நாகரிகமான கீழ்மகனே விரும்புவாளா? அவள் அவனேப் பார்த்துச் சிரித்தாள். அவனல் செய்ய முடிந்தது அவ்வளவே. அவளுடைய இதயத்தில் அப்பழுக் கில்லாதிருந்த அனேத்தும் தூண்டிவிடப்பட்டது, ஆவேசம் அவளுடைய இதயத்திலிருந்த ஏளனத்தை வெளிப்படுத்தி யது. முடிவில் அந்தக் கோமாளி முற்றிலும் திகைத்துவிட் டான், முகத்தைச் சுளித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்; அவனல் சிறிதும் பதில் சொல்ல முடியவில்லே. இதை நான் பன்முறை கூறுவேன். அவளேப் பழிவாங்க வேண்டும் என்ற கீழ்த்தரமான உணர்ச்சியினல் அவன் அவளே அவமதிக்கத் துணிந்துவிடலாம் என்று கூட நான் அஞ்சினேன். இதை நான் திரும்பச் சொல்வேன்! இந்தக் காட்சியை நான் அநேகமாக ஆச்சரியமில்லாமல் கேட்டுக் கொண்டிருந்தேன் என்பதைக் கூறுவதில் பெருமை அடைகிறேன். நான் முன்பே அறிந்த ஒன்றைச் சந்திப்பதைப் போலவே அது இருந்தது. நான் அதைச் சந்திப்பதற்காகவே அங்கே சென்றதைப் போல இருந்தது. நான் எதையும் நம்பாமல், குற்றச் சாட்டு களில் ஒன்றையும் நம்பாமல் தான் அங்கே போனேன்— ஆனல் என் பையில் ஒரு கைத்துப்பாக்கியை வைத்திருந்

தேன். இது உண்மை. நான் அவளைப் பற்றி வேறு விதமாக நினைத்திருக்க முடியுமா? அப்படியானல் நான் ஏன் அவளைக் காதலித்தேன், அவளை என் அன்புக்குரியவளாக ஏன் கருதினேன், அப்பொழுது ஏன் அவளைத் திருமணம் செய்து கொண்டேன்? ஆம். அந்தக் காட்சி அவள் என்னை வெறுப்பதை எனக்கு நிரூபித்தது, ஆனல் அதே அளவுக்கு அவளுடைய தூய்மையையும் எனக்கு நிரூபித்தது. நான் கதவைத் திறந்து உள்ளே சென்று அந்தக் காட்சியை திடீரென்று முடிவுக்குக் கொண்டு வந்தேன். யெபிமோவிச் திடுக்கிட்டெழுந்தான். நான் அவள் கையைத் தொட்டுப் போகலாம், என்னுடன் வா என்று அழைத்தேன். யெபிமோவிச் தன்னுடைய சாமர்த்தியத்தை ஒன்று திரட்டிக் கொண்டு திடீரென்று கணீரென்று ஒலிக்கும்படி சிரித்தான்.

''ஓ! புனிதமான திருமண உறவுகளில் நான் குறுக்கிட மாட்டேன். அவளைக் கூட்டிக் கொண்டு போங்கள், அவளைக் கூட்டிக் கொண்டு போங்கள்! உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா?'' என்று அவன் எனக்குப் பின்னல் உரத்த குரலில் கத்தினன். ''கண்ணியமான மனிதன் உங்களுடன் சண்டை போடக் கூடாது என்ற போதிலும் உங்களது மனைவிக்கு உரிய மரியாதையைக் கொடுக்கும் முறையில் நான் உங்களுக்குச் சேவை செய்யத் தயாராக இருக்கிறேன்... அதாவது, அந்த ஆபத்தை நீங்கள் பொருட்படுத்தவில்லை என்ருல்...''

''அதைக் கேட்டாயா?'' என்று நான் அவளைக் கண நேரம் கதவுக்குப் பக்கத்தில் நிறுத்தியபடியே கேட்டேன்.

அதற்குப் பிறகு வீட்டுக்குத் திரும்புகின்ற பாதை முழுவதும் நான் சிறு சத்தம் கூடச் செய்யவில்லை. நான் அவள் கையைப் பிடித்தபடியே நடந்தேன். அவள் அதை வெறுக்கவில்லை. இல்லை அதற்கு மாருக நடந்து கொண்டாள். அவள் அதிகமான அளவுக்கு மனக்கிளர்ச்சி அடைந்திருந்தாள். ஆனல் நாங்கள் வீட்டுக்குத் திரும்புகின்ற வரை மட்டுமே அது இருந்தது. அங்கே வந்தவுடன் அவள் நாற்காலியில் உட்கார்ந்து என்னை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் மிகவும் வெளுப்படைந்திருந்தாள். அவள் உதடுகள் உடனே ஏளனமாக வளைந்தாலும் அவள் பார்வை இப்பொழுது வீறமைதியுடன் எனக்குச் சவால் விடுவதைப் போலிருந்தது. முதலில் அந்த ஒரு சில தருணங்களில் என்

னுடைய கைத்துப்பாக்கியினுல் அவளைச் சுட்டுக் கொல்லப் போகிறேன் என்று அவள் உண்மையாகவே நினைத்தாள் என்று நான் கருதுகிறேன். ஆனுல் நான் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் பையிலிருந்து துப்பாக்கியை எடுத்து மேசையின் மீது வைத்தேன். அவள் என்னையும் கைத்துப் பாக்கியையும் வெறித்துப் பார்த்தாள். (இதைக் குறித்துக் கொள்ளுங்கள். என்னுடைய கைத்துப்பாக்கியைப் பற்றி அவளுக்கு ஏற்கெனவே தெரியும். நான் அடகுக் கடை தொடங்கிய அன்றே அந்தக் கைத்துப்பாக்கியை வாங்கி அதில் குண்டுகளைப் போட்டுக் கொண்டேன். பெரிய காவல் நாய்களை அல்லது வாட்டசாட்டமான காவல்காரனை வைத்துக் கொள்ள—உதாரணமாக, மோஸர் அப்படித்தான் செய்கிருர்—வேண்டாம் என்று நான் முடிவு செய்திருந்தேன். என்னுடைய சமையற்காரி வாடிக்கைக்காரர்களை உள்ளே அனுமதிக்கிருள். குண்டுகள் போடப்பட்டிருக்கும் கைத்துப்பாக்கியை நான் எப்பொழுதும் பக்கத்திலேயே வைத்திருக்கிறேன். ஏனென்ருல் எங்கள் தொழிலில் தற்காப்புக்காக ஏதாவது ஒரு ஆயுதத்தை ஒருவர் வைத்திருக்க வேண்டும். ஒரு வேளை அது தேவைப்படும். அவள் முதலில் என் வீட்டுக்குள் வந்தபொழுது அந்தக் கைத்துப்பாக்கியைப் பற்றி மிகவும் அக்கறை காட்டினுள். அதை எப்படி உபயோகிப்பது என்று நான் அவளுக்கு விளக்கினேன், மேலும் ஒரு இலக்கை நோக்கிச் சுட்டுப்பார்க்கும் படியும் அவளை வற்புறுத்தினேன். இவை அனைத்தையும் குறித்துக் கொள்ளுங்கள்.) அவளுடைய பீதி நிறைந்த பார்வையைப் புறக்கணித்துவிட்டு நான் என்னுடைய உடையை அரைகுறையாகக் கழற்றிய படியே படுக்கையில் விழுந்தேன். நான் மிகவும் களைத்துப் போயிருந்தேன். ஏற்கெனவே மணி பதினென்றை எட்டிக் கொண்டிருந்தது. அவள் சுமார் ஒரு மணி நேரம் வரை அசையாமல் உட்கார்ந்திருந்தாள். பிறகு மெழுகுவர்த்தி விளக்கை ஊதி அணைத்துவிட்டு உடைகளை மாற்றிக் கொள்ளாமல் சுவருக்குப் பக்கத்திலிருந்த சோபாவில் படுத்தாள். அவள் என்னுடன் சேர்ந்து படுத்துறங்காதது அது தான் முதல் தடவை—இதையும் குறித்துக்கொள்ளுங்கள்...

6

பயங்கரமான நினைவு

இப்பொழுது அந்த பயங்கரமான நினைவு...

நான் காலையில் விழித்துக் கொண்ட பொழுது ஏழு மணியாகிச் சிறிது நேரம் கழிந்திருக்க வேண்டும். ஏனென்றால் அறையில் வெளிச்சம் இருந்தது. நான் உடனே நன்றாக விழித்துக் கொண்டேன், எல்லாப் புலன்களும் சுறுசுறுப்பாக இருந்தன. நான் கண்களைத் திறந்து பார்த்தேன். அவள் கைத்துப்பாக்கியை வைத்துக் கொண்டு மேசைக்கு முன்னால் நின்று கொண்டிருந்தாள். நான் விழித்துக் கொண்டேன், அவளை கவனித்துக்கொண்டிருக்கிறேன் என்பது அவளுக்குத் தெரியாது. அவள் கைத்துப்பாக்கியைக் கையில் பிடித்துக் கொண்டு திடீரென்று என்னை நோக்கி வருவதைக் கண்டேன். நான் வேகமாகக் கண்களை மூடிக்கொண்டு ஆழ்ந்த உறக்கத்திலிருப்பதைப் போலப் பாசாங்கு செய்தேன்.

அவள் என்னுடைய படுக்கைக்குப் பக்கத்தில் வந்து என்னை உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றாள். சிறு சத்தம் கூட எனக்குக் கேட்டது. அந்த அறையில் மரண அமைதி நிலவியது; ஆனால் அந்த அமைதி என் காதில் கேட்டது. என் நரம்பு லேசாகத் துடித்திருந்தால் கூட என் விருப்பத்துக்கு விரோதமாக என்னுடைய கண்களைத் திறக்கும்படி நேர்ந்திருக்கும். அவள் தலையைக் கீழே குனிந்து என்னை, என் கண்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கைத்துப்பாக்கி ஏற்கெனவே என்னுடைய நெற்றிப் பொட்டுக்குப் பக்கத்தில் இருந்தது. எங்களுடைய பார்வைகள் சந்தித்தன. ஆனால் நாங்கள் பரிமாறிக் கொண்ட பார்வை ஒரு கணத்துக்கும் குறைவான நேரமே நீடித்தது. நான் பலவந்தமாக மறுபடியும் கண்களை மூடிக் கொண்டேன். என்ன நடந்தாலும் அசையக் கூடாது, மறுபடியும் கண்களைத் திறக்கக் கூடாது என்று என்னுடைய ஆன்ம பலத்தைத் திரட்டி அந்தக் கணத்திலேயே முடிவு செய்தேன்.

ஒரு நபர் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாலும் திடீரென்று கண்களைத் திறப்பதும் ஒரு வினாடி நேரம் தலையை உயர்த்தி அறையைச் சுற்று முற்றும் பார்ப்பதும் பிறகு

விழித்துக் கொள்ளாமல் தலையணையில் தலையைச் சாய்த்துக் கொள்வதும் ஒன்றும் புரியாதபடி மறுபடியும் தூக்கத்தைத் தொடர்வதும் சில சமயங்களில் நடைபெறுவதுண்டு.

அவளுடைய பார்வையைச் சந்தித்தபிறகு, என் நெற்றிப் பொட்டுக்குப் பக்கத்திலிருந்த கைத்துப்பாக்கியைப் பார்த்த பிறகு நான் திடீரென்று மறுபடியும் என் கண்களை மூடிக் கொண்டு ஆழ்ந்த உறக்கத்திலிருப்பதைப் போல அசைவில்லாமல் படுத்திருந்தபடியால் நான் உண்மையாகவே நன்றாகத் தூங்கிக்கொண்டிருக்கிறேன், ஒன்றையும் பார்க்கவில்லை என்று அவள் அனுமானித்துக் கொள்ள முடிந்தது. மேலும் **அப்படிப்பட்ட** ஒரு தருணத்தில், நான் பார்த்தவற்றைப் பார்த்த பிறகு மறுபடியும் நான் கண்களை மூடிக் கொள்வதென்பது மிகவும் நம்ப முடியாததாகும்.

ஆம். அது நம்ப முடியாததே. எனினும் அவள் உண்மையை ஊகித்திருக்க முடியும்—அதே கணத்தில் இந்த எண்ணம் என் மனதில் மின்னலிட்டது. ஓ! விரைந்து கொண்டிருந்த கணத்தைக் காட்டிலும் குறைவான நேரத்தில் எவ்வளவு சிந்தனைச் சுழல்களும் உணர்ச்சிகளும் என் மனதில் தோன்றி மறைந்தன! மனிதனுடைய சிந்தனையின் மின்னியக்கத்தைப் போற்றுவோம்! அப்படிக் கருதினால், அவள் உண்மையை ஊகித்துக் கொண்டு நான் தூங்கவில்லை என்று தெரிந்து கொண்டிருந்தாளானால் மரணத்தைச் சந்திப்பதற்கு நான் தயாராக இருப்பதைக் கண்டு அவள் மனமுடைந்து விடுவாள், ஒரு வேளை அவள் கை இப்பொழுது நடுங்கும் (என்று நான் நினைத்தேன்). ஒரு வேளை அவளுடைய முந்திய முடிவு இந்தப் புதிய, ஆச்சரியகரமான கண்டுபிடிப்பினால் நொறுங்கி விடும். ஒருவர் மாபெரும் சிகரத்திலிருந்து கீழே பார்க்கும்பொழுது அவருடைய காலடியிலிருக்கும் பாதாளத்தை நோக்கித் தடுக்க முடியாதபடி இழுக்கப்படுவார் என்று கூறுகிறார்கள். ஏற்கெனவே கைத்துப்பாக்கியை எடுத்துவிட்ட ஒரே காரணத்துக்காகவே பல தற்கொலைகளும் கொலைகளும் நடைபெறுகின்றன, என்று நான் நம்புகிறேன். அது மற்றொரு பாதாளமே, அந்த 45 டிகிரி சரிவில் ஒருவர் சறுக்காமல் இருக்க முடியாது, கைத்துப்பாக்கியின் விசையைத் தட்டும்படி மீற முடியாத மாபெரும் சக்தி அவரை நிர்ப்பந்திக்கிறது. ஆனால் நான் எல்லாவற்றையும் பார்த்துவிட்டேன், எல்லா

வற்றையும் அறிந்து கொண்டேன், அவள் என்னைச் சுடு வதை அமைதியாக எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன் என்ற உணர்வு ஒரு வேளை அந்தச் சரிவில் சறுக்காதபடி அவளைக் காப்பாற்றலாம்.

மௌனம் தொடர்ந்தது. தலை முடிக்குப் பக்கத்தில் என் நெற்றிப் பொட்டை எஃகு தொடுகின்ற குளிர்ச்சியான உணர்ச்சியை நான் திடீரென்று உணர்ந்தேன். நான் தப்பி விட முடியும் என்று நிச்சயமாக நம்பினேனா என்று நீங் கள் கேட்பீர்கள். கடவுளுக்கு முன்னால் பேசுவதைப் போல நான் உங்களிடம் உண்மையைச் சொல்கிறேன். மிகச் சிறி தளவு நம்பிக்கை கூட எனக்கில்லை, நூறில் ஒரு பங்கு வாய்ப்புத்தான் எனக்கு இருந்தது. அப்படியானால் நான் ஏன் மரணத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்? இனி நான் உங்களைக் கேள்வி கேட்கிறேன்; நான் போற்றிய ஒரு பெண் எனக்கு நேராகக் கைத்துப்பாக்கியை நீட்டும் பொ ழுது நான் வாழ்வதனால் என்ன பயன்? மேலும் எங்களுக்கி டையில் தலைமைக்காக நடைபெறும் சண்டையை, வாழ்க் கை அல்லது மரணம் என்ற பயங்கரமான சண்டையை, தன் னுடைய தோழர்களால் கோழைத்தனத்துக்காகத் தூக்கி யெறியப்பட்ட நேற்றைய கோழை பங்கெடுக்கின்ற சண் டையை அந்தத் தருணம் குறித்தது என்பதை என்னுடைய உயிரின் முழுச் சக்தியாலும் நான் அறிந்தேன். அதை நான் அறிவேன், என்னைப் போலவே அவளும் அதை அறிவாள், அதாவது நான் தூங்கவில்லை என்பது அவளுக்குப் புரிந்தி ருக்குமானால்.

ஒரு வேளை இவை எதுவுமே இல்லாதிருக்கலாம் அல்லது ஒரு வேளை அந்த நேரத்தில் இந்தக் கருத்துக்கள் என்னிடம் ஏற்படாமல் கூட இருந்திருக்கலாம். ஆனால் அவை அனைத் துமே இருந்திருக்கத்தான் வேண்டும், அக மனத்திலாவது இருந்திருக்கத்தான் வேண்டும். ஏனென்றால் பிறகு என்னு டைய வாழ்க்கையின் ஒவ்வொரு மணி நேரத்தின் போதும் அதைப் பற்றி நினைப்பதைத் தவிர நான் வேறொன்றும் செய்யவில்லை.

அவள் குற்றம் செய்யாதபடி நான் ஏன் அவளைத் தடுக்க வில்லை என்று நீங்கள் மறுபடியும் என்னைக் கேட்கலாம். ஓ! அதற்குப் பிறகு என் முதுகுத் தண்டில் பனிக்கட்டி பட்ட தைப் போல நடுங்கிக் கொண்டு நான் அந்தத் தருணத்தை

நினைவு படுத்திக் கொண்ட ஒவ்வொரு தடவையும் அதே கேள்வியை என்னிடமே ஆயிரக் கணக்கான தடவைகள் நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆனால் என்னுடைய ஆன்மா இருண்ட மனக் கசப்பில் தோய்ந்திருந்தது. நான் அழிந்து கொண்டிருக்கிறேன், இன்னொருவரை நான் எப் படிக் காப்பாற்ற முடியும்? அந்த நேரத்தில் நான் அடுத்த நபரைக் காப்பாற்ற விரும்பினேனா அல்லது விரும்பவில்லை யா என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? அந்த நேரத் தில் என்னுடைய உணர்ச்சிகள் எப்படி இருந்தன என்பது யாருக்குத் தெரியும்?

ஆனால் என்னுடைய புலன்கள் விழித்துக் கொண்டிருந் தன: வினாடிகள் கழிந்தன, எங்கும் மரணத்தின் அமைதி நிலவியது. திடீரென்று என் உடல் நம்பிக்கையில் சிலிர்த் தது. நான் வேகமாகக் கண்களைத் திறந்தேன். அவள் அறை யில் இல்லை. நான் படுக்கையிலிருந்து எழுந்தேன். நான் வெற்றிபெற்று விட்டேன். அவள் நிரந்தரமாக முறியடிக்கப் பட்டுவிட்டாள்!

நான் காலைச் சிற்றுண்டிக்காக அறையை விட்டு வெளியே வந்தேன். எப்பொழுதும் நாங்கள் முன் அறையில் உட்கார்ந்து காலைச் சிற்றுண்டி அருந்துவது வழக்கம். எப்பொழுதும் அவள்தான் எனக்குத் தேநீரை ஊற்றிக் கொடுப்பாள். நான் மௌனமாக உட்கார்ந்தேன். அவள் கொடுத்த டம் ளரை வாங்கிக் கொண்டேன். சுமார் ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு அவளை ஏறிட்டுப் பார்த்தேன். அவள் பயங்கரமாக வெளுத்திருந்தாள், முந்திய இரவைக் காட்டிலும் அதிக மாக வெளிறிப் போயிருந்தாள். அவள் என்னை உற்றுப் பார்த்தபடி இருந்தாள். நான் அவளை கவனமாகப் பார்ப் பதைக் கண்டவுடன் திடீரென்று அவளுடைய வெளிறிய உதடுகள் நடுங்கியபடியே வெளிறிய புன்சிரிப்பை உதிர்த் தன; அவளுடைய கண்கள் பயந்து கொண்டே ஒரு கேள் வியைக் கேட்டன. ''ஆகவே அவருக்குத் தெரியுமா, அவர் பார்த்துவிட்டாரா என்று அவள் இன்னும் சந்தேகப்படு கிறாள், ஆச்சரியப்படுகிறாள்'' என்று நான் நினைத்தேன். நான் அலட்சியமாகப் பார்வையைத் திருப்பிக்கொண்டேன். காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு நான் கடையைப் பூட்டிக் கொண்டு சந்தைக்குச் சென்றேன். அங்கே ஒரு இரும்புக் கட்டிலும் திரையும் வாங்கினேன். வீட்டுக்குத் திரும்பியதும்

முன் அறையில் இரும்புக் கட்டிலை வைத்தேன், அதற்குப் பக்கத்தில் திரையைத் தொங்க விட்டேன். அந்தப் படுக்கை அவளுக்கு. ஆனால் நான் அவளிடம் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. வார்த்தைகள் அங்கே அவசியமில்லை. நான் எல்லாவற்றையும் பார்த்து விட்டேன், எல்லாம் எனக்குத் தெரியும், இனிமேல் எனக்கு எவ்விதமான சந்தேகமும் கிடையாது என்பதை அந்தப் படுக்கை அவளிடம் தெரிவித்திருக்கும். நான் இரவில் படுத்தபொழுது கைத் துப்பாக்கியை வழக்கம் போல மேசையின் மீது வைத்தேன். அன்றிரவில் அவள் தன்னுடைய புதிய படுக்கையில் மௌனமாகப் படுத்துக் கொண்டாள்; எங்கள் திருமணம் ரத்தாகிவிட்டது, அவள் ''முறியடிக்கப்பட்டாள், ஆனால் மன்னிக்கப்படவில்லை.'' அன்றிரவில் அவள் ஜன்னியில் பிதற்றினாள் அதிகாலைக்கு முன்னால் அவளுக்கு மோசமான காய்ச்சல். ஏற்பட்டது. அவள் ஆறு வார காலம் நோய் வாய்ப்பட்டிருந்தாள்.

இரண்டாம் பகுதி

1

ஆணவமான கனவு

என்னோடு தங்கியிருக்கப் போவதில்லை, எசமானியின் உடலைப் புதைத்ததும் போய்விடப்போவதாக லுக்கேரியா சற்று முன்புதான் என்னிடம் கூறினாள். நான் முழந்தாளிட்டு ஐந்து நிமிடங்களாகப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன். நான் ஒரு மணி நேரம் பிரார்த்தனை செய்ய விரும்பினேன்; ஆனால் என்னுடைய மனதில் சிந்தனைகள் திரண்டு மோதிக் கொண்டிருக்கின்றன. அவையனைத்தும் நலிந்த சிந்தனைகளே. என் மூளை நோய்வாய்ப்பட்டுவிட்டது —ஆகவே பிரார்த்தனை செய்வதால் என்ன பயன்?.. அது பாவம் நிறைந்தது, அவ்வளவு தான். எனக்குத் தூக்கம் வரவில்லை என்பதும் விசித்திரமானதே. ஒருவருக்கு ஆபத்து, மிகவும் பெரிய ஆபத்து ஏற்படுகின்றபொழுது துயரத்தின் முதல் குமுறல்கள், மிகவும் மூர்க்கமான குமுறல்கள் முடிவடைந்த பிறகு ஒருவர் எப்பொழுதுமே உறங்க விரும்புகிறார். மரணதண்டனை விதிக்கப்பட்டவர்கள் தம்முடைய கடைசி இரவில் மிகவும் ஆழ்ந்த அமைதியுடன் உறங்குவதாகச் சொல்கிறார்கள். அது முற்றிலும் சரியானதே. அது இயற்கை, இல்லையென்றால் ஒருவரால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது. நான் சோபாவில் படுத்தேன். ஆனால் என்னால் அப்படித் தூங்க முடியவில்லை...

* * *

... அவள் நோய்வாய்ப்பட்டிருந்த ஆறு வார காலத்தின் போது நாங்கள் நாள் முழுவதும் அருகிலிருந்து அவளை கவனித்துக் கொண்டோம். லுக்கேரியாவும் நானும் மற்றும் நான் வேலைக்கு வைத்திருந்த பயிற்சி பெற்ற செவிலிப்

பெண்ணும். நான் செலவைப் பற்றிக் கவலைப்படவில்லை. அவளுக்காகச் செலவு செய்வதை நான் மகிழ்ச்சியாகக் கூட நினைத்தேன். நான் டாக்டர் ஷ்ரோடரைக் கூட்டிக் கொண்டு வந்தேன். ஒவ்வொரு வருகைக்கும் பத்து ரூபிள்கள் கட்டணமாகக் கொடுத்தேன். அவளுக்கு உணர்வு திரும்பிய பிறகு நான் அவள் பார்வையில் படாமலிருக்க முயற்சி செய்தேன். ஆனால் அதை எதற்காக வர்ணிக்க வேண்டும்? அவள் மறுபடியும் நடமாட ஆரம்பித்த பிறகு என்னுடைய அறைக்கு வந்தாள். ஊமையைப் போல, மௌனமாக சற்றுத் தள்ளி நான் அப்பொழுது அவளுக்காக வாங்கியிருந்த மேசைக்குப் பக்கத்தில் உட்கார்ந்தாள்...ஆம், அது உண்மையே. நாங்கள் ஒருவரோடொருவர் எதுவும் பேசவில்லை. அதாவது பிறகு நாங்கள் பேசிக் கொள்ளத் தொடங்கினோம், ஆனால் அது சாரமற்ற பேச்சே. நான் வேண்டுமென்றே மௌனத்தைக் கடைப்பிடித்தேன் என்பது உண்மையே. ஆனால் தான் அதிகம் பேச வேண்டியதில்லை என்பதைப் பற்றி அவளும் மகிழ்ச்சி அடைந்தாள் என்பது எனக்கு நன்றாகத் தெரிந்தது. அது அவளுக்கு முற்றிலும் இயற்கை என்று நான் நினைத்தேன். ''அவள் முற்றிலும் மூழ்கிப் போய் விட்டாள், முறியடிக்கப்பட்டு விட்டாள். எனவே மறப்பதற்கும் சரிப்படுத்திக் கொள்வதற்கும் அவளுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும் என்பது இயற்கையே'' என்று நான் நினைத்தேன். ஆகவே நாங்கள் மௌனத்தினூடே வாழ்ந்தோம். ஆனால் நான் எதிர் காலத்துக்கு என்னைத் தயாரித்துக் கொள்வதில் என்னுடைய ஒவ்வொரு நிமிடத்தையும் செலவிட்டேன். அவளும் அதையே செய்கிறாள் என்று நான் நினைத்தேன். அப்பொழுது அவள் எதைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்று ஊகிக்க முயற்சி செய்வது எனக்கு அதிகமான ஆனந்தத்தைக் கொடுத்தது.

இன்னொரு விஷயம்: அவள் நோயாளியாகப் படுத்திருந்தபொழுது நான் எவ்வளவு வேதனைக்குள்ளானேன் என்பது ஒருவருக்கும் தெரியாது என்பது உண்மையே. ஆனால் நான் மௌனமாக அழுதேன். என் இதயத்தின் விம்மல்களை லுக்கேரியாகூடக் கேட்டுவிடக் கூடாது என்று அடக்கிக் கொண்டேன். நான் அதைப் பற்றி நினைக்கப் போவதில்லை, அவள் எல்லாவற்றையும் அறிந்து கொள்ளாமல் இறந்து

விடுவாள் என்று என்ஞல் கற்பனை செய்யக்கூட இயலவில்லை. ஆனுல் அவளுடைய உயிருக்கு இனி ஆபத்தில்லாமல், அவள் குணமடையத் தொடங்கியபொழுது நான் மிகவும் வேகமாகவும் வெற்றிகரமாகவும் என்னுடைய மன அமைதியைத் திரும்பப் பெற்றேன். அது எனக்கு நன்ருக நினைவிருக்கிறது. அதைக் காட்டிலும் என்னவென்ருல் எங்களுடைய எதிர்காலத்தை இயன்றவரை நெடுங்காலத்துக்குத் தள்ளி வைப்பது அதற்கிடையில் இப்போதுள்ளபடியே நீடிப்பது என்று நான் முடிவு செய்தேன். ஆம், அப்பொழுது மிகவும் விசித்திரமான, பிரத்யேகமான உணர்ச்சி எனக்கு ஏற்பட்டிருந்தது. அதைப் பற்றி வேறு எப்படிச் சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை: நான் அவள் மீது வெற்றியடைந்து விட்டேன், இந்த உணர்வு மட்டுமே எனக்கு முழுத் திருப்தியளிப்பதாகத் தோன்றியது, அந்தக் குளிர் காலம் முழுவதும் நாங்கள் இப்படியே இருந்தோம். ஆமாம். நான் திருப்தியாக இருந்தேன். இது வரை ஏற்பட்டிராத அளவுக்கு அதிகமான திருப்தியுடன் இருந்தேன். குளிர்காலம் முழுவதும் இப்படியே கழிந்தது.

என்னுடைய வாழ்க்கையில் ஒரு பயங்கரமான நிகழ்ச்சி இருந்தது. அந்த நிகழ்ச்சி அது வரை, அதாவது என் மனைவிக்கும் எனக்கும் பெரும் சச்சரவு ஏற்பட்ட நாள் வரை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணியும் என்னை அழுத்தி வேதனைப் படுத்திக் கொண்டிருந்தது. என் நற்பெயருக்கு ஏற்பட்ட களங்கமும் படையிலிருந்து நான் விலக்கப்பட்டதுமே அந்த சம்பவம். சுருக்கமாகச் சொல்வதென்ருல், நான் எதேச்சாதிகார அநீதிக்கு பலியாகிவிட்டேன். என்னுடைய தோழர்கள் என்னை வெறுத்தார்கள் என்பது உண்மையே. என்னுடன் பழகுவது சற்றுக் கடினமாக இருந்தது அல்லது ஒரு வேளை நான் புதிராகத் தோன்றியது அதற்குக் காரணமாக இருக்கும். ஆனுல் சில சமயங்களில் இப்படி ஏற்படுவது உங்களுக்குத் தெரியும்: நீங்கள் மிகவும் விரும்புகின்ற, பாராட்டுகின்ற, மதிக்கின்ற ஒரு விஷயம் உங்கள் தோழர்கள் கூட்டத்திடம் என்ன காரணத்தாலோ ஏளனமான சிரிப்பை ஏற்படுத்துகிறது. ஓ! யாரும் என்னை ஒரு போதும் விரும்பியதில்லை, பள்ளிக்கூடத்திலும் கூடத்தான். நான் எங்கும், எப்பொழுதும் வெறுக்கப்பட்டேன். லுக்கேரியாவுக்குக் கூட என்னைப் பிடிக்கவில்லை, படையில் நடைபெற்ற சம்பு

வத்துக்கு என் மீதிருந்த வெறுப்பு மூலவேர் என்ற போதிலும் இறுதி முடிவு தற்செயலானதே என்பதில் சந்தேகமில்லை. நான் இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்ருல் குருட்டுச் சந்தர்ப்பத்திஞல், மேகங்களைப் போலக் கலைந்து போகக் கூடிய சந்தர்ப்பங்கள் துரதிர்ஷ்டவசமாக ஒன்று கூடிவிட்டதனுல் அழிந்து போவதைக் காட்டிலும் எரிச்சலானது, பொறுக்க முடியாதது வேறு ஒன்றுமே இருக்க முடியாது. அது அறிவுடைய நபருக்கு மிகவும் கேவலமானதே. இதுதான் நடைபெற்றது.

ஒரு இரவு நேரத்தில், நாடக அரங்கத்தில் இடைவேளையின் போது நான் சிற்றுண்டிக் கடைக்குப் போயிருந்தேன். அ... என்ற பெயருடைய ஒரு ஹுஸ்ஸார் உள்ளே நுழைந்தான். எங்கள் படைப்பிரிவைச் சேர்ந்த காப்டன் பெசும்த்ஸேவ் நடைபாதையில் கலாட்டா செய்து கொண்டிருக்கிருர், அவர் ''குடிமயக்கத்தில் இருப்பதாகத் தோன்றுகிறது'' என்று மிகவும் உரத்த குரலில் இரண்டு ஹுஸ்ஸார் நண்பர்களிடம் அவன் சொல்லிக் கொண்டிருந்தான். அது அங்கேயிருந்த எல்லா அதிகாரிகளுக்கும் பொது மக்களுக்கும் கேட்டது. மற்றவர்கள் அதைப் பெரிதாக நினைத்துப் பேசவில்லை. மேலும் எப்படி இருந்தாலும் அது உண்மையுமல்ல. காப்டன் பெசும்த்ஸெவ் குடிமயக்கத்தில் இருக்கவில்லை. அங்கே கலாட்டாவும் நடைபெறவில்லை. ஹுஸ்ஸார்கள் மற்ற விஷயங்களைப் பேசத் தொடங்கிஞர்கள். அந்த விவகாரம் அதோடு முடிந்துவிட்டது. ஆனுல் மறு நாள் காலைப் பொழுதுக்குள் அந்தக் கதை எங்களுடைய படைப்பிரிவை எட்டிவிட்டது. காப்டன் பெசும்த்ஸெவைப் பற்றி அ... திமிரான முறையில் பேசிய பொழுது எங்கள் படைப்பிரிவைச் சேர்ந்த நான் ஒருவனே அங்கிருந்தபடியால் நான் உடனே அந்த ஹுஸ்ஸாரிடம் போய் எச்சரிக்கை செய்து அவன் வாயை அடைத்திருக்க வேண்டும் என்று எங்கள் படைப் பிரிவின் எல்லா அதிகாரிகளுமே உடனடியாகச் சொல்லத் தொடங்கிஞர்கள். ஆனுல் எந்தக் காரணத்துக்காகச் செய்வது? அவன் பெசும்த்ஸெவ் மீது வன்மம் கொண்டிருந்தால் அது அவர்களுடைய தனிப்பட்ட விவகாரம். நான் ஏன் அதில் தலையிட வேண்டும்? அது சொந்த விவகாரம் அல்ல—மொத்த படைப்பிரிவுக்கும் உரிய விவகாரமே, அங்கே நான் ஒருவனே படைப்பிரிவின் பிரதி

நிதியாக இருந்தேன் என்பதால் தங்களுடைய சொந்த கௌரவத்தையோ அல்லது படைப்பிரிவின் கௌரவத்தையோ பெரிதாக நினைக்காத அதிகாரிகள் எங்கள் படைப் பிரிவில் இருப்பதற்கு என்னுடைய நடத்தையே சான்று என்று அங்கேயிருந்த மற்ற அதிகாரிகளும் பொதுமக்களும் கருதியிருக்கலாம் என்று எங்கள் அதிகாரிகள் இப்பொழுது கூறினர்கள். அவர்களுடைய வாதமுறையை நான் ஒத்துக் கொள்ள இயலவில்லை. காலதாமதமாகி விட்ட போதிலும் இப்பொழுது அ... விடம் சம்பிரதாய முறையில் சவால் விடுவதன் மூலம் அந்த விவகாரத்தைச் சரிசெய்ய முடியும் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது. நான் அதைச் செய்ய மறுத்தேன். எனக்கு எரிச்சலேற்பட்டிருந்த படியால் காட்டமாகவே மறுத்தேன். அதற்குப் பிறகு விலகல் விண்ணப்பத்தை உடனடியாக அனுப்பினேன். இதுதான் நடந்த கதை. நான் என்னுடைய பெருமையைக் காத்துக் கொண்டேன், ஆனல் என்னுடைய ஆன்மா நசுக்கப்பட்டுவிட்டது. என்னுடைய சித்தத்தையும் தர்க்கசக்தியையும் நான் இழந்தேன். அதே சமயத்தில் மாஸ்கோவில் என்னுடைய சகோதரியின் கணவர் எங்களுடைய குறைந்த மூலதனத்தை—அதில் என்னுடைய பங்கும் இருந்தது—வீணுக்கி முடித்து விட்டார். அதில் என் பங்கு மிகவும் குறைவானதுதான். ஆனல் அதன் விளைவாக நான் காசில்லாமல், வீடில்லாமல் விடப்பட்டேன். நான் ஒரு வேலையில் சேர்ந்திருக்கலாம். ஆனல் நான் சேரவில்லை. இராணுவ உடையை அணிந்த பிறகு ஒரு ரயில்வேத் தொழிலாளியின் உடையை அணிவதற்கு நான் விரும்பவில்லை. அது அவமானமாக இருந்தால், அவமானமாகவே இருக்கட்டும். அது வீழ்ச்சி என்ருல் வீழ்ச்சியாகவே இருக்கட்டும். அது தாழ்வு என்ருல் அப்படியே இருக்கட்டும், எவ்வளவு கீழே போகிறேனே அவ்வளவு நல்லது—இப்படி முடிவு செய்தேன். அடுத்த மூன்று வருடங்களைப் பற்றி என்னுடைய நினைவுகள் மிகவும் துயரமானவை. உதவியற்றவர்களுக்கான வியாஸெம்ஸ்கி விடுதியில் கூட நான் இருந்தேன். ஒன்றரை வருடத்துக்கு முன்பு என்னுடைய ஞானத்தாய்—அவள் பணக்காரி, முதியவள்—மாஸ்கோவில் மரணமடைந்தாள். அவள் தன்னுடைய உயிலில் பல நபர்களைக் குறிப்பிட்டு எழுதிய நேரத்தில் எதிர்பாராத விதத்தில் என்னையும் நினைவுபடுத்திக்

கொண்டு மூவாயிரம் ரூபிள்கள் எனக்குக் கொடுக்கும்படி எழுதியிருந்தாள்.

நான் பல விஷயங்களையும் சிந்தித்தேன். பிறகு என் விதியை அங்கேயே, அப்பொழுதே முடிவு செய்தேன். அடகுக் கடை நடத்துவதற்கு ஏன் முடிவு செய்தேன் என்றால் அந்தத் தொழிலில் என்னுடைய கடந்த காலத்தைப் பற்றி சமாதானம் சொல்ல வேண்டியிருக்காது என்பதனால்தான். பணம், வீடு, என்னுடைய பழைய நினைவுகளிலிருந்து தனித்து ஒரு புதிய வாழ்க்கை—இது என்னுடைய திட்டம். எனினும் என்னுடைய துயரமிக்க கடந்த காலமும் என்னுடைய கௌரவம் மற்றும் நற்பெயருக்கு ஏற்பட்ட அழிக்க முடியாத களங்கமும் ஒவ்வொரு மணியும் ஒவ்வொரு நிமிடமும் என்னைச் சித்திரவதை செய்தன. அதற்குப் பின்னர் நான் திருமணம் செய்து கொண்டேன். அது தற்செயலான நிகழ்வா, இல்லையா—எனக்குத் தெரியாது. எனினும் அவளை என் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டுவந்த பொழுது ஒரு நண்பனைக் கூட்டிக் கொண்டு வருவதாகவே நான் நினைத்தேன். ஏனென்றால் எனக்கு ஒரு நண்பன் மிகவும் அவசரமாகத் தேவைப்பட்டான். ஆனால் அந்த நண்பனைப் பதப்படுத்த வேண்டும், உருவாக்க வேண்டும்—முதலில் முறியடிக்கவும் வேண்டும்—என்பதை நான் தெளிவாகக் கண்டேன். அதிலும் அந்த உலகமறியாத பதினாறு வயதுக் குழந்தையிடம் பூர்வாங்கமாக எதையும் தெரிவிக்காமல் நான் எதையும் விளக்கியிருக்க முடியுமா? உதாரணமாக, கைத்துப்பாக்கி சம்பந்தப்பட்ட அந்த பயங்கரமான சம்பவமும் அதன் மூலம் கிடைத்த உதவியும் இல்லையென்றால் நான் ஒரு பேடியல்ல, என்னுடைய படைப்பிரிவு என்னைக் கோழை என்று குற்றம் சாட்டியது அநீதியானது என்பதை நான் அவளிடம் நிரூபித்திருக்க முடியுமா? அந்த ஆபத்து மிகவும் உதவியாகவே இருந்தது. கைத்துப்பாக்கிக்கு முன்னால் என்னுடைய சுய—கட்டுப்பாட்டின் மூலம் என்னுடைய துயரமான கடந்தகாலத்தை நான் பழிவாங்கினேன். வேறு எவரும் அதைப் பற்றி எக்காலத்திலும் தெரிந்து கொள்ளப் போவதில்லை என்றாலும் **அவளுக்குத்** தெரியும். அது எனக்கு எல்லாமாக இருந்தது, ஏனென்றால் அவள் எனக்கு எல்லாமாக இருந்தாள்; என்னுடைய எதிர்காலம் என் கனவுகளில் படைத்த அனைத்து நம்பிக்கையு

மாக அவள் இருந்தாள்! நான் யாருக்காக என்னைத் தயாரித்துக் கொண்டிருந்தேனோ அந்த ஒரே நபர் அவள்தான். வேறு யாரையும் நான் சிறிதும் விரும்பவில்லை—இப்பொழுது அவளுக்கு எல்லாம் தெரியும். குறைந்த பட்சமாக, என்னுடைய எதிரிகளின் அணியில் அவசரமாகச் சேர்ந்தது தவறானது என்பதை அவள் அறிவாள். இந்த எண்ணம் எனக்குப் பெருமகிழ்ச்சியைக் கொடுத்தது. அவள் இனிமேல் என்னைப் பேடி என்று நினைக்க மாட்டாள், ஒருவேளை வினோதமானவன் என்று நினைக்கலாம். நடைபெற்று முடிந்த சம்பவத்துக்குப் பிறகு இந்த எண்ணம் கூட உண்மையில் எனக்கு அதிருப்தியளிக்கவில்லை. வினோதமாக இருப்பது ஒரு தீமை அல்ல, அதற்கு எதிரானது என்று சொல்லலாம். ஏனென்றால் பெண்கள் சில சமயங்களில் அதை விரும்புகிறார்கள். சுருக்கமாகச் சொல்வதென்றால் சிக்கலை நீக்குவதை நான் வேண்டுமென்றேதான் தள்ளிவைத்தேன். நடைபெற்ற சம்பவங்கள் அந்தத் தருணத்தில் என்னுடைய மன அமைதிக்கு அவசியமானதைக் காட்டிலும் அதிகமே; என்னுடைய கனவுகளில் இணைத்துக் கொள்வதற்கு வளமான காட்சிகளையும் பொருளையும் கொடுத்தன. நான் கனவு காண்பவன்; அது என்னிடமிருக்கும் குறை. என்னிடம் போதுமான பொருளாயத விவரங்கள் இருந்தன. அவளைப் பொறுத்தமட்டில் இன்னும் காத்திருக்க வேண்டும் என்று நினைத்தேன்.

எனவே இத்தகைய எதிர்பார்ப்புகளில் குளிர்காலம் முடிந்தது. அவள் மேசைக்கு முன்னால் உட்கார்ந்திருக்கும் பொழுது அவளைத் திருட்டுத் தனமாகப் பார்ப்பதில் நான் மகிழ்ச்சி அடைந்தேன். அவள் பகலில் சித்திரத்தையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள், மாலை நேரங்களில் அவள் சில சமயங்களில் என்னுடைய புத்தக அலமாரியிலிருந்து புத்தகங்களை எடுத்துப் படித்தாள். என்னுடைய புத்தகத் தேர்வு என்னைப் பற்றிக் கூட நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அவள் அநேகமாக வெளியில் போவதில்லை. ஒவ்வொரு நாளும் மாலையுணவுக்குப் பிறகு—இருள் பரவுவதற்கு முன்பு—நான் அவளை உலாவக் கூட்டிச் செல்வது வழக்கம். நாங்கள் உலாவுவோம். ஆனால் முன் போல மௌனமாக அல்ல. நாங்கள் மௌனமாக இல்லை, இனிமையாகப் பேசிக் கொண்டிருக்கிறோம் என்ற தோற்றத்

தை ஏற்படுத்துவதற்கு நான் முயற்சித்தேன்; ஆனால் நான் முன்னர் குறிப்பிட்டதைப் போல நாங்கள் இருவருமே எழுச்சியான பேச்சை விரும்பவில்லை. அது எனக்குநோக்கமாக இருந்தது, அவளைப் பொறுத்தமட்டில், இன்னும் ''அவகாசம்'' கொடுக்க வேண்டும் என்று நான் நினைத்தேன். நான் அவளைத் திருட்டுத்தனமாகப் பார்த்து மகிழ்ச்சி அடைந்த பொழுது அந்தக் காலம் முழுவதுமே அவள் என்னை அக்கறையுடன் நோக்குவதை நான் ஒருபோதும் பார்க்கவில்லை என்பது அந்தக் குளிர்காலம் முழுவதும் எனக்கு ஒருபோதும் தோன்றாதது வேடிக்கைதான் என்பது உண்மையே. அவள் மருண்டிருக்கிறாள் என்று நான் நினைத்தேன். மேலும் அவள் மிகவும் பீதியடைந்து பலவீனமாக, அந்த நோய்க்குப் பிறகு மிகவும் பலவீனமாகத் தோன்றினாள். இல்லை, நான் பொறுத்திருப்பேன், திடீரென்று ''ஒரு நாள் அவளாகவே என்னிடம் வருவாள்'' என்று நான் நினைத்தேன்.

இந்த எண்ணம் என்னிடம் வெல்ல முடியாத கவர்ச்சியைக் கொண்டிருந்தது. சில சமயங்களில் அவள் எனக்குத் தீங்கிழைத்துவிட்டாள் என்று நான் உணர்வதாகத் தோன்றுமளவுக்கு என் உணர்ச்சிக்கும் மனதுக்கும் முறுக்கேற்றிக் கொள்வதை என்னால் தவிர்க்க முடியவில்லை என்பதையும் சொல்லி விடுகிறேன். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இது சற்று நேரம் நீடிக்கும். ஆனால் என் இதயத்தில் வெறுப்பு ஒருபோதும் பழுக்க அல்லது வேரூன்ற முடியவில்லை. இது ஒரு விளையாட்டு என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை என்றுதான் நான் நினைத்தேன். நான் ஒருபோதும், ஒருபோதும்—அவளுக்கென்று படுக்கையும் திரையும் வாங்கியதன் மூலம் எங்கள் திருமண உறவை நானே நொறுக்கியபொழுது கூட—அவளைக் குற்றவாளி என்று கருதமாட்டேன். நான் அவளுடைய குற்றத்தைப் பற்றி மேற்போக்காக முடிவு செய்தது இதற்குக் காரணம் அல்ல. இல்லை. தொடக்கத்திலிருந்தே, கட்டிலை வாங்குவதற்கு முன்பிருந்தே கூட அவளை முற்றிலும் மன்னிப்பது என்னுடைய நோக்கமாக இருந்ததே இதற்குக் காரணம்.

சுருக்கமாகச் சொல்வதென்றால், இந்த விஷயத்தில் என் முடிவு என்னுடைய வழக்கத்துக்கு மாறாக இருந்தது, ஏனென்றால் நான் ஒழுக்கத்தைப் பற்றியவரை கண்டிப்பான நீதிபதி. அவள் மிகவும் தோல்வியடைந்த

வளாக, மிகவும் செருக்குக் குலேந்தவளாக, நசுக்கப்பட்ட வளாகத் தோன்றியதனுல்—அவளுடைய கர்வபங்கத்தைப் பற்றிய சிந்தனேயை நான் நிச்சயமாக விரும்பினேன் என்ருலும்—சில சமயங்களில் உருக்கத்தோடு அவளேப் பற்றி வருத்தப்பட்டேன். எங்களுக்கிடையில் இந்த சமத்துவமின் மையை நான் விரும்பினேன்...

அந்தக் குளிர் காலத்தின்போது நான் சில நல்ல காரி யங்களேயும் செய்யுமாறு நேர்ந்தது. நான் இரண்டு கடன் களே ரத்துச் செய்தேன்; அடமானமாக எதையும் பெற்றுக் கொள்ளாமல் ஒரு ஏழைப் பெண்ணுக்குக் கடன் கொடுத் தேன். என் மனேவியிடம் நான் ஒன்றுமே சொல்லவில்லே. அதைச் செய்தபொழுது அவள் தெரிந்து கொள்வாள் என்ற எண்ணமே எனக்குக் கிடையாது. ஆனுல் அந்தப் பெண் எனக்கு நன்றி சொல்வதற்காக உள்ளே வந்தாள். அவள் எனக்கு முன்னுல் முழந்தாளிடவில்லேயே தவிர மற்றபடி எல்லாவற்றையும் செய்தாள். எனவே அவளுக்குத் தெரிந்து விட்டது. அந்தப் பெண்ணுக்குச் செய்த உதவியைத் தெரிந்து கொண்டதில் அவள் உண்மையாகவே மகிழ்ச்சி அடைந்தாள் என்று கருதினேன்.

வசந்த காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. அது ஏப்ரல் நடுப்பகுதி. சன்னல்களிலிருந்து குளிர்கால அடைப்புக்கள் அகற்றப்பட்டுவிட்டன. எங்களுடைய மௌனமான அறை கள் சூரியனுடைய பளபளப்பான ஒளிக்கற்றைகளால் பிரகா சித்தன. ஆனுல் என் கண்களுக்கு மேலே தொங்கிக் கொண் டிருந்த திரை என் பகுத்தறிவை மறைத்தது. மரணத்தை ஏற்படுத்துகின்ற, பயங்கரமான திரை! அது எப்படி நடை பெற்றது என்று எனக்குத் தெரியாது. ஆனுல் திடீரென்று திரை கீழே விழுந்தது. நான் உடனே எல்லாவற்றையும் பார்த்தேன், புரிந்து கொண்டேன். அது தற்செயலான நிகழ்வா, அது தான் இறுதித் தீர்ப்பா அல்லது கதிரவனு டைய ஒளிக்கற்றை என்னுடைய மழுங்கிப் போன மூளே யில் சிந்தனேயும் தெளிவும் ஏற்படுத்திவிட்டதா? இல்லே. அது சிந்தனேயும் அல்ல, தெளிவும் அல்ல. அநேகமாகச் செத்துப்போய்விட்ட ஒரு உணர்ச்சி திடீரென்று என்னிடம் வாழ்க்கைக்காகக் கிளர்ந்து துடித்தது; என்னுடைய மழுங் கிப் போன ஆன்மா மற்றும் என்னுடைய பேய்த்தனமான ஆணவம் முழுவதையும் ஒளியூட்டியது. அது ஒரு குலுக்குத்

தான். அது திடீரென்று, எதிர்பாராத முறையில் நடை பெற்றது. கதிரவன் மறைவதற்கு முன்பு, பிற்பகலில் சுமா ராக ஐந்து மணிக்கு அது நடைபெற்றது...

2

திரை திடீரென்று கீழே விழுகிறது

நான் மேலும் சொல்வதற்கு முன்பாக ஒன்று அல்லது இரண்டு வார்த்தைகள். ஒரு மாதத்துக்கு முன்பு ஒரு நாள் அவளிடம் விசித்திரமான சோகத்தைக் கண்டேன். அது வெறும் மௌனம் அல்ல; ஆனால் இப்பொழுது அது சோ கம். அதையும் நான் திடீரென்றுதான் கவனித்தேன். அவள் தலையைக் குனிந்து கொண்டு தையல் வேலையில் ஈடுபட்டி ருந்தாள். நான் அவளை கவனித்துக் கொண்டிருப்பது அவ ளுக்குத் தெரியாது. அவள் மிகவும் மெலிந்து ஒல்லியாகி விட்டாள் என்று திடீரென்று எனக்குத் தோன்றியது. அவள் முகம் மிகவும் வெளுத்திருந்தது, அவளுடைய உதடுகளில் இரத்தமில்லை.

இவை அனைத்தும் அவளுடைய சோகமும் சேர்ந்து எனக்கு பயங்கரமான அதிர்ச்சியைக் கொடுத்தன. பெரும்பாலும் இரவு நேரங்களில் அவள் வறட்சியாக இறு முவதை நான் கேட்டதுண்டு. நான் உடனே எழுந்தேன் அவளிடம் ஒன்றும் சொல்லாமல் டாக்டர் ஷ்ரோடரைக் கூப்பிடுவதற்குச் சென்றேன்.

டாக்டர் மறு நாள் வந்தார். அவள் மிகவும் ஆச்சரிய மடைந்து டாக்டர் ஷ்ரோடரையும் என்னையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஆனால் என் உடல்நிலை நன்றாகத்தான் இருக்கிறது,'' என்று அவள் தெளிவில்லாத புன்சிரிப்புடன் கூறினாள்.

ஷ்ரோடர் அவளை முற்ற முழுமையாகப் பரிசோதனை செய்யவில்லை (இந்த மருத்துவர்கள் சில சமயங்களில் அகம் பாவத்துடன் கவனக்குறைவாக நடந்து கொள்கிறார்கள்), அது அவளுடைய நோயினால் ஏற்பட்ட பின்விளைவு என் பதை மட்டுமே அவர் அடுத்த அறையில் என்னிடம் கூறினார். வசந்தகாலம் வந்ததும் கடற்கரைக்குப் போவது பயன்

தரும், அல்லது அது இயலாதென்றால் நாட்டுப்புறத்துக்குப் போக வேண்டும் என்றார். சுருக்கமாகச் சொல்வதென்றால் அது ஏதோ பலவீனம் அல்லது அந்த மாதிரியான ஒன்று என்பதைத் தவிர வேறு எதுவுமில்லை என்று அவர் என்னிடம் கூறினார். டாக்டர் போன பிறகு அவள் பீதியும் சிந்தனையும் கலந்த முறையில் என்னைப் பார்த்தாள்:

''என் உடல்நிலை நன்றாக, மிகவும் நன்றாக இருக்கிறது'' என்றாள்.

இதைக் கூறியவுடன் அவள் முகம் திடீரென்று சிவப்படைந்தது. அநேகமாக வெட்கத்தினால் அப்படி மாறியிருக்க வேண்டும். அது வெட்கமாகத்தான் இருக்க வேண்டும். ஓ! எல்லாமே இப்பொழுது எனக்கு நன்றாகப் புரிகிறது. இன்னும் **அவளுடைய கணவனாக** இருக்கும் நான் அவளுடைய உடல் நலத்தைப் பற்றி இன்னும் அவளுடைய உண்மையான கணவனைப் போலக் கவலைப்படுவது அவளுக்கு வெட்கத்தைக் கொடுத்தது. ஆனால் அப்பொழுது நான் அதைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டேன், அவள் அடக்கத்தின் காரணமாக வெட்கப்படுகிறாள் என்று நினைத்தேன் (அந்தத் திரை!).

அப்புறம் அதற்கு ஒரு மாதத்துக்குப் பிறகு ஏப்ரலில் பிரகாசமான, சூரிய ஒளி தகதகத்துக் கொண்டிருந்த பிற்பகலில் சுமார் ஐந்து மணிக்கு நான் மேசைக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு கணக்குகளைச் சரி பார்த்துக் கொண்டிருந்தேன். எங்களுடைய அறையில் மேசைக்கு முன்னால் உட்கார்ந்து அவள் தையல் வேலை செய்து கொண்டிருந்தாள். திடீரென்று... அவள் பாடுவதைக் கேட்டேன், அவள் மென்மையாக, மிகவும் மென்மையாகப் பாடிக் கொண்டிருந்தாள். அந்தப் புது அனுபவம் என்னிடம் தடுமாற்றத்தை ஏற்படுத்தியது. ஏன் அப்படி ஏற்பட்டதென்று இன்றுவரை என்னால் விளக்கிக் கூற முடியாது. அதுவரை அவள் பாடுவதை அநேகமாக நான் கேட்டதில்லை. ஒருவேளை எல்லாவற்றுக்கும் முதலில் அவளை முதன்முறையாக வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வந்த பொழுது, நாங்கள் வீட்டிற்குள் இலக்குகளைக் குறி பார்த்துச் சுட்டு இன்னும் வேடிக்கையாகப் பொழுது போக்கியபொழுது கேட்டிருக்கலாம். அப்பொழுது அவள் குரல் அழுத்தமாக, கணீரென்று இருக்கும்; கேட்பதற்கு மிக இனிமையாகவும் ஆரோக்கியமாகவும்

இருக்கும். இப்பொழுது அவள் பாட்டு பரிதாபமாக ஒலித்தது—ஓ! அது துயரமான பாட்டு அல்ல (அது ஏதோ ஒரு காதற்பாட்டே), ஆனுல் அவளால் அந்தப் பாடலைப் பாட முடியவில்லை என்பதைப் போல, அந்தப் பாடலே நோய்க்கு ஆளாகிவிட்டதைப் போல அவளுடைய குரலில் நோயின் அறிகுறியும் மனமுறிவும் இருந்தன. அவள் கீழ் ஸ்தாயியில் பாடிஞள். அவள் உச்சஸ்தாயியில் பாடியபொழுது அவளுடைய குரல் உடைந்து விட்டது—அது பாவம் மென் குரல், பரிதாபகரமாக அறுந்துவிட்டது. அவள் தொண்டையைச் சரி செய்து கொண்டு மறுபடியும் மிகவும் மென்மையாகப் பாட ஆரம்பித்தாள்...

என்னுடைய பதட்டத்தைக் கண்டு எல்லோரும் சிரிக்கலாம்; ஆனுல் நான் ஏன் அப்படிப் பதட்டமடைந்தேன் என்பதை ஒருவரும் ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது. இல்லை, நான் அவளுக்காகப் பரிதாபப்படவில்லை. அது முற்றிலும் வேறு ஒன்ருகும். முதலில், குறைந்த பட்சம் முதல் தடவையின்போது மோசமான, விசித்திரமான முறையில் நான் திகைப்படைந்தேன், மிகவும் ஆச்சரியமடைந்தேன். அந்த உணர்ச்சி நன்மையற்றதாக, அநேகமாகப் பழிவாங்கும் உணர்வாக இருந்தது. ''என்ன இது பாடுகிருளா? நான் உட்கார்ந்திருக்கும் பொழுதா! **என்னை அவள் மறந்து விட்டாளா?''**

நான் உணர்ச்சி மிகுதியால் அந்த இடத்திலேயே உட்கார்ந்திருந்தேன். பிறகு எழுந்து என் தொப்பியை எடுத்துக் கொண்டு என்ன செய்கிறேன் என்று தெரியாதவனுக வெளியே நடந்தேன். அதாவது எங்கே போகிறேன், ஏன் போகிறேன் என்று எனக்குத் தெரியாது. ஹாலில் லுக்கேரியா என்னுடைய மேல்கோட்டை நான் அணிவதற்கு உதவி செய்தாள்.

''அவள் பாடுவதுண்டா?'' என்று லுக்கேரியாவைக் கேட்டேன். அவளுக்குப் புரியவில்லை. புரிந்து கொள்ளாமல் என்னை உற்றுப் பார்த்தாள். ஆனுல் அப்பொழுது என்னைப் புரிந்து கொள்வது உண்மையில் கடினமே.

''அவள் பாடுவது இதுதான் முதல் தடவையா?''

''இல்லை. நீங்கள் இல்லாத பொழுது சில சமயங்களில் பாடுகிருள்,'' என்று லுக்கேரியா பதிலளித்தாள்.

நான் ஒவ்வொன்றையும் நினைவு வைத்திருக்கிறேன்.

நான் படிகளில் இறங்கி வீட்டிலிருந்து வெளியே சென்றேன். தெருவில் எந்த நோக்கமும் இல்லாமல் நடந்து கொண்டிருந்தேன். தெருமுனைக்கு வந்து விசும்பை உற்றுப்பார்த்துக் கொண்டு அங்கேயே நின்றேன். என்னைக் கடந்து சென்றவர்கள் என்னை இடித்துக் கொண்டு சென்றார்கள். ஆனால் அது என் மனதில் படவில்லை. நான் ஒரு வண்டியைக் கூப்பிட்டேன். போலீஸ் பாலத்துக்குப் போகும்படி அவனிடம் கூறினேன். ஏன் என்று எனக்குத் தெரியாது. திடீரென்று என் முடிவை மாற்றிக் கொண்டு அவனுக்கு இருபது கோபெக் அன்பளிப்புக் கொடுத்தேன்.

''உனக்கு ஏற்பட்ட சிரமத்துக்காக,'' என்று அவனை நோக்கி அசட்டுத்தனமாகச் சிரித்துக் கொண்டே கூறினேன். என் இதயத்தில் புதுமையான பரவசம் பொங்கிக் கொண்டிருந்தது.

நான் வீடு நோக்கித் திரும்பினேன். அவசரமாகக் காலடிகளை வைத்தேன். அந்தப் பரிதாபமான உடைந்த மென்குரல் திடீரென்று என்னுடைய ஆன்மாவில் மறுபடியும் ஒலித்தது. அது எனக்கு மயக்கத்தைத் தந்தது. திரை கீழே விழுந்து கொண்டிருக்கிறது. அது கீழே விழுந்து கொண்டிருக்கிறது, கீழே விழுந்து கொண்டிருக்கிறது. நான் இருக்கும் பொழுது அவள் திடீரென்று பாடியதற்கு அவள் என்னை மறந்து விட்டாள் என்றுதான் அர்த்தம்—அது எனக்கு மிகவும் தெளிவானதாகவும் என்னை பயமுறுத்துவதாகவும் இருந்தது. என் இதயம் அதை அறியும். ஆனால் என்னுடைய ஆன்மா பரவசத்தில் மூழ்கியிருந்தது; அது அச்சத்தைக் காட்டிலும் பலமானதாக இருந்தது.

ஓ, விதியின் முரண் நகையே! என்னுடைய ஆன்மாவில் இந்தப் பரவசத்தைக் குளிர்காலம் முழுவதும் ஏன் தாங்கிக் கொண்டிருந்தேன்? அதில் வேறு எதுவும் இருந்திருக்க முடியாது, ஆனால் குளிர்காலம் முழுவதும் நான் எங்கே இருந்தேன்? நான் என்னுடைய ஆன்மாவோடு இணைந்திருந்தேனா? நான் படிகளின் மீது பொறுமையில்லாமல் ஓடினேன், ஆனால் நான் உள்ளே நுழையும் பொழுது பயத்துடன் சென்றேனா இல்லையா என்பதை என்னால் சொல்ல முடியாது. நான் ஆற்றில் மிதந்துகொண்டிருப்பதைப் போலத் தரை ஆடிக் கொண்டிருந்தது என்பது மட்டுமே எனக்கு நினைவிருக்கிறது. நான் அறைக்குள் நுழைந்தேன்.

அவள் உட்கார்ந்து தையல் வேலேயில் ஈடுபட்டிருந் தாள்; அவள் தலே முன்போலவே குனிந்திருந்தது. ஆனல் அவள் இப்பொழுது பாடவில்லே. அவள் கணநேரம் என்னே அக்கறை இல்லாமல் பார்த்தாள், ஆனல் அது பார்வை அல்ல. யாராவது ஒருவர் அறைக்குள் நுழை கின்ற பொழுது பார்க்கின்ற இயல்பான அர்த்தமில்லாத மறிவினேயே.

நான் நேராக அவளிடம் சென்று அவளுக்குப் பக்கத் தில் உட்கார்ந்தேன். நான் பித்துப் பிடித்தவனேப் போல இருந்தேன். அவள் பீதியடைந்த மாதிரி என்னே வேகமாகப் பார்த்தாள். நான் அவள் கையைப் பிடித்தேன்; நான் அவளி டம் என்ன சொன்னேன் அல்லது என்ன சொல்ல முயன் றேன் என்று எனக்கு நினைவில்லே, ஏனென்ருல் அப்பொழுது என்னல் சரியாகப் பேசக்கூட முடியாத நிலேயில் இருந்தேன். என்னுடைய குரல் நடுங்கியது. என்னல் அதைக் கட்டுப் படுத்த முடியவில்லே. ஆனல் அப்பொழுது என்ன சொல் வதென்று எனக்குத் தெரியவில்லே. நான் மூச்சுத் திணறி னேன்.

''நாம் பேசலாமே... உங்களுக்குத் தெரியுமா... ஏதா வது பேசுங்கள்!'' இப்படி அர்த்தமில்லாத சில வார்த்தை களே நான் முணுமுணுத்தேன். ஆனல் அப்பொழுது நான் அறிவுடன் இருந்திருக்க முடியுமா? அவள் மறுபடியும் நடுங் கினள். அவள் பீதியுடன் என் முகத்தை உற்றுப் பார்த்தவ ளாக என்னிடமிருந்து பின்வாங்கினள். திடீரென்று அவள் கண்களிலிருந்த பாவம் **கண்டிப்பான திகைப்பாக** மாறியது. ஆம், அது திகைப்பே. அது **கண்டிப்பாகவும்** இருந்தது. அவள் கண்களே மிகவும் பெரிதாக்கிக் கொண்டு என்னேப் பார்த் தாள். அவளுடைய கண்டிப்பான தோற்றம், அவளுடைய கண்டிப்பான திகைப்பு எனக்கு மரண அடி கொடுத்தது. அவள் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லே; ஆனல் அவளு டைய திகைப்பு ''உனக்குக் காதலும் வேண்டுமோ, அப்படித் தானே? காதலா?'' என்று கேட்பதைப் போல இருந்தது. ஆனல் அவளுடைய முகத்தில் எல்லாவற்றையும் நான் படித் தேன், எல்லாவற்றையுமே. என்னுடைய உடல் முழுவதும் ஆடியது. நான் அவளுடைய காலடியில் விழுந்தேன். ஆம், அவள் காலடியில் விழுந்தேன். அவள் வேகமாகத் துள்ளி யெழுந்தாள்; ஆனல் நான் அவளுடைய இரு கைகளேயும்

என் முழு பலத்துடன் பிடித்துக்கொண்டேன். அவளை அந்த இடத்திலேயே நிறுத்தினேன்.

ஓ! என்னுடைய நம்பிக்கையற்ற நிலை எனக்குத் தெரியும். மிகவும் நன்றாகத் தெரியும். ஆனால் என்னுடைய இதயத்தில் பொங்கியெழுந்த பரவசம் தடுக்க முடியாததாக இருந்தபடியால் நான் மரணமடையப் போவதாக நினைத்தேன் என்று சொன்னால் நீங்கள் நம்புவீர்களா? நான் அவளுடைய பாதங்களைப் பரவசத்திலும் மகிழ்ச்சியிலும் முத்தமிட்டேன். ஆம், எவ்விதமான வரையறைகளையும் அளவுகோல்களையும் அறியாத மகிழ்ச்சியில்தான். அப்போதைய மனமுறிவான நிலைமையில் எனக்குச் சிறிது கூட நம்பிக்கை இல்லை என்பதை உணர்ந்திருந்தாலும் நான் கண்ணீரை வடித்தேன், ஏதாவது பேச முயற்சி செய்தேன், ஆனால் வார்த்தைகள் வரவில்லை. அவள் முகத்தில் பீதியும் திகைப்பும் திடீரென்று மாறி கவலைக்குறி, ஒரு அவசரமான கேள்விக்குறி தோன்றியது. அவள் விசித்திரமாக, வெறியுடன் கூட என்னைப் பார்த்தாள். அவள் எதையோ புரிந்து கொள்ள அவசரப்பட்டாள். அவள் இளநகை புரிந்தாள். நான் அவள் பாதத்தை முத்தமிட்டுக் கொண்டிருப்பது அவளுக்கு மிகவும் வெட்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அவள் பாதங்களைப் பின்னால் இழுத்துக் கொண்டாள். ஆனால் தரையில் அவள் பாதங்கள் பதிந்த இடத்தை நான் வேகமாக முத்தமிட்டேன். அவள் அதைக் கண்டாள். அவள் வெட்கமடைந்தபடியால் திடீரென்று சிரிக்கத் தொடங்கினாள் (ஒரு நபர் வெட்கப்படும் பொழுது எப்படிச் சிரிப்பார் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும்). இசிவு நோய் ஏற்பட்டிருப்பதைப் போல அவள் மாறியதை நான் கவனித்தேன். அவள் கைகள் துடித்துக் கொண்டிருந்தன, ஆனால் நான் அதைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை, நான் முழந்தாள் பணிந்த நிலையிலிருந்து எழுந்து நிற்க மாட்டேன், நான் அவளைக் காதலிக்கிறேன் என்று தொடர்ந்து முணுமுணுத்துக் கொண்டேயிருந்தேன்.

''உன்னுடைய கவுனின் ஓரத்தை முத்தமிடுகிறேன்... என்னுடைய வாழ்க்கை முழுவதும் உன்னை இப்படி வழிபடுவேன்...'' எனக்குத் தெரியாது, எனக்கு நினைவில்லை. அவள் திடீரென்று விம்மியழுதாள். அவள் உடல் நடுங்கத் தொடங்கியது. அவள் பயங்கரமான முறையில்

இசிவுக்கு ஆளாகியிருந்தாள். நான் அவளை பயமுறுத்திவிட்டேன்.

நான் அவளுடைய படுக்கைக்கு அவளைத் தூக்கிச் சென்றேன். இசிவு மறைந்ததும் அவள் எழுந்து உட்கார்ந்தாள். பயங்கரமான தளர்ச்சியுடன் தோன்றினாள். என் கைகளைப் பிடித்துக் கொண்டு அமைதியடையும்படி என்னைக் கெஞ்சினாள். ''வேண்டாம், உங்களைத் துன்புறுத்திக் கொள்ளாதீர்கள், வேண்டாம்!'' என்று கூறிவிட்டு மறுபடியும் அழத் தொடங்கினாள். அன்றைய மாலைப் பொழுது முழுவதும் நான் அவள் பக்கத்திலிருந்து அகலவில்லை. அவளைக் கடற்கரைக்கு, பூலோனுக்குக் கூட்டிச் செல்வேன், அவளை இப்பொழுது, உடனடியாக, இரண்டு வார காலத்தில் அங்கே கூட்டிக் கொண்டு போவேன் என்று அவளிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். அவளுடைய மென்குரல் உடைந்துவிட்டது. அன்றைய தினம் அந்தக் குரலிசையைக் கேட்டேன் என்று அவளிடம் கூறினேன். நான் அடகுக் கடையை மூடிவிடுகிறேன், அதை டபிரனிராவோவிடம் விற்பனை செய்துவிடுகிறேன்; எல்லாமே மறுபடி தொடங்கும், ஆனல் பூலோன், பூலோன்தான் முக்கியம். அவள் கேட்டுக் கொண்டிருந்தாள். ஆனல் அவள் இன்னும் பயத்தோடிருந்தாள். அவள் மென்மேலும் அதிகமாக பயமடைந்தாள். ஆனல் நான் அதை முக்கியமாகக் கருதவில்லை. ஆனல் நான் அவள் காலடியில் மென்மேலும் தடுக்க முடியாதபடி விழுவதற்கு, அவள் பாதங்கள் பதிந்த பூமியை முத்தமிட்டுக் கொண்டே இருப்பதற்கு, அவளை வழிபடுவதற்கு விரும்பினேன். ''எனக்கு ஒன்றும் வேண்டாம், உன்னிடம் வேறு எதுவும் வேண்டாம்'' என்று நான் அவளிடம் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தேன். ''நீ பதில் சொல்ல வேண்டாம், என்னை முழுமையாகப் புறக்கணித்து விடு, தொலைவிலிருந்து உன்னைப் பார்த்துக் கொண்டிருக்க மட்டுமாவது அனுமதி கொடு, என்னை உன்னுடைய பொருளாக, நாயாக... வைத்துக்கொள்...'' என்றேன். அவள் கண்ணீர் வடித்தாள்.

''நீங்கள் என்னை இப்படியே இருக்க விடுவீர்கள் என்று நான் நினைத்தேன்.'' அந்த வார்த்தைகள் அவளறியாமலே வெளிவந்தன. ஒரு வேளை அவற்றைப் பேசியது கூட அவளுக்குத் தெரியாதிருக்கலாம். ஆனல் அவை முக்கியத்து

வம் நிறைந்த, ஆபத்தான வார்த்தைகள். அந்த மாலை நேரத்தில் அவற்றின் பொருள் வேறு எதையும் காட்டிலும் கடினமான முறையில் எனக்கு மிகத் தெளிவாகவும் என் இதயத்தில் சொருகிய கத்தியைப் போலவும் இருந்தன. அது எனக்கு எல்லாவற்றையும், எல்லாவற்றையுமே விளக்கியது; ஆனால் அவள் அங்கே எனக்குப் பக்கத்தில் இருக்கும் பொழுது, நான் அவளைப் பார்க்க முடிந்தபொழுது நம்பிக்கை என்னைத் தடுக்க முடியாதபடி தூக்கிச் சென்றது. நான் மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தேன். ஓ! நான் அன்று மாலையில் அவளை முற்றிலும் களைப்படையச் செய்து விட்டேன், அது எனக்குப் புரிந்தது, நான் எல்லாவற்றையும் உடனே வேறு விதமாக்கிவிடுவேன் என்ற எண்ணமே அந்த நேரம் முழுவதும் என்னிடமிருந்தது. கடைசியில், இரவு பரவிக் கொண்டிருந்த பொழுது அவள் முற்றிலும் ஓய்ந்து விட்டதாகத் தோன்றியது, படுத்துத் தூங்க முயற்சிக்கும்படி நான் அவளைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன். அவள் உடனே ஆழ்ந்து உறங்கினாள். அவள் ஜன்னியில் பிதற்றுவாள் என்று நான் அஞ்சினேன். அவளுக்கு ஜன்னி வந்தது — ஆனால் மிகவும் லேசாகவே. அநேகமாக ஒவ்வொரு நிமிடமும் நான் அவளைப் போய்ப் பார்த்துக் கொண்டிருந்தேன். என்னுடைய செருப்புகள் ஓசை ஏற்படுத்தாமல் மெதுவாகச் சென்று அவளைப் பார்த்தேன். அந்தக் கேவலமான கட்டிலில், நான் அவளுக்காக வாங்கிய மூன்று ரூபிள் இரும்புக் கட்டிலில் அந்தப் பரிதாபமான, நோயாளிப் பெண்ணைப் பார்க்கும்பொழுது வேதனையால் என் கைகளைப் பிசைந்தேன். நான் அவளுக்குப் பக்கத்தில் முழந்தாளிட்டேன், ஆனால் அவள் தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது அவளுடைய பாதத்தை முத்தமிடுவதற்கு நான் துணியவில்லை (அவளுடைய விருப்பத்துக்கு விரோதமாக அல்ல!). பிரார்த்தனை செய்வதற்காக தெய்வவடிவத்துக்கு முன்னால் நான் முழந்தாளிட்டேன், ஆனால் மறுபடியும் துள்ளியெழுந்தேன். லுக்கேரியா சமையல் அறையிலிருந்து அவ்வப்பொழுது வந்தபடி என்னைப் பார்த்துக் கொண்டிருந்தாள். நான் அவளிடம் சென்று போய்த் தூங்கு, நாளையிலிருந்து எல்லாமே **முற்றிலும் வேறுவிதமாக** இருக்கும் என்று கூறினேன்.

நான் அதை நம்பினேன்—குருட்டுத்தனமாக, பைத்தி

யக்காரத்தனமாக, பயங்கரமாக. ஓ! என்னிடம் ஏற்பட்ட பூரிப்பு! நாளை வரட்டும் என்று மட்டுமே நான் விரும்பினேன். அறிகுறிகள் எப்படியிருந்தாலும் இன்னல் ஏற்படப் போகிறது என்பதை நான் ஒத்துக் கொள்ள மறுத்தேன். திரை கீழே விழுந்துவிட்ட போதிலும் அப்பொழுது என்னிடம் பகுத்தறிவு முற்றிலும் திரும்பவில்லை, மிகமிக நெடுங் காலம் வரை, இன்றைய தினம் வரை அது திரும்பவில்லை, அது இன்றுதான் என்னிடம் திரும்பியது. ஆனால் எப்படி அது முன்னதாகத் திரும்ப முடியும்? அவள் உயிரோடிருந்தாள், அவள் எனக்கு முன்பாக இருந்தாள், நான் அவளுக்கு அருகில் இருந்தேன். ''அவள் விழித்துக் கொண்ட பிறகு நான் எல்லாவற்றையும் அவளிடம் சொல்வேன், அவள் எல்லாவற்றையும் புரிந்து கொள்வாள்.'' நான் இப்படி எளிமையாக, தெளிவாகச் சிந்தித்தேன். ஆகவே நான் பேரானந்த மடைந்தேன். பூலோனுக்குப் பிரயாணம் என் மனதில் முதலிடத்தைக் கொண்டிருந்தது. என்ன காரணத் தாலோ, பூலோன் எல்லாவற்றையும் குறிக்கிறது, முடிவான ஏதோ ஒன்றின் திறவுகோல் பூலோனில் இருக்கிறது என்று நான் கற்பனை செய்தேன். ''பூலோனுக்கு! பூலோனுக்கு!'' பைத்தியக்காரனைப் போல பொழுது விடிவதற்காக நான் அவசரப்பட்டுக் கொண்டிருந்தேன்.

3

நான் மிகவும் நன்றாகப் புரிந்து கொண்டேன்

அது சில நாட்கள் மட்டுமே முன்பாக, ஐந்து நாட்கள், ஐந்து நாட்கள் மட்டுமே முன்பாக, கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது என்பதை நினைத்தால்! இல்லை, இல்லை, எனக்கு மட்டும் சற்று அதிகமான அவகாசம் கிடைத்திருக்குமானால், அவள் மட்டும் சற்றுத் தாமதித்திருப்பாளானால் நான் அவளுடைய மனவாட்டத்தைப் போக்கியிருப்பேன், அவள் அமைதியடைந்திருப்பாள், ஆம் அவள் அமைதியடைந்திருப்பாள்! மறுநாளன்று நான் சொன்னதை—அவள் திகைப்படைந்திருந்தாலும்—உதடுகளில் புன் சிரிப்புத் தவழக் கேட்டுக் கொண்டிருந்தாள்... அவளுடைய

திகைப்பு அல்லது அவளுடைய நாணம் அந்த ஐந்து நாட்கள் முழுவதும் அவளைப் பற்றிய முக்கியமான அம்சமாக இருந்தது. அவள் பயமடைந்திருந்தாள், மிகவும் அதிகமாக பயமடைந்திருந்தாள். நான் அதை மறுக்கவில்லை, நான் பைத்தியக்காரத்தனமான மறுப்புக்களைச் சொல்லப் போவதில்லை: அவள் பயமடைந்திருந்தாள், ஆனால் அவள் ஏன் பயப்பட வேண்டும்? நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே நாங்கள் ஒருவருக்கொருவர் அந்நியர்களாகியிருந்தோம், ஒருவருக்கொருவர் பழக்கமில்லாதவர்களாகியிருந்தோம். இப்பொழுது திடீரென்று இவை எல்லாம்... ஆனால் நான் அவளுடைய அச்சத்தைப் புறக்கணித்தேன். ஏனென்றால் எங்களுடைய புதிய வாழ்க்கையின் காட்சி என் கண்களைக் கூசச் செய்தது!.. நான் தவறு செய்துவிட்டேன், அது உண்மை, அது மறுக்க முடியாத உண்மையே. ஒன்றுக்கு மேற்பட்ட தவறுகள் கூட இருக்கலாம். மறு நாள் (அன்று புதன் கிழமை) விடிந்ததுமே அவள் விழித்துக் கொண்ட அக்கணத்திலேயே நான் உடனடியாக ஒரு தவறைச் செய்தேன். நான் திடீரென்று அவளை என்னுடைய நண்பனாகச் செய்தேன். நான் அவசரப்பட்டுவிட்டேன், மிகவும் அதிகமாக அவசரப்பட்டுவிட்டேன். ஆனால் நான் குற்றத்தை ஒத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது—நான் ஒத்துக் கொள்வது தேவைப்பட்டது. அது குற்றத்தை ஒத்துக் கொள்வதைக் காட்டிலும் மிகவும் அதிகமான ஒன்றே. நான் ஒன்றையும்—வாழ்க்கை முழுவதும் என்னிடமிருந்து மறைத்துக்கொண்ட விஷயங்களைக்கூட—மறைக்கவில்லை. அந்தக் குளிர்காலம் முழுவதும் அவள் காதலைப் பற்றி நான் உறுதியாக நம்பினேன், வேறு எத்தகைய சிந்தனையும் எனக்கு ஏற்படவில்லை என்று அவளிடம் திறந்த மனதோடு கூறினேன். என்னுடைய மனோபலத்தையும் பகுத்தறிவையும் இழந்ததன் விளைவுதான் அடகுக் கடை, சுய-தண்டனை மற்றும் தற்புகழைப் பற்றிய என்னுடைய சொந்தமான, தனிப்பட்ட கருத்துத்தான் அது என்பதைத் தவிர வேறல்ல என்பதை நான் அவளிடம் தெளிவாக எடுத்துக் கூறினேன். அன்று சிற்றுண்டிக்கடையில் நான் உண்மையில் கோழையாகத் தான் நடந்து கொண்டேன், அதற்கு என்னுடைய மிகையான கூச்சமே காரணம்; திடீரென்று அங்கே நான் முன்னால் போய் நின்றால் அது முட்

டாள்தனமாக இருக்காதா என்று நினைத்தேன், அந்த எண்ணம் என்னைக் கூசச் செய்துவிட்டது, அந்த நிலைமையில் நான் பின் வாங்கிவிட்டேன் என்று அவளிடம் கூறினேன். சண்டை போட வேண்டுமே என்று நினைத்து நான் அச்சமடையவில்லை, முட்டாள்தனமாக நடந்துகொள்ளக் கூடாது என்று நினைத்தே நான் அச்சமடைந்தேன். அதன் பிறகு அதை ஒத்துக் கொள்ள இயலாதபடி மிகவும் காலதாமதமாகி விட்டது, ஆகவே நான் எல்லோருக்கும் கஷ்டத்தைக் கொடுத்தேன், அதனால் அவளும் துன்பமடையும்படி செய்தேன், அவள் துன்பமடைவதற்கே அவளைத் திருமணம் செய்து கொண்டேன். மொத்தத்தில் பெரும்பகுதி நேரம் அதிகமான காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட நபரைப் போல நான் பேசினேன். அவள் தானாகவே என் கரங்களை எடுத்துத் தன் கைகளில் வைத்துக் கொண்டு போதும் நிறுத்துங்கள் என்று கெஞ்சினாள். ''நீங்கள் மிகைப் படுத்திக் கூறுகிறீர்கள்... நீங்கள் உங்களையே துன்புறுத்திக் கொள்கிறீர்கள்,'' என்று சொல்லிவிட்டு அவள் மறுபடியும் அழத் தொடங்கினாள்; அது மறுபடியும் இசிவில் முடிந்தது. என்னிடம் இவற்றையெல்லாம் தெரிவிக்க வேண்டாம், நடந்து போனவற்றை நினைவுபடுத்தாதீர்கள் என்று அவள் என்னிடம் திரும்பத் திரும்ப மன்றாடினாள்.

அவளுடைய முறையீடுகளைப் பற்றி நான் மிகக் குறைவான அக்கறை மட்டுமே காட்டினேன், அல்லது அது கூடக் காட்டவில்லை: வசந்தம், பூலோன்! எங்களுடைய சூரியன், எங்களுடைய புதிய சூரியன் அங்கே தானிருந்தது. என்னால் வேறு எதைப் பற்றியும் பேச முடியவில்லை. நான் அடகுக் கடையை மூடினேன், தொழிலை டபிரனிராவோவிடம் ஒப்படைத்தேன். பிறகு திடீரென்று நம்மிடமிருக்கும் எல்லாப் பணத்தையும் ஏழைகளுக்குக் கொடுத்து விடுவோமா என்று அவளிடம் கேட்டேன், அதாவது என் ஞானத்தாய் எனக்குக் கொடுத்த ஆரம்ப மூலதனமாகிய மூவாயிரத்தைத் தவிர, பூலோனுக்குப் பிரயாணம் செய்வதற்கு அந்தப் பணத்தைச் செலவிடலாம், திரும்பி வந்த பிறகு உழைத்துப் பாடுபட்டுப் புதிய வாழ்க்கையைத் தொடங்கலாம். அதுதான் எங்கள் முடிவு, ஏனென்றால் அவள் ஒன்றுமே பேசவில்லை... வெறுமனே சிரித்தாள். அந்தச் சிரிப்புக்குக்கூட மற்ற எல்லாவற்றையும் காட்டிலும் அவளுடைய

சாதுரியமே காரணம், நான் சங்கடப்படக் கூடாது என்று அவள் நினைத்திருக்கலாம். என்னல் அவளுக்குத் தொல்லையே ஏற்படுகிறது என்பதை நான் கண்டேன். அதைத் தெரிந்து கொள்ளாமலிருக்கும் அளவுக்கு நான் ஒரு முட்டாள் அல்லது சுயநலக்காரன் என்று நீங்கள் நினைத்துவிடாதீர்கள். நான் எல்லாவற்றையும், அற்பமான சிறு துணுக்கு உட்பட எல்லாவற்றையும் பார்த்தேன், எல்லாவற்றையும் பரிபூரணமாகப் பார்த்தேன், புரிந்து கொண்டேன்; என்னுடைய மன முறிவு முழுமையானது, சிறிதும் மறைக்கப்படவில்லை.

நான் என்னைப் பற்றியும் அவளைப் பற்றியும் பேசினேன். லுக்கேரியாவைப் பற்றிக் கூடத்தான். நான் கண்ணீர் வடித்தேன் என்று அவளிடம் கூறினேன்... அவள் சில விஷயங்களை நினைவு படுத்திக்கொள்ளக் கூடாது என்பதற்காக நான் உரையாடலைக் கூட மாற்றிக் கொண்டேன். அவள் ஓரிரு சந்தர்ப்பங்களில் முகமலர்ச்சி அடைந்தாள், எனக்கு நினைவிருக்கிறது. ஆம், நினைவிருக்கிறது! நான் பார்த்தேன் ஆனல் ஒன்றையும் பார்க்கவில்லை என்று நீங்கள் ஏன் சொல்ல வேண்டும்? இது மட்டும் நடைபெற்றிராவிட்டால், எல்லாமே புத்துயிர் பெற்றிருக்கும். ஏனென்றல் அவள் என்னிடம் சொன்னள்—அது நேற்றைக்கு முந்திய நாள். இலக்கியத்தைப் பற்றியும் அந்தக் குளிர்காலத்தின் போது அவள் படித்த புத்தகங்களைப் பற்றியும் நாங்கள் உரையாடிக் கொண்டிருந்தோம்—ஜில் பிலாஸ் கிரனடா ஆர்ச்பிஷப்பை சந்திக்கின்ற அந்தக் காட்சியைப் பற்றி* அவள் பேசினள், அதை நினைத்துச் சிரித்தாள். அவளுடைய சிரிப்பு மிகவும் இனிமையாகவும் கபடமில்லாமலும் இருந்தது, அவள் என் வாழ்க்கைத் துணைவியாக நிச்சயித்திருந்த (மறையும் கணப்பொழுது!) மாதிரியே துல்லியமாக இருந்தாள். நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்! அவள் ஆர்ச்பிஷப்பைப் பற்றி என்னிடம் குறிப்பிட்டது என்னிடம் வன்மையான

---

* லெசாஜ் (1663—1747) என்ற பிரெஞ்சு எழுத்தாளர் எழுதிய **ஜில் பிலாஸ்** என்ற நாவலின் முக்கிய கதாபாத்திரமான ஜில் பிலாஸ் கிரனடா ஆர்ச்பிஷப்பிடம் மாதாகோவிலில் அவருடைய பிரசங்கத்தின் பலவீனமான அம்சங்களை எடுத்துச் சொல்ல முயற்சிக்கின்ற காட்சி.—**ப-ர்.**

தாக்கத்தை ஏற்படுத்தியது. குளிர் காலத்தின் போது அந் தத் தனிமையில் ஒரு பேரிலக்கியத்தை ரசித்துப் படிக்கக் கூடிய அளவுக்கு அவள் கவலையில்லாமலும் மகிழ்ச்சியுட னும் இருந்தாள் என்று அது காட்டியது. அவள் ஏற்கெ னவே மனக் கவலை இல்லாதிருந்தாள், நான் அவளை அப் படியே இருக்க விடுவேன் என்று அவள் நம்பத் தொடங்கி யிருந்தாள் என்று அது எடுத்துக் காட்டியது. ''நீங்கள் என்னை இப்படியே இருக்க விடுவீர்கள் என்று நான் நினைத் தேன்'' என்று அவள் அந்த செவ்வாய்க்கிழமையன்று என் னிடம் கூறினாள். ஓ! அது பத்து வயதான பெண்ணுக்குப் பொருத்தமான எண்ணம்! அவள் அதை நம்பினாள், எல் லாமே உண்மையில் அப்படி இருக்க முடியும் என்று அவள் நம்பினாள். அவள் தன்னுடைய மேசையிலும் நான் ஒரு மேசையிலும், நாங்களிருவரும் இப்படியே அறுபது வயது வரை வாழ்ந்து கொண்டிருப்போம். ஆனால் நான் திடீ ரென்று அவளிடம் கணவனாக, காதலை விரும்பும் கணவ னாகச் சென்றேன்! என் தரப்பில் எவ்வளவு தப்பெண்ணம், எவ்வளவு குருட்டுத்தனம்!

நான் அவளைப் பரவசத்துடன் பார்த்துக் கொண்டிருந் தது மற்றொரு தவறாகும். நான் என்னுடைய உணர்ச்சி யைக் கட்டுப்படுத்தி இருக்கவேண்டும், ஏனென்றால் என்னு டைய பரவசம் அவளை பயமுறுத்தியது. ஆனால், உங்களுக் குத் தெரியுமா, நான் என்னுடைய உணர்ச்சியைக் கட்டுப் படுத்தினேன், நான் அவளுடைய பாதத்தை அதற்குப் பிறகு முத்தமிடவில்லை. நான் அவளுடைய... அட சரி... கணவன் என்று ஒரு தடவைகூடக் குறிப்பிடவில்லை. ஓ! என்னுடைய சிந்தனைகளில் அது மிகவும் அப்பாலிருந்தது. நான் செய்த தெல்லாம் அவளை வழிபடுவதே. ஆனால் முற்றிலும் ஊமை யாக இருக்க என்னால் முடியவில்லை, ஏதாவது சொல்லாமலி ருக்க என்னால் முடியவில்லை! நான் திடீரென்று அவளிடம் சென்று உன்னுடைய உரையாடலை மிகவும் ரசித்தேன், என் னுடன் ஒப்பிட முடியாத அளவுக்கு நீ ஏராளமாகப் படித் திருக்கிறாய் என்று கூறினேன். அவள் முகம் நன்றாகச் சிவந்து விட்டது. நான் மிகைப்படுத்திக் கூறுகிறேன் என்று அவள் நாணத்தோடு கூறினாள். அப்பொழுது நான் முட்டாள் தனமாக நடந்து கொண்டேன். அன்றைய தினத்தில் அந்தக் கதவுக்குப் பின்னால் நான் நின்று கொண்டிருந்த

பொழுது அவளுடைய வாக்குவாதத்தை, அவளுடைய கவ டின்மை அந்த மிருகத்துடன் போராடுவதை நான் கேட்டுக் கொண்டிருந்தேன், அவளுடைய அறிவை, குழந்தை மாதிரி இயல்பான கலைத்திறனுடன் இணைந்த அவளது மேதாவி லாசமான நகைச்சுவையை எவ்வளவு அதிகமாகப் போற்றி னேன் என்று நான் அவளிடம் கூறினேன். அவள் உடல் நடுங்குவது போலத் தோன்றியது, நான் மிகைப்படுத்திக் கூறுகிறேன் என்று அவள் மறுபடியும் கூறினுள், ஆனுல் திடீரென்று அவள் முகம் இருண்டது, அவள் தன் முகத் தைக் கைகளில் பொத்திக் கொண்டு விம்மியழுதாள். அதை என்னுல் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. நான் மறுபடியும் அவளுக்கு முன்னுல் முழந்தாளிட்டேன், மறுபடியும் அவளுடைய பாதங்களை முத்தமிடத் தொடங்கி னேன். சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று நடை பெற்றதைப் போல மறுபடியும் எல்லாமே இசிவில் முடிந்தது. இது சென்ற இரவில் நடைபெற்றது. காலை நேரத்தில்...

காலை நேரத்தில்? அட பைத்தியக்காரனே, அந்தக் காலை நேரம் இன்றுதானே, குறுகிய நேரத்துக்கு முன்பு, மிகவும் குறுகிய நேரத்துக்கு முன்பு!

சொல்வதைக் கேளுங்கள், புரிந்து கொள்வதற்கு முயற் சியுங்கள்: இன்று காலைச் சிற்றுண்டியின்போது நாங்கள் சந்தித்தபொழுது (நேற்று இசிவு ஏற்பட்ட பிறகு என்பதை மறக்க வேண்டாம்) அவளிடமிருந்த நிதானம் எனக்கு மிக வும் திகைப்பைக் கொடுத்தது, புரிகிறதா? முந்திய நாள் மாலையில் எங்களுக்கிடையே நடைபெற்றதை நினைத்து நான் பயத்தில் நடுங்கிக் கொண்டு இரவு முழுவதும் விழித்துக்கொண்டிருந்தேன். அவள் திடீரென்று என்னிடம் நேராக வந்தாள், எதற்காகவோ மன்ருடுவதைப் போல கைகளைச் சேர்த்துப் பிசைந்து கொண்டு என் முன்னுல் நின்ருள் (அது சிறிது நேரத்துக்கு முன்புதான், சிறிது நேரத் துக்கு முன்புதான்). தான் ஒரு குற்றவாளி, அது தனக்குத் தெரியும், அந்தக் குற்றம் குளிர்காலம் முழுவதும் அவளைச் சித்திரவதை செய்தது, அப்பொழுதும் கூட அவளைச் சித் திரவதை செய்து கொண்டிருக்கிறது... அவள் என்னுடைய பெருந்தகைமையை மிகவும் போற்றுகிருள், ''உங்களுக்கு நான் விசுவாசமுள்ள மனைவியாக இருப்பேன், உங்களை மதித்து நடந்து கொள்வேன்'' என்று கூறினுள். நான்

குதித்தெழுந்து அவளை வெறியோடு கட்டித் தழுவினேன். அவளை முத்தமிட்டேன். நீண்ட பிரிவுக்குப் பிறகு ஒரு கண வன் தன் மனைவியை எப்படி முத்தமிடுவானோ அப்படி அவள் முகத்தை, அவள் உதடுகளை நான் முத்தமிட்டேன். பிறகு நான் ஏன் வெளியே போனேன்? எங்களுடைய பிர யாண அனுமதிச் சீட்டுகளில் முத்திரை பெறுவதற்காக... இரண்டு மணி நேரம் மட்டும்தானே வெளியில் போயிருந் தேன்... அட கடவுளே! நான் ஐந்து நிமிடங்கள் மட்டும் முன்னதாக வந்திருந்தால், ஐந்து நிமிடங்கள் மட்டும்... கதவுக்கு முன்னால் நின்று கொண்டிருந்த அந்தக் கூட்டம், அவர்கள் என்னைப் பார்த்த பார்வைகள்... அட கடவுளே!

லுக்கேரியா சொல்கிறாள் (ஓ! நான் இப்பொழுது லுக் கேரியாவை ஒருக்காலும் போக விடமாட்டேன். அவளுக்கு எல்லாம் தெரியும். அவள் எங்களுடன் குளிர்காலம் முழு வதுமே இருந்தாள், அவள் எல்லாவற்றையும் என்னிடம் தெரிவிப்பாள்) நான் வெளியே சென்றபிறகு, நான் திரும்பி வருவதற்கு இருபது நிமிடங்களுக்கு முன்பாக எசமானியி டம் ஏதோ கேட்பதற்குப் போனதாக லுக்கேரியா சொல் கிறாள். எதற்காகப் போனேன் என்பது எனக்கு நினைவில்லை. அவளுடைய தெய்வ வடிவம் (புனித மரியாளின் தெய்வ வடிவம்) சுவரிலிருந்து எடுக்கப்பட்டு எசமானி அப்பொழுது பிரார்த்தனை செய்துகொண்டிருப்பதைப் போல அவளுடைய மேசையில் அவளுக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்தது. ''அன்புமிக்க அம்மா!'' என்று லுக்கேரியா கூப்பிட்டாள். ''ஒன்றுமில்லை, லுக்கேரியா. நீ போ, லுக்கேரியா!.. சற்று நில்'' என்று அவள் சொல்லிக் கொண்டு அவள் லுக்கேரியா வின் அருகில் வந்து அவளை முத்தமிட்டாள். ''அம்மா! நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?'' என்று லுக்கேரியா கேட்டாள். ''ஆமாம், லுக்கேரியா.''—''எசமான் நெடுங் காலத்துக்கு முன்பே உங்களிடம் வந்து தன்னை மன்னிக்கும் படிக் கெஞ்சியிருக்க வேண்டும்... நீங்கள் ஒற்றுமையாகிவிடு வதற்குக் கடவுள் அருள் புரிவார்...''—''நல்லது, லுக்கேரி யா. நீ போகலாம், லுக்கேரியா,'' என்று சொல்லி விட்டு அவள் மிகவும் விசித்திரமான முறையில் சிரித்தாள். அந்தச் சிரிப்பு மிகவும் விசித்திரமாக இருந்தபடியால் பத்து நிமிடங் களுக்குப் பிறகு லுக்கேரியா அவளை மறுபடியும் பார்ப்ப தற்குச் சென்றாள். ''அவள் சன்னலுக்குப் பக்கத்தில் கையைத்

தூக்கித் தலைக்குப் பின்னால் வைத்துச் சுவரின் மீது சாய்ந்து கொண்டு நின்றாள். அவள் அங்கே நின்றபடியே சிந்தித்துக் கொண்டிருந்தாள்; அவள் சிந்தனையில் லயித்திருந்தபடியால் நான் உள்ளே வந்ததையும் கதவுக்குப் பக்கத்தில் நின்று கொண்டு அவளை கவனித்துக் கொண்டிருந்ததையும் அவள் பார்க்கவில்லை. அவள் அங்கே நின்று கொண்டு சிரித்துக் கொண்டிருப்பதைப் போல, சிந்தித்துக் கொண்டும் சிரித்துக் கொண்டுமிருப்பதைப் போல எனக்குத் தோன்றியது. நான் அவளை மீண்டும் ஒரு முறை பார்த்து விட்டுத் திரும்பினேன், இந்தச் சிந்தனைகளை நினைத்த படியே ஓசை ஏற்படுத்தாமல் நடந்தேன். அப்போழுது அவள் சன்னலைத் திறக்கின்ற சத்தம் திடீரென்று கேட்டது. வெளியே குளிராக இருக்கிறது, அவளுக்குத் தடுமன் ஏற்பட்டுவிடும் என்று எச்சரிப்பதற்காக நான் அவசரமாகத் திரும்பினேன். அப்பொழுது அவள் திடீரென்று சன்னல் சுவரின் மேல் ஏறிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். அவள் திறந்திருந்த சன்னல் மீது முழு உயரமும் தெரிய நின்று கொண்டிருந்தாள். அவள் முதுகு எனக்குத் தெரிந்தது. அவள் கையில் தெய்வ வடிவம் இருந்தது. என் இதயம் பதறியது. ''எசமானியம்மா! எசமானியம்மா!'' என்று பலமாகக் கத்தினேன். என் கூக்குரலை அவள் கேட்டு என்னை நோக்கித் திரும்புவதைப் போல அசைந்தாள்; ஆனால் அவள் திரும்பவில்லை. அவள்காலை முன்வைத்தாள், தெய்வ வடிவத்தைத் தன் மார்புடன் அணைத்தாள்—சன்னலிலிருந்து கீழே குதித்தாள்!''

நான் உள்ளே நுழைந்தபொழுது அவள் உடலில் இன்னும் சூடு இருந்தது என்பது எனக்கு நினைவிருக்கிறது. எல்லோரும் என்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்ததும் நினைவிருக்கிறது. அவர்கள் அனைவரும் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள், ஆனால் இப்பொழுது, திடீரென்று அவர்கள் மௌனமாக எனக்கு வழிவிட்டார்கள். அவள்—அவள் பூமியின் மேல் தெய்வ வடிவத்தோடு கிடந்தாள். நான் மௌனமாக அவளருகில் சென்றதும் நெடு நேரம் வரை அவளைப் பார்த்துக் கொண்டு நின்றதும் கறுப்பு ஆவியின் மூலம் பார்த்ததைப் போல எனக்கு நினைவிருக்கிறது. எல்லோரும் நெருக்கியடித்துக் கொண்டு என்னைச் சுற்றிக் கூடினார்கள்; என்னிடம் ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தார்கள். லுக்

கேரியா அங்கே இருந்தாள், ஆனல் நான் அவளேப் பார்க்க வில்லே. அவள் என்னிடம் பேசியதாகச் சொல்கிருள். அந்த வியாபாரியை மட்டுமே எனக்கு நினேவிருக்கிறது. ''அவள் வாய் வழியாக ஒரு கைப்பிடி ரத்தம் கொட்டியது, ஒரு கைப்பிடி ரத்தம், ஒரு கைப்பிடி!'' என்று அவன் என்னிடம் சத்தம் போட்டுச் சொல்லிக்கொண்டிருந்தான். எனக்கு முன்னுலிருந்த தளக் கற்களின் மேல் இரத்தத்தைக் காட்டினுன். நான் இரத்தத்தை என் விரலில் தொட்டேன் என்று நினேக்கிறேன், என் விரலில் அது ஒட்டிக் கொண்டது, நான் அதை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன் (அது எனக்கு நினேவிருக்கிறது). அப்பொழுது அந்த நபர் ''ஒரு கைப்பிடி, ஒரு கைப்பிடி!'' என்று சத்தம்போட்டுக் கொண்டிருந்தான்.

''கைப்பிடியா? என்ன?'' என்று நான் பயங்கரமாகக் கூக்குரலிட்டபடியே கைகளே நீட்டிக் கொண்டு அவனே நோக்கிப் பாய்ந்தேன் என்று அவர்கள் கூறினுர்கள்...

ஓ! இது பைத்தியக் காரத்தனம், பைத்தியக் காரத்தனம்! இது ஒரு தப்பெண்ணம்! நம்ப முடியாதது! நடக்க முடியாதது!

4

ஐந்து நிமிடங்கள் மட்டுமே தாமதமாக வந்துவிட்டேன்

முடியுமா? இதை நம்ப முடியுமா? இப்படி நடக்க முடியும் என்று யாராவது சொல்வார்களா? அந்தப் பெண் ஏன் செத்தாள், ஏன்?

எனக்குப் புரிகிறது என்று நான் சொல்கின்றபொழுது— நம்புங்கள்; ஆனல் அவள் ஏன் சாக வேண்டும்? இந்தக் கேள்வி இன்னும் இருக்கிறது. அவள் என்னுடைய காதலேக் கண்டு பயந்தாள்; அதை ஏற்றுக் கொள்வதா, இல்லேயா என்று அவள் இதய பூர்வமாகத் தன்னேக் கேட்டாள், அந்தக் கேள்வியை அவளால் தாங்க முடியவில்லே. அவள் மரணத்தைத் தேர்ந்தெடுத்தாள். எனக்குத் தெரியும், எனக்குத் தெரியும், மூளேயைப் போட்டுக் குழப்புவதால் பயனில்லே. அவள் அதிகமான பல வாக்குறுதிகளேக் கொடுத்து விட்டாள், அவற்றை நிறைவேற்ற முடியாது என்று அவள் அஞ்சினுள்.

அது தெளிவு. இங்கே சிந்தித்துப் பார்க்க முடியாத அள வுக்கு மிகவும் பயங்கரமான சில அம்சங்கள் இருக்கின்றன.

அவள் செத்தது ஏன்? எதற்காக? இந்தக் கேள்வி இன் னும் இருக்கிறது. இந்தக் கேள்வி என் மூளையை உடைக் கிறது, உடைக்கிறது. அவள் விரும்பியிருந்தால், எல்லாம் **அப்படியே இருக்கும்படி** விட்டுவிட வேண்டுமென்று அவள் விரும்பியிருந்தால் நான் அவளை **அப்படியே இருக்க விட்டிருப் பேன்.** நான் அப்படி விட்டுவிடுவேன் என்று அவள் நம்ப வில்லை. அது தான் நிலைமை. இல்லை, இல்லை, நான் பொய் சொல்கிறேன். அதுவல்ல. என்னைப் பொறுத்தமட்டில் நேர் மையாகச் சொல்வதென்றால், அவள் என்னைக் காதலிப்ப தாக இருந்தால் அது முழுமையான காதலாக இருக்க வேண் டும், அந்தக் கடைக்காரனிடம் அவள் காட்டுகின்ற காத லாக இருக்கக் கூடாது என்பதாகும். அந்தக் கடைக்காரன் விரும்பிய காதலைத் தருவதற்கு ஒத்துக் கொள்ள முடியாத அளவுக்கு அவள் அதிகமான கற்பும் தூய்மையும் உடைய வளாக இருந்தபடியால் என்னை ஏமாற்றுவதற்கு அவள் துணியவில்லை. அரைக் காதலை அல்லது கால் பங்குக் காதலை முழுக் காதலாக மறைத்துக் கொடுத்து என்னை ஏமாற்று வதற்கு அவள் மறுத்தாள். அவள் மிகவும் நேர்மையான வள். அவளுடைய இதயத்தில் பெருந்தன்மையை விதைப் பதற்கு நான் முயற்சித்தேன், உங்களுக்கு நினைவிருக்கிறதா? எவ்வளவு அபத்தமான எண்ணம்.

அவள் என்னை மதித்தாளா, இல்லையா என்பதை அறிந்து கொள்ள நான் மிகவும் அக்கறையோடிருக்கிறேன். அவள் என்னை இழிவாகக் கருதினளா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. அவள் என்னை இழிவாகக் கருதினள் என்று நான் நினைக்கவில்லை. அவள் என்னை இழிவாகக் கரு தினள் என்ற எண்ணம் அந்தக் குளிர்காலத்தின் போது ஒரு தடவை கூட ஒருபோதும் எனக்குத் தோன்றவில்லை! இது விசித்திரமில்லையா? அவள் என்னைக் **கண்டிப்பான திகைப்புடன்** உற்றுப் பார்த்த தருணம் வரை நான் அதற்கு எதிரானதைப் பற்றி அழுத்தமாக நம்பிக் கொண்டிருந் தேன். அது உண்மையில் **கண்டிப்புத்தான்.** அவள் என்னை இழிவாகக் கருதினள் என்ற எண்ணம் திடீரென்று என்னி டம் ஏற்பட்டது. அதை மறுக்க முடியாதபடி நான் புரிந்து கொண்டேன், என்றென்றும் நிரந்தரமாகப் புரிந்து கொண்

டேன்! அவள் மட்டும் உயிரோடு இருந்திருந்தால் அவள் என்னை இழிவாகக் கருதுவது அப்படி முக்கியமா; அவளுடைய வாழ்க்கையின் எஞ்சிய காலம் முழுவதும் என்னை இழிவாகக் கருதியிருக்கட்டும்! அவள் சற்று நேரத்துக்கு முன்பு வரை நடமாடிக் கொண்டிருந்தாள், பேசிக் கொண்டிருந்தாள். அவள் சன்னலிலிருந்து ஏன் கீழே குதிக்க வேண்டும்? அதைத்தான் என்னுல் புரிந்து கொள்ள முடியவில்லை. ஐந்து நிமிடங்களுக்கு முன்பாகக் கூட நான் அதை சந்தேகித்திருக்க முடியுமா? நான் லுக்கேரியாவைக் கூப்பிட்டேன். இப்பொழுது நான் ஒருபோதும் லுக்கேரியாவைப் போகவிட மாட்டேன், உலகத்திலேயே அரிய பொருளைக் கொடுத்தாலும் போகவிட மாட்டேன்.

ஓ! நாங்கள் ஏதோ ஒருவகையான உடன்பாட்டுக்கு வந்திருக்க முடியுமே. குளிர்காலத்தின் போது மட்டுமே நாங்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் பயங்கரமாக விலகியிருந்தோம், ஆனுல் நாங்கள் மறுபடியும் பழைய பழக்கத்தை நிச்சயமாக வளர்த்துக் கொண்டிருக்க முடியும். நாங்கள் மறுபடியும் நண்பர்களாகிப் புதிய வாழ்க்கையைத் தொடங்கியிருக்க முடியாதா? நான் பெருந்தகைமை உள்ளவன், அவளும் அப்படிப்பட்டவளே—இது உங்களுக்கும் பயன்படும்! இன்னும் சில வார்த்தைகள், இரண்டு நாட்கள் மட்டும் போதும்—அதற்கு மேல் வேண்டாம்—அவள் எல்லாவற்றையுமே புரிந்து கொண்டிருப்பாள்.

அது ஒரு தற்செயலான விபத்து, சாதாரணமான, கொடுமையான, அர்த்தமற்ற தற்செயலான விபத்து என்பதுதான் பரிதாபம். அதிலிருக்கும் பரிதாபமே அதுதான்! ஐந்து நிமிடங்கள், நான் ஐந்து நிமிடங்கள் தாமதமாக வந்து விட்டேன்! நான் ஐந்து நிமிடங்கள் முன்பாக வந்திருந்தால் அந்தத் தருணம் மின்னலைப் போலத் தோன்றி மறைந்திருக்கும், மறுபடியும் அவள் தலையில் என்றென்றைக்கும் நுழைந்திருக்காது. எல்லாவற்றையும் அவளுக்குப் புரியவைத்த பிறகு அவை முடிவடைந்திருக்கும். ஆனுல் இப்பொழுது மறுபடியும் காலி அறைகள், நான் மட்டும் தனியே இருக்கிறேன். கடிகார ஊசலி எதைப் பற்றியும் சிறிதளவு அக்கறையோ அல்லது இரக்கமோ இல்லாமல் ஆடிக்கொண்டிருக்கிறது, மணியடித்துக் கொண்டிருக்கிறது. அங்கே யாருமில்லை—அதன் துன்பமே அதுதான்.

நான் முன்னும் பின்னும், முன்னும் பின்னும் நடந்து கொண்டிருக்கிறேன். நீங்கள் சொல்லாமலே எனக்குத் தெரியும், எனக்குத் தெரியும். விபத்தின் மீதும் ஐந்து நிமிடத் தாமதத்தின் மீதும் எல்லாப் பொறுப்பையும் நான் சுமத்துவது உங்களுக்கு வேடிக்கையாகத் தோன்றும். ஆனால் அது வெளிப்படையே. இதைச் சிந்தியுங்கள்: எல்லோரும் செய்வதைப் போல, அவள் தன் உயிரைப் போக்கிக் கொள்வதாக ஒரு குறிப்பு கூட எழுதி வைக்கவில்லை. லுக்கேரியாவைப் பற்றி சந்தேகம் ஏற்படலாம் என்று நிச்சயமாக அவளுக்குத் தோன்றியிருக்க வேண்டும்: ''நீயும் அவளும் தான் தனியாக இருந்தீர்கள், எனவே நீ அவளைப் பிடித்துத் தள்ளிவிட்டாய்'' என்று கூடச் சொல்லலாம். லுக்கேரியா குற்றமில்லாதவளாக இருந்தாலும், அவள் தெய்வ வடிவத்துடன் சன்னல் மீது நின்று கொண்டிருந்ததையும் பிறகு கீழே குதித்ததையும் தங்கள் வீட்டுச் சன்னல்களிலிருந்து அல்லது கீழே முற்றத்தில் நின்று கொண்டிருந்த பொழுது பார்த்தோம் என்று அங்கே நின்று கொண்டிருந்த நான்கு பேர்கள் மட்டும் சாட்சியமளிக்காதிருந்தால் அவர்கள் அவளை நிச்சயமாக நீதிமன்றத்துக்கு இழுத்திருப்பார்கள். ஆனால் அதுவும் கூட, அவர்கள் அங்கே இருந்ததும் அந்த சம்பவத்தைப் பார்த்ததும் மிகவும் தற்செயலானதே. இல்லை. அது ஒரு தருணம், கணக்குப் பார்க்க முடியாத தருணம் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. தூண்டுதலும் கற்பனையும்! அவள் அங்கே உட்கார்ந்து பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள் என்று வைத்துக் கொண்டால்? மரணத்துக்கு முன்னால் செய்யப்படுகின்ற பிரார்த்தனை என்பது அவசியமான அர்த்தமல்ல. அந்தத் தருணம் பத்து நிமிடங்களுக்கு மேல் நீடித்திருக்காது. அவள் சுவரின்மீது கையை வைத்துத் தலையை அதன் மீது சாய்த்துச் சிரித்துக் கொண்டு நின்ற அந்த நிமிடத்தில் அந்த முடிவுக்கு வந்திருக்கலாம். அந்த எண்ணம் அவளுடைய மனதில் பளிச்சிட்டிருக்கும், அவள் மனதைச் சுழற்றிவிட்டிருக்கும், அவளால் அதை எதிர்த்து நிற்க முடியாமற் போயிருந்திருக்கும்.

நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள், அது தப்பெண்ணமே—அது வெளிப்படை. என்னுடன் வாழ்க்கை நடத்த முடியாதா என்ன! அது இரத்தச் சோகையாக

இருக்குமா? ஒரு வேளை அது இரத்தச் சோகையாக, அவளுடைய உயிராற்றல் உறிஞ்சப்பட்டுவிட்டதாக இருக்குமா? அந்தக் குளிர்காலம் அவளை நலிவடையச் செய்துவிட்டது. அதுதான் காரணம்...

நான் மிகத் தாமதமாக வந்தேன்!!!

சவப்பெட்டியில் அவள் எவ்வளவு சின்னவளாக, மெலிந்தவளாகத் தோன்றுகிறாள், அவள் மூக்கு எவ்வளவு கூர்மையாக இருக்கிறது! அவள் கண்புருவங்கள் கன்னங்களில் வரையப்பட்ட சிறிய அம்புகளைப் போல இருக்கின்றன. அவள் எப்படி விழுந்திருக்கிறாள் பார்த்தீர்களா—உடைசலோ, நசுங்கலோ காயமோ இல்லை. அந்தக் ''கைப்பிடி ரத்தம்'' மட்டும்தான். ஒரு ஸ்பூன் அளவுதான். இரத்தப் போக்கு. ஒரு விசித்திரமான எண்ணம்: அவளைப் புதைக்காவிட்டால்? ஏனென்றால் அவள் உடலை அவர்கள் எடுத்துக் கொண்டு போய்விட்டால்... அப்பொழுது... ஓ! இல்லை, அவள் உடலை அநேகமாக எடுத்துக் கொண்டு போக முடியாது... அவள் உடலை அவர்கள் எடுத்துக் கொண்டு போவது அவசியமாக இருக்கும் என்பதை நான் உணர்கிறேன் என்பது உண்மையே. எனக்குப் பைத்தியமில்லை, வெறியும் ஏற்படவில்லை. அதற்கு மாறாக என்னுடைய அறிவு இதற்கு முன்பு ஒருபோதும் இவ்வளவு தெளிவாக இருந்ததில்லை—ஆனால் அது எப்படி முடியும்: மறுபடியும் வீட்டில் யாருமில்லை; மறுபடியும் அந்த இரண்டு அறைகள், அடுக்கடையில் நான் மட்டும்! எனக்கு வெறி, வெறி, இது வெறியே. நான் அவளை மிகவும் கஷ்டப்பட வைத்துவிட்டேன், அதுதான் காரணம்.

உங்களுடைய சட்டங்களைப் பற்றி இப்பொழுது நான் எதற்காகக் கவலைப்பட வேண்டும்? உங்களுடைய மரபுகளால், உங்களுடைய தார்மிக நெறிகளால், உங்களுடைய உலகத்தால், உங்களுடைய நாட்டினால், உங்களுடைய கோட்பாடுகளினால் எனக்கு என்ன பலன்? உங்கள் நீதிபதி என்னைப் பற்றித் தீர்ப்புக் கூறட்டும், அவர்கள் என்னை வழக்கு மன்றத்துக்கு, உங்களுடைய மக்கள் நீதி மன்றத்துக்குக் கொண்டு போகட்டும். நான் எல்லாவற்றையும் எதிர்க்கிறேன் என்று நான் சொல்வேன். ''அதிகாரியே! நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்'' என்று நீதிபதி உத்தரவிடுவார். நான் அவரிடம் உரத்த குரலில் கேட்

பேன்: ''என்னை அடக்குவதற்கு உங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? நான் மிகவும் நேசித்த ஒன்றை வெறி பிடித்த அறியாமை ஏன் அழித்தது? உங்களுடைய சட்டங்கள் இப்பொழுது எனக்கு என்ன நன்மை செய்ய முடியும்? நான் எல்லாவற்றிலிருந்தும் விலகிக் கொள்கிறேன்!'' ஓ! நான் எதற்கும் கவலைப்படவில்லை!

அவள் குருடி, குருடி! அவள் செத்துவிட்டாள், அவளுக்குக் கேட்காது. நீ வசிப்பதற்காக ஒரு சொர்க்கத்தை நான் நிர்மாணித்திருப்பேன் என்பது உனக்குத் தெரியவில்லையே. ஏனென்றால் என் இதயத்தில் ஒரு சொர்க்கம் இருந்தது, நான் அதை உனக்கு வழங்கியிருப்பேன். நீ உன்னுடைய காதலை எனக்குத் தந்திருக்க மாட்டாய் என்றே வைத்துக் கொள்வோம்—அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. எல்லாமே **அப்படியே** இருந்திருக்கும், **அப்படியே** நீடித்திருக்கும். நீ ஒரு நண்பனைப் போல என்னிடம் பேசியிருப்பாய். நம்முடைய உரையாடல்களில் நாம் ஆனந்தமடைந்திருப்போம், ஒருவருக்கொருவர் கண்களை மகிழ்ச்சியோடு பார்த்தபடியே சேர்ந்து சிரித்திருப்போம், அவ்வளவுதான். அப்படித்தான் வாழ்க்கை இருந்திருக்கும். நீ வேறு நபரைக் காதலிப்பதாக இருந்தால் கூட—ஏன்—கவலையில்லை, கவலையில்லை! நீ அந்த நபருடன் சேர்ந்து நடந்து கொண்டே சிரித்திருப்பாய், நான் தெருவின் எதிர்ப் புறத்திலிருந்து உன்னைப் பார்த்துக் கொண்டிருப்பேன்... ஓ! எதைப் பற்றியும் கவலை வேண்டாம். அவள் ஒரே ஒரு முறை மட்டும் கண்களைத் திறக்கட்டும்! ஒரே ஒரு கணம் மட்டும், ஒன்றே ஒன்று! இன்றைய தினத்தின் முன்னேரத்தில் அவள் எனக்கு முன்னால் நின்று எனக்கு விசுவாசமான மனைவியாக இருப்பேன் என்று சத்தியம் செய்தாளே, அப்பொழுது என்னைப் பார்த்த அதே முறையில் மறுபடியும் என்னைப் பார்க்க மாட்டாளா? ஓ! அந்த ஒரு பார்வையில் அவள் எல்லாவற்றையும் புரிந்து கொண்டிருப்பாளே.

சூன்யம்! ஓ, இயற்கையே! இந்தக் கிரகத்தில் மக்கள் தனிமையில் இருக்கிறார்கள், அது தான் கஷ்டம். ''இந்த வயலில் ஒரு உயிருள்ள ஆன்மா இருக்கிறதா?'' என்று ருஷ்யத் தொல்கதையின் கதாநாயகன் அறை கூவிக் கேட்கிறான். நான் தொல்கதைக் கதாநாயகன் அல்ல, நானும் அதே கேள்வியைக் கேட்கிறேன், ஆனால் ஒருவரும் பதில

ளிக்கவில்லை. சூரியன் பிரபஞ்சத்துக்கு உயிரை அருள்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் சூரியன் உதிக்கிறது—அதோ பார்—அது செத்து விடவில்லையா? எல்லாம் செத்துவிட்டது, செத்தவர்கள் எல்லா இடங்களிலும் கிடக்கிறார்கள். வெறும் தனிமையான மனிதர்கள், எல்லா இடங்களிலும்—மௌனம். இப்படிப்பட்ட உலகத்தில் தான் நாம் வாழ் கிறோம். ''மக்களே, ஒருவரையொருவர் நேசியுங்கள்''—இதைக் கூறியது யார்? இக் கட்டளை யாருடையது? கடிகார ஊசலி இரக்கமில்லாமல், அருவருப்பாக ஆடிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது காலை நேரம் இரண்டு மணி. அவளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதைப் போல அவளுடைய காலணிகள் அவள் கட்டிலுக்குப் பக்கத்தில் கிடக்கின்றன... இப்பொழுது உண்மையாகக் கேட்கிறேன், நாளைக்கு அவளை எடுத்துக் கொண்டு போய் விடுவார்கள், அதற்குப் பிறகு நான் என்ன செய்யப் போகிறேன்?

அப்பாவியின் கனவு

புனைகதை

மொழிபெயர்ப்பாளர்: **நா. தர்மராஜன், எம்.ஏ.**

1

நான் ஒரு அப்பாவி. அவர்கள் இப்பொழுது என்னைப் பைத்தியக்காரன் என்று கூறுகிறார்கள். நான் எப்பொழுதும் போல அவர்களுக்குக் கோமாளித்தனமாகத் தோன்றாமலிருந்தால் அது எனக்குப் பதவி உயர்வாக இருக்கும். ஆனால் நான் இனிமேல் அதைப் பொருட்படுத்துவதில்லை—அவர்கள் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தால் கூட இப்பொழுது அவர்கள் எல்லோருமே எனக்கு மிகவும் வேண்டியவர்கள்—ஏதோ ஒன்று அப்பொழுதுதான் அவர்களை எனக்கு மிகவும் நெருக்கமாகச் செய்கிறது என்பது உண்மையே. நான் அவர்களோடு சேர்ந்து சிரிப்பேன்—என்னைப் பார்த்து அல்ல, அதாவது அவர்களை நான் நேசிப்பதால்—அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது நான் மிகவும் வருத்தமடையாதிருந்தால் நானும் சிரிப்பேன். உண்மை என்னவென்று அவர்களுக்குத் தெரியவில்லை, ஆனால் அது எனக்குத் தெரிகிறது. அது தான் எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது. ஓ! உண்மையைத் தெரிந்த ஒரே ஒரு நபராக இருப்பது எவ்வளவு கஷ்டமானது! ஆனால் அவர்கள் இதைப் புரிந்து கொள்ளமாட்டார்கள். இல்லை, அவர்கள் புரிந்து கொள்ளமாட்டார்கள்.

நான் ஒரு அப்பாவி மாதிரித் தோன்றுவது எனக்கு அதிகமான வருத்தத்தைக் கொடுப்பதுண்டு. அப்பாவி மாதிரியல்ல, நான் அப்பாவிதான். நான் எப்பொழுதுமே அப்பாவியாகத் தான் இருந்து வந்திருக்கிறேன், நான் பிறந்த நாளிலிருந்தே அது எனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். எனக்கு ஏழு வயதான பொழுது அதை உணர்ந்தேன்

என்று நம்புகிறேன் நான் பள்ளிக்கூடத்துக்கும் பிறகு பல் கலைக்கழகத்துக்கும் சென்றேன்—ஆனால் என்ன? நான் எவ் வளவு அதிகமாகப் படித்தேனோ அவ்வளவுக்கு நான் அப்பாவி என்பதை உணர்ந்தேன். என்னைப் பொறுத்த மட்டில், விஞ் ஞானத்தின் முடிவான பொருளை நான் எவ்வளவு அதிகமாக ஆராய்ச்சி செய்தேனோ அந்த அளவுக்கு அது நான் உண் மையிலேயே அப்பாவி என்பதை எனக்கு நிரூபித்து விளக் கியது. வாழ்க்கை அதையே எனக்குக் கற்பித்தது. ஒவ் வொரு வருடத்துக்குப் பிறகும் ஒவ்வொரு விஷயத்திலும் நான் எவ்வளவு பெரிய அப்பாவி என்பதைப் பற்றி என்னு டைய உணர்வு அதிகரித்தது, வளர்ச்சியடைந்தது. என்னைப் பார்த்து எல்லோரும் எல்லா நேரமும் சிரித்தார்கள். ஆனால் நான் எப்படிப்பட்ட அப்பாவி என்பது உலகத்தி லுள்ள மற்ற எல்லோரையும் காட்டிலும் எனக்குத்தான் மிகவும் நன்றாகத் தெரியும் என்பதை அவர்களில் எவரும் அறிந்திருக்கவோ, ஊகித்திருக்கவோ மாட்டார்கள். அவர் களுக்கு இது தெரியாது என்ற உண்மைதான் என்னை மிக வும் அதிகமாகப் புண்படுத்தியது. ஆனால் அதற்கு நானே முற்றிலும் பொறுப்பு. நான் எப்பொழுதுமே மிகவும் ஆண வத்தோடிருந்தபடியால் இந்த உண்மையை நான் எவரிடத் திலும் ஒத்துக் கொள்வதில்லை. வருடங்கள் உருண்டோடிய பொழுது என்னிடத்தில் ஆணவமும் பெருகியது, நான் ஒரு அப்பாவி என்பதை எவரிடமாவது ஒத்துக் கொள்வதற்கு நான் என்னை அனுமதித்திருந்தால் அந்த இரவிலேயே என் தலையில் சுட்டுக் கொண்டு செத்துப் போயிருப்பேன் என்று நம்புகிறேன். ஓ! என்னுடைய விடலைப் பருவத்தில் நான் பலவீனமடைந்து விடுவேன், என்னுடைய நண்பர்களிடம் இதை ஒத்துக் கொண்டுவிடுவேன் என்று எனக்கேற்பட்ட அச்சத்தினால் எவ்வளவு சித்திரவதையை அனுபவித்தேன்! நான் வாலிபனாக வளர்ச்சியடைந்த பொழுது வருடந்தோ றும் என்னிடமிருந்த இந்த பயங்கரமான குறைபாட்டைப் பற்றி மென்மேலும் தெரிந்து கொண்டேன். ஆனால் அது எப்படி இருந்தாலும் ஏதோ காரணத்துக்காக அதைச் சற்று அதிக அமைதியாகவே கருதினேன். ஏதோ காரணத் துக்காக என்பதைத் திருப்பிச் சொல்கிறேன். ஏனென்றால் இன்றைய நாள் வரை அதைத் தெளிவாக வரையறுப் பதற்கு என்னால் முடியவில்லை. என்னைக் காட்டிலும் முடி

வில்லாத அளவுக்குப் பேருருக் கொண்ட ஏதோ ஒன்றைப் பற்றி என்னுடைய ஆன்மாவில் வளர்ச்சியடைந்து கொண்டிருந்த நம்பிக்கையற்ற வருத்தத்தினுல் ஒருவேளை அது ஏற்பட்டிருக்கலாம். எதுவுமே முக்கியமல்ல என்று என்னிடம் வளர்ச்சியடைந்து கொண்டிருந்த நம்பிக்கைதான் அந்த ஏதோ ஒன்று. நான் இதைப் பற்றி நெடுங்காலத்துக்கு முன்பே சந்தேகப்படத் தொடங்கியிருந்தேன் ஆனுல் நிச்சயமான நம்பிக்கை திடீரென்று, சென்ற வருடத்தில் ஒரு நாள் எனக்கேற்பட்டது. உலகம் இருந்தால் அல்லது எதுவுமே இல்லாவிட்டால் கூட நான் கவலைப்படப் போவதில்லை என்பதை நான் திடீரென்று அறிந்தேன். நான் அங்கு வந்த காலத்திலிருந்து அங்கே எதுவுமே இருக்கவில்லை என்பதை நான் முழு உணர்வோடும் அறியத் தொடங்கினேன், உணரத் தொடங்கினேன். அதற்கு முன்னர் மிகவும் ஏராளமானவை இருந்திருக்க வேண்டும் என்று ஆரம்பத்தில் நான் நினைத்துக் கொண்டிருந்தேன்; ஆனுல் முன்னர் கூட எதுவும் இருக்கவில்லை, அப்படித் தோன்றியது ஏதோ காரணத்துக்காகவே என்பதை நான் உணர்ந்தேன். எதுவுமே இருக்கப் போவதில்லை என்ற நம்பிக்கை என்னிடம் வளர்ந்தது. நான் திடீரென்று மற்றவர்களைப் பற்றி அக்கறை காட்டுவதை நிறுத்திக் கொண்டதும் அவர்களை முற்றிலும் கவனிக்காமலே நடந்து கொண்டதும் அப்பொழுது தான். சிறு விஷயங்களில் கூட அது முற்றிலும் உண்மையே. உதாரணமாக, நான் தெருவில் போய்க் கொண்டிருக்கும் பொழுது பலரைக் கடப்பேன். நான் சிந்தனையில் மூழ்கிவிடவுமில்லை, ஏனென்ருல் சிந்திப்பதற்கு என்ன இருக்கிறது. நான் அப்பொழுது சிந்தனையை முற்றிலும் கைவிட்டுவிட்டேன்: எனக்கு அக்கறையில்லை. எந்தப் பிரச்சினைகளையும் நான் தீர்க்கவுமில்லை. இல்லை, ஒரே ஒரு பிரச்சினையைக் கூட. ஆனுல் அங்கே ஏராளமான பிரச்சினைகள் இருந்தன. ஆனுல் இப்பொழுது நான் கவலைப்படவில்லை, எல்லாப் பிரச்சினைகளும் பின்னணிக்குப் போய் விட்டன.

வெகு காலத்துக்குப் பிறகுதான் நான் பேருண்மையை அறிந்தேன். நவம்பர் மாதத்தில்—துல்லியமாகச் சொல்வதென்ருல் நவம்பர் 3ந் தேதியன்று—நான் பேருண்மையை அறிந்தேன். அன்று முதல் என் வாழ்க்கையின் ஒவ்வொரு விஞடியிலும் அதை நினைவில் வைத்திருக்கிறேன். அது ஒரு

இருண்ட இரவில், எக்காலத்திலும் ஏற்பட முடியாத அளவுக்கு இருண்ட இரவில் நடைபெற்றது. நான் நடந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன், நேரம் பத்து மணி ஆகியிருந்தது, இவ்வளவு மனச்சோர்வாக எந்த நேரமும் இருக்காது என்று சிந்தித்தது நினைவிருக்கிறது. அது உடலைப் பற்றிக் கூட அப்படித்தானிருந்தது. அன்று முழுவதும் மழை பெய்து கொண்டிருந்தது; அது மிகவும் குளிர்ச்சியான, அதிகமான மனச் சோர்வை ஏற்படுத்துகின்ற மழை, தீக்குறியான மழை, என்று கூட எனக்கு நினைவிருக்கிறது, மக்களை வெளிப்படையாகத் துன்பப்படுத்துகின்ற மழை. பத்து மணிக்குப் பிறகு மழை நின்றுவிட்டது, அதற்குப் பிறகு மழையைக் காட்டிலும் அதிகக் குளிர்ச்சியாகவும் ஈரமாகவும் இருந்த பயங்கரமான நீர்த்தோய்வு ஏற்பட்டது. நீராவி எல்லா இடங்களிலிருந்தும், ஒவ்வொரு தளக் கல்லிலிருந்தும் ஒவ்வொரு இடை கழியிலிருந்தும்—அதன் மிகவும் ஆழமான, இருண்ட பொந்துகளுக்குள் நீங்கள் உற்றுப் பார்த்தீர்களானால்—வெளிவந்தது. எல்லா வாயு விளக்குகளும் அணைந்துவிட்டால் சற்று உற்சாகமாகக் கூட இருக்கும் என்று நான் திடீரென்று நினைத்தேன். ஏனென்றால் இவை அனைத்தையும் பளபளப்பாகக் காட்டிய வாயு விளக்கு ஒருவரை மேலும் வருத்தமடையக் கூடச் செய்தது. அன்று முழுவதும் நான் அநேகமாகச் சாப்பிடவில்லை. நான் பிற்பகலிலிருந்து எனக்குத் தெரிந்த எஞ்சினியர் வீட்டில் இருந்தேன். அவருடைய இரண்டு நண்பர்களும் அங்கே இருந்தார்கள். அந்த மாலை நேரம் முழுவதும் நான் ஒன்றுமே பேசவில்லை, அதனால் அவர்கள் அலுப்படைந்தார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் பரபரப்பாக எதையோ விவாதித்துக் கொண்டிருந்தார்கள், மெய்யாகவே சூடான வார்த்தைகளையும் பேசிக் கொண்டார்கள். அவர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை, வெறும் பொழுது போக்காகவே கோபமாகப் பேசிக் கொண்டார்கள் என்பதை நான் கண்டேன். ''கனவான்களே, உண்மையில் நீங்கள் இதைப் பொருட்படுத்தவில்லை'' என்று நான் கூறினேன். அவர்கள் அதற்காகக் கோபமடையவில்லை, வெறுமனே என்னைப் பார்த்துச் சிரித்தார்கள். என் வார்த்தைகளில் கடுமை கிடையாது. எனக்குக் கவலை இல்லாத காரணத்தால் அப்படிப் பேசினேன். நான் கவலைப்படவில்லை என்பதை அவர்

கள் கண்டார்கள். அது அவர்களிடம் சிரிப்பை ஏற்படுத்தியது.

நான் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்த பொழுது வாயு விளக்கைப் பற்றி நினைத்தேன், வானத்தைப் பார்த்தேன். வானம் அதிகமாக இருண்டிருந்தது; ஆனால் அங்கே கந்தையான மேகங்களையும் அவற்றுக்கு இடையிலிருந்த ஆழங்காண முடியாத கறுப்புக் குழிகளையும் நான் தெளிவாகப் பார்த்தேன். அந்தக் குழிகளில் ஒன்றில் ஒரு சிறு நட்சத்திரம் கண்சிமிட்டிக் கொண்டிருப்பதை நான் திடீரென்று கவனித்தேன். அந்த நட்சத்திரத்தை நன்றாகப் பார்ப்பதற்காக அங்கே நின்றேன். அந்தச் சிறு நட்சத்திரம் என்னிடம் ஒரு எண்ணத்தை ஏற்படுத்தியபடியால் அப்படிச் செய்தேன்: அன்றிரவில் தற்கொலை செய்து கொள்ள வேண்டும். நான் இரண்டு மாதங்களுக்கு முன்பே தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்திருந்தேன். நான் ஏழையாக இருந்தாலும் நல்ல கைத்துப்பாக்கி ஒன்றை வாங்கி அன்றே அதில் குண்டுகளை அடைத்துக் கொண்டேன். ஆனால் இரண்டு மாதங்கள் முடிந்துவிட்டன, அது இன்னும் என்னுடைய மேசை டிராயரில்தான் இருந்தது. எதற்கும் கவலைப்படாதிருக்கின்ற என்னுடைய உணர்ச்சி அப்பொழுது மிகவும் வன்மையாக இருந்தது. எனவே என் வாழ்க்கையை முடித்துக் கொள்வதற்கு அந்த உணர்ச்சி மிகவும் வன்மையாக இல்லாத ஒரு தருணத்தைத் தேர்ந்தெடுக்க விரும்பினேன். ஏன் —அது எனக்குத் தெரியாது. ஆகவே இரண்டு மாதங்களாக, ஒவ்வொரு இரவிலும் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தோடு நான் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தேன். நான் சரியான தருணத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது இந்த நட்சத்திரம் அந்த எண்ணத்தை ஏற்படுத்தியது. அன்றிரவில் அதைச் செய்வதென்று நான் முடிவு செய்தேன். அந்தச் சிறு நட்சத்திரம் ஏன் அந்த எண்ணத்தை ஏற்படுத்தியது என்று எனக்குத் தெரியாது.

நான் வானத்தை உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றிருந்த பொழுது திடீரென்று ஒரு சிறுமி என் கையைப் பிடித்து இழுத்தாள். அந்தத் தெரு ஏற்கெனவே வெறிச் சென்று இருந்தது. சுற்றுப் புறத்தில் அநேகமாக ஒரு நபர் கூட இல்லை. சிறிது தூரத்துக்கு அப்பால் நிறுத்தப்பட்டிருந்த வண்டியில் வண்டியோட்டி தூங்கி விழுந்து கொண்டிருந்

தான். அந்தச் சிறுமிக்குச் சுமார் எட்டு வயது இருக்கும். அந்தக் குளிரில் அவள் ஒரு சாதாரணமான பருந்திச் சட்டையை அணிந்திருந்தாள், தலையில் ஒரு கைக்குட்டையைக் கட்டியிருந்தாள். அவள் தெப்பமாக நனைந்திருந்தாள்; ஆனல் தண்ணீரில் ஊறிப்போன, பிய்ந்து போன காலணிகளை அவள் அணிந்திருப்பதை நான் குறிப்பாக கவனித்தேன். இப்பொழுதும்கூட அந்தக் காலணிகள் எனக்கு நினைவிருக்கின்றன. அவை என் மனதில் குறிப்பாகப் பதிந்தன. அவள் திடீரென்று என் முழங்கையைப் பிடித்துக்கொண்டு கத்தத் தொடங்கினள். அவள் அழவில்லை, துணுக்குத் துணுக்காக வார்த்தைகளைச் சொல்லிக் கதறிக் கொண்டிருந்தாள். காய்ச்சலினல் பாதிக்கப்பட்ட மாதிரி அவளுடைய உடல் நடுங்கிக் கொண்டிருந்த படியால் அந்த வார்த்தைகளை அவளால் சரியாக உச்சரிக்க முடியவில்லை. ஏதோ காரணத்தால் அந்தச் சிறுமி பீதியடைந்திருந்தாள். ''என் அம்மா, என் அம்மா!'' என்று அவள் மிகவும் பரிதாபமாகக் கதறினள். நான் அவளை நோக்கிச் சிறிது திரும்பினேன், ஆனல் உடனே ஒரு வார்த்தை கூடப் பேசாமல் நடந்தேன். அவள் என்னுடைய கோட்டைப் பிடித்து இழுத்துக் கொண்டு எனக்குப் பின்னல் ஓடி வந்தாள். மோசமாக பயந்துபோன குழந்தைகளிடம் நம்பிக்கையற்ற நிலைமையைக் குறிக்கின்ற பிரத்யேகமான தொனியுடன் அவள் குரல் ஒலித்தது. அந்த தொனியின் அர்த்தம் எனக்குத் தெரியும். அவள் பேசிய சொற்கள் எனக்கு விளங்கவில்லை என்றாலும் அவள் தாயார் எங்கேயோ சாவுப் படுக்கையில் இருக்கிருள் அல்லது ஒருவேளை அப்படிப்பட்ட பேராபத்து அவர்களுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும், தாயாரைக் காப்பாற்றுவதற்காக யாரையாவது அல்லது எதையாவது கொண்டுவருவதற்காக அந்தச் சிறுமி தெருவுக்கு ஓடிவந்திருக்கிருள் என்பதை நான் புரிந்துகொண்டேன். ஆனல் நான் அவளோடு போகவில்லை. அதற்கு மாருக அவளை விரட்டி விடுகின்ற எண்ணம் என்னிடம் திடீரென்று ஏற்பட்டது. நீ போய் ஒரு போலீஸ்காரனைத் தேடு என்று நான் அவளிடம் கூறினேன். ஆனல் அவள் என்னைக் கெஞ்சுவதைப் போல கைகளை மடக்கிக் கொண்டாள், அழுது கொண்டு, மூச்சுத் திணறியபடி எனக்குப் பின்னல் ஓடிவந்தாள், என்னைப் போக விடவில்லை. நான் அப்பொழுது காலைத் தரையில்

ஓங்கி மிதித்து அவளை மிரட்டிச் சத்தம் போட்டேன். அவள் ''ஐயா, ஓ! ஐயா!..'' என்று மட்டுமே கத்தினாள். பிறகு திடீரென்று என்னை விட்டுவிட்டுத் தெருவின் குறுக்கே ஓடினாள். அந்தப் பாதையில் இன்னொருவர் வந்து கொண்டிருந்தார். அவள் என்னிடமிருந்து அவரை நோக்கித்தான் போயிருக்க வேண்டும்.

நான் ஐந்து படிக்கட்டுகளை ஏறி மேலே சென்றேன். நான் ஒரு விடுதியில் தங்கியிருக்கிறேன். அது அசிங்கமான, சிறிய அறை. அரைவட்ட வடிவத்தில் ஒரே ஒரு சிறிய சன்னல் மட்டும் உண்டு. எண்ணெய்த் துணியால் மூடப்பட்ட ஒரு சோபா, இரண்டு நாற்காலிகள், என் புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்ற மேசை, மிக, மிகப் பழமையான ஒரு சாய்வு நாற்காலி—என்ன இருந்தாலும் அது வோல்தேர் பாணிச் சாய்வுநாற்காலி—இவை தான் அங்கேயிருந்த மரச் சாமான்கள். நான் உட்கார்ந்தேன், மெழுகுவர்த்தி விளக்கைப் பொறுத்தினேன், சிந்தனையில் மூழ்கினேன். அடுத்த அறை உண்மையில் பைத்தியக்கார விடுதியே. நேற்றைக்கு முந்திய நாளிலிருந்து அது நடந்து கொண்டிருக்கிறது. அங்கே பதவி நீக்கம் செய்யப்பட்ட காப்டன் ஒருவர் வசிக்கிறார். சுமார் ஆறு விருந்தினர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கைக் கடலில் கப்பல் உடைந்து கரையில் தள்ளப்பட்டவர்கள். அவர்கள் வோட்கா குடித்துக் கொண்டும் ஒரு பழைய சீட்டுக் கட்டை உபயோகித்து 'ஷ்டோஸ்' விளையாடிக் கொண்டுமிருக்கிறார்கள். முந்திய நாளிரவில் அவர்களுக்கிடையில் சண்டை ஏற்பட்டது. இரண்டு பேர் வெகு நேரம் வரை ஒருவருக்கொருவர் தலை முடியைப் பிய்த்துக் கொண்டார்கள் என்பது எனக்குத் தெரியும். விடுதி எசமானி அவர்களைப் பற்றிப் புகார் செய்வதற்கு விரும்பினாள்; ஆனால் அவளுக்குக் காப்டனிடம் அதிகமான பயம் இருந்தது. இவர்களைத் தவிர அங்கே தங்கியிருக்கும் ஒரே நபர் ஒல்லியான ஒரு பெண்தான். அவள் ஒரு அதிகாரியின் மனைவி. மூன்று சிறு குழந்தைகளுடன் அந்த நகரத்துக்குப் புதிதாக வந்திருக்கிறாள். இங்கே வந்ததிலிருந்தே அந்தக் குழந்தைகள் எல்லோருக்கும் உடல் நலமில்லை. அந்தப் பெண்ணும் குழந்தைகளும் காப்டனைப்பற்றி பீதியடைந்திருக்கிறார்கள். அவர்கள் இரவு நேரங்களை பயத்தினால் நடுங்கிக் கொண்டும் பிரார்த்தனை செய்து கொண்டும் கழிக்கிறார்

கள். கடைசிக் குழந்தைக்கு ஒரு தடவை பயத்தினுல் வலிப்புக் கூட வந்துவிட்டது. காப்டன் சில சமயங்களில் நேவ்ஸ்கி சாலையில் வருவோர் போவோரிடம் பிச்சை கேட்கிருர். இது உண்மை. அவருக்கு எந்த இடத்திலும் வேலை கிடைக்காது. ஆனுல் இது விசித்திரமாக இருக்கலாம் (அதனுல் தான் நான் எல்லாவற்றையும் சொல்கிறேன்): காப்டன் இங்கே தங்கியிருக்கின்ற இத்தனை மாதங்களிலும் அவர் ஒரு தடவை கூட எவ்விதமான எரிச்சலையும் எனக்கு ஏற்படுத்தவில்லை. நான் தொடக்கத்திலிருந்தே அவருடைய பழக்கம் ஏற்படாமல் விலகிக் கொண்டேன். ஆனுல் நாங்கள் முதல் முறை சந்தித்த பொழுதே அவரும் என்னை ஒரு அலுப்புத்தருகின்ற நபராகக் கருதினுர். அவர்கள் தங்களுடைய அறையில் எவ்வளவு பலமாகச் கூச்சல் போட்டாலும் அல்லது எத்தனை பேர்கள் இருந்தாலும் நான் ஒரு போதும் கவலைப் படுவதில்லை. நான் இரவு முழுவதும் விழித்துக் கொண்டிருக்கிறேன், உண்மையைச் சொல்கிறேன். அவர்களுடைய பேச்சுக் கூட என் காதில் விழுவதில்லை. அந்த அளவுக்கு நான் அவர்களை மறந்து விடுகிறேன். என்னுல் தூங்க முடிவதில்லை என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே. கடந்த ஒரு வருட காலமாக இப்படித்தான். நான் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஒன்றுமே செய்யாமல் இரவைக் கழிக்கிறேன். நான் பகலில் மட்டுமே படிப்பதுண்டு. நான் சும்மா அதில் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன், சிந்திப்பது கூடக் கிடையாது. என்னுடைய சிந்தனைகள் தெளிவில்லாதவை, மனம் போன போக்கில் செல்பவை. நான் அவற்றைச் சுற்றித்திரிய விடுகிறேன். ஒவ்வொரு இரவிலும் என்னுடைய மெழுகுவர்த்தி விளக்கு முற்றிலும் எரிந்துவிடுகிறது. ஆகவே நான் அமைதியாகச் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தேன். என்னுடைய கைத் துப்பாக்கியை எடுத்து எனக்கு முன்னுலிருந்த மேசையின் மீது வைத்தேன். அதை வைக்கும்பொழுது ''நிச்சயமாக வா?'' என்று என்னைக் கேட்டுக் கொண்டதும் ''ஆம். நிச்சயமாகத்தான்'' என்று மிகவும் உறுதியாக நான் பதிலளித்ததும் எனக்கு நினைவிருக்கிறது. அதாவது நான் தற்கொலை செய்து கொள்ளப் போகிறேன். அன்றிரவில் நான் உறுதியாகத் தற்கொலை செய்து கொள்வேன் என்பது எனக்குத் தெரியும். ஆனுல் அதைச் செய்வதற்கு முன்பாக இந்த மே

ஸைக்கு முன்னல் இன்னும் எவ்வளவு நேரம் இப்படி உட்கார்ந்து கொண்டிருக்கப் போகிறேன் என்பது எனக்குத் தெரியாது. அந்தச் சிறுமி மட்டும் இல்லையென்ருல் நான் உறுதியாகத் தற்கொலை செய்து கொண்டிருப்பேன்.

2

அது எப்படி இருந்தது என்று பாருங்கள்: நான் கவலைப்படவில்லை, ஆனல் (உதாரணமாக) நான் இன்னும் வலியை உணரக் கூடியவனுக இருந்தேன். யாராவது என்னை அடித்தால் எனக்கு வலிக்கிறது. மனேரீதியாகவும் துல்லியமாக அதே நிலைமைதான். மிகப் பரிதாபகரமாக ஏதேனும் நடைபெற்ருல் உலகத்தில் எதற்காகவும் கவலைப்படுவதை நான் நிறுத்துவதற்கு முந்திய நாட்களில் என்னிடம் இரக்க உணர்ச்சி ஏற்பட்டதைப் போல அதே இரக்கம் என்னிடம் ஏற்படுகிறது. முன்னிரவில் என்னிடம் இரக்கம் ஏற்பட்டது. ஆபத்தில் சிக்கியிருந்த குழந்தைக்கு நான் நிச்சயமாக உதவி செய்திருக்க வேண்டும். அப்பொழுது ஏன் அந்தக் குழந்தைக்கு நான் உதவி செய்யவில்லை? என்னிடம் ஏற்பட்ட ஒரு எண்ணத்தினுல்தான்: அவள் என் கோட்டைப் பிடித்துத் தொங்கிக் கொண்டு கதறிய நேரத்தில் ஒரு பிரச்சினை திடீரென்று எனக்கு முன்னல் தோன்றியது. என்னுல் அதைத் தீர்க்க முடியவில்லை. அது வீணன பிரச்சினையே, ஆனல் அது எனக்குக் கோபமூட்டி விட்டது. நான் ஏன் கோபமடைந்தேன் என்ருல் அன்றிரவில் தற்கொலை செய்து கொள்வதென்று திட்டவட்டமாக முடிவு செய்த பிறகு நான் உலகத்தில் எதைப் பற்றியும் முன்னைக் காட்டிலும் குறைவாகவே அக்கறை காட்டியிருக்க வேண்டும். அப்படியானுல் அந்தச் சிறுமிக்காக நான் கவலைப்படுகிறேன், வருந்துகிறேன் என்று நான் திடீரென்று உணர்ந்தது ஏன்? அவள் நிலைமையைப் பற்றி நான் அதிகமாக வருத்தப்பட்டேன் என்பது எனக்கு நினைவிருக்கிறது. என்னுடைய நிலைமையில் அந்த இரக்கம் விசித்திரமான அளவுக்கு உருக்கமாகவும் அசட்டுத்தனமாகவும் இருந்தது. அப்பொழுது என்னிடம் தோன்றி மறைந்த உணர்ச்சியை இன்னும் சிறப்பாக வர்ணிக்க மெய்யாகவே என்னுல் முடியாது. ஆனல் அந்த உணர்ச்சி நான் அறைக்குத் திரும்பி, நாற்காலியில்

உட்கார்ந்த பிறகும் கூட என்னிடம் இருந்தது. நான் செய் திருக்கும் வேறு எந்தக் காரியத்தைக் காட்டிலும் அதிக மாக அது எனக்கு எரிச்சலேற்படுத்தியது. ஒரு வாதம் மற்ருென்றைத் தொடர்ந்தது. நான் ஒரு மனிதன், சைபர் அல்ல—நான் இன்னும் சைபராகிவிடவில்லை—என்ருல் நான் உயிருடன் இருக்கிறேன், ஆகவே என்னுடைய நடவடிக் கைகளுக்காக என்னுல் துன்பமடைய, எரிச்சலடைய, அவ மானத்தை உணர முடியும். மிகவும் சரி. ஆனுல் அந்த சம யத்திலிருந்து இன்னும் சில மணி நேரங்களில் நான் தற் கொலை செய்து கொள்ளப் போகிறேன் என்ருல் அந்தச் சிறு மியைப் பற்றி நான் எதற்காகக் கவலைப்பட வேண்டும்? உலகத்தில் அவமானத்தைப் பற்றி அல்லது வேறு எதைப் பற்றியோ ஏன் கவலைப்பட வேண்டும்? நான் சைபராக, முற்றிலும் சைபராக இருந்துவிட்டுப் போகிறேன். அந்தச் சிறுமிக்காக என்னிடம் ஏற்பட்ட இரக்கமும் என்னுடைய வெறுக்கத்தக்க செயலினுல் ஏற்பட்ட அவமான உணர்ச்சி யும் நான் சீக்கிரமாக முற்றிலும் இல்லாமற்போய் விடுவேன், ஆகவே எதுவுமே இருக்காது என்ற நிச்சயத்தினுல் மிகச் சிறிதளவு கூட பாதிக்கப்படவில்லையா? அந்தப் பரிதாப மான குழந்தைக்கு முன்னுல் நான் காலை ஓங்கித் தரை யிலே மிதித்துக் காட்டுத்தனமாகக் கத்தியது ஏன்? ''என் னிடம் இரக்கம் இல்லை, மனிதப் பண்புக்கு விரோதமான, இழிவான ஏதாவதொரு செயலைக் கூட நான் இப்பொ ழுது செய்ய முடியும், ஏனென்ருல் இன்னும் இரண்டு மணி நேரத்தில் எல்லாம் மறைந்துவிடப் போகிறது'' என்பதை வலியுறுத்துவதற்காகத் தானே. நான் கத்தியதற்கு இது வே காரணம் என்று நான் கூறும்பொழுது நீங்கள் என்னை நம்புவீர்களா? அது தான் காரணம் என்று இப்பொழுது நான் அநேகமாக உறுதியாக நினைக்கிறேன். அப்பொழுது முதல் வாழ்க்கையும் உலகமும் என்னையே சார்ந்திருந்தன என்று எனக்குத் தெளிவாகத் தோன்றியது. உலகம் எனக் காக மட்டுமே சிறப்பாகத் தயாரிக்கப்பட்டது என்று தோன்றியது என்று கூட நான் சொல்வேன்: நான் தற்கொலை செய்து கொண்டால், உலகம்—குறைந்த பட்சம் என்னைப் பொறுத்த மட்டில்—அதற்குப் பிறகு இருக்காது. நான் மரணமடைந்த பிறகு மற்ற எந்த நபருக்கும் உண்மை யிலேயே ஒன்றும் இருக்காது என்ற சாத்தியத்தைப் பற்றி

ஒன்றும் சொல்லாவிடினும், என்னுடைய உணர்வு மங்கலா கின்ற தருணத்தில் என்னுடைய உணர்வின் வெறும் இயற் பண்பு என்ற முறையில் மொத்த உலகமும் உடனடியாக மங்கிவிடும், கானல் நீரைப் போல மறைந்து விடும், அதற் குப் பிறகு அது இருக்காது. ஏனென்றால் நம்முடைய இந்த உலகமும் இம் மக்கள் அனைவரும் என்னில் ஒரு பகுதி மட்டுமே, நான் மட்டுமே. நான் அங்கே உட்கார்ந்து என் னுடன் விவாதித்துக் கொண்டிருந்த பொழுது என் அறி வில் மோதிக் கொண்டிருந்த இந்தப் புதிய பிரச்சினைகள் அனைத்தையும் முற்றிலும் வேறு விதமாக முறுக்கிவிட்டேன், முற்றிலும் புதுமையான சில கருத்துக்களை உருவாக்கினேன். உதாரணமாக, இப்படி ஒரு விசித்திரமான எண்ணம் எனக் கேற்பட்டது: நான் ஒரு காலத்தில் சந்திரனில் அல்லது செவ்வாய்க் கிரகத்தில் வசித்ததாகவும், அங்கே கற்பனைக் கெட்டாத மிகவும் மோசமான, இழிவான செயல்களில் ஒன்றை நான் செய்ததாகவும், அதன் காரணமாக ஒரு கனவுக்கு, பேய்க்கனவுக்குக் குறையாத ஒன்றில் கற்பனை செய்யப்படக் கூடிய அனைத்து இகழ்ச்சிக்கும் அகௌரவத் துக்கும் ஆளாகும்படி தண்டிக்கப்பட்டதாகவும் வைத்துக் கொள்வோம். அடுத்த கிரகத்தில் நான் செய்த குற்றம் என் உணர்வில் பசுமையாக இருக்க நான் பூமியில் பிறப்ப தாக வைத்துக்கொள்வோம். மேலும் எத்தகைய சந்தர்ப்பத் திலும் நான் அங்கே ஒரு போதும் திரும்ப முடியாது என் பது எனக்குத் தெரியும்—நான் பூமியிலிருந்து சந்திரனைப் பார்க்கும் பொழுது **கவலைப் பட்டிருப்பேனு**, இல்லையா? அந்தச் செயலுக்காக நான் அவமானமடைந்திருப்பேனு இல் லையா? கைத்துப்பாக்கி ஏற்கெனவே எனக்கு முன்னுலிருந்த படியால், அது நடக்கப் போகிறதென்று நான் என் முழு உணர்வோடும் அறிந்திருந்த படியால், இந்தக் கேள்விகள் அர்த்தமில்லாதவை, மிகையானவையே. எனினும் இந்தக் கேள்விகள் என்னிடம் பரபரப்பை ஏற்படுத்தி வெறியைத் தூண்டின. ஏதாவதொன்றை முதலில் தீர்க்காமல் என்னுல் இனிமேல் தற்கொலை செய்து கொள்ள முடியாது என்று தோன்றியது. சுருக்கமாகச் சொல்வதென்ருல், அந்தச் சிறுமி என் உயிரைக் காப்பாற்றினுள்; ஏனென்ருல் தீர்க்கப் படாத பிரச்சினைகள் அந்தச் செயலைத் தள்ளிவைக்கும்படிச் செய்தன. இதற்கிடையில் காப்டனுடைய அறையிலிருந்து

வந்த சத்தமும் குறைவதற்குத் தொடங்கியது. அவர்கள் சீட்டாட்டத்தை முடித்து விட்டார்கள், முணுமுணுத்துக் கொண்டு தூங்குவதற்குத் தயாரிப்புகளைச் செய்து கொண்டிருந்தார்கள், தூக்கக் கலக்கத்தில் தங்களுடைய பரஸ்பர வசவுகளைப் பூர்த்தி செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது நான் மேசைக்கு எதிரேயிருந்த என்னுடைய நாற்காலியிலிருந்தபடியே திடீரென்று தூங்கத் தொடங்கினேன். அதற்கு முன்பு இப்படி நடந்ததே இல்லை. என்னவென்று தெரியாமலே நான் தூக்கத்தில் மூழ்கிவிட்டேன். கனவுகள் மிகவும் விசித்திரமானவை என்று நமக்குத் தெரியும்: ஒரு கனவு நாம் திகைப்படைகின்ற அளவுக்குத் தத்ரூபமாக இருக்கும், நுட்பமான ஒவ்வொரு விவரமும் கற்பனையை மிஞ்சுகின்ற அளவுக்குத் துல்லியமாகத் தெரியும். மற்றொரு கனவு உங்களைக் காலம் மற்றும் விசும்பின் வழியாக மிகவும் விரைவாகக் கொண்டு போகும் பொழுது உங்களால் அந்த வான்பயணத்தை கவனிக்கக் கூட முடியாது. கனவுகள் ஆசையினால் தூண்டப்படுகின்றன, அறிவினால் அல்ல. இதயத்தினால்தான், மூளையினால் அல்ல என்று நான் நம்புகிறேன். ஆனால் என்னுடைய அறிவு சில சமயங்களில் என்னுடைய கனவுகளில் எப்படி விசித்திரமாக விளையாடுகிறது! நான் தூங்கும் பொழுது என் அறிவு செய்யும் காரியங்கள் நம்ப முடியாதவையாகும். ஒரு உதாரணத்தைத் தருகிறேன்: என் சகோதரன் ஐந்து வருடங்களுக்கு முன்பு மரணமடைந்து விட்டான். சில சமயங்களில் அவனைப் பற்றி நான் கனவு காண்பதுண்டு. அவன் என்னுடைய காரியங்களில் தீவிரமான அக்கறை எடுத்துக் கொள்கிறான், நாங்கள் ஒருவருக்கொருவர் அதிகமான அன்பு கொண்டிருக்கிறோம்; ஆனால் என் சகோதரன் நெடுங்காலத்துக்கு முன்பே மரணமடைந்து விட்டான், அவனைப் புதைத்துவிட்டோம் என்பது அந்தக் கனவு நெடுகிலும் எனக்கு மிகவும் நன்றாகத் தெரியும். எனவே அவன் மரணமடைந்து விட்ட போதிலும் அங்கே எனக்குப் பக்கத்தில் இருப்பது, என் விவகாரங்களைப் பற்றிக் கவலைப்படுவது ஏன் எனக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை? இவை எல்லாவற்றையும் என் அறிவு மிகவும் விருப்பத்தோடு ஏன் ஏற்றுக் கொள்கிறது? போதும். என்னுடைய கனவுக்குத் திரும்புவோம். ஆம், நவம்பர் 3ந் தேதியன்று நான் கண்ட கனவுக்குத்தான்! கடைசியாகப் பார்க்கும் பொழுது அது வெ

றும் கனவுதானே என்று அவர்கள் எல்லோரும் இப்பொழுது என்னைக் கேலி செய்கிறார்கள். ஆனால் அது பேருண்மையை எனக்கு எடுத்துக் காட்டியிருப்பதால் அது கனவா இல்லையா என்பது நிச்சயமாக முக்கியமல்ல. ஏனென்றால் அதை ஒரு தடவையாவது அறிந்து கொள்வதற்கும் பார்ப்பதற்கும் உங்களால் முடிந்திருக்குமானால் அதுவே பேருண்மை, வேறு எதுவும் உண்மையல்ல, நீங்கள் கனவு காண்கிறீர்களோ அல்லது வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களோ வேறு எதுவும் அப்படி இருக்க முடியாது என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். மிகவும் சரி. அது ஒரு கனவுதான்—அது கனவாகவே இருக்கட்டும். ஆனால் நீங்கள் எல்லோரும் மிகவும் போற்றுகின்ற வாழ்க்கையை முடிப்பதற்கு நான் துடித்துக் கொண்டிருந்தேன், ஆனால் என்னுடைய கனவு, என்னுடைய கனவு —ஓ, என்னுடைய கனவு மற்றொரு வாழ்க்கையை, புத்துயிரடைந்த, சிறப்புமிக்க, வன்மையான ஒரு வாழ்க்கையை எனக்கு வெளிப்படுத்தியது என்பது உண்மை!

கேளுங்கள்.

3

நான் என்னையறியாமலே தூங்கி விட்டேன், தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது அதே விவகாரங்களைப் பற்றி என்னுடைய சிந்தனைகளைத் தொடரவும் செய்தேன் என்று நான் கூறினேன். நான் கைத்துப்பாக்கியை எடுத்து என் இதயத்தின் மீது அழுத்துவதாகக் கனவு கண்டேன் —இதயத்தின் மீது, தலைக்கு நேராக அல்ல. ஆனால் என் தலைக்கு நேராகச் சுடுவது, வலது நெற்றிப் பொட்டில் சுட்டுக் கொள்வது என்று நான் திட்டவட்டமாக முடிவு செய்திருந்தேன். என் இதயத்தின் மீது கைத்துப்பாக்கியை நீட்டியபடியே நான் ஓரிரு விநாடிகள் தாமதித்தேன். திடீரென்று மெழுகுவத்தி விளக்கு, மேசை, எனக்கு முன்னாலிருந்த சுவர் அனைத்தும் அசைந்து ஆடத்தொடங்கின. நான் கைத்துப்பாக்கி விசையை வேகமாகத் தட்டினேன்.

கனவுகளில் சில சமயங்களில் நீங்கள் பெரும் உயரத்திலிருந்து கீழே விழுகிறீர்கள் அல்லது கத்தியால் குத்தப்படுகிறீர்கள் அல்லது அடிக்கப்படுகிறீர்கள். ஆனால் நீங்கள்

துள்ளிக்குதித்து கட்டில்கம்பின் மீது மோதிக் கொண்டால் தவிர வலியை ஒருபோதும் உணர்வதில்லை. அப்படி மோதிக் கொள்கின்ற பொழுது நீங்கள் வலியை உணர்வீர்கள். அது உங்களை நிச்சயமாக உறக்கத்திலிருந்து எழுப்பிவிடும். என் கனவிலும் அப்படியே நடைபெற்றது: நான் வலி ஏற்பட்டதாக உணரவில்லை, ஆனால் துப்பாக்கி வெடித்த சத்தம் கேட்டதும் என் உடல் முழுவதும் குலுங்குவதாகத் தோன்றியது, திடீரென்று எல்லாமே அணைந்துவிட்டன. பயங்கரமான இருள் என்னைச் சூழ்ந்தது. நான் குருடனாக, ஊமையாக மாறிவிட்டது போலத் தோன்றியது. நான் மிகவும் கடினமான ஏதோ ஒன்றின் மீது உடலை நீட்டிக்கொண்டு எதையும் பார்க்க முடியாமல் சிறிதும் அசைய முடியாமல் படுத்திருந்தேன். என்னைச் சுற்றிலும் குரல்கள் பலமாகக் கேட்டன, கால்கள் குதித்தாடின. காப்டனுடைய தணிவான குமுறலும் விடுதி எசமானியின் கீச்சிடும் கூக்குரலும் கேட்டன. மறுபடியும் எல்லாம் இருள். அவர்கள் இப்பொழுது ஆணிகள் அறைந்து மூடப்பட்ட சவப்பெட்டியில் என்னைத் தூக்கிக் கொண்டு போனார்கள். சவப்பெட்டி ஆடிக்கொண்டிருப்பதை நான் உணர்ந்தேன், அதைப் பற்றி சிந்தனை செய்து கொண்டிருந்தேன். நான் இறந்துவிட்டேன், முற்றிலும் இறந்துவிட்டேன் என்ற எண்ணம் திடீரென்று முதல் தடவையாக எனக்குத் தோன்றியது. சிறிதும் சந்தேகமில்லாதபடி அதை அறிந்தேன். என்னால் பார்க்க முடியவில்லை, அசைய் முடியவில்லை; ஆனால் என்னால் உணர முடிந்தது, சிந்திக்க முடிந்தது. சீக்கிரத்திலேயே இதற்கு என்னைச் சரிப்படுத்திக் கொண்டேன். வழக்கமாகக் கனவுகளில் நடப்பதைப் போல அந்த உண்மையை மறுக்காமல் ஒத்துக் கொண்டேன்.

இப்பொழுது அவர்கள் என் புதைகுழியின்மீது மண்ணைக் கொட்டிக் கொண்டிருந்தார்கள். எல்லோரும் போய் விட்டார்கள், நான் தனியாக, முற்றிலும் தனியாக இருந்தேன். நான் அசையவில்லை. புதைக்கப் பட்டிருக்கும் பொழுது எப்படியிருக்கும் என்று நான் கற்பனை செய்கின்ற பொழுதெல்லாம் பொதுவாக ஒரு உணர்ச்சியைப் புதை குழியுடன் சம்பந்தப்படுத்தி வந்திருக்கிறேன்: அது ஈரம் மற்றும் குளிர்ச்சி உணர்ச்சியே. இப்பொழுதும் அதிகமான குளிர்ச்சியை உணர்ந்தேன். என்னுடைய கால் விரல் நுனிகள் அதிக

மாக பாதிக்கப் பட்டிருந்தன. எனக்கேற்பட்ட உணர்ச்சியே அதுதான்.

நான் அங்கே படுத்திருந்தேன். நான் எதையும் எதிர் பார்க்கவில்லை என்பது விசித்திரமே. மரணமடைந்தவர்கள் ஒன்றையும் எதிர்பார்க்க முடியாது என்ற உண்மையை உணர்ந்து அமைந்தடங்கியிருந்தேன். ஆனால் அங்கே ஈரமாக இருந்தது. நான் எவ்வளவு நேரம் அங்கே படுத்திருந்தேன்— ஒரு மணியா அல்லது ஒரு நாளா அல்லது பல நாட்களா— என்பது எனக்குத் தெரியாது. திடீரென்று சவப்பெட்டி மூடியின் வழியாகக் கசிந்த ஒருதுளி தண்ணீர் மூடியிருந்த என் இடது கண்ணின்மேல் விழுந்தது. ஒரு நிமிடத் துக்குப் பிறகு மற்றொரு துளி விழுந்தது, அடுத்த ஒரு நிமிடத்துக்குப் பிறகு மூன்றாவது துளி, இப்படியே தண்ணீர்த் துளிகள் முறையாக ஒவ்வொரு நிமிட இடைவேளைக்குப் பிறகும் விழுந்து கொண்டிருந்தன. என் இதயத்தில் கோபம் அதி கரித்தது. திடீரென்று அதனால் உடல் வலிப்பதை நான் உணர்ந்தேன். ''அது காயம். என்னுடைய துப்பாக்கி சுட்ட இடம், துப்பாக்கி குண்டு அங்கே இருக்கிறது...'' என்று நான் நினைத்தேன். ஒவ்வொரு நிமிடமும் ஒரு தண்ணீர்த் துளி மூடப்பட்டிருந்த கண் மீது நேராக விழுந்து கொண் டிருந்தது. எனக்கு நேர்ந்து கொண்டிருந்த எல்லாவற்றை யும் பற்றி நான் திடீரென்று இறைவனிடம் முறையிட்டேன். நான் செயலற்றிருந்தபடியால் என் குரலால் அல்ல, என் முழு உயிராலும் முறையிட்டேன்:

''இறைவனே! நீங்கள் யாராக இருந்தாலும்—ஆனால் அப்படி இருப்பதால், இன்றைக்கிருப்பதைக் காட்டிலும் அதிக அறிவு பூர்வமான அமைப்பு மெய்யாகவே இருக்குமானால் அது இங்கும் ஏற்படும்படி அருள்வீராக! ஆனால் என்னு டைய முட்டாள்தனமான தற்கொலைக்காகத் தாங்கள் என்னைப் பழிவாங்குவதற்கு எண்ணினால் இனி வரப் போ கின்ற வாழ்க்கையில் அருவருப்பையும் அசட்டுத்தனத்தையும் சேர்க்க விரும்பினால் என்னை எவ்வளவு சித்திரவதைகளுக்கு உட்படுத்தினாலும் உயிர்த்தியாகத்தின் பல கோடி வருடங் களினூடே நான் எப்பொழுதும் மௌனத்தில் உணர்கின்ற இகழ்ச்சியுடன் அதை ஒப்பிட முடியாது!..''

இம் முறையீட்டுக்குப் பிறகு நான் மௌனமாக இருந் தேன். அநேகமாக ஒரு முழு நிமிடம் வரை ஆழ்ந்த மௌ

னம் நிலவியது. மறுபடியும் ஒரு தண்ணீர்த்துளி விழுந்தது. ஆனால் இனி எல்லாமே வேறு விதமாக இருக்கும் என்று நான் முடிவில்லாத, ஆழமான நம்பிக்கையில் அறிந்தேன். திடீரென்று என்னுடைய புதைகுழி வெடித்துத் திறந்து கொண்டது. அதாவது அது வெட்டித் திறக்கப் பட்டதா என்று எனக்குத் தெரியாது, ஆனால் கறுப்பான, வினோதமான ஒரு உயிர் என்னைத் தூக்கிக் கொண்டு விசும்பில் பறந்தது. திடீரென்று நான் பார்வையைத் திரும்பப் பெற்றேன். அது இருண்ட இரவு! இத்தகைய இருள் ஒரு போதும், ஒருபோதும் இருந்ததில்லை! நாங்கள் விண்வெளியில் பறந்து கொண்டிருந்தோம், அதற்குள் பூமி எனக்கு வெகு தூரத்துக்குப் பின்னால் போய்விட்டது. என்னைத் தூக்கிக் கொண்டு பறந்த உயிரிடம் நான் ஒன்றுமே கேட்கவில்லை, நான் காத்திருந்தேன், நான் ஆணவமாக இருந்தேன். நான் அச்சமடையவில்லை என்று என்னையே நம்பச் செய்து கொண்டேன், நான் அச்சமடையவில்லை என்று நினைத்து என் மூச்சு இறுமாந்தது. எவ்வளவு நேரம் எங்கள் பயணம் நீண்டது என்று எனக்கு நினைவில்லை, அதை ஊகித்துச் சொல்ல என்னால் முடியாது. உங்கள் கனவுகளில் விசும்பிலும் காலத்திலும் நீங்கள் பறக்கின்ற பொழுது, வாழ்க்கை மற்றும் அறிவின் விதிகளைக் கடந்து செல்கின்ற பொழுது—உங்கள் இதயம் நிற்குமாறு சொல்கின்றபொழுது மட்டுமே நிற்கும் பொழுது—வழக்கமாக ஏற்படுகின்ற ஒவ்வொன்றும் வழியில் நடைபெற்றது. அந்த இருளில் திடீரென்று ஒரு சிறிய நட்சத்திரத்தைப் பார்த்தது எனக்கு நினைவிருக்கிறது. ''அது சிரியஸ் நட்சத்திரமா?'' நான் எந்தக் கேள்வியும் கேட்க விரும்பவில்லை என்றாலும் அந்தக் கேள்வியைத் தடுக்க முடியவில்லை. ''இல்லை. நீ வீட்டுக்குத் திரும்புகின்ற வழியில் மேகங்களுக்கிடையில் பார்த்தாயே, அந்த நட்சத்திரம்தான் அது'' என்று என்னைத் தூக்கிக் கொண்டு பறந்த உயிர் பதிலளித்தது. அது தோற்றத்தில் ஓரளவுக்கு மனித உயிரைப் போல இருந்தது. அந்த உயிரிடம் எனக்கு அன்பு ஏற்படவில்லை, மாறாக அதன் மீது நான் ஆழமாக அருவருப்படைந்தேன் என்பது விசித்திரமே. நான் முற்றிலும் இல்லா-நிலையை எதிர்பார்த்தேன். அந்த எண்ணத்துடன் நான் தற்கொலை செய்து கொண்டேன். ஆனால் நான் இப்பொழுது ஒரு உயிரின் கைகளில்—அது மனிதப் பிறவி அல்ல என்

பது உண்மையே, எனினும் அது உயிர் வாழ்கின்ற பிறவியாக இருந்தது—ஒப்படைக்கப் பட்டிருந்தேன். ''இதற்குப் பிறகும் வாழ்க்கை இருக்கிறது என்பதை இது எடுத்துக் காட்டுகிறது!'' என்று கனவுகளுக்கே உரிய மேம்போக்கான சிந்தனையில் நான் நினைத்தேன்; ஆனால் என்னுடைய உணர்ச்சியின் சாராம்சம் என்னிடம் முழுமை குறையாமலிருந்தது. ''நான் மறுபடியும் இருக்க வேண்டுமென்றால், யாரோ ஒருவருடைய தப்ப முடியாத சித்தத்தினால் மறுபடியும் வாழ்வதென்றால் அடிக்கப்படுவதையோ, அவமதிக்கப்படுவதையோ நான் விரும்பவில்லை!'' என்று நான் நினைத்தேன். ''நான் உங்களைக் கண்டு பயப்படுவது உங்களுக்குத் தெரியும், அதனால் நீங்கள் என்னை இழிவாக நினைக்கிறீர்கள்'' என்று நான் திடீரென்று கூறினேன். ஒரு ஒப்புதலையும் அவமதிப்பினால் என் இதயத்தில் ஏற்பட்ட உறுத்தலையும் கொண்டிருந்த என்னுடைய கெஞ்சுகின்ற வார்த்தைகளை என்னால் தடுக்க முடியவில்லை. அதற்கு பதில் இல்லை. ஆனால் என்னை இழிவுபடுத்தவில்லை என்பதை நான் உடனடியாக அறிந்து கொண்டேன். என்னைக் கண்டு ஏளனமாகச் சிரிக்கவில்லை அல்லது என் மீது பரிதாபப்படவும் இல்லை. விண் வெளியில் எங்களுடைய பிரயாணத்துக்கு எனக்கு மட்டுமே சம்பந்தப்பட்ட மர்மமான, புதுமையான நோக்கம் இருந்தது என்று நான் அறிந்தேன். என் இதயத்தில் அச்சம் அதிகரித்தது. என்னுடைய மௌனமான துணைவன் ஏதோ ஒன்றை—ஊசியால் குத்துவதைப் போல—ஒன்றும் பேசாமல் ஆனால் வேதனையுடன் எனக்குள் அனுப்பினான். நாங்கள் இருண்ட, முன்பின் அறிந்திராத விண்வெளியில் பறந்தோம். என் கண்கள் வழக்கமாகப் பார்க்கின்ற நட்சத்திரக் கூட்டங்களை நான் பார்க்கவில்லை. வானமண்டலத்திலிருக்கும் சில நட்சத்திரங்களின் ஒளிக்கதிர்கள் பூமியை அடைவதற்கு ஆயிரக் கணக்கான, கோடிக்கணக்கான வருடங்களாகும் என்பது எனக்குத் தெரியும். ஒருவேளை நாங்கள் அத்தகைய நட்சத்திரங்களைக் கொண்ட பகுதிகளின் வழியாகப் பறந்து போய்க் கொண்டிருக்கலாம். நான் ஒன்றும் புரியாமல் தவித்தேன். என் இதயம் பயங்கரமான வேதனையில் சிக்கியது. திடீரென்று அறிமுகமான, மிகவும் உற்சாகமான உணர்ச்சி என்னைக் குலுக்கியது. நான் நம்முடைய சூரியனைப் பார்த்தேன்! நம்முடைய பூமியைப் பெற்ற நம்முடைய சூரியனாக அது இருக்

காது, நம்முடைய சூரியனிலிருந்து எல்லையற்ற தூரத்துக்கு அப்பால் நாங்கள் இருக்கிறோம் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இது நம்முடைய சூரியனைப் போலவே இருக்கிறது, அதன் பிரதி, இரு படிவங்களில் ஒன்று என்று என்னுடைய மொத்த உணர்வும் தெரிவித்தது. என்னுடைய ஆன்மா இனிமையான, உத்வேக மூட்டுகின்ற பரவசத்தில் துடித்தது: அறிமுகமான இந்த ஒளியின் பிறப்பிடம், எனக்கு உயிரைக் கொடுத்த அதே ஒளி என்னுடைய இதயத்தில் எதிரொலியை ஏற்படுத்தி அதற்குப் புத்துயிர் கொடுத்தது. மண்ணில் புதைக்கப்பட்ட பிறகு முதல் தடவையாக நான் வாழ்க்கையை, முன்பிருந்த அதே வாழ்க்கையை உணர்ந்தேன்.

''ஆனால் இது சூரியன் என்றால், நம்முடையதைப் போல இதுவும் சூரியனே என்றால், பூமி எங்கே இருக்கிறது?'' என்று நான் பலமாகக் கேட்டேன். என் துணைவன் இருளில் மரகதத்தைப் போலப் பிரகாசித்துக் கொண்டிருந்த ஒரு நட்சத்திரத்தைச் சுட்டிக் காட்டினான். நாங்கள் அதை நோக்கி நேராகப் பறந்து சென்றோம்.

''பிரபஞ்சத்தில் இத்தகைய மறுபடிவங்கள் சாத்தியமா, இது மெய்யாகவே இயற்கை விதியா?.. அந்த நட்சத்திரம் ஒரு பூமி என்றால் அது நம்முடைய பூமியைப் போல... துல்லியமாக அதைப் போலவே இழிந்ததாகவும் ஏழையாகவும் ஆனால் அன்பானதாகவும் என்றும் நேசிக்கப்படுவதாகவும் இருக்குமா?.. பூமி அதன் மிகவும் நன்றி கெட்ட குழந்தைகளிடம் கூட உருக்கமான அன்பைத் தூண்டுகிறதே அதைப் போலத் தூண்ட முடியுமா?..'' என்று நான் கத்தினேன். நான் கைவிட்டு நீங்கிய அன்பான, பழைய பூமியின் மேல் பரவசம் நிறைந்த, எல்லையற்ற பாசத்தினால் என் உடல் நடுங்கியது. நான் புண்படுத்திய அந்தப் பரிதாபகரமான சிறுமியின் காட்சி எனக்கு முன்பாகத் தோன்றியது.

''நீ எல்லாவற்றையுமே பார்க்கப் போகிறாய்'' என்று என் துணைவன் கூறினான். அவன் வார்த்தைகளில் தனியான சோகத்தை நான் உணர்ந்தேன். ஆனால் இப்பொழுது நாங்கள் அந்த கிரகத்தை வேகமாக நெருங்கிக் கொண்டிருந்தோம். நாங்கள் அருகில் வந்தவுடன் அந்த கிரகம் பெரியதாகத் தோன்றியது. அதில் சமுத்திரங்களையும், ஐரோப்பாவின் எல்லைகளையும் என்னால் வேறுபடுத்திப் பார்க்க

முடிந்தது. திடீரென்று என் இதயத்தில் மிகவும் பெரிய, புனிதமான பொறுமைத் தீ பொங்கியது. ''அத்தகைய மறு படிவம் எப்படி இருக்க முடியும்? எதற்காக? நான் கைவிட்டு வந்த பூமியை நான் நேசிக்கிறேன், அந்த பூமியைத்தான் என்னுல் நேசிக்க முடியும். நன்றியில்லாத நான் என்னுடைய இதயத்தின் வழியாக குண்டைச் செலுத்தி என் உயிரைப் போக்கிக் கொண்ட பொழுது அந்த பூமியில் என் இரத்தம் சிதறியது. ஆனுல் அந்த பூமியை நேசிப்பதை நான் ஒரு போதும், ஒருபோதும் நிறுத்தவில்லை; அதை விட்டுப் பிரிந்த இரவில் முன்னெப்போதும் இல்லாத உருக்கத்துடன் நான் அதை நேசித்தேன் என்று நினைக்கிறேன். இந்தப் புதிய பூமியில் துன்பம் உண்டா? எங்களுடைய பூமியில் வேதனை யினுல், வேதனையின் மூலமாக மட்டுமே நாங்கள் உண்மை யிலேயே நேசிக்க முடியும்! வேறு எந்த வழியிலும் நாங் கள் அன்பைக் காட்ட முடியாது; வேறு எவ்விதமான அன் பைப் பற்றியும் எங்களுக்குத் தெரியாது. அன்பு அவசியம் என்று நான் கருதினுல் எனக்குத் துன்பமும் வேண்டும். நான் விட்டு வந்திருக்கின்ற ஒரே ஒரு பூமியை இந்தக் கணத் தில் முத்தமிட வேண்டுமென்று நான் விரும்புகிறேன், ஏங்கு கிறேன், கண்ணீர் வடிக்கிறேன், வேறு எந்த வாழ்க்கை யையும் நான் விரும்பவில்லை; அந்த வாழ்க்கையை மறுக் கிறேன்!..''

ஆனுல் என்னுடைய நண்பன் ஏற்கெனவே என்னைப் பிரிந்து போய்விட்டான். அது எப்படி நடந்தது என்று எனக் குத் தெரியாது; ஆனுல் இந்த மறு பூமியில் சொர்க்கத் தைப் போல அழகும் சூரிய ஒளியின் பிரகாசமும் நிறைந்த பகற்பொழுதில் திடீரென்று நான் இருப்பதைக் கண்டேன். நம்முடைய பூமியில் கிரேக்க தீவுக் கூட்டம்* என்று கூறப் படுகின்ற தீவுகளில் ஒன்றில் நான் இருந்தேன் என்று நம்பு கிறேன். அல்லது தீவுக் கூட்டத்தை ஒட்டியிருக்கின்ற கடற் கரையில் உள்நாட்டில் ஏதாவதொரு இடமாக இருக்க வேண்டும். எல்லாம் பூமியில் இருப்பதைப் போல அதே முறையில் இருந்தது, ஆனுல் அவை அனைத்தும் ஒரு கொண்

* ஆஜியன் கடலில் உள்ள தீவுக் கூட்டம்; இது ஐரோப் பிய நாகரிகத்தின் தொட்டில் என்று கருதப்பட்டது.—ப-ர்.

டாட்டத்தின் ஒளி வெள்ளத்தைத் தாங்கியிருப்பதைப் போலத் தோன்றின. அருமுயற்சிக்குப் பிறகு பெற்ற மாபெரும், புனிதமான வெற்றியின் புகழில் பிரகாசித்தன. மென்னயமான, மரகதப்பச்சைக் கடல் கடற்கரைகளை மெதுவாகத் தழுவி மறைக்கப்படாத, பார்க்கக் கூடிய, அநேகமாக உணர்வுடன் கூடிய அன்பைச் சொரிந்தது. உயரமான, அழகான மரங்கள் மலர்களை ஏந்தி மணம் பரப்பின; அவற்றின் எண்ணற்ற சிறிய இலைகள் தமது மென்னயமான, மெல்லமைதியான அசைவினால் என்னை வரவேற்றன (இதை நான் உறுதியாகக் கூறுவேன்); அவை என்னிடம் காதல் வார்த்தைகளை முணுமுணுப்பது போலத் தோன்றியது. பிரகாசமான, நறுமணம் நிறைந்த மலர்களால் அந்தப் புல்வெளி நெருப்புப் பிடித்து எரிவது போலத் தோன்றியது. பறவைகள் வானத்தில் கூட்டம் கூட்டமாகப் பறந்து கொண்டிருந்தன. என்னைக் கண்டு அச்சமின்றி என் தோள்கள் மீதும் கைகள் மீதும் உட்கார்ந்தன. தம்முடைய இனிமையான, நடுங்கும் சிறகுகளால் என்னைத் தடவி மகிழ்ந்தன. கடைசியாக, இந்த ஆனந்தமான நாட்டின் மக்களை நான் கண்டேன், அவர்களுடன் பழகினேன். அவர்கள் தாமாகவே என்னிடம் வந்தார்கள், என்னைச் சூழ்ந்து கொண்டார்கள், என்னை முத்தமிட்டார்கள். கதிரவனின், தங்களுக்கே உரிமையான கதிரவனின் குழந்தைகள்—ஓ! அவர்கள் எவ்வளவு அழகாக இருந்தனர்! நம்முடைய கிரகத்தில் மனிதனிடம் இவ்வளவு அழகை நான் ஒருபோதும் பார்க்கவில்லை. நம்முடைய சின்னஞ்சிறு குழந்தைகளிடம் மட்டுமே இந்த அழகின் மிகவும் தொலைவான, மிகவும் லேசான பிரதிபலிப்பை ஒரு வேளை கண்டு பிடிக்க முடியும். ஆனந்தமான இந்த மக்களின் கண்கள் தெளிவான ஒளியினால் பிரகாசித்தன. அவர்களுடைய முகங்களில் ஞானம், சாந்தமாக முதிர்ச்சி அடைந்திருக்கும் அறிவு சுடர் விட்டது. ஆனால் அவர்களுடைய தோற்றத்தில் குதூகலம் இருந்தது. அவர்களுடைய பேச்சும் குரல்களும் குழந்தைத் தனமான உவகையுடன் ஒலித்தன. ஓ! அவர்களுடைய முகங்களைப் பார்த்த வினாடியிலேயே நான் எல்லாவற்றையும், எல்லாவற்றையும் புரிந்து கொண்டேன்! இது பாவத்தின் கறை படாத பூமி, பாவம் செய்யாத மக்கள் இங்கே வசிக்கிறார்கள். அவர்கள் இந்த ஈடன் தோட்டத்தில் வசிக்கிறார்கள்.

நம்முன்னோர்கள் பாவத்தை அறிவதற்கு முன்பு ஒரு காலத்தில் ஒரு தோட்டத்தில் வசித்தார்கள் என்று மனிதகுலத்தின் தொல்கதைகள் அனைத்தும் கூறுகின்றனவே அம்மாதிரியான தோட்டம் இது. ஆனால் இந்த பூமி முழுவதுமே ஒரு மாபெரும் ஈடன் தோட்டம் என்பது மட்டுமே வேறுபாடாகும். இந்த மக்கள் குதூகலமாகச் சிரித்துக்கொண்டே என்னிடம் ஒட்டிக் கொண்டார்கள், என்னை அன்புடன் சீராட்டினார்கள். அவர்கள் என்னைக் கூட்டிச் சென்றார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் எனக்கு மகிழ்ச்சி யூட்டுவதற்கு அதிகமான ஆர்வத்தோடிருந்தார்கள். அவர்கள் என்னிடம் எதைப் பற்றியுமே கேட்கவில்லை, அவர்களுக்கு எல்லாமே தெரியும் என்று தோன்றியது, என் முகத்தில் தென்பட்ட வேதனையை அகற்றுவதற்கே அவர்கள் மிகவும் அக்கறை காட்டினார்கள்.

4

இது கனவு என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை என்றே இருக்கட்டும் என்று நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். ஆனால் அந்தக் கபடமில்லாத, அழகுமிக்க மக்களால் நேசிக்கப்படுகின்ற உணர்ச்சி என்னிடம் நிரந்தரமாக நிலைத்திருக்கும், இப்பொழுது கூட அவர்களுடைய அன்பு மேலேயிருந்து என்மீது ஊற்றப்படுவதை நான் உணர்கிறேன். அவர்களை என் கண்களால் பார்த்தேன், அவர்களை அறிந்தேன், என்னிடம் நம்பிக்கை ஏற்பட்டது; நான் அவர்களை நேசித்தேன், பிறகு அவர்களுக்காக வேதனைப்பட்டேன். ஓ! பல விஷயங்களில் அவர்களை ஒருபோதும் புரிந்து கொள்ளவே முடியாது என்பதைத் தொடக்கத்திலிருந்தே நான் உணர்ந்தேன். உதாரணமாக, அவர்கள் பல விஷயங்களை அறிந்திருந்தபோதிலும் நம் விஞ்ஞான அறிவு அவர்களிடம் இல்லை என்பது நவீன ருஷ்ய முற்போக்காளனும் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரத்தின் பரிதாபகரமான குடிமகனுமாகிய எனக்குப் புரியவில்லை. ஆனால் அவர்களுடைய அறிவு நம்மிலிருந்து வேறுவிதமான நுட்பமான ஆராய்ச்சிகளால் செழுமை அடைந்து உயிர்த்துடிப்புக் கொண்டிருந்தது; அவர்களுடைய விருப்பார்வங்களும் நம்மிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை என்பதை நான் சீக்கிரமாகவே உணர்ந்தேன். அவர்கள் எதற்கும் ஆசைப்படவில்லை, அவர்

களிடம் மனநிறைவு இருந்தது, நம்மைப் போல வாழ்க்கையின் ஆழத்தைத் துருவி ஆராய முயற்சிப்பதைப் போன்ற முறையில் அவர்கள் வாழ்க்கையை அறிந்து கொள்ள முயற்சிக்கவில்லை. ஏனென்றால் அவர்களுடைய வாழ்க்கை முழு நிறைவாக இருந்தது. அவர்களுடைய அறிவு நம்முடைய விஞ்ஞானத்தைக் காட்டிலும் நயமாகவும் அதிக ஆழமானதாகவும் இருந்தது; ஏனென்றால் நம்முடைய விஞ்ஞானம் வாழ்க்கையின் அர்த்தத்தை விளக்குவதற்கு முயற்சிக்கிறது. விஞ்ஞானம் கூட எப்படி வாழ வேண்டும் என்று மற்றவர்களுக்குக் கற்பிப்பதற்காகவே அதைத் துருவி ஆராய முயற்சிக்கிறது; ஆனால் அவர்கள் விஞ்ஞானத்தின் உதவியின்றியே எப்படி வாழவேண்டும் என்று அறிந்திருந்தார்கள். நான் அதைக் கண்டேன்; ஆனால் அவர்களுடைய இந்த அறிவை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் தங்களுடைய மரங்களை என்னிடம் காட்டினார்கள். அந்த மரங்களிடம் அவர்கள் காட்டிய அன்பின் ஆழத்தை என்னால் பாராட்ட முடியவில்லை. தங்களைப் போன்ற உயிருள்ள நபர்களிடம் பேசுவதைப்போல அவர்கள் அந்த மரங்களிடம் நடந்து கொண்டார்கள். அவர்கள் உண்மையிலேயே அவற்றுடன் பேசினார்கள் என்று நான் உங்களிடம் சொன்னால் அது தவறாகாது என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆம், அவர்கள் ஒரு பொது மொழியைக் கண்டு பிடித்திருந்தார்கள். அந்த மரங்கள் அவர்கள் பேச்சைப் புரிந்து கொண்டன என்று நான் நம்புகிறேன். விலங்குகள் அவர்களுடன் அமைதியான வாழ்க்கை நடத்தின, அந்த விலங்குகள் அவர்களுடைய அன்பினால் கவரப்பட்டிருந்தபடியால் ஒருபோதும் அவர்களைத் தாக்கவில்லை, அவர்களை நேசித்தன. அவர்கள் இயற்கை முழுவதையும் இப்படித்தான் நடத்தினார்கள். அவர்கள் என்னிடம் நட்சத்திரங்களைச் சுட்டிக் காட்டினார்கள், அவற்றைப் பற்றிப் பேசினார்கள். அவர்கள் தெரிவித்த பல விஷயங்களை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அந்த விண்ணகத்துப் பொருள்களுடன் அவர்களுக்கு ஒரு உறவு, ஆன்மீக உறவு மட்டுமல்ல, வாழ்கின்ற உறவு இருந்தது என்பது உறுதி. அந்த மனிதர்கள் நான் அவர்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தவில்லை, ஆனால் அவர்களும் கூட ஒரு போதும் என்னைப் புரிந்து கொள்ள மாட்டார்கள் என்பதை நான்

அறிந்திருந்தேன். எனவே நம்முடைய பூமியைப்பற்றி நான் அவர்களிடம் அநேகமாகப் பேசவில்லை. அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த நிலத்தை நான் முத்தமிட்டேன், வீண் வார்த்தைகளைப் பேசாமல் அவர்களைப் போற்றினேன். அவர்கள் அதைக் கண்டார்கள், என்னுடைய போற்றுதலைப் பற்றி வெட்கப்படாமல் என் போற்றுதலை அனுமதித்தார்கள். ஏனென்றால் அவர்களுடைய அன்பும் மிக அதிகமாக இருந்தது. உணர்ச்சி மிகுதியால் கண்ணீருகுத்த படியே சில சமயங்களில் நான் அவர்களுடைய பாதங்களை முத்தமிட்ட பொழுது அவர்கள் வேதனை அடையவில்லை. என்னுடைய உணர்ச்சியை அவர்கள் எவ்வளவு முடிவில்லாத அன்புடன் வரவேற்பார்கள் என்று என் இதயத்தில் மகிழ்ச்சியுடன் உறுதியாகக் கருதினேன். என்னைப் போன்ற ஒரு நபரை அவர்கள் ஒருபோதும் அவமதிக்காதது எப்படி, என்னைப் போன்ற ஒரு நபரிடம் பொறாமை அல்லது காழ்ப்பு உணர்ச்சியை ஒருபோதும் தூண்டாதது எப்படி என்று நான் சில சமயங்களில் திகைப்புடன் என்னையே கேட்டுக் கொண்டேன். தற்பெருமைக்காரனும் பொய்யனுமாகிய நான் என்னுடைய அறிவு முழுவதையும்—அதைப் பற்றி அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது—அவர்களை நேசித்த ஒரே காரணத்துக்காக அவர்களிடம் சொல்லி பிரமிப்பை ஏற்படுத்த விரும்புவதைத் தவிர்த்தது எப்படி என்று என்னையே திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டேன். அவர்கள் தம்முடைய அழகிய சோலைகளிலும் காடுகளிலும் தம்முடைய அழகான பாடல்களைப் பாடிக் கொண்டு மெல்லுணவை — அவர்களுடைய மரங்களில் பழுத்த பழங்கள், காடுகளில் சேகரித்த தேன், அவர்களிடம் அன்போடிருந்த விலங்குகளின் பால்—அருந்திய வண்ணம் அலைந்து கொண்டிருந்தார்கள். உணவையும் உடையையும் பெறுவதற்கு அவர்கள் மிகக் குறைவாகவே பாடுபட்டார்கள். அவர்கள் காதலித்தார்கள், குழந்தைகளைப் பெற்றார்கள், ஆனால் அந்த **ஈவிரக்கமற்ற உடலின்பத்தின்** அறிகுறிகளை நான் அவர்களிடம் ஒருபோதும் பார்க்கவில்லை. நம்முடைய பூமியில் அநேகமாக எல்லோருமே அந்த உடலின்பத்துக்கு பலியாகிறார்கள். நம்முடைய பூமியில் மனித குலத்தின் அனைத்துப் பாவங்களுக்கும் அது ஒரே பிறப்பிடமாக அல்லவா இருக்கிறது. அவர்கள் தங்களுக்குப் பிறந்த குழந்தைகளைத் தங்

களுடைய பேரின்பத்தில் பங்கெடுக்க வந்திருக்கின்ற புதிய நபர்களாக வரவேற்ருர்கள். அவர்களிடம் சச்சரவுகளோ, பொருமையோ இல்லை, இந்த வார்த்தைகளின் அர்த்தம் கூட அவர்களுக்குப் புரியவில்லை. அவர்களுடைய குழந்தைகள் அவர்கள் எல்லோருடைய குழந்தைகளாகக் கருதப் பட்டார்கள்; ஏனென்ருல் அவர்கள் எல்லோருமே ஒரே குடும்பமாக வாழ்ந்தார்கள். அவர்கள் நோய்வாய்ப்படுவது அபூர்வம்; ஆனுல் மரணம் உண்டு. ஆனுல் அவர்களது முதியவர்கள் அமைதியாக மரணமடைந்தார்கள். அவர்கள் தூங்குவதைப் போலத் தோன்றினுர்கள், தாங்கள் விடை பெற்றுச் செல்கின்றவர்களுக்கு ஆசிகளும் புன்சிரிப்பும் வழங்கிவிட்டுத் தங்களுக்கு விடை கொடுப்பதற்காகச் சூழ்ந்து நிற்பவர்களின் தெளிவான புன்சிரிப்புக்களை வாங்கிச் சென்ருர்கள். அந்த சமயத்தில் வருத்தத்தையோ, கண்ணீரையோ நான் பார்க்கவில்லை, அன்புணர்ச்சி பன்முறை பெருகிப் பரவசநிலையை அடைவதை மட்டுமே பார்த்தேன். ஆனுல் அந்தப் பரவச உணர்ச்சி நிம்மதியானது, சிந்தனையில் தோய்ந்தது, முழு நிறைவானது. மரணமடைந்தவர்களுடன்—மரணத்துக்குப் பிறகு கூட—அவர்களுக்குத் தொடர்பு இருப்பதைப் போல, மரணத்திஞல் தங்களுடைய உறவுகள் துண்டிக்கப்படாததைப் போல அவர்கள் நடந்து கொண்டார்கள். அழிவில்லாத வாழ்க்கையைப் பற்றி அவர்களுக்கு நம்பிக்கை உண்டா என்று நான் அவர்களிடம் கேட்டபொழுது அவர்களுக்கு அது அநேகமாகப் புரியவில்லை. அத்தகைய வாழ்க்கையில் அவர்கள் முழுநிறைவான நம்பிக்கை கொண்டிருந்த காரணத்தால் அது அவர்களுக்கு ஒரு பிரச்சினை அல்ல என்பது வெளிப்படை. அங்கே மாதாகோவில்கள் இல்லை ஆனுல் அவர்கள் பிரபஞ்சத்தின் ஆகமொத்தத்திலும் உயிர்த்துடிப்பான, நெருக்கமான, தொடர்ச்சியான தொடர்பு வைத்திருந்தார்கள். அவர்களிடம் கோட்பாடுகள் இல்லை; ஆனுல் அதற்கு பதிலாக, இவ்வுலக வாழ்க்கையெனும் பேரின்பம் அதன் இவ்வுலகத் தன்மையின் முடிவான அளவுக்கு நிறைவு பெறும்பொழுது அவர்கள் அனைவரும் — வாழ்பவர்களும் மரணமடைந்தவர்களும் — பிரபஞ்சத்தின் ஆகமொத்தத்துடன் இன்னும் மிக நெருக்கமான தொடர்பை அடைவார்கள் என்ற அசைக்க முடியாத அறிவைக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அந்த தினத்தை ஆர்வத்தோடு

ஆனால் அவசரப்படாமல் அல்லது மனநிலை திரிந்த ஏக்கமில்லாமல் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஏற்கெனவே அதன் முன்னனுபவத்தைத் தங்கள் இதயங்களில் ஏந்திக் கொண்டு அதை ஒருவரோடொருவர் பகிர்ந்து கொண்டிருப்பதாகக் கூடத் தோன்றியது. இரவில் தூங்குவதற்கு முன்பு அவர்கள் பாடுவார்கள், அவர்களுடைய குரல்கள் உண்மையான, பேரின்பமான ஒத்திசைவில் இணைந்து வெளிப்படும், கழிந்து கொண்டிருக்கும் நாள் அவர்களுக்கு அருளிய உணர்ச்சிகள் அனைத்தையும் அவர்களுடைய பாடல்கள் எடுத்துரைத்தன; அவர்கள் அந்த நாளைத் தூய்மையென்று போற்றினார்கள், விடைகொடுத்தார்கள். அவர்கள் இயற்கை, பூமி, கடல், மற்றும் காடுகளைத் தூய்மையென்று போற்றினார்கள். அவர்கள் தமக்குள் ஒருவரைப் பற்றி ஒருவர் பாடல்களை எழுத விரும்பினார்கள், குழந்தைகளைப் போல ஒருவரையொருவர் புகழ்ந்தார்கள். அவை மிகவும் எளிமையான பாடல்கள்; ஆனால் அவை இதயத்திலிருந்து வெளிப்பட்டன, பிற இதயங்களை மெய்மறக்கும்படிச் செய்தன. பாடல்களை மட்டும் ஏன் குறிப்பிட வேண்டும்? அவர்கள் ஒருவரையொருவர் பாராட்டுவதில் வாழ்க்கையைக் கழித்தார்கள். அது ஒருவருக்கொருவர் ஒருவகையான மோகமாக—சர்வாம்சமான, முழுமையான மோகமாக—இருந்தது. ஆனால் அவர்களுடைய மற்ற பாடல்கள், வீறமைதியான, களிப்பான பாடல்கள் எனக்கு அநேகமாகப் புரியவில்லை. என்னால் வார்த்தைகளைப் புரிந்து கொள்ள முடிந்தது, அவற்றின் முழுப்பொருளை என்னால் ஒரு போதும் புரிந்து கொள்ள முடியவில்லை. அது என்னுடைய அறிவுக்கு அப்பாற்பட்டதாகத் தோன்றியது, ஆனால் இயல்பாகவே என் இதயம் அவற்றில் மென் மேலும் தோய்ந்தது. இவற்றையெல்லாம் நெடுங்காலத்துக்கு முன்பே நான் அரைகுறையாகக் கண்டதுண்டு என்று அவர்களிடம் நான் கூறினேன். நான் நம்முடைய பூமியில் இருந்த காலத்தில் இவ்வளவு மகிழ்ச்சியும் புகழும் என் இதயத்தில் வேதனை நிறைந்த ஏக்கத்தைத் தூண்டியது, அது சில சமயங்களில் தாங்க முடியாத துயரமாகப் பெருகியது, அவர்கள் அனைவரையும் அவர்களுடைய புகழையும் என்னுடைய இதயத்தின் கனவுகளிலும் அறிவின் காட்சிகளிலும் முன்பே அரை குறையாகக் கண்டதுண்டு, எங்கள் பூமியில் சூரியன் மறைகின்ற

காட்சியைக் கண்ணீர் வடிக்காமல் பெரும்பாலும் என்னுல் பார்க்க முடியாது என்று நான் அவர்களிடம் கூறினேன்... எங்களுடைய பூமியில் மக்களைப்பற்றி எனக்கேற்பட்ட வெறுப்பில் துயரம் கலந்திருந்தது; அவர்களை நேசிக்காமல் அவர்களை வெறுக்க என்னுல் முடியவில்லை. அவர்களை மன்னிக் காமலிருக்க என்னுல் ஏன் முடியவில்லை, அவர்களிடம் நான் காட்டிய அன்பில் துயரம் ஏன் கலந்திருந்தது, அவர்களை வெறுக்காமல் ஏன் என்னுல் நேசிக்க முடியவில்லை? அவர்கள் நான் சொல்வதைக் கேட்டார்கள், நான் அவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தவற்றை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதை நான் கண்டேன். ஆனுல் அவர்களிடம் பேசியதற்காக நான் வருத்தப் படவில்லை. ஏனென்முல் எனக்குப் பின்னுல் விட்டுவிட்டு வந்தவர்களைப் பற்றி என்னிடம் ஏற்பட்ட மாபெரும் ஏக்கத்தை அவர்கள் முழுமையாகப் புரிந்து கொண்டார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்கள் தங்களுடைய அன்பு நிறைந்த, நேச மான பார்வையை என் மீது திருப்பிய பொழுது, அவர் களுக்கு அருகில் இருக்கும்பொழுது, என் இதயம் அவர்களு டையதைப் போலவே குற்றமில்லாததாக, வாய்மையான தாக மாறுவதை நான் உணர்ந்தபொழுது, அதுவே எனக்குப் போதுமானதாக இருந்தது. அவர்களைப் புரிந்துகொள்ளவில்லை யே என்று நான் வருந்தவில்லை. முழுநிறைவான வாழ்க்கை என்னைப் பேச முடியாமற் செய்துவிட்டது. என்னுல் அவர்களை மௌனமாகத்தான் வழிபட முடிந்தது.

ஓ! எல்லோரும் இப்பொழுது என்னைப் பார்த்துச் சிரிக் கிருர்கள், இப்பொழுது நான் சொல்கின்ற விவரங்களை யெல்லாம் ஒருவர்தன் கனவில் ஒருபோதும் பார்த்திருக்க முடியாது, மயக்க வெறியில் என் இதயம் கற்பனை செய்த ஏதோ சிலவற்றை உணர்ந்திருப்பதைத் தவிர வேறு எதை யுமே என் கனவில் நான் பார்த்திருக்கவோ, உணர்ந்திருக்க வோ முடியாது, விவரங்களைப் பொறுத்தவரை விழித்துக் கொண்ட பிறகு நான் அவற்றை இட்டுக் கட்டியிருக்க வேண்டும் என்று எல்லோரும் சொல்கிருர்கள். உண்மையில் அப்படியும் கூட இருக்கலாம் என்று நான் ஒத்துக் கொண்ட பொழுது—ஓ! கடவுளே!—என்னைப் பார்த்து எப்படிச் சிரித் தார்கள், எப்படிக் கேலி செய்தார்கள் தெரியுமா! ஆம், அந்தக் கனவு ஏற்படுத்திய வெறும் உணர்ச்சியில் நான்

மூழ்கிவிட்டேன், என்னுடைய காயமடைந்த, இரத்தம் வடி கின்ற இதயத்தில் அது மட்டுமே எஞ்சி நின்றது என்பது உண்மையே. உண்மையான பிம்பங்களையும் உருவங்களையும் அதாவது என்னுடைய கனவில் நான் உண்மையாகவே பார்த் தவற்றைப் பொறுத்தவரை அவை தம்முடைய ஒத்திசைவு, கவர்ச்சி மற்றும் அழகில் மிகவும் பரிபூரணமாக, மிகவும் உண்மையாக இருந்தபடியால் எனக்கு விழிப்பேற்பட்ட பிறகு நம்முடைய பலவீனமான வார்த்தைகள் இயற்கை யாகவே அவற்றை வர்ணிப்பதற்கு எனக்கு உதவ முடிய வில்லை. ஆகவே அவை என் மனதில் தெளிவில்லாதபடி இருந்தன. எனவே பின்னர் இந்த விவரங்களைச் சுய உணர் வில்லாமலேயே இட்டுக் கட்டும்படி நான் கட்டாயப்படுத்தப் பட்டிருக்கலாம் என்பதும் உண்மையே. அதிலும் அவற்றை ஏதாவதொரு முறையில் எடுத்துக் கூற வேண்டும் என்று நான் அதிகமான அவசரத்துடனும் ஆர்வத்துடனும் இருந்த படியால் அவற்றை விசேஷமாகத் திரித்துக் கூறியிருக்கலாம் என்பதும் உண்மையே. ஆனால் அவை அனைத்தும் இப்படி இருந்தன என்பதை நான் எப்படி சந்தேகிக்க முடியும்? நான் வர்ணித்ததைக் காட்டிலும் அது ஆயிரம் மடங்கு சிறப்பானதாக, ஒரு வேளை ஒளி மிகுந்ததாக, ஆனந்தமான தாகத்தான் இருந்திருக்கும். அது கனவு என்றே வைத்துக் கொள்வோம். இவை அனைத்துமே இருந்திருக்கத்தான் வேண் டும். உங்களுக்குத் தெரியுமா, ஒரு ரகசியம் சொல்கிறேன். அது ஒரு கனவாகவே இருந்திருக்க முடியாது, ஏனென்றால் அடுத்தபடியாக ஒன்று நடைபெற்றது, அது பயங்கரமான அளவுக்கு மிகவும் உண்மையாக இருந்தபடியால் அது ஒரு வருக்குக் கனவில் கூட ஒருபோதும் நடைபெறாது, என் இதயம் அக்கனவைக் கற்பனை செய்தது என்றே வைத்துக் கொள்வோம்! ஆனால் அதன் பிறகு எனக்கேற்பட்ட அந்த அருவருப்பான யதார்த்தத்தை என் இதயம் மட்டும் தனி யாகக் கற்பனை செய்திருக்க முடியுமா? அதை நான் எப்படி இட்டுக் கட்டியிருக்க முடியும், என் இதயம் அந்தக் கனவை எப்படித் தூண்டியிருக்க முடியும்? என்னுடைய மேலோட் டமான இதயமும் என் சலனமான, இழிந்த அறிவும் உண் மையைப் பற்றி இத்தகைய திருவெளிப்பாட்டைக் காண் கின்ற நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்க முடியாதென்பது நிச் சயம். ஓ! நீங்களே தீர்ப்புக் கூறுங்கள்: நான் இந்நேரம்

வரை அதை மறைத்திருதேன்; ஆனால் இப்பொழுது அந்த உண்மையைச் சொல்லப் போகிறேன். உண்மையில் நான்... நான் அவர்கள் அனைவரையும் கெடுத்தேன்!

5

ஆம், ஆம், அவர்கள் அனைவரையும் நான் கெடுப்பதில் அது முடிவடைந்தது! அது எப்படி நடைபெற்றிருக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் அப்படி நடைபெற்றது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. என் கனவு ஆயிரக் கணக்கான வருடங்கள் நீண்டிருந்தது, மொத்தமாக அதைப் பற்றிய மனப்பதிவு மட்டுமே என்னிடம் எஞ்சிநின்றது. அவர்களுடைய வீழ்ச்சி என்னால் ஏற்பட்டது என்பது மட்டுமே எனக்குத் தெரியும். நாடு முழுவதிலும் பெருந்துன்பத்தை ஏற்படுத்துகின்ற ஆபத்தான இழைப்புழுவைப் போல, பிளேக் நோயின் கிருமியைப் போல, அந்த மகிழ்ச்சி நிரம்பிய பூமியில், நான் அங்கு வருவதற்கு முன்பு பாவத்தை அறியாதிருந்த பூமியில் நான் தீமைகளைப் பரப்பினேன். அவர்கள் பொய் பேசக் கற்றுக் கொண்டார்கள், பொய்யுரைத்தலை நேசிக்க, பொய்களின் அழகை ரசிக்கத் தொடங்கினார்கள். ஓ! அது முற்றிலும் கபடமில்லாத முறையில், சிரிப்பு, சல்லாபம், குதூகலமான காதல் விளையாட்டில் தொடங்கியிருக்கலாம், ஆனால் இந்தப் பொய் என்ற அணு அவர்களுடைய இதயங்களுக்குள் கசிந்து சென்று அங்கே வரவேற்கப் பட்டிருக்கலாம். அதற்குப் பிறகு உடலின்பம் தோன்றியது. உடலின்பம் பொறாமையைப் பெற்றது; பொறாமையிலிருந்து கொடுமை தோன்றியது... ஓ! எனக்குத் தெரியாது, எனக்கு அது நினைவில்லை. ஆனால் சீக்கிரத்தில், வெகு சீக்கிரத்தில் முதல்தடவையாக இரத்தம் கொட்டப் பட்டது. அவர்கள் திகைப்பும் பீதியும் அடைந்தார்கள், பிரிந்து வெவ்வேறு பாதைகளில் போகத் தொடங்கினார்கள். அவர்கள் சங்கங்களை அமைத்தார்கள், ஆனால் அந்த சங்கங்கள் ஒன்றுக்கொன்று விரோதமாக இருந்தன. குற்றச் சாட்டுகளும் எதிர்க்குற்றச் சாட்டுகளும் தொடங்கின. அவர்கள் அவமானத்தை அறிந்து அதை ஒரு நற்பண்பாக ஆக்கிக் கொண்டார்கள். அவர்கள் கௌரவத்தின் அர்த்

த்தை அறிந்து கொண்டார்கள். ஒவ்வொரு சங்கமும் தனக்கென்று தனிக் கொடியைப் பறக்கவிட்டது. அவர்கள் தங்களைச் சுற்றியிருந்த விலங்குகளிடம் கொடுமையாக நடந்து கொண்டார்கள். அவை காடுகளுக்குப் பின்வாங்கிச் சென்று அவர்களுக்கு விரோதமாக மாறின. பிரிவினைக்காக, தலைமைக்காக, தனிப்பட்ட முக்கியத்துவத்துக்காக, உனக்காகவும் எனக்காகவும் போராட்டம் நடைபெற்றது. இப்பொழுது அவர்கள் பல மொழிகளைப் பேசினார்கள். அவர்கள் துயரத்தை ருசி பார்த்தார்கள், துயரத்தை நேசிக்கத் தொடங்கினார்கள்; அவர்கள் வேதனைக்காக ஏங்கினார்கள், வேதனையின் மூலமாக மட்டுமே உண்மையை அடைய முடியும் என்றார்கள். அப்போது விஞ்ஞானம் அங்கே அறிமுகம் செய்யப் பட்டது. அவர்கள் தீயவர்களாக மாறிய பிறகு அவர்கள் சகோதரத்துவத்தையும் மனிதாபிமானத்தையும் பற்றிப் பேசத் தொடங்கி இக் கருத்துக்களைப் புரிந்து கொண்டார்கள். அவர்கள் குற்றவாளிகளாக மாறிய பிறகு நீதி என்ற கருத்தைக் கண்டு பிடித்தார்கள்; நீதியை நிலை நிறுத்துவதற்காக பெரிய சட்டப் புத்தகங்களை, கோட்பாடுகளை எழுதிக் கொண்டார்கள். இச் சட்டங்களைப் பாதுகாப்பதற்காக ஒரு தூக்குமேடையை நிறுவினார்கள். அவர்கள் எதை இழந்துவிட்டார்கள் என்பதைப் பற்றி அவர்களிடம் தெளிவில்லாத நினைவு மட்டுமே இருந்தது. ஒரு காலத்தில் தாங்கள் கபடமில்லாதவர்களாக, மகிழ்ச்சி நிரம்பியவர்களாக இருந்ததை நம்புவதற்குக் கூட அவர்கள் மறுத்தார்கள். ஒரு காலத்தில் மகிழ்ச்சி நிரம்பியவர்களாக இருந்திருக்க முடியும் என்ற எண்ணமே அவர்களுக்குச் சிரிப்பைக் கொடுத்தது; அவர்கள் அது ஒரு கனவு என்றார்கள். அதை பிம்பங்களிலும் உருவங்களிலும் அவர்களால் கற்பனை செய்யக் கூட முடியவில்லை. ஆனால் விசித்திரமும் அதிசயமும் என்னவென்றால், அவர்கள் தங்களுடைய முந்திய மகிழ்ச்சியை ஒரு கட்டுக்கதை என்று சொன்னார்கள், அதில் எல்லா நம்பிக்கையையும் இழந்து விட்டார்கள் என்றாலும் அவர்கள் மறுபடியும் கபடமில்லாதவர்களாக, மகிழ்ச்சி நிரம்பியவர்களாக வாழ்க்கை நடத்த விரும்பியபடியால் அவர்கள் குழந்தைகளைப் போல தங்களுடைய இதயபூர்வமான விருப்பத்துக்குப் பணிந்தார்கள், இந்த விருப்பத்தைக் கடவுள் நிலைக்கு உயர்த்தி எண்ணற்ற ஆலயங்களைக் கட்டினார்கள்,

தங்களுடைய சொந்தக் கருத்து—அவர்களுடைய ''விருப்பம்'' என்றும் கூறலாம்—ஒருபோதும் நிறைவேற முடியாது அல்லது தங்களுக்கு அருட்கொடையாகக் கிடைக்கப் போவதில்லை என்பதை நன்ருக அறிந்திருந்தாலும் அதற்காகப் பிரார்த்தனை செய்யத் தொடங்கினுர்கள், அதைப் போற்றிப் பாடிக் கண்ணீரால் வழிபட்டார்கள். ஆனால் அவர்கள் இழந்த கபடமில்லாத, மகிழ்ச்சி நிரம்பிய உலகத்தை அவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பது சாத்தியமாக இருந்திருந்தால் அல்லது யாராவது ஒருவர் அந்த உலகத்தை அவர்களிடம் லேசாகக் காட்டி இந்த உலகத்தில் மறுபடியும் வாழ்வதற்கு விரும்புவீர்களா என்று கேட்க முடிந்திருக்குமானால் அவர்கள் ஒரு வேளை மறுத்திருப்பார்கள். அவர்கள் என்னிடம் பின்வருமாறு கூறினுர்கள்: ''எங்களிடம் மோசடியும், தீமையும் அநீதியும் இருக்கட்டும். ஆனால் அதை நாங்கள் **அறிவோம்**, அதை நினைத்து நாங்கள் அழுகிறேம், அதற்காக எங்களைச் சித்திரவதை செய்து கொள்கிறேம். எங்களைப் பற்றித் தீர்ப்பளிக்கப் போகின்ற இரக்கம் நிறைந்த நீதிபதி—அவருடைய பெயர் எங்களுக்குத் தெரியாது — எங்களுக்குத் தருகின்ற தண்டனையைக் காட்டிலும் கடுமையான தண்டனையை நாங்களே எங்கள் மீது விதித்துக் கொள்கிறேம். எங்களிடம் விஞ்ஞானம் இருக்கிறது, அதைக் கொண்டு நாங்கள் உண்மையை மறுபடியும் தேடிக் கண்டு பிடிப்போம், இந்தத் தடவை நாங்கள் உண்மையைச் சுய உணர்வுடன் சந்திப்போம். அறிவு உணர்ச்சியைக் காட்டிலும் உயர்வானது; வாழ்க்கையைப் பற்றிய உணர்வு வாழ்க்கையைக் காட்டிலும் உயர்வானது. விஞ்ஞானம் எங்களுக்கு அறிவைத் தரும், அறிவு சட்டங்களை நிர்ணயிக்கும், மகிழ்ச்சியின் விதிகளைப் பற்றிய அறிவு மகிழ்ச்சியைக் காட்டிலும் உயர்வானது''. அவர்கள் என்னிடம் கூறியது இதுதான். இதைச் சொன்ன பிறகு ஒவ்வொரு நபரும் மற்றவர்கள் அனைவரையும் காட்டிலும் அதிகமாகத் தன்னை நேசித்தார், அவர் வேறுவிதமாக நடந்து கொண்டிருக்க முடியாது. ஒவ்வொரு நபரும் தன்னுடைய அகந்தையை மிகவும் கவனமாகப் பாதுகாத்தபடியால் மற்றவர்களுடைய அகந்தையை அவமதிப்பதிலும் குறைத்துப் பேசுவதிலும் தன்னுடைய எல்லா முயற்சிகளையும் ஈடுபடுத்தினுர். அது அவருடைய வாழ்க்கைப் பணியாயிற்று. அடுத்தபடியாக அடி

மைத்தனம் வந்தது. அங்கே விருப்பபூர்வமான அடிமைத் தனமும் இருந்தது. பலவீனமானவர்கள் பலமிக்கவர்களி டம் விருப்பபூர்வமாகப் பணிந்தார்கள். அப்பொழுதுதானே தங்களைக் காட்டிலும் மிகவும் பலவீனமாக இருப்பவர்களை அவர்கள் நசுக்க முடியும். நேர்மையாளர்கள் மக்களிடம் வந்து அவர்களுடைய ஆணவத்தைப் பற்றி, நியாயம், இணக்கம் ஆகியவற்றின் எல்லா நியதிகளையும் எல்லாவித மான அவமான உணர்ச்சியையும் அவர்கள் இழந்துவிட்ட தைப் பற்றிக் கண்ணீர் விட்டபடியே பேசினார்கள். ஆனால் நேர்மையாளர்கள் ஏளனம் செய்யப்பட்டார்கள்; அவர்கள் மீது கற்கள் வீசப்பட்டன. ஆலயங்களின் வாயிற்படிகளைப் புனித இரத்தம் கறைப்படுத்தியது. எனினும் வேறு மனி தர்கள் வந்தார்கள். மனிதர்களை மறுபடியும் ஒன்று படுத்த வேண்டும், ஆனால் அவர்கள் மற்ற எல்லோரையும் காட்டி லும் தங்களையே தொடர்ந்து நேசிக்க வேண்டும், ஆனால் அடுத்தவர்களுடைய பாதையில் குறுக்கே நிற்கக் கூடாது, எல்லோரும் மறுபடியும் வெளிப்பார்வைக்கு இசைவாகத் தோன்றும்படி ஒற்றுமை அடைவதற்குப் பாடுபடத் தொடங் கினார்கள். இந்தக் கருத்தை ஆதரித்து மாபெரும் போர் கள் நடைபெற்றன. அவர்கள் போர் செய்து கொண்டிருந் தாலும், விஞ்ஞானம், அறிவு, சுய-பாதுகாப்பு உணர்ச்சி ஆகியன மனித குலத்தை இணக்கமான, அறிவு பூர்வமான சமூகத்தில் ஒற்றுமைப்படுமாறு முடிவில் நிர்ப்பந்திக்கும் என்று உறுதியாக நம்பினார்கள்; இதற்கிடையில் மற்ற விவ காரங்களைத் துரிதப்படுத்துவதற்காக ''அறிஞர்கள்'' தங் களுடைய கருத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள், ''அறிவில் லாதவர்கள்'' இந்தக் கருத்து வெற்றிபெறுவதைத் தடுக்கக் கூடாது என்பதற்காக அவர்களை இயன்ற அளவுக்கு வேகமாக ஒழிப்பதற்கு முயற்சி செய்தார்கள். ஆனால் சுய-பாதுகாப்பு உணர்ச்சி சீக்கிரத்திலேயே பலவீனமடையத் தொடங்கிற்று. ஆணவத்துக்கும் உடலின்பத்துக்கும் துணை சென்ற மனிதர்கள் எல்லாவற்றையும் கொடு அல்லது ஒன்றுமே வேண்டாம் என்று மொத்தமாகக் கோரினார் கள். எல்லாவற்றையும் அடைவதற்காக அவர்கள் குற்றத் தைச் செய்தார்கள், அது தோல்வியடைந்தால் தற்கொலை செய்து கொண்டார்கள். அடுத்தபடியாக மதங்கள் அறிமுகப் படுத்தப்பட்டன, வாழ்க்கை நிலையாமை மற்றும் நிலையா

மையில் முடிவில்லாத பேரின்பத்தை அடைவதற்காக சுய-அழிவு வழிபாடு செய்யப்பட்டது. கடைசியில் தங்களுடைய அர்த்தமில்லாத உழைப்பினுல் மக்கள் ஓடாகத் தேய்ந்து விட்டார்கள்; அவர்களுடைய முகங்களில் துன்பத்தின் நிழல் தெரிந்தது. துன்பமே அழகு, ஏனென்ருல் துன்பத்தில் மட்டுமே சிந்தனை அடங்கியிருக்கிறது என்று அவர்கள் பிரகடனம் செய்தார்கள். தங்களுடைய பாடல்களில் அவர்கள் துன்பத்தைப் போற்றினுர்கள். நான் அவர்கள் மத்தியில் நடந்தேன், என்னுடைய கைகளைப் பிசைந்து கொண்டு அவர்களுக்காகக் கண்ணீர் வடித்தேன். முன்னர் அவர்களுடைய முகங்களில் துன்பம் இல்லாமல் அவை கபடமில்லாமலும் அதிகமான அழகுடனும் இருந்த பொழுதைக் காட்டிலும் நான் இப்பொழுது அவர்களிடம் காட்டிய அன்பு ஒரு வேளை அதிகமாகக் கூட இருக்கலாம். அவர்களால் அசுத்தப்படுத்தப்பட்ட பூமியை— அது சொர்க்கமாக இருந்த பொழுதைக் காட்டிலும் அதிகமாகக்கூட—நான் நேசித்தேன்; அங்கே கவலை வந்துவிட்டது என்ற ஒரே காரணத்தினுல். நான் எப்பொழுதும் துன்பத்தையும் கவலையையும் நேசித்திருக்கிறேன். ஆனுல் அது எனக்காகவே, எனக்காக மட்டுமே. அவர்களிடம் பரிதாபத்தினுல் நான் கண்ணீர் வடித்தேன். நான் என்ன செய்வதென்று தெரியாமல் என்னையே குற்றம் சாட்டிக் கொண்டு, சபித்துக் கொண்டு, இழிவுபடுத்திக் கொண்டு என்னுடைய கரங்களை அவர்களிடம் நீட்டினேன். நான், நான் மட்டுமே எல்லாவற்றையும் செய்தேன், இந்த ஊழல், கொடுமை, மோசடி ஆகியவற்றின் கிருமியைப் புகுத்தியது நானே என்று அவர்களிடம் கூறினேன்! என்னைச் சிலுவையில் அறையுங்கள் என்று அவர்களிடம் கெஞ்சினேன். சிலுவையை எப்படித் தயாரிப்பது என்று அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தேன். தற்கொலை செய்து கொள்ள என்னுல் முடியவில்லை, அதற்கு என்னிடம் பலமில்லை. ஆனுல் அவர்களால் துன்பமடைய வேண்டுமென்று நான் விரும்பினேன், நான் துன்பத்துக்காக ஏங்கினேன், இந்தத் துன்பங்களில் என்னுடைய இரத்தம் சொட்டுச் சொட்டாக வடிய வேண்டுமென்று விரும்பினேன். ஆனுல் அவர்கள் என்னைப் பார்த்து வெறுமனே சிரித்தார்கள். கடைசியில் என்னைப் புனித முட்டாள் என்று கருதத் தொடங்கினுர்கள். அவர்கள் என்னிடம் சமாதானங்களைக் கூறினுர்கள். நாங்கள் கேட்டது கிடைத்திருக்கிறது, இப்பொ

ழுது எங்களிடம் இருப்பது வேறு விதமாக இருக்க முடியாது என்றார்கள். கடைசியில் நான் அவர்களுக்கு ஆபத்தாக மாறிக் கொண்டிருக்கிறேன், நான் அமைதியாக இருக்காவிட்டால் என்னைப் பைத்தியக்கார விடுதியில் பூட்டி விடுவோம் என்று அவர்கள் அறிவித்தார்கள். இதைக் கேட்டதும் என் இதயத்தைக் கவலை தீவிரமாகப் பற்றிக் கொண்டது; என்னால் மூச்சு விட முடியவில்லை. நான் செத்துக் கொண்டிருப்பதாக உணர்ந்தேன், அப்பொழுது... நான் விழித்துக் கொண்டேன்.

ஏற்கெனவே பகல், அல்லது பொழுது இன்னும் விடியவில்லை, ஆனால் ஐந்து மணிக்கு மேல் ஆகியிருந்தது. சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தபடியே நான் விழித்துக் கொண்டேன், மெழுகுவத்தி எரிந்து அணைந்திருந்தது. காப்டன் அறை தூங்கிக் கொண்டிருந்தது. எங்கள் விடுதியில் எக்காலத்திலும் இல்லாத அமைதி என்னைச் சுற்றிலும் நிலவியது. நான் திகைத்துப் போய் உடனே துள்ளிக் குதித்தெழுந்தேன். இதற்கு முன்பு இம்மாதிரியான அல்லது இதிலிருந்து பெரிதும் வேறுபாடாகக் கூட எதுவுமே எனக்கு ஏற்பட்டதில்லை. உதாரணமாக, நாற்காலியில் உட்கார்ந்தபடியே தூங்கிவிடுவதைப் போன்ற உண்மையிலேயே முக்கியத்துவமில்லாத, அற்பமான சம்பவங்கள் எதுவுமே கூட எனக்கு ஏற்பட்டதில்லை. அங்கே நின்றபடியே நான் சுய உணர்வடைந்து கொண்டிருந்த பொழுது என் கைத்துப்பாக்கி குண்டு போடப்பட்டுத் தயாராக எனக்கு முன்னாலிருப்பதை திடீரென்று பார்த்தேன். அதைச் சட்டென்று கீழே தள்ளினேன். இல்லை, இப்பொழுது எனக்கு வாழ்க்கை அவசியம், வாழ்க்கை! நான் கைகளை உயர்த்திக் கொண்டு சாசுவதமான உண்மையைத் தொழுது வேண்டிக் கொண்டேன்; அல்லது அழுது வேண்டிக் கொண்டேன் என்று கூடச் சொல்லலாம். ஏனென்றால் என் உயிரும் உணர்வும் மகிழ்ச்சியில், அளவிட்டுக் கூற முடியாத மகிழ்ச்சியில் திளைத்தது. ஆம். நான் வாழ விரும்பினேன், இறைமொழியைப் பரப்ப விரும்பினேன்! போதிக்க வேண்டும், இப்பொழுது, என்றென்றும் போதிக்க வேண்டும் என்ற முடிவு அக்கணத்

திலேயே என்னிடம் ஏற்பட்டது! நான் போதனை செய்வேன், நான் போதனை செய்ய வேண்டும்—எதை? பேருண்மையை. ஏனென்றால் நான் அதைப் பார்த்து விட்டேன், என்னுடைய கண்களால் அதைப் பார்த்து விட்டேன், அதன் பேரொளியுடன் அதைப் பார்த்து விட்டேன்!

ஆகவே அன்று முதல் நான் இறைமொழியைப் பரப்பிக் கொண்டிருக்கிறேன்! அது மட்டுமல்ல. என்னைப் பார்த்து ஏளனம் செய்பவர்களிடம் இப்பொழுது நான் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான அன்பைக் காட்டுகிறேன். அது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை, என்னால் அதை விளக்க முடியாது, அது அப்படியே இருக்கட்டும். நான் தடுமாற்றமடைந்திருக்கிறேன் என்று அவர்கள் சொல்கிறார்கள். நான் இப்பொழுது மிகவும் மோசமாகத் தடுமாறிக் கொண்டிருக்கிறேன் என்றால், வெற்றியடைய முடியும் என்று நான் எதிர்பார்ப்பது எப்படி? அது முற்றிலும் உண்மையே. நான் தடுமாறிக் கொண்டுதான் இருக்கிறேன். எதிர்காலத்தில் அது இன்னும் மோசமாகக் கூட மாறலாம். மிகச் சிறப்பான முறையில் எப்படி போதனை செய்வது அதாவது எத்தகைய வார்த்தைகள் மூலம், எத்தகைய செயல்களின் மூலம் போதனை செய்வது என்பதை நான் கற்றுக் கொள்வதற்கு முன்பாக நான் உண்மையாகவே தடுமாறுவேன், ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் வழிதவறிப் போய் விடுவேன் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஏனென்றால் அது மிகவும் கடினமான பணி. இப்பொழுது கூட அவையனைத்தும் பாலைப் போல எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. ஆனால், கேளுங்கள், நம்மில் யார்தான் தடுமாறவில்லை? ஆனால் ஒவ்வொருவரும் ஒரே பொருளை நோக்கித் தான் போய்க் கொண்டிருக்கிறார்கள், குறைந்த பட்சம் எல்லோருமே ஒரே பொருளை அடைவதற்குத்தான் பாடுபடுகிறார்கள், அறிவாளியிலிருந்து கடைகெட்ட மனிதன் வரை எல்லோரும் பின்பற்றுகின்ற பாதைகள்தான் வெவ்வேறானவை. இது பழைய உண்மைதான், ஆனால் இங்கே புதியதாக ஏதோ ஒன்று இருக்கிறது; நாம் மிகவும் மோசமாகத் தடுமாறி விட முடியாது, புரிகிறதா? ஏனென்றால் நான் பேருண்மையைப் பார்த்துவிட்டேன். நான் அதைப் பார்த்து விட்டேன். இந்தப் பூமியில் வாழ்கின்ற திறமையை இழந்து விடாமலேயே மனிதர்கள் அழகாகவும் மகிழ்ச்சியாகவும்

இருக்க முடியும் என்பதை நான் அறிந்திருக்கிறேன். தீமையே மனிதனின் இயற்கையான நிலைமை என்பதை நான் நம்ப முடியாது, அதை நான் நம்பமாட்டேன். ஆனால் என்னுடைய இந்த உறுதிதான் அவர்கள் எல்லோரையும் என்னைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்கும்படி செய்கிறது. ஆனால் அதை எப்படி என்னால் நம்பாமலிருக்க முடியும்? நான் பேருண்மையைப் பார்த்தேன். அது என்னுடைய கற்பனையின் அல்லது அறிவின் தயாரிப்பல்ல. நான் அதைப் பார்த்து விட்டேன், பார்த்துவிட்டேன், அதன் **வாழ்கின்ற படிமம்** என்னுடைய ஆன்மாவை நிரந்தரமாக ஆட்கொண்டு விட்டது. அதன் முழுநிறைவான அழகை நான் பார்த்து விட்டபடியால் அது மனிதர்களுக்கு மத்தியில் வாழ முடியாது என்பதை நான் நம்புவதற்கு மறுக்கிறேன். எனவே நான் எப்படி வழி தவற முடியும்? ஒன்றிரண்டு தடவைகள் நான் பாதையிலிருந்து விலகிப்போவது உண்மையே. நான் சில சமயங்களில் மற்றவர்களின் சொற்களை உபயோகிப்பேன்—ஆனால் அது நெடுங்காலத்துக்கு அல்ல. நான் பார்த்த வாழ்கின்ற படிமம் என்னுடன் எக்காலமும் இருக்கும், அது எப்பொழுதும் என்னைத் திருத்தும், என்னை நேராகப் போகும்படி செய்யும். நான் முழு உடல் பலத்தோடும் உத்வேகத்துடனும் இருக்கிறேன். நான் புறப்படுவேன், ஆயிரம் வருடங்களுக்கு வேண்டுமானாலும் பிரச்சாரம் செய்வேன். உங்களுக்குத் தெரியுமா? அவர்கள் அனைவரையும் கெடுத்து விட்டேன் என்ற உண்மையை முதலில் மறைப்பதற்கு நான் விரும்பினேன்—ஆனால் அது தவறாகப் போய்விடும்—ஏற்கெனவே தவறு, புரிகிறதா? நான் **பொய் சொல்கிறேன்** என்று பேருண்மை என் காதில் முணுமுணுத்தது. பேருண்மை என்னைக் காப்பாற்றியது, எனக்குப் பாதையைக் காட்டியது. ஆனால் பூமியில் சொர்க்கத்தை நிர்மாணிப்பது எப்படி என்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் அதை எடுத்துச் சொல்வதற்கு எனக்குத் தெரியவில்லை. விழித்தவுடன் எனக்கு வார்த்தைகள் மறந்து விட்டன. குறைந்தபட்சம், மிகவும் முக்கியமான, மிகவும் அவசியமான எல்லா வார்த்தைகளுமே. கவலை வேண்டாம். நான் தேர்ந்தெடுத்திருக்கும் பாதையில் செல்வேன், ஓய்வில்லாமல் போதனை செய்வேன், ஏனென்றால் நான் பார்த்தவற்றை என்னால் வர்ணிக்க முடியவில்லை என்றாலும் என்னுடைய கண்களினாலேயே

நான் அதைப் பார்த்துவிட்டேன். என்னை ஏளனம் செய்பவர்களுக்கு இது புரியவில்லை. ''அது வெறும் கனவுதான்—பிதற்றலும் மருட்சியுமே'' என்று அவர்கள் சொல்கிறார்கள். கடவுளே! இது தான் புத்திசாலித்தனமா? அவர்கள் தங்களைப் பற்றி மிகவும் அகம்பாவமாகக் கூட நினைத்துக் கொள்கிறார்கள். கனவு என்று சொல்கிறார்களா அவர்கள்? ஆனால் கனவு என்றால் என்ன? நம்முடைய வாழ்க்கை ஒரு கனவு இல்லையா? நான் இன்னும் கூடச் சொல்கிறேன். அது ஒருக்காலும், ஒருக்காலும் மெய்யாக வேண்டாம், சொர்க்கம் ஒருக்காலும் வேண்டாம் (என்ன இருந்தாலும் நானும் அதை உணரத்தான் செய்கிறேன்!) என்ன நேர்ந்தாலும் நான் புறப்படுவேன், பேருண்மையைப் பரப்புவேன். ஆனால் அதை சுலபமாகச் செய்ய முடியுமே: ஒரு நாளில், ஒரே ஒரு மணி நேரத்தில் எல்லாவற்றையும் தீர்த்துவிட முடியும்! ஒருவர் தன்னைப் போலவே மற்றவர்களையும் நேசிக்க வேண்டும், அது தான் முக்கியமான விஷயம், அவ்வளவு தான், வேறு எதுவும் வேண்டாம், கண்டிப்பாக வேறு எதுவும் அவசியமில்லை. அதன்பிறகு என்ன செய்ய வேண்டுமென்று உடனடியாக ஒருவருக்குத் தெரியும். இது பழைய உண்மையைத் தவிர வேறு எதுவுமில்லை. அதைப் பல கோடிக் கணக்கான தடவைகள் திருப்பிச் சொல்லியிருக்கிறோம், படித்திருக்கிறோம். எனினும் அது வேரூன்றவில்லை! ''வாழ்க்கையைப் பற்றிய உணர்வு வாழ்க்கையைக் காட்டிலும் உயர்வானது, மகிழ்ச்சியின் விதிகளைப் பற்றிய அறிவு மகிழ்ச்சியைக் காட்டிலும் உயர்வானது''—நாம் இதை எதிர்த்துப் போராட வேண்டும். நான் போராடுவேன். எல்லோரும் விரும்பினார்கள் என்றால் அனைத்தையும் உடனடியாகச் செய்துவிட முடியும்.

* * *

அந்தச் சிறுமி? நான் அவளைக் கண்டுபிடித்துவிட்டேன்... என்னுடைய பாதையில் நான் புறப்படுகிறேன்! ஆம், நான் புறப்படுகிறேன்!

குறிப்புகள்

தஸ்தயேவ்ஸ்கி
(வாழ்க்கை விவரங்கள்)

ருஷ்ய இலக்கியம் உலகுக்கு அளித்த இம்மாபெரும் எழுத்தாளரின் வாழ்க்கை வரலாறு சோகம் மிக்கது; விதியின் வினையோ என்று எண்ணும்படிக் கொடுமையிலும் கொடுமையானது.

மனித முலத்தின் வரம்பில்லாக் கொடுஞ் சோகங்களை எல்லாம் இம்மாமேதை தமது எழுத்துக்களில் வடித்தெடுத்துத் தர வேண்டுமெனத் திட்டமிட்டு, விதியானது இவரைக் கொடூர அனுபவங்களுக்கு ஆளாக்கி வாழ்வெல்லாம் வதைபட வைத்ததோ என்றுகூட எண்ணத் தோன்றுகிறது.

சோகம் மிக்க வாழ்க்கை வரலாற்றுக்குரிய மேதைகளைப் படைத்த சிறப்பு உலகில் வேறு எந்த இலக்கியத்தையும் விட ருஷ்ய இலக்கியத்துக்கு அதிகம் உண்டு எனலாம். ருஷ்யாவின் மாபெரும் இரு கவிஞர்கள்—புஷ்கினும் லேர்மன்தவும்—சவால் சண்டைக்கு இழுக்கப்பட்டுக் கொலையுண்டனர். கவிஞர் ரிலேயெவ் தூக்கிலிடப்பட்டார். புரட்சி எழுத்தாளர் செர்னிஷேவ்ஸ்கி கடுங் காவல் தண்டனை பெற்று இருபது ஆண்டுகளுக்கு சைபீரியாவில் ஓயாத கொடுமைகளுக்கு இலக்காயினார். ஹெர்ட்சனும் சல்த்திக்கோவ்-ஷெத்ரீனும் கொரலேன்கோவும் ஜாரிஸ்டுக் கொடுங்கோல் ஆட்சியால் தண்டிக்கப்பட்டுக் கடத்தப்பட்டனர்.

ஃபியோதர் தஸ்தயேவ்ஸ்கி மாஸ்கோவில் மரியீன்ஸ்கயா தரும வைத்தியசாலையைச் சேர்ந்த ஒரு டாக்டரின் குடும்பத்தில் 1821ல் பிறந்து ஏழு குழந்தைகளில் ஒருவராய் வளர்ந்தார். இவருடைய தாய் தெய்வபக்தி மிக்கவர், அன்பு உள்ளம் கொண்டவர், மென்மையின் உருவாய்த்

திகழ்ந்தவர். ஆனால் கணவரின் மூர்க்கக் குணமும் கஞ்சத் தனமும் தீராத சந்தேகமும் இவ்வன்னையின் வாழ்வை நரக வேதனையாக்கின. காசநோய் கண்டு 33 ஆவது வயதிலேயே (1837ல்) இவர் காலமாகிவிட்டார். தந்தை எப்படிப்பட்ட மூர்க்கர் என்பதை அவருக்கு நேர்ந்த முடிவு நன்கு புலப் படுத்துகிறது. வாழ்நாளின் கடைப்பகுதியில் தூலா நக ருக்கு அருகே அவர் வாங்கிய ஒரு சிறு பண்ணையில் அடிமைக் குடியானவர்கள் அவருடைய கொடுமை தாங்கமாட்டா மல் 1839ல் அவரைக் கொலை செய்து விட்டனர். அப்பொ ழுது 18 வயது இளைஞனாயிருந்த தஸ்தயேவ்ஸ்கியிற்கு இந்த அதிர்ச்சியால் முதன்முதலாய்க் காக்காய் வலிப்பு வந்த தென்று இவ்வெழுத்தாளரின் வாழ்க்கைச் சரிதையை எழுதி யோர் சிலர் குறிப்பிடுகின்றனர்.

இழிவும் சோகமும் நிறைந்த இந்தப் பிள்ளைப் பிராயத் தையும், பிறகு மாணவனாய் இராணுவப் பொறியாளர் பள் ளியில் கழித்த ஆறு ஆண்டுகளில் அனுபவிக்க நேர்ந்த இன்னல்களையும் தஸ்தயேவ்ஸ்கியால் தமது இறுதிக் காலம் வரை மறக்கவே முடியவில்லை.

வாழ்நாள் முழுதும் காக்காய் வலிப்பு அவரை இம்சித்து வந்தது. அவர் உடலையும் உள்ளத்தையும் வருத்திய இந்த வலிப்பை அவரால் தடுக்கவே முடியவில்லை, எந்நேரத்தில் தாம் இந்தக் குரூரத்துக்குப் பலியாக வேண்டிவருமென முன்னறிந்து கொள்ளவும் முடியவில்லை; இந்நோயாளிகள் வலிப்பின்போது நினைவிழந்து விடுவதால் அந்நேரத்தில் அவர்களுக்கு ஏற்படும் அனுபவங்களும் அவஸ்தையும் பிற் பாடு நினைவில் இருக்காது என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால் தஸ்தயேவ்ஸ்கியிற்கு யாவும் தெளி வாய் நினைவில் இருந்தன.

இராணுவப் பொறியாளர் பள்ளியில் படித்து முடித்த தும் தஸ்தயேவ்ஸ்கி இராணுவ உத்தியோகத்தில் சேராமல், இலக்கியத் துறையில் முழு மூச்சுடன் ஈடுபடலானார்.

வெண்ணிற இரவுகள் என்னும் கதை இதே காலத்தில் எழுதப்பட்டதுதான். பீட்டர்ஸ்பர்க் வாழ்க்கையின் விசித் திரப் பாங்கினை இந்தக் கதையில் தஸ்தயேவ்ஸ்கி கவிதை நயத்துடன் சித்திரிக்கின்றார்.

ஆனால் 1849ல் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி தஸ்தயேவ்ஸ் கியின் இலக்கியப் பணியினது இந்த முதற் கட்டத்துக்குக்

கொடிய முறையில் திடுமென முடிவு கட்டியதோடு, இவ் வெழுத்தாளரின் வாழ்க்கையையே இருவேறு கூறுகளாய்ப் பிளவுறச் செய்து விட்டது. புரட்சிகர சோஷலிஸ்டாகிய பெத்ரஷேவ்ஸ்கியின் முற்போக்குக் குழுவின் கூட்டங்களில் 1847 முதலாய் தஸ்தயேவ்ஸ்கி பங்கெடுத்து வந்தார். கோகலுக்கு பெலீன்ஸ்கி எழுதிய தடைவிதிக்கப்பட்ட கடிதத்தை அவர் இக்குழுவில்தான் படித்துத் தெரிந்து கொண்டார். பிற்பாடு அவர் பெத்ரஷேவ்ஸ்கி ஆதரவாளரான ஸ்பெஷ்னியேவின் தலைமையில் இயங்கிய ஒரு குழுவில் சேர்ந்து கொண்டார். எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போராடுவதற்காக ஸ்பெஷ்னியேவ் இரகசிய நிறுவனம் ஒன்றை அமைக்க விரும்பினர். 1849 ஏப்ரலில் இந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களுடன்கூட தஸ்தயேவ்ஸ்கியும் கைது செய்யப்பட்டு பெத்ரப்பாவ்லவ்ஸ்கயா கோட்டையில் தனிக் கொட்டியில் அடைக்கப்பட்டார். எட்டு மாதங்கள் வரை தனிக் கொட்டடிக் கைதியாய் இருந்தார். பிறகு இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. மரண தண்டனையின் நிறைவேற்றத்தை எதிர்நோக்கும் சித்திரவதைக்கு இவர்களை உட்படுத்துவதென ஜார் மன்னர் முதலாம் நிக்கலாய் முடிவு செய்தார். 1849 டிசம்பர் 22ல் தஸ்தயேவ்ஸ்கி இந்தப் பயங்கரத்தை அனுபவிக்க வேண்டியதாயிற்று. கடுங் குளிராயிருந்த அன்று காலையில் எல்லாத் தயாரிப்புகளும் செய்து முடிக்கப்பட்டன: தமுக்குகள் முழங்கின; துப்பாக்கி ஏந்திய படையாட்கள் அணிவகுத்து நின்றனர்; கைதிகள் முத்தமிட்டு இறுதி வணக்கம் செய்வதற்காக, பாதிரியார் சிலுவையைத் தூக்கிக் காட்டினர். கைதிகளின் கண்கள் கட்டப்பட்டபின் முதற் பிரிவைச் சேர்ந்த மூவரும் முன்னல் அழைத்துச் செல்லப்பட்டுக் கம்பங்களில் கட்டப்பட்டனர். உத்தரவு முழங்கிற்று, உடனே படையாட்கள் இம்மூவரையும் நோக்கித் துப்பாக்கிகளை உயர்த்தினர். இரண்டாவது பிரிவில் தஸ்தயேவ்ஸ்கி காத்துக் கொண்டு நின்ருர்—வாழ்வின் இறுதி நிமிடம் அது. ஒவ்வொரு வினடியாய்க் கழிந்து சென்றது, ஒவ்வொன்றும் ஒரு யுகம் போல் தோன்றிற்று. இவ்வளவுக்கும் பிற்பாடுதான், மரணதண்டனை நான்காண்டுச் சைபீரியக் கடுங்காவல் தண்டனையாய் மாற்றப் படுவதாகவும், இந்நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு சைபீரியப் படையில் சேவை புரிய வேண்டுமென்றும் கூறிய

ஜார் மன்னரின் உத்தரவு அறிவிக்கப்பட்டது. அதே நாளன்று கடுங்காவல் தண்டனைக்காக தஸ்தயேவ்ஸ்கி சைபீரியாவுக்கு அனுப்பப்பட்டார்.

தஸ்தயேவ்ஸ்கியின் படைப்புகளில் மலிந்திருக்கும் கொலைகளும் கொடூரங்களும் வாசகருக்குப் பரபரப்பூட்டுவதற்காக விவரிக்கப்படும் கற்பனை சிருஷ்டிகள் அல்ல; குரூர அனுபவங்களால் வதைபட்ட ஓர் இதயத்தின் அடியாழத்திலிருந்து வெடித்தெழும் குமுறல்கள் அவை. கொலை புரிந்தோரும் கற்பழித்தோரும் வன்மனத்தோரும் சிறைச் சாலையில் அவருடன் இருந்தனர், மற்றும் பழிபாவம் அறியாத எத்தனையோ பேர் விதிவசத்தாலோ, ஜாராட்சியின் கண்மூடித்தனத்தாலோ, நீதித் துறையாரின் தவறுகளாலோ இவர்கள் மத்தியில் தள்ளப்பட்டிருந்தனர்.

சிறைவாசத்துக்குப் பிற்பாடு இராணுவச் சேவையில் முதலில் படையாளாகவும் பிறகு ஆபீசராகவும் அவர் கழித்த ஐந்து ஆண்டுகள் அவ்வளவு கடுமையாய் இருக்கவில்லை. படைச் சேவைக் காலம் முடிந்ததும் 1859ல் அவர் பீட்டர்ஸ்பர்குக்குத் திரும்பி மீண்டும் இலக்கியப் பணியில் இறங்கினார். அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளில் ருஷ்ய இலக்கிய, உலக இலக்கிய மாமேதையாய்ப் பெயரும் புகழும் பெறலானார். ஆயினும் சொந்த வாழ்க்கையில் இவ்வாண்டுகளிலும் அவர் ஆன்மீக நெருக்கடிகளாலும் சோகம் வாய்ந்த முரண்பாடுகளாலும் ஓயாமல் அலக்கழிக்கப்பட்டுதான் வந்தார். காக்காய் வலிப்பு அவரை அவஸ்தைப் படுத்திற்று. பணக் கஷ்டமும் கடன்காரர்களின் பிடுங்கலும் ஆசிரியர்கள், பதிப்பகத்தினரது நச்சரிப்பும் படுத்திவைத்தன. இந்நிலையில் 1850-60ஆம் ஆண்டுகளில் அவர் வெறித்தனமான ஒரு புதிய பழக்கத்துக்குப் பலியாகித் தவிக்க நேர்ந்தது. எதிலும் கட்டுக்கடங்காத ஆவேசத்துடன் இறங்கிவிடும் சுபாவம் கொண்டவராதலால் சூதாட்டத்திலும் அதே வெறித்தனமான ஈடுபாடு கொள்ளலானார். வெளிநாட்டுப் பயணங்களின்போது ருலெட் ஆடி பெரிய அளவில் வெற்றி பெற்று விடலாம், யாரையும் எதிர்பாராது வாழ்வதற்குப் போதிய பணம் எளிதில் கிடைத்துவிடும் என்றொரு ஆசை அவரை ஆட்கொண்டு விட்டது. சில நேரங்களில் பெருந் தொகைகள் வென்று கொண்டார் என்றாலும், இவ்வெற்றிகளை அடுத்து ஏற்பட்ட படுமோசமான தோல்வி

களில் யாவற்றையும் இழக்கவே நேர்ந்து வந்தது.

சைபீரியப் படையில் சேவை புரிந்தபோது 1857ல் செமிப்பலாத்தீன்ஸ்க் நகரில் இசாயெவா என்ரெரு விதவையை மணம் புரிந்து கொண்டார். முன்கோபியும் துக்கரியுமான இப்பெண்ணுடன் அவர் வாழ்க்கை இனிமையாய் இருக்கவில்லை. 1865ல் இம்மனைவி இறந்துவிட்டார். 1866ல் அவர் தமது பதிப்பகத்தாரிடம் பணம் பெற்றுக் கொண்டு இக்கட்டான ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டதன் விளைவாய், 160 பக்கத்தில் ஒரு நாவலை ஒரே மாதத்தில் எழுதி முடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் சிக்கிக் கொண்டார். நண்பர் ஒருவர் கூறிய ஆலோசனையை ஏற்று ஒரு சுருக்கெழுத்தாளரை அமர்த்திக் கொண்டு சூதாடி நாவலை வாய்மொழியாய்க் கூறி எழுதிக் கொள்ளச் சொன்னுர். 1866 அக்டோபர் 4ல் ஆரம்பமான இவ்வேலை 26 நாட்களில் முடிவடைந்தது. இருபது வயதான ஆன்ஞ கிரிகோரியெவ்ஞ ஸ்னீத்கிஞதான் அந்தச் சுருக்கெழுத்தாளர். நான்கு மாதங்களுக்குப் பிற்பாடு தஸ்தயேவ்ஸ்கி இவரை மணம் புரிந்து கொண்டார். இந்தத் திருமணம் வெற்றிகரமாய் அமைந்தது. ஆன்ஞ கிரிகோரியெவ்ஞ, தஸ்தயேவ்ஸ்கியின் இறுதி நாள் வரை அவரிடம் மாருத அன்பு கொண்ட வாழ்க்கைத் துணையாய் இருந்தார். தஸ்தயேவ்ஸ்கியின் இலக்கியச் செல்வத்தை வருங்காலத்தவர்களுக்குப் பாதுகாத்துத் தந்ததோடு, அவருடைய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளையும் எழுதிஞர். பிறகு தஸ்தயேவ்ஸ்கிப் பொருட்காட்சிசாலையை அமைத்திட முன்முயற்சி எடுத்துப் பாடுபட்டார்.

தஸ்தயேவ்ஸ்கி வாழ்ந்த காலம் ருஷ்யாவிலும் மேற்கு ஐரோப்பாவிலும் சமுதாயக் கொந்தளிப்புகளுக்குரிய காலமாகும். 1848ல் மிகப் பல ஐரோப்பிய நாடுகளிலும் புரட்சி அலைமோதிற்று. ருஷ்யாவில் 1861ல் பண்ணையடிமை முறை ஒழிக்கப்பட்டதைத் தொடர்ந்து கிராமங்களிலும் முதலாளித்துவம் தலைதூக்கி ருஷ்யச் சமுதாயத்தின் பழைய பிரபுத்துவக் கட்டமைப்பு தகர்ந்து வந்தது. அக்காலத்திய ருஷ்யப் புரட்சியாளர்களான நரோத்னிக்குகள் ஜாராட்சியை வீழ்த்தி ருஷ்யாவின் புரட்சிகர வளர்ச்சியைத் துரிதப் படுத்தும் நோக்கத்துடன் பயங்கரவாதச் செயல்கள் புரிந்து வந்தனர். ஆனுல் ருஷ்ய விவசாயிகள் புரட்சி இயக்கத்தில் ஈடு

படுவதற்கான பக்குவநிலையை இன்னும் அடைந்தாகவில்லை. ஆகவே இம்முயற்சிகள் யாவும் தோல்வியுற்று, பிற்போக்கு ஆட்சியை மேலும் தீவிரமாக்கிச் சென்றன. இவ்வியக்கத்தின் தலைவர்கள் கைது செய்யப்பட்டு இவர்கள் மீது தொடரப் பட்ட வழக்குகள் நாடெங்கும் எதிரொலியை உண்டாக்கின.

1859-1861ஆம் ஆண்டுகளில் ருஷ்யாவில் நிலவிய புரட்சிகரச் சூழ்நிலையைத் தொடர்ந்து தஸ்தயேவ்ஸ்கி இலக்கியவாதியாக மட்டுமின்றி போராடும் பத்திரிகையாளராகவும் பணியாற்றினர். **விரேமியா (காலம்)** *(1861—1863)*, **எப்போஹா (சகாப்தம்)** *(1864—1865)* இதழ்களின் பதிப்பாசிரியராகவும் **கிரழ்தனின் (குடிமகன்)** இதழின் ஆசிரியராகவும் செய்லாற்றி வந்தார். அவர் எழுதி வந்த **எழுத்தாளரின் நாட்குறிப்பில்** அவசரமான உள்நாட்டுப் பிரச்சினைகள் குறித்தும் சர்வதேச அரசியல் குறித்தும் கருத்துரைத்து வந்தார். 1862-1865லும் 1867-1871லும் ஜெர்மனி, ஸ்விட்ஸர்லந்து, இத்தாலி, இங்கிலாந்து, ஆஸ்திரியா-ஹங்கேரி முதலான நாடுகளுக்குச் சென்று தமது பயண அனுபவங்களை **கோடையின் அனுபவங்கள் குறித்து குளிர் காலத்தில் எழுதிய குறிப்புகள்** என்பதாய் எழுதி வெளியிட்டார். 1871ல் டிரஸ்டனில் இருக்கையில் அவர் பிரெஞ்சு-பிரஷ்ய யுத்தத்தையும் பாரிஸ் கம்யூனையும் கூர்ந்து கவனித்து வந்தார். இவ்வாறு தஸ்தயேவ்ஸ்கியின் வாழ்க்கை ருஷ்யாவிலும் ஐரோப்பாவிலும் அன்று நடைபெற்ற பிரதான சமுதாய, அரசியல் நிகழ்ச்சிகளுடன் பின்னிப் பிணைந்ததாகவே இருந்து வந்தது. ருஷ்யாவில் பண்ணையடிமை முறை வீழ்ச்சியுற்று முதலாளித்துவம் வளர்ச்சி பெற்றது, ஐரோப்பாவில் முதலாளித்துவச் சமுதாயத்தின் முரண்பாடுகள் தீவிரமடைந்து சுரண்டல் கடுமையாகியது, உலகெங்கும் சோஷலிசக் கருத்துக்கள் பரவிப் புரட்சி இயக்கம் எழுச்சியுற்று வந்தது ஆகிய நிகழ்ச்சிப் போக்குகளை அவர் உற்று நோக்கி இவற்றில் கருத்து செலுத்தியே வந்தார்.

சைபீரியாவில் அவர் காவல் கைதியாய் வதைபட்ட ஆண்டுகள் அவருடைய வாழ்க்கைப் பிடிப்பையும் ஈடுபாட்டையும் மனிதன் பால் அவருக்கிருந்த நம்பிக்கையையும் குலைத்துவிடவில்லை என்பது மெய்தான். மனிதனது துயர வாழ்வு குறித்து அவருடைய உணர்வை இவ்வாண்டுகள் மேலும் கூர்மையாக்கின என்பதும் மெய்தான். அதேபோதில், இவ்வாண்டுகள் அவருடைய அகத்தினுள் நெருக்க

டியை மூளச் செய்து, சோஷலிசக் கருத்துக்களில் அவருக் கிருந்த நம்பிக்கையைக் குறையச் செய்தன; அவருடைய சித்தாந்தத்தில் சோகமூட்டும் முரண்பாடுகளை முற்றச் செய்தன. சைபீரியாவில் அவருக்கு படையாட்களுடனும் விவசாயிகளுடனும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. ''சாமான்ய மக்களுடைய'' அக உலகுக்கும், பிரபுக் குலத் தவர்களுக்கும் மற்றும் பிற வகுப்புக்களைச் சேர்ந்த, படித்த புரட்சியாளர்களுக்கும்—கடந்த நூற்றாண்டின் நாற்பதாம், ஐம்பதாம் ஆண்டுகளில் இவர்கள் மிகவும் சொற்பமாகவே காணப்பட்டனர்—உரிய சிந்தனைகளுக்கும் உணர்ச்சிகளுக் கும் இடையிலிருந்த நெடுஞ்சுவரை அப்பொழுது அவர் தெளிவாய்க் கண்டுணர முடிந்தது. படித்தவர்களுக்கும் சாமான்ய மக்களுக்கும் இடையிலிருந்த இந்தப் பிரிவினைச் சுவர் அவரைக் கலங்கச் செய்தது. 1850க்குப் பிற்பாடு ஐரோப்பாவில் அரசியல் பிற்போக்கு மேலோங்கியபோது அவர் புரட்சி இயக்கத்திலும் அதற்கு இருந்த வாய்ப்புகளி லும் நம்பிக்கை இழக்கலானார். இதனால் 1860ஆம் ஆண்டு களில் அவர் செர்னிஷேவ்ஸ்கியிற்கும் ருஷ்யாவின் ஏனையப் புரட்சிகர ஜனநாயகவாதிகளுக்கும் எதிரான நிலையை ஏற்றார்.

மேற்கு ஐரோப்பாவில் உருவான முதலாளித்துவச் சமு தாயத்தின் கொடிய இயல்புகளை அவர் நேரில் கண்ணுற்று அதிர்ச்சியடைந்திருந்தார். ருஷ்யா இந்த ''மேற்கத்திய'' பாதையில் செல்லாமல் எப்படியாவது தப்பிவிட வேண்டு மென விரும்பினார். லேவ் தல்ஸ்தோயையும் ருஷ்ய நரோத் னிக்குகளையும் போல இவரும் வரலாற்றின் இந்த வளர்ச்சித் திசையிலிருந்து ருஷ்யாவை விலகச் செய்து விடலாமென்ற கற்பனாவாதத்தில் நம்பிக்கை கொண்டு, ருஷ்ய மக்களுக்குத் தனியொரு பாதை உண்டென வற்புறுத்த முற்பட்டார். அவருடைய பத்திரிகைக் கட்டுரைகளிலும் பிற்பாடு எழுத் தாளரின் நாட்குறிப்பிலும் ''பிறந்த மண்ணுக்குத் திரும்பு வோம்'' என்பதாய் முழங்கி அவர் கூறிவந்த தத்துவத்தில் அவருடைய இந்தக் கற்பனாவாதம் வெளியாயிற்று.

மக்கள் நலன்களும் ஆளும் வர்க்கங்களது நலன்களும் எதிரும் புதிருமாய் அமைந்து முட்டி மோதிக் கொள்வதை அவர் ஒத்துக் கொள்ள மறுத்தார். வர்க்கங்களுக்கு எல் லாம் ''அப்பாற்பட்டவையாய்த்'' தாம் கருதிய தேசிய இலட்சியம் என்பதன் பெயரால் சமுதாயப் போராட்டத்தை

அவர் எதிர்க்க முயன்றார். தஸ்தயேவ்ஸ்கியிற்கும் ஜனநாயக முகாமுக்கும் ஆழ்ந்த கருத்து வேற்றுமைகள் தோன்ற இவையே காரணம்.

மனிதனது துன்பமும் இழிநிலையும் ஒழிந்து வாழ்வில் அறநெறி கோலோச்சுவது மதத்தின் அடிப்படையில் மட்டுமே சாத்தியம், தனி மனிதனின் ஒழுக்கநெறியும் வளர்ச்சியும் ஓங்குவதன் வாயிலாகவே இது நடைபெற முடியும் என்று தஸ்தயேவ்ஸ்கி நம்பினார். மேற்கு ஐரோப்பிய சோஷலிச போதனைகளிலிருந்தும், அவர் காலத்தவர்களாகிய ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதிகளின் சோஷலிசத்திலிருந்தும் இவ்வாறு அவர் முற்றிலும் மாறான கருத்தோட்டமுடையவராய் இருந்தார். அக்காலத்திய சோஷலிசச் சிந்தனையால் முன்வைக்கப்பட்ட புரட்சிகரப் போராட்டக் கருத்துக்களை தனி மனிதனது சுதந்திரத்துக்கும் வளர்ச்சிக்கும் வகை செய்யக் கூடியவையாய் அவர் கருதவில்லை. மெய்யான புரட்சிகர சோஷலிச இயக்கத்துக்குப் பெருந்தீங்கு புரிந்து வந்த அக்காலத்திய அராஜகவாதி மிகயீல் பக்கூனினும், பயங்கரவாதி செர்கேய் நெச்சாயெவும் அனுசரித்த தனிநபர் பயங்கரவாதப் போராட்ட முறைகள் அவரை அதிர்ச்சியுறச் செய்தன.

மனித இதயத்தையும் ஆத்மாவையும் வாட்டும் துன்பதுயரங்கள்தான் இம்மாபெரும் எழுத்தாளரது இலக்கிய சிருஷ்டிகள் யாவற்றுக்கும் அடித்தளம் என்பது இவரது வாழ்க்கையிலிருந்து மிகவும் சுருக்கமாய் மேலே நாம் குறிப்பிட்ட விவரங்களிலிருந்தே நன்கு விளங்குகிறது. எந்நேரமும் தஸ்தயேவ்ஸ்கி ''மனிதனின் நிலை குறித்து வதைபடுகின்றார்'' என்பதாய் எழுதினார், இலக்கிய விமர்சகர் நிக்கலாய் தொப்ரலியூபவ். ஆம், தஸ்தயேவ்ஸ்கியின் நாவல்களிலும் கதைகளிலும் காணக் கூடிய விதம் விதமான எண்ணற்ற பாத்திரங்கள், இவற்றில் கூறப்படும் கருத்துக்கள், விவரிக்கப்படும் சம்பவங்கள் ஆகிய யாவற்றுக்கும் இதுவேதான் அடித்தளம்.

அ. பேல்க்கின்

வெண்ணிற இரவுகள்

முதன் முதலாக இக் கதை 1848ஆம் ஆண்டு **ஓதேசெஸ்த் வென்னியே ஸபீஸ்கி (தாயகக் குறிப்புகள்)** எனும் சஞ்சிகையின் பன்னிரெண்டாவது இதழில் வெளியாயிற்று. இதற்குப்பின் வெளியான எழுத்தாளரின் தொகுப்பு நூல்கள் அனைத்திலும் இது இடம் பெற்றது. இது ருஷ்ய இலக்கியத்தின் தலை சிறந்த படைப்புகளில் ஒன்று என்று இலக்கிய விமரிசகர் களால் பாராட்டப்பட்டது.

கதையில் வரும் கதாநாயகன் ஒரு கற்பனையாளன். ஏழை பீட்டர்ஸ்பர்க் அறிவுத் துறையாளனும் உயர்ந்த ஆன்மீகத் தரத்தை உடையவனுமாகிய இவன், எழுத்தா ளரின் மற்றப் படைப்புகளில் வரும் பெரும்பாலான கதா நாயகர்களைப் போன்றே, தன்னைச் சுற்றியுள்ள வாழ்க் கைக்கு தான் ஏற்றவனல்ல என்று நினைக்கிறான். சென்ற நூற்றாண்டின் மத்தியப் பகுதியைச் சேர்ந்த பழைய பாரம் பரிய ருஷ்யாவை குறிக்கும் வகையில் ஒரு பெரிய, இரைச் சல் மிகுந்த, இருண்ட நகரை தஸ்தயேவ்ஸ்கி தன் படைப் பில் வியத்தகு முறையில் சித்தரிக்கிறார். குறைகள் உள்ள இந்த யதார்த்த உலகை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் இளம் கதாநாயகன் அதிசாகச கற்பனைகளுக்கும் பகற்கனவு களுக்கும் ஆளாகிறான். உயர்வான கவிதைப் பாத்திரங்களின் மீதான விருப்பம், இவருடைய நாட்டம் ஆகியவற்றை ஆசி ரியர் துல்லியமாக வருணிக்கிறார். கொச்சையான எதார்த் தங்கள் வெற்றி பெறும் போது அழகியக் கற்பனையாளர்கள் எப்படி விசித்திரமான சூழ்நிலையில் அழிந்து போவார்கள் என்பதை தஸ்தயேவ்ஸ்கி காட்டுகிறார். வெண்ணிற இரவு

களின் கதாநாயகனுக்கும் கதாநாயகிக்கும் தங்களுடைய சொந்த இன்பத்தைத் துறக்கும் அதிசயமான, பரிதாபகர மான மகிழ்ச்சி மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது.

பலவீனமான இதயம்

பலவீனமான இதயம் தஸ்தயேவ்ஸ்கியின் ஆரம்பக்காலப் படைப்புகளில் ஒன்ருகும். இது முதன் முதலாக 1848ஆம் ஆண்டு **ஒதேசெஸ்த்வென்னியே ஸபீஸ்கி (தாயகக் குறிப்புகள்)** எனும் மாத சஞ்சிகையின் பிப்ரவரி மாத இதழில் வெளியா யிற்று. பீட்டர்ஸ்பர்க் ஏழைகளின் வாழ்விலிருந்து ஒரு காட்சி வாசகர்கள் முன் உள்ளது. இந்தக் கதைக்கும் தஸ்தயேவ்ஸ்கி யின் சொந்த தவிப்புகளுக்கும் தனிப்பட்ட முறையில் அவர் பார்த்தவைகளுக்கும் தொடர்பு உண்டு, இக்கதையில் வரும் கதாநாயகனின் மூலமுன் மாதிரி யார் என்பது தெரிந்ததே. இச்சிறு விஷயங்கள் முக்கியமானவை என்ருலும் விஷயம் இதில் அடங்கியிருக்கவில்லை. முக்கியமானது என்னவெனில் தன்னுடைய அன்பான ஆனல் பலவீனமான கதாநாயகனைப் பற்றியும் அவனுக்கு நேர்ந்த சோக முடிவைப் பற்றியும் கூறுவதன் மூலம் எழுத்தாளர், நிலவும் சமுதாய அமைப் பிற்கு எதிரான எதிர்ப்பு உணர்வைத் தட்டியெழுப்புகிருர்.

வாஸ்யா ஷூம்கோவ் (இது கதாநாயகனின் பெயர்) பேரரசரின் அதிகார இயந்திரத்தில் ஒன்றுமே இல்லாத, மிகச் சிறிய, அற்பமான ஒருவன் என்பதில் மட்டும் அவனு டைய துன்பம் அடங்கியிருக்கவில்லை. அவன் இந்தக் கொடு மையான இயந்திரத்தை ஆன்மீக ரீதியாகவும் சார்ந்திருப் பது மோசமானது, உயர் அதிகாரியாகிய ஜூலியன் மஸ் தாக்கொவிச்சுடன் கதாநாயகனின் உறவுகள் பாம்பு-கீரி கதையில் வரும் உறவுகளை ஒத்துள்ளன. அதே நேரத்தில் வாஸ்யா ஷூம்கோவும் அவனுடைய நண்பனுகிய ஆர்காதி யும் இனியவர்கள், அன்பானவர்கள், அனுதாப குணமுள்ள வர்கள், ஆழ்ந்த உணர்வுள்ளவர்கள், வேருெரு நல்ல பங்கிற் கும் சுதந்திரமான, அழகிய வாழ்க்கைக்கும் ஏற்றவர்கள். இவ்வாருக தஸ்தயேவ்ஸ்கி தன் ஆரம்பக் காலப் படைப்பு களில் தன்னுடைய படைப்பின் எதிர்கால கருத்துகளையும் எதிர்கால கதாநாயகர்களின் மாதிரிகளையும் கோடிட்டுக் காட்டினர்.

அருவருப்பான விவகாரம்

முதன் முதலாக இது தஸ்தயேவ்ஸ்கி சகோதரர்களின் சஞ்சிகையாகிய **விரேமியா (காலம்)**வில் 1862ஆம் ஆண்டு 11 வது இதழில் வெளியானது. இச்சிறுகதை முதலில் **துரதிர்ஷ்ட சம்பவம்** என்ற பெயரைப் பெற்றிருந்தது.

60ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் மிதவாத அரசாங்க சீர்திருத்தங்களின் காலகட்டத்தில் தஸ்தயேவஸ்கியின் சமூக-அரசியல் நிலை இச்சிறுகதையில் பிரதிபலிக்கிறது. மக்களுக்கு உதவ விரைந்து வரவும் சமூக முன்னேற்றம் மற்றும் ''மனிதாபிமான'' வெற்றிகளுக்கு உதவவும் தயார் என்று சமூக உயர் மட்ட பிரதிநிதிகள் விடுத்த அறிக்கைகளின் மீதான சந்தேகம் இச்சிறுகதையில் தென்படுகிறது. அதோடு கூட அன்றைய முற்போக்கு இளைஞர்கள் மற்றும் அவர்களின் சித்தாந்த ஊக்குவிப்பாளர்களாகிய அறுபதாம் ஆண்டுகளின் புரட்சிவீரர்களின் உணர்வுபூர்வமான புரட்சிகர சிந்தனையின் பாலான நம்பிக்கையின்மையும் இதில் வெளிப்படுகிறது.

பண்ணையடிமை முறை அகற்றப்பட்டது, இரண்டாவது அலெக்சாந்தர் மன்னனின் மற்ற சீர்திருத்தங்கள் ஆகியவற்றின் தொடர்பாக சென்ற நூற்றுண்டின் 60ஆம் ஆண்டுகளில் ருஷ்யப் பத்திரிகையுலகில் சுவாரசியமாக விவாதிக்கப்பட்ட பிரச்சினைகளை இச் சிறுகதையில் தஸ்தயேவ்ஸ்கி தொட்டுள்ளார். அதிகாரவர்க்க வட்டங்கள் (பிற்போக்கு வட்டங்களும் மிதவாத வட்டங்களும் சம அளவில்) சீர்திருத்தங்களைச் செய்யும் போது முந்தைய சமூக உறவுகளின் சாரம் மாற்றமின்றி இருக்க வேண்டும் என்பதன் மீது மட்டுமே அக்கறை கொண்டிருந்தனர் என்று புரட்சிகர-ஜனநாயக முகாமின் எழுத்தாளர்களைப் போன்றே தஸ்தயேவ்ஸ்கியும் கோடிட்டுக் காட்டினுர். ஜெனரல் பிராலின்ஸ்கியின் பாத்திரத்தின் மூலம் இப்படிப்பட்ட புதிய அமைப்பைச் சேர்ந்த ''காரியரீதியான'' மக்களின் மிதவாதக் கருத்துகள் இவர்களின் நடவடிக்கைகளில் தென்படும் ''இயற்கை அம்சத்துடன்'' ஒத்துப் போகவில்லை என்று தஸ்தயேவ்ஸ்கி காட்டினுர்.

பிசெல்தனீமவின் தாய், எல்லையற்ற அன்பும் தியாக உணர்வும் கொண்ட சாதாரண ருஷ்யப் பெண்மணி, இச்

சிறுகதையில் நம்மைக் கவரும் பாத்திரமாக வருவது தற்செயலானதல்ல. மற்ற எல்லா பாத்திரங்களிலிருந்தும் பெரிதும் வேறுபட்டு நிற்கும் இந்தப் பாத்திரத்தை அறிமுகப்படுத்தியது, உயர்வான ஒழுக்க நெறியை ஏந்தி நிற்பது ருஷ்ய மக்கள் மட்டுமே என்ற தஸ்தயேவ்ஸ்கியின் உறுதியான நம்பிக்கைக்கு ஏற்றதாக இருந்தது.

அடக்கமான பெண்

அடக்கமான பெண் எனும் கதை (இதன் துணைத்தலைப்பில் ஆசிரியரே ''புனைகதை'' என்று எழுதினார்) 1873—1881ஆம் ஆண்டுகளில் பிரபல **எழுத்தாளரின் நாட்குறிப்பில்** இடம் பெற்றப் படைப்புகளில் ஒன்றாகும். இந்த **நாட்குறிப்பு** — தன்னைக் கவலைக்குள்ளாக்கிய பல்வேறு நவீன காலப் பிரச்சினைகள் குறித்து இதில் தஸ்தயேவ்ஸ்கி கட்டுரை மற்றும் கதை வடிவில் எழுதினார்—**கிரழ்தனீன் (குடிமகன்)** எனும் வார இதழில் முறையாகப் பிரசுரிக்கப்பட்டது, தனி மாத வெளியீடுகளாயும் வெளிவந்தது. **அடக்கமான பெண்** எனும் கதை 1876ஆம் ஆண்டு **எழுத்தாளரின் நாட்குறிப்பு** சஞ்சிகையின் அக்டோபர் இதழில் வெளியாயிற்று. இளம் தையற்காரியாகிய மரீயா பரீஸொவா வேலை தேடி மாஸ்கோவிலிருந்து தலைநகருக்கு வந்தவள் வாழ வழியின்றி, கையில் கடவுள் படத்துடன் ஜன்னல் மூலம் கீழே குதித்தாள் என்று பீட்டர்ஸ்பர்க் பத்திரிகைகளால் வெளியிடப்பட்டச் செய்திக்கு வெகு அருகில் இது தோன்றியது. எழுத்தாளரின் மீது பெரும் மனப்பதிவை ஏற்படுத்திய இந்நிகழ்ச்சி, நிச்சயமாக, தஸ்தயேவ்ஸ்கியின் கதை தோன்றியதற்கான நேரடிக் காரணமல்ல என்றாலும் சந்தேகத்திற்கிடமின்றி கதை எழுதப்படுவதை இது துரிதப்படுத்தியது. (குடும்பச் சண்டை மற்றும் தம்பதிகளுக்கிடையேயான பிளவைப் பற்றி கதை எழுதும் திட்டம் 1869லேயே இருந்தது என்பது தெரிந்ததே.) கதையின் கதாநாயகிக்கு மட்டுமின்றி (சிக்கலான நிலையில் சிக்குண்ட ஏழைப் பெண் ஆனால் பெருமையும் நுட்பமான உணர்வுகளும் உடையவள்) கதாநாயகனுக்கும் (ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் மத்தியிலிருந்து வந்த அடகு வியாபாரி) யதார்த்த வாழ்வில் உண்மையான முன்மாதிரிகள் உண்டு. இக்கதை, அடக்கமான

பெண்ணின் தவிப்புகளையும் அவளுடைய சோக முடிவையும் தொடர்ச்சியாக எடுத்துரைக்கும் ஒன்ருக இருந்தாலும் கதை சொல்லுபவரும் வாசகர்களின் முன் தன் இதயத்தை உண்மையாக, தஸ்தயேவ்ஸ்கியின் சமகாலத்தவர்கள் எழுதியபடி ''வியத்தகு'' முறையில் வெளிப்படுத்தும் தற்கொலைக் கணவனும் நிச்சயமாக வாசகர்களின் கவனத்தைக் கவருவார்கள். ''இழிவுபடுத்தப்பட்டு அவமதிக்கப்பட்ட'', ''மட்டற்ற அகங்காரத்தால்'' தண்டிக்கப்பட்ட, கதாநாயகி சரியாகப் புரிந்துகொண்டபடி வாழ்க்கையைப்''பழிவாங்கத்'' துடிக்கும், ஆனுல் தானே இதனுல் அளவின்றித் தவிக்கும் மனிதன்—தஸ்தயேவ்ஸ்கிக்கே உரித்தான கதாநாயகன் இக்கதையில் நம் முன் நிற்கிருன். இதில் ஆசிரியர் முன்வைக்கும் பாத்திரம் பன்முகத்தன்மையைஉடையது, மிக்க ஆர்வமூட்டக் கூடியது.

அப்பாவியின் கனவு

முதன் முதலாக எழுத்தாளனின் நாட்குறிப்பில் 1877ஆம் ஆண்டு ஏப்ரலில் வெளியானது. அடக்கமான பெண் சிறுகதையைப் போன்றே இதுவும் ஒரு புனைகதையாகும்.

தஸ்தயேவ்ஸ்கியின் படைப்பில் மிக முக்கிய, நிரந்தர அம்சங்களில் ஒன்ருகிய பொற்காலம் பற்றிய கருத்து (எதிர்காலத்தில் இது தவிர்க்க இயலாமல் வரும் என்று எழுத்தாளர் உறுதியாக நம்பினுர்) இச்சிறுகதையில் சிகரத்தை அடைகிறது. பொற்காலம் என்பது அதாவது சோதர, மனிதாபிமான அடிப்படைகளில் அமைந்த ஒரு சமுதாயம் மாறிவிட்ட பழைய விஷயமல்ல என்றும் மாருக இது எதிர்காலம் என்றும் மனித வரலாற்றில் இனி வரவிருக்கும் பகுதி என்றும் சான்-சமோனைப் போல் தஸ்தயேவ்ஸ்கி நம்பினுர்.

சிறுகதையின் கம்பீரமான, தீர்க்கதரிசனமான முடிவு துன்பமயமான, இருண்ட பீடிகையுடன் பெரிதும் மாறுபட்டு நிற்கிறது. கனவிற்கு முன் ''அப்பாவி'' தஸ்தயேவ்ஸ்கியின் படைப்பில் வழக்கமான தலைமறைவு கதாநாயகர்கள், தத்துவஞானிகளை ஒத்து இருக்கிருன். கனவிற்குப் பின் இவன் வாழ்க்கை மற்றும் நம்பிக்கையின் மீதான முழு அதிருப்தி

யிலிருந்து ''விழித்தெழுந்த'' மனிதனுவான். ''...இந்தப் பூமியில் வாழ்கின்ற திறமையை இழந்துவிடாமலேயே மனிதர்கள் அழகாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க முடியும் என்பதை நான் அறிந்திருக்கிறேன். தீமையே மனிதனின் இயற்கையான நிலைமை என்பதை நான் நம்ப முடியாது, அதை நான் நம்பமாட்டேன்.'' அப்பாவியின் கனவு இந்த வார்த்தைகள் தஸ்தயேவ்ஸ்கியின் மனிதாபிமான, ஜனநாயகநம்பிக்கையை பிரதிபலிக்கின்றன. இது உலகின் அடிப்படை ரீதியான எதிர்கால மாற்றத்தைப் பற்றிய மகத்தான கனவுடன் நேரடியாகத் தொடர்புடையது. ''மக்களில் பத்தில் ஒரு பகுதியினர் மட்டுமே உயர்ந்த வளர்ச்சியைப் பெற வேண்டும், எஞ்சிய பத்தில் ஒன்பது பகுதியினர் இதற்கான சாதனமாக இருந்து இருளில் மூழ்கிக் கிடக்க வேண்டும் என்ற கருத்தை என்னுல் எப்போதுமே புரிந்து கொள்ள முடியாது. நம்முடைய 90 மில்லியன் ருஷ்யர்களும், அனைவரும் எப்போதாவது கல்வியறிவு பெறுவார்கள், மனித மேன்மையுடன் மகிழ்ச்சியாக வாழுவார்கள் என்ற நம்பிக்கையுடன்தான் என்னுல் வாழ முடியுமே தவிர வேறு விதமாக வாழ முடியாது'' என்று தஸ்தயேவ்ஸ்கி ஒரு கட்டுரையாளர் என்ற முறையில் எழுதினுர்.

வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் ராதுகா பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.

தங்களைத் தயை செய்து Raduga Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

[illegible], பி. சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை—600098

ஷோ-ரூம்

136, மவுண்ட் ரோடு, சென்னை—600002

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001
87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008
செர்ரி ரோடு, சேலம்—636[illegible]

விற்பனை நிலையங்கள்

3—22—75—D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்